

நி. ஒஸ்திரோவ்ஸ்க்கிய்

வீரம் விளைந்தது

''மனிதனது மதிக்க முடியாத இனிய உடைமைகளில் சிறந்தது அவனது வாழ்வாகும். அவன் ஒரு தடவை தான் வாழ முடியும். காலமெல்லாம் குறிக்கோளில்லாமல் பாழாக்கி விட்டேனென்ற வருத்தம் வதைப்பதற்கு வாய்ப்பு அளிக்காத வகையில் அவன் சீராக வாழவேண்டும். அற்பனாக வாழ்ந்து இழிவு தேடினேன் என்ற அவமானம் உள்ளத்தை எரிப்பதற்கு இடமில்லாத வகையில் அவன் நேராக வாழவேண்டும். உலகத்தின் தலைசிறந்த லட்சியத்துக்காக, மனிதகுலத்தின் விடுதலைப் போராட்டம் என்ற பொன்னான மார்க்கத்துக்காக, நான் என் வாழ்வு முழுவதையும் சக்தி அனைத்தையும் அர்ப்பணித்தேன் என்று இறக்கும் பொழுது கூறும் உரிமை பெறும் வகையில் அவன் வாழவேண்டும்.

நி. ஒஸ்திரோவ்ஸ்க்கிய்
''வீரம் விளைந்தது''



Н. Островский

நிக்கொலாய் ஒஸ்திரோவ்ஸ்க்கிய்

வீரம் விளைந்தது

இரு பாகங்களுடைய நவீனம்

முதற்பாகம்

புரோகிரஸ் பதிப்பகம்
மாஸ்கோ

மொழிபெயர்ப்பாளர்: எஸ். ராமகிருஷ்ணன்
தயாரிப்பு: அ. ரெஸ்னிச்சேன்கோ

Н. ОСТРОВСКИЙ
КАК ЗАКАЛЯЛАСЬ СТАЛЬ
Книга первая
На тамильском языке

ஆசிரியரைப் பற்றி ஒருசில வார்த்தைகள்

இந்நாவலின் பாத்திரங்கள் யாவும் உண்மையானவை; சிலரின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டவை; பன்னாட்டு வாசகர்களின் உள்ளத்தைக் கவர்ந்த கதாநாயகனை பாவெல் கர்ச்சாகினின் பாத்திரம் ஆசிரியர் நிக்கொலாய் ஒஸ்திரோவ்ஸ்க்கியின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

நிக்கொலாய் ஒஸ்திரோவ்ஸ்க்கிய் (1904—1936) இளமையிலேயே இறந்துவிட்டார். இறக்கும் காலை அவர் வயது முப்பத்திரண்டு. தம் இறுதி பன்னிரண்டு ஆண்டுகளில் அவர் வெகுவாக நோய்வுற்றிருந்தார். போர்முனையில் பட்ட காயத்திற்குப்பின் அவர் பார்வையிழந்து படுக்கைவாய்ப் பட்டார்.

நடக்க இயலா விந்தையெனத் தோன்றினும், அவர் தம் வீரக்கதையை, இளமை, காதல், போராட்டம் பற்றியதும், முதலாவது சோவியத் நாட்டின் இளம் கம்யூனிஸ்ட் சங்க உறுப்பினராகிய தம்மையும் தம் நண்பர்களையும் பற்றியது

மான இக்கதையை நோய்வுற்ற காலையில்தான் எழுதினுர். தமது தலைமுறையைச் சார்ந்த சோவியத் இளைஞர்களின் 1915ம் ஆண்டு தொட்டு 1931ம் ஆண்டு வரையான வாழ்வை இப்புத்தகத்தில் விவரிக்கின்ருர் நிக்கொலாய் ஒஸ்திரோவ்ஸ்க்கிய். நாவலின் முதல் வாசகர் மக்ஸீம் கோர்க்கிய். பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் எழுத்தாளர், பெரும் புகழ் பெற்ற ''தாய்'' நாவலின் ஆசிரியர், ஒஸ்திரோவ்ஸ்க்கியுக்கு அன்புடன் ஆதரவு காட்டினுர்.

''வீரம் விளைந்தது'' என்ற இந்தப் புத்தகத்தின் இரண்டு பாகங்களும் ''மொலதாய குவார்தியா'' (இளம் காவற்படையினர்) என்ற பதிப்பகத்தினரால் 1934ம் ஆண்டில் வெளியிடப்பட்டன. ''இந்நாவலை எழுதி முடித்ததும், என்னைச் சுற்றி வளைந்திருந்த இரும்பு வளையமொன்றிலிருந்து விடுபட்ட உணர்வு பெற்றேன். அசைய முடியாமை என்ற துன்பத்தை வென்றேன். மறுபடியும் போர்வீரர்களில் ஒருவஞக மாறிவிட்டேன்'' என்று எழுதினுர் ஒஸ்திரோவ்ஸ்க்கிய்.

மாஸ்கோவின் மைய வீதிகளில் ஒன்ருகிய கோர்க்கிய் வீதியில் 14ம் எண் கொண்ட வீட்டில் நிக்கொலாய் ஒஸ்திரோவ்ஸ்க்கியின் மியூஸியம் அமைந்திருக்கின்றது. அது இவ்வெழுத்தாளரின் இல்லமாக இருந்தது. மியூஸியத்தின் அறையொன்றில், பல்வேறு நாடுகளில் வெளியிடப்பட்ட இந்நாவலின் பல பிரதிகள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. நாவலின் முதல் பதிப்பின் பிரதி ஒன்று—

அது ஒஸ்திரோவ்ஸ்க்கிய் தம் கையில் கொண்டிருந்த புத்தகம்—இங்கு போற்றப் பட்டு வருகின்றது. துப்பாக்கி பாய்னெட் ஒன்றும் அண்மையில்தான் தளிர்விட்ட மரக் கொம்பு ஒன்றும் இப்புத்தகத்தின் வெள்ளி நிற அட்டையில் அருகருகே வரையப் பட்டுள்ளன. இங்குள்ள நூல்களில் பல குண்டுகளால் துளைக்கப்பட்டவை; இரத்தத்தில் ஊறியவை; இவை பாசிஸத்திற்கு எதிராகப் போரிட்டவர்கள் கைகளில் கொண்டவை. இங்குள்ள புத்தகங்கள் ஆயிரம் ஆயிரம் கைகள் மாறியவை; உருக்குலையும் வரை படிக்கப்பட்டவை. இவ்வண்ணம் இன்று, புதுப்புது இளம் வீரர்களிடையே நிக்கொலாய் ஒஸ்திரோவ்ஸ்க்கிய் அவரது மரணமற்ற பாத்திரங்களுடன் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஒஸ்திரோவ்ஸ்க்கிய் வாசகர்களிடையே புகழ் பெற்ற ''புயலின் மூலம் தோன்றியவர்கள்'' என்ற புத்தகத்தின் ஆசிரியர். ஆனால் அப்புத்தகம் முடியுமுன் ஆசிரியர் காலமாகி விட்டார்.

அத்தியாயம் ஒன்று

''திரு விழாவுக்கு முன்னால் என் வீட்டுக்குப் பாடம் ஒப்பிப்பதற்காக வந்தவர்கள் எழுந்து நில்லுங்கள்.''

பருத்த உடலும், பாதிரி உடையும், கழுத்திலிருந்து தொங்கும் கனத்த சிலுவையும் கொண்ட ஒருவர் நெருப்பு பறக்கும் கண்களுடன் மாணவர்களைப் பார்த்தார். கோபம் கொண்ட இரு சிறு கண்கள் பெஞ்சிலிருந்து எழுந்து நின்ற அறுவரையும்— நான்கு சிறுவர்களையும் இரு சிறுமிகளையும் —ஊடுருவிக் கூர்ந்து நோக்கின. குழந்தைகள் அச்சத்துடன் பாதிரி உடை அணிந்த அந்த மனிதரைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''நீங்கள் உட்காருங்கள்'' என்று சிறுமிகளை நோக்கிப் பாதிரியார் கூறினார்.

''பிழைத்தோம்'' என்ற எண்ணத்துடன் பெருமூச்சு விட்டவர்களாய் சிறுமிகள் உத்திரவுக்கு உடன் பணிந்தார்கள்.

வஸீலிய் பாதிரியாரின் கண்கள் நான்கு உருவங்களையும் ஊடுருவி நோக்கின.

''அருமைச் சிறுவர்களே! அருகில் வாருங்கள்'' என்று கூறிக்கொண்டே அவர் எழுந்தார்; தம் நாற்காலியைப் பின்புறம் தள்ளிவிட்டு, நடுங்கிக்கொண்டிருந்த சிறுவர்களிடம் தாமே சென்ருர்.

''போக்கிரிப் பயல்களாகிய உங்களில் எவன் புகை பிடிப்பவன்?''

நால்வரும் அமைதியாக விடையளித்தார்கள்:

''நாங்கள் புகை பிடிப்பதில்லை, ஐயா!''

பாதிரியாரின் முகம் சிவந்தது.

''துஷ்டப் பயல்களா! நீங்கள் புகை பிடிப்பதில்லையா? அப்படியானுல், பிசைந்து வைத்திருந்த மாவில் புகையிலைத் தூளைப் போட்டது யார்? புகைபிடிப்பதில்லையா? சரி, பார்ப்போம். உங்களுடைய சட்டைப் பைகளைப் புரட்டிக் காட்டுங்கள்! உம்.... உடனே செய்யுங்கள்!.... நான் சொல்கிறேன், நிற்கிறீர்களா? சட்டைப் பையைப் புரட்டிக் காட்டுங்கள்!''

மூன்று சிறுவர்கள் தங்களது சட்டைப் பைகளில் இருந்த சகல பொருட்களையும் எடுத்து மேஜையின்மீது வைத்தார்கள்.

பாதிரியார் கூர்மையுடன் அவர்களின் பைகளின் தையல்களுக்கிடைய புகைத்தூளுக்காக ஆய்ந்துநோக்கி, யாதும் காணுது, பழுத்த மேல் சட்டையும், முழங்கால் முட்டுகளில் கிழிந்து தைத்திருந்த நீலநிறக் கால் சட்டையும் அணிந்

திருந்த கருங்கண்ணனை நான்காவது மாணவனை ஏறிட்டுநோக்கினர்.

''நீ மட்டும் ஏன் பொம்மை மாதிரி நிற்கின்றாய்?''

கருங்கண்ணன் மறைவான வெறுப்புப் பார்வையுடன் விடையளித்தான்.

''என் சட்டைக்குப் பையில்லை.''

பையன் கைகளால் காற்சட்டையில் பைகளிருக்க வேண்டிய இடத்தைத் தொட்டுக் காட்டினன்.

''ஊம்! சட்டைக்குப் பை இல்லையா? என் மாவைக் கெடுத்த துஷ்டன் யாரென்று எனக்குத் தெரியாதென நினைத்தாயா? இம்முறையும் பள்ளியில் தங்கிவிட முடியுமென எண்ணமா? நடக்காது, இனி நடக்காது! இச்செயலுக்கான தண்டனை இன்றி எளிதில் நீ தப்பமுடியாது. போன தடவை, உன் தாயார் கெஞ்சினளே என்று உன்னைப் பள்ளியில் தொடர்ந்து படிப்பதற்கு அனுமதித்தேன். இன்றுடன் இதற்கு ஒரு முடிவு —ஓடிப்போ!''

இவ்வாறு மொழிந்த பாதிரியார் அந்தச் சிறுவனது காதை வலிவாகப் பிடித்திழுத்து வெளியே தள்ளி, கதவை மூடினர்.

வகுப்பில் அமைதி நிலவியது. மாணவர் யாவரும் உடலை ஒடுக்கிச் சுருக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். பாவெல் கர்ச்சாகின் பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்ட காரணத்தை ஒருவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. பாவெல்

கர்ச்சாகினது தோழன் ஸெர்யோஷா புருஸ்ஷாக் குக்கு மட்டுமே அதன் காரணம் தெரிந்திருந்தது. வகுப்பில் பின்தங்கிய ஆறு மாணவர்களும் திரு நாளுக்கு முன்பு பாதிரியாரின் வீட்டுக்குச் சென்று கேள்விகளுக்கு விடையளித்த பொழுது பாவெல் பாதிரியாரின் சமையலறையில் விழாப் பணியாரத் துக்காகப் பிசைந்து வைக்கப்பட்டிருந்த மாவில் ஒருகை புகையிலையைத் தூவினதை அவன் ஒருவன் மட்டுமே கண்டான்.

வெளியேற்றபட்ட பாவெல் பள்ளிக்கூடக் கட்டிடத்தின் வாயிற்படி அடியில் உட்கார்ந்து கொண்டான். ''வீட்டிற்கு எம்முகத்துடன் செல் வது? காலைமுதல் நடு இரவுவரை வரி இலாகா அதிகாரி வீட்டில் நாள்தோறும் வேலை செய்து வரும் தனது அன்புத் தாயிடம் என்ன சொல்வது?'' என்று பலவாராக அவன் எண்ணினான்.

பாவெலுக்குத் தொண்டையை அடைத்தது.

''நான் இனி என்ன செய்வேன்? எல்லாம் இந்தப் பாழாய்ப்போன பாதிரியால் வந்த வினை! எந்தச் சனி மாவில் என்னை புகையிலையைத் தூவச் செய்தது? அந்த ஸெர்யோஷாவால் வந்த வினை இது. 'இந்த நச்சுப்பாம்புக்கு ஏதாவது தூவு வோம்' என்று கூறினான். அம்மாதிரியே நாங்கள் செய்தோம். இப்பொழுது அவன் தப்பித்துக் கொண்டான். என்னைப் பள்ளிக்கூடத்திலிருந்தே தள்ளிவிடுவார்கள் போலிருக்கிறதே!''

இவ்வாறெல்லாம் பாவெல் தனக்குள் பேசிக் கொண்டான்.

அவனுக்கும் வஸீலிய் பாதிரியாருக்கும் பகை ஏற்பட்டுப் பல நாட்களாகிவிட்டன. என்ருே ஒரு நாள் மீஷா லெவ்ச்சுக்கோவுடன் பாவெல் சண்டை போட்டான். சண்டை போட்டதற்குத் தண்டனையாக வகுப்புப் பாடம் முடிந்த பிறகு பாதிரியின் உத்திரவின்படி பாவெல் நண்பகல் உணவிற்காக வீட்டிற்கு அனுப்பப்படவில்லை. ஒருவருமில்லாத வகுப்பறையில் குறும்பு செய்வானே என்று எண்ணிய ஆசிரியர் அவனை இரண்டாவது வகுப்பிற்கு அழைத்துச் சென்ருர். பாவெல் தன்னை உட்காரச் சொன்ன இடத்தில் உட்கார்ந்தான்.

அப்பொழுது, கறுப்புக் கோட்டு அணிந்தவரும், வாடி உலர்ந்தவருமான ஆசிரியர் பூமியைப் பற்றியும் விண்மீன்களைப் பற்றியும் விளக்கிக் கொண்டிருந்தார். வியப்பால் வாயைப் பெரிதாகத் திறந்த வண்ணம், ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு உலகமென்றும் பூமி லட்சக் கணக்கான ஆண்டுகளாக இருந்து வருகிறதென்றும் அவர் கூறுவதைக் கேட்டான். கேட்டதால் ஏற்பட்ட வியப்பில், எழுந்துநின்று ''பைபிள் அப்படி சொல்லவில்லையே'' என்று ஆசிரியரிடம் கேட்கவேண்டுமென்ற வேட்கைகூடக் கொண்டான். ஆனால் புதிய தொல்லையை வாங்கிக் கட்டிக்கொள்ளக் கூடாதென்று தன் வேட்கையை அடக்கிக்கொண்டான்.

பாதிரியார் எப்பொழுதுமே பாவெலுக்குப் பைபிள் பாடத்தில் நல்ல மதிப்பெண்கள் வழங்கி வந்தார். அவனுக்குப் பிரார்த்தனைப் புத்தகம்

முழுவதும் மனப்பாடம். அவன் பைபிளின் பகுதிகளான பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு இரண்டையும் நன்கு கற்றிருந்தான். வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் தெய்வக்குமாரன் எவை எவையைப் படைத்தார் என்பதை அவன் திட்டமாகத் தெரிந்திருந்தான். எனவே தான் கேட்ட விஷயத்தைப்பற்றி வஸீலிய் பாதிரியாரிடம் கேட்டுவிடுவதென்று முடிவுசெய்தான். உடனடுத்து வந்த சமயப் பாடத்தின்பொழுது, பாதிரியார் நாற்காலியில் அமர்ந்தாரோ இல்லையோ, உடனேயே பாவெல் கையைத் தூக்க, பாதிரியார் அவனுக்கு அனுமதிவழங்க, அவன் எழுந்து கேட்டான்.

''ஐயா! பூமி லட்சக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வருவதாக இரண்டாவது வகுப்பு ஆசிரியர் ஏன் கூறுகிறூர்? பைபிளில் ஐந்தாயி....''

பாதிரியாருடைய கீச்சுக்குரல் பாவெல் பேச்சுக்குத் தடை போட்டது.

''போக்கிரிப் பயலே! என்ன சொல்கிறுய்? வேதத்தை நீ கற்றுக்கொள்ளும் அழகு இது தானு?''

பாவெல் மறுபடியும் ஏதோ கூறுவதற்காக வாயைத் திறந்தான். ஆனுல் அதற்குள் பாதிரியார் அவனிடம் பாய்ந்து வந்து, அவனது காதுகளைப் பற்றிக்கொண்டு, அவன் தலையைச் சுவரின் மீது இடிக்கத் தொடங்கினுர். சில நிமிஷங்களுக்குப் பிறகு செம்மையாக அடிபட்ட, பெருந்திகிலடைந்த பாவெல், வகுப்பிலிருந்து வெளியேற்றப்பட்டான்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அவனுடைய தாயாரும் அவனை வெகுவாகக் கடிந்துகொண்டாள்.

அதற்கு அடுத்த நாள் அவளே பள்ளிக்குப் போய், மகனை வகுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று பாதிரியாரிடம் மன்றாடினாள். அன்று முதல் பாவெல் பாதிரியாரை அடி உள்ளத்திலிருந்து வெறுக்கத் தொடங்கினான். அவரை வெறுத்தான். அவரைக் கண்டு பயந்தான். தனக்குச் சிறு கெடுதல்கள் செய்தவரையும் மன்னிப்பதில்லை பாவெல். அவன் பாதிரியாரையும், அவரால் தனக்கு அநீதியாக வழங்கப்பட்ட அடிகளையும் மறக்கவில்லை. அவரிடம் நிரம்பக் கோபமும் வர்மமும் கொண்டான்.

அதன்பின் வஸீலிய் பாதிரியார் பையனைப் பன்முறை அவமானப்படுத்தினார். பாவெலை வகுப்பறையிலிருந்து அடிக்கடி வெளியேற்றினார். பல வாரங்களுக்கு அவனைப் பாடத்தின்போது வகுப்பறையின் மூலையில் நிற்கச் செய்தார். அற்பசொற்பப் பிழைகளுக்காக இத்தகைய தண்டனைகள் பாவெலுக்கு விதிக்கப்பட்டன. மேலும், பாடத்தை ஒப்புவிக்கும்படி பாதிரியார் பாவெலை ஒருபொழுதும் வேண்டுவதில்லை. எனவே ஈஸ்டர் திருவிழாவுக்கு முன்னால் பாடம் ஒப்பிப்பதற்காக அவன் வகுப்பில் பின்தங்கிய வேறு சில மாணவர்களுடன் பாதிரியார் வீட்டுக்குப் போகும்படியாயிற்று. அப்பொழுதுதான், சமையலறையில் பாவெல் மாவில் புகையிலைப் பொடியைத் தூவினான்.

அவன் செயலை ஸெர்யோஷாவைத் தவிர

வேறு ஒருவரும் பார்க்க வில்லை. எனினும் குற்றவாளி யாரென்பதைப் பாதிரியார் உடனே ஊகித்துவிட்டார்.

...வகுப்பு முடிந்தவுடன், சிறுவர்கள் வெளியே வந்து பாவெலைச் சூழ்ந்துகொண்டனர். அவனோ சோர்வடைந்தவனாக ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஸெர்யோஷா வகுப்பறையிலிருந்து வெளிவரவில்லை. அவன் தான் குற்றவாளி என உணர்ந்த போதிலும், நண்பனுக்கு எவ்விதத்திலும் உதவுவதற்கு இயலாதிருந்தான்.

தனது அறையின் திறந்த ஜன்னல் வழியே தலைமை ஆசிரியர் தலையை நீட்டினார்.

''உடனே கர்ச்சாகினை இங்கு அனுப்புங்கள்'' என்று உரக்கக் கூவினார்.

அவரது கனத்த குரலின் ஒலியைக் கேட்டுப்பாவெல் நடுங்கினான். விரைவாகத் துடிக்கும் இதயத்துடன் அவன் தலைமை ஆசிரியரிடம் சென்றான்.

புகைவண்டி நிலையத்திலிருந்த சிற்றுண்டிச் சாலையின் சொந்தக்காரன் நடுத்தர வயதினன்; வெளிறிப் போன முகத்தினன்; தனது ஒளியும் நிறமும் இழந்த கண்களால் அருகில் நின்ற பாவெலை ஏறிட்டு நோக்கினான்.

''இவனுக்கு வயது என்ன?''

''பன்னிரண்டு'' என்று தாய் விடையளித்தாள்.

''சரி, இங்கு வேலை செய்யட்டும். மாதச் சம்பளம் எட்டு ரூபிள்கள். ஒன்றுவிட்டு ஒருநாள்

வேலை. வேலைநாட்களில் இவ்விடம் சாப்பாடு. திருடக் கூடாது.''

''நீங்க ஒன்னு! அவன் ஒருபொழுதும் திருட மாட்டான். நான் உறுதி கூறுகிறேன்'' என்று பயத்துடன் பதிலளித்தாள் தாய்.

''இவன் இன்றே வேலை செய்ய ஆரம்பிக்கட்டும்'' என்று எஜமானன் உத்திரவிட்டான். பிறகு கல்லாப்பெட்டிக்குப் பின்னலிருந்த பெண்ணை நோக்கி, ''ஸீனு, பையனைச் சமையலறைக்கு அழைத்துச் செல். கிரீஷா செய்துவந்த வேலையை இவனுக்குக் கொடுக்கும்படி பிரோஸ்யாவிடம் கூறு'' என்று கூறினன்.

ஸீனு என்ற பணிப் பெண், அப்பொழுது உப்பிலிட்ட பன்றித் தொடையைக் கத்தியால் நறுக்கிக் கொண்டிருந்தாள். கத்தியை அப்பால் வைத்துவிட்டு, தலை அசைவால் பாவெலைப் பின் தொடரும் படி பணித்து விட்டு, ஹாலுக்குக் குறுக்கே முன்சென்றாள். பாத்திரங்களைத் துலக்கும் அறையை நோக்கிச் சென்ற ஸீனுவைப் பின் தொடர்ந்து சென்றான் பாவெல். அவனுடைய தாயார் அவனுக்குப் பின்னல் துரித நடையில் சென்று, அவன் காதில் ரகசியமாகக் கூறினாள்.

''பாவெல், ஆசை மகனே! நன்றாக வேலை செய். அவமானத்தைத் தேடிக்கொள்ளாதே!'' என்று உருக்கமாகக் கேட்டுக்கொண்டாள்.

பாவெல் உள்ளே செல்வதைத் துயரக் கண்களுடன் நோக்கி விட்டு, தாயார் வெளியேறினாள்.

பாத்திரம் தேய்க்கும் அறையில் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. கழுவப்பட்ட தட்டுகள், கத்திகள், முள்கரண்டிகள் ஆகியவை மேஜையின்மீது குவிந்திருந்தன. சில பெண்கள் அவற்றைத் தங்களது தோளிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த துண்டுகளால் துடைத்துக் கொண்டிருந்தனர்.

கொத்துக் கொத்தாகச் சடைபற்றியிருந்த செம்மயிரை உடைய ஒரு பையன், பாவெலை விடச் சற்று மூத்தவன், இரண்டு பெரிய சமோவார்களைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

தட்டுகள் கழுவுவதற்காக நீர்த்தொட்டியில் நிரம்பியிருந்த கொதிநீரிலிருந்து கிளம்பிய ஆவி அறை முழுவதும் பரவி இருந்ததால் அங்கு வேலை செய்துகொண்டிருந்த பெண்களின் முகங்களைப் பாவெலால் முதலில் பார்க்க முடியவில்லை. திகைப்புடன் அவன் என்ன செய்ய வேண்டுமென்பதை எவராவது சொல்லட்டுமென்று காத்திருந்தான்.

ஸீனு தட்டு கழுவும் பெண்களில் ஒருத்தியின் தோளைத் தொட்டுக் கூறினாள்:

''பிரோஸ்யா, கிரீஷாவுக்குப் பதிலாக ஒரு புதிய பையனை அழைத்து வந்திருக்கிறேன். என்ன செய்ய வேண்டுமென்பதை அவனுக்கு எடுத்துக் கூறு.''

பிறகு, பிரோஸ்யாவைக் காட்டி, ''இவள் தான் இங்குப் பொறுப்பாக இருப்பவள். நீ என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்வாள்'' என்று


ПИВО

பாவெலிடம் கூறி விட்டு, ஸீனு சிற்றுண்டிச் சாலேக்குத் திரும்பினுள்.

''சரி'' என்று ஸீனுவுக்கு மென்மையான குரலில் பதிலளித்த பாவெல், பிரோஸ்யாவை நோக்கினுன். அவளோ, நெற்றியில் பெருகிய வேர்வையைத் துடைத்துக் கொண்டே, பாவெலேக் கணிப்பவளேப் போல, உச்சந்தலே முதல் உள்ளங் கால் வரை தன் பார்வையைச் செலுத்தினுள். தளர்ந்து விழுந்த சட்டைக்கையை மீண்டும் சுருட்டி விட்டுக் கொண்டே அவள் பாவெலிடம் இனிய குரலில் பேசினுள்:

''வேலேயில் கடினமில்லே. ஆனுல் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். அதோ அந்தக் கொதி கலத்தில் காலேதோறும் நீர் கொதிக்க வைக்க வேண்டும். அது எப்பொழுதும் சூடாக இருக்க வேண்டும். எந்த நேரத்திலும் கொதி நீர் கிடைக்க வேண்டும். தவிர, விறகையும் வெட்ட வேண்டும். சமோவார்களேக் கவனித்துக்கொள்ள வேண்டும். சில சமயங்களில், கத்திகளேயும் முள் கரண்டிகளேயும் கழுவ வேண்டும்; கழி நீரைக் கொண்டு போய்க் கொட்ட வேண்டும்; வேலே நிறைய இருக்கும்'' என்று அவள் அடுக்கிக் கொண்டேபோனுள். அவள் பேசிய முறை பாவெலே மிகவும் கவர்ந்தது. அவளது களேபொருந்திய முகமும் நுனி உயர்ந்த சிறிய நாசியும் அவனுக்குப் பிடித்துவிட்டன.

''நல்லதொரு அத்தை'' என்று பாவெல் முடிவு செய்தான். பிறகு கூச்சத்தை அடக்கிக்

கொண்டு, ''நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும், அத்தை?'' என்று கேட்டான்.

இந்தச் சொற்களைக் கேட்டவுடன், தட்டு களைக் கழுவுகிறவர்கள் அனைவரும் கொல்லென்று உரக்கச் சிரித்தனர்.

''ஹா! ஹா!! ஹா!!! பிரோஸ்யாவுக்கு ஒரு மருமகன் கிடைத்துவிட்டான்!'' என்றனர்.

பிறரை விடப் பிரோஸ்யாதான் கொல் லென்று உரக்கச் சிரித்தாள்.

பிரோஸ்யா இளம்பெண் என்பதை நீராவிப் படலத்தின் வழியே நோக்கிய பாவெல் புரிந்து கொள்ளவில்லை. அவளுக்குப் பதினெட்டு வயது தான்!

முற்றும் குழப்பமடைந்த பாவெல் அடுத் திருந்த பையனைப் பார்த்து, ''நான் இப்பொழுது என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்டான். ஆனால் அந்தப் பையன் உள்ளூறச் சிரித்துக் கொண்டு, ''அத்தையைக் கேள்! அவள் உனக்கு எல்லாவற்றையும் விளக்குவாள். நான் இங்கு தாற் காலிகமாக வேலைசெய்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சமையலறைக் கதவை நோக்கிப் பாய்ந்தான்.

''இங்கு வா. முள்கரண்டிகளைத் துடைப்பதில் உதவிசெய்'' என்று தட்டு கழுவிக்கொண்டிருந்த நடுத்தர வயதுள்ள ஒரு வேலைக்காரி பாவெலைக் கூப்பிட்டாள். ''சிரிப்பதை நிறுத்துங்கள். இப்படிச் சிரிக்கும்படி அவன் என்ன கூறி விட் டான்?'' என்று கூறி மற்ற பெண்களை அடக்கி விட்டு, பாவெலிடம் தட்டு துடைக்கும் துண்டு

ஒன்றைக் கொடுத்தாள். ''துண்டின் ஒரு முனை யைப் பல்லால் கடித்துக் கொள். இன்னொரு முனையைக் கையால் பிடித்துக்கொண்டு, முள்கரண் டியைத் துண்டின்மேல் முன்னும் பின்னுமிழுத்து சுத்தம் செய்யவேண்டும். துளி அழுக்கு இருக் கக் கூடாது. இவ்விஷயத்தில் இங்கு ரொம்பக் கண் டிப்பாயிருக்கிறார்கள். வாடிக்கைக்காரர்கள் எப் பொழுதுமே முள்கரண்டிகளைத் துருவித்துருவிப் பார்ப்பார்கள். துளி அழுக்கு ஒட்டிக்கொண்டி ருந்தாலும் ரகளை செய்வார்கள். அந்த மாதிரித் தகராறு வந்தால் அந்த விநாடியிலேயே எஜமானி அம்மாள் உனக்குச் சீட்டுக் கொடுத்து விடுவாள்'' என்று அவள் கூறினாள்.

''எஜமானி அம்மாளா? என்னை வேலைக்கு அமர்த்திய எஜமானன்தான் பொறுப்பாளி என்று நினைத்தேன்'' என்று பாவெல் பதிலளித்தான்.

அம்மாது நகைத்தாள்.

''தம்பி, எஜமானும் இங்குள்ள மேஜை நாற் காலியும் ஒன்றுதான். எஜமானி அம்மாள்தான் உண்மையான அதிகாரி. அவள் இன்று இங்கு இல்லை. சில நாட்கள் வேலை செய்தால் நீயே எல்லாவற்றையும் தெரிந்து கொள்வாய்'' என்று பதில் கூறினாள்.

அச்சமயம், அந்த அறையின் கதவு திறந்தது. ஏராளமான எச்சிற் பாத்திரங்களுடன் மூன்று பணியாட்கள் நுழைந்தனர். அவர்களில் ஒருவன் பருத்த தோள்களையும் பெரிய சதுரமான முகத் தையும் மாறுகண் பார்வையையும் கொண்டவன்.

''கொஞ்சம் சுறுசுறுப்போடு வேலை நடக்கட்டும்! தற்பொழுது பன்னிரண்டு மணி புகைவண்டி வரப்போகிறது. நீங்கள் வீண்பொழுது போக்கிக் கொண்டிருக்கிறீர்களே!'' என்று கூறினன். பிறகு பாவெலைப் பார்த்தான். ''இவன் யார்?'' என்று கேட்டான்.

''இவன்தான் புதியதாக வந்தவன்'' என்ருள் பிரோஸ்யா.

''...ம்! புதிய பையனு?'' என்று சொல்லி விட்டு, பாவெல் தோள்மீது கைபோட்டான். அவனை சமோவார்கள் உள்ள இடத்துக்குத் தள்ளிக்கொண்டே, ''நான் சொல்வதைக் கேள்! இந்த சமோவார்களில் நீர் கொதித்துக் கொண்டேயிருக்க வேண்டும். இது உன் பொறுப்பு. ஆனல் தற்பொழுது ஒன்றில் தீ அணைந்துவிட்டது. இன்னென்றிலும் அணையும் தருவாயிலிருக்கிறது. இன்று உன்னை மன்னித்துவிடுகிருேம். நாளைக்கு மீண்டும் இவ்வாறு நடந்தால், உனக்குக்கன்னத்தில் கிடைக்கும். புரிந்ததா? ''என்று எச்சரித்தான்.

ஒரு வார்த்தைக்கூட பேசாமல் பாவெல் சமோவார்களைக் கவனிக்கலானன்.

இவ்வாருக பாவெல் ஒரு உழைப்பாளியானன். அந்த முதல் நாள் பட்ட சிரமத்தைப்போன்று அதற்கு முன் அவன் ஒரு பொழுதும் பட்டதில்லை. வீட்டில் தாயாருக்குக் கீழ்ப்படிய மறுக்கலாம். ஆனல் இந்தச் சிற்றுண்டிச் சாலையில் அவ்வாறெல்லாம் செய்ய முடியாதென்பதைத் தேர்ந்து தெளிந்தான். கட்டளைப்படிக் காரியங்கள்

செய்யாவிட்டால் கன்னத்தில் கிடைக்குமென் பதை மாறு கண்ணனன் திட்டமாகத் தெரிவித்து விட்டான்.

பாவெல் ஊதிக் கொண்டே சமோவாரில் தீப்பற்ற வைக்கும் பொழுது தீப் பொறிகள் பருத்த வயிற்றைக் கொண்ட சமோவார்களி லிருந்து பறந்தன. கழுநீரை வாளியில் எடுத்துக் கொண்டு, கழுநீர்க் கிடங்கில் கொண்டு ஊற்றி ஞன். நனைந்து போன தட்டுத் துடைத்த துண்டு களைக் கொதிக்கும் சமோவார்களில் வைத்து உலர்த்திஞன். தனக்கு இடப்பட்ட வேலைகள் அனைத்தையும் செய்தான். அன்று இரவு நெடு நேரம் கழிந்தபிறகு, களைத்துச் சோர்ந்த பாவெல் சமையலறைக்குச் சென்ருன். அவன் அறையை விட்டு அகன்றதும் தட்டு கழுவும் பெண் அனீஸ்யா கூறிஞள்:

''அலாதியான பையன்! வெறிபிடித்தவன் மாதிரி அங்கும் இங்கும் ஓடி வேலைசெய்கிருன். வீட்டில் வாழக் கடினம் போலும். எனவேதான் இவனை வேலைக்கு அனுப்பியிருக்கிருர்கள்.''

''நல்ல உழைப்பாளி! அவனைத் தூண்டிவிடத் தேவையில்லை!'' என்று பிரோஸ்யா கருத்துத் தெரிவித்தாள்.

''சீக்கிரத்தில் இந்த வேகமெல்லாம் போய் விடும்! எல்லோருமே ஆரம்ப சூரர்களாகத்தான் இருப்பார்கள்!'' என்ருள் லூஷா....

மறுநாள் காலை ஏழுமணி, இரவு முழுவதும் தூக்கமின்றி கால் ஓயாமல் ஓடியாடி வேலை

செய்து களைத்துத் தளர்ந்து போயிருந்த பாவெல், தனக்குப் பதிலாக வேலை செய்யவிருந்த பையனிடம் சமோவார்களை ஒப்படைத்தான். கொழுத்த கன்னமும் குறும்புக் கண்களும்கொண்ட அப்பையன் சமோவார்களை நன்றாகச் சோதனை செய்தான். எல்லாம் ஒழுங்காயிருக்கிறது என்று உணர்ந்தான். பிறகு, காற்சட்டைப் பைகளில் கைகளை விட்டுக் கொண்டு, அலட்சிய பாவத்துடன், இறுக்கிய பற்களின் இடையே உமிழ்ந்த எச்சில் நீருடன், பாவெலைச் சிறிது வெளிர்ந்த கண்களுடன் நோக்கிச் சண்டைக்காரன் தோரணையில் கூறினான்:

''சளிமூக்கு! இதைக் கேள்! நாளைக் காலை சரியாக ஆறுமணிக்கெல்லாம் நீ இங்கு இருக்க வேண்டும்.''

''ஏன் ஆறுமணிக்கு? ஏழு மணிக்குத்தானே தவணைமாற்ற வேண்டும்'' என்றான் பாவெல்.

''தவணைமாறும் நேரத்தைப்பற்றிக் கவலையில்லை! நீ இங்கு ஆறுமணிக்கு வந்துவிட வேண்டும்! அதிகமாக வாயாடாதே! அதிகமாகக் குரைத்தால் பல்லை உடைத்துக் கையில் கொடுப்பேன்! நேற்று வந்த பயல், அதற்குள் வீண் வம்பா செய்கிறாய்?''

பையன்கள் இருவருக்குமிடையே நடந்து கொண்டிருந்த பேச்சுவார்த்தைகளை, தங்களது பொறுப்பை புதிதாகத் தவணைமாற்றவந்த பெண்களிடம் ஒப்பித்து விட்டு அங்கு நின்று கொண்டிருந்த தட்டுக் கழுவும் பெண்கள், பெரும் ஆர்வத்துடன் கேட்கத் தொடங்கினர். அந்தப்

பையனின் துடுக்குத்தனமும், வீண் வம்புக்கு இழுக்கும் நடத்தையும் பாவெலுக்கு ஆத்திரத்தை ஊட்டின. தன்னைத் தவணைமாற்ற வந்த அந்தப் பையனுக்குத் தக்க தண்டனை கொடுப்பதற்காகப் பாவெல் ஒரு அடி முன்வைத்தான். ஆனால் புதிதாகக் கிடைத்த வேலை முதல் நாளன்றே போய் விடப் போகிறதே என்ற அச்சம் அவன் ஆவேசத்தை அடக்கியது.

''உன் வாயை அடக்கு. என்னிடம் வம்புக்கு வராதே. வீணாக வீம்பு பிடித்தால், நீ எதிர்பாராத அளவுக்கு வாங்கிக் கட்டிக்கொள்வாய். நான் நாளைக்கு ஏழு மணிக்குத்தான் வருவேன். உன்னைப் போலவே நானும் சண்டை போட முடியும். பரீட்சை செய்ய வேண்டுமானால், நான் தயார்!'' என்று ஆத்திரத்துடன் கூறினான் பாவெல்.

மயிர் சிலிர்க்க நின்ற பாவெலைக் கண்டு எதிராளி வியப்பால் வாயைப் பிளந்தான். அச்சம் நிறைந்தவனாக, கொதிகலத்தை நோக்கி ஓரடி பின்வைத்தான். பாவெலின் உறுதி வாய்ந்த எதிர்ப்பை அவன் எதிர்பார்க்கவில்லை.

''சரி, சரி! பார்ப்போம்!'' என்று அவன் முணுமுணுத்தான்.

முதல் நாள் வேலை இடையூறில்லாமல் முடிந்துவிட்டதென்ற மனத்திருப்தியுடனும் ஓய்வு எடுக்கும் உரிமையை நேர்மையான முறையில் சம்பாதித்துவிட்டோம் என்ற உணர்வுடனும் பாவெல் வீட்டுக்கு வேகமாகச் சென்றான். இப்பொழுது அவனும் ஒரு தொழிலாளி! வெட்டிச்

சோறு தின்னி என்று அவனை இனி எவரும் குற்றஞ்சாட்ட முடியாது.

மரம் அறுக்கும் மில்லின் கட்டிடத்துக்கு மேல், காலைக் கதிரவன் ஏறிச் சென்று கொண்டிருந்தான். சீக்கிரத்தில், லெஷ்சீன்ஸ்கிய் வீட்டுத் தோட்டத்துக்குப் பின்னுலுள்ள அவனது குடிசை பார்வைக்குப் புலப்படும்.

''அம்மா படுக்கையைவிட்டு இப்பொழுது தான் எழுந்திருப்பாள். நானே வேலையிலிருந்து வீட்டுக்குப் போகிறேன்!'' என்று நினைத்தவனுகப் பாவெல் தன்னுடைய நடையின் வேகத்தை அதிகரித்தான். சீட்டி அடித்துக்கொண்டு நடந்தான். ''பள்ளியிலிருந்து தள்ளப்பட்டதால் ஒன்றும் மோசம் போய்விடவில்லை. எப்படியும் அந்தப் பாழாய்ப்போன பாதிரி நான் அமைதியாயிருக்க அனுமதித்திருக்க மாட்டான். இனி அவனுல் எனக்கு எந்தக் கெடுதலும் செய்யமுடியாது'' என்று எண்ணிக்கொண்டே பாவெல் தன் வீட்டையடைந்தான். ''சணல்நிற முடிகொண்ட அந்தப் பையனை ஒரு நாள் நிச்சயமாகப் பதம் பார்த்துத்தானுக வேண்டும்'' என்று எண்ணிக் கொண்டே திட்டிவாசற்கதவைத் திறந்தான்.

அவனது தாயார் முற்றத்தில் சமோவாரில் நீர் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தாள். மகனைக் கண்டதும், ''வேலை எப்படியிருந்தது?'' என்று கவலையுடன் கேட்டாள்.

''நன்றுயிருந்தது'' என்று பதில் கூறினுன் பாவெல்.

தாயார் ஏதோ சொல்வதற்காக வாய் திறந்தாள். அதற்குள் திறந்த ஜன்னல்வழியாக உள்ளே நோக்கிய பாவெல், தன்னுடைய அண்ணன் ஆர்த்தியோமின் அகன்ற முதுகைக் கண்டான்.

''ஆர்த்தியோம் வந்திருக்கிறனு?'' என்று கலக்கத்துடன் கேட்டான்.

''ஆம், நேற்று இரவு வந்தான். அவன் இங்கேயே இருக்கப் போகிறன். இங்கு ரயில்வே டெப்போவில் வேலே செய்யப் போகிறன்.''

பாவெல் தயங்கித் தயங்கி முன்கதவைத் திறந்தான்.

மேஜைக்கு முன்னுல் பாவெலுக்குத் தன் முதுகைக் காட்டிக் கொண்டு அமர்ந்திருந்த மனிதன் தன் பருத்த உடலேத் திருப்பிக்கொண்டு பாவெலேப் பார்த்தான். அடர்ந்த கரிய புருவங்களுடன் கூடிய அவனது கடுமையான கண்கள் பாவெலே நோக்கின.

''ஓ! புகையிலேப் பையன் வருகிறனு? வணக்கம், வணக்கம்.''

பாவெல் புதிதாக வந்த தன் அண்ணனுடன் இனிமையாக உரையாடப் போகின்றேம் என்று சிறிதும் எண்ணவில்லே.

''எல்லாச் செய்திகளும் ஆர்த்தியோமுக்குத் தெரிந்து விட்டன. நன்றாக ஏசப் போகிறன். செம்மையாக அடிக்கப் போகின்றன்'' என்று எண்ணியது அவன் உள்ளம். இந்த எண்ணம் அவனுக்கு ஒரளவுக்கு அச்சத்தை ஊட்டியது.

ஆனால் பாவெலைத் தண்டிக்கும் எண்ணம் ஆர்த்தியோமுக்கு எழவில்லை. அவன் நாற்காலி மீது அமர்ந்தபடியே பாவெலை உற்று நோக்கினான். அந்தப் பார்வையில், குத்தலும் கேலியும் கலந்திருந்தன.

''சர்வகலாசாலைப் பட்டதாரியாகி விட்டாயா? படிக்க வேண்டியதெல்லாம் படித்துவிட்டு, அழுக்கு நீர் சுமக்கிறாயா? அப்படித்தானே?'' என்று கேட்டான் ஆர்த்தியோம்.

பாவெல் குனிந்த தலை நிமிராமல், தளத்திலுள்ள வெடிப்பை வெறித்துப் பார்த்தான். அங்கிருந்த ஒரு ஆணியின் தலையை உன்னிப்பாகப் பார்த்தான். உடன் ஆர்த்தியோம் எழுந்திருந்து சமையலறைக்குச் சென்றான்.

''அடி எதுவுமில்லாமல் தப்பிவிட்டோம் போலிருக்கிறது'' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டான் பாவெல்.

பிறகு, தேநீர் குடிக்கும் பொழுது ஆர்த்தியோம் பள்ளிச் சம்பவத்தைப்பற்றி பாவெலைக் கேட்டான். பாவெலும் விபரமாக எடுத்துரைத்தான்.

''இத்தகைய போக்கிரியாக வளர்ந்தால், நீ என்ன ஆவாய்?'' என்று அவனது அன்னை துக்கத்துடன் கேட்டாள். ''இவனை என்ன செய்வது? இவன் யாரைக் கொண்டு பிறந்திருக்கிறான் என்று தெரியவில்லையே! இவனால் நான் அடைந்த துன்பத்துக்கும் துயரத்துக்கும் எல்லையும் உண்டா? ஆண்டவனே!'' என்று அவள் அங்கலாய்த்தாள்.

காலிக் கோப்பையைத் தள்ளி வைத்துவிட்டு ஆர்த்தியோம் பாவெலிடம் கூறினான்:

''இதை நினைவில் கொள். நீ எங்கு சென்றாலும் தொல்லைகளையும், வீண் மனஸ்தாபங்களையும் உடன் கொண்டு வருகிறாய். இனிமேலாவது ஜாக்கிரதையாக இரு. உன் வேலையை ஒழுங்காகச் செய்துவா. வேலையில் தில்லு முல்லு எதுவும் வேண்டாம். இந்த வேலையிலிருந்து நீ தள்ளப்பட்டால், உனக்கு நான் நன்றாகக் கொடுப்பேன். அம்மாவுக்கு உன்னால் ஏற்பட்ட தொல்லைகள் போதும். நீ எப்பொழுதும் ஏதாவது தகராறில் சிக்கிக் கொள்கிறாய்! இனி அப்படி நடக்கக் கூடாது. சுமார் ஓர் ஆண்டு நீ வேலைசெய்த பிறகு, ரயில்வே டெப்போவில் உன்னைப் பயிற்சித் தொழிலாளியாகச் சேர்ப்பதற்கு முயற்சிக்கிறேன். இந்தக் கழிநீர் சுமக்கும் வேலையைச் செய்துகொண்டேயிருந்தால், நீ உருப்பட முடியாது. ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும். தற்சமயம் உனக்கு வயது ஆகவில்லை. ஓர் ஆண்டுக்குப் பின் என்ன செய்யலாமென்று பார்க்கிறேன். அவர்கள் உன்னை எடுத்துக் கொள்ளலாம். இனி நான் இங்குதான் வேலை செய்யப் போகிறேன். அம்மா இனி வேலைக்குப் போக வேண்டாம். கண்ட நாய்களுக்கெல்லாம் அவள் ஊழியம் செய்தது போதும். நீ ஆளாக வேண்டுமென்பதுதான் எங்கள் ஆசை!''

இவ்வாறு கூறிவிட்டு ஆர்த்தியோம் தன் கனத்த உடலைத் தூக்கிக் கொண்டு எழுந்து

நின்ருன். நாற்காலிமீது தொங்கிய சொக்காயை எடுத்து மாட்டிக் கொண்டான்.

''டெப்போ வரையில் போய்விட்டு ஒரு மணி நேரத்தில் வந்துவிடுகிறேன்'' என்று அன்னையிடம் கூறிவிட்டு ஆர்த்தியோம் கிளம்பினுன். கதவு நிலையைத் தாண்டும்பொழுது குனிந்து சென்ருன்.

வெளி வாசலுக்குச் செல்லும் வழியில், ஜன்னல் வழியாக உள்ளே நோக்கி, ''ஒரு ஜதை பூட்ஸூம் கத்தியும் உனக்காக வாங்கி வந்திருக்கிறேன். அவற்றை அம்மா உனக்குக் கொடுப்பாள்'' என்று பாவெலிடம் கூறிவிட்டுச் சென்ருன்.

ரயில்வே நிலையச் சிற்றுண்டிச் சாலையில் பகலும் இரவும் வியாபாரம் நடந்துகொண்டிருக்கும்.

அது பெரிய சந்திப்பு. அங்கு ஐந்து இருப்புப் பாதைகள் ஒன்று கூடின. நிலயத்தில் பொதுவாக எப்பொழுதும் பெருங்கூட்டமிருந்து கொண்டேயிருக்கும். இரவுதோறும் இரண்டு அல்லது மூன்று மணி நேரம், அடுத்து அடுத்த இரண்டு புகைவண்டிகளின் வருகைகளுக்கிடையேயுள்ள இடை நேரங்களில் மட்டுமே அங்கு அமைதி நிலவியிருக்கும். ஒவ்வொரு நாளும் பல்வேறு பாதைகளில் செல்லும் நூற்றுக்கணக்கான புகைவண்டிகள் இங்கு ஒன்றுகூடிப் பிரிந்தன. போர்முனையிலிருந்து—போர்முனைக்கு. அங்கிருந்து போரில் உடல் உறுப்புகளை இழந்தவர்கள் இங்கும்—இங்கிருந்து

பழுப்பு நிற மேலாடை அணிந்த புத்தப் புதிய படைவீரர்கள் அங்கும் — இடைவிடாத மாற்றம்.

நிலையத்தின் சிற்றுண்டிச் சாலையில் பாவெல் இரண்டு ஆண்டுகள் உழைத்தான். அப்பொழுதெல்லாம் அவன் சமையலறையையும் பாத்திரம் கழுவும் இடத்தையும் தவிர வேறொன்றையும் பார்க்கவில்லை. அடித்தளச் சமையலறையில் இருபதுக்கு மேற்பட்ட நபர்கள் அசுர வேகத்தில் வேலை செய்து கொண்டேயிருந்தனர். பத்துப் பணியாட்கள் சிற்றுண்டிச் சாலைக்கும் சமையலறைக்கும் மாறிமாறி இடைவிடாமல் ஓடிக் கொண்டிருந்தனர்.

இப்பொழுது பாவெலின் மாதச் சம்பளம் எட்டு ரூபிள்களிலிருந்து பத்து ரூபிள்களாக உயர்ந்துவிட்டது. இந்த இரண்டு வருடங்களில் அவன் பெரிதாக வளர்ந்துவிட்டான். அவனது உடலில் பலம் கூடியது. இந்த இரண்டு ஆண்டுகளில் அவனுக்கு ஏற்பட்ட சோதனைகள் பல. ஆறு மாதத்துக்குச் சமையலறைப் பையனாக வேலை பார்த்தான். ஆனால் மீண்டும் பாத்திரம் கழுவும் இடத்துக்கு அனுப்பப்பட்டான். ஏன் தெரியுமா? சர்வாதிகாரியான தலைமைச் சமையற்காரனுக்குப் பாவெலைக் கண்டால் பிடிக்கவில்லை. தான் நாள்தோறும் பாவெலுக்குக் கொடுத்துவரும் உதைகளுக்கு ஈடாக அவன் ஒருநாள் கத்தியை எடுத்து தன்னைக் குத்திவிடுவானோ என்று அஞ்சினான். அதனால்அவன் வேலையையே இழந்திருப்பான். அவனது கடின உழைப்புத் திறனே வேலைக்குப்

பாதுகாப்பாய் இருந்தது. அவனைப் போலக் களைப்பின்றிக் கடுமையாக உழைக்க வேறு எவராலும் முடியவில்லை.

வியாபாரம் அதிகமாக நடக்கும் நேரத்தில் பாவெல் தட்டுகளை நிரப்பிக்கொண்டு, சமையலறைப் படிக்கட்டில் தாவித் தாவி வேகமாக ஏறி இறங்குவான். நான்கு ஐந்து படிகளை ஒரே பாய்ச்சலில் தாண்டுவான். சூறுவளி வேகம்தான்!

இரவில், சிற்றுண்டிச் சாலையின் இரு கூடங்களிலும் ஒலி அடங்கிய பிறகு பணியாட்கள் அடித்தளத்திலுள்ள சமையல் சாமான் அறைகளில் கூடுவார்கள். அசுர வெறியுடன் சீட்டாட்டம் ஒன்று நடைபெறும். அந்த ஆட்டங்களில் பெரிய தொகை குறித்த நோட்டுகள் கைமாறுவதைப் பாவெல் பன்முறை கண்டிருக்கிறுன். அவ்வளவு பணம் அவர்களிடம் இருப்பதைக் கண்டு அவன் ஆச்சரியப்படவில்லை. ஏனென்றுல், ஒவ்வொரு பணியாளுக்கும் வேலைநேரத்தில் அரை ரூபிளாகவும் ரூபிளாகவும் மொத்தம் முப்பதிலிருந்து நாற்பது ரூபிள்கள் வரை இனும் கிடைப்பதை பாவெல் அறிவான். அந்தப் பணத்தை அவர்கள் குடியிலும் சூதிலும் விரயம் செய்தனர். பாவெல் அவர்களை வெறுத்தான்.

''உதவாக் கரைக் கழுதைகள்! முதல்வகுப்பு மெக்கானிக்கான ஆர்த்தியோமுக்கு மாதம் நாற்பத்து எட்டு ரூபிள்கள் தான் கிடைக்கிறது. எனக்குப் பத்து ரூபிள்கள்தான்! ஆனுல் அதே அளவு பணத்தை இவர்கள் ஒரே நாளில் சம்பா

தித்து விடுகிறார்கள்! வந்தவர்களுக்குச் சிற்றுண்டிகளைக் கொண்டு வழங்குவதால் இவர்களுக்கு இவ்வளவு பணம்! அந்தப் பணத்தைக் குடியிலும் சூதிலும் வீண் விரயம் செய்கிறார்கள்'' என்று பாவெல் எண்ணினான்.

பாவெல் தன் எஜமானர்களைப் போலவே இந்தப் பணியாட்களை அந்நியர்களாகவும் விரோதிகளாகவும் கருதினான். ''இவர்கள் இங்கு வெறும் வேலைக்காரர்கள். ஆனால் இந்தப் பன்றிகளின் மனைவிகளும் பிள்ளைகளும் பெருஞ்செல்வம் படைத்தவர்கள் மாதிரி, நகர வீதிகளில் மினுக்கிக் குலுக்கி நடைபோடுகிறார்கள்!'' என்று எண்ணி அவர்களை வெறுத்தான்.

சில சமயங்களில் இந்தப் பணியாட்கள் பள்ளி உடை அணிந்த தம் மக்கட்செல்வங்களை இட்டுக்கொண்டு வருவார்கள். வேறு சில சமயங்களில், சுகவாழ்வு வாழ்ந்து பருத்துக் கொழுத்துப் போன தம் இல்லாளை அழைத்து வருவார்கள். ''இந்தப் பணியாட்களிடம் சிற்றுண்டி பெற்றுப் புசிக்கும் கனவான்களை விட இவர்களிடம் அதிகப் பணம் இருக்கும் என்பது திண்ணம்'' என்று பாவெல் எண்ணினான். இரவு நேரத்தில், சமையலறையின் இருண்ட மூலைகளிலும் சாமான் அறைகளிலும் நடப்பதைக் கண்டும் பாவெல் அதிர்ச்சியடையவில்லை. அச்சிற்றுண்டிச் சாலையில் பதவியும், வலுவும் படைத்த எந்தவொரு மனிதனுக்கும் தன் உடலை ஒருசில ரூபிள்களுக்காக விற்கமறுத்த எந்த பணிப்பெண்ணும்

அதிக நாட்கள் வேலைசெய்ய முடியாதென்பதை அவன் தன் அனுபவத்தில் அறிந்து உணர்ந் திருந்தான்.

வாழ்வில் புதுமைகளுக்காகவும் கண்டறியாத உண்மைகளுக்காகவும் காத்திருந்த பாவெல், வாழ்வின் உண்மையான உருவத்தைக் கண் டான். அவன் அதன் அடிக்கிடங்கை உற்றுநோக் கினான். அதிலிருந்து வந்த பூசணம் பிடித்த துர்க்கந் தம், அழுகிப்போன சகதியின் நாற்றம் அவன் நாசியைத் துளைத்தது.

டெப்போவில் தனது தம்பியைப் பயிற்சிக்கு அமர்த்தும் முயற்சியில் ஆர்த்தியோமுக்கு வெற்றி கிடைக்கவில்லை. பதினைந்து வயதுக்குக் குறைந்த வர்களை டெப்போவில் வேலைக்கு எடுத்துக் கொள் ளுவதில்லை. ஆனால் பாவெலோ ரயில்வே தொழிற் சாலையின் புகைக்கரி படர்ந்த கட்டிடத்தால் கவர்ச்சிக்கப்பட்டான். சிற்றுண்டிச் சாலையை விட்டு வெளியேறும் நாளை அவன் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் அடிக்கடி ரயில்வே டெப்போவுக்குச் சென்று ஆர்த்தியோமைச் சந்திப்பான். அவனு டன் சென்று ரயில் வண்டிகளைப் பரிசோதிப்பான், தனக்குத் தெரிந்த அளவுக்கு உதவியும் செய்து வந்தான்.

பிரோஸ்யா வேலையைவிட்டு நீங்கிய பிறகு, அவனது தனிமை உணர்ச்சி இன்னும் பன்மடங் காகியது. சிரிப்பு தவழும் முகத்தைக் கொண்ட பிரோஸ்யா போனபின், அவளுடன் அவனுக்கு

ஏற்பட்டிருந்த நட்பின் வலுவை மேலும் கூர்மை யாக உணர்ந்தான். இப்பொழுதெல்லாம் காலை யில் பாத்திரங்கள் கழுவுமிடத்திற்கு வரும்பொழு தெல்லாம், நிலையத்தின் வழியாகச் செல்லும் போரிலிருந்து தப்பி ஓடிய பெண்கள் கீச்சுத் தொண்டையில் போடும் கூச்சலை கேட்கும்பொழு தெல்லாம், அவன் உலகமெல்லாம் வெறுமையாகி விட்டது போன்றும், தான் தன்னந்தனிமையாகி விட்டது போன்றும் உணரத் தொடங்கினான்.

ஓர் இரவு. பாவெல் கொதிகலத்துக்கு முன் உட்கார்ந்து கொண்டு தீயை வளர்த்துக் கொண்டிருந்தான். கொழுந்து விட்டு எரியும் தியைச் சுருக்கிய கண்களால் பார்த்துக்கொண் டிருந்தான். தீயின் வெப்பம் இதமாக இருந்தது. அப்பொழுது அவ்விடத்தில் வேறு ஒருவருமில்லை.

தன்னையும் அறியாமல், அவன் பிரோஸ்யா வைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தான். அதற்குமுன் ஒருநாள் அவன் கண்ட காட்சி மனத்திரையில் தோன்றியது.

சனிக்கிழமையன்று இரவில், இடைவேளை யில், பாவெல் அடித்தளத்துச் சமையலறைக்குப் போய்க் கொண்டிருந்தான். அப்பொழுது விறகு அடுக்கின்மீது ஏறி, சாமான் அறைக்குள் பார்க்க விரும்பினான். அந்த அறையில்தான் சூதாடிகள் வழக்கமாகக் கூடுவார்கள்.

அப்பொழுது சூதாட்டம் முழு வேகத்தில் நடந்து கொண்டிருந்தது. ஸலிவானவ் என்பவன்

வளைப் போல மரக்கட்டையின் மீது தலையை மோதிக்கொண்டு அழுத பிரோஸ்யாவைப் பார்த்த பொழுது, அவனுக்கு ஏற்பட்ட உள்ளக்கிளர்ச்சியைச் சொற்களால் விவரிக்க முடியாது. பாவெல் சத்தம் போடாது நின்றான். வலிப்புடன் படிகளின் இரும்புக் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். ஆனால் அவன் மூளையில் கருத்துகள் தெளிவாகப் பரந்து விரைந்தன.

''இவளையும் விற்றுவிட்டார்கள் நாசமாய்ப் போனவர்கள்! ஓ! பிரோஸ்யா, பிரோஸ்யா!...''

புரோகரிடம் பாவெலுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பு ஆழப் பதிந்தது. சுற்றியுள்ளதனைத்தையும் அவன் வெறுத்தான். ''இந்தக் கயவனை உதைத்துக் கொல்வதற்கு எனக்குப் பலமில்லையே! நான் ஏன் ஆர்த்தியோம் மாதிரி வாட்டசாட்டமாகவும் பலசாலியாகவும் இல்லை?'' என்று தன்னையே நொந்துகொண்டான்.

அடுப்பில் தீ கொழுந்துவிட்டு எரிந்து அணைந்தது. அதன் செந்நாக்குகள் ஆடி ஆடி, பெரிய நீலநிற மாலைகளாகப் பின்னிப்பிணைந்தன. பாவெலுக்கு யாரே ஒருவன் தன் நாக்கை நீட்டித் தன்னை ஏளனம்செய்துபரிகாசிப்பதுபோலத்தோன்றியது.

அறையில் அமைதி நிலவியது. படபடவென்று எரியும் விறகின் சத்தமும் குழாயிலிருந்து முறைப்படி விழும் நீர்துளிகளின் ஓசையும் மட்டுமே கேட்டன.

கிலீம் கடைசி அடுக்கைப் பளபளக்க தேய்த்து மாடத்தில் கவிழ்த்துவிட்டு, தன் கையைத் துடைத்

துக் கொண்டான். சமையலறையில் வேறு ஒரு வரும் இல்லை. அச்சமயம் வேலை செய்யவேண்டிய சமையற்காரனும் அவனுடைய உதவியாளும் அடுத்த அறையில் உறங்கிக் கொண்டிருந்தனர். இன்றுபோல் என்றும் இரவு மூன்று மணிக்குச் சமையலறையில் அமைதி நிலவியிருக்கும். அந் நேரத்தை எப்பொழுதும் கிலீம் பாவெலுடன் தான் கழிப்பது வழக்கம். சமையலறைப் பைய னை அவன், கொதிகலத்தை இயக்குபவனை கருங் கண் பாவெலுடன் நல்லதொரு நட்புறவு கொண் டிருந்தான்.

உயரே ஏறியதும் கொதிகலத்திற்கு முன் பாவெல் குத்திட்டு உட்கார்ந்திருப்பதை கிலீம் கண்டான். பரட்டைத் தலையனுடைய பழக்கமான நிழலைச் சுவரில் கண்ட பாவெல், திரும்பிப் பார்க் காமலேயே, ''கிலீம், உட்கார்'' என்று கூறினன்.

பிறகு அடுக்கின் மேலேறி, அங்கு ஓரிடத்தில் வசதியாகப் படுத்துக் கொண்டு, கிலீம், மௌன மாக இருந்த பாவெலை உற்று நோக்கிப் புன்முறு வலுடன், ''நீ என்ன நெருப்பிடம் வருங்காலத் தைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கிருயா?'' என்று கேட்டான்.

பாவெல் மிகக் கடினத்துடன் தீயிலிருந்து கண்களைத் திருப்பினன். கிலீமை இரு பெரிய ஒளி வீசும் கண்கள் நோக்கின. அக்கண்களில் சொல்ல வொண்ணுத் துயரத்தை கிலீம் கண்டான். தன் நண் பனின் கண்களில் கிலீம் இத்துணை துயரத்தைக்

கண்டது இதுதான் முதல் முறை. சற்று நேர அமைதிக்குப் பின், ''பாவெல், என்ன சேதி? உனக்கு என்ன நேர்ந்தது? ஒரு மாதிரியாக இன்று இருக்கிருயே!'' என்று கிலீம் கேட்டான்.

பாவெல் எழுந்து வந்து கிலீமின் அருகில் அமர்ந்தான்.

''ஒன்றும் நிகழவில்லே, கிலீம். இங்கு எனக்கு மிகவும் வருத்தமாகயிருக்கிறது'' என்று தாழ்ந்த சுருதியில் பதிலளித்தான். முழங்கால்களிலிருந்த அவனது கைகள் கட்டிக்கொண்டன.

''உனக்கு இன்று என்ன நேர்ந்தது?'' என்று கிலீம், முழங்கைகளேக் கீழே ஊன்றிக்கொண்டு மீண்டும் வற்புறுத்திக் கேட்டான்.

''இன்று என்ன நடந்தது என்ரு கேட்கிருய்? இங்கு வேலேக்கு வந்த நாள் முதற்கொண்டு துன்பம்தான். மாடாக உழைக்கிரேம்—பலனுகக் கிடைப்பது அடியும் உதையும். ஆசைப்பட்ட யாரும் உன்னே அடிக்கலாம்—எவரிடமிருந்தும் உனக்குப் பாதுகாப்பில்லே. உன்னேயும் என்னேயும் இவர்களுக்கு உதவி செய்வதற்காகச் சொந்தக் காரி அமர்த்திஞள். ஆஞல் பலம் கொண்ட எவனும் நம்மை அடிப்பதற்கு உரிமைகொண்டுள் ளான். என்ன முயற்சிசெய்தாலும் எல்லோரையும் ஒன்றுபோல் திருப்தி செய்யமுடியாது. எவரைத் திருப்தி செய்ய வில்லேயோ அவரிடமிருந்து வாங்கிக்கட்டிக்கொள்ளவேண்டும். ஒழுங்குப்படி நடக்கவேண்டுமென்று வேண்டிய அளவு முயற்சி செய்கிரேம் — யாருடனும் சண்டை வந்துவிடக்

கூடாதே என்ற பயத்துடன் ஓடாத ஓட்டமில்லை; போகாத மூலையில்லை—ஆனால் பயனோ பூஜ்யம்''.

''இம்மாதிரி சத்தம் போடாதே!'' என்று பயந்து போன கிலீம் இடைமறித்துக் கூறினான். ''யாராவது உள்ளே வந்து உன் பேச்சைக் கேட்டு விடப் போகிறார்கள்'' என்று அவன் எச்சரித்தான்.

பாவெல் எழுந்து நின்றான்.

''நன்றாகக் கேட்கட்டும்! நான் எப்படியும் இந்த இடத்துக்கு முழுக்குப் போடப் போகிறேன். இங்கு வேலை செய்வதைக் காட்டிலும், இருப்புப் பாதைகளிலிருந்து வெண்பனி அகற்றிப் பிழைக்கலாம். இது வஞ்சகர்களின் குகை! அவர்களிடமுள்ள பணத்தைப் பார்! அவர்கள் நம்மைப் புழுவாக நடத்துகிறார்கள். பெண்களிடம் அவர்கள் வைத்தது சட்டமாயிருக்கிறது! அவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் கண்ணியமான பெண்கள் மறுத்தால், அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிடுகிறார்கள். அவர்களுக்குப் பதிலாக உணவின்றி வாடுபவர்களையும், உறவினர் யாவருமில்லாத அகதிகளையும் வேலைக்கு எடுக்கிறார்கள். அனாதைகளுக்கு வேறு போக்கிடம் இல்லை; இங்காவது ரொட்டித் துண்டு கிடைக்கிறது. எனவே இங்கு தங்குகிறார்கள்.''

இவ்வாறு பாவெல் ஆவேசத்துடன் பேசினான். எவராவது ஒளிந்து நின்று கேட்கப் போகிறார்களே என்று கிலீம் பயந்தான். எழுந்து சென்று, சமையலறைக்குச் செல்லும் கதவை மூடினான். பாவெலுடைய மனதில் நிறைந்து

பெருகிய மனக்கசப்பு, உணர்ச்சி மிகுந்த சொற் பிரவாகமாக வழிந்தோடியது.

''கிலீம், இந்த அடி உதைக்கெல்லாம் ஏன் பணிந்து போகிறாய்? ஏன் இந்த அமைதி?'' என்று பாவெல் கேட்டான்.

அதன்பின் அவன் ஒரு நாற்காலியின் மீது உட்கார்ந்து கொண்டான். களைப்புமிகுந்தவனாகத் தலையை உள்ளங்கையில் தாங்கிக் கொண்டான். கிலீம் நெருப்பில் விறகை வைத்துவிட்டு, மேஜை முன்னால் உட்கார்ந்தான்.

''நாம் இன்று படிக்க வேண்டாமா?'' என்று கிலீம் கேட்டான்.

''படிப்பதற்கு ஒன்றுமில்லை. புத்தகக்கடை மூடியிருக்கிறது'' என்று பாவெல் பதில் அளித்தான்.

''கடையடைப்புக்குக் காரணம் என்ன?'' என்று கிலீம் வியப்புடன் வினவினான்.

''போலீஸார் புத்தகக் கடைக்காரனைப் பிடித்துக்கொண்டு போய்விட்டனர். அவனிடம் ஏதோ இருந்ததாம்'' என்று பாவெல் விடைதந்தான்.

''பிடித்துக்கொண்டு போனார்களா? எதற்காக?''

''அரசியல் காரணம் என்கிறார்கள்.''

கிலீமுக்குப் பாவெலின் பதில் புதிராக இருந்தது. பாவெலைக் குழப்பத்துடன் நோக்கினான்.

''அரசியலா? அது என்ன?''

பாவெல் தன் தோட்களைக் குலுக்கிக் கொண்டே, ''யாரய்யா கண்டது? யாராவது ஜார் அரசனை

எதிர்த்தால் அது 'அரசியல்' என்று சொல்கிறார்கள்!'' என பதில் அளித்தான்.

''அப்படி எதிர்ப்பவர்களும் உண்டா?''

''எனக்குத் தெரியாது'' என்றான் பாவெல்.

கதவு திறந்தது. தூக்கக் கலக்கத்தால் வீங்கிப் போன கண்களுடன், கிலாஷா உள்ளே வந்தாள்.

''நீங்கள் இருவரும் ஏன் உறங்கவில்லை? ரயில் வருவதற்கு முன் ஒரு மணி நேரம் தூங்கலாம். ஓய்வு எடுங்கள். பாவெல், உனக்காக நான் கொதிகலத்தைக் கவனித்துக்கொள்கிறேன்'' என்றாள் கிலாஷா.

பாவெல் எதிர்பார்த்ததற்கும் முன்பாகவே, அவன் சிறிதும் எதிர்பாராத முறையில், அந்த வேலையிலிருந்து நீக்கப்பட்டான்.

குளிர் மிகுந்த ஜனவரி மாதத்தில் ஒருநாள், பாவெல் தன் அன்றைய வேலையை முடித்துவிட்டான். ஆனால் அவனைத் தவணைமாற்ற வேண்டிய பையன் வரவில்லை. பாவெல் எஜமானியிடம் சென்று, தான் எப்படியும் வீட்டுக்குப் போக வேண்டும் என்று வற்புறுத்தினான். ஆனால், அவள் அவனுடைய வேண்டுகோளை நிராகரித்தாள். பகலும் இரவும் தொடர்ந்து வேலை செய்து சோர்ந்திருந்தாலும், அவனே மீண்டும் வேலை செய்ய வேண்டியதாயிற்று. மாலையில் களைப்பால் மூர்ச்சித்து விழுந்துவிடுவது போலிருந்தான் பாவெல். இரவு ஓய்வு நேரத்தில், அவன் கொதிகலங்களில் நீர் நிரப்பி மூன்று மணி வண்டி வருவதற்குமுன் கொதிக்க வைக்க வேண்டும்.

பாவெல் குழாயைத் திறந்தான். ஆனால் தண்ணீர் வரவில்லை. பம்பு வேலை செய்யவில்லை. குழாயைத் திறந்துவைத்து விட்டு, பாவெல் விறகுக் குவியலின் மீது படுத்தான். களைப்பு அவனை அசத்தியது. அப்படியே உறங்கிவிட்டான்.

சில நிமிடங்களில் குழாயில் சலசல வென்ற ஒலியைக் கிளப்பிக்கொண்டு நீர் வரத் தொடங்கியது. தண்ணீர் கொதிகலத்தில் நிறைந்து வழிந்தோடியது. பாத்திரம் துலக்கும் அந்த அறையின் தளம் முழுவதும் தண்ணீர் ஓடியது. ஓய்வு நேரமாதலால் அறையில் ஒருவருமில்லை. தளத்திலிருந்து நீர் கதவு வழியாகச் சிற்றுண்டிச்சாலையின் அறைக்குள் பாய்ந்தோடியது.

உறங்கிக் கொண்டிருந்த பிரயாணிகளின் சாமான்களின் கீழ் தண்ணீர் தேங்கி நின்றது. ஆனால் தரையில் படுத்திருந்த ஒரு பிரயாணியின் மேல் தண்ணீர் படும்வரை, அதை எவரும் கவனிக்கவில்லை. அந்தப் பிரயாணி அதிர்ச்சியடைந்து எழுந்து கூச்சலிட்டான். எல்லோரும் சாமான்களை நோக்கி ஓடினர். சிறிது நேரத்துக்கு ஒரே பரபரப்பாக இருந்தது.

தண்ணீர் தொடர்ந்துவந்துகொண்டிருந்தது.

புரோகர் இரண்டாவது ஹாலில் மேஜைகளைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். இரைச்சலைக் கேட்டவுடன் அவன் உள்ளே ஓடினான். தேங்கிய நீர்க் குட்டைகளைத் தாண்டிச் சென்று, வேகமாகக் கதவைத் தள்ளினான். கதவு திறந்தது. கதவால் இதுவரை தடுக்கப்பட்டிருந்த தண்ணீர் முழுவதும் அறைக்குள்ளே பாய்ந்தோடியது.

இரைச்சல் அதிகமாயிற்று. வேலை பார்த்த பணியாட்கள் பாத்திரங் கழுவும் அறைக்கு ஓடினார்கள். உறங்கிக் கொண்டிருந்த பாவெலைப் புரோகர் தாக்கினான்.

பாவெல் தலைமீது அடிமேல் அடி விழுந்தது; அவன் பிரமித்துப் போனான்.

அரைத் தூக்க நிலையிலிருந்த பாவெலுக்கு என்ன நடந்ததென்றே தெரியவில்லை. கண்களில் ஒளிப்பொறிகள் பறந்தன. கொடிய வேதனை உடலை ஊடுருவிப் பாய்ந்தது.

பாவெலுக்குப் பலமான அடி. மிகக் கடினத்துடன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

காலையில் ஆர்த்தியோம் புருவத்தை நெறித்துக்கொண்டு கடுகடுப்பு நிறைந்த முகத்துடன் பாவெலிடம் சென்று, என்ன நிகழ்ந்ததென்று விசாரித்தான்.

பாவெல் எல்லா விவரங்களையும் எடுத்துரைத்தான்.

''உன்னை அடித்தது யார்?'' என்று தாழ்ந்த குரலில் ஆர்த்தியோம் வினவினான்.

''புரோகர்.''

''சரி, நீ படுத்துக் கொள்'' என்று கூறிவிட்டுச் சொக்காயை மாட்டிக்கொண்டு புறப்பட்டான் ஆர்த்தியோம்.

''புரோகர் என்ற பணியாளியை எங்கு காணலாம்?''

முன்பின் தெரியாத ஒரு தொழிலாளி கிலாஷாவைக் கேட்டான்.

''ஒரு விஞடியில் இங்கு வருவான்'' என்று அவள் விடை தந்தாள்.

''சரி, நான் காத்திருக்கிறேன்'' என்று கூறி விட்டு, வாட்டசாட்டமான தன் உடலே ஆர்த்தி யோம் கதவு நிலேயில் சாய்த்தான்.

ஏராளமான தட்டுகளேக் கொண்ட டிரே யுடன் புரோகர், காலால் கதவை உதைத்துத் திறந்துகொண்டு, பாத்திரம் கழுவும் அறைக்குள் பிரவேசித்தான்.

''அவன்தான்!'' என்று கிலாஷா தலே அசை வால் பணியாளேக் காட்டினுள்.

ஆர்த்தியோம் ஒரு அடி முன்னுல் வந்து, புரோகரின் தோளேக் கையால் பற்றிக்கொண்டு அவனே நோக்கினுன்.

''என் தம்பி பாவெலே ஏன் அடித்தாய்?''

புரோகர் தன் தோளே விடுவிக்க முயன்முன். ஆனுல் அவன் மீது விழுந்த அடி, அவனேக் கீழே தள்ளியது. எழுந்து நிற்க முயன்முன்; ஆனுல் இன்னெரு பயங்கரமான அடி அவனே மீண்டும் கீழே வீழ்த்தியது.

தட்டுக் கழுவும் பெண்கள் பயத்தால் ஓரத் தில் ஒதுங்கினர்.

ஆர்த்தியோம் அந்த இடத்தை விட்டு வெளியேறினுன்.

புரோகர் கை கால்களே நீட்டிக்கொண்டு தரையில் கிடந்தான். அவனது அடிபட்ட முகத் திலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

அன்று மாலை ஆர்த்தியோம் ரயில்வே டெப் போவிலிருந்து வீட்டுக்கு வரவில்லை.

அவனைப் போலீஸார் பிடித்து வைத்திருப்ப தாகத் தாயாருக்குச் சேதி வந்தது.

ஆறு நாட்கள் கழிந்தன. அன்று இரவு ஆர்த்தி யோம் வீட்டுக்கு வந்தபொழுது நேரம் அதிக மாயிருந்தது. தாயார் தூங்கிவிட்டாள். ஆர்த்தி யோம் படுக்கையில் உட்கார்ந்திருந்த பாவெ லிடம் சென்றான்.

''குணமடைந்து விட்டாயா?'' என்று பா வெலிடம் உருக்கமாகக் கேட்டான். அவன் அருகில் அமர்ந்துகொண்டான். ''இதைவிட இன்னும் மோசமாக நடப்பதுண்டு.'' சில விநாடிகளுக்கு அமைதி. பிறகு தொடர்ந்தான்: ''ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை. மின்சார நிலையத்திற் குச் செல்லலாம். அவர்களிடம் உன்னைப் பற்றிச் சொல்லி யிருக்கிறேன். அங்கு வேலை கற்றுக் கொள்ளலாம்.''

அண்ணனின் சக்தி வாய்ந்த கரத்தைப் பாவெல் தன் இரு கரங்களாலும் பற்றினான்.

அத்தியாயம் இரண்டு

''ஜார் மன்னன் வீழ்த்தப்பட்டான்!'' என்ற அதிர்ச்சியூட்டும் செய்தி அந்தச் சிறிய நகரத்தில் காற்றுவேகத்தில் பரவியது.

நகர மக்கள் அதை நம்புவதற்கு மறுத்தார் கள்.

வெண்பனிப் புயலுக்கு இடையே சறுக்கிக்

கொண்டு நிலைய மேடையின் அருகே நின்ற புகை வண்டியிலிருந்து, கோட்டின் மேல் மாட்டிய துப்பாக்கிகளுடன் இரு மாணவர்கள், மேற்கோட்டின் மேலணிந்த சிவப்புக் கைப்பட்டைகளுடன் கூடிய போர் வீரர்களின் குழு ஒன்றுடன் இறங்கினர். நிலையத்திலுள்ள போலீஸாரும் பழைய கர்னல் ஒருவரும் ஸ்தலத்தின் படைத்தலைவனும் கைதாக்கப்பட்டார்கள். அதன் பிறகே, ஜாராட்சி ஒழிந்த தென்ற செய்தியை ஊர் மக்கள் நம்பினார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் வெண்பனி மூடிய நகர வீதிகளின் வழியாக நகரச் சதுக்கத்தை நோக்கிச் சென்றனர்.

விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்ற சொற்களை — இதற்கு முன் அவர்கள் அறியாத இந்தச் சொற்களை—பேரார்வத்துடன் கேட்டனர்.

கூச்சலும், கொந்தளிப்பும், மகிழ்ச்சியும் நிறைந்த நாட்கள் சில கழிந்தன. பிறகு அமைதி நிலவியது. மென்ஷெவிக்குகளும்*, பூன்ட்வாதிகளும்** தங்களது அரணாகக் கொண்டிருந்த நகர

---

* **மென்ஷெவிக்குகள்**—ருஷ்யாவின் சோஷல் டெமாக்ராட்டிக் தொழிலாளர் கட்சியில் எதிர்ப் புரட்சிகரமான, சந்தர்ப்பவாதக் குட்டி பூர்ஷ்வா போக்கை பின்பற்றுபவர்கள்.

** **பூன்ட்வாதிகள்** — ''பூன்ட்'' எனப்பட்ட அகில யூதத் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்கள். முக்கிய அரசியல் பிரச்சினைகளில் இச்சங்கம் மென்ஷெவிக்குகளை ஆதரித்தது.

மன்றத்தில் பறந்துகொண்டிருந்த செங்கொடி நிகழ்ந்திருந்த மாறுதலுக்கு ஒரே அடையாள மாக இருந்தது. மற்றவை யாவும் வாடிக்கைப் படி நடந்தன.

குளிர்கால இறுதியில் குதிரைப்படையின் சிறந்த ரெஜிமென்ட் ஒன்று நகரத்தில் தங்கி யது. தென்மேற்குப் போர்முனையிலிருந்து தப்பி யோடி வந்த படையினர்களைக் கைப்பற்றுவதற் காக, அது நாள் தோறும் காலை நேரங்களில் பிரிவு பிரிவாகப் புகைவண்டி நிலையத்திற்குச் சென்றது.

அந்தக் குதிரைப்படை வீரர்கள் சதைப்பற் றுள்ளவர்களாக இருந்தார்கள்; அவர்களுடைய முகங்களே ஊட்டத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்கின. அவர்களுடைய அதிகாரிகளில் பலர் பிரபுக்களாகவும் இளவரசர்களாகவும் இருந் தனர். இந்த மேன்மக்கள் ஜாராண்ட காலத்தில் அணிந்ததைப் போலவே, தங்கத்தால் செய்த தோள்பட்டைகளை அணிந்திருந்தனர். அவர்க ளுடைய காற்சட்டைகளில் ஜரிகைக் கரை ஒளி வீசியது. அவர்களைப் பார்த்தால், புரட்சி எது வும் நடந்ததாகத் தெரியவில்லை.

பாவெல், கிலீம், ஸெர்யோஷா ஆகியோ ரைப் பொறுத்தமட்டில், எந்த மாறுதலும் ஏற் படவில்லை. முதலாளிகளும் முன்போலவே இருந் தார்கள். நவம்பர் மாதம்வரை அசாதாரணமான சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை. மழை மிகுந் திருந்த அந்த நவம்பரில் வழக்கத்திற்கு மாறாகச்

சில காரியங்கள் நடைபெறத் தொடங்கின. ரயில் நிலையத்தில் புதிய மனிதர்களின் நடமாட்டம் காணப்பட்டது. போர்முனையிலிருந்து திரும்பி வந்த படைவீரர்களின் எண்ணிக்கை அவர்களிடையே அதிகரித்துக் கொண்டு சென்றது. அப்படை வீரர்கள் ''போல்ஷெவிக்குகள்'' என்ற விந்தையான பெயரால் அழைக்கப்பட்டார்கள்.

வன்மையும் உறுதியும் கொண்ட அந்தப் பெயர் எங்கிருந்து வந்தது என்று எவருக்கும் புரியவில்லை.

யுத்தக் களத்திலிருந்து ஓடி வருபவர்களைத் தடுக்கக் குதிரைப் படையினருக்குக் கடினமாக இருந்தது. புகைவண்டி நிலையத்தில் துப்பாக்கிச் சத்தமும் கண்ணாடிகள் துண்டு துண்டாய்ச் சிதறும் சத்தமும் மேன்மேலும் அதிகமாயிற்று. போர் முனையிலிருந்து குழுக்குழுவாக ஓடி வந்த அவர்கள் தங்களைத் தடுப்பவர்களை பாய்னெட்டுகளால் தாக்கினார்கள். டிசம்பர் மாதத் தொடக்கத்தில் அவர்களைச் சுமந்துகொண்டு பல ரயில்கள் வரத் தொடங்கின.

ரயில் நிலையத்தைக் குதிரைப்படையினர் முற்றுகை இட்டனர். அவர்களைத் தடுத்து நிறுத்திவிட எண்ணினர். ஆனால் போர்முனையிலிருந்து ஓடிவந்தவர்களின் இயந்திரத்துப்பாக்கிகளால் அவர்கள் பலமாகத் தாக்கப்பட்டார்கள். இறப்பைக் கண்டு அஞ்சாத இதயங்கொண்ட வீரர்கள் வண்டியிலிருந்து இறங்கி ரயில்நிலையத்தைக் கைப்பற்றினர்.



பழுப்புநிற கோட்டணிந்த போர்முனைப் படைவீரர்கள் குதிரைப் படையினரை நகரத்துக்குள் விரட்டினர். அதன்பின் வண்டி வண்டியாக அவர்களது கூட்டம் மேற்கொண்டு நகரத் தொடங்கியது.

1918ம் ஆண்டு வசந்தகாலம். ஒரு நாள் மூன்று நண்பர்கள் ஸெர்யோஷா புருஸ்ஷாக் வீட்டில் சீட்டாடிவிட்டுத் திரும்பும் வழியில், பாவெல் வீட்டுத் தோட்டத்திற்குள் நுழைந்தனர். நண்பர்கள் புல்தரைமீது படுத்தனர். பழக்கமான பொழுது போக்குகளெல்லாம் உற்சாகமற்றவையாகப் பட்டன. மனதுக்கு எழுச்சி உண்டாக்கக் கூடிய முறையில் பொழுதைப் போக்கும் வழிதுறைகளைப்பற்றி அவர்கள் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்த பொழுது, தங்களுக்குப் பின்னிருந்து வந்த குதிரைக் குளம்புகளின் ஓசையைக் கேட்டனர். சாலையில் பாய்ந்தோடிய குதிரையின் மீது ஒரு வீரன் வந்ததை அவர்கள் கண்டனர். சாலைக்கும் தோட்டத்தின் வேலிக்கும் இடையிலிருந்த சாக்கடையைக் குதிரை ஒரே தாவில் தாண்டியது. குதிரை வீரன் பாவெலையும் கிலீமையும் நோக்கிச் சாட்டையால் சைகை காட்டினான்.

''இளைஞர்களே! இங்கு வாருங்கள்'' என்று கூப்பிட்டான்.

பாவெலும், கிலீமும் ஒரே ஓட்டத்தில் வேலியை அடைந்தனர். குதிரை வீரன் மேலெல்லாம் புழுதி படர்ந்திருந்தது. அவ்வன் தலையில் குல்லா

வைப் பின்பக்கமாகத் தள்ளி அணிந்திருந்தான். அதன் மீது புழுதிப் படலம் படிந்திருந்தது. காக்கிச் சட்டையிலும் கால்சட்டையிலுங்கூட புழுதி படர்ந்திருந்தது. அவனுடைய சோல்ஜர் பெல்ட்டிலிருந்து ஒரு ரிவால்வரும் இரண்டு ஜெர்மானிய எறி குண்டுகளும் தொங்கின.

''குடிக்கத் தண்ணீர் கொடுப்பீர்களா?'' என்று குதிரைவீரன் அவர்களைக் கேட்டான்.

தண்ணீர் கொண்டுவருவதற்காகப் பாவெல் வீட்டுக்குள் ஓடினான்.

''தம்பீ, உங்கள் ஊரில் தற்பொழுது அதிகாரத்தில் இருப்பவர் யார்?'' என்று தன்னை வெறித்து நோக்கிக் கொண்டிருந்த ஸெர்யோஷாவைப் பார்த்துக் கேட்டான் குதிரைவீரன்.

ஸெர்யோஷா, மிகுந்த ஆவலுடன், மூச்சைக் கூட அடக்கிக் கொண்டு, உள்ளூர்ச் சேதிகளையெல்லாம் எடுத்துரைத்தான்.

''இரண்டு வாரங்களாக, எந்தவிதமான ஆட்சியுமில்லை. ஊர்க்காவல் ஸ்தாபனந்தான் தற்சமயம் ஆட்சி நடத்துகிறது. குடிமக்கள்தான் முறை போட்டுக் கொண்டு, இரவு வேளைகளில் நகரத்தைப் பாதுகாக்கின்றனர்'' என்று கூறிவிட்டு, ''நீங்கள் யாரோ?'' என்று கேட்டான் ஸெர்யோஷா.

''அதெல்லாம் கேட்காதே. அளவுக்கு மீறித் தெரிந்து கொண்டால், அதிசீக்கிரத்தில் கிழவனாகி விடுவாய்!'' என்று சொல்லிக் குதிரை வீரன் நகைத்தான்.

பாவெல் குடி தண்ணீர்க் கோப்பையுடன் வீட்டிலிருந்து ஓடிவந்தான்.

குதிரைவீரன் ஆவலுடன் நீரைக் குடித்து விட்டுக் கோப்பையைப் பாவெலிடம் கொடுத் தான். அதன்பின் கடிவாளத்தைச் சுண்டினன். பைன் மரக் காட்டை நோக்கிக் குதிரை பாய்ந்து ஓடியது.

''அது யார்?'' என்று பாவெல், கிலீமைக் கேட்டான்.

''எனக்கு எப்படித் தெரியும்?'' என்று கிலீம் தோளைக் குலுக்கினன்.

''மீண்டும் அதிகாரம் கைமாறப் போகிற தென்று நினைக்கிறேன். அதனால்தான், லெஷ்சீன் ஸ்கிய் குடும்பத்தினர் நேற்று ஊரை விட்டுப் போனார்கள். பணக்காரர்கள் ஓடிப் போகிறார் களென்றால், கொரில்லாக்கள் வருகிறார்களென்று பொருள்'' என்று ஸெர்யோஷா கூறினன். இறுதி யாகவும் உறுதியுடனும் அவன் அந்த அரசியல் புதிருக்கு விளக்கம் கொடுத்தான்.

பாவெலும் கிலீமும் உடனே ஆமோதிக்கு மளவுக்கு அவனது வாதம் இணக்கமாக இருந்தது.

இளைஞர்கள் இந்தப் பிரச்சினையை விவாதித்து முடிப்பதற்குள்ளாகச் சாலையில் மீண்டும் குதிரைக் குளம்புகளின் கடகடச் சத்தம் கேட்டது. மூவரும் வேலிக்கு ஓடினார்கள்.

தங்களின் கண்பார்வைக்குச் சிறிதளவு பட்ட, காட்டுக்காவலனது குடிசையின் பின்புற மாக மக்களும் சில வண்டிகளும் காட்டிலிருந்து

வெளிவருவதை இளைஞர்கள் கண்டனர். சாலைக்கு அருகில், சுமார் பதினைந்து வீரர்கள் சேணங்களின் குறுக்கே தொங்கிய துப்பாக்கிகளுடன் கூடிய குதிரைகளின் மீது வருவதை அவர்கள் பார்த்தனர். குதிரை வீரர்களின் தலைமையில் வயதானவன் ஒருவன் வந்துகொண்டிருந்தான். காக்கிச் சொக்காயும் அதிகாரிக்கு உரிய பெல்ட்டும் அணிந்திருந்த அவனுடைய மார்பில் தொலை நோக்கி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதற்கு முன், சிறுவர்களுடன் உரையாடிவிட்டுச் சென்றவன் அந்தத் தலைவனுக்குப் பக்கத்தில் வந்துகொண்டிருந்தான். தலைவன் தன் இராணுவ கோட்டில் ஒரு சிவப்பு நாடாவையும் அணிந்திருந்தான்.

''நான் என்ன சொன்னேன்? சிவப்பு நாடாவைப் பார்த்தாயா? கொரில்லாக்கள்தான். அவர்கள் கொரில்லாக்களாயில்லாவிட்டால், என்னை என்ன வேண்டுமானாலும் செய்'' என்று பாவெலின் விலாவில் மெல்ல இடித்துக் கொண்டே ஸெர்யோஷா கூறினான். களிவெறியில் கூச்சலிட்டுக்கொண்டே ஒரே பாய்ச்சலில் வேலியைத் தாண்டித் தெருவை அடைந்தான்.

கிலீமும் பாவெலும் ஸெர்யோஷாவைப் பின்பற்றினார்கள். நெருங்கிக் கொண்டிருந்த குதிரை வீரர்களை நோக்கியபடியே மூவரும் வீதியோரத்தில் நின்றனர்.

வீரர்கள் அண்மையில் வந்தவுடன் முன்னால் பையன்களுடன் பேசியவன் லெஷ்சீன்ஸ்கிய்

குடும்பத்தின் வீட்டைச் சாட்டையால் சுட்டிக் காட்டினான்.

''அங்கு வசிப்பது யார்?'' என்று கேட்டான்.

''லெவ்ஷீன்ஸ்கிய் என்ற வக்கீல். நேற்றைய தினம் அவன் ஊரை விட்டு ஓடிப் போய்விட்டான். உங்களைக் காணப் பயம் போலிருக்கிறது'' என்று குதிரைக்கு ஒப்ப வேகமாக நடந்து கொண்டே பாவெல் பதில் கூறினான்.

''நாங்கள் யாரென்று உனக்கு எப்படித் தெரியும்?'' என்று வயதானவன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

''அதோ தொங்குகிறதே! அதைப் பார்த்த பின், நீங்கள் யாரென்று எவரும் சொல்ல முடியும்'' என்று சிவப்பு நாடாவைச் சுட்டிக் காட்டிக் கூறினான் பாவெல்.

நகரத்துக்குள் நுழைந்திருக்கும் குதிரை வீரர்களைக் காண வேண்டுமென்ற கட்டுக்கடங்காத ஆவலுடன் ஜனங்கள் தெருவில் கூடினார்கள். களைத்துப் போன, புழுதி படிந்த செம்படை வீரர்கள் தெருவில் செல்லும் காட்சியை நமது மூன்று இளம் நண்பர்களும் பார்த்துக் கொண்டே நின்றார்கள். அந்தப் படைப்பிரிவின் ஒரே ஒரு பீரங்கியும் யந்திரத் துப்பாக்கிகளை ஏற்றிச் செல்லும் வண்டிகளும் சாலைக் கற்கள் மீது தடதடவென்று ஒலி எழுப்பிக்கொண்டு சென்றன. சிறந்த பையன்களும் கொரில்லாக்களைப் பின்தொடர்ந்தனர். செம்படை நகரத்தின் நடுமையத்தை அடைந்து கொரில்லாக்கள் தங்குமிடம் தேடிச்

செல்லும்வரை, அந்தப் பையன்கள் வீட்டுக்குத் திரும்பவில்லை.

அன்று மாலை, வக்கீல் லெஷ்சீன்ஸ்கிய் வீட்டின் வரவேற்பு அறையில், நன்கு செதுக்கப்பட்ட கால்களைக் கொண்ட பெரிய மேஜையைச் சுற்றி நான்கு மனிதர்கள் உட்கார்ந்திருந்தனர். அவர்களில் ஒருவன், படைக் குழுவின் தலைவனான தோழர் புல்காக்கோவ்; வயதில் மூத்தவன்; அவனது தலைமயிர் நரைக்கத் தொடங்கியிருந்தது. அவனுடன் இருந்த மூவரும் படைக்குழுவைச் சார்ந்த இதர அதிகாரிகள்.

புல்காக்கோவ், அந்த மாகாணத்தின் படத்தை மேஜையின்மீது விரித்து, அதன்மீது தன் ஆள்காட்டி விரலை ஓடவிட்டுக் கொண்டிருந்தான்.

''தோழர் எர்மச்சேன்கோ!'' என்று எதிரில் அமர்ந்திருந்த, வலிமையான பற்களும் கன்னத்தில் எளிதில் புலப்படும் எலும்புகளும் உடைய எர்மச்சேன்கோவைப் பார்த்துக்கொண்டே கூறினான்: ''நாம் இங்கு நிலைகொள்ள வேண்டுமென்பது உன்னுடைய யோசனை. ஆனால் காலையிலேயே இந்த ஊரை விட்டு வெளியேற வேண்டுமென்று நான் நினைக்கிறேன். இன்று இரவே முடிந்தால் இன்னும் நல்லது. ஆனால் வீரர்களுக்கு ஓய்வு மிக மிகத் தேவையாயிருக்கிறது. ஜெர்மானியர்கள் கஸாத்தீனுக்கு வருவதற்குள் நாம் அந்த இடத்துக்குப் போய்விட வேண்டும். நம்மிடம் உள்ள பலத்தை மட்டும் வைத்துக் கொண்டு எதிர்க்கத்

துணிவது கேலிக்கூத்தாகிவிடும். நம்மிடம் இருப்பது என்ன? முப்பது வெடிகுண்டுகளுடன் கூடிய ஒரு பீரங்கி, இருநூறு காலாட்படை வீரர்கள், அறுபது குதிரைவீரர்கள்—இவ்வளவுதான். வெகுவான படை பலத்துடன், எஃகு ஆயுதங்கள் சகிதமாக முன்னேறும் ஜெர்மானியர்களை நம் படைக் குழுவைக் கொண்டு எதிர்க்க முடியுமா? பின்வாங்கிக் கொண்டிருக்கும் இதர செம்படைகளுடன் ஒன்றுசேரும் வரை நாம் சண்டைபோட முடியாது. இன்னொரு விஷயம், நாம் ஜெர்மானியர்களை எதிர்க்க வேண்டியிருப்பதுடன் வழியில் பல்வகை ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சிக் கூட்டங்களையும் சமாளிக்க வேண்டியிருக்குமென்பதை மறந்துவிடாதீர்கள்! காலையில் ரயில்வே நிலையத்துக்கு அருகிலுள்ள ரயில்வே பாலத்துக்கு வெடி வைத்து அதை உடைத்துவிட்டு நாம் இந்நகரை விட்டு வெளியேற வேண்டும். அந்தப் பாலத்தைப் புனரமைக்க ஜெர்மானியர்களுக்கு இரண்டு மூன்று நாட்கள் தேவைப்படும். இருப்புப்பாதை வழியாக அவர்களால் முன்னேற முடியாது. உங்களது கருத்து என்ன, தோழர்களே? நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும்'' என்று அவன் கூறினான்.

புல்காக்கோவுக்கு நேரெதிராக உட்கார்ந்திருந்த ஸ்திருஷ்கோவ் தன் உதடுகளை உறிஞ்சிவிட்டு, முதலில் படத்தைப் பார்த்தான்; பிறகு தலைவனைப் பார்த்தான்.

''புல்காக்கோவுடன் நான் ஒருமனப்படுகிறேன்'' என்று கூறினான்.

நால்வரில் இளையவனும் தொழிலாளர் அங்கி அணிந்தவனுமான ஒருவனும் தலைவனின் கருத்துக்கு இணக்கம் தெரிவித்தான்.

''புல்காக்கோவ் கூறுவது சரி'' என்றான்.

ஆனால் அன்றைய தினம் பகலில் பையன்களுடன் பேசியவனான எர்மச்சேன்கோ மட்டும் எதிர்மறையாகத் தலையை அசைத்தான்.

''நாம் எதற்காக இந்தப் படைக்குழுவைத் திரட்டினோம்? ஜெர்மானியர்களை எதிர்த்து நிற்காமல் பின்வாங்கிக் கொண்டேயிருப்பதற்காகவா? இந்த இடத்திலேயே அவர்களை ஒரு கை பார்க்க வேண்டுமென்பதுதான் எனது அபிப்ராயம். இவ்வாறு ஓடிக்கொண்டேயிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. நான் என் இஷ்டப்படி நடப்பதென்றால், நிச்சயமாக இந்த ஊரில் நின்று அவர்களுடன் போராடுவேன்'' என்று கூறி, தன் நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு எழுந்து நின்று அறையில் நடைபோடத் தொடங்கினான்.

எர்மச்சேன்கோவின் கருத்து புல்காக்கோவுக்குப் பிடிக்கவில்லை.

''எர்மச்சேன்கோ, திட்டமாக தோல்வியும் அழிவும் கொடுக்கக் கூடிய போராட்டத்தில் படைவீரர்களை உந்தித்தள்ளக் கூடாது. அவ்வாறு செய்வது கேலிக்கூத்தாகும். கவச மோட்டார்களும் பெரும் பீரங்கிகளும் கொண்ட பெரிய டிவிஷன் ஒன்று நம்மைப் பின்பற்றி வந்து கொண்டிருக்கிறது.... சிறு பிள்ளைத்தனத்திற்கு இது சமயம் அல்ல, தோழர் எர்மச்சேன்கோ'' என்று கூறி

விட்டு, பிறரைப் பார்த்துத் தலைவன் தொடர்ந்து பேசினான்: ''எனவே, நாம் நாளைக் காலையில் இந்த ஊரைக் காலி செய்கிறோமென்பது முடிவாகி விட்டது. இனி, அடுத்து தொடர்பைப் பற்றி விவாதிப்போம். இந்தப் பகுதியிலிருந்து நாம் தான் கடைசியில் பின்வாங்குகிறோம். எனவே, ஜெர்மானியர் இந்தப் பகுதியை வசப்படுத்திய பிறகு, இங்கு வேலை நடப்பதற்கு நாம்தான் ஏற் பாடு செய்ய வேண்டும். இது ஒரு பெரிய ரயில் வே ஜங்ஷன். தவிர, நகரத்தில் இரண்டு ரயில்வே நிலையங்கள் உள்ளன. ரயில்வே அரங்கத்தில் ஒரு நம்பகமான தோழர் வேலை செய்வதற்குக் கவன மாக ஏற்பாடு செய்ய வேண்டும். யாரை விட்டுச் செல்வது என்பதைக் குறித்து நாம் முடிவு எடுக்க வேண்டும். உங்களுக்கு ஏதாவது யோசனை இருக்கிறதா?''

எர்மச்சேன்கோ மேஜைக்கு அருகில் வந்து நின்று பதில் கூறினான்:

''ஷுஹ்ராய் என்ற மாலுமியை விட்டுச் செல்லலாமென்று நான் நினைக்கிறேன். முதலாவ தாக, அவன் இந்த ஊர்வாசி. இரண்டாவதாக, அவன் ஒரு கருமானாகவும் மெக்கானிக்காகவும் இருப்பதால், ரயில் நிலையத்தில் சுலபமாக வேலை கிடைக்கும். ஷுஹ்ராய் இன்று இரவுதான் இந்த ஊருக்கு வருவான். அவனை நம் பிரிவுடன் எவரும் பார்க்கவில்லை. அவன் விவேகம் உள்ளவன். அலு வல்களை முறையாகச் செய்து முடிக்கும் ஆற்றல்

உடையவன். அவன்தான் இந்த வேலைக்கு மிகவும் தகுதியானவன் என்று நான் நினைக்கிறேன்.''

புல்காக்கோவ் தலையை அசைத்துச் சம்மதம் தெரிவித்தான்.

''சரி, எர்மச்சேன்கோ கூறுவதை நான் ஏற்றுக்கொள்கிறேன். உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை உண்டா, தோழர்களே?'' என்று கேட்டுக்கொண்டு பிறரைப் பார்த்தான். ''உங்களுக்கு ஆட்சேபனை இல்லையல்லவா? சரி, விஷயம் முடிந்துவிட்டது. ஷுஹ்ராய் இங்கு இருந்து வேலை செய்வதற்கு உதவியாக, அத்தாட்சி பத்திரங்களும் கொஞ்சம் பணமும் கொடுத்துவிட்டுச் செல்வோம்.... இப்பொழுது, தோழர்களே, மூன்ருவது விஷயத்துக்கு வருவோம். இந்த நகரில் ஆயுதங்களின் கிடங்கு இருக்கிறது. ஏறத்தாழ இருபதாயிரம் துப்பாக்கிகள் உள்ளன. ஜார் அரசாங்கம் ஜெர்மானியருடன் போர் நடத்தியபொழுது இங்குக் கொண்டுவந்து வைத்த சேமிப்பு இது. இதைப் பற்றி எல்லோரும் மறந்துவிட்டனர். அவை ஒரு விவசாயியின் கொட்டகையில் உள்ளன. அந்த விவசாயியே சொல்லித்தான் எனக்குத் தகவல் கிடைத்தது. அந்தச் சேமிப்பு தன்னை விட்டுப்போனல் நலமென்று அவன் துடிக்கிருன்.... அவை ஜெர்மானியருக்குக் கிடைக்கக் கூடாது. எனவே, அவற்றை எரித்துவிட வேண்டுமென்பது என் கருத்து. உடனடியாகத் தீ வைத்தால்தான் காலைக்குள் காரியம் முடியும். ஆனல் அதிலும் அபாயம் உண்டு. கிடங்கில்

வைக்கும் தீ சுற்றுப்புறக் குடிசைகளுக்குப் பரவலாம். இந்தக் கிடங்கு, ஏழை விவசாயிகளின் குடியிருப்புப் பகுதியான நகர எல்லையில் உள்ளது'' என்று தலைவன் கூறினான்.

ஸ்திருஷ்கோவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவன் வாட்டசாட்டமாக வளர்ந்தவன்; வெகு நாட்களாகத் திருத்தாத அவனது முகத்தாடியில் மயிர்கள் கட்டை குட்டையாக இருந்தன.

''துப்பாக்கிகளை ஏன் தீயிலிட்டு எரிக்க வேண்டும்? நானாயிருந்தால், அவற்றை ஜனங்களுக்கு வினியோகம் செய்வேன்'' என்றான் அவன்.

புல்காக்கோவ் தன் முகத்தைத் திருப்பி அவனை நோக்கினான்.

''வினியோகம் செய்யலாமென்றா சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

''அருமையான யோசனை!'' என்று எர்மச்சென்கோ உற்சாகத்துடன் கூறினான். ''தொழிலாளருக்கும், வேண்டுமென்று கேட்பவர் அனைவருக்கும் துப்பாக்கிகளைக் கொடுக்கலாம். ஜெர்மானியர் ஆட்சியில் வாழ்க்கை நடத்தவே முடியாத பொழுது திருப்பித் தாக்குவதற்குக் கருவியாக இருக்கும். ஜெர்மானியர்கள் அக்கிரமம் செய்வார்கள் என்பது உறுதி. நிலைமை நெருக்கடியாகும் பொழுது ஜனங்கள் ஆயுதமேந்திப் போராட முடியும். ஸ்திருஷ்கோவ் கூறுவது நல்ல யோசனை. துப்பாக்கிகளை எல்லோருக்கும் வழங்க வேண்டும். சில துப்பாக்கிகளைக் கிராமங்களுக்குக் கொண்டு போகலாம். விவசாயிகள் அவற்

றை ஒளித்து வைப்பார்கள். ஜெர்மானியர்கள் விவசாயிகளிடம் உள்ளதையெல்லாம் கைப்பற்ற வரும்பொழுது துப்பாக்கி மிக மிக உதவும்.''

இதைக் கேட்ட தலைவன் சிரித்துக்கொண்டான்.

''நீ சொல்வதெல்லாம் சரி. ஆனால், எல்லா வித ஆயுதங்களையும் மக்கள் தங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று ஜெர்மானியர்கள் கட்டளையிட மாட்டார்களா? ஒவ்வொருவரும் அந்த உத்திரவுக்குக் கீழ்ப்படிய மாட்டார்களா?'' என்று அவன் கேட்டான்.

''ஒவ்வொருவரும் அல்ல. சிலர் கீழ்ப்படிவார்கள். சிலர் அவ்வாறு செய்ய மாட்டார்கள்'' என்று எர்மச்சேன்கோ மறுத்துக் கூறினான்.

மற்றவர்கள் கருத்தை அறிவதற்காகத் தலைவன் அவர்களைப் பார்த்தான்.

''துப்பாக்கிகளை வழங்குவதே சரி'' என்று கூறி தொழிலாளி வாலிபன் எர்மச்சேன்கோவையும் ஸ்திருஷ்கோவையும் ஆதரித்தான்.

''அப்படியானால் சரி, அவ்வாறே முடிவு செய்வோம். இன்று விவாதிக்க வேண்டியது இவ்வளவுதான்'' என்று கூறிவிட்டுத் தலைவன் இருக்கையிலிருந்து எழுந்தான். ''நாம் காலைக் கதிரவன் தோன்றும்வரை ஓய்வெடுக்கலாம். ஷுஹ்ராய் வந்தவுடன் என்னிடம் அனுப்புங்கள். அவனிடம் நான் பேச வேண்டும். எர்மச்சேன்கோ, பாராக்காரர்களைக் கண்காணித்து விடுங்கள்'' என்று அவன் மேலும் கூறினான்.

மற்றவர்கள் அந்த இடத்தைவிட்டுச் சென்றவுடன், புல்காக்கோவ் அந்த அறைக்குப் பக்கத்திலுள்ள படுக்கை அறைக்குச் சென்று, மெத்தையின் மீது தன் மேல்கோட்டை விரித்துக் கொண்டு படுத்தான்.

அடுத்த நாள் காலை, பாவெல் மின்சார நிலையத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். ஒரு வருட காலமாக, அந்த நிலையத்தில் ஸ்டோக்கரின் கையாளாக அவன் வேலை பார்த்துக் கொண்டிருந்தான்.

நகரத்தில் என்றுமில்லாத கலகலப்பு ஏற்பட்டிருந்தது. பல மனிதர்கள் ஆளுக்கு ஒன்று அல்லது இரண்டு துப்பாக்கிகளை எடுத்துச் செல்வதை அவன் கண்டான். சிலர் மூன்று துப்பாக்கிகளைக் கொண்டு சென்றனர். என்ன நடக்கிறதென்று பாவெலுக்குப் புரியவில்லை. அவனால் முடிந்த அளவுக்கு வேகமாக வீட்டுக்கு விரைந்தான். லெஷ்சீன்ஸ்கிய் தோட்டத்துக்கு முன்னால் முதல் நாள் அவனுக்குப் பரிச்சயமானவர்கள் குதிரைமீது ஏறிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

பாவெல் ஒரே ஓட்டமாக வீட்டுக்குள் சென்று, துரிதமாக முகத்தைக் கழுவிக்கொண்டான். ஆர்த்தியோம் அதுவரை வீட்டுக்கு வரவில்லை என்பதை அன்னையிடமிருந்து அறிந்து கொண்டு, வேகமாக வெளியேறினான். நகரத்தின்

இன்னொரு பகுதியில் வசித்த ஸெர்யோஷாவைக் காண்பதற்கே அவன் விரைந்தான்.

ஸெர்யோஷாவின் தந்தை, ஒரு எஞ்சின் டிரைவருக்கு உதவியாக வேலை செய்தான். அவருக்கென்று ஒரு சிறு வீடும் துண்டு நிலமும் உண்டு.

ஸெர்யோஷா வீட்டில் இல்லை. வெளுத்த முகமும் பருத்த தேகமும் உடைய அவனது தாய் பாவெலை வெடுவெடுப்புடன் பார்த்தாள்.

''அவன் எங்கு தொலைந்தானோ, குட்டிச் சாத்தானுக்குத்தான் தெரியும்! பொழுது விடிந்தவுடன் பைத்தியக்காரன் மாதிரி வீட்டைவிட்டு ஓடினான். எங்கேயோ துப்பாக்கிகளை வினியோகம் செய்கிறார்களாம். அங்குதான் போயிருப்பானென்று நினைக்கிறேன். சனிமூக்குச் சிப்பாய்களான உங்களுக்கு நல்ல பூசைபோட வேண்டும்! அடங்காப் பிடாரிகளாகி விட்டீர்கள். பால்மணம் மாறவில்லை. அதற்குள் துப்பாக்கியைத் தேடி அலைகிறீர்கள்! ஒரு துப்பாக்கி ரவையைக் கொண்டு வந்தால்கூட, தோலை உரித்து விடுவேனென்று அந்தப் போக்கிரிப் பயலிடம் சொல்லு. அவன் என்னத்தைக் கொண்டுவருவானோ, யார் கண்டது? கடைசியில், நான் பதில் சொல்ல வேண்டும். நீயும் அங்கு போகிறாயா?''

ஸெர்யோஷாவின் வாயாடித் தாய் பேசி முடிப்பதற்குள்ளாக, பாவெல் வீதியில் ஓட ஆரம்பித்தான்.

சாலையில் ஒருவர் தோளுக்கு ஒரு துப்பாக்கியுடன் வருவதைப் பாவெல் கண்டான். அவரிடம்

சென்று, ''மாமா! இவை எங்கு கிடைத்தன?'' என்று கேட்டான்.

''வேர்கவீனுவில் வினியோகித்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்று பதில் வந்தது.

பாவெல் நிலை புரியாமல் ஓடினான். இரண்டு தெருக்கள் தாண்டியவுடன், அவன் ஒரு கடினமான துப்பாக்கியைக் கஷ்டப்பட்டு இழுத்துக் கொண்டு வந்த பையன்மீது முட்டிக்கொண்டான். பாவெல் அவனை நிறுத்தினான்.

''இந்தத் துப்பாக்கி உனக்கு எங்கு கிடைத்தது?''

''பள்ளிக்கூடத்துக்கு எதிரில், படைவீரர்கள் வினியோகம் செய்தார்கள். எல்லாத் துப்பாக்கிகளும் தீர்ந்து விட்டன. இரவெல்லாம் வழங்கினார்கள். இப்பொழுது காலிப் பெட்டிகள்தான் மிச்சமாயுள்ளன. இது என்னுடைய இரண்டாவது துப்பாக்கி'' என்று அவன் பெருமையுடன் பேசினான்.

இந்தச் சேதியைக் கேட்டுப் பாவெல் வருத்தமடைந்தான்.

''கெட்டது காரியம்! நேராக அங்கு சென்றிருக்க வேண்டும்! இப்படித் தவறு செய்து விட்டோமே!'' என்று சிந்தித்தவனாகப் பாவெல் தன்னையே நொந்துக்கொண்டான்.

திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை உதித்தது. தன் வழியே சென்றுகொண்டிருந்த பையனை இரண்டே பாய்ச்சலில் நெருங்கினான். அவனுடைய கையிலிருந்து துப்பாக்கியைப்

பிடுங்கினுன்.

''உனக்கு ஒன்று போதும். இது எனக்குத் தேவை'' என்று ஆட்சேபணைக்கு இடந்தராத குரலில் கூறினுன்.

பட்டப் பகலில் நிகழும் இந்த வழிப்பறியைக் கண்டு வெஞ்சினம் கொண்ட பையன், பாவெல் மீது பாய்ந்தான். ஆனுல் பாவெல் பின்பக்கமாகத் தாவி நின்று, பையனைக் குறி வைத்துத் துப்பாக்கியின் பாய்னெட்டை நீட்டினுன்.

''ஓடிவிடு. இல்லாவிட்டால் குத்திக் கொள்ளப்போகின்ருய்'' என்று கத்தினுன் பாவெல்.

வருத்தம் தாங்க முடியாமல் பையன் கண்களில் நீர் மல்கியது. பாவெலை ஒன்றும் செய்ய முடியாத நிலையில், ஆத்திரம் கொண்ட பையன் பாவெலைச் சபித்துவிட்டு அங்கிருந்து பள்ளியை நோக்கி ஓடினுன். தன் சாதனையில் திருப்தி கொண்டவனுகப் பாவெல் வீட்டுக்குத் திரும்பினுன். அவன் வேலியைத் தாண்டிக் குதித்து, கொட்டகைக்குள் ஓடினுன். கூரையின் கீழ் இருந்தக் குறுக்குச் சட்டங்கள் மீது துப்பாக்கியை வைத்தான். உல்லாசமாகச் சீட்டி அடித்துக்கொண்டே வீட்டுக்குள் நடந்தான்.

கோடைக்கால மாலை நேரங்கள் உக்ரேய்னுவில்—அதுவும் ஷெப்பெத்தோவ்கா போன்ற சுற்றுப்புறத் தோற்றத்தில் கிராமத்தையொற்ற சின்னஞ்சிறு நகரங்களில்—உள்ளத்தைக் கொள்ளைக்கொள்பவை.

அமைதியும் இனிமையும் கொண்ட இக்கோடைக்கால மாலைநேரங்களில் எல்லா இளைஞர்களும் தெருவில் சுற்றிவருவர். ஆடவரும் பெண்டிரும் முன்வீட்டு மண்டபங்களிலும், வீட்டுத்தோட்டங்களிலும் தெருக்களில் கட்டிட வேலைக்காக அடுக்கிவைக்கப்பட்ட மரக்கட்டைகளின் மீதும், குழுக்குழுவாகவும், இருவர் இருவராகவும், அமர்ந்து உரையாடுவர். பாட்டு, கும்மாளம், கூத்து. ஒரே சிரிப்பு.

மலர்களது மணம் காற்றில் நிறைந்திருக்கும். அடிவானத்திலிருந்தது வான்மீன்கள் பொட்டுபொட்டாகச் சுடர்விடும். பேசும் குரல் வெகுதூரம் வரை கேட்கும்....

பாவெல் தன் அக்கார்டியன் வாத்தியத்தை மிகவும் நேசித்தான். அந்த இன்னிசைக் கருவியை அன்புடன் எடுத்து மடியில் வைத்துக் கொள்வான்; இரண்டு வரிசைகளில் அமைந்திருந்த விசைகள் மீது தன் விரல்களை இசைவாக ஓடவிட்டுச் சுருதி கூட்டுவான். தாழ்ந்த ஸ்தாயியில் ஒரு ஒலி; அதன் பின் மலைவீழ் அருவி போல், உல்லாசமான இன்னிசை அமுதத்தைப் பொழியும்.

அக்கார்டியன் இன்னிசை இசைக்கின்றது. என்னதான் முயன்றாலும் நம்மால் இசைக்கேற்ப நாட்டியமாடாமலிருக்க முடியவில்லை. என்னதான் கட்டுப்படுத்தினாலும் கால்கள் தாமகவே அசையத் தொடங்குகின்றன. இசை இருக்கும்வரை வாழ்வு எத்துணையளவு இனிக்கின்றது!

இன்று மாலை என்றுமில்லாத களியாட்டம். பாவெல் வீட்டுக்கு முன்னுலுள்ள மரக்கட்டை அடுக்கின் மீது உல்லாசமான இளைஞர்கள் கூடியிருக்கிறுர்கள். அவர்களில், கால்யாவிடம்தான் பிறரைக் காட்டிலும் அதிகமாகக் களிப்பு துள்ளி விளையாடுகிறது. பாவெல் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் வாழும் சிற்பியின் மகள் கால்யாவுக்கு இளைஞர்களுடன் ஆடுவதும் பாடுவதும் ரொம்பப் பிடிக்கும். அவளது சாரீரம் இனிமையானது, மிருதுவானது, அழுத்தமிக்கது.

பாவெலுக்கு அவளிடம் கொஞ்சம் அச்சம் தான். அவள் சிறிது துடுக்காகப் பேசுவாள். கெட்டிக்காரி. அவள் பாவெலின் அருகில் உட்கார்கிறுள், தமாஷாகச் சிரித்துக்கொண்டே அவனை அணைத்துக் கொண்டு கூறுகிறுள்:

''நீ அந்த அக்கார்டியனை வாசிப்பதே ஒரு அற்புதம். நீ சிறியவனுக இருக்கிறுயே என்றுதான் நான் வருந்துகிறேன். இல்லாவிட்டால், உன்னை என் கணவனுகத் தேர்ந்தெடுத்திருப்பேன். அக்கார்டியன் வாசிக்கும் ஆடவரை நான் வழிபடுகிறேன். அந்த இசையைக் கேட்கும்பொழுது என் இருதயம் பாகாக உருகி விடுகிறது.''

நாணத்தால் பாவெல் முகம் சிவந்து விடுகிறது. நல்ல வேளை, இருட்டாயிருப்பதால், செக்கச் செவேலென்று சிவந்த முகத்தை ஒருவரும் பார்க்கவில்லை. அந்த முரண்டுக்காரப் பெண்ணிடமிருந்து, அவன் விலகுகிறுன்; ஆனுல் அவளோ அவனை உறுதியாக ஒட்டிக்கொள்கிறுள்.

''அன்பே! என்னை விட்டு ஓடிப்போகாதே! ஓடிப்போவாயா? அருமையான காதலன் நீ!'' என்று கூறிக்கொண்டே அவள் நகைக்கிறாள்.

அவளது திண்மையான மார்பு பாவெலுடைய தோளை உராய்கிறது. அவனையும் அறியாமல் அவனிடம் ஒரு அதிர்ச்சியும், கலவரமும் உண்டாகிறது. பிறர் உரக்கச் சிரிப்பதால் உண்டாகும் பேரொலி தெருவின் வாடிக்கையான அமைதியைக் குலைக்கிறது.

அவளுடைய தோளைக் கொஞ்சம் தள்ளிக்கொண்டே பாவெல் கூறுகிறான்:

''எனக்கு இடைஞ்சலாக இருக்கிறது. சிறிது நகர்ந்துகொள்.''

இதைக் கேட்டவுடன் அனைவரும் கொல்லென சிரிக்கின்றனர்; கேலி செய்கின்றனர்; கிண்டலாகப் பேசி இன்புறுகின்றனர்.

சரியான நேரத்தில் மருஸ்யா இடைமறித்து ''ஏதாவது சோகச் சுவை நிறைந்ததாக, இதயத்தைப் பிழிந்து எடுப்பதாக வாசி!'' என்று கூறுகிறாள்.

மெதுவாகத் துருத்தி விரிகிறது; பாவெலின் விரல்கள் விசைகளை அன்புடன் வருடுகின்றன. அவர்களுக்குப் பழக்கமானதும் அவர்களது பாசத்துக்கு உரியதுமான கீதம் காற்றில் பரவுகிறது. முதலில் கால்யா, பிறகு மருஸ்யா, அதன்பின் மற்றவர்கள், கோஷ்டி கானத்தில் கலந்து கொள்கிறார்கள்

விடியலான வேளை — அவர்
விரைவில் படகோட்டிக்

குடிலேவந் தடைந்தார்—என்ன
  கும்மாளந்தான் பாராய்!
இந்தவேளே இங்கே—ஆகா!
  இன்பம் பொங்கும் பாராய்!
எந்தத் துன்பந்தனேயும்—பண்ணில்
  இசைத்து மறந்து விடுவோம்!

பாடகர்களின் உணர்ச்சி மிகுந்த இளங்குரல்களின் ஒலி ஊரில் பரவி, காட்டை அடைந்தது.

''பாவெல்!'' அது ஆர்த்தியோமின் குரல்.

பாவெல் அக்கார்டியனின் துருத்தியை மடக்கினுன். அது விரிந்துவிடாமல் தோல்பட்டையை மாட்டினுன்.

''என்னேக் கூப்பிடுகிறுர்கள், போக வேண்டும்.''

''இன்னும் கொஞ்சநேரம் வாசி. ஏன் அவசரப்படுகிறுய்?'' என்றுள் மருஸியா.

ஆனல் பாவெல் அவசரப்பட்டான்.

''தாமதிக்க முடியாது. மீண்டும் நாளேக்குப் பாடிக் களிப்போம். இப்பொழுது போய்த்தாஞக வேண்டும். அண்ணன் கூப்பிடுகிறுர்.''

இவ்வாறு கூறிவிட்டு, தெருவைத் தாண்டி எதிரிலுள்ள வீட்டுக்குப் பாவெல் ஓட்டம் பிடித்தான்.

அவன் கதவைத் திறந்ததும் மேஜையைச் சுற்றி அண்ணனுக்குப் பக்கத்தில் இருவர் இருப்பதைக் கண்டான். ஒருவன், அண்ணனுடைய சினேகிதனுன ரொமான். இன்ஞெருவன் பாவெலுக்குப் புதியவன்.

''என்னை அழைத்தாயா?'' என்று பாவெல் கேட்டான்.

''ஆம்'' என்று பொருள்படும்படி ஆர்த்தியோம் தலையசைத்தான். பிறகு புதியவன் பக்கம் திரும்பினான்.

''நாம் இவனைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம். என் தம்பி'' என்று கூறினான்.

புதியவன் தன் கரடுமுரடான கரத்தைப் பாவெலிடம் நீட்டினான்.

ஆர்த்தியோம் தன் தம்பியிடம் கூறினான்: ''பாவெல், இங்கு பார். மின்சார நிலையத்தில் எலெக்டிரிஷியனுக்கு உடல்நலமில்லை என்று கூறினாய். அவனுக்குப் பதிலாக ஒரு திறமையான புதியவனை எடுத்துக் கொள்வார்களா என்பதை நீ நாளைக்குத் தெரிந்துகொண்டு வரவேண்டும். எடுத்துக் கொள்வார்களென்றால் நீ எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.''

ஆர்த்தியோமை இடைமறித்துப் புதியவன் கூறினான்:

''அப்படிச் செய்ய வேண்டாம். நான் அவனுடன் சென்று முதலாளியிடமே நேரடியாகப் பேசுகிறேன்.''

பாவெல் நிலைமையை விளக்கினான்:

''அவர்களுக்கு ஒரு எலெக்டிரிஷியன் அவசரமாகத் தேவை. ஸ்தன்கோவிச் உடல்நலமின்றி இருப்பதால், இன்று மின்சார நிலையம் வேலை செய்யவில்லை. முதலாளி இரண்டு தடவை வந்து சுற்றிப் பார்த்தான். எலெக்டிரிஷியன் வேலை

செய்வதற்கு வேறு ஆள் கிடைப்பானுவென்று அவன் சுற்றி சுற்றி தேடிப் பார்த்தான். பயன் இல்லே. ஸ்டோக்கர் ஒருவனே மட்டும் வைத்துக் கொண்டு நிலேயத்தை ஓட்டுவதற்கு அவன் அஞ் சுகிருன். எலெக்டிரிஷியனுக்கு டைபஸ் ஜுரம்.''

''விஷயம் தெளிவாகி விட்டது. நாளேக் காலே நான் வந்து உன்னேக் கூப்பிடுகிறேன். இரு வரும் சேர்ந்து போவோம்'' என்று புதியவன் பாவெலிடம் கூறினுன்.

''நல்லது.''

புதியவனுடைய அமைதி நிறைந்த சாம்பல் நிறக் கண்களே—தன்னேக் கவனமாக ஆராய்ந்து கொண்டிருக்கும் கண்களே — பாவெல் நேருக்கு நேராகப் பார்த்தான். நிதானமாகவும் உறுதியாக வும் புதியவன் தன்னேப் பரிசோதிப்பதைக் கண்டு பாவெல் சிறிதளவு மனங் கலங்கினுன். இம்மனி தன் ஒரு சாம்பல் நிறக் கோட்டு அணிந்திருந்தான். மேல் கோடியிலிருந்து கீழ்க் கோடிவரை பித்தான் வைத்த கோட் அது. பித்தான்களேப் போட்டுக் கொண்டிருந்தபொழுது, சொக்காய் அவனது நடுவுடலே இறுகப் பிடிப்பதாக இருந்தது; பரந்த முதுகுப் புறத்தில், தையல்கள் விட்டுவிடும் போ லிருந்தன. அவனது தலேக்கும் தோட்களுக்கும் இணேப்பாயிருந்த கழுத்து தசைப்பற்று மிகுந்த தாயிருந்தது. எருதின் கழுத்து மாதிரியிருந்தது. அவனது உடற்கட்டு ஒரு வயதான மரத்தின் உரத் தையும் வலுவையும் பருமனேயும் ஒத்திருந்தது.

வாசற் கதவுவரை புதியவனுடன் சென்ற ஆர்த்தியோம், ''ஷுஹ்ராய். சென்று வருக. சகல நலங்களும் உண்டாகட்டும்! நாளைக்கு என் தம்பி யுடன் சென்று வேலையில் அமர்ந்துவிடும்'' என்று கூறினான்.

செம்படை கிளம்பிச்சென்று மூன்று நாட்கள் கழிந்தபின், ஜெர்மானியர்கள் அந்த நகரத்தில் பிரவேசித்தார்கள். வெறிச்சென்று கிடந்த ரயில் நிலையத்திலிருந்து எஞ்சின் ஊதி உண்டாக்கிய ஒலி அவர்களது வருகையை அறிவித்தது.

''ஜெர்மானியர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்'' என்ற செய்தி மின்னல் வேகத்தில் நகரமெங்கும் பரவியது.

கலக்கமுற்ற கறையான் புற்றுமாதிரி நகரம் பதறியது. ஜெர்மானியர்கள் வரப்போகிறார்களென்பதைக் கொஞ்சநாளாக நகர மக்கள் அறிந்திருந்தார்களென்பது மெய். ஆனால் ஏதோ காரணத்தால் அதை அவர்கள் நம்ப மறுத்தனர். இப்பொழுதோ, இந்தப் பயங்கர ஜெர்மானியர்கள் வெகு அருகில் — நகரத்துக்குள்ளேயே — வந்துவிட்டார்கள். அதனால்தான் மக்கள் பதறினார்கள்.

நகரத்து மக்கள் வீட்டு முற்றங்களில் வேலிக்கருகே நின்று கொண்டு தெருவில் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் தெருவில் வர அஞ்சினர்.

ஜெர்மானியர்கள், சாலையின் இரு மருங்கிலும் ஒருவர்பின் ஒருவராக நடை போட்டுக்

கொண்டுவந்தார்கள். கரும்பச்சை உடை அணிந் திருந்தனர். துப்பாக்கிகளைத் தாழ்த்திப்பிடித்து கொண்டு சென்றனர். அந்தத் துப்பாக்கிகளின் நுனியில் பாய்னெட்டுகள் பொருத்தப்பட்டிருந் தன. அவை அகலமானவை, கத்திபோன்றவை. அந்த ஸோல்ஜர்கள் கனமான உருக்குத் தலைக் காப்பு அணிந்திருந்தனர். முதுகில் பெரிய பை களைச் சுமந்து சென்றனர். அவர்கள் ஸ்டேஷனி லிருந்து நகருக்குள் வந்துகொண்டேயிருந்தனர். அவர்கள் எச்சரிக்கையாக நடந்தார்கள். அவர் களைத் தாக்கவேண்டுமென்று எவரும் கனவுகூடக் காணவில்லை என்றாலும், எந்த விநாடியிலும் எத் தகைய திடீர்த் தாக்குதலையும் சமாளிப்பதற்குத் தயாராக நடந்தார்கள்.

அவர்களுக்கு முன்னால், இரண்டு அதிகாரி கள் கையில் கைத்துப்பாக்கி சகிதமாகச் சென் றனர். சாலையின் நடுவில் கேத்மான்காரனாகிய* அதிகாரி ஒருவன்—மொழி பெயர்ப்பாளன்— நடந்து சென்றான். அவன் ஒரு நீலநிற உக் ரேனியக் கோட்டையும், உயரமான ஆட்டுத்தோல் குல்லாவையும் அணிந்திருந்தான்.

---

* **கேத்மான்காரர்கள்** — கேத்மான் ஸ்கொ ரொப்பாட்ஸ்கியின் எதிர்ப்புரட்சிப் படையில் சேவை செய்து வந்தவர்கள். 1918ம் ஆண்டில் ஜெர்மானியத் துருப்புக்கள் உக்ரேனியாவை ஆக் கிரமித்துக் கைப்பற்றிக்கொண்ட பொழுது ஸ்கொரொப்பாட்ஸ்கியை ஜெர்மானியர்கள் தங்களது கையாளாக ஆக்கிக் கொண்டார் கள்.

நகரத்தின் நடுவில் இருந்த சதுக்கத்தில் ஜெர்மானியர்கள் செவ்வக வடிவத்தில் அணி வகுத்தார்கள். முரசுகள் முழங்கின. துணிவுள்ள நகர மக்களின் சிறு கூட்டம் ஒன்றும் திரண்டது. உக்ரேனியக் கோட்டு அணிந்த மொழிபெயர்ப் பாளன் மருந்து விற்பனைக் கடையின் முகமண்டபத்தின்மீது ஏறி நின்றுகொண்டு, நகரத்தின் ராணுவத் தலைவன் மேஜர் கார்ப் என்பவன் பிறப்பித்திருந்த உத்திரவைப் படித்தான்.

''நான் இதன்மூலம் பிறப்பிக்கும் உத்திரவு என்னவென்றால்:

1) நகரத்திலுள்ள சகல பிரஜைகளும், தம் வசமுள்ள வெடி மருந்துக் கருவிகளையும் பிராணாபாயம் விளைவிக்கும் இதர கருவிகளையும் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் ஒப்படைத்துவிட வேண்டும். இந்த உத்திரவை மீறுவோர் சுட்டுக் கொல்லப்படுவார்கள்.

2) நகரத்தில் ராணுவச் சட்டம் பிரகடனமாகியிருக்கிறது. இரவு எட்டு மணிக்குப் பின் எவரும் தெருவில் நிற்கவோ, நடமாடவோ கூடாது.

மேஜர் கார்ப்,
நகரத்தின் ராணுவத் தலைவர்''

ஜெர்மானிய ராணுவத் தலைமை, முன் காலத்தில் நகர நிர்வாக சபையும் புரட்சிக்குப் பின் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்தும் செயல்பட்டு வந்த கட்டிடத்தில் தன் அலுவலகத்

தை அமைத்துக் கொண்டது. அதன் வாயிலில் ஒரு பாராக்காரன் நிறுத்தப்பட்டான். அவன் அணிந்திருந்த இரும்புத் தொப்பியில் சாம்ராஜ்ய சின்னமான கழுகு பெரிய வடிவத்தில் செதுக்கப் பட்டிருந்தது. அதே கட்டிடத்தின் முன்பக்கத்தில், ஜனங்கள் ஒப்படைக்கும் ஆயுதங்களைக் சேமித்து வைப்பதற்கான வசதி செய்யப்பட்டிருந்தது.

''சுட்டுக் கொல்வோ'' மென்ற அச்சுறுத் தலால் கிலியடைந்த நகர மக்கள், நாள் முழுவதும் ஆயுதங்களைக் கொண்டுவந்தபடியிருந்தனர். வய தானவர்கள் நேரில் வருவதற்கு அஞ்சினார்கள். இளைஞர்களும் சிறுவர்களுமே ஆயுதங்களைக் கொண்டு வந்தனர். ஜெர்மானியர் எவரையும் கைது செய்யவில்லை.

நேரடியாக வருவதற்கு விருப்பமில்லாதவர் கள் தம் வசமிருந்த ஆயுதங்களை இராக் காலத் தில் சாலையில் போட்டுவிட்டனர். காலையில், கா வலுக்காக உலவிய ஜெர்மானியர் அந்த ஆயுதங் களை எடுத்து, ராணுவ வண்டியில் ஏற்றி, தலை மைக் காரியாலயத்துக்குக் கொண்டுவந்து சேர்த் தனர்.

பகல் ஒரு மணி ஆயிற்று. ஆயுதங்களை ஒப்ப டைப்பதற்காக அளிக்கப்பட்ட இருபத்துநான்கு மணி நேரத் தவணை முடிந்தது. ஜெர்மானிய சிப்பாய்கள் தமது பறி பொருளைக் கணக்கிடத் தொடங்கினார்கள். பதினான்காயிரம் துப்பாக்கிகள் இருந்தன. இன்னும் ஆறாயிரம் துப்பாக்கிகள் மீதி. ஊரெல்லாம் வலை போட்டுப் பார்த்தார்கள்,

ஆனால் அந்தச் சோதனைகளில் கிடைத்த பலன் அற்ப சொற்பமாயிருந்தது.

மறுநாள் கிழக்கு வெளுத்த பொழுது, நகரத்துக்கு வெளியேயிருந்த பழைய யூதர் இடுகாட்டில் இரண்டு ரயில்வே தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். காரணம், அவர்களது வீடுகளில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஜெர்மானிய நகரத் தலைவனின் உத்திரவைக் கேட்டவுடன் ஆர்த்தியோம் தன் வீட்டுக்கு விரைந்தான். முற்றத்தில் பாவெலைச் சந்தித்தவுடன், அவன் தோள்மீது கை போட்டுக்கொண்டு, அமைதியாகவும் உறுதிப்பாட்டுடனும் கேட்டான்:

''ஏதாவது ஆயுதங்கள் வீட்டுக்குக் கொண்டு வந்தாயா?''

துப்பாக்கியைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று பாவெலுக்கு எண்ணமே இல்லை. ஆனால் அண்ணனிடம் பொய் சொல்வதற்கு அவனால் முடியாது. எனவே ஒளிக்காமல் உள்ளதை உள்ளபடி உரைத்துவிட்டான்.

இருவரும் சேர்ந்து கொட்டகைக்குள் சென்றனர். குறுக்குச் சட்டங்கள் மீது மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை ஆர்த்தியோம். வெளியே எடுத்தான். துப்பாக்கியின் பூட்டையும் பாய்னெட்டையும் அகற்றினான். துப்பாக்கியின் குழலைப் பிடித்து எடுத்து, தன் சக்தி முழுவதை

யும் பிரயோகித்துச் சுழற்றி ஒரு வேலிக் கம்பத்தின்மீது வீசினுன். கைப்பிடி சிதறுண்டது. மிச்சத்தைத் தோட்டத்துக்கு அப்பாலிருந்த குப்பைக் குழியில் எறிந்தான். அதன்பின் ஆர்த்தியோம் பாய்னெட்டையும், பூட்டையும் மலக்குழியில் எறிந்தான்.

வேலையை முடித்தபின் அவன் தம்பியிடம் கூறினுன்:

''பாவெல், நீ இனியும் பச்சைக் குழந்தையல்ல. துப்பாக்கியோடு விளையாடக் கூடாதென்பதை நீ அறிய வேண்டும். இந்த மாதிரிப் பொருளை வீட்டுக்குக் கொண்டுவரக் கூடாது. நான் உனக்கு உண்மையாகக் கூறுகிறேன். இந்தக் காலத்தில் இத்தகைய வேலைக்கு உயிரையே பறிகொடுக்க நேரிடும். உன் தந்திர வேலைகளைக் காட்டாதே. ஏன் என்ருல், நீ எதையாவது வீட்டில் கொண்டுவந்து வைத்து அதை அவர்கள் கண்டுபிடித்தால், என்னைத்தான் முதலில் சுடுவார்கள். உன்னைப் போன்ற சிறுவனைத் தொடமாட்டார்கள். இது பொல்லாத காலமென்பதைப் புரிந்துகொள்.''

அண்ணன் விரும்பியபடி பாவெல் வாக்குறுதி அளித்தான்.

அண்ணனும் தம்பியும் வீட்டுக்குள் செல்வதற்கு முற்றத்தைத் தாண்டியபொழுது, லெஷ்சீன்ஸ்கிய் வீட்டு வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து வக்கீல், தனது மனைவியுடனும் நேல்லி, வீக்தர் என்ற இரு குழந்தைகளுடனும் இறங்கினுன்.

''இந்த அருமைப் பறவைகள் தம் கூட்டுக்கு மீண்டும் பறந்து வந்து விட்டனவா? ஒழுங்கு சீர் குலைந்துவிட்டது. கலகம் பெருகிவிட்டது. அதன் பயனை நன்கு அனுபவிக்கிறார்கள்'' என்று ஆத்தி ரத்துடன் கூறினான் ஆர்த்தியோம். அத்துடன் வீட்டுக்குள் சென்றான்.

பகல் முழுவதும் துப்பாக்கியைப் பற்றி எண்ணி எண்ணிப் பாவெல் மனம் வருந்தினான். அதே சமயத்தில் பாவெலின் தோழன் ஸெர்யோஷா ஒரு பழைய கொட்டகையில் அரும்பாடுபட்டு குழி வெட்டிக் கொண்டிருந்தான். கவனிப்பாரற்றுக் கிடந்த அந்தக் கொட்டகையின் சுவர் ஓரத்தில் கீழே குழி வெட்டி முடித்தவுடன், கந்தல் துணிகளுக்கு இடையே பத்திரப்படுத்தப்பட்ட, மக்களுக்கு ஆயுதம் வழங்கிய பொழுது தான் பெற்ற மூன்று புத்தம் புதிய துப்பாக்கிகளை அதில் வைத்து மூடினான். அவற்றை ஜெர்மானியரிடம் ஒப்படைக்கும் எண்ணம் சிறிதளவும் அவனுக்கு எழவில்லை. அவ்வெண்ணம் இருந்திருந்தால், இவ்வண்ணம் அரும்பாடு பட்டிருக்க மாட்டான்.

குழியை மூடிவிட்டு, மிதித்துத் துவைத்து நிலமட்டத்தைச் சரிசெய்தான். அதன் மீது குப்பையைக் கொட்டினான். தன் முயற்சியின் பலனை நன்கு ஆய்ந்துவிட்டு மனநிறைவு அடைந்தவனாய், அவன் தலைக் குல்லாயை எடுத்துவிட்டு, நெற்றியில் அரும்பி நின்ற வேர்வையைத் துடைத்துக் கொண்டான்.

''இனி அவர்கள் சல்லடை போட்டுச் சலித்துப் பார்க்கட்டும்! இந்தத் துப்பாக்கிகளைக் கண்டு பிடித்தாலும், இங்கு எவன் வைத்ததென்பதை அவர்கள் அறிய முடியாது. ஏனென்றால் இந்தக் கொட்டகை எவருக்கும் சொந்தமானதல்ல'' என்று அவன் தனக்குள் கூறிக்கொண்டான்.

ஒரு மாதமாக மின்சார நிலையத்தில் வேலை செய்து வந்த கடுகடுப்புத் தோற்றமுள்ள எலெக்டிரிஷியனுக்கும் பாவெலுக்கும், இருவருக்கே புலப்படாத வகையில் நட்பு வளர்ந்தது.

டைனமோ எப்படி அமைக்கப்பட்டிருக்கிறதென்பதையும் அது எப்படி வேலை செய்கிறதென்பதையும் ஷுஹ்ராய் பாவெலுக்குக் கண்கூடாகக் காட்டி விளக்கினான்.

அறிவுள்ள இந்தப் பையனிடம் அந்த மாலுமிக்கு ஒரு பாசம் உண்டாகிவிட்டது. அவன் ஓய்வு தினங்களில் ஆர்த்தியோம் வீட்டுக்கு அடிக்கடி சென்றான்; குடும்பத்தின் கவலைகளையும் துயரங்களையும் பற்றி அவனது அன்னை கூறியதையெல்லாம், ஷுஹ்ராய் பொறுமையாகக் கேட்டான். குறிப்பாக, இளைய மகனுடைய துஷ்ட சேஷ்டைகளைப் பற்றி அவள் கூறியதையெல்லாம் அவன் கவனமாகக் கேட்டறிந்து கொண்டான். நிதானம், சிந்தனை, சாந்தம் ஆகியவை குடிகொண்ட ஷுஹ்ராயுடன் உரையாடுவதில், மரீயா யாக்கொவ்லெவ்னுவுக்கு ஒரு மன அமைதி உண்டாயிற்று, புதிய நம்பிக்கை துளிர்த்தது. அவனுடன்

பேசிக்கொண்டிருக்கும் பொழுது, அந்தத் தாய் தன் தொல்லைகளை மறந்துவிட்டு, உற்சாகமா யிருப்பாள்.

ஒருநாள் மின்சார நிலையத்தின் முற்றத்தில் உயரமாக அடுக்கியிருந்த விறகு வரிசைகளுக்கு இடையே பாவெல் சென்றுகொண்டிருந்த பொழுது ஷுஹ்ராய் அவனை நிறுத்தினான்.

''நீ வம்புச் சண்டைக்காரன் என்று உன் தாயார் சொல்கிறாள். போர்ச் சேவல் என்று அம்மா உன்னை அழைக்கின்றாள்'' என்று ஷுஹ்ராய் ஆமோதிக்கும் வண்ணம் சிரித்துக் கொண்டே பேசினான். ''உண்மையில், யாருடன் எதற்காகச் சண்டை போடுகிறோமென்ற தெளிவு இருந்தால் சண்டைக்காரனாயிருப்பதில் குற்றம் இல்லை'' என்று ஷுஹ்ராய் சொன்ன பொழுது, அவன் உண்மையாகப் பேசுகிறானா, அல்லது கிண்டலாகச் சொல்கிறானா என்பதைப் பாவெலால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''நான் வீண் சண்டை போடுவதில்லை, நியாயத்துக்காகவும் நேர்மைக்காகவும்தான் எப்பொழுதும் போராடுகிறேன்'' என்று பாவெல் சுடச் சுடப் பதில் கொடுத்தான்.

''முறையாகச் சண்டை போடுவதற்கு நான் உனக்குக் கற்றுத்தர வேண்டுமென்று விரும்புகிறாயா?'' என்று ஷுஹ்ராய் எதிர்பாராத விதமாய்க் கேட்டான்.

''முறையாக என்றால்?'' பாவெல் வியப்புற்ற வனாய் ஷுஹ்ராயைப் பார்த்தான்.

''அனுபவத்தில் அறிவாய்'' என்று ஷுஹ்ராய் பதிலளித்தான்.

அதன்பின் ஆங்கில முறைக் குத்துச் சண்டையைப் பற்றி முன்னுரையாக ஒரு விளக்கம் செய்தான்.

பாவெல் ஒன்றும் எளிதில் குத்துச் சண்டைக் கலையில் தேர்ச்சி பெறவில்லை. அடிக்கடி, ஷுஹ்ராயின் கைக்குத்தால் தூக்கி எறியப்பட்டுத் தரை மீது உருண்டான். எனினும் அவன் பொறுமையாகவும் விடாமுயற்சியுடனும் பழகிவந்தான்.

ஒருநாள் கிலீமின் வீட்டிலிருந்து திரும்பி வந்த பாவெலுக்குப் பொழுது போகவில்லை. வெளியே வெயில் காய்ந்து கொண்டிருந்தது. அறைக்குள் என்ன செய்வதென்று தெரியாமல் பாவெல் இங்குமங்கும் காலாற்றினான். அதன்பின், வீட்டுக்குப் பின்புறத்திலுள்ள தோட்டத்தின் மூலையில் இருந்த தன் அன்புக்குகந்த கொட்டகைக் கூரையில் ஏறி நின்றான். கொட்டகையை முட்டிக்கொண்டிருந்த செர்ரி மரங்களின் அடர்த்தியான கிளைகளைத் தள்ளிக்கொண்டு கூரையின் மையத்தை அடைந்தான். அங்கு படுத்துக் கொண்டு வெயிலில் காய எண்ணினான்.

இந்தக் கொட்டகையின் ஒரு பக்கம் லெஷ்சீன்ஸ்கிய் தோட்டத்தை நோக்கிக் கொண்டிருந்தது. கூரையின் அந்த முனையில் நின்று பார்த்தால் வக்கீல் வீட்டுத் தோட்டமும் வீட்டின் ஒரு பகுதியும் தெளிவாகப் புலப்படும். அந்த முனையிலிருந்து கொண்டு, வெளியில் தலையை நீட்டிப் பார்த்த

பாவெல், வெளி முற்றத்தின் ஒரு பகுதியையும் அங்கு நிற்கும் ஒரு வண்டியையும் கண்ணுற்றுன். லெஷ்சீன்ஸ்கிய் வீட்டில் தங்கியிருந்த ஜெர்மானிய லெப்டினன்டின் ஆடைகளை சிப்பாய் ஒருவன் சுத்தம் செய்து கொண்டிருந்தான்.

அந்த வீட்டு வாசலில், அந்த லெப்டினன்ட் நிற்பதைப் பாவெல் அடிக்கடி பார்த்திருக்கிறுன். கட்டை குட்டையாயிருப்பான், சிவந்த முகம், நறுக்கிவிடப்பட்ட குட்டிமீசை, மூக்கில் பொதிந்த கண்ணுடி, குல்லாயின் முன் விளிம்பு மெருகெண்ணெய் பூசியதால் பளபளவென்று மின்னும். அவன் பக்கவாட்டத்து அறையில் வசிப்பதையும் பாவெல் அறிவான். அந்த அறையின் ஜன்னல் தோட்டமிருந்த பக்கத்தில் இருந்தது. எனவே கூரையிலிருந்த பாவெலுக்கு அந்த ஜன்னல் புலப்பட்டது.

அந்தச் சமயத்தில் லெப்டினன்ட் மேஜை முன்னுல் உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். எழுதியதை எடுத்துக்கொண்டு அறையை விட்டுச் சென்றுன். அந்தக் காகிதத்தை வேலைக்காரனிடம் கொடுத்துவிட்டு, வீட்டு வாசலுக்குச் செல்லும் தோட்டப் பாதை வழியே நடந்தான். வசந்தப் பந்தலின் வாயிலை அடைந்தவுடன் அங்கு நின்று, உள்ளே இருந்த யாருடனே பேசினுன். ஒரு விஞடியில், வக்கீலின் மகளான நெல்லி வெளியே வந்தாள். அந்த அதிகாரி அவளுடைய கையைப் பற்றிக்கொண்டான். இருவரும் திட்டிவாசலைக் கடந்து வீதிக்குள் சென்றனர்.

பாவெல் இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் கவனமாகப் பார்த்தான். அப்பொழுது அவனுக்கு லேசாகக் கண்ணை இறுக்கியது. கண்களை மூட விருந்த சமயத்தில், வேலைக்காரன் அதிகாரியின் அறைக்குள் பிரவேசிப்பதைப் பாவெல் பார்த்தான். அந்த வேலைக்காரன் அதிகாரியின் உத்தியோக உடையைத் தொங்கவிட்டான்; தோட்டப்புறத்தில் உள்ள ஜன்னலைத் திறந்தான்; அறையைச் சுத்தம் செய்தான். அதன் பிறகு, அவன் கதவை மூடிக்கொண்டு அறையை விட்டுச் சென்ருன். அடுத்த நிமிஷத்தில் அவன் குதிரை லாயத்துக்கு அருகில் இருப்பதைப் பாவெல் கண்டான்.

திறந்த ஜன்னல் வழியாகப் பாவெல் அறை முழுவதையும் நன்கு பார்த்தான். மேஜையின்மீது ஒரு பெல்ட்டும் ஒரு பிரகாசமான பொருளும் இருந்தன.

கட்டுக்கடங்காத ஆவலால் தூண்டப்பட்ட பாவெல் கூரையிலிருந்து செர்ரி மரத்தடியில் சப்தம் செய்யாமல் இறங்கினுன். அதிலிருந்து லெஷ்சீன்ஸ்கிய் தோட்டத்துக்குள் அமைதி குலேயாதவாறு இறங்கினுன். குனிந்து வளைந்தவனுய் தோட்டத்தின் குறுக்கே பாய்ந்து, ஜன்னல் வழியாக அறைக்குள் தன் பார்வையைச் செலுத்தினுன். அவனுக்கு முன்னுல், மேஜையின் மீது, தோள் பெல்ட்டுகளுடன் கூடிய இடுப்பு பெல்ட்டும் ஒரு அருமையான பன்னிரண்டு குண்டுகள் கொள்ளக்

கூடிய ரிவால்வரைக் கொண்ட உறையும் கிடந்தன.

பாவெலுக்கு மூச்சு திணறியது. ஒரு சில விஞடிகளுக்கு உள்ளத்தில் போராட்டம். முடிவில் ஒரு துணிவு வந்தது. வருவதுவரட்டுமென்ற எண்ணத்துடன் அவன் ஜன்னல் வழியாகக் கையை விட்டான். எடுத்தான் உறையை. அதிலிருந்து எஃகிஞல் வார்க்கப்பட்ட புத்தப் புதிய ரிவால்வரை வெளியே எடுத்தான். ரிவால்வருடன் பறந்தான் தோட்டத்தை நோக்கி. செர்ரி மரத்தில் ஏறிஞன்; குரங்கு மாதிரிப் பாய்ந்து, கூரையை அடைந்தான். அங்கிருந்து அவன் திரும்பிப் பார்த்தான். அதிகாரியின் வேலைக்காரன், அப்பொழுதும் குதிரைப் பாகனுடன் இன்பமாகப் பேசிக்கொண்டிருந்தான். அமைதி நிறைந்திருந்தது.... பாவெல் கூரையிலிருந்து இறங்கி வீட்டுக்குள் நுழைந்தான்.

அவனுடைய தாயார் அடுக்களையில் சமையல் செய்து கொண்டிருந்தாள்; மகனைக் கவனிக்கவில்லை.

பெட்டிக்குப் பின்ஞல் கிடந்த ஒரு துணியை எடுத்துப் பைக்குள் திணித்துக்கொண்டு, பாவெல் தாயின் கண்ணில் படாமல் வெளியேறிஞன். வேலியைத் தாண்டிக் காட்டுக்குச் செல்லும் சாலையில் பாய்ந்தோடிஞன். கால்சட்டைப் பையிலிருந்த கனமான கைத்துப்பாக்கி தொடையில் மோதுவதைத் தடுப்பதற்காக, அதைக் கையால் பிடித்துக்கொண்டே, எவ்வளவு வேகமாக ஓட முடியுமோ, அவ்வளவு வேகமாக ஓடிஞன்; அழிந்து

போய் ஆதரவற்றுக் கிடந்த செங்கற் சூளைகளை அடைந்தான்.

அவனது பாதங்கள் தரையில் ஊன்றவில்லை; காற்று அவனது காதுகளில் ஒலி செய்தது.

அந்தப் பழைய சூளைகளைச் சுற்றி அமைதி நிலவியிருந்தது. இங்கும் அங்கும் மரப்பலகையால் வேய்ந்த கூரை விழுந்து கிடந்தது; செங்கற்கள் உடைந்தும் நொறுங்கியும் மலையாகக் குவிந்திருந்தன; சுடு சூளைகளும் அழிந்து கிடந்தன. எங்கு பார்த்தாலும் புல் பூண்டுகள் மண்டிக் கிடந்தன. மனம் சோர்ந்துவிடும் இந்த இடத்துக்கு எவரும் வருவதில்லை. பாவெலும் அவனது இரு நண்பர்களும்தான் சில சமயங்களில் இங்கு வந்து விளையாடுவார்கள். களவாடப்பட்ட செல்வங்களை ஒளித்து வைப்பதற்கு இங்கு பல மறைவிடங்கள் இருப்பதைப் பாவெல் அறிவான்.

அவன், ஒரு சூளையின் இடைவெளி வழியாக அதன் உள்ளே நுழைந்துகொண்டு எச்சரிக்கையாகப் பின் திரும்பிப் பார்த்தான். ஆனால் கண் கொண்ட மட்டும் ஒருவரும் தென்படவில்லை. பைன் மரங்கள் மட்டுமே மென்மையாக அசைந்தன. இளங்காற்று சாலைப் புழுதியைக் கிளறிவிட்டது. கிசிலின் வலிய மணம் காற்றில் நிரம்பியிருந்தது.

பாவெல் ரிவால்வரைக் கந்தல் துணிக்குள் வைத்துக் கட்டினான். அதைச் சூளையின் ஒரு மூலையில் வைத்து, அதன்மீது பழைய செங்கற்களை அடுக்கினான். அதன்பின் அந்தப் பழைய சூளையின்

வாசலில் செங்கற்களைத் தாறுமாருகப் பரப்பினுன். மறைவிடத்தை நன்ருகக் குறித்துக் கொண்டு, மெதுவாக வீட்டுக்குத் திரும்பினுன்.

அவனது முழங்கால்கள் நடு நடுங்கிக் கொண்டேயிருந்தன.

''இது எப்படி முடியும்?'' என்று அவன் எண்ணிய பொழுது, சோகம் அவன் இதயத்தை அழுத்தியது.

அங்கிருந்து நேராக வீட்டிற்குச் செல்ல அவனுக்குப் பிடிக்கவில்லை. வழக்க நேரத்துக்கு முன்னுல் மின்சார நிலையத்தை அடைந்தான். காவற்காரனிடம் சாவியை வாங்கி மின்னிலையத்தின் அகலக் கதவைத் திறந்தான். அவன் சாம்பல் குழியைச் சுத்தம் செய்துவிட்டு, குழாயைத் திறந்து பாயிலரை நீரால் நிரப்பிவிட்டு, அடுப்பில் தீப்பற்ற வைத்ததும், லெஷ்சீன்ஸ்கிய் வீட்டில் என்ன நடந்து கொண்டிருக்குமென்பதை அறிய ஆவல் கொண்டான்.

ஷுஹ்ராய் வந்து, வெளியில் வரும்படிப் பாவெலைக் கூப்பிட்டபொழுது, மணி பதினென்று இருக்கும்.

''உன் வீட்டில் இன்று சோதனை நடந்ததின் காரணம் என்ன?'' என்று ஷுஹ்ராய் இரகசியமாகக் கேட்டான்.

பாவெல் அதிர்ச்சியடைந்தான்.

''சோதனையா?''

கொஞ்ச நேரம் சும்மாயிருந்து விட்டு ஷுஹ்ராய் தொடர்ந்து பேசினுன்:

''எனக்குக் கவலையாயிருக்கிறது. அவர்கள் ஏன் சோதனை நடத்தினர்களென்பதைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?''

சோதனைக்குக் காரணம் என்னவென்பது பாவெலுக்குத் தெரியும். ஆனால் அவன் தான் ரிவால்வரைக் களவாடியதைப் பற்றி ஷுஹ்ராயிடம் சொல்ல விரும்பவில்லை. உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை கவலையால் நடுங்கியவனைப் பாவெல் கேட்டான்:

''அவர்கள் ஆர்த்தியோமைக் கைது செய்திருக்கிறார்களா?''

''ஒருவரும் கைதாகவில்லை. ஆனால் வீட்டில் ஒன்றைவிடாமல் புரட்டிப் போட்டுச் சோதனை நடத்தியிருக்கிறார்கள்.''

இதைக் கேட்டுப் பாவெலுக்கு ஓரளவுக்கு ஆறுதல் ஏற்பட்டது. ஆனால் அவனது கவலை மறையவில்லை. ஒருசில நிமிடங்கள் இருவரும் தங்கள் தங்கள் போக்கில் எண்ணமிட்டனர். இருவரில் ஒருவன் சோதனையின் காரணத்தை அறிந்தவனாக அதன் விளைவுகளை எண்ணி வருந்தினான். மற்றொருவன் அதன் காரணத்தை அறியாமல் எச்சரிக்கையடைந்தான்.

''இந்தப் பாழாய்ப் போகிற பீடைகள், என்னைப்பற்றி ஏதாவது உளவு தெரிந்து கொண்டிருக்கிறார்களா? ஆர்த்தியோமுக்கு என்னைப்பற்றி ஒன்றும் தெரியாத நிலையில், அவன் வீட்டை எதற்காகச் சோதனை செய்ய வேண்டும்? எதற்கும் இனி சர்வ ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.''

இவ்வாறு ஷு ஹ்ராயின் சிந்தனை ஓடியது.

பிறகு இருவரும் ஒரு வார்த்தை கூட பேசாமல் தத்தம் வேலையைக் கவனிக்கப் பிரிந்து சென்றனர்.

லெஷ்சீன்ஸ்கிய் வீட்டில் ஒரே அமளி துமளியாகவிருந்தது.

கைத்துப்பாக்கியைக் காணோம் என்பதை அறிந்த லெப்டினன்ட் தம் வேலைக்காரனைக் கூப்பிட்டு விசாரித்தான். விசாரணையின் முடிவில் அது திருட்டுப்போயிருக்க வேண்டுமென்று உணர்ந்தான். உணர்ந்ததும் வழக்கமாக அமைதியும் நிதானமும்கொண்ட அவன் அந்த வேலைக்காரனது காதில் தன்னிடமுள்ள சக்தியாவற்றையும் ஒன்றுகூட்டி ஓங்கி அடித்தான். அந்த அடியால் வேலைக்காரன் தள்ளாடினான். ஆனால் உடனே நிலைகொண்டு விறைப்பாய் நின்றான். தன் குற்றத்தை உணர்ந்த குற்றவாளியின் பார்வையுடன் மேற்கொண்டு நடக்கப்போவதை எதிர்நோக்கி நின்றான்.

வக்கீலும் விளக்கம் தருவதற்காக அழைக்கப்பட்டான். இந்தத் திருட்டைப்பற்றிக் கேட்டவுடன் அவன் சினம் கொண்டான். இப்படிப்பட்ட களவு தன் வீட்டில் நடப்பதற்கு இடம் அளித்துவிட்டதற்காக வருந்துகிறேனென்று கூறித் தன்னை மன்னிக்க வேண்டும் என்று லெப்டினன்டிடம் வேண்டினான்.

அந்த விசாரணையின் பொழுது உடனிருந்த வக்கீலின் மகன் வீக்தர் தன் தந்தையை நோக்கி, "பக்கத்து வீட்டுக்காரர்கள் தான்—அதிலும் குறிப்

பாக அந்த போக்கிரி பாவெல்தான் — அதைத் திருடியிருக்க வேண்டும்'' என்று சொன்னுன். உடனடியாக, மகனது அனுமானத்தைத் தந்தை அதிகாரியிடம் தெரிவித்தான். லெப்டினன்ட் சோதனைக்கு உடனே உத்திரவு பிறப்பித்தான்.

இந்த ரிவால்வர் திருட்டின்மூலமாக, பாவெல் ஒன்றை நன்ருக உணர்ந்தான். எந்தவித மான அபாயமான செயலும் சில சமயங்களில் வெற்றியாக முடியக்கூடும் என்று துணிவைப் பெற்ருன்.

அத்தியாயம் மூன்று

அகலத் திறந்திருந்த ஜன்னலினருகில் தோன் யா நின்று கொண்டிருந்தாள். நன்கு பழகிய தோட்டம், அதைச் சுற்றி ஓங்கி உயர்ந்து செங் குத்தாக நின்ற பாப்ளர் மரங்கள் இளந்தென்ற லில் லேசாக ஆடும் ஆட்டம், இவற்றை நோக்கிக் கொண்டிருந்த அவளால் தான் ஓராண்டு கால மாகத் தன்னருமைத் தோட்டத்தைக் காண வில்லை என்ற உண்மையை நம்பமுடியவில்லை. குழந்தைப் பருவத்திலிருந்து பழகிய இவ்விடத் தை விட்டு ஏதோ நேற்று பிரிந்துசென்று இன்று காலை ரயிலில் திரும்பியது போல்தான் அவளுக்குப் பட்டது.

தோட்டத்தில் மாறுதலேதுவுமில்லை. முன் போலவே, ராஸ்ப்பெர்ரி பூண்டுகளின் வரிசை கள் திருத்தமாகக் கத்தரித்துவிடப்பட்டிருந்தன,

தோட்டத்தின் பாதைகள் திட்டமாகவும் நுட்ப மாகவும் அமைந்திருந்தன, அந்தப் பாதைகளின் இருமருங்கிலும் அவளுடைய தாய்க்குப் பிடித்த மான மலர்ச்செடிகள் வரிசையாகக் காட்சியளித் தன. எங்கும் நன்ருகக் கூட்டப்பட்டு, சுத்தமாக விருந்தது. எங்கும் தோட்டக்கலை அறிஞன் ஒருவனது தேர்வுபெற்ற கைப்பாடு நன்கு தென்பட்டது. ஆனல் திட்டமாக வகுக்கப்பட் டிருந்த சுத்தமான பாதைகளின் காட்சி, தோன்யா வுக்கு அலுத்துப்போய் விட்டது.

தான் முன்பு படித்துக்கொண்டிருந்த நாவ லொன்றை அவள் கையில் எடுத்துக்கொண்டாள். அறைக் கதவைத் திறந்து, வராந்தா வழியாகச் சென்று, படிக்கட்டில் இறங்கித் தோட்டத்தை அடைந்தாள். அதைக் கடந்து வர்ணம் பூசப்பட்ட திட்டிவாசல் கதவைத் திறந்துகொண்டு, பம்பு நிலையத்துக்கு அருகில் உள்ள ரயில் நிலையக் குளத் தை நோக்கி மெதுவாக நடந்தாள்.

பாலத்தைக் கடந்து சாலையை அடைந்தாள். சாலை நல்லதொரு தோட்டப்பாதை போன்றிருந் தது. அதன் வலப்புறத்தில் குளம். அதன் கரை யோரங்களில் புதர்கள் அடர்ந்து வளர்ந்திருந் தன. சாலைக்கு இடது புறத்தில்தான் காடு தொடங்குகிறது.

பழைய கல்வெட்டுமிடத்திலுள்ள குளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த அவள், கீழே தளத்திலிருந்து திடீரென்று உயரே எழும்பிய தண்டிலொன்றைக் கண்டு, நின்ருள்.

வளைவான மரமொன்றின் அடிப்பகுதியில் சாய்ந்து கொண்டு, புதர்களை கைகளால் விலக்கி விட்டுக்கொண்டு நோக்கிய அவள், வெற்றுக்காலுடன் கால்சட்டைகளை முழங்காலுக்கு மேல் தூக்கிவிட்டுக் கொண்டு, மண்டியிட்டு அமர்ந்திருந்த வெயிலில் பழுப்பேறிய பையன் ஒருவனைக் கண்டாள். அவனுக்கு அருகில் ஒரு துருப்பிடித்த தகரக் குவளையில் புழுக்கள் இருந்தன. அந்தப் பையன் தன் வேலையில் கருத்தாயிருந்ததால், பின்னால் வந்து நின்ற தோன்யாவைக் கவனிக்கவில்லை.

''இங்கு மீன் அகப்படுமா என்ன?'' என்று கேட்டாள் தோன்யா.

பாவெல் சினங்கொண்டு திரும்பிப் பார்த்தான்.

மரத்தைப் பிடித்துக் கொண்டு, குளத்தின் நீரை குனிந்து நோக்கிக் கொண்டிருந்தாள் அறிமுகமற்ற ஒரு பெண். அவள் வரிபோட்ட நீலநிறக் காலருடைய வெண்மையான மாலுமிச் சொக்காயும் குட்டையான சாம்பல்நிற ஸ்கர்ட்டும் அணிந்திருந்தாள். பழுப்புநிறச் செருப்புகளணிந்த அவளது பாங்கான, வெயிலில் பழுப்பேறிய கால்களை வண்ண விளிம்புகளுடன் கூடிய குட்டைக் காலுறைகள் இறுக மூடியிருந்தன. தனது பழுப்பு நிறக் கூந்தலை வாரிச் சேர்த்துக் கொண்டை போட்டிருந்தாள்.

தூண்டில் கம்பைப் பிடித்துக் கொண்டிருந்த பாவெலின் கரம் சற்று நடுங்கியது. வாத்தின் இறகால் செய்யப்பட்ட தூண்டில் தக்கையின் தலை

அசைந்ததால், அதைச் சுற்றி நீர்மட்டத்தில் சில வட்டங்கள் ஏற்பட்டன.

''பார்! பார்! மீன் சிக்கிவிட்டது!'' என்று தோன்யா உணர்ச்சி வசப்பட்டுக் கூறினாள்.

பாவெல் தன் நிதானம் முழுவதையும் இழந்து விட்டான். தூண்டிலைக் கடுமையாகச் சுண்டினான். சில நீர்த்திவலைகளுடன், கொக்கியில் மாட்டியிருந்த புழுவும் நீர்மட்டத்துக்கு மேல் வந்தன.

''இனி மீன்பிடித்தால் போல் தான்! எந்த தேவதைதான் இவளை இங்கு கொண்டுவந்ததோ!'' என்று எரிச்சலுடன் எண்ணினான். தனது அசட்டுத்தனத்தை மறைக்கும் எண்ணத்துடன் தூண்டிலை நீரில் சிறிது எட்டிப் போட்டான். அந்தோ! எங்கு அதைப் போடக் கூடாதோ அங்கு சுணக்காகப் போட்டான். தூண்டில் கொக்கி அவ்விடத்திலிருந்த செடியினடியில் சிக்கிக் கொண்டிருக்க வேண்டியது.

என்ன நிகழ்ந்தது என்பதைப் பாவெல் எளிதில் உணர்ந்தான். திரும்பிப் பார்க்காமலேயே, மேலே உட்கார்ந்திருந்த பெண்ணின் திசையை நோக்கி முணுமுணுத்தான்:

''நீங்கள் சிறிது பேசாமலிருக்க முடியுமா? மீன்களெல்லாம் உங்களால் கிலி பிடித்து ஓடி ஒளிகின்றன.''

அவள் பரிகாசக் குரலில் பதில் கூறினாள்:

''உங்களைக் கண்ட உடனேயே மீன்கள் ஓடி விட்டனவே! இருந்தும் இருந்தும் இந்த வெயிலிலா

மீன் பிடிப்பார்கள்? ஓ! நீங்கள் ஒரு பரிதாபத்துக்குரிய மீன் பிடிப்பாளர்!''

கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டுமென எண்ணி அதற்காகக் கடினப்பட்டுக் கொண்டிருந்த பாவெலுக்கு இச்சொற்கள் வரம்புக்கு மேற்பட்டவையாக இருந்தன. அவன் எழுந்து நின்ருன். குல்லாயை முன்னே நகர்த்திக்கொண்டான். இது அவனது கோபத்தின் வழக்கமான அறிகுறி. தன்ஞல் முடிந்த அளவு கண்ணியமான வார்த்தைகளேப் பொறுக்கி எடுத்துக் கேட்டான்:

''கண்ணியம் வாய்ந்த பெண்டிரே! நீங்கள் இவ்விடத்தை விட்டு அகல முடியுமா?''

தோன்யாவின் கண்கள் ஒரளவுக்கு ஒடுங்கின; அவற்றில் சிறியதொரு புன்னகை தோன்றத் தொடங்கியது.

''உண்மையில், நான் உங்களது வேலேக்குக் குறுக்கே நிற்கிறேஞ?''

அவளுடைய குரலில் இருந்த பரிகாசத் தொனி மறைந்துவிட்டது. அதில் நேசமும் இணக்கமும் தொனித்தன. எங்கிருந்தோ வந்த இந்தப் பெண்ணிடம் முரட்டுத்தனமாக நடந்து கொள்ள வேண்டுமென்று எண்ணிய பாவெல் இதைக் கண்டு ஆயுதம் இழந்தவனேப் போலத் திகைத்தான்.

''இங்கிருந்து பார்க்க ஆசையாஞல், இருந்து கொள்ளவும். எனக்கொன்றும் இடத்துக்குப் பஞ்சமில்லே'' என்று கூறி விட்டு, தூண்டிலேக் கவனிப்பதற்கு உட்கார்ந்தான். தூண்டில் கயிறு

அந்தச் செடியில் சிக்கிக்கொண்டுவிட்டது. கொக்கி அந்தச் செடியின் வேர்களிடையே அகப்பட்டுக் கொண்டு விட்டதென்பதில் சந்தேகமில்லை. அதை இழுப்பதற்கு அவன் அஞ்சினன். அது வேர்களிடையே சிக்கியிருந்தால், அதை இழுத்துப் பெற முடியாது. அப்பொழுது, இந்தப் பெண் நிச்சயமாக நகைப்பாள். அவள் இந்த இடத்தை விட்டுத் தொலைய மாட்டாளாவென்று அவன் எண்ணினன்.

ஆனல் தோன்யா, அடிமரத்தில் சௌகரியமாக அமர்ந்துவிட்டாள். முழங்கால் மூட்டுகள் மீது நாவலைப் பிரித்து வைத்துக்கொண்டே, பாவெலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். வெயிலில் கன்றிப்போன முகமும் கருமையான கண்களும் உடைய இந்த முரட்டுப் பையன் தன்னிடம் அநாகரிகமாக நடந்து கொண்டதையும் இப்பொழுது தன்னை வேண்டுமென்றே உதாசீனம் செய்வதையும் எண்ணியவளாய், அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

குளத்துநீர் நல்லதொரு கண்ணடி போன்று, அந்தப் பெண்ணின் உருவத்தைத் தெளிவாகக் காட்டியது. அதைப் பாவெல் பார்த்தான். அவள் நாவலைப் படிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தாள். அவன் எச்சரிக்கையாகத் தூண்டில் கயிற்றை இழுத்தான். மிதவை நீரின் கீழ் அமுங்கியது; தூண்டில் கயிறு பளுவாயிற்று.

''அட கஷ்டமே! சிக்கிவிட்டதா!'' என்று அவன் உள்ளம் எண்ண, ஓரக்கண்ணல் தண்

ணீரில் அந்தப் பெண்ணின் சிரித்த முகம் தன்னை நோக்குவதைக் கண்டான்.

பம்பு நிலையத்துக்கருகிலுள்ள பாலத்தில் உயர்நிலைப் பள்ளியின் ஏழாவது வகுப்பு பையன்கள் இருவர் வந்து கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன்—டெப்போவின் தலைமை அதிகாரியான பொறி இயலான் ஸுகர்க்கோ என்பவரின் மகன்—சணல் நிறத் தலையன், மச்சங்கள் நிறைந்த முகத்தினன், சோம்பேறி, பதினேழு ஆண்டினன். பள்ளியில் ஏனை மாணவர்கள் அவனை ''வடு மூஞ்சி ஷூரா'' என்று அழைத்தனர். கையில் அருமையான தூண்டில் ஒன்றுடனும் வாயில் புகைவிட்டுக் கொண்டிருந்த சிகரெட்டு ஒன்றுடனும் அவன் வந்துகொண்டிருந்தான். அவன் அருகில் வந்து கொண்டிருந்தவனின் பெயர் வீக்தர் லெஷ்சீன்ஸ்கிய்; நல்ல பாங்கான உடலமைப்புக் கொண்டவன், செல்லமாகச் சீராட்டி வளர்க்கப்பட்டவன்.

ஷூரா தன் நண்பனை நோக்கி கண் இமைகளைச் சிமிட்டிக்கொண்டே சொன்னான்:

''இந்தப் பெண் ஒரு அமுதக்கனி. இவளை ஒப்பியவர் எவரும் இவ்வட்டாரத்தில் இல்லை. நான் சொல்வதை நம்பு. இவளிடம் காதல் செய்வது என்பதே ஒரு தனிக்கலைதான். கீவ் நகரத்தில் ஆறும் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறாள். கோடை லீவுக்கு இங்கு வந்திருக்கிறாள். அவளது தந்தை இங்கு காட்டிலாகாவின் தலைமை அதிகாரியாகவிருக்கிறார். என் சகோதரி லீஸாவுக்கு அவளைத் தெரியும். ஒரு தடவை நான் அவளுக்கு

உருக்கமான கடிதமொன்று எழுதினேன். 'உன்னிடம் தீராக் காதல் கொண்டிருக்கிறேன்.... காதல் பைத்தியமாக நிற்கிறேன். உன் அருளுக்குக் காத்திருக்கிறேன். உன் பதிலுக்காக ஏக்கம் நிறைந்தவனுகத் தவங்கிடக்கிறேன்' என்றெல்லாம் எழுதினேன். நாட்சன் என்ற கவியின் ஒரு இனிய கவிதையை—தகுதியான காதற் கவிதையை—தேடியெடுத்து உபயோகித்தேன்.''

''நன்று. அதன் பயன் என்ன?'' என்று ஆவல் மிகுந்தவனுக வீக்தர் வினவினுன்.

''ஓ! அதுவா? எதுவும் சரியாகச் சொல்லவில்லே. ரொம்பப் பெரிது பண்ணுகிருள்'' என்று ஷேரா குழப்பத்துடன் முணுமுணுத்தான். ''இந்த மாதிரிக் கடிதம் எழுதிக் காகிதத்தை வீணுக்க வேண்டாமென்று என்னிடம் கூறினுள். எப்பொழுதும், ஆரம்பத்தில் இப்படித்தான் இருக்கும். இந்த மாதிரி விஷயத்தில்தான் நான் பழம் பெருச்சாளி ஆயிற்றே! உண்மையில், அந்த அபத்தமான காதற் கூத்தெல்லாம் எனக்குப் பிடிக்காது. அதெல்லாம் வீண்தொல்லே; எப்போது ஒப்புக் கொள்வாரளோ என்று தவங்கிடப்பதும் ஏக்கம் பிடித்துத் துன்புறுவதும், பெருமூச்சுவிட்டுப் புலம்புவதும் யாருக்கு வேண்டுமென்று நான் கேட்கிறேன். ஒரு மாலேயில் உல்லாசமாக நடந்து, மில் தொழிலாளர்கள் வசிக்கும் இருப்பிடத்துக்குச் சென்ருல், கண்டால் நாக்கில் ஜலம் ஊறச் செய்யும் அழகியை மூன்று ரூபிள்களுக்குப் பொருக்கிக் கொள்ளலாம். அதுவும் எந்த விதமான

மறுப்பும் இல்லாமல் ஒப்புக்கொள்வாள். நான் அங்கு வால்யா தீகனவுடன் செல்வது உண்டு. ரயில்வே மேஸ்திரி வேலை செய்யும் அவனை உனக்குத் தெரியுமா?''

ஷுரொவின் உரையைக் கேட்ட வீக்தர் வெறுப்பில் புருவத்தைச் சுருக்கினான்.

''இத்தகைய கீழ்ச் செயல்களில் நீ ஈடுபடுகிறாயா, ஷுரா?'' என்று அவன் கேட்டான்.

ஷுரா, தன் சிகரெட்டை மென்று துப்பி விட்டு, ஏளனமாக விடை தந்தான்.

''ஆ.. மா...ம். ரொம்ப யோக்யமானவன். எங்களுக்கும் தெரியும் நீங்கள் எந்த மாதிரி செயல்களில் ஈடுபடுகிறீர்களென்று!''

வீக்தர் அவனை இடைமறித்தான்.

''உன் நேசத்துக்குரிய அந்தப் பெண்ணிடம் என்னை அறிமுகம் செய்வாயா?''

''நிச்சயமாகச் செய்வேன். நாம் விரைந்து செல்வோம்; இல்லாவிட்டால் அவள் சென்றுவிடுவாள். நேற்றுக் காலையில் அவள் தன்னந்தனியாக மீன் பிடிக்கச் சென்றாள்.''

இரு நண்பர்களும் தோன்யாவை அடைந்ததும் ஷுரா வாயிலிருந்து சிகரெட்டை எடுத்து விட்டு நாகரிகமாகத் தலைகுனிந்து அவளை வணங்கினான்.

''மிஸ் தோன்யா! வணக்கம். நீங்களும் மீன் பிடிக்க வந்திருக்கிறீர்களா?''

''இல்லை. மீன் பிடிப்பதைப் பார்த்துக்



கொண்டிருக்கிறேன்'' என்று விடை பகன்றாள் தோன்யா.

வீக்தரின் கையைப் பிடித்துக் கொண்டு, ''உங்களுக்கு இவனைத் தெரியுமா? என் நண்பன் வீக்தர் லெவ்ஷீன்ஸ்கிய்'' என்று அறிமுகம் செய்து வைத்தான் ஷூரா.

வீக்தர் மனம் குழம்பியவனாகக் கையை நீட்டி, தோன்யா நீட்டிய கரத்தைக் குலுக்கினான்.

உரையாடலை நீடிக்க வேண்டுமென்பதற்காக, ''நீங்கள் ஏன் இன்று மீன் பிடிக்கவில்லை?'' என்று ஷூரா தோன்யாவைக் கேட்டான்.

''தூண்டில் கொண்டுவர மறந்துவிட்டேன்'' என்றாள் அவள்.

''உடனே, நான் ஒன்று கொண்டுவருகிறேன். அது வரை, என்னுடையதை உபயோகித்துக் கொள்ளவும். ஒரு நிமிஷத்தில் திரும்பிவிடுகிறேன்'' என்று கூறினான் ஷூரா.

வீக்தரை தோன்யாவுக்கு அறிமுகம் செய்து வைப்பதாகக் கூறிய உறுதி மொழியை நிறைவேற்றிவிட்டான். இனி மூன்றாவது நபரின் தலையீடு இல்லாமல் இருக்க வேண்டுமென்ற ஆவலில் அவன் அந்த இடத்தைவிட்டு செல்ல விரும்பினான்.

''இல்லை, இங்கு ஏற்கனவே அவர் மீன்பிடிக்கிறார். அவருக்கு இடையூறாக இருக்கும்'' என்றாள் தோன்யா.

''மீன் பிடிப்பது யார்?'' என்று கேட்ட ஷூரா திரும்பினான்; புதருக்குக்கீழ் உட்கார்ந்

திருந்த பாவெலைக் கண்டான். ''அவனையா சொல் கிறீர்கள்? நல்லது! நீங்கள் மூன்று எண்ணுவதற் குள் நான் அவனை விரட்டி விடுவேன்'' என்றான்.

தோன்யா அவனை நிறுத்துவதற்கு முன்னால், ஷுரா பாவெல் இருந்த இடத்தை அடைந்துவிட் டான்.

''அந்தத் தூண்டிலை எடுத்துக்கொண்டு கிளம்பு!'' என்றான் ஷுரா. பாவெல் அமைதியாகத் தொடர்ந்து மீன் பிடிப்பதைக் கண்ட, ''கிளம்பு! தாமதிக்காதே!'' என்று அவசரப்படுத்தினான்.

பாவெல் ஷுராவைப் பார்த்தான். அந்தப் பார்வையில் கோபம் கொந்தளித்தது.

''சத்தம் போடாதே! வாயை மூடு!'' என் றான் பாவெல்.

''என்...ன! நாடோடிப் பயலே! பதில் சொல் லும் அளவுக்குத் துணிந்து விட்டாயா? உடனே கிளம்பு!'' என்று ஷுரா சீறினான். புழுக்களிருந்த குவளையை விசையோடு உதைத்தான். அது காற் றில் சுழன்று குளத்தில் விழுந்த வேகத்தில், நீர் திவலைகள் தோன்யாவின் முகத்தில் தெறித்தது.

''இவ்வண்ணம் நடந்து கொள்ள உங்களுக்கு வெட்கமாக இல்லையா'' என்று அவள் கூச்சலிட் டாள்.

பாவெல் குதித்து எழுந்தான். ஷுராவின் தந்தை ரயில்வே டெப்போவின் தலைமை அதிகாரி என்பதையும், அண்ணன் ஆர்த்தியோம் அவனுக் குக்கீழ் வேலை செய்கிறானென்பதையும் பாவெல் நன்கறிவான். ஒரே அடியில் தன்னால் வீழ்த்தக்

கூடிய இந்தச் சிவப்பனைத் தான் தொட்டால், அவன் நிச்சயமாகத் தன் தந்தையிடம் சென்று புகார் செய்வான். ஆர்த்தியோமுக்கு நடந்தன யாவும் தெரிந்து விடும். பாவெல் உடனடியாக ஷூராவிடம் தன் பலத்தைக் காட்டாததற்கு இதுதான் ஒரே காரணமாகவிருந்தது.

இன்னும் ஒரு வினடியில் பாவெல் தன்னைத் தாக்குவானென்பதை உணர்ந்த ஷூரா இரு கைகளாலும் பாவெலினது மார்பை அழுத்தி அவனைத் தள்ளினன். பாவெலோ தன் கைகளை அசாத்திய விசையுடன் முன்னும் பின்னும் அசைத்துச் சம நிலை எய்தி, நீரில் விழுவதிலிருந்து தப்பினன்.

ஷூரா பாவெலைவிட இரண்டு வயது மூத்தவன்; வீண்சண்டை போடுவதிலும் துஷ்டத்தனம் செய்வதிலும் பெயர் வாங்கியவன்.

மார்பில் விழுந்த அடி, பாவெலைத் தன்னிலை மறக்கச் செய்தது.

''இந்தா! பெற்றுக்கொள்!'' என்று கூறிக் கொண்டே, கையைச் சுழற்றி ஷூராவின் முகத்தில் வெட்டித்தெறிக்கும் வகையில் அறைந்தான். நிலைகலங்கி நின்ற ஷூராவைப் பாவெல் உறுதியாகப் பிடித்து நீருக்குள் இழுத்துச் சென்ருன்.

குளத்தில் நின்று கொண்டிருந்த ஷூராவை முட்டுவரை நீர் மூடியிருந்தது. அவனது பளபளக்கும் பூட்ஸும், கால்சட்டையும் நீரில் நனைந்து ஊறிவிட்டன. உடும்புப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கு ஷூரா அரும்பாடுபட்டான். அதன்பின் பாவெல் ஷூராவைக் குளத்தில்

தள்ளிவிட்டு, தான் குளக்கரைக்குப் பாய்ந்தான். வெஞ்சினங்கொண்ட ஷுரா அவனைக் கிழித் தெறிய வேண்டுமென்ற வெறியில் பின்தொடர்ந் தான்.

பாவெல் திரும்பினன்; எதிரியை நோக்கி னன். உடனே ஷுஹ்ராயின் போதனை நினைவுக்கு வந்தது.

''உன் உடலின் பாரத்தை உனது இடது பாதம் தாங்கிக்கொள்ள வேண்டும்; வலதுகால் விறைத்திருக்க வேண்டும்; ஆனல் வலது முழங் கால் சிறிதளவு வளைந்திருக்க வேண்டும். அந்த நிலையில், பலம் முழுவதையும் திரட்டி, எதிரியின் முகவாய்க் கட்டையைக் குறியாக வைத்து, மேல் நோக்கி அடி!''

அம்மாதிரியே பாவெல் செய்தான்.

எதிரியின் பற்கள் நொறுங்கின. ஷுரா முகவாய்க் கட்டையிலும், பற்களுக்கிடையே சிக்கிக் கடிபட்ட நாக்கிலும் ஏற்பட்ட வேதனை தாங்க முடியாமல் கைகளை அசட்டுத்தனமாக மேலும் கீழுமாக ஆட்டிக் கொண்டு, நிலை தவறிக் குளத்தில் விழுந்தான்; பேரொலியுடன் தண்ணீர் எழும்பிச் சிதறியது.

குளக்கரையிலிருந்த தோன்யாவுக்கு அள வற்ற ஆனந்தம்; ஒலிகேட்குமளவுக்குச் சிரித்தாள்.

''பலே! பலே! அருமையான சாதனை!'' என்று அவள் கரங்கொட்டிக் கூவினள்.

செடிவேரில் சிக்கிய கொக்கியை இழுத்தான் பாவெல். அவன் இழுத்த இழுப்பில் கயிறு அறு

பட்டது. பாவெல் கரையைக் கடந்து சாலையை அடைந்தான்.

"அவன்தான் பாவெல் கர்ச்சாகின் என்ற பெரிய போக்கிரி" என்று தோன்யாவிடம் வீக்தர் கூறியது, அவ்விடத்தை விட்டு அகலும் பொழுது பாவெல் செவியில் விழுந்தது.

ரயில்வே நிலையம் அமைதியற்று இருந்தது. இருப்புப் பாதையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடங்கப் போவதாக வதந்தி பரவியது. அடுத்தாற்போலுள்ள பெரிய ரயில்வே ஸ்டேஷனில் உழைக்கும் தொழிலாளர்கள் பெரியதொரு நடவடிக்கையைத் தொடங்கியிருந்தனர். பிரகடனங்களைக் கொண்டு சென்றனரென்ற சந்தேகத்தில், ஜெர்மானியர் இரண்டு எஞ்சின் டிரைவர்களைக் கைது செய்தனர். கிராமப்புறத்தைச் சார்ந்த தொழிலாளர்களிடையே, விட்டுப்போன நிலப்பிரபுக்களின் வருகையும் விவசாயிகளின் நிலக் கைப்பற்றுதலும் பெருங் குழப்பத்தையும் ஆத்திரத்தையும் ஊட்டின.

கேத்மானின் போலீஸார்கள் சாட்டையால் அடித்ததால், விவசாயிகளின் முதுகுகள் பாளம் பாளமாகப் புடைத்துக் கொண்டன. மாகாணத்தில் கொரில்லா வீரர்களின் இயக்கம் பரவியது. போல்ஷெவிக்குகள் பன்னிரண்டு கொரில்லா வீரர்களின் குழுக்களை உருவாக்கி விட்டார்கள்.

இந்தக் காலத்தில் ஷுஹ்ராயுக்கு ஓய்வே கிடைக்காது. நகரத்தில் வசித்த பொழுது அவன்

நிறையச் சாதித்துவிட்டான். அவன் பல ரயில்வே தொழிலாளர்களுடன் நன்கு பழகத் தொடங்கினன். இளைஞர்களின் பற்பல விதமான மாலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டான்; ரயில்வே மெக்கானிக்குகளும், மரம் அறுக்கும் மில் தொழிலாளர்களும் கொண்ட பலத்ததொரு குழுவைஅமைத்தான். ஆர்த்தியோமின் எண்ணத்தை அறிய ஆவல் கொண்டு, அவனிடம் பேச்சுக் கொடுத்தான். போல்ஷெவிக் கட்சியைப் பற்றியும் அதன் லட்சியத்தைப் பற்றியும் அவன் கருத்து என்னவென்று ஷுஹ்ராய் வினவினன்.

''எனக்கு அந்தக் கட்சிகளைப்பற்றி அதிகம் தெரியாது. ஆனல் உதவி தேவைப்பட்டால், என்னை நிச்சயமாக நம்பலாம்'' என்று அந்தத் திடகாத்திரமான கருமான் விடையளித்தான்.

ஷுஹ்ராய் இதைக் கேட்டுத் திருப்தியடைந்தான். ஆர்த்தியோம் நன்னெறியில் நடப்பவன் என்பதையும் அவன் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவானென்பதையும் ஷுஹ்ராய் நன்கறிவான். ஆனல் ஆர்த்தியோம் கட்சியில் சேருவதற்குத் தயாராக இல்லை என்பது தெளிவு. ''பரவாயில்லை. இப்படிப்பட்ட காலத்தில் அவன் சீக்கிரத்தில் விஷயத்தைச் சுயமாகப் புரிந்துகொள்வான்!'' என்று ஷுஹ்ராய் எண்ணினன்.

ஷுஹ்ராய் மின்சாரநிலைய வேலையை விட்டுவிட்டு, ரயில்வே டெப்போவில் வேலையை ஏற்றுக் கொண்டான். இவ்வேலை அவனுக்கு மிகவும் உதவியாக இருந்தது. மின்சார நிலையத்தில் இருந்த

பொழுது, ரயில்வேயுடன் தொடர்பு இல்லாம லிருந்தது.

ரயில்வே போக்குவரத்து மிகவும் அதிகமாக விருந்தது. ஜெர்மானியர்கள் உக்ரேய்னுவில் கொள்ளையடித்த பொருட்களாகிய ரை, கோது மை, கால்நடைகள் முதலியவற்றையெல்லாம் ஆயிரக்கணக்கான ரயில் பெட்டிகளில் ஏற்றி அனுப்பிக் கொண்டிருந்தனர்....

ஒருநாள் கேத்மானின் போலீஸார் ரயில்வே நிலயத் தந்தி இலாகா சிப்பந்தியான பொனம ரேன்கோவைக் கைது செய்தனர். இது ஒரு எதிர்பாராத அடி. அவனைத் தம்மிடத்துக்குக் கொண்டு சென்று மிருகத்தனமாகத் தாக்கிச் சித்திரவதை செய்தனர். எனவே ஆர்த்தியோமின் கூட்டாளியான ரொமான் ஸிதரேன்கோவை அவன் காட்டிக் கொடுத்திருக்கலாம்.

இரண்டு ஜெர்மானியரும் ஸ்டேஷனின் ராணுவ உதவித் தலைவனை கேத்மான்காரனும் வேலை நேரத்தில் ரொமானைத் தேடிவந்தனர். அந்த உதவித் தலைவன் ரொமான் வேலை செய்து கொண்டிருந்த விசிப்பலகைக்குச் சென்று, ஒரு வார்த்தைகூட பேசாமல் அவனுடைய முகத்தில் தன் சாட்டையால் அடித்தான்.

‘‘வேசி மகனே! வெளியே வா! உன்னோடு ஒரு விஷயம் பேசவேண்டும்’’ என்று அவன் கூறி னான். விகாரமான வெறிப்பார்வையுடன், அவன் அந்த கொல்லனின் கையைப் பற்றி விசையுடன்

முறுக்கினான். ''கிளர்ச்சி செய்வதற்குக் கற்றுத் தருகிறோம்! வா!'' என்று இரைந்து கூறினான்.

ரொமானுக்குப் பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஆர்த்தியோம், கையிலிருந்த அரத்தைக் கீழே போட்டுவிட்டு, பயங்கரமான தோற்றத்துடன் கேத்மான்காரனை நெருங்கினான்.

''அவனை அடிக்க உனக்கு என்ன உரிமை? முறை கேடாகப் பிறந்தவனே!'' என்று தன் உள்ளத்தில் பொங்கிவந்த கோபாவேசத்தை அடக்குவதற்கு முயற்சித்துக் கொண்டே கரகரத்தக் குரலில் கூவினான் ஆர்த்தியோம்.

அந்த ஸ்டேஷன் அதிகாரி, கைத்துப்பாக்கியின் உறையைத் திறந்தபடியே பின்வாங்கினான். பருமனாகவும் கட்டை குட்டையாகவும் இருந்த ஒரு ஜெர்மானியன், தனது பளுவான துப்பாக்கியை—அகலமான கத்திபோல் அமைந்த பாய்னெட்டுடன் கூடிய அத்துப்பாக்கியை—தோளிலிருந்து எடுத்துச் சுடுவதற்குத் தயாராக்கிக் கொண்டான்.

''நில்!'' என்று அவன் ஊளையிட்டான். இன்னும் ஒரு அசைவில் சுட்டுவிடுவான் போலிருந்தது. நன்கு உயர்ந்து வளர்ந்திருந்த கொல்லன் அந்தக் குட்டை மனிதனுக்கு எதிரில் ஏதும் செய்ய இயலாது நின்றான்.

ரொமான், ஆர்த்தியோம் இருவரும் கைதானார்கள். ஒரு மணி நேரம் கழிந்தபின் ஆர்த்தியோம் விடுதலையானான். ஆனால் ரொமான் நில

வறையிலிருந்த ஒரு சாமான் கிடங்கில் பூட்டி வைக்கப்பட்டான்.

இருவரும் கைதாகி பத்து நிமிடங்கள் ஆவதற்குள் சகலத் தொழிலாளரும் வேலையை நிறுத்தினர்கள். டெப்போத் தொழிலாளர்கள் ஸ்டேஷன் பூங்காவில் கூடினர்கள். சுவிச்சுக்காரர்களும் பண்டசாலைத் தொழிலாளர்களும் அங்கு வந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். கூட்டத்தில் ஆவேசம் பொங்கி எழுந்தது. ரொமான், பொனமரேன்கோ ஆகிய இருவரும் உடனடியாக விடுதலை பெற வேண்டுமென்ற கோரிக்கையை ஒருவர் தீர்மானமாக எழுதினர்.

கேத்மான்காரர்கள் சிலருடன் கைத்துப்பாக்கியைக் காட்டி மிரட்டிக்கொண்டே, உதவித் தலைவன் அங்கு வந்தான்.

''வேலைக்குத் திரும்புங்கள். இல்லாவிட்டால் ஒருவர் விடாமல் உங்களைப் பிடித்துச் சிறையில் தள்ளுவோம்! சிலரைச் சுட்டுத் தள்ளுவோம்!'' என்று அவன் சீறியதைக் கேட்டுத் தொழிலாளர் ஆத்திரங்கொண்டனர்.

ஆனல் சினங்கொண்ட தொழிலாளரின் இரைச்சலைக் கேட்ட அதிகாரி, ஸ்டேஷனுக்கு ஓடினன். அதற்குள், ஸ்டேஷனின் ராணுவத் தலைவன் நகரத்திலிருந்த ஜெர்மானியச் சிப்பாய் களை அனுப்பும்படி சேதி அனுப்பிவிட்டதால், அவர்கள் லாரிகளின் மூலம் கட்டளையிடப்பட்ட இடத்தை நோக்கி விரைந்து வந்தனர்.

தொழிலாளர் கலைந்து தத்தம் இல்லத்துக்கு ஓடிவிட்டனர். எவரும் வேலைக்குப் போகவில்லை. உதவி ஸ்டேஷன் மாஸ்டர்கூட வேலைநிறுத்தம் செய்துவிட்டான். ஷுஹ்ராயின் வேலைக்குத்தக்க பயன் ஏற்பட்டது. ஸ்டேஷன் தொழிலாளரின் முதல் வெகுஜன நடவடிக்கை இதுவே.

ரயில்வே பிளாட்பாரத்தில் ஜெர்மானியர்கள், ஒரு பெரிய எந்திரத் துப்பாக்கியை நிறுத்தினர்கள். கால்களை விரைத்துக் கொண்டு பாய்வதற்குத் தயாராக நிற்கும் வேட்டை நாய் போன்று அது நின்றுகொண்டிருந்தது. அதன் பக்கத்தில், விசைப் பிடியில் கை வைத்தபடியே, ஒரு ஜெர்மானியக் கார்ப்போரல் உட்கார்ந்திருந்தான்.

ரயில்வே நிலையம் வெறுமையாகக் கிடந்தது.

இரவில் ஆர்த்தியோம் உட்படப் பலர் கைதாஞர்கள். அன்று இரவு ஷுஹ்ராய் தன் வீட்டுக்குப் போகாததால் தப்பினுன்.

கைதானவர்கள் அனைவரும் ஒரு பெரிய சரக்குக் கிடங்கில் ஆடுமாடு மாதிரி அடைக்கப்பட்டனர். வேலைக்கு அவர்கள் திரும்பாவிட்டால் இராணுவக் கோர்ட்டில் தண்டிக்கப்படுவார்களென்று எச்சரிக்கப்பட்டனர்.

கிட்டத்தட்ட எல்லா ரயில்வே தொழிலாளர்களும், வேலை நிறுத்தம் செய்து விட்டனர். பகலிலும் இரவிலும் ஒரு ரயில்கூடப் போகவில்லை. அதே சமயத்தில், சுமார் நூற்று இருபது கிலோ மீட்டர்களுக்கு அப்பால் கொரில்லாக் குழு

ஒன்றுக்கும் ஜெர்மானியருக்கும் இடையே சண்டை நடந்து கொண்டிருந்தது. அந்தக் கொரில்லாக்கள் இருப்புப் பாதையைப் பெயர்த்துக் கொண்டும், பாலங்களைத் தகர்த்துக் கொண்டுமிருந்தனர்.

அன்று இரவு ஒரு ஜெர்மானிய இராணுவ ரயில் ஸ்டேஷனுக்கு வந்தது. ஆனால், எஞ்சின் டிரைவரும் அவருடைய துணையாளும் பயர்மேனும் எஞ்சினைவிட்டு ஓடிவிட்டனர். அதைத் தவிர, வேறு இரண்டு ரயில்கள் கிளம்புவதற்குத் தயாராயிருந்தன.

சரக்குக் கிடங்கின் கனமான கதவுகள் திறந்தன. ஸ்டேஷனின் ராணுவத் தலைவனை ஒரு ஜெர்மானிய லெப்டினன்டும் உதவித் தலைவனும் சில ஜெர்மானியர்களும் உள்ளே நுழைந்தனர்.

''கர்ச்சாகின், பொலென்தோவ்ஸ்க்கிய், ப்ருஸ்ஷாக், நீங்கள் மூவரும் சேர்ந்து ஒரு ரயிலை எடுக்கவேண்டும். இதற்கு இணங்காவிட்டால் இந்த இடத்திலேயே உங்களைச் சுட்டுக்கொல்வோம். என்ன சொல்கிறீர்கள்?'' என்று உதவித் தலைவன் கர்ஜித்தான்.

மூன்று தொழிலாளரும் வேண்டா வெறுப்புடன் தலையசைத்துச் சம்மதம் தெரிவித்தனர். காவலாளிகள் புடைசூழ அவர்களை எஞ்சினுக்குக் கொண்டுபோனார்கள். அதேசமயம், அடுத்த ரயிலை எடுக்க வேண்டிய மூன்று தொழிலாளர்களையும் உதவித் தலைவன் அழைத்துக் கொண்டிருந்தான்.

எஞ்சின் கோபத்துடன் புகைபோக்கி வழியாக ஒளிபொருந்திய தீப்பொறிகளைக் கக்கிக் கொண்டும் பெருமூச்சு விட்டுக் கொண்டும் இருளைத் துருவிக் கொண்டும் இருப்புப் பாதைகளின் மேல் அந்த நடு இரவில் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. உலையில் கரியை தள்ளிவிட்டு, அதன் கதவைக் காலால் உதைத்து மூடிய ஆர்த்தியோம், கருவிப் பெட்டிமீதிருந்த தட்டைமூக்குக் கெண்டியிலிருந்து தண்ணீரைக் குடித்துவிட்டு, கிழட்டு எஞ்சின் டிரைவரான பொலென்தோவ்ஸ்க்கியை நோக்கிக் கூறினான்:

''என்ன அப்பா! வண்டியைச் செல்ல வேண்டிய இடத்துக்கு ஓட்டத்தான் போகிறோமா?''

அதைக் கேட்ட டிரைவருடைய கண்களில் கோபம் கொந்தளித்தது.

''பாய்னெட்டால் குத்தினால் செய்ய மாட்டோமா?''

புருஸ்ஷாக், கரிப்பெட்டியின்மீது அமர்ந்திருந்த ஜெர்மானிய சிப்பாயை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே, ''எல்லாவற்றையும் தொலைத்து முழுகி விட்டுத் தப்பியோட வேண்டும்!'' என்று யோசனை கூறினான்.

''என் கருத்தும் அதுவே. ஆனால், இந்தக் கழுகு பின்னால் உட்கார்ந்திருக்கிறதே!'' என்றான் ஆர்த்தியோம்.

''அது சரி'' என்று தெளிவில்லாமல் பதில் அளித்துவிட்டு, புருஸ்ஷாக் ஜன்னல் வழியாகத் தலையை வெளியே நீட்டினான்.

பொலென்தோவ்ஸ்க்கிய் ஆர்த்தியோம் அருகில் வந்து நின்ருன்.

''நாம் இந்த வண்டியை ஓட்டிச்செல்ல முடியாது. புரிந்ததா? கொஞ்ச தூரத்துக்கு அப்பால் சண்டை நடக்கிறது. நமது தோழர்கள், பாதையில் வெடிவைத்து விட்டார்கள். அவர்களைச் சுட்டுக்கொல்வதற்கு நாம் இந்தப் பன்றிப் பயல்களை ஏற்றிச் செல்கிருேம். தம்பீ! ஜாராண்ட காலத்தில்கூட, வேலை நிறுத்தம் நடந்தபொழுது நான் வண்டியை ஓட்டியதேயில்லை. இப்பொழுது செய்வேனு? மாட்டேன். நம் சகோதரர்களின் அழிவை நாமே தேடினுல், நமக்கு நீங்காத இழிவைத் தேடிக்கொள்வோம். இந்த எஞ்சினுடைய சிப்பந்திகள் தப்பியோடினுர்கள், இல்லையா? அவர்கள் உயிரையும் திரணமாக மதித்து அந்தக் காரியத்தைச் செய்தார்கள். நாம் மட்டும் வண்டியை ஓட்ட முடியுமா? நீ என்ன நினைக்கிருய்?'' என்று டிரைவர், ஆர்த்தியோம் காதில் இரகசியமாகப் பேசினுன்.

''அப்பா! நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் அவனை என்ன செய்வது?'' என்று கேட்டுக்கொண்டே, ஆர்த்தியோம் ஜெர்மானிய சிப்பாயைத் தன் பார்வையால் காட்டினுன்.

எஞ்சின் டிரைவர் புருவத்தைச் சுருக்கினுன். கைநிறையக் கந்தலை எடுத்து, நெற்றி வியர்வையைத் துடைத்தான். தன்னை வதைக்கும் வினுவுக்கு விடை தேடுவதைப் போல, இரத்தம் சுரந்து சிவந்த கண்களால் அழுத்தமானியை உற்று

நோக்கினான். அதன்பின், நம்பிக்கையில்லாத ஏக்கத்திலும் கோபவெறியிலும் ஆணையிட்டுச் சபித்தான்.

ஆர்த்தியோம் மீண்டும் கெண்டியிலிருந்து தண்ணீர் குடித்தான். இருவரும் ஒரே விஷயத்தைப் பற்றிச் சிந்தித்தனர். ஆனால் இருவரில் எவராலும் திட்டமான ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. ''தோழா! போல்ஷெவிக் கட்சியையும் கம்யூனிஸத்தையும் பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்று ஷுஹ்ராய் கேட்ட கேள்வியும், ''நான் எப்பொழுதும் உதவச் சித்தமாயிருக்கிறேன். நீ என்னை நம்பலாம்'' என்று அவன் தந்த பதிலும் ஆர்த்தியோம் நினைவுக்கு வந்தன.

''தண்டனைப் படையை ஏற்றிச் செல்வது தான் உதவி செய்யும் அழகா!'' என்று அவனே சிந்தித்தான். இப்பொழுது, டிரைவர் கருவிப் பெட்டிக்கு மேல் வளைந்து, ஆர்த்தியோம் காதில் மிகுந்த கடினத்துடன் கூறினான்:

''அவனைத் தீர்த்துக்கட்ட வேண்டும். புரிந்ததா?''

ஆர்த்தியோம் அதிர்ச்சியடைந்தான். டிரைவர் பற்களைக் கடித்துக்கொண்டே கூறினான்:

''வேறுவழி இல்லை. அவனை மண்டையிலடித்துக் கொல்ல வேண்டும். அதன் பிறகு ஓட்ட வேகத்தைக் கட்டுப்படுத்தும் இயக்குக் கருவியையும், நெம்புகோல்களையும் உலைக்குள் தள்ளி விட்டு, வண்டியின் வேகத்தை நன்கு குறைத்து

விட்டு வண்டியிலிருந்து இறங்கி ஓடிவிடவேண்டும்.''

ஒரு பெரிய பளு தோளிலிருந்து இயங்கிய மாதிரி, ஆர்த்தியோமுக்குத் தோன்றியது.

''சரி'' என்ருன் அவன்.

புருஸ்ஷாக் பக்கம் திரும்பி, அவர்களுடைய முடிவை ஆர்த்தியோம் எடுத்துரைத்தான்.

புருஸ்ஷாக் உடனடியாகப் பதில் கூறவில்லை. அவர்கள் மூவரும் ஒரு உயிருக்கு ஆபத்தான காரியத்தில் ஈடுபட இருக்கிருர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் குடும்பத்தைப்பற்றி எண்ண வேண்டும். டிரைவர் குடும்பம்தான் மிகப் பெரிது. அவன் ஒன்பது பேருக்குச் சோறுபோடவேண்டும். ஆனல் ரயிலைச் சேர வேண்டிய இடத்துக்குக் கொண்டு போக முடியாது என்பதை மூவரும் தெளிவாக உணர்ந்தனர்.

''அப்படியே ஆகட்டும்! நான் உங்களுடன். அவனை யார்...?'' என்று புருஸ்ஷாக் முடிவில்லாத வாக்கியத்துடன் தன் பதிலைத் தெரிவித்தான். அந்த அரைகுறை வாக்கியத்தின் அர்த்தம் ஆர்த்தியோமுக்கு நன்ருகப் புரிந்ததால் அவன் அதை முடிக்கவில்லை.

இயக்குக் கருவியைக் கவனித்துக் கொண்டிருந்த டிரைவர் பக்கம் ஆர்த்தியோம் திரும்பினன். புருஸ்ஷாக்கின் சம்மதத்தைச் சைகை மூலம் தெரிவித்தான். ஆனல் தீராத ஒரு பிரச்சினையால் கலக்கமடைந்து, அவன் கிழவனை நெருங்கினன்.

''எப்படிச் செய்வது?'' என்று கேட்டான்.

டிரைவர் ஆர்த்தியோமை நோக்கினுன்.

''நீயே தொடங்கு. நீதான் பலசாலி. நாங்கள் அவனுக்குக் கடப்பாரையால் சரியான அடி கொடுப்போம். அத்துடன் காரியம் முடிந்துவிடும்'' என்று உள்ளக் கிளர்ச்சிமிகுந்தவஞகக் கிழவன் பேசினுன்.

ஆர்த்தியோம் புருவத்தைச் சுளித்தான்.

''என் கைகள் எழ மறுக்கிறது. என்னுல் முடியாது. சிந்தித்துப் பார்த்தால், அவனைக் குற்றங்கூற முடியாது. அவனும் பலாத்காரத்துக்கு உட்பட்டவன்தானே?''

கிழவனின் கண்களில் செவ்வொளி வீசியது.

''அவனைக் குற்றம் சொல்ல முடியாதென்று கூறுகிருயா? இந்த வேலையைச் செய்யும்படி நாமும் கட்டாயப்படுத்தப்படுவதால், நம்மையும் குற்றம் சொல்ல முடியாது. ஆனுல் ஒரு தண்டனைப்படை ரயிலை ஓட்டிச் செல்கிருேமென்பதை மறந்துவிடாதே. கொரில்லா வீரர்களைச் சுட்டுக் கொல்வதற்காக இந்த நிரபராதிகள் கிளம்பியிருக்கிருர்கள். அப்படியானுல் கொரில்லா வீரர்களையா பழிக்கவேண்டும்? தம்பீ, அதெல்லாம் இல்லை. உனக்கு ஏறுபோல் பலம் இருந்தபொழுதிலும், அதனுல் பயன் எதுவுமில்லை'' என்றுன் டிரைவர்.

''சரி, சரி!'' என்று ஆர்த்தியோம் படாரென்று கூறினுன். உடனே அவன் கடப்பாரையைக்

கரத்தில் எடுத்தான். ஆனால் டிரைவர் அவனது காதுக்குள் பேசத் தொடங்கினான்.

''நான் அதைச் செய்கிறேன். காரியம் கரு ராக நடப்பதற்கு அது உத்திரவாதம். நீ அகப் பையை எடுத்துக்கொண்டு கரிப்பெட்டியிலிருந்து கரியைத் தள்ளுவதற்காக ஏறு. அவசியமானால் அவனுக்கு அகப்பையால் ஒரு அடி கொடு. நான் கரியை உடைப்பது மாதிரிப் பாசாங்கு செய்கி றேன்.''

இதை புருஸ்ஷாக்கும் கேட்டுக்கொண்டு தலை அசைத்தான்.

''கிழவனே! நீ சொல்வது சரிதான்'' என்று சொல்லிவிட்டு இயக்குக் கருவியின் பக்கத்தில் நின்று கொண்டான்.

சிவப்புப் பட்டையுடன் கூடிய ராணுவக் குல்லாவை அணிந்திருந்த ஜெர்மானிய சிப்பாய் பாதங்களுக்கிடையே நிறுத்திப் பிடித்த துப்பாக்கி யுடன், சுருட்டுப் புகை பிடித்துக்கொண்டு, கரிப் பெட்டியின் ஓரத்தில் உட்கார்ந்திருந்தான். எஞ்சினை ஓட்டிக் கொண்டு சென்ற மூவரையும் எப்பொழுதாவது நோக்கினான்.

ஆர்த்தியோம் கரியைத் தள்ள ஏறியபொ ழுது, பாராக்காரன் அதைப் பொருட்படுத்த வில்லை. கரிப்பெட்டியின் ஓரத்திலிருந்த பெரிய கரிகளை வேண்டுவதுபோல டிரைவர் பாராக்கார னுக்குச் சைகை காட்டி இடத்தை விட்டு அகலும் படி வேண்டினான். அவனும் பெட்டியிலிருந்து இறங்கி, எஞ்சினின் கதவை நோக்கி நடந்தான்.

கடப்பாரைத் தாக்குதலால் பாராக்காரனது கபாலம் உடைந்து கிளம்பிய ஒலியைக் கேட்ட வுடன் பழுக்கக் காய்ச்சிய இரும்பைத் தொட்ட மாதிரி, ஆர்த்தியோமும் புருஸ்ஷாக்கும் அதிர்ச்சி யடைந்தனர். சிப்பாயின் உடல் கீழே விழுந்தது. டிரைவரின் சிற்றறைக்குச் செல்லும் வழியை அடைந்தது.

கம்பளிக் குல்லாய் வழியாகஇரத்தம் வேகமாக ஒழுகிப் பெருகியது. கரிப்பெட்டியின் இரும்பு சுவர் மீது மோதிய துப்பாக்கி கடகட வென்ற சப்தத்தை உண்டாக்கியது.

''முடிந்தது!'' என்று குசுகுசுவென்று கூறிக் கொண்டே டிரைவர் கடப்பாரையைக் கீழே போட்டான். ''இனி நாம் பின்னேக்கிச் செல்ல முடியாது'' என்றுன். அவனது முகம் வலிப்பு கண்டமாதிரி கோரமாக மாறியது.

அவனது நா தழுதழுத்தது; பிறகு, மூவரை யும் சுற்றிச் சூழ்ந்த அமைதியைக் குலேப்பதற் காக அவன் உரக்கக் கூவினுன்:

''இயக்குக் கருவியின் திருகை அகற்றுங்கள்! சீக்கிரம்!''

பத்து நிமிடங்களில் காரியம் பூர்த்தியா யிற்று. கட்டுப்பாடில்லாததாகி விட்ட எஞ்சினு டைய வேகம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கியது.

வழியில் இருந்த மரங்களின் கரிய, பெரிய வடிவங்கள், எஞ்சின் ஒளி வட்டத்துக்குள் சிக்கின; ஆனுல் சடுதியில் அவை ரயிலுக்குப் பின்னுல்

நிலவிய கும்மிருட்டுக்குள் மறைந்தன. இரயிலின் முன்புற விளக்குகள் இரவின் இருளைத் துளைக்க அரும்பாடு பட்டன. கனமான இருள்திரையைக் குத்திக் கிழித்தன. என்ன பயன்? எங்கும் படர்ந்த அந்த இரவின் இருளில் சுமாராகப் பத்து மீட்டர் தூரத்துக்குத்தான் அவற்றின் வெற்றி. எஞ்சின் தனது கடைசி வலிமையைச் செலவிடுவது போல் தன் சுவாசத்தைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டே வந்தது.

''மகனே, குதி!'' என்று டிரைவர் பின்னுலிருந்து கூறியதைக் கேட்டான் ஆர்த்தியோம். கைப்பிடியை விட்டான். ரயிலின் வேகத்தால் அவனது வலிய உடல் முன்னேக்கிச் செல்ல, அவனது பாதங்கள் தரையைத் தொட்டுக்கொண்டு நின்றன. ஓரிரண்டு அடிகள் ஓடியவுடன் அவன் சுருண்டு விழுந்தான்.

அதே சமயத்தில், இன்னும் இரண்டு உருவங்கள் எஞ்சினிலிருந்து குதித்தன.

புருஸ்ஷாக் இல்லத்தை இருள் கவ்வியிருந்தது. ஸெர்யோஷாவின் தாயாரான அன்தனீனு வஸீலியெவ்னு கடந்த நான்கு நாட்களாக மெய் வருந்தி மனங்குமைந்து துயருற்றிருந்தாள். அவளது கணவனிடமிருந்து ஒரு தகவலும் இல்லை. அவன் நான்கு நாட்களுக்கு முன் ஆர்த்தியோம், பொலென்தோவ்ஸ்க்கிய் ஆகியோருடன் ரயிலை ஓட்டிச் செல்ல வேண்டுமென்று ஜெர்மானியரால் கட்டாயப்படுத்தப்பட்டான் என்பது அவளுக்குத்

தெரியும். நேற்றைய தினம், கேத்மான்காரர்கள் மூவர் அவளது வீட்டுக்கு வந்து அவளிடம் முரட்டுத்தனமாகக் கேள்வி கேட்டனர், கேவலமாகப் பேசினர்.

அவர்களது கூற்றிலிருந்து ஏதோ தகராறு நடந்திருக்கிறது என்று அவள் பொதுப்படையாகத் தெரிந்துகொண்டாள். மிகுந்த மனவேதனை அடைந்தாள். அந்தக் காவலாளிகள் தொலைந்தவுடன் அவள் தலையில் தலைத் துணியைக் கட்டிக் கொண்டு, கர்ச்சாகினுவைப் பார்க்கச் சென்றாள். அவளிடமிருந்து ஏதாவது சேதி கிடைக்கும் என்பது அன்தனீனு வஸீலியெவ்னுவின் நம்பிக்கை.

அவளது மூத்த பெண் வால்யா சமையலறையைச் சுத்தம் செய்துகொண்டிருந்தாள். தாயார் வெளியே செல்வதைக் கவனித்த அவள் ''அம்மா, ரொம்ப தூரமா?'' என்று கேட்டாள்.

''கர்ச்சாகின் வீட்டுக்குச் செல்கிறேன்'' என்றாள் தாய். அவளது கண்களில் நீர்சுரந்து நிரம்பியது. ''ஒருவேளை, அவர்களுக்கு அப்பாவைப் பற்றி ஏதாவது தெரிந்திருக்கலாம். ஸெர்யோஷா வீட்டுக்கு வந்தால், டிரைவர் வீட்டுக்குப் போய் வரச் சொல்.''

வால்யா தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.

''அம்மா, அழாதே, வருந்தாதே'' என்று கூறி அன்னையை வழியனுப்பினாள்.

எப்பொழுதும் போல, மரீயா யாக்கொவ்லெவ்னு அன்தனீனு வஸீலியெவ்னுவுக்கு உளங்

கனிந்த நல்வரவு கூறினாள். ஒருத்தி இன்னொருத்தியிடமிருந்து தகவல் கிடைக்குமென்று நம்பினாள். ஆனால் அவர்கள் ஓரிரு வார்த்தைகள் பேசியதும், இருவருக்கும் அந்த நம்பிக்கை மறைந்தது.

கர்ச்சாகின் வீட்டிலும் இரவில் சோதனை நடந்தது. சிப்பாய்கள் ஆர்த்தியோமைத் தேடிக் கொண்டு அங்கு வந்தனர். மகன் வீட்டுக்கு வந்தால் இராணுவத் தலைமைக் காரியாலயத்துக்குத் தாமதமில்லாமல் தகவல் அனுப்ப வேண்டும் என்று மரீயா யாக்கொவ்லெவ்னாவிடம் கூறிச் சென்றனர்.

அந்த சோல்ஜர்களைக் கண்டதும், மரீயா யாக்கொவ்லெவ்னா பயந்து கதிகலங்கிவிட்டாள். அவள் வீட்டில் தனியாக இருந்தாள். ஏனெனில் பாவெல் வழக்கம் போல் மின்சார நிலையத்தில் இரவு ஷிப்ட் வேலைக்குப் போய்விட்டான்.

பாவெல் வேலையை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பியதும் தாயாரிடமிருந்து சோதனையைப் பற்றி அறிந்து கொண்டான். அண்ணனைப் பற்றிய கவலை அவனை உள்ளூற அரித்துத் தின்றது. அண்ணனுக்கும் தம்பிக்கும் குணத்தில் வேற்றுமைகள் உண்டு என்பது உண்மைதான். ஆர்த்தியோம் பற்றுதல் இல்லாதவன் மாதிரித் தோற்றமளித்ததும் உண்மை. ஆனால் அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையே ஆழ்ந்த பாசம் இருந்தது. அது புறக்குறிகளில் பிரதிபலிக்காத அன்பு ஆகும். ஆனால் அண்ணனுக்காக எத்தகைய தியாகத்தை

யும் தன்னால் தயக்கமின்றிச் செய்ய முடியும் என்பதைப் பாவெல் அறிந்திருந்தான்.

ஓய்வு எடுக்காமல், களைத்துத் திரும்பிய பாவெல் ஷுஹ்ராயைப் பார்ப்பதற்காக ஸ்டேஷனின் டெப்போவுக்கு ஓடினான். அங்கு ஷுஹ்ராயைக் காணவில்லை. அவனுக்கு அறிமுகமான இதரத் தொழிலாளர்களால், காணாமற்போன மூவரைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியவில்லை. எஞ்சின் டிரைவர் பொலென்தோவ்ஸ்க்கியின் குடும்பத்துக்கும் ஏதும் தெரியவில்லை. டிரைவரின் கடைசி மகன் பொரீஸ் என்பவனை வாசற்கத வருகில் சந்தித்தபொழுது, அவர்களது வீடும் இரவில் சோதனைக்குள்ளாயிற்று என்பதைத்தான் பாவெல் தெரிந்துகொண்டான். சோல்ஜர்கள் டிரைவரைத் தேடிக் கொண்டிருந்தனர்.

அன்னையிடம் கூறுவதற்கு எத்தகைய தகவலுமில்லாமல் பாவெல் வீட்டுக்குத் திரும்பினான். ஓரேயடியாகக் களைத்துப் போயிருந்த பாவெல் படுக்கையில் விழுந்தான்; உடனடியாக அமைதியற்ற, கனவுகளுடன் கூடிய உறக்கத்தில் ஆழ்ந்தான்.

கதவைத் தட்டும் சப்தம் கேட்டவுடன் வால்யா திரும்பிப் பார்த்தாள்.

''யார் அங்கே?'' என்று கேட்டுக்கொண்டே அவள் தாழ்ப்பாளைத் திறந்தாள்.

கதவு திறக்கப்பட்டது. தலைவிரி கோலமாய், சிவப்புக் கிழங்குத்தலை கிலீம் நின்றுகொண்டிருந்

தான். அவன் ஓடோடி வந்திருக்கிறுன் என்பது தெளிவாகத் தெரிந்தது. அவன் மேல்மூச்சுக் கீழ் மூச்சு வாங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய முகம் சிரமத்தால் சிவந்திருந்தது.

''உன் தாயார் வீட்டில் இருக்கிறுளா?'' என்று அவன் வால்யாவை வினவினுன்.

''இல்லே. வெளியே போயிருக்கிறுள்.''

''எங்கே?''

''பாவெல் வீட்டுக்கு என்று நினைக்கிறேன்.''

கிலீம் பாய்ந்தோடப் பார்ப்பதைக் கண்ட வால்யா அவனது சட்டைக் கையைப் பற்றிக் கொண்டாள்.

கிலீம் அவளேத் தயக்கத்துடன் நோக்கினுன்.

''உன் தாயாரிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்.''

''என்ன விஷயம்?'' என்று கேட்டாள் வால்யா. ''என்ன விஷயமென்று உடனே சொல், செந் தலேக் கரடியே! என்னே ஏன் குழப்பமடையச் செய்கிறுய்?'' என்று அதிகாரக் குரலில் அவனேத் தூண்டித் தூண்டி கேட்கத் தொடங்கினுள்.

கிலீம் ஷூஹ்ராயின் எச்சரிக்கைகளே மறந்தான். குறிப்பை அன்தனீனு வஸீலியெவ்னுவிடம் தான் கொடுக்க வேண்டும் என்ற கண்டிப்பான கட்டளேயை மறந்தான். சட்டைப்பையிலிருந்து அழுக்குப்படிந்த துண்டுக் காகிதம்ஒன்றை எடுத்து, வால்யாவிடம் கொடுத்தான். ஸெர்யோஷாவின் அழகுத் தங்கையிடம் அவன் எந்த விஷயத்திலும் மறுப்புச் சொல்ல முடியாது. உண்மையில்,

அவனது இதயத்தில் அவளுக்கு ஒரு தனியான இடம் உண்டு. ஆனால் மிக நாணமுள்ள அவன், தனக்கு வால்யாவைப் பிடித்திருக்கிறது என்ற உண்மையை எந்தக் காரணம் கொண்டும், தன் உள்மனதிற்குக்கூட சொல்லியிருக்க மாட்டான்.

''அன்புள்ள அன்தனீனா! கவலை வேண்டாம்! எல்லாம் நன்றாக நடந்தேறியுள்ளன. நாங்கள் யாவரும் உயிருடன் பாதுகாப்பாக இருக்கிறோம். சீக்கிரத்தில் உங்களுக்கு மேற்கொண்டு செய்தி கிடைக்கும். எல்லாம் நல்லபடியாக உள்ளனவென்றும் அவர்கள் கவலைப்பட வேண்டாமென்றும் மற்றவர்களும் அறிந்து கொள்ளட்டும். இந்தக் கடிதத்தை எரித்துவிடு—ஸ ஹ ா ர்.''

வால்யா கிலீமிடம் பாய்ந்து சென்றாள்.

''என் அன்பான செந்தலைக் கரடியே! இந்தக் கடிதம் உனக்கு எங்கு கிடைத்தது? கொடுத்தது யார்?'' என்று கேட்டுக்கொண்டே, அவள் கிலீமை குலுக்கினாள். எனவே அவன் தன்னை மறந்து இரண்டாவது தவறையும் செய்தான்.

''ஸ்டேஷனில் ஷுஹ்ராய் கொடுத்தார்'' என்று கூறியபிறகே, தான் செய்த தவறை உணர்ந்தான். ''உன் தாயாரைத் தவிர வேறு யாரிடமும் கொடுக்கக் கூடாதென்று அவர் என்னிடம் கூறினார்'' என்று அவன் மேலும் குறிப்பிட்டான்.

வால்யா சிரித்தாள். ''பரவாயில்லை. நான் எவரிடமும் சொல்லமாட்டேன். செந்தலையனே!

பாவெல் வீட்டுக்கு ஓடு. அங்கு என் தாயாரைப் பார்க்கலாம்'' என்று கூறிவிட்டு அவனை மெல்லத் தள்ளினுள்.

ஒரு விநாடிக்குப் பின் கிலீமின் செந்தலை தோட்டக் கதவு வழியாக மறைந்தது.

மூன்று ரயில்வே தொழிலாளர்களில் ஒருவர்கூட வீட்டுக்குத் திரும்பவில்லை. மாலையில் ஷுஹ்ராய் பாவெலின் வீட்டுக்கு வந்து, ரயிலில் நடந்ததைப்பற்றி மரீயா யாக்கொவ்லெவ்னுவிடம் கூறினுன். பீதியடைந்த தாய் அச்சம் நீங்கித் தைரியம் பெறச் செய்வதற்கு அவன் முடிந்த அளவுக்கு முயன்ருன். புருஸ்ஷாக்கின் மாமன் ஒரு தொலைதூரக் கிராமத்தில் வசிப்பதாகவும் அங்கு மூவரும் பத்திரமாக இருப்பதாகவும் அவன் கூறினுன். அவர்கள் உடனே திரும்பி வர முடியாதென்பது உண்மை. ஆனுல் ஜெர்மானியர் எக்கச்சக்கமான நிலைமையில் சிக்கிக் கொண்டிருக்கிருர்கள். எந்த நேரத்திலும் நிலைமை மாறுதல் அடையலாம்'' என்று ஷுஹ்ராய் விளக்கினுன்.

இதுவரை நடந்த பலவிதமான சம்பவங்களாலும், ஓடிப்போன மூவர்களின் குடும்பங்கள் முன்பைவிட நெருங்கிய உறவு கொண்டன. அந்த மூவரிடமிருந்து அருமையாகக் கிடைத்த குறிப்புக்களை மூன்று குடும்பத்தினரும் ஆவலுடன் படித்துப் பூரித்தனர். ஆனுல் ஓடியவர்கள் இல்லாததால், அந்த வீடுகள் வெறிச்சென்று இருந்தன; உயிரோ, ஒளியோ இல்லை எனத் தோன்றியது.

ஒருநாள், ஷுஹ்ராய் தற்செயலாகப் போவது மாதிரி, டிரைவர் பொவென்தோவ்ஸ்க்கிய் வீட்டுக்குச் சென்று, டிரைவரின் மனைவியிடம் கொஞ்சம் பணம் கொடுத்தான்.

''உங்கள் கணவன் அனுப்பிய பணம். இதைப் பற்றி எவரிடமும் பேசாதீர்கள்'' என்று ஷுஹ்ராய் எச்சரித்தான்.

நன்றி உணர்வுடன் கிழவி அவனது கரத்தைப் பிடித்துக்கொண்டாள்.

''வந்தனம். எங்களுக்கு இந்தப் பணம் அவசரமாகத் தேவைப்படுகிறது. குழந்தைகள் உண்பதற்கு ஒன்றுமில்லை.''

உண்மையில், புல்காக்கோவ் விட்டுச் சென்ற நிதியிலிருந்து ஷுஹ்ராய் அந்தப் பணத்தை உதவினான்.

''சரி, அடுத்தபடி என்ன நடக்கிறதென்று பார்ப்போம்!'' என்று ஏகாந்தமாகப் பேசிக்கொண்டே, ஷுஹ்ராய் ஸ்டேஷனுக்கு நடந்தான். ''சுட்டுக்கொல்வோம் என்று அச்சுறுத்தி ஜெர்மானியர் வேலை நிறுத்தத்தைச் சீர்குலைத்தாலும், தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினாலும், அவர்களது உள்ளத்தில் தீயைக் கிளறியாகிவிட்டது. இனி அந்தத் தீயை அணைக்க எவராலும் முடியாது. அந்த மூவரைப் பொறுத்தவரை, அவர்கள் திண்மையான உள்ளம் படைத்த உண்மையான தொழிலாளர்கள்!''

இவ்வாறு எண்ணியபொழுது, ஷுஹ்ராய் மனம் பூரித்தது.

வரொபியோவா பால்கா என்ற கிராமத்தின் வெளிப்புறத்தில், கரிபடிந்த தனது சுவற்றைப் பாதைக்குக் காட்டிக் கொண்டு அமைந்திருந்தது அந்தக் கொல்லன் பட்டறை. அங்கே பொலென்தோவ்ஸ்க்கிய், ஜுவாலையுடன் எரியும் உலைக்கு முன் நின்ருன்; தீயின் வெளிச்சத்தைத் தாங்க முடியாமல், அவனது கண்கள் குறுகின. அவன் இடுக்கியால் பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

மேலேயிருந்த குறுக்குச் சட்டத்திலிருந்து தொங்கிய துருத்தியால், ஆர்த்தியோம் காற்று அடித்துக்கொண்டிருந்தான்.

''இந்தக் காலத்தில், திறமையுள்ள தொழிலாளி, கிராமங்களில் கஷ்டப்படத் தேவையில்லை. எவ்வளவு வேலை வேண்டுமானுலும் கிடைக்கும்'' என்று எஞ்சின் டிரைவர் தாடியை உருவிக் கொண்டு மகிழ்ச்சி ததும்பக் கூறினுன். ''இன்னும் ஓரிரண்டு வாரங்கள் இம்மாதிரி வேலை செய்தால், வீட்டு ஜனங்களுக்கு ஏதாவது உணவுப் பொருள் அனுப்ப முடியும். மகனே, விவசாயி எப்பொழுதுமே கொல்லனைக் கொண்டாடுவான். நாம் முதலாளிகள் மாதிரி வயிருர உண்டு வாழலாம்! ஹி! ஹி!!ஹி!!! புருஸ்ஷாக்குக்கும் நமக்கும் கொஞ்சம் வேற்றுமை இருக்கிறது. அவன் விவசாயிகளுடனேயே சுற்றிக் கொண்டிருக்கிருன். அவனுடைய மாமா மூலம் அவன் நிலத்திலேயே வேரூன்றிவிட்டான். நான் அவனைப் பழித்துக் கூறவில்லை. ஆர்த்தியோம், உனக்கும் எனக்கும் கலப்

யையும் கிடையாது, நிலமும் கிடையாது. உடல் வலுவும் கைத்திறனும்தான் உள்ளன! நாம் சிறிதளவுகூட சொத்து இல்லாதவர்கள், உழைப்புச் சக்தியை விற்றுப் பிழைப்பவர்கள்! ஆம்! நாம் கலப்பில்லாத தூய பாட்டாளிகள்! புருஸ்ஷாக்கோ கிராமத்தில் ஒரு காலும் எஞ்சினில் ஒரு காலுமாக இருக்கிறுன்'' என்று கூறிவிட்டுப் பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் குறடால் பற்றிப் புரட்டினுன். பிறகு சிந்தனை நிறைந்த குரலில் கூறினுன்: ''மகனே, நம்மைப் பொறுத்தவரை, நிலைமை மோசமாயிருப்பதாகத் தோன்றுகிறது. ஜெர்மானியர் சீக்கிரத்தில் தோல்வியடையவில்லையானுல், நாம் எக்கத்தெரீனஸ்லாவ் அல்லது ரஸ்தோவுக்குப் போய்விட வேண்டும். இல்லாவிட்டால் நமக்கே தெரியாமல், நாம் பிடிபட்டு, விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே மரத்தில் தொங்குவோம்.''

''நீங்கள் சொல்வது முற்றிலும் சரி!'' என்று ஆர்த்தியோம் தாழ்ந்த குரலில் கூறினுன்.

''நம் மக்கள் ஊரில் எப்படி இருக்கிறுர்களோ? அவர்களை எதிர்ப்புரட்சி சிப்பாய்கள் சும்மா விடுவார்களா?''

''ஆமாம், அப்பா! மிகவும் குழப்பமான நிலையிலிருக்கிறேும். வீட்டுக்குத் திரும்ப முடியும் என்ற எண்ணத்துக்கே இனி இடமில்லை!'' என்றுன் ஆர்த்தியோம்.

எஞ்சின் டிரைவர் தகதகவென்று இருந்த

நீலம் பாய்ந்த இரும்பை உலையிலிருந்து எடுத்து, சாமர்த்தியமாக அடைகல்மீது வைத்தான்.

''இதை அடி, மகனே!''

ஆர்த்தியோம் ஒரு கனமான சம்மட்டியை எடுத்துத் தலைக்குமேல் சுற்றி, அடைகல் மீது இருந்த இரும்பைப் பலமாக அடித்தான். பேரொளித் தீப்பொறிகள் நாலாபுறமும் சீறிக்கொண்டு சிதறின. அவை தொடர்ந்தாற்போல் கிளம்பிச் சிதறி, கம்மாலையின் இருண்ட மூலைகள்கூட கண நேரத்துக்கு வெளிச்சம் பெறச் செய்தன.

ஆர்த்தியோம் சம்மட்டியால் அடிப்பதற்கு இடையே, கிழவன் இரும்பைப் புரட்டிக்கொண்டே இருந்தான். இரும்பு, கனிந்த மெழுகுமாதிரி நினைத்தவண்ணம் படர்ந்து தட்டையாயிற்று.

கம்மாலையின் கதவுகள் வழியாக இருண்ட இரவின் கத கதப்பான காற்று உள்ளே வந்து கொண்டிருந்தது:

கீழே கறுத்துப் பரந்த ஏரி, அதை நாலா பக்கங்களிலும் சூழ்ந்திருந்த பைன் மரங்கள் தங்களது உயர்ந்த முடிகளை ஆட்டி அசைத்த வண்ணமாயிருந்தன.

அதைக் கண்ட தோன்யா, ''உயிர்ப் பிராணிகள் மாதிரியே நடந்து கொள்கின்றன!'' என்று எண்ணினாள். அவள் ஏரியின் கருங்கல் கரையில் உள்ள புல்லால் மூடப்பட்ட திடலில் படுத்திருந்தாள். அவளுக்கு மேலே, அந்தத் திடலுக்கு அப்பால் பைன் மரக் காடு. கீழே, அந்தச் செங்குத்

தான கரையின் அடிவாரத்தில் ஏரி இருந்தது. ஏரியை நெருங்கியுள்ள பாறைகளின் நிழல்கள் ஏரியில் விழுந்து அதன் கரிய நீரை மேலும் கருமையாக்கின.

இந்தப் பழைய கற்சுரங்கம் ஸ்டேஷனிலிருந்து ரொம்ப தூரம் அல்ல. இது தோன்யாவுக்குப் பிடித்தமான இடம். அவள் அடிக்கடி இங்கு வந்தாள். கல்வெட்டி எடுத்துப் பள்ளமான இடங்களில், நீர் ஊற்றுகள் சுரந்தன. அந்த மாதிரிப் பள்ளங்களில் மூன்று ஏரிகள் இப்பொழுது அமைந்துவிட்டன. ஏரிக் கரையோரத்திலிருந்து நீர் தெறிக்கும் ஒலி கேட்டவுடன், தோன்யா தலையை உயர்த்தினுள். கிளைகளை விலக்கிவிட்டு, ஒலி வந்த இடத்தை அவள் நோக்கினுள். வெயிலில் பழுப்பேறிய ஒருவன் லாகவமாக வளைந்து நெளிந்து கரையோரத்திலிருந்து வேகமுடன் நீந்திச் செல்வதைக் கண்டாள். நீச்சலடிப்பவனது பழுப்பு முதுகையும் கரிய மயிரையும் அவள் கண்ணுற்ருள். அவன் ஒரு வால்ரஸ் போன்று நீரில் விளையாடினுன்; உருண்டான், கரணம் போட்டான்; அடியாழத்துக்கு மூழ்கிச் சென்ருன்; பிறகு அவன் வானத்தைப் பார்த்துக்கொண்டே ஏரியில் மிதந்தான். அப்பொழுது அவனது கைகால்கள் நீண்டு கிடந்தன; உடல் சற்று வளைந்திருந்தது; கதிரவன் வெப்பம் தாங்காமல் அவன் கண்கள் கூசின.

தோன்யா தான் விலக்கிய கிளைகளை விட்டுவிட்டுத் தன் இருக்கையில் சாய்ந்தாள். ''நீந்து

வதைப் பார்ப்பது நாகரிகம் அல்ல'' என்று எண்ணியவளாக நகைத்துக் கொண்டே, தன் படிப்பை மீண்டும் தொடங்கினாள்.

வீக்தர் கொடுத்த புத்தகம் அது. தோன்யா அந்தப் புத்தகத்தை மெய்மறந்து படித்துக் கொண்டிருந்தாள். எனவே, காட்டிற்கும் அவளிருந்த சிறிய திடலுக்கும் இடையே உள்ள கற்குன்றுகள் மீது ஒருவன் ஏறியதை அவள் கவனிக்கவில்லை. ஏறிவந்தவன் கால்பட்டு அவள் புத்தகத்தின்மீது கூழாங்கல் ஒன்று விழுந்த பொழுதுதான், எதிர்பாராத வண்ணம் நடந்த அந்த நிகழ்ச்சியால் ஏற்பட்ட அதிர்ச்சியில் தன் தலையைத் தூக்கி எதிரே நின்ற பாவெலைக் கண்டாள். அவனும் தோன்யாவைக் கண்டு திடுக்கிட்டான்; அவனுக்கு ஏற்பட்ட குழப்பத்தில் அந்த இடத்தைவிட்டுப் போகத் திரும்பினான்.

அவனது தலைமயிர் நனைந்திருப்பதைக் கண்ட தோன்யா, ''இவனைத்தான் ஏரியில் பார்த்திருக்க வேண்டும்'' என்று ஊகித்தாள்.

''நான் உங்களை அச்சுறுத்திவிட்டேனா? நீங்கள் இங்கு இருப்பீர்களென்று நான் எதிர்பார்க்கவில்லை'' என்று பாவெல் தோன்யாவிடம் கூறிக் கொண்டே துருத்திக் கொண்டிருந்த பாறை ஓரத்தைப் பிடிப்பதற்காகக் கையை நீட்டினான்.

''உங்களால் தொந்தரவு எதுவும் இல்லை. உங்களுக்கு விருப்பம் இருந்தால், கொஞ்சநேரம் இங்கு இருந்து என்னுடன் பேசலாம்.''

பாவெல் அவளை வியப்புடன் பார்த்தான்.

''நாம் பேசுவதற்கு என்ன இருக்கிறது?''

தோன்யா புன்னகை செய்தாள்.

''நீங்கள் இங்கு உட்காரலாம்!'' என்று கூறி அவள் ஒரு கல்லைக் காட்டினாள். ''உங்கள் பெயர் என்ன?''

''பாவ்கா கர்ச்சாகின்.''*

''என் பெயர் தோன்யா. ஆக, நாம் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிவிட்டோம்.''

பாவெல் குல்லாயை முறுக்கிய படியே திகைத்து நின்றான்.

தோன்யா அமைதியைக் குலைத்தாள்.

''உங்களைப் பாவ்கா என்று கூப்பிடுகிறார்கள்? அது நன்றாகவில்லை. பாவெல் என்ற பெயர் தான் எப்பொழுதுமே இனிமையாக இருக்கும். நான் உங்களைப் பாவெல் என்றுதான் கூப்பிடுவேன்'' என்று கூறினாள். ''நீங்கள் நீந்துவதற்கு இங்கு அடிக்கடி வருவீர்களா?'' என்று கேட்க அவளுக்கு விருப்பம். ஆனால் அவன் நீச்சலடித்ததைப் பார்த்ததாக ஒப்புக்கொள்ள அவளுக்கு இஷ்டமில்லை. எனவே, ''இந்தப் பக்கம் அடிக்கடி உலாவுவதற்கு வருவீர்களா?'' என்று அவள் கேட்டாள்.

''இல்லை. அடிக்கடி வருவதில்லை. ஓய்வு இருக்கும் பொழுது வருவேன்'' என்று பாவெல் விடை பகர்ந்தான்.

---

* **கர்ச்சாகின்** என்பது குடிப் பெயர். பாவெல் என்பது முதல் பெயர் பாவ்கா என்று அவனை ஏளனமாக அழைப்பார்கள்.

''அப்படியானால், நீங்கள் எங்காவது வேலை செய்கிறீர்களா?'' என்று அவள் மேலும் வினவினாள்.

''ஆமாம், மின்சார நிலையத்தில் ஸ்டோக்கராக வேலை பார்க்கிறேன்.''

''அவ்வளவு சாமர்த்தியமாகச் சண்டை போடுவதற்கு எங்கு கற்றுக்கொண்டீர்கள்? சொல்லமாட்டீர்களா?'' என்று அவள், எதிர்பாராதவிதமாய் வினவினாள்.

''என் சண்டைத் திறனைப்பற்றி உங்களுக்கு ஏன் கவலை?'' என்று பாவெல் தன்னையும் மீறிப் பொறிந்து தள்ளினான்.

தன் கேள்வி அவன் மனதை நோகச் செய்துவிட்டது என்பதைத் தோன்யா உணர்ந்துகொண்டாள். எனவே, ''பாவெல், கோபித்துக்கொள்ளாதீர்கள்! எனக்கு அது மிகவும் பிடித்து இருக்கிறது. அவ்வளவுதான். எத்தகைய குத்துவிட்டீர்கள்! சத்தியமாக, அவ்வளவு ஈவிரக்கமில்லாமல் தாக்கக்கூடாது!'' என்று கூறிவிட்டு பலமாகச் சிரித்தாள்.

''அதற்காக உங்களுக்கு என்ன வருத்தமா?'' என்று பாவெல் கேட்டான்.

''ஒருக்காலும் இல்லை. மாறாக, ஷுராவுக்ுத் தகுதிக்குத் தகுந்த பரிசு கிடைத்தது. அந்தச் சண்டையின் முடிவு எனக்குப் பெருத்த திருப்தியை அளித்தது. நீங்கள் அடிக்கடி சண்டை போடுகிறீர்கள் என்று கேள்விப்படுகிறேனே, உண்மைதானா?''

''அப்படிச் சொல்வது யார்?'' என்று பாவெல் ஆவலுடன் கேட்டான்.

''சண்டை போடுவதுதான் உங்களது தொழில் என்று வீக்தர் சொல்கிருன்.''

பாவெல் முகம் கறுத்தது.

''வீக்தர் ஒரு போக்கிரி, சோம்பேறி. அன்று அவனுக்குத் தக்கத் தண்டனை கிடைக்கவில்லை என்பதற்கு அவன் நன்றி தெரிவிக்க வேண்டும். அவன் என்னைப்பற்றி உங்களிடம் சொன்னது என் செவியில் விழுந்தது. ஆனல் என் கரங்களை அசுத் தப்படுத்த நான் விரும்பவில்லை.''

''பாவெல், இந்த மாதிரி திட்டவேண்டாம். நன்ருயில்லை!'' என்று தோன்யா இடைமறித்துக் கூறினுள்.

பாவெலுக்கு மயிர் சிலிர்த்தது.

''நான் ஏன் இந்த அதிசயப் பெண்ணிடம் பேசத் தொடங்கினேன்? இவள் எனக்கு உத்திரவு பிறப்பிக்கிருள்! முதலில் 'பாவ்கா' வேண்டாம், 'பாவெல்' தான் தனக்குப் பிடிக்கிறது என்ருள். இப்பொழுது, என் பேச்சில் குற்றம் கண்டுபிடிக் கிருள்!'' என்று பாவெல் தனக்குள் எண்ணினுன்.

''வீக்தர் மீது உங்களுக்கு ஏன் விரோதம்?'' என்று தோன்யா கேட்டாள்.

''அவன் ஒரு பேடிப் பையன்; அம்மா மகன்; முதுகெலும்பு இல்லாதவன்! பிறரை மிதித்துத் துவைப்பதிலேயே எப்பொழுதும் குறியாயிருக்கிருன்; தான் பணக்காரனுயிருப்பதால் எதுவும் செய்யலாமென்று எண்ணுகிருன். இத்தகைய

பிறவிகளைப் பார்க்கும்பொழுது என் விரல்கள் அரிக்கின்றன! அவனது செல்வத்தைக் கண்டு அஞ்சுகிறவன் நான் அல்ல! அவன் என்னைத் தொட்டுப் பார்க்கட்டும்! அப்பொழுது, அவனுக்குச் சிறந்த சன்மானம் கொடுப்பேன்! அவனைப் போன்ற ஆட்களை முட்டி கொண்டுதான் திருத்தவேண்டும்.'' இவ்வாறு பாவெல் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான்.

வீக்தர் பெயரை ஏன் குறிப்பிட்டோமென்று தோன்யா வருந்தினாள். சீராட்டி வளர்க்கப்பட்ட அந்தப் பையனுக்கும் பாவெலுக்கும் பழைய தகராறுகள் பல இருப்பதை அவள் ஊகித்துக்கொண்டாள். அமைதியாக உரையாடும் நோக்கத்துடன், அவள் அவனுடைய குடும்பத்தைப் பற்றியும் வேலையைப் பற்றியும் விசாரிக்கத் தொடங்கிப் பேச்சைத் திருப்பினாள்.

தான் அறியாமலேயே, அந்த இடத்தை விட்டு அகல வேண்டுமென்ற எண்ணத்தையும் மறந்து, பாவெல் தோன்யாவின் வினாக்களுக்கு விபரமாகப் பதில் கூறத் தொடங்கினான்.

''நீங்கள் ஏன் தொடர்ந்து படிக்கவில்லை?'' என்று தோன்யா கேட்டாள்.

''பள்ளிக் கூடத்திலிருந்து தள்ளி விட்டார்கள்.''

''ஏன்?''

பாவெலின் முகம் சிவந்தது.

''பாதிரி வீட்டில் பிசைந்த மாவில் புகையிலைத் தூளைத் தூவினேன். அதனால் என்னைப்

பள்ளிக்கூடத்திலிருந்துவெளியேற்றிவிட்டார்கள். அந்தப் பாதிரி ஒரு இழிவான பிறவி. அவன் என்னை வாழ விடவில்லை'' என்று சொல்லி பாவெல் கதை முழுவதையும் விவரித்தான்.

தோன்யா சிரத்தையுடன் செவி கொடுத்தாள். பாவெலுக்குத் துவக்கத்திலிருந்த கூச்சம் மறைந்தது. ரொம்ப நாளாகத் தெரிந்தவளோடு பேசுவது மாதிரி, அவளுடன் பேசினான். அவன் பல விஷயங்களைப் பற்றிக் கூறினான். அண்ணன் மறைந்து இருப்பதைப் பற்றியும் சொன்னான். அந்தச் சிறு திடலில் அமர்ந்து, நேச உணர்ச்சித் ததும்பும் உரையாடலில் மெய் மறந்திருந்த அவர்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை. சில மணி நேரம் கழிந்த பிறகே, பாவெல் திடீரென்று எழுந்து நின்றான்.

''இதற்குள் நான் வேலைக்குப் போயிருக்க வேண்டும். இந்த நேரத்தில் நான் பாயிலர் அடுப்புகளைப் பற்றவைத்துக் கொண்டிருக்க வேண்டும். இங்கு உட்கார்ந்து கதைத்துக் கொண்டிருக்கிறேன். தனிலோ ரகளை செய்வான் என்பது நிச்சயம்'' என்று கூறி விட்டுக் கிளம்பினான். மீண்டும், சிறிது தயக்கத்துடன், '' சென்று வருகிறேன்! நான் நகரத்துக்குப் போகவேண்டும்'' என்று கூறினான்.

சொக்காயை இழுத்து விட்டுக் கொண்டு தோன்யாவும் கிளம்பினாள்.

''நானும் போகவேண்டும். சேர்ந்து போவோம்.''

''அதெல்லாம் முடியாது. நான் ஓடவேண்டும்.''

''ஓ சரி, நான் உங்களுடன் போட்டியிடுகிறேன். முதலில் போவது யார் என்று பார்ப்போம்.''

பாவெல் அவளை ஏளனத்துடன் பார்த்தான்.

''என்னுடன் போட்டியா? என்னுடனு ஓட முடியுமென்று எண்ணுகிறீர்கள்?''

''பார்ப்போம்! முதலில் இந்தத் திடலிலிருந்து சாலைக்குப் போவோம்.''

பாவெல் ஒரே பாய்ச்சலில் கற்பாறையைத் தாண்டினுன். தோன்யாவைக் கைகொடுத்து இறக்கினுன். இருவரும் சாலையை அடைந்தனர்.

''இனிக் கிளம்பலாம். ஒன்று, இரண்டு, மூன்று, ஓடு! என்னைப் பிடிக்க முயற்சி செய்யுங்கள்'' என்று கூறியபடியே அவள் ஓடினுள். புயல் வேகத்தில் விரைந்தாள். அவளது பூட்ஸின் அடித் தோல்கள் பளீரென்று மின்னின; அவளது நீல ஜாக்கெட் காற்றில் பறந்து கொண்டிருந்தது.

பாவெல் அவளைப் பின்தொடர்ந்து ஓடினுன்.

இரண்டே விஞடியில் அவளைப் பிடித்து விடுவேன் என்று எண்ணிக்கொண்டே பாவெல் விரைந்தான். ஆனுல் ஸ்டேஷனுக்கு அருகில் காட்டுச் சாலை முடியும் இடத்தில்தான் அவனுல் அருகில் நடக்க முடிந்தது. அவன் தன் வலிய கைகளால் அவளது தோட்களைப் பிடித்தான்.

''உங்களைத் தொட்டுவிட்டேன்! நான் வென்று விட்டேன்!'' என்று களைத்துப் போய் நெடு மூச்செறிந்த பாவெல் மகிழ்ச்சியுடன் கூவினான்.

''என்னை விடுங்கள்! எனக்கு வலிக்கிறது!'' என்று கூறி தோன்யா பிடியிலிருந்து விடுபட முயற்சித்தாள்.

அவர்கள் அங்கு நின்று மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கிக் கொண்டிருந்தபொழுது, அவர்களது நாடி வேகமாகத் துடித்துக் கொண்டிருந்த அந்த நேரத்தில், ஓட்டப் பந்தயத்தால் சோர்ந்த தோன் யா, பாவெல்மீது சற்றுச் சாய்ந்தாள், ஒரே ஒரு விநாடிதான்! ஆனால் அந்த விநாடியின் இனிமை யான அனுபவத்தைப் பாவெல் வெகுநாட்களுக்கு மறக்கப் போவதில்லை.

''இதற்கு முன், எவரும் என்னை ஓட்டத்தில் வென்றதில்லை'' என்று கூறிக்கொண்டே தோன்யா பாவெலிடமிருந்து நகர்ந்தாள்.

அத்துடன் அவர்கள் பிரிந்தனர். பாவெல் தன் குல்லாவை ஆட்டி விடைபெற்றுக்கொண்டு, நகரை நோக்கி ஓடினான்.

பாவெல் பாயிலர் அறையின் கதவைத் திறந்தபொழுது தனீலோ என்ற ஸ்டோக்கர் அடுப்பில் தீ வளர்த்துக் கொண்டிருந்தான்.

''இன்னும் கொஞ்சம் தாமதமாக வரக் கூடாதா? உன் வேலையையும் நான் செய்வேன் என்று எதிர்பார்க்கிறாயா?'' என்று உறுமினான்.

பாவெல் தன் கூட்டாளியின் தோளைத் தட்டி, அவனைத் தாஜா செய்தான்.

''ஒரே விஞடியில் அடுப்பை நன்கு எரியச் செய்வோம், கிழவனே'' என்று உற்சாகத்துடன் கூறிவிட்டு, பாவெல் அடுப்பினருகில் அடுக்கிவைக்கப்பட்ட விறகின் பக்கத்தில் ஏதோ செய்யத் தொடங்கிஞன்.

நள்ளிரவு, தனீலோ மரக்கட்டைக் குவியல் மீது படுத்து, இன்பமாகக் குறட்டைவிட்டுக் கொண்டிருந்தான். பாவெல், எஞ்சினுக்கு எண்ணெய் ஊற்றிவிட்டுக் கந்தல் துணியால் கரங்களைத் துடைத்துக் கொண்டு கருவிப் பெட்டியில் வைத்திருந்த காரிபால்டி வாழ்க்கை வரலாற்றின் அறுபத்திரண்டாவது பகுதியை எடுத்துப் படிக்கலாஞன். நேபிள்ஸ் ராஜ்யத்தின் செஞ்சட்டைப் படையினருடைய சிறந்த தலைவனும், அற்புதக் கதைகளின் வீரனுமான அந்த காரிபால்டியின் எண்ணிலடங்காத வீரதீரச் சாதனைகளைக் கவர்ச்சிகரமாக விவரிக்கும் அந்த நாவலில் நெஞ்சைப் பறிகொடுத்து விட்டான்.

''அவள் தன்னுடைய அழகுநிறைந்த நீலக் கண்களால் பிரபுவை நோக்கிஞள்'' என்று அந்த நூலில் படித்தான் பாவெல்.

''இவளுடைய கண்களும் நீலம்தான்!'' தோன்யாவைப்பற்றிச் சிந்தனை ஓடியது. ''அவள் இதர பணக்காரர்களைப் போல இல்லை. தவிர, அவள் பேய்மாதிரி ஓடுகிருள்!''

பகலில் தோன்யாவுடன் பேசிக்கொண்டிருந்ததைப் பற்றிய நினைவில் பாவெல் ஆழ்ந்தான். எனவே தேவைக்கு மிகுந்த நீராவியின் அழுத்தத்

தைத் தாங்கமுடியாமல் எஞ்சின் மேன்மேலும் கூடுதலாகக் கதறுவதை அவனது கேள்விப்புலன் உணரவில்லை. அந்தப் பெரிய சம இயக்கச் சக்கரம், வெறிபிடித்து விட்டதைப் போலச் சுழன்றது; காங்கிரீட்டால் செய்த அடிமேடையே அதிர்ந்தது.

பாவெல் அழுத்தமானியைப் பார்த்தான். எச்சரிக்கைக்காகப் போடப்பட்ட சிவப்புப் கோட்டுக்கும் மேலே பல எண்களைக் கடந்து நின்ற முள்ளைக் கண்டதும் திடுக்கிட்டான்.

''அட கஷ்டமே!'' என்று சொல்லிக்கொண்டு குதித்தெழுந்த பாவெல், ஒரு நெம்புகோலைத் துரிதமாக இரண்டு சுற்றுச் சுற்றினான். வெளியேற்றுக் குழாய் வழியாக நீரோட்டத்துக்குள் கடத்தப்பட்ட நீராவி, கொதிகல அறைக்கு வெளியே கரகரத்த குரலில் சீறியது. பாவெல் நெம்புகோலை கீழே வர விட்டுவிட்டு பெல்ட்டைப் பம்பை ஓட்டக் கூடிய சக்கரத்தில் சுற்றினான்.

பாவெல் தனீலோவை நோக்கினான். அவன் ஆழ்ந்த உறக்கத்தின் வசப்பட்டிருந்தான். அவனுடைய வாய் அகலத் திறந்திருந்தது. அவரது நாசி வழியே பயங்கரமான ஒலிகள் வெளியேறிக் கொண்டிருந்தன.

அரை நிமிடம் கடந்தபின், அழுத்தமானியின் முள் வழக்கமான இடத்தை அடைந்தது.

பாவெலிடம் விடைபெற்றுக்கொண்டு பிரிந்த தோன்யா நேராகத் தன் இல்லத்துக்குச் சென்றாள்.

அவளது சிந்தனையெல்லாம் அந்தக் கருங்கண் இளைஞனைச் சந்தித்த நிகழ்ச்சியைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவனைச் சந்தித்ததில், அவள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்திருந்தாள்.

''என்ன ஆவேசம்! எப்படிப்பட்ட உறுதி! அவன் போக்கிரியாக இருப்பான் என்று நான் கற்பனை செய்தது முற்றிலும் தப்பு. உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் அந்த முட்டாள்களைவிட இவன் எவ்வளவோ உயர்ந்தவன்!...'' இவ்வாறாக அவள் சிந்தித்தாள்.

பாவெல் வேறொரு இனத்தைச் சேர்ந்தவன். அவ்வினத்தைச் சேர்ந்த எந்தவொரு மனிதனுடன் தோன்யா இதுவரை நெருங்கிப் பழகியதில்லை.

''அவனைச் சாதுவாக்க முடியும். அவன் தனக்குப் பிடித்தமான நண்பனாக இருப்பான்!'' என்று அவள் எண்ணினாள்.

அவள் தன் வீட்டை நெருங்கியபொழுது, தோட்டத்தில் லீஸாவும், நேல்லியும், வீக்தரும் இருப்பதைக் கண்டாள். வீக்தர் படித்துக் கொண்டிருந்தான். அவர்கள் அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தனர் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

அவர்களுடன் தோன்யா வாழ்த்துக்களைப் பரிமாறிய பிறகு ஒரு பெஞ்சு மீது உட்கார்ந்தாள். ஒரு குட்டி உரையாடல் தொடங்கியது.

அந்தக் கருத்தில்லாத வெறும் பேச்சுக்கிடையே, வீக்தர் எழுந்து வந்து அவள் அருகில் அமர்ந்தான்.

''நான் கொடுத்த நாவலைப் படித்துவிட்டீர் களா?'' என்று அவன் அவளைக் கேட்டான்.

''நாவலா?'' தோன்யா சற்றுச் சிந்தனை யிலாழ்ந்தாள். ''ஓ! நான்...'' என்று தொடங்கிய வாக்கியத்தை அப்படியே விழுங்கினாள். ஏரிக் கரையில் புத்தகத்தை மறதியாக வைத்துவிட்ட தாகச் சொல்ல வந்து, நிறுத்திக்கொண்டாள்.

''அந்தக் காதல் கதை உங்களுக்குப் பிடித் திருக்கிறதா?'' என்று கேட்டுவிட்டு அவளைக் கவனமாகப் பார்த்தான் வீக்தர்.

ஒரு விநாடி தோன்யா தோட்டத்தின் நடை பாதை மணலில், செருப்பின் நுனியால் புரியாத படமொன்று வரைந்து கொண்டே சிந்தித்தாள். அதன்பின் அவள் தன் முகத்தை நிமிர்த்தி, வீக்த ரைப் பார்த்தாள்.

''இல்லை. அதைவிடச் சுவையான வேறொரு காதல் கதையை நான் ஆரம்பித்திருக்கிறேன்'' என்று கூறினாள்.

''அப்படியா? அந்தக் கதையின் ஆசிரியர் யார்?'' மனம் நொந்தவனாக அவன் இழுத்துப் பேசினான்.

ஒளியும் நகையும் தவழும் கண்களால் அவள் அவனைப் பார்த்தாள்.

''ஆசிரியர் யாருமில்லை....'' என்றாள்.

''தோன்யா! உன் விருந்தாளிகளை உள்ளே

அழைத்துவா. டீ தயாராகிவிட்டது'' என்று தோன்யாவின் தாய் பால்கனியிலிருந்து கூறினாள்.

இரு பெண்களின் கைகளையும் பிடித்துக் கொண்டு, தோன்யா உள்ளே சென்றாள். தோன்யா கூறியதின் பொருள் விளங்காமல், திகைத்தவனாய் வீக்தர் அவர்களைப் பின்தொடர்ந்தான்.

முதல் தடவையாக — இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளமுடியாத—அவன் அறியாத வண்ணம் வாழ்வில் புகுந்த அந்த உணர்ச்சி, பாவெலுக்குத் தெரிந்து கொள்ள முடியாத ஒரு குழப்பத்தைக் கொடுக்கக் கூடிய அளவுக்குப் புதிதாக இருந்தது. வம்புக்கும், கலகத்திற்கும் கலங்காத அவனை அது கலக்கியது.

தோன்யாவின் தந்தை, காட்டிலாகாவின் தலைமை அதிகாரி. எனவே, அவனும் வக்கீல் லெஷ்சீன்ஸ்கியும் ஒரே வகையானவர்கள் என்பது பாவெலின் கருத்து.

பாவெல் வறுமையில் வளர்ந்தவன்; இல்லாமை அவனது இணைபிரியாத் தோழன். எனவே அவன் யார் யாரைப் பணக்காரராகக் கருதினானோ அவர்கள் அனைவரையும் தன் பகைவர்களாகக் கருதினான். தன்னிடம் தோன்யாவின் பால் ஏற்பட்ட உணர்ச்சிகளை மிகவும் கவனமாகவும், நுட்பமாகவும் பாவெல் ஆய்ந்து வந்தான். அவனால், சிற்பி மகள் கால்யாவைப் பற்றி எண்ணியது போல், தோன்யாவைப் பற்றி, தன்னுடையவள், எளியவள், புரிந்து கொள்ளக் கூடியவள் என்று எண்ண

முடியவில்லை. அவன் தோன்யாவை வெகுவாக நம்பவில்லை. அந்தப் படித்த அழகிய பெண்ணிட மிருந்து, தன்னைப் போன்ற ஸ்டோக்கரைப் பற்றி எழும் எந்தவியச் கேலிப் பேச்சுக்கும், அலட்சிதக் செயலுக்கும் தகுந்த எதிர்ப்புக் கொடுக்க எப் பொழுதும் அவன் தயாராக இருந்தான்.

ஒரு வாரம் முழுவதும் அவன் தோன்யா வைச் சந்திக்கவில்லை. இன்று ஏரிக்குச் செல்வ தென்று அவன் தீர்மானித்தான். அவளைச் சந் திக்கலாம் என்ற நம்பிக்கையில் அவன் வேண்டு மென்றே அவளுடைய வீட்டு வழியாகச் சென் ருன். அவளது வீட்டு வேலிக்கருகில் மெதுவாக நடந்து சென்றபொழுது, தோட்டத்தின் தொலை விளிம்பில் அவனுக்குப் பழக்கமான மாலுமிச் சொக்காயைக் கண்டான். சாலையில் கிடந்த பைன் மரக் கொம்பு ஒன்றை எடுத்து அந்த வெள்ளைச் சொக்காய்மீது குறி வைத்து எறிந்தான்.

தோன்யா ஒரு சுழல் சுழன்று, பாவெலை நோக்கி ஓடி வந்தாள். அன்பான புன்முறுவலுடன் வேலிக்கு மேலே கரத்தை நீட்டினுள்.

''கடைசியில் வந்துசேர்ந்தீர்களா? இவ்வளவு காலம் எங்கு சென்றிருந்தீர்கள்? மறதியாக விட்டுவந்த புத்தகத்தை எடுத்துக்கொண்டு வரு வதற்கு ஏரிக்குச் சென்றேன். நீங்கள் அங்கு இருப் பீர்களென்று எண்ணினேன்'' என்று மகிழ்ச்சி யுடன் கூறிவிட்டு, ''உள்ளே வருவீர்களா?'' என்று வினவினுள்.

பாவெல், தலையை ஆட்டிக்கொண்டே, ''மாட்டேன்'' என்றான்.

''ஏன்?'' அவளது புருவங்கள் வியப்பால் உயர்ந்தன.

''உங்கள் தந்தைக்குப் பிடிக்காது. என்னால் உங்களுக்குத் தொந்தரவு. அற்பன் ஒருவனைத் தோட்டத்துக்குள் ஏன் அனுமதித்தாய் என்று உங்களை வதைப்பார்.''

தோன்யாவுக்கு ஆத்திரம் வந்தது.

''பாவெல், என்ன அபத்தம் பேசுகிறீர்கள்? உடனே உள்ளே வாருங்கள். என் அப்பா அந்த மாதிரி எல்லாம் ஒருபோதும் சொல்லமாட்டார். நீங்களே தெரிந்துகொள்வீர்கள்'' என்றாள்.

அவள் ஓடிச்சென்று கதவைத் திறந்தாள். பாவெல் சந்தேகத்தோடு அவளைப் பின்தொடர்ந்தான்.

தோட்டத்தில் ஒரு வட்ட மேஜையருகில் அவர்கள் அமர்ந்தவுடன், ''உங்களுக்குப் புத்தகங்கள் பிடிக்குமா?'' என்று அவள் கேட்டாள்.

''ரொம்பப் பிடிக்கும்'' என்று அவன் ஆவலுடன் பதிலளித்தான்.

''உங்களுக்கு அதிகமாகப் பிடித்த புத்தகம் எது?''

சில விநாடிகள் பாவெல் யோசனை செய்தான். அதன் பின், ''காரிபால்டியின் வாழ்க்கை வரலாறு'' என்று விடையளித்தான்.

''அந்தப் புத்தகத்தை நீங்கள் அலாதியாக விரும்புகிறீர்களா?'' என்று அவள் வினவினாள்.

''ஆம். நான் அதன் அறுபத்து எட்டுப் பகுதிகளையும் படித்திருக்கிறேன். ஒவ்வொரு சம்பள நாளிலும் ஐந்து பகுதிகள் வாங்குகிறேன். காரிபால்டி! அவர்தான் லட்சிய புருஷன்! உண்மையான வீரர்! மாசுமறுவில்லாதது என்று இத்தகைய வீரத்தைத்தான் நான் சொல்வேன். எத்தனை போராட்டங்களில் அவர் பங்கெடுக்க நேர்ந்தது! அனைத்திலும் வெற்றிகண்டவரல்லவா? அவர் உலகம் முழுவதும் சுற்றிப் பார்த்தவர் அல்லவா? இன்று அவர் உயிருடன் இருந்தால், நான் அவருடன் சேர்ந்திருப்பேன். இளம் தொழிலாளர்களை அவர் தம் படையில் சேர்த்துக் கொண்டார். அவர்கள் அனைவரும் ஏழைகளுக்காகப் போராடினார்கள்.''

''எங்களுடைய நூல்நிலையத்தை உங்களுக்குக் காட்டுகிறேன், பார்க்கிறீர்களா?'' என்று வினவிக்கொண்டே, தோன்யா அவனது கையைப் பற்றினாள்.

''வேண்டாம். நான் வீட்டுக்குள் வரப்போவதில்லை'' என்று பாவெல் மறுத்தான்.

''ஏன் இப்படிப் பிடிவாதம் செய்கிறீர்கள்? நீங்கள் அஞ்சும்படி என்ன இருக்கிறது?''

செருப்பணியாத தன் பாதங்களைப் பாவெல் நோக்கினான். அவை சுத்தமாக இல்லை. அவன் பின் தலையைச் சொறிந்துகொண்டான்.

''உங்கள் தாய் அல்லது தந்தை என்னை வெளியே தள்ளமாட்டார்கள் என்று நீங்கள் நிச்சயமாக நம்புகிறீர்களா?''

''நீங்கள் இப்படிப் பேசுவதை நிறுத்தாவிட்டால், நான் உண்மையில் கோபங்கொள்வேன்'' என்று தோன்யா வேகத்துடன் பேசினுள்.

''எங்களைப் போன்றவர்களை வக்கீல் லெஷ்சீன்ஸ்கிய் ஒரு பொழுதும் உள்ளே விடுவதில்லை. அவன் எங்களுடன் எப்பொழுதும் சமையலறையிலேதான் உரையாடுவான். அந்த வீட்டுக்கு நான் ஒரு தடவை போகநேர்ந்தது. என்னை அறைக்குள் அனுமதிப்பதற்குக்கூட நேல்லிக்கு விருப்பமில்லை. தரையில் விரித்திருக்கும் கம்பளங்களையோ, வேறு பொருட்களையோ நான் அசுத்தம் செய்துவிடுவேன் என்பது அவள் எண்ணம் போலும்!'' என்று பாவெல் புன்னகையுடன் கூறினுன்.

''வாருங்கள்! வாருங்கள்!'' என்று அவள் பாவெலைத் தூண்டினுள். அவன் தோளைப் பற்றிக் கொண்டு, அவனை பால்கனியை நோக்கிச் சற்றுத் தள்ளினுள், அன்போடு!

அவள் அவனை உணவு அறை வழியாக ஒரு அறைக்குக் கூட்டிச் சென்றுள். அந்த அறையில் ஓக் மரத்தால் செய்த ஒரு பெரிய புத்தக அலமாரி இருந்தது. அதன் கதவுகளை அவள் திறந்த பொழுது, நூற்றுக்கணக்கான நூல்கள் நேர்த்தியாக அடுக்கப்பட்டிருப்பதைப் பாவெல் கண்டான். அவன் இவ்வளவு செல்வத்தைத் தன் வாழ்நாளில் ஒருபொழுதும் கண்டதில்லை.

''நாம் இப்பொழுது ஒரு விருவிருப்பான புத்தகத்தை உங்களுக்காகத் தேர்ந்தெடுப்போம்.

மேலும், புத்தகங்கள் எடுப்பதற்கு முறையாக வருவதாக நீங்கள் வாக்களிக்க வேண்டும். அப்படி உறுதி கூறுவீர்களா?''

பாவெல் மகிழ்ச்சியுடன் தலையை அசைத்தான்.

''நான் புத்தகங்களை மிகவும் நேசிக்கிறேன்'' என்று அவன் கூறினான்.

அன்று அவர்கள் பல மணி நேரத்தை இன்பமாகக் கழித்தார்கள். அவள் அவனைத் தன் தாய்க்கு அறிமுகம் செய்து வைத்தாள். அது அவன் எண்ணிய மாதிரி பயங்கரச் சோதனையாக அமையவில்லை. உண்மையில் அவனுக்கு தோன்யாவின் தாயைப் பிடித்தது.

தோன்யா பாவெலைத் தன் சொந்த அறைக்குக் கூட்டிச் சென்று, அவளுடைய சொந்தப் புத்தகங்களைக் காட்டினாள்.

ஆடை அணிவதற்குப் பயன்படும் மேஜையில் ஒரு சிறிய கண்ணாடி இருந்தது. தோன்யா பாவெலை அதன் அருகில் அழைத்துச் சென்று இளநகை ததும்பக் கூறினாள்:

''நீங்கள் ஏன் உங்கள் தலை மயிரை இப்படிக் காடாக வளர விடுகிறீர்கள்? நீங்கள் எப்பொழுதாவது மயிரைத் திருத்திக் கொள்வதுண்டா? சீவிக் கொள்வதுண்டா?''

''ரொம்ப நீளமாய் வளர்ந்துவிட்டால் மயிரை திருத்திக்கொள்கிறேன். வேறு என்ன செய்ய வேண்டும்?'' என்று பாவெல் சங்கடப்பட்டுக் கொண்டே பேசினான்.

தோன்யா சிரித்தாள். மேஜையிலிருந்து ஒரு சீப்பை எடுத்து, அவனது அடங்காப் பிடாரித் தலையை வாரினாள்.

''இப்பொழுது பாருங்கள். சற்றுத் தேவலை'' என்று தன்கை வேலையை மதிப்பிட்டுக் கொண்டே கூறினாள். ''தலை மயிரை நேர்த்தியாகக் கத்தரிக்க வேண்டும். கோணயனைப் போலத் தோற்றமளித்துக்கொண்டு நடமாடக் கூடாது!''

அவனது பழுப்பேறிய சிவப்பு நிறச் சட்டையையும், அழுக்கான கால்சட்டையையும் விமர்சனக் கண்கொண்டு அவள் பார்த்தாள். ஆனால் அவற்றைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

அவளுடைய பார்வையைப் பாவெல் கவனித்தான். அவன் தன் உடைகளைப்பற்றி எண்ணி நாணமடைந்தான்.

அவன் விடைபெற்றுக்கொண்டு சென்றபொழுது, மீண்டும் வரும்படி தோன்யா அவனைக் கேட்டுக்கொண்டாள். இரண்டு நாட்கள் கழித்து, அவளுடன் மீன் பிடிக்க வருவதாக அவனிடம் வாக்குப் பெற்றுக் கொண்டாள்.

ஜன்னல் வழியே குதித்து, பாவெல் வீட்டை விட்டு வெளியேறினான். இதர அறைகள் வழியே சென்று, தோன்யாவின் தாயை மீண்டும் சந்திக்க அவன் விரும்பவில்லை.

ஆர்த்தியோம் சென்ற பிறகு, குடும்பம் நடப்பது கடினமாயிருந்தது. பாவெலின் சம்பளம் போதவில்லை.

மீண்டும் வேலைக்குச் செல்வதாக மரீயா யாக்கொவ்லெவ்னு கூறினுள். லெஷ்சீன்ஸ்கிய் குடும்பத்துக்கு ஒரு சமையற்காரி தேவை. அந்த வேலைக்கு அவள் முயற்சிக்க விரும்பினுள். ஆனுல் பாவெல் அதற்கு இணங்கவில்லை.

''இல்லை, அம்மா. நான் அதிகப்படியான வேலை தேடிச் செய்கிறேன். மரம் அறுக்கும் மில்லில் மரப்பலகைகளை அடுக்குவதற்கு ஆள் வேண்டுமாம். நான் அங்கு தினசரி அரைநாள் வேலை செய்கிறேன். பற்ருக் குறையைச் சரிக்கட்ட அது போதும். நீ வேலைக்குப் போகக் கூடாது. போனுல், உன் கூலி இல்லாமல் குடும்பம் நடத்த முடியாததற்கு அண்ணன் என்னைக் கோபிப்பார்.''

அவனுடைய தாய் வற்புறுத்திப் பார்த்தாள். ஆனுல் பாவெல் பிடிவாதமாக இருந்தான்.

அடுத்த நாள், பலகை அறுக்கும் மில்லில் பாவெல் வேலை செய்துகொண்டிருந்தான். புதிதாக அறுக்கப்பட்ட மரப்பலகைகளைக் காயவைப்பதற்காகப் பரப்பினுன். அங்கு அவன் முன்பே அறிமுகமாயிருந்த பல இளைஞர்களைச் சந்தித்தான். மீஷா லெவ்ச்சுக்கோவ் அவனது பழைய பள்ளித் தோழன். வான்யா குலெஷோவையும் அங்கு பாவெல் சந்தித்தான். மீஷாவும் அவனுடன் சேர்ந்து வேலை செய்தான். முடித்த வேலையைக் கணக்கிட்டு அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. அவர்களுக்கு நல்ல கூலி கிடைத்தது. பாவெல் பகல் வேளைகளில் பலகை அறுக்கும் மில்லில்

பாடுபட்டான்; மாலை நேரங்களில் மின்சார நிலைய வேலைக்குச் சென்றான்.

பத்தாவது நாள் மாலையில் பாவெல் தான் சம்பாதித்த பணத்தைத் தாயிடம் கொண்டுவந்து கொடுத்தான். கொடுத்த பொழுது அவன் சஞ்சலமடைந்தான்; பதை பதைத்தான்; நாணத்தால் அவனது முகம் குங்குமமாகியது. இறுதியில் அவன் பேசினான்:

''அம்மா. எனக்கு ஸட்டீன் சட்டையொன்று வாங்கிக்கொடு. நீலமே இருக்கட்டும். போன வருடம் வைத்திருந்தேனே, நினைவில் இருக்கிறதா? அது மாதிரி வாங்கித்தா. என் செலவுக்கு இந்தப் பணத்தில் பாதியை எடுத்துக்கொள்வேன். ஆனால் அதைப்பற்றிக் கவலைப் படாதே! நான் மேலும் சம்பாதிக்கிறேன்'' என்று கூறிவிட்டு ''நான் அணிந்திருக்கும் சட்டை ரொம்பக் கேவலமாக இருக்கிறது!'' என்று தன் வேண்டுகோளுக்கு சமாதானம் கூறினான்.

''நீ சொல்வது சரி. நான் உனக்கு நிச்சயம் வாங்குகிறேன். இன்று துணி வாங்குகிறேன். நாளைக்கு அதைத் தைத்து விடுகிறேன். உனக்கு உண்மையில் ஒரு புதிய சட்டை தேவைதான்'' என்று அவனுடைய அன்னை கூறினாள். அவள் தன் மகனை அன்புடன் வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

முடிதிருத்தகத்தின் வாசலில் பாவெல் நின்று கொண்டு, தன் பையிலுள்ள ரூபிள் நாணயத்தை

விரல்களால் தொட்டுப் பார்த்து உறுதிப்படுத்திக் கொண்டு கதவைத் திறந்து உள்ளே சென்முன்.

அங்கிருந்த முடிதிருத்துபவன் சுறுசுறுப்பான வாலிபன். பாவெல் உள்ளே வருவதைக் கவனித்து, அவனுக்குக் காலி நாற்காலி ஒன்றைச் சுட்டிக் காட்டிஞன்.

பள்ளமான இருக்கையுடன் கூடிய அந்த மிருதுவான நாற்காலியில் அமர்ந்தவுடன் பாவெல் தன் முன்ஞலிருந்த கண்ணுடியில் பதற்றமும் குழப்பமும் நிறைந்த தன் முகத்தைப் பார்த்தான்.

''இயந்திரத்தாலா?'' என்று முடிதிருத்துபவன் கேட்டான்.

''அப்படித்தான். அதாவது, இல்லே, இல்லே, ஆம், ஆம்.... முடிதிருத்த வேண்டும். நீங்கள் அதை எப்படிச் சொல்வீர்கள்?'' என்று சொல்லிக் கொண்டு வேறு வழியில்லாததால் கையால் சைகை காட்டிஞன்.

''எனக்குப் புரிகிறது'' என்று புன்னகை செய்து கொண்டே முடிதிருத்துபவன் பதிலளித்தான்.

கால்மணி நேரம் கழிந்தது. இந்தச் சோதனையால் சோர்வுற்ற பாவெல், மெய்யெல்லாம் வியர்க்க வெளியேறிஞன். ஆஞல் அவனது தலேமயிர் நேர்த்தியாகக் கத்திரிக்கப்பட்டு அழகாக வாரிவிடப்பட்டிருந்தது. முரண்டு பிடித்த மயிரை அடக்குவதற்கு முடிதிருத்துபவன் மிகவும் கஷ்டப்பட்டான். ஆஞல் இறுதியில் நீரும் சீப்பும் வெற்றியடைந்தன. விறைத்துநின்ற மயிர்

எல்லாம் ஒழுங்குக்கு உட்பட்டன. தலைமயிர் திருத்தமாக வாரிவிடப்பட்டது.

தெருவுக்கு வந்தவுடன், விடுதலை உணர்வுடன் பாவெல் பெருமூச்சுவிட்டான்; தனது குல்லாவை நெற்றிவரை இழுத்துவிட்டுக் கொண்டான்.

''என்னை இப்பொழுது அம்மா பார்த்தால் என்ன சொல்வாளோ?'' என்று அவன் எண்ணினான்.

தன்னுடன் மீன்பிடிக்க வருவதாகப் பாவெல் கொடுத்த வாக்குப்படி அவன் நடக்காததைக் கண்டு, தோன்யா வருத்தமுற்றாள்.

''அந்த ஸ்டோக்கர் பையன் பிறர் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்கமாட்டான் போலும்!'' என்று அவள் எரிச்சலுடன் எண்ணினாள். ஆனால் மேலும் பல நாட்கள் கடந்த பிறகும், பாவெல் வராததைக் கண்டு, அவனைக் காண்பதற்காக ஏங்கத் தொடங்கினாள்.

ஒரு நாள், அவள் உலாவுவதற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்பொழுது அவளுடைய அன்னை அறைக்குள் வந்து, ''உன்னைப் பார்க்க ஒருவன் வந்திருக்கிறான். உள்ளே அனுப்பட்டுமா?'' என்று கேட்டாள்.

பாவெல் கதவருகில் தோன்றினான். அவன் ஒரேயடியாக மாறி இருந்ததால், தோன்யாவுக்கு முதலில் அவனை அடையாளம் கண்டு கொள்வதே கஷ்டமாயிருந்தது.

அவன் ஒரு புத்தம் புதிய நீலநிற ஸட்டீன் சட்டையும் கறுப்புக் கால்சட்டையும் அணிந்திருந்தான். அவனது பூட்ஸ் நன்கு மெருகிடப்பட்டிருந்ததால், 'பளபள' வென்று இருந்தன. அவனது முரட்டு மயிர் கத்தரிக்கப்பட்டுத் திருத்தமாக வாரி விடப்பட்டிருந்ததை தோன்யா உடனே கவனித்து விட்டாள். 'உர்' ரென்று இருந்த இளைஞன் எப்படி மாறிவிட்டான்.

தன் வியப்பை வெளியிட எண்ணியதோன்யா, தான் எதுவும் கூறுவதற்கு முன்பே தன் முன் இக்கட்டான நிலையில் நின்றுகொண்டிருந்த அந்தப்பையனை மேலும் குழப்புவதற்கு விருப்பமில்லாமல், அவனது மாற்றத்தைத் தான் காணாதது போல் பாசாங்கு செய்தாள். எனவே அவன் வாக்குத் தவறியதற்காகக் கடிந்து கொள்ளத் தொடங்கினாள்.

''மீன் பிடிப்பதற்கு ஏன் வரவில்லை? நீங்களே உங்கள் நடத்தையைக் கண்டு நாணமடைய வேண்டும்! இப்படித்தான் நீங்கள் உங்கள் வாக்குகளைக் காப்பாற்றுவீர்கள்போலிருக்கிறது!''

''மரப்பலகை அறுக்கும் மில்லில் வேலை செய்தேன். மீன்பிடிக்க வருவதற்கு நேரமில்லை.''

சட்டையும் கால்சட்டையும் வாங்குவதற்குப் பணம் வேண்டுமென்பதற்காகச் சில நாட்களாக ஊன் உருக, உள்ளஞ்சோர உழைத்தேன் என்று அவனால் அவளிடம் கூற முடியவில்லை.

ஆயினும், தோன்யா உண்மையைப் புரிந்து

கொண்டு விட்டாள். எனவே, அவனிடம் அவளுக்கிருந்த வருத்தம் அடியோடு மறைந்து விட்டது.

''குளத்துக்கு நடந்து செல்வோம்'' என்று அவள் யோசனை கூறினாள். இருவரும் தோட்டத்தின் வழியாகச் சாலைக்குச் சென்றனர்.

ஜெர்மானிய அதிகாரியின் கைத் துப்பாக்கியைத் தான் களவாடிய விஷயத்தைப் பாவெல் தோன்யாவிடம் பேச்சோடு பேச்சாகச் சொல்லி விட்டான். ஒரு பெரிய ரகசியத்தை நண்பனிடம் எடுத்துரைக்கும் முறையில், அவன் அதைக் கூறினான். சீக்கிரத்தில் ஒருநாள் அவளைக் காட்டுக்குள் அழைத்துச் செல்வதாகவும், அங்கு அந்த ரிவால்வரால் சுட்டுப்பார்க்கலாம் என்றும் அவன் அவளிடம் உறுதி கூறினான்.

''ஆனால் நீ என்னைக் காட்டிக்கொடுத்து விடாதே!'' என்று கூறிய அவன் திடீரென்று அவளை ஒருமையில் அழைத்தான்.

''நான் ஒருபோதும் உன்னைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்'' என்று தோன்யா வாக்களித்தாள்.

அத்தியாயம் நான்கு

உக்ரேனியா தேசத்தை ஒரு கடுமையான, ஈவிரக்கத்துக்கு இடமில்லாத வர்க்கப் போராட்டம் வசப்படுத்திக் கொண்டது. மென்மேலும் ஆயுதமேந்தும் மக்கள் கூடிக்கொண்டே வந்தார்கள். ஒவ்வொரு சிறு போரிலும் புதுப்புது வீரர்கள் தோன்றினார்கள்.

பொதுவாழ்வில் பங்கு கொள்ளாது, தன் பாட்டைக் கவனித்து வந்தவர்கள் சமாதானச் சூழ்நிலையில் வாழ்ந்த காலம் உருண்டோடிவிட்டது.

பனிப்புயல் அடித்தது. பழுதுபட்ட பழைய கட்டிடங்கள் யாவும் பீரங்கிகளின் வெடியினுல் நடு நடுங்கின. நகரவாசிகள் தங்கள் வீட்டின் நில வறைகளிலோ அல்லது தாங்களாகத் தோண்டிய காப்புக் குழிகளிலேயோ அடைக்கலம் புகுந்தனர்.

பலவகை வண்ணங்களேயும் சின்னங்களேயும் கொண்ட பெத்லியூராவின்*பற்பல எதிர்ப்புரட்சிக் கூட்டங்கள்—சிறுதலேவர்கள், பெருந்தலேவர்கள், பலவகையான கோலுப்கள், ஆர்காங்கேல்கள், ஆங்கேல்கள், கோர்தீய்கள், இன்னும் பலவிதமான கொள்ளேக்காரக் கும்பல்கள் — பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரவத் தொடங்கின.

ஜார் இராணுவ முன்னுள் அதிகாரிகளோ, உக்ரேனிய சோஷலிஸ்ட் புரட்சிவாதக் கட்சியின் வலதுசாரிகளோ, அதன் இடதுசாரிகளோ, யாராக இருந்தாலும் சரி, ஒரு குழுவைத் திரட்டுவதற்குச் சக்தி படைத்த ஒவ்வொருவனும் தன்னேத் தனித் தலேவனுகக் கூறிக் கொண்டான்.

---

* பெத்லியூரா, ஸி. வ.—*1917-18*ம் ஆண்டுகளில் உக்ரேய்னுவில் ஆட்சியில் இருந்த குட்டி பூர்ஷ்வா-தேசீயவாத எதிர்ப்புரட்சிகரமான அரசாங்கத் தலேவர்களில் ஒருவன்; பெருஞ்சேனுதிபதி. சோவியத் ருஷ்யாவிற்கு எதிராக ஆயுதந் தாங்கிய போராட்டத்தை நடத்தினுன்.

அவர்களில் சிலர், பெத்லியூராவின் மஞ்சளும் நீலமும் கலந்த கொடியை உயர்த்திப் பிடித்துக் கொண்டு, தமது சக்திக்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப ஆட்சியைக் கைப்பற்றினர்.

இந்தப் பல்வகைக் குழுக்களின் தலைவர்களுக் கெல்லாம் பெருந்தலைவனாகத் திகழ்ந்த பெத் லியூரா தனக்கென ஒரு ராணுவத்தை அமைத்துக் கொண்டான். அந்த ராணுவம் மேற்சொன்ன பலவிதமான குழுக்களினாலும், பணக்கார விவசா யிகளாலும், தலைவன் கொனவாலேத்ஸ் படைப் பிரிவின் காலீஷிய ரெஜிமென்டுகளாலும் அமைக் கப்பட்டிருந்தது.

இந்தக் குலாக்குகளின்*, சோஷலிஸ்ட் புரட்சிவாதிகளின்** கழிவுக் கூட்டத்தைச் சிவப்பு கொரில்லா வீரர்களின் பிரிவுகள் தாக்கியபொ ழுது, ஆயிரக்கணக்கான குதிரைக் குளம்புகளின் ஒலியாலும், இயந்திரத்துப்பாக்கிகளையும், பீரங்கி களையும் சுமந்து செல்லும் வண்டிச் சக்கரங் களின் ''கடகட'' ஒலியாலும் பூமியே அதிர்ந்தது.

கொந்தளிப்பான அந்த 1919ம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில், நகரவாசிகள் திகைத்துத் திக்குமுக்காடிக் கிலிபிடித்து நின்றனர். காலையில் ஜன்னல் கதவைத் திறந்து, தூங்கி எழுந்த முகத்

---

* **குலாக்குகள்**—மற்றவர்களது உழைப்பைச் சுரண்டும் பணக்கார விவசாயிகள்.

** **சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள்** — மார்க்ஸீய விரோதமான குட்டிபூர்ஷ்வா கட்சியைச் சேர்ந்த வர்கள்.

துடன் தலையை வெளியே நீட்டி, அண்டை வீட்டுக்காரர்களைக் கவலையுடன் கேட்பார்கள்:

''அவ்தொனேம் பெத்ரோவிச், இன்று அதிகாரத்தில் இருப்பது யார் தெரியுமா?''

அவ்தொனேம் பெத்ரோவிச் தன் கால்சட்டையைச் சுண்டித் தூக்கிக் கொண்டு, பயந்து பதறியவனைச் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டான்.

''சொல்ல முடியாது, அபனுஸ் கிரீல்லொவிச். நேற்று இரவு, யாரோ டவுனில் பிரவேசித்தனர் என்பதை நிச்சயமாக அறிவேன். அது யார் என்பதை நாம் சீக்கிரத்தில் தெரிந்து கொள்ளலாம். அவர்கள் யூதர்களைக் கொள்ளையடித்தால், பெத்லியூராவின் ஆட்களாக இருக்க வேண்டும். 'தோழர்களாயிருந்தால்', அவர்களுடைய பேச்சிலிருந்து அனுமானித்துவிடலாம். நானும் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன். விஷயம் விளங்கினால் தானே, எந்தப் படத்தைத் தொங்கவிடலாம் என்று முடிவு செய்யலாம். அந்த அடுத்த வீட்டு கெராஸீம் லெயோன்தியெவிச்சைப் பாருங்கள்! அவர் ஊரில் அதிகாரம் செலுத்துவது யாரென்பது உன்னிப்பாகக் கவனிக்காமல், லெனின் படத்தை மாட்டிவிட்டார். மூவர் வீட்டுக்குள் நுழைந்தனர். அவர்களோ பெத்லியூராவின் ஆட்கள். அப்புறம் கேட்க வேண்டுமா? படத்தைப் பார்த்தவுடனேயே, அவர்மீது பாய்ந்தனர். இருபது சாட்டையடி கொடுத்தனர். 'கம்யூனிஸ்ட் வேசி மகனே, உன் தோலை உரித்துவிடுகிறோம்' என்று கத்தினர். அவரும் தம் நிலையை விளக்குவதற்கு அரும்பாடு

பட்டார்; கத்திப் பார்த்தார்; ஊளையிட்டுப் பார்த்தார். ஒன்றும் பயனில்லை'' என்ருன்.

ஆயுதந்தாங்கிய கோஷ்டிகள் தெருவில் வந்து கொண்டிருப்பதைக் கண்டு, அந்தக் குடிமகன் பலகணிக் கதவை மூடிவிட்டு ஓடி ஒளிந்தான். எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது தானே சிறந்தது!

தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் பெத்லியூராவின் வழிப்பறிக் கூட்டத்தையும் அதன் மஞ்சள் நீல நிறக் கொடியையும் வெறுத்தனர். ஆனல்அவர்களால்அந்த வெறுப்பை வெளிக்காட்ட முடியவில்லை. உக்ரேனிய இனவெறி ஆட்டத்தின் பெருக்கை எதிர்த்து நிற்கும் சக்தி அவர்களிடமில்லை. நான்கு புறங்களிலும் தாக்கிக் கொண்டிருந்த மஞ்சள்நீல நிறக் கொடியினரது படை அணியைத் தகர்த்துக் கொண்டு தங்களது நகரங்களின் வழியாகச் சென்று கொண்டிருந்த செம்படையைக் கண்டதும்தான் தொழிலாளர்கள் விழித்தெழுந்தனர். ஓரிரு நாட்களுக்கு நகர ஆட்சி மன்றத்தில் அவர்களது அருமைக் கொடி பறக்கும். அந்தப் படைப் பிரிவினர் மறுபடியும் அவர்களது நகரத்தை விட்டு அகன்றதும் அங்கு இருள் சூழும்.

இப்பொழுது நகரம் கர்னல் கோலுப் கையில் இருந்தது. அவன் ஸாத்னிபிரோவ்ஸ்க்காயா டிவிஷனின் ''ரத்தின மணி'' எனக் கருதப்பட்டன.

முதல் நாள்தான், கோலுப் படையின் இரண்

டாயிரம் கொலைப் பாதகர்கள் வெற்றிக் கொண் டாட்டத்துடன் நகரப் பிரவேசம் செய்தனர். குழுத் தலைவனுன கர்னல் கோலுப் படை சூழ, ஒரு அருமையான குதிரைமீது ஏறிவந்தான். ஏப்ரல் மாத வெப்பத்தையும் பொருட்படுத்தாது, காக் கேஷிய மேலாடையுடனும், ஆட்டுத் தோலால் ஆக்கப்பட்டு, கருஞ்சிவப்புக் கொண்டையுடன் கூடிய ஒரு குல்லாவுடனும் அவன் தோன்றினுன்; அவனது உடைகளிலெங்கும் போர்க் கருவிகள் தொங்கின. வெள்ளிப்பிடி கொண்ட பட்டாளக் கத்தி, வாள் போன்ற பற்பல கருவிகளை அவன் தரித்திருந்தான்.

கர்னல் கோலுப் பார்ப்பதற்கு அழகானவன் தான். கருமையான புருவங்களை உடையவன். வெளிறிய முகத்தினன். ஆனுல் இடைவிடாமல் குடித்துக் குடித்து, அவனது முகம் சிறிதளவு மஞ்சள் நிறமாகியிருந்தது. அவனது வாயில் சுங்கான் ஒன்று இருந்தது.

புரட்சிக்கு முன்னுல் அவன் சர்க்கரை ஆலைக் குரிய தோட்டங்களில் விவசாய நிபுணனுக இருந் தான். ஆனுல் அந்த வாழ்வு அவனுக்குச் சப்பென்று இருந்தது. கொள்ளைப்படைத் தலைவன் வாழ் வுடன் அதை ஒப்பிட முடியுமா? எனவே, பேய்ச் சக்திகள் தலைதூக்கியவுடன் விவசாய நிபுணன் அவற்றுடன் சேர்ந்துகொண்டு, கர்னல் கோலு பானுன்.

நகரத்திலிருந்த ஒரே நாடகக் கொட்டகை யில் வந்த விருந்தாளிகளைக் கௌரவிப்பதற்காக

ஒரு களியாட்டத்துக்கு ஏற்பாடாகியிருந்தது. பெத்லியூராவின் அறிவுச் செல்வங்கள் அனைத்தும் அங்கு கூடியிருந்தன. உக்ரேய்னுவின் பள்ளி ஆசிரியர்கள், பாதிரியின் இரு பெண் செல்வங்கள்—மூத்தவள் அழகி ஆன்னு; இளையவள் ஸீனு—தவிர சில சேடிப் பெண்கள், பத்தோத்ஸ்கிப் பிரபுவின் முன்னுள் வேலையாட்கள், ''சுதந்திர கஸாக்குகள்'' என்ற பெயரைச் சூட்டிக் கொண்டிருந்த நடுத்தர வகுப்பைச் சார்ந்த, எதிர்ப்புரட்சிவாதிகளின் கையாட்கள் சிலரும் அங்கு கூடியிருந்தனர்.

நாடகக் கொட்டகை நிரம்பியிருந்தது. ஒளி படைத்த,பலவண்ணங்களுடைய பாசி மணிகளும், நாடாக்களுமணிந்த ஆசிரியைகளையும், பாதிரியின் பெண் செல்வங்களையும், நடுத்தர வகுப்பைச் சேர்ந்த சில பெண்களையும், பழைய வண்ணச் சித்திரங்களில் வரையப்பட்டுள்ள ஸப்பரோஷிய கஸாக்கியர்களைப் போலவே உடை அணிந்து, தங்கள் கால் பூட்ஸுகளின் குதிமுள் ஒலிக்க நடந்து கொண்டிருந்த பெத்லியூரா அதிகாரிகள் சூழ்ந்து கொண்டிருந்தனர்.

பட்டாளத்தின் 'பேண்டு' ஒலித்தது. மாலையில் ''நஸார் ஸ்தொதோல்யா'' என்ற நாடகத்தை நடிப்பதற்கு மேடையில் வேகமாகத் தயாரிப்புகள் நடந்து கொண்டிருந்தன.

ஆனுல், கொட்டகையில் மின்சார விளக்குகள் எரியவில்லை. முறைப்படி, கர்னல் கோலுபுக்கு இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டது. கர்ன

லின் அட்ஜூடன்டு லெப்டினன்ட் பொலியான்த் ஸெவ் என்பவனே இந்தச் செய்தியைத் தெரிவித் தான். பொலியான்த்ஸெவ் தன்னைத் தற்பொழுது கொரூன்ஷிய்* பொலியனீத்ஸா என்று உக்ரேனிய முறையில் அழைத்துக் கொண்டான். மாலைக் களி யாட்டத்தில் நேரில் கலந்து கொள்வதென்று கோ லுப் முடிவு செய்திருந்தான். எனவே, கொரூன்ஷிய் கூறியதைக் கேட்டவுடன், ''வெளிச்சம் கிடைக் கும்படி செய்! நீ இறக்க நேரிட்டாலும் தயங்கா தே! எலெக்டிரிஷியனைக் கண்டுபிடித்து, மின்னிலை யத்தை ஓட்ட வேண்டும்'' என்றான் கோலுப்.

கர்னல் கோலுப் தற்செயலாகப் பேசுவது போலப் புலப்பட்டது. ஆயினும், அந்தப் பேச்சில் துடுக்கும் அதிகாரமும் தொனித்தன.

''அவ்வாறே செய்கிறேன்'' என்றான் கொ ரூன்ஷிய்.

அவன் தன் கழுத்தை முறித்துக் கொள்ளாம லே, எலெக்டிரிஷியன்களைக் கண்டுபிடித்தான். ஒரு மணி நேரத்துக்குள், பாவெலும் ஒரு எலெக் டிரிஷியனும், ஒரு மெக்கானிக்கும் ஆயுதப் படை யினர்களால் மின்னிலையத்துக்குக் கொண்டு வரப் பட்டனர்.

''ஏழு மணிக்குள் விளக்குகள் எரியாவிட் டால், உங்கள் மூவரையும் கயிற்றைக் கட்டி

---

* **கொரூன்ஷிய்** — கஸாக்கியர் படையில் லெப்டினன்ட்.

தொங்கவிடுவேன்'' என்று கொருன்ஷிய் சுருங்கக் கூறி, மேலேயிருந்த இரும்பால் செய்த குறுக்குச் சட்டத்தைக் காட்டினன்.

இந்த அச்சுறுத்தலால் பயன் உண்டாயிற்று. குறித்த நேரத்தில் விளக்குகள் எரிந்தன.

களியாட்டம் உச்சநிலையில் நடந்து கொண்டிருந்தது. கர்னல் கோலுப் தன் காமக்கிழத்தியுடன் தியேட்டருக்கு வந்தான். அவன் ஒரு சிற்றுண்டிச் சாலைக்காரனின் வீட்டில் தங்கியிருந்தான். அப்பெண், மஞ்சள் நிறக்கூந்தலழகி. சரசாங்கி. பணக்காரச் சிற்றுண்டிச் சாலைக்காரன் தன் மகளை சிறந்ததொரு பள்ளியொன்றில் படிக்கவைத்திருந்தான்.

முன் வரிசையில், கௌரவ விருந்தினர்கள் என்ற முறையில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த இருக்கைகளில் இருவரும் அமர்ந்த பின்னர், கர்னல் சைகை காட்டினன். திரை உயர்ந்தது. மேடையிலிருந்து விரைந்து சென்ற டைரக்டரின் முதுகைக் கூட்டத்திலுள்ளவர்கள் பார்த்தார்கள்.

நாடகம் நடந்து கொண்டிருந்தபொழுது, அதிகாரிகளும் அவர்களது காமினிகளும் சிற்றுண்டிச் சாலையில் எவ்விடத்திலும் காணக்கூடிய கொருன்ஷிய் வழங்கிய வீட்டில் தயாரித்த மது பானத்தைக் குடித்தும், கட்டாயக் கொள்முதல் மூலம் கிடைத்த இனிப்புப் பண்டங்களைத் தின்றும் வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்தனர். நாடகம் முடிவதற்குள்ளாக அவர்கள் மதுவின் போதைக்கு முற்றிலும் இரையாகிவிட்டனர்.

இறுதிக் காட்சி முடிந்தபின், கொரூன்ஷிய் மேடை மீது ஏறினன்.

''சீமாட்டிகளே! கனவான்களே! உடனடியாக நாட்டியம் ஆரம்பமாகும்!'' என்று அவன் நாடக பாணியில் கையை ஆட்டிக்கொண்டே அறிவித்தான்.

எல்லோரும் ஒன்ருகக் கைகொட்டினர். விருந்தாளிகளுக்குக் காவலாயிருந்த சிப்பாய்கள் நாற்காலிகளை அகற்றிவிட்டு, அறையை நாட்டியத்திற்குத் தயார் செய்யச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்பதற்காகக் கூட்டத்தினர் முற்றத்துக்குச் சென்றனர்.

அரை மணி நேரத்துக்குப்பின், களியாட்ட மன்றமாக தியேட்டர் காட்சியளித்தது.

பெத்லியூரா அதிகாரிகள் வெப்பத்தால் சிவந்த சுந்தர மங்கையருடன் 'கொப்பாக்' நடனம் ஆடினர்கள். அவர்களுடைய கனத்த பூட்ஸுகள் தரையைத் தாக்கிச் செய்த பேரொலி தியேட்டரின் சிதைந்த சுவர்களை ஆடச்செய்தது.

அதே சமயத்தில், ஆயுதம் தரித்த ஒரு குதிரைக் குழு மாவுமில் அருகில் நகரத்தை வந்து சேர்ந்திருந்தது. நகர எல்லையில் காவல் காத்து வந்த பாராக்காரர்கள் அலறிப் புடைத்துக்கொண்டு, யந்திரத் துப்பாக்கிகளை உபயோகம் செய்வதற்குத் தயாரானர்கள். துப்பாக்கிகளை குண்டுகளால் நிரப்பும் பொழுது ஏற்பட்ட சப்தம் இரவுநேரத்தில் தெளிவாகக் கேட்டது. அந்த



இருட்டிலே, ஒரு கண்டிப்பான அறைகூவல் எழுந்தது:

''நில்! அங்கு போவது யார்?''

இரண்டு கரிய வடிவங்கள் இருட்டிலிருந்து வேறுபட்டுத் தோன்றின. அவர்களில் ஒருவன் முன்வந்து கம்மிப்போன தடித்தக் குரலில் கர்ஜித்தான்:

''தலைவன் பாவ்லியூக்கும் அவனது படையும். நீங்கள் யார்? கோலுபின் ஆட்களா?''

''ஆம்!'' என்று முன்னுக்கு வந்துநின்ற ஒரு அதிகாரி விடை தந்தான்.

''என் ஆட்கள் எங்கு தங்க முடியும்?'' என்று பாவ்லியூக் கேட்டான்.

''நான் உடனே தலைமைக் காரியாலயத்துக்கு போன் செய்கிறேன்'' என்று கூறிவிட்டு, அந்த அதிகாரி சாலை யோரத்திலிருந்த சிறு குடிசைக்குள் சென்றான்.

ஒரு நிமிஷம் கழித்து, அவன் வெளியே வந்து கட்டளை பிறப்பித்தான்.

''சாலையிலிருந்து யந்திரத் துப்பாக்கிகளை அகற்றுங்கள்! பாவ்லியூக் அவர்கள் உள்ளே வரட்டும்!''

ஒளி மயமாகவிருந்த தியேட்டருக்கு முன்னால், பாவ்லியூக் குதிரையை நிறுத்தினான். தியேட்டரின் வெளியே பலர் காற்று வாங்கிக்கொண்டு உல்லாசமாக உலவுவதைக் கண்டான். தன் பக்கத்தில் வந்த அதிகாரியை நோக்கி, ''ஏதோ தமாஷ் நடக்கிறதென்று தெரிகிறது. நாமும்

இறங்கிச் செல்வோம். களியாட்டத்தில் கலந்து கொள்வோம். பெண்களுடன் சிறிது நடை போடு வோம். உள்ளே ஏராளமான பெண்கள் இருக் கிருர்கள்'' என்ருன். பிறகு, பின்புறம் வந்த ஒருவனைப் பார்த்து, ''ஏ, ஸ்தலேஷ்கோ! நகர மக்களின் வீடுகளில் வீரர்கள் தங்குவதற்கு ஏற் பாடு செய்! நாங்கள் இங்கு தங்கிவிட்டு வருகி ருேம்'' என்று சொல்லி விட்டு, ''காவல்படை என்னுடனிருக்கட்டும்!'' என்று கூறினுன். திகைத் துத் தடுமாறிய குதிரையிலிருந்து அவன் இறங்கி ஞன்.

தியேட்டர் வாசலில் ஆயுதமேந்திய பெத் லியூரா ஆட்கள் இருவர் பாவ்லியூக்கை நிறுத்தி ஞர்கள்.

''டிக்கட் எங்கே?'' என்று அவர்கள் கேட் டார்கள்.

பாவ்லியூக் அவர்களை ஏளனத்துடன் பார்த் தான்; ஒருவனைத் தோளால் தள்ளினுன். அவ னுடன் வந்த பன்னிருவரும் அவனைப் பின்பற்றி ஞர்கள். அவர்கள் எல்லோரும் தங்கள் குதிரை களை வெளி வேலியில் கட்டி வைத்திருந்தார்கள்.

தியேட்டரில் புதிதாக வந்தவர்களை அனை வரும் உடனடியாகக் கவனித்துவிட்டனர். குறிப் பாக, பாவ்லியூக்கின் பருத்த சரீரம் எடுப்பாயிருந் தது. அவன், அதிகாரிகள் அணியும் உயர்ந்த துணிக் கோட் அணிந்திருந்தான்; குதிரைப்படை யினர் அணியும் நீல நிறக் கால்சட்டையும், ரோ மம் மிகுந்த கம்பளிக் குல்லாயும் தரித்திருந்தான்.

தோளிலிருந்து தொங்கிய தோல்வாரில் ஒரு பிஸ்டல் தொங்கியது. அவனது சட்டைப் பையிலிருந்து ஒரு கைக்குண்டு வெளியில் நீட்டிக் கொண்டிருந்தது.

கோலுபின் உதவியாளன் வெறிபிடித்தது போல் நடனமாடிக் கொண்டிருந்த அந்த இடத்தில் ஒவ்வொருவரும் பாவ்லியூக்கைச் சுட்டிக் காட்டி, ''அது யார்? அது யார்?'' என்று ஒருவரை ஒருவர் இரகசியமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவனுடன் பாதிரியின் மூத்த பெண் ஆன்ஞ நாட்டியமாடிக் கொண்டிருந்தாள். அவள் உணர்விழந்து மெய்மறந்து சுழன்று கொண்டிருந்தாள். அவளது ஸ்கர்ட் அவள் ஆடும் வேகத்தில் மேலே தூக்கியதால், வெளியே தெரிந்த பட்டிஞலான அவளது உள்ளாடை சுற்றியிருந்த வீரர்களின் மனத்தைக் கவர்ந்தது.

பாவ்லியூக் தன் தோளால் இடித்து கூட்டத்தில் வழி செய்து கொண்டு, நடன அரங்கின் மையத்திற்கு வந்தான்.

பாவ்லியூக் பளபளவென்று பிரகாசிக்கும் கண்களால் பாதிரி மகளின் கால்களை வெறித்துப் பார்த்து, உலர்ந்த உதடுகளை நாக்கால் தடவிக் கொண்டான். அதன்பின், நாட்டிய அரங்கை நேராகக் கடந்து, வாத்தியங்கள் நாதம் பொழிந்த மேடைக்குச் சென்ருன். பின்னிவிடப்பட்ட சவாரிச் சவுக்கைச் சுண்டிவிட்டுக் கொண்டான்

''ஜல்தி! 'கொப்பாக்' நடனத்துக்கு வாத்தியங்கள் இசை பொழிய வேண்டும்!'' என்று உரக்கக் கூவினன்.

இசைக்குழுத் தலைவன் இந்த உத்திரவைப் பொருட்படுத்தவில்லை.

பாவ்லியூக்கின் கை சட்டென்று இயங்கியது. சவுக்கடி இசைக்குழுத் தலைவனது முதுகைக் கீறியது. திடீரென்று ஒரு பாம்பு கடித்தது போல், குழுத்தலைவன் தாவிக் குதித்தான். இசை நின்றது. தியேட்டர் அமைதியில் ஆழ்ந்தது.

''என்ன துடுக்கு!'' என்று சிற்றுண்டிக் கடைக்காரனின் மகள் சீறினள். பக்கத்தில் அமர்ந்திருந்த கோலுபின் கையைப் பற்றிக்கொண்டே, ''இதை அனுமதிக்கக் கூடாது'' என்று அவள் கூக்குரலிட்டாள்.

கோலுப் மிடுக்குடன் எழுந்தான். ஒரு நாற்காலியை உதைத்து எறிந்தான்; மூன்று அடி முன் சென்று, பாவ்லியூக்கின் வெகு அருகில் சென்று நின்ருன். அந்தப் புதியவனை அவன் உடனே அறிந்து கொண்டான். அதிகாரத்துக்காகத் தன்னுடன் போட்டியிடத் துணிந்திருக்கும் பாவ்லியூக்கிடம் அவனுக்குப் பழம்பகைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டியதாகவும் இருந்தது. ஒரு வாரத்துக்கு முன்தான், பாவ்லியூக் கர்னல் கோலுபுக்கு எதிராக ஒரு கீழ்த்தரமான சூழ்ச்சி செய்தான். பல தடவைகள் கோலுபின் பட்டாளத்தைச் சிதறடித்த ஒரு செஞ்சேனை ரெஜிமென்டுடன் கோலுபின் ஆட்கள் முழு மூச்சுடன் போரிட்டுக்கொண்டிருந்த

பொழுது, பாவ்லியூக் போல்ஷெவிக்குகளைப் பின்புறமிருந்து தாக்குவதற்குப் பதிலாக ஒரு பேட்டைக்குள் புகுந்து அங்கிருந்த ஒரு சிறிய வலிவற்ற எல்லைக் காவல்படையை முறியடித்துவிட்டு, காப்புப் படையை நிறுத்திவிட்டு அந்தப் பேட்டையைச் சூறையாடலானான். அவன் உண்மையான பெத்லியூராவின் பின்பற்றுவோன் என்ற முறையில் யூதர்களைத் தான் முக்கியமாக இம்சித்து வழிப்பறி செய்தான். அந்தச் சமயத்தில், செம்படை வீரர்கள் கோலுப் பட்டாளத்தின் வலது விலாப்புறத்தைத் தாக்கிச் சிதறடித்துவிட்டு, முற்றுகையிலிருந்து தப்பிவிட்டனர்.

இப்பொழுது இந்த மண்டைக்கனம் பிடித்த சிறு அதிகாரியாகிய பாவ்லியூக் தானிருக்கும் நாடகக்கொட்டகைக்கே வந்து விட்டான்; கர்னல் கோலுப் கண்ணெதிரில் அவனுடைய இசைக் குழுத் தலைவனைத் தாக்கும் அளவுக்குத் துணிவு கொண்டுவிட்டான். முடியாது! இதை அனுமதிக்க அவனால் முடியாது. இந்தக் கர்வம் பிடித்த குட்டித் தலைவனைத் தற்பொழுது அடக்காவிட்டால், தன் ஆட்களின் மதிப்பைத் தான் இழக்க நேரிடும் என்பதைக் கர்னல் கோலுப் உணர்ந்தான்.

பல விநாடிகள், ஒருவரை ஒருவர் வெறித்துப் பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்தனர்.

ஒரு கரத்தால் தன் வாளின் கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு, மற்றொரு கரத்தால் தன் பையிலிருந்த கைத்துப்பாக்கியின் குதிரையைப்

பிடித்துக் கொண்டு, கோலுப் திடீரென்று இரைந்து கூறினன்:

''போக்கிரிப் பயலே! என் ஆட்கள் மீது கைவைக்கும் அளவுக்குத் துணிந்துவிட்டாயா?''

பாவ்லியூக்கின் கரம் அவனது கைத்துப் பாக்கியைப் பிடித்துக்கொள்ள விரைந்தது.

''கோலுப், நாவை அடக்கிப் பேசு! துள்ளாதே! துள்ளினுல் இடறி விழுந்து விடுவாய்! என் உணர்ச்சிகளைப் புண்படுத்தாதே! நான் என் அமைதியை இழந்து விடுவேன்!''

கோலுபுக்கு ஆத்திரம் தலைக்கேறியது.

''அவர்களை வெளியில் தள்ளுங்கள்! ஒவ்வொருவருக்கும் சவுக்கால் இருபத்தைந்து அடி கொடுங்கள்!'' என்று அவன் கூவினன்.

கோலுபின் அதிகாரிகள் வேட்டை நாய்க் கூட்டம் மாதிரி பாவ்லியூக் கோஷ்டி மீது பாய்ந்தனர்.

ஒரு மின்சார பல்பைத் தரைமீது வீசி எறிந்தால் உண்டாகும் ஒலியுடன் ஒரு குண்டு வெடித்தது. இரண்டு நாய்க்கூட்டங்களைப் போல, கோலுபின் அதிகாரிகளும் பாவ்லியூக் கோஷ்டியும் தாக்கிக் கொண்டு சுற்றிச் சுழன்றனர். அந்த ரகளையில், ஒருவரை ஒருவர் வாளால் கீறிக்கொண்டார்கள்; ஒருவர் ஒருவருடன் தலை முடியையும், கழுத்தையும் பிடித்துக் கொண்டுக் சண்டையிட்டார்கள். பெண்களோ, ஈட்டியால் குத்தப்பட்ட பன்றிகளைப்போலக் கிலிபிடித்துக் கதறினர்கள். சண்டை நடக்குமிடத்தை விட்டுச் சிதறி ஓடினர்கள்.

சில நிமிஷங்களில் கர்னல் கோலுபுடைய ஆட்கள் பாவ்லியூக் கோஷ்டியை முறியடித்து, நிராயுதபாணியாக்கி, தியேட்டரிலிருந்து தள்ளி, வீதிக்கு விரட்டினர்.

இந்தச் சண்டையில் பாவ்லியூக் குல்லாயை இழந்தான். அவனது முகத்தில் இரத்தம் சுண்டியது. அவன் ஆயுதங்களைப் பறிகொடுத்துவிட்டான். ஆத்திர வெறியின் வசப்பட்டிருந்தான். அவனும் அவனுடைய ஆட்களும் சேணத்தின்மீது பாய்ந்து, ஏறினர். தெருவில் குதிரைகள் விரைந்தோடின.

மாலை இன்பம் சிதறுண்டு போய்விட்டது. இவ்வளவுக்கும் பிறகு, களியாட்டமாட எவரும் விரும்பவில்லை. பெண்கள் நடனமாட மறுத்தனர்; வீட்டுக்குப் போக வேண்டுமென்று பிடிவாதம் செய்தனர். ஆனால் கோலுப் அதற்கு இணங்க அடியோடு மறுத்து விட்டான்.

''வாசலில் காவல் போடு! ஒருவரும் தியேட்டரை விட்டுப் போகக் கூடாது!'' என்று அவன் உத்திரவிட்டான்.

கொருன்ஷிய் தலைவனது உத்திரவை நிறைவேற்றுவதற்கு விரைந்தான்.

''சீமாட்டிகளே! கனவான்களே! நாளைச் சூரியோதயம்வரை நாட்டியம் நீடிக்கும்!'' என்று அலை அலையாக எழுந்த ஆட்சேபணைகளுக்குப் பிடிவாதமாகப் பதில் கூறி, ''முதலில் நானே வால்ட்ஸ் நடனத்தை ஆடுவேன்!'' என்றும் கோலுப் கூறினான்.

மீண்டும் வாத்தியங்கள் முழங்கின. ஆனால் அதன் பின் அன்று இரவு பழைய ஓட்டமும் துள்ளலும் களியும் இல்லை.

கர்னல் கோலுபும் பாதிரி மகளும் நாடக அரங்கில் ஒரு தடவை சுழல்வதற்குள், காவற் காரர்கள் ''பாவ்லியூக் தியேட்டரை முற்றுகை யிடுகிறான்'' என்று கத்திக்கொண்டே ஹாலுக்குள் ஓடி வந்தனர்.

அதே சமயத்தில், தெருப் பக்கமிருந்த ஜன்னலின் கண்ணாடி பேரொலியுடன் உடைந்தது, அதன் சட்டத்தின் வழியே ஒரு தட்டை மூக்கு யந்திரத்துப்பாக்கி உள்ளே நுழைந்தது. அது இங்கும் அங்கும் நகர்ந்து கொண்டேயிருந்தது. அதைக் கண்டவுடன், பேய் பிசாசைக் கண்டவர் கள் மாதிரி, தியேட்டரிலிருந்த ஜனங்கள் அலறிப் புடைத்துக் கொண்டு, ஹாலின் மையத்துக்கு ஓடினார்கள். அங்கும் இங்குமாக ஓடிக்கொண் டிருந்த உருவங்களைத் தேடிப் பிடித்து அவர்களை நோக்கி யந்திரத்துப்பாக்கி நகர்ந்து கொண்டிருந் தது.

கூரையில் இருந்த ஆயிரம் 'காண்டில் பவர்' விளக்கின்மீது கொருன்ஷிய் சுட்டான். அது ஒரு வெடிகுண்டு போல் வெடித்தது. ஹாலில் இருந்த வர்களின் தலைகளில் கண்ணாடித் துண்டுகள் மட மடவென்று விழுந்தன.

ஹாலை இருள் கவ்விற்று. வெளியில் தெருவி லிருந்து யாரோ ஒருவன் உரக்கக் கூவினான்:

''எல்லோரும் வெளியே வாருங்கள்!''

அந்தக் கூச்சலைத் தொடர்ந்து நீசத்தனமான வசைமாரியைப் பலர் பொழிந்தனர்.

பெண்கள் வலிப்பு நோய் கண்டவர்களைப் போல வீறிட்டுக் கதற, ஹாலில் இங்கு அங்குமாக விரைந்து நடந்து கொண்டு, பல்வேறு இடங்களில் நின்று கொண்டிருந்த தனது அதிகாரிகளைத் திரட்டுவதற்காக கோலுப் கோபத்துடன் கட்டளைகளை முழங்க, வெளியில் வெடிகள் வெடிக்க—எங்கும் ஒரே அமளிதுமளியாக இருந்தது. அந்தக் குழப்பத்துக்கிடையே, கொரூன்ஷிய் பின்புறக் கதவு வழியே தப்பி ஓடியதை எவரும் கவனிக்கவில்லை. அவன் தலைதெறிக்க ஓடி, கோலுபின் அலுவலகத்தை அடைந்தான்.

அரைமணி நேரத்திற்குப் பின், நகரத்தில் போராட்டம் முழுமூச்சுடன் நடந்துகொண்டிருந்தது. துப்பாக்கிப் பிரயோகத்தின் பட்பட், படபட ஒலி நிற்கவேயில்லை. அதனோடு யந்திரத்துப்பாக்கிகளின் கடகடச் சத்தமும் சேர்ந்து இரவின் அமைதியைக் குலைத்தது. மதிமயங்கிய நகர மாந்தர் பேரொலியைக் கேட்டுத் திகைத்து, தம் கதகதப்பான படுக்கைகளிலிருந்து எழுந்துவந்து, ஜன்னல் கண்ணாடிகளோடு ஒட்டிக்கொண்டு நின்று தெருச் சண்டையைப் பார்க்கத் தொடங்கினர்.

கடைசியில் துப்பாக்கிப் பிரயோக ஒலி குறைந்தது. ஒரே ஒரு யந்திரத்துப்பாக்கி மட்டும், தன்னந்தனியாக ஒரு நாய் குரைப்பது மாதிரி, விட்டுவிட்டுச் சுட்டுக்கொண்டிருந்தது. அதுவும் நகர் வெளிப்புறத்தில் எங்கோ ஓரிடத்தில்தான்.

காலையில் கதிரவன் உதித்தபொழுது சண்டை முற்றிலும் நின்றுவிட்டது.

ஒரு 'பாக்ரோம்'* நடக்கப் போகிறதென்ற வதந்தி நகரத்தில் பரவியது. அந்த வதந்தி, ஆற்றுக்குச் செல்லும்செங்குத்தானஅழுக்கடைந்த பாதைகளில் தாறு மாருகக் கட்டப்பட்ட சிறிய, தாழ்ந்த, கோணலான ஜன்னல்களைக் கொண்ட, யூதர்களின் வீடுகள் வரை அடைந்தது. 'வீடுகள்' என்று அழைக்கப்பட்ட இம்மாதிரியான டப்பாக்களில் யூதர்கள் கற்பனைக் கெட்டாத முறையில் நெருக்கமாக வாழ்ந்தார்கள்.

ஸெர்யோஷா ஓராண்டு காலமாக வேலை பார்த்து வந்த அந்த அச்சகத்தில் அச்சுக் கோப்பவர்களும், ஏனைய பிற சிப்பந்திகளும் யூதர்கள். ஸெர்யோஷா அவர்களுடன் உறவினர்களிடம் பழகுவது போல் நெருங்கிக் பழகி வந்தான். பாசத்தால் பிணைந்த ஒரு குடும்பத்தினர் போல் அவர்கள் யாவரும், நன்கு உண்டு கொழுத்த, சுய திருப்தி மனப்பான்மை கொண்ட, தங்கள் முதலாளி பிலியூம்ஷ்டைனை எதிர்த்தனர். அச்சகத்தின் முதலாளிக்கும், அதன் வேலையாளர்க்கும்

---

* **பாக்ரோம்** — ''அழிவு'' என்று பொருளுள்ள ருஷ்யச் சொல். ஏதாவது ஒரு இனத்தினருக்கு எதிராகப் பிற்போக்காளர்களாலும் இனவெறியர்களாலும் நடத்தப்படும் கொலை, சூறையாடுதல் போன்ற இதரப் பிற நடவடிக்கைகளுக்கு ''பாக்ரோம்'' என்று பெயர்.

இடையே இடைவிடாத போராட்டம் நடந்து கொண்டிருந்தது. தொழிலாளர்களின் கூலியைக் குறைக்கவும் தன் லாபத்தைப் பெருக்கவும் பிலியூம்ஷ்டைன் தன்னால் இயன்றதனைத்தும் செய்தான். அச்சுத் தொழிலாளர்கள் பல தடவைகள் வேலை நிறுத்தம் செய்தனர். இரண்டு மூன்று வாரங்களுக்குக்கூட, அச்சகம் தொடர்ச்சியாக முடங்கிக்கிடந்ததுண்டு. அந்த அச்சகத்தில் பதினான்கு தொழிலாளர்கள் இருந்தனர். அவர்களில் இளையவன் ஸெர்யோஷா. கையால் ஓட்டும் அச்சகத்தின் சக்கரத்தை தினம் பன்னிரண்டு மணிநேரம் சுற்றிக்கொண்டிருப்பதே ஸெர்யோஷாவின் வேலை.

இன்று, சகோதரத் தொழிலாளர்கள் அமைதியற்று இருப்பதை ஸெர்யோஷா கண்டான். கடந்த பல மாதங்களாகவே இந்தக் கொந்தளிப்புக் காலத்தில், ''பெருஞ் சேனாதிபதி'' பெத்லியூராவின் பிரகடனங்களை அப்போதைக்கப்போது அச்சடிப்பதைத் தவிர, அச்சகத்தில் வேலை ஒன்றுமில்லை என்றே சொல்லலாம்.

காசநோய்க்கு ஆளாகியிருந்த மேந்தெல் என்ற அச்சுக்கோப்பவன் ஸெர்யோஷாவை ஒரு மூலைக்கு இட்டுச் சென்றான்.

'' 'பாக்ரோம்' நடக்கப் போகிறதென்பதை நீ அறிவாயா?'' என்று அவன் துயரம் நிறைந்த கண்களால் பையனைப் பார்த்துக்கொண்டே கேட்டான்.

ஸெர்யோஷா வியப்புற்றான்.

''அப்படியா? எனக்குத் தெரியாது'' என்ருன்.

மேந்தெல், மஞ்சள் படர்ந்திருந்த தன் உலர்ந்த கையை ஸெர்யோஷாவின் தோள்மீது போட்டுக் கொண்டு நம்பிக்கை தொனிக்கும் வகையில் உருக்கமாகப் பேசத் தொடங்கினுன்:

'''பாக்ரோம்' நடக்கப் போவது உறுதி. யூதர்கள் அடி உதைமிதிக்கு ஆளாகப் போகிருர்கள். இந்தக் கொடுமை நிகழும்பொழுது, நீ உன் தோழர்களுக்கு உதவி செய்வாயா என்பதைத் தான் நான் அறிய விரும்புகிறேன்.''

''நிச்சயமாக உதவுவேன். என்னுல் எதெல்லாம் முடியுமோ, அதெல்லாம் செய்வேன். மேந்தெல், நான் என்ன செய்யவேண்டும்?''

அச்சமயம் அச்சுக் கோப்பவர்கள் இந்த உரையாடலே உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

''ஸெர்யோஷா, நீ நல்ல பையன். நாங்கள் உன்னே நம்புகிறேம். பார்க்கப்போனுல், உன் தந்தையும் எங்களேப்போல ஒரு தொழிலாளி. சில கிழவர்களும் கிழவிகளும் மறைந்திருப்பதற்கு அவர் தம் வீட்டில் இடம் தருவாரா என்று ஓடிப் போய்க் கேட்டுத் தெரிந்துவா. இதே போன்ற உதவியைச் செய்யக்கூடியவர் வேறு எவராவது இருக்கிருர்களா என்பதையும் உன் குடும்பத்தினரிடம் கேட்டறிந்துவா. தற்சமயம் இந்தக் கொள்ளேக்கூட்டத்தார் ருஷ்யர்களேத் தாக்கமாட்டார்கள். ஸெர்யோஷா, ஓடிப்போய்வா! வீண்பொழுது போக்குவதற்கு நேரமில்லே.''

''மேந்தெல், நீ என் உதவியை நம்பலாம், நான் பாவெலேயும் கிலீமையும் கூடப் பார்த்து வருகிறேன். அவர்களது குடும்பத்தினரும் சில ருக்கு மறைவிடம் தந்து உதவுவார்கள்.''

''ஒரு நிமிடம்!'' என்று சொல்லிக் கிளம்பிக் கொண்டிருந்த ஸெர்யோஷாவை மேந்தெல் நிறுத்திஞன். ''பாவெல், கிலீம் என்பவர்கள் யார்? உனக்கு அவர்களே நன்கு தெரியுமா?''

ஸெர்யோஷா நம்பிக்கையுடன் தலேயை ஆட்டிஞன்.

''நன்ருகத் தெரியும்.அவர்கள் எனது உயிர்த் தோழர்கள். பாவ்கா கர்ச்சாகினின் தமையன், ஒரு கொல்லன்.''

''ஓ! கர்ச்சாகிஞ? அவனே நான் நன்கு அறிவேன். ஒரே வீட்டில் அவனும் நானும் குடியிருந்தோம். சரி, நீ கர்ச்சாகின் குடும்பத்தைப் பார்க்கலாம். ஸெர்யோஷா, உடனே கிளம்பிச் சீக்கிரத்தில் திரும்பிவா.''

ஸெர்யோஷா சிட்டாய்ப் பறந்தான்.

பாவ்லியூக் ஆட்களுக்கும் கோலுபின் ஆட்களுக்கும் போர் நடந்து முடிந்த நாளிலிருந்து மூன்ருவது நாள், 'பாக்ரோம்' தொடங்கியது.

இரவுப் போராட்டத்தில் இருபது ஆட்களே இழந்த பாவ்லியூக் கும்பல் ஷெப்பெத்தோவ்க்காவிலிருந்து ஓடிவிட்டு அருகே உள்ள பேட்டையைப் பிடித்துக் கொண்டது. கோலுப் படையினரும் இருபது ஆட்களே இழந்தனர்.

அதே நாளில், கொல்லப்பட்டவர்கள் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டனர். ஆர்ப்பாட்டம் எதுவுமில்லாமல் அவர்கள் அடக்கம் செய்யப்பட்டனர். ஏனெனில், இந்த விவகாரத்தில் கர்னல் கோலுப் பெருமை பாராட்டுவதற்கு ஒன்றுமில்லை. பெத்லியூராவின் இரு தலைவர்கள் வீதி நாய்கள் மாதிரி சண்டை போட்டனர். ஒருவன் கழுத்தைத் திருக இன்னொருவன் முயற்சித்தான். எனவே, சவ அடக்கத்தைப் பற்றிப் பெரிய ஆரவாரம் செய்வது நன்றாயிருக்காது. பாவ்லியூக்கை "சிவப்புக் கொள்ளைக்காரன்" என்று பறைசாற்றி, கொரூன்ஷிய் பொல்யானீத்ஸா அவர்களை மிகவும் ஆடம்பரமாக அடக்கம் செய்ய விரும்பினான். ஆனால் வஸீலிய் பாதிரியார் தலைமையிலிருந்த சோஷலிஸ்ட் புரட்சிவாதிகளின் கமிட்டி அந்த யோசனையை ஆட்சேபித்தது.

சண்டையின் விளைவாக கோலுபின் படையினர் ஏதோ முணுமுணுத்துக் கொண்டேயிருந்தனர். கோலுபின் மெய்க்காவலர் குழுவுக்குத்தான் சேதம் அதிகம்; எனவே அவர்களுக்கிடையே முணுமுணுப்பு அதிகமாயிருந்தது. இந்த அதிருப்தியைப் போக்க வேண்டும் படைவீரர்களுக்குத் தெம்பூட்டி உற்சாகம் தரவேண்டும். இந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக, 'பாக்ரோம்' நடத்தவேண்டும் என்பது கொரூன்ஷியின் யோசனை. இது ஆட்களுக்குக் "கொஞ்சம் பொழுது போக்காக" இருக்குமென்று அவன் ஈரமற்ற நெஞ்சோடு கோலுபிடம் எடுத்துரைத்தான்.

ஆட்களிடையே ஏற்பட்டுள்ள அதிருப்தியை நீக்குவதற்கு இது அவசியம் என்று அவன் வாதாடினான். கர்னல் கோலுபைப் பொறுத்தவரை, சிற்றுண்டிச் சாலைக் கடைக்காரன் மகளைத் தான் திருமணம் செய்துகொள்ளவிருக்கும் சமயத்தில், ஊரின் அமைதி கெடுவதை அவன் விரும்பவில்லை. எனினும் அவன் இறுதியாக விட்டுகொடுத்தான்; 'பாக்ரோம்' திட்டத்துக்குப் பச்சை விளக்குக் காட்டினான்.

சமீபத்தில்தான் கர்னல் கோலுப் சோஷலிஸ்ட் புரட்சிவாதக் கட்சியில் சேர்ந்திருந்தான். அதை முன்னிட்டும், அவன் 'பாக்ரோமை' அனுமதிப்பதற்குத் தயங்கினான். அவனுடைய பகைவர்கள் அவன் பெயரைச் சந்திக்கிழுத்து, அவனை அவதூருகப் பேசலாம். ''பெருஞ்சேனாதிபதி'' பெத்லியூராவிடமும் அவன் மீது கண்டிப்பாகப் பழிசாற்றுவார்கள். ஆனால் கோலுப், பெத்லியூராவைப் பெரிதும் சார்ந்திருப்பதாகக் கூற முடியாது. ஏனெனில், அவன் தன் காரியங்களைத் தன் பலத்தைக்கொண்டே நடத்திவந்தான். மேலும் தனக்குக்கீழ்த் தொண்டூழியம் செய்கிறவர்கள் எத்தகைய கழிசடைகள் என்பதை பெத்லியூராவும் நன்கறிவான். அவனே, தன் 'அரசாங்கத்' தேவைக்கென 'கொள்முதல்' எனப்படும் வழிப்பறிப் பொருளிலிருந்து குட்டித் தலைவர்கள் பங்கு கொடுக்க வேண்டும் என்று அடிக்கடி கோரியிருக்கிறான். ''பாக்ரோம் வெறியன்'' என்ற பட்டமும் கோலுபுக்குப் புதிதல்ல. இந்தப்

பட்டத்திற்குரிய பல காரியங்களை அவன் முன்பே செய்திருக்கிறான். 'பாக்ரோம்' வெறிச் செயல்களில் அவன் செய்யாதது ஒன்றுமில்லை, எனவே புதுமையாக அவனுக்கு அவப்பெயர் எதுவும் ஏற்படப் போவதில்லை!

அதிகாலையில் சூறையாடல் தொடங்கியது.

ஆதவனது உதயத்துக்கு முன்பாகச் சாம்பல் நிற மூடுபனியில் நகரம் மிதந்தது. தாறுமாறாகக் கட்டப்பட்ட யூதர்களின் வீடுகளை, நீரில் நனைந்த நாடாவைப் போன்று சுற்றி வளைத்துக் கொண்டிருந்த காலியான வீதிகள், உயிர் அற்றுக் காணப்பட்டன. ஜன்னல்களின் கதவுகள் அடைப்பட்டிருந்தன, அவற்றில் திரைகளும் தொங்கிக்கொண்டிருந்தன. அந்த ஜன்னல்கள், பார்வை இழந்த கண்களைப்போல வெறித்து நோக்கின.

வீதியிலிருந்து பார்த்தால், ஜனங்கள் அதிகாலை உறக்கத்தில் ஆழ்ந்திருப்பதாகத் தோன்றியது. ஆனால் அந்த வீடுகளில் ஒருவரும் உறங்கவில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் அனைவரும் உடை அணிந்துகொண்டு வரவிருக்கும் ஆபத்துக்குத் தம்மை தயார் செய்துகொண்டு, முடங்கிக் கிடந்தனர். என்ன நடக்கிறதென்பதைப் புரிந்து கொள்ள முடியாத இளங் குழந்தைகள் மட்டுமே தத்தம் தாயின் கையில் அமைதியாக உறங்கிக் கொண்டு இருந்தார்கள்.

ஜிப்ஸியின் முகச் சாடை கொண்ட, வாளின் வெட்டால் கன்னத்தின் குறுக்கே ஏற்பட்டிருந்த வடு உடைய ஸலொமீகா, கோலுபின் மெய்க்

காவலர் குழுவுக்குத் தலைவன். அன்று அதிகாலையில் கொரூன்ஷியைத் துயிலெழுப்புவதற்கு மிகவும் கஷ்டப்பட்டான். கொரூன்ஷியுக்கு அன்று விழித்தெழுவது மிகவும் வேதனையாக இருந்தது. இரவெல்லாம் அவன் பயங்கரக் கனவு கண்டான், அவனது மார்பை ஏதோ ஒரு பேய் அழுத்திக் கொண்டிருப்பதைப் போலத் தோன்றியது; அசையவோ, பேசவோ முடியாமல் அவன் தூக்கத்தில் தவித்தான். இந்தத் துர்க்கனவிலிருந்து விடுபடுவது, கொரூன்ஷியுக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. கோரணி காட்டும் கூனிப் பிசாசு இன்னமும் தன் தொண்டையைப் பிராண்டிக் கொண்டிருப்பதாக அவனுக்குத் தோன்றியது. இறுதியில் அவன் வெடித்துவிடும் போல் இடிபட்டுக் கொண்டிருந்த மண்டையைத் தூக்கி ஸலொமீகாவைப் பார்த்தான்.

''எழுந்திரு! வேலை தொடங்குவதற்கு நேரம் வந்துவிட்டது. இன்றும் கொஞ்சங்கூட குடித்திருக்கலாம்!'' என்று கூறிக் கொண்டே, ஸலொமீகா, கொரூன்ஷியின் தோட்களைப் பிடித்து உலுக்கினான்.

கொரூன்ஷியுக்கு நித்திரை நன்றாகக் கலைந்துவிட்டது. அவன் எழுந்து உட்கார்ந்தான். நெஞ்செரிப்பால் அவனது முகம் கோணியிருந்தது. அவன் வாயில் நிறைந்திருந்த கசப்பான எச்சிலை வெளியே துப்பினான்.

''என்ன வேலை?'' என்று அவன் ஒன்றும் புரியாதவனாக ஸலொமீகாவை வினவினான்.

''யூதர்களைக் கிழித்து எறிவதுதான். வேறு என்ன? உனக்குத் தெரியாதா?''

இதைக் கேட்டவுடன், கொரூன்ஷியுக்கு எல்லாம் நினைவுக்கு வந்தது. உண்மையில் அவன் அதைப்பற்றி மறந்துவிட்டான். கர்னல் கோலுப் தன் காதலியுடனும் ஒருசில உயிர்த் தோழருடனும் போய்த் தங்கியிருந்த பண்ணையில் அவர்களும் கொரூன்ஷியும் குடித்த மது கொஞ்சமா? அந்தப் போதையில், கொரூன்ஷிய் 'பாக்ரோமைப்' பற்றி மறந்ததில் வியப்பில்லை.

'பாக்ரோம்' நடக்கும் காலத்தில் டவுனில் இருக்கக்கூடாதென்பதற்காகக் கோலுப் வெளியேறிவிட்டான். தான் இல்லாதபொழுது பிறர் செய்துவிட்ட தவருன காரியம் என்று பிறகு சமாதானம் சொல்லலாமல்லவா? பிறகு கொரூன்ஷிய் எல்லாவற்றையும் சரி கட்டி விடுவான். ஆம், இம்மாதிரிப் ''பொழுதுபோக்குகளை'' ஏற்பாடு செய்து நடத்துவதில் கொரூன்ஷிய் நிபுணன்தான்!

கொரூன்ஷிய் ஒரு வாளி தண்ணீரை எடுத்துத் தன் தலையில் கொட்டிக்கொண்டான். பிறகு அவன் தன்னிலையை அடைந்தான். சிறிது நேரத்தில், அவன் தலைமை அலுவலகத்தில் சுறுசுறுப்பாக உத்திரவிட்டுக் கொண்டிருந்தான்.

நூறு மெய்க்காவலர்களும் குதிரை மீதேறிவிட்டனர். வருமுன் காப்போனை கொரூன்ஷிய் சிக்கல்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகத் தொழிலாளர் குடியிருப்புப் பகுதி, ஸ்டேஷன் ஆகியவற்றுக்கும் நகரத்துக்கும் இடையே காவலர்களை

நிறுத்தினுன். லெஷ்சீன்ஸ்கியின் தோட்டத்தில் ஒரு யந்திரத் துப்பாக்கி சாலையை நோக்கி அமைக்கப்பட்டது. தொழிலாளர்கள் தலையிடத் துணிந்தால் அவர்களை ஈயக் குண்டுகளுடன் சந்திப்பதற்காகவே இந்த ஏற்பாடு.

எல்லாத் தயாரிப்புகளும் பூர்த்தியான பிறகு, கொரூன்ஷியும் ஸலொமீகாவும் குதிரை மீதேறிக் கிளம்பியவுடன், கொரூன்ஷிய் கூறினுன்:

''நில், முக்கியமான விஷயத்தை மறப்பதற்கிருந்தேன். கோலுபுக்குத் திருமணப் பரிசு கொண்டுவருவதற்கு இரண்டு வண்டிகள் தேவை. ஹ-ஹ-ஹா! முதலில் கிடைக்கும் பறிபொருள் தலைவருக்கு! முதலில் கிடைக்கும் மங்கை, ஹ-ஹ-ஹா, அவனுடைய துணைவனுக்கு, அதாவது எனக்கு! மடையா, உனக்குப் புரிந்ததா?''

''மடையன்'' என்ற சொல் ஸலொமீகாவைக் குறித்தது. அவன் தன் மஞ்சள் கண்களால் முறைத்துப் பார்த்தான்.

''ஒவ்வொருவருக்கும் வேண்டியது கிடைக்கும்'' என்று அவன் கூறினுன்.

அவர்கள் சாலை வழியே குதிரைகளைக் குத்திக்கொண்டே விரைந்தனர். கோலுபின் அட்ஜூடன்டும் ஸலொமீகாவும் அந்தக் குதிரை வீரர் கும்பலின் முன்வரிசையில் சென்றனர்.

''பூக்ஸ், ஜவுளி வியாபாரம்'' என்ற துருப்பிடித்த அறிவிப்புப் பலகையைத் தாங்கியஇரண்டு மாடி வீட்டுக்கு முன்னுல் கொரூன்ஷிய் தன்

குதிரையை நிறுத்தியபொழுது மூடுபனி விலகியிருந்தது.

மெலிந்த கால்களையும் சாம்பல் நிறத்தையும் உடைய அவனுடைய குதிரை ஒரு கல்லின் மீது தன் குளம்பைக் குழப்பத்துடன் வைத்தது.

''சரி! ஆண்டவன் அருளுடன் இந்த இடத்தில் நம் வேலையைத் தொடங்குவோம்'' என்று கூறிக்கொண்டே கொரூன்ஷிய் தரையில் குதித்தான்.

தன்னைச் சூழ்ந்து கொண்ட ஆட்களைப் பார்த்து, ''குதிரையிலிருந்து இறங்குங்கள்'' என்று ஆணையிட்டான். ''நாடகம் தொடங்கவிருக்கிறது. யாரையும் அடிக்க வேண்டாம். அதற்கு வேறொரு வேளை வரும். பெண்களைப் பொறுத்தமட்டில் உங்களால் இச்சையை அடக்க முடியுமானல், மாலைவரை பொறுத்திருங்கள்!'' என்று கொரூன்ஷிய் அவர்களிடம் கூறினன்.

அவர்களில் ஒருவன் தன் வலிய பற்களைக் காட்டி விட்டு, ''தலைவரே! உள்ளங்கள் இசைந்தால்?'' என்று வினவினன்.

இதைக் கேட்டவுடன் அனைவரும் உரக்கச் சிரித்தார்கள். வினு எழுப்பியவனைப் போற்றும் முறையில் கொரூன்ஷிய் நோக்கினன்.

''பெண் சம்மதித்துவிட்டால் அது வேறு விஷயம்! பெண்ணின் இணக்கம் இருந்தால் உடனேயே காரியத்தைத் தொடங்கலாம்! அதை யாரும் தடுக்க முடியாது'' என்று அவன் விளக்கம் தந்தான்.

கடையின் கதவு சாத்தியிருந்தது. கொளுன் ஷிய் அதை பலமாக உதைத்தான். ஆளுல் ஓக் மரத்தாலான கதவு கொஞ்சமும் அசையவில்லை.

இந்த இடத்தில் வேலையை ஆரம்பிப்பது தவறு. கொளுன்ஷிய் வீட்டைச் சுற்றிப்போய் கடைக்காரனின் இல்லத்துக்குச் செல்லும் கதவை அடைந்தான். அவன் தன் வாளைக் கையால் பிடித்துக் கொண்டே சென்ருன். ஸலொமீகா அவனைப் பின்தொடர்ந்தான்.

வீட்டிலிருந்தவர்கள் தளவரிசையில் குளம்புகளின் சத்தத்தைக் கேட்டார்கள். கடையின் முன்னிலையில் அந்தச் சப்தம் நின்றதாலும், ஆட்களின் குரல்கள் சுவர்கள் வழியே உள்ளே கேட்டதாலும், ஆபத்து வந்துவிட்டது என்ற அச்சத்தால் அவர்களது இருதயம் நின்றுவிடும் போலிருந்தது, உடல் கல்லாகிவிடும் போலிருந்தது. மூன்று பேர் மட்டுமே வீட்டில் இருந்தனர்.

பூக்ஸ் ஒரு செல்வன். அவன் தன் மனைவியுடனும் மகள்களுடனும் முதல் நாளே ஊரைவிட்டுச் சென்றுவிட்டான். தன் சொத்துக்குக் காவலாக ரீவா என்ற பணிப்பெண்ணை விட்டுச் சென்றிருந்தான். ரீவா மென்மையான சாதுப்பெண். அவளுக்கு வயது பத்தொன்பது. ஒருவருமில்லாத வீட்டில் தனியாக இருப்பதற்கு அவள் அஞ்சுவதைக் கண்ட பூக்ஸ், அவர்கள் திரும்பி வரும்வரையில் ரீவா தன் வயதான பெற்ருேர்களை அழைத்துக் கொண்டு வந்து வைத்துக் கொள்ளலாமென்று கூறிஞன்.

ரீவா வினயமாக ஆட்சேபணையைத் தெரிவிக்க முயற்சித்தாள். அப்பொழுது அந்தச்சூழ்ச்சித் திறன் படைத்த வியாபாரி, அநேகமாக 'பாக்ரோம்' எதுவும் நிகழாதென்றும் ஏழைகளிடம் அவர்கள் ஒன்றும் எதிர்பார்க்க முடியாதென்றும் கூறினன். மேலும், திரும்பி வந்தபின், ரீவா உடைதைத்துக் கொள்வதற்குத் துணி தருவதாகவும் வாக்களித்தான்.

தந்தை, தாய், மகள் மூவரும் பயந்து நடுங்கிக்கொண்டே காத்திருந்தனர். அந்த ஆட்கள் இந்த வீட்டை விட்டுப் போய்விட மாட்டார்களா என்று அவர்கள் ஏங்கினர்கள். ஒருவேளை அவர்களது அனுமானமே தவருயிருக்கலாம். அந்த வீட்டின் முன்னல் குதிரைகள் நின்றதாக அவர்களுக்குத் தோன்றியது உண்மையாகவிருக்காது என்று கூட நினைக்க முயற்சித்தார்கள். ஆனல் கடைக் கதவை இடித்ததால் ஏற்பட்ட ஒலி இந்த அசட்டு நம்பிக்கையைச் சிதறடித்துவிட்டது.

வெள்ளிநிற மயிர் படைத்த கிழவனை தந்தை கதவு வழியில் நின்று கொண்டான். பயந்துவிட்ட குழந்தையின் கண்களைப் போல அவனது நீலவிழிகள் அகன்று திறந்திருந்தன. ஒரு வெறிபிடித்த விசுவாசியின் உணர்ச்சி வேகத்துடன் அவன் எவ்வன்மையும் படைத்த ஜெஹோவாவைப் பிரார்த்தனை செய்தான். ''இந்த இல்லத்தைத் துரதிர்ஷ்டத்திலிருந்து காப்பாற்றவேண்டும்'' என்று அவன் ஆண்டவனைக் கேட்டுக்கொண்டான். அவனுக்குப் பக்கத்தில் நின்ற அவனது

மனைவி இவனது குரலின் ஒலியால் நெருங்கிவந்த காலடிச் சத்தத்தைக் கேட்கவில்லை.

ரீவா தொலை தூரத்திலிருந்த அறைக்கு ஓடினாள். அங்கு இருந்த ஒரு பெரிய அலமாரியின் பின்னால் ஒளிந்து கொண்டாள்.

கதவு உடைந்துவிடும் போல ஒரு அடி. அதைக் கேட்ட கிழவியும் கிழவனும் மெய்சிலிர்த்தனர், உள்ளம் பதறினர், பதைபதைத்து நின்றனர்.

''கதவைத் திற!'' இன்னொரு இடி; முதலடியைவிடப் பலமானது. அதைத் தொடர்ந்து வெஞ்சின வசைமாரி.

ஆனால் உள்ளே இருந்தவர்களோ பயத்தால் சில்லிட்டுப் போயிருந்தனர். அவர்களால் கரத்தைத் தூக்கிக் கதவைத் திறக்க முடியவில்லை.

வெளியே, உலக்கையால் இடிப்பதைப் போல, துப்பாக்கிகளின் பிடங்குகளால் கதவைத் தாக்கினர். உடைபட்ட கதவு கீழே விழுந்தது.

ஆயுதபாணிகள் வீட்டில் குவிந்தனர். வீட்டின் ஒவ்வொரு மூலைக்கும் அவர்கள் சென்றனர். துப்பாக்கிப் பிடங்கினால் அடித்துச் சரக்குகள் உள்ள அறையின் கதவை உடைத்துத் திறந்தனர்.

கொள்ளையடிக்கும் காரியம் தொடங்கியது.

துணி, பூட்ஸ், முதலிய பறிபொருட்கள் வண்டிகளில் குவிந்தபிறகு அவற்றுடன் ஸலொமீகா, கோலுபின் இல்லத்துக்குக் கிளம்பினான். அவன் திரும்பி வந்தபொழுது வீட்டிலிருந்து வீறிட்டு அலறிய சப்தம் கேட்டது.

கொரூன்ஷிய் கொள்ளையடிக்கும் வேலையைத் தன் ஆட்களிடம் விட்டுவிட்டு, கடைக்காரனின் அறைக்குள் சென்ருன். அங்குக் கிழவனும் கிழவியும் பெண்ணும் நிற்பதை அவன் கண்டான். அவனுடைய பசுமையான கண்களின் கூர்த்த பார்வையில் அவர்கள் சிக்கியவுடன், கிழவர்களைப் பார்த்து, ''இந்த இடத்தைவிட்டு ஓடுங்கள்!'' என்று ஆணையிட்டான்.

தாயோ தந்தையோ நகரவில்லை.

கொரூன்ஷிய் ஒரு அடி முன்னுல் வந்தான். தன் வாளை மெல்ல எடுத்தான்.

''அம்மா!'' என்று கேட்போர் இதயத்தைப் பிளக்கும் வகையில் ரீவா அலறினுள். இதுதான் ஸலொமீகாவின் காதில் விழுந்தது.

அந்த அலறலைக் கேட்டவுடன் கொரூன்ஷியின் ஆட்கள் அங்கு ஓடிவந்தார்கள். அவன் அவர்களைப் பார்த்து, ''இந்தக் கிழங்களை வெளியே தள்ளுங்கள்!'' என்று குரைத்தான். அந்த உத்திரவை அவர்கள் நிறைவேற்றியவுடன், அவன் அங்கு வந்த ஸலொமீகாவைப் பார்த்து ''நான் இந்த நங்கையிடம் பேசிவிட்டு வரும் வரையில், கதவுக்குப் பின் இரு'' என்ருன்.

ரீவாவின் கதறுதல் கிழவனின் காதில் விழுந்தபோது அவன் அறையின் கதவை நோக்கிப் பாய்ந்தான். ஆனுல் அவனது மார்பின்மீது பலமான அடி ஒன்று விழுந்தது. அவன் தாங்கமுடியாத வேதனையுடன் தள்ளாடித் தடுமாறி, சுவர்மீது சாய்ந்தான். தன் குட்டிகளுக்காகப் போராடும்

பெண் ஓநாயைப் போல தாய் ஸலொமீகா மீது பாய்ந்தாள்.

''என்னை உள்ளே விடு! என் பெண்ணை என்ன செய்கிறீர்கள்?'' என்று கதறினாள்.

அவள் கதவிடம் செல்லப் போராடிக் கொண்டிருந்தாள். ஸலொமீகா என்னதான் முயற்சித்தாலும் வலிப்பு கண்டவள் போலக் கிழவி அவனது கோட்டைப் பிடித்திருந்த பிடியிலிருந்து அவனால் விடுபட முடியவில்லை.

அதிர்ச்சியாலும் வேதனையாலும் தன்னுணர்வு இழந்திருந்த தந்தை மீண்டும் உணர்வுபெற்றுக் கிழவியின் உதவிக்கு வந்தான்.

''எங்களை விடு, எங்களை விடு! என் பெண்ணே! ஐயோ! என் பெண்ணே!'' என்று பதறினான்.

கிழவனும் கிழவியுமாகச் சேர்ந்து, ஸலொமீகாவைக் கதவிலிருந்து தள்ளுவதில் வெற்றி பெற்றனர். அவன் ஆத்திரம் கொண்டான். கைத்துப்பாக்கியை எடுத்தான். அதன் எஃகுப் பிடியால் கிழவனது நரைத்த தலையைத் தாக்கினான். தந்தை தரையில் விழுந்தான்.

அறைக்குள் ரீவா கதறிக் கொண்டிருந்தாள்.

பைத்தியம் பிடித்த கிழவி வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட பொழுது, தெருவில் அபயக் குரல்களும், மனித உணர்ச்சியற்ற குரல்களும் ஒலித்துக் கொண்டிருந்தன.

வீட்டில் அமைதி நிலவியது.

கொரூன்ஷிய் அறையை விட்டு வெளியே

வந்தான். உள்ளே போவதற்காகக் கைப்பிடியில் கரத்தை வைத்த ஸலொமீகாவை ஏறிட்டு நோக்காமலேயே அவன் உள்ளே போவதைத் தடுத்தான்.

''உள்ளே போய்ப் பயனில்லை. அவள் வாயைத் தலையணை கொண்டு மூட முயற்சித்தேன். மூச்சு அடைத்து இறந்துவிட்டாள்.''

கிழவனின் உடலைத் தாண்டிய கொரூன்ஷிய் கொழுகொழுத்த ஏதே ஒரு திரவத்தில் காலை வைத்தான்.

''அவ்வளவு நல்ல துவக்கம் அல்ல'' என்று முணுமுணுத்துக் கொண்டே வெளியேறினான்.

மற்றவர்கள் ஒரு சொல் பேசாமல் அவனைப் பின்தொடர்ந்தனர். பூமியிலும் படிக்கட்டிலும் இரத்த மயமான காலடி முத்திரைகளை விட்டுச் சென்றனர்.

நகரில் கொள்ளை முழு மூச்சுடன் நடந்தது. அவ்வப்பொழுது பொருட்களைப் பங்குபோட்டுக் கொள்வதில் ஒத்துப்போக முடியாமல்கொள்ளைக் காரர்கள் தமக்குள் காட்டுமிராண்டித்தன மாகச் சண்டையிட்டுக் கொண்டார்கள். அங்கும் இங்கும் வாள்கள் மின்னின. அநேகமாக எல்லா இடங்களிலும் குத்துச் சண்டை நடந்தது.

பீர் கடையிலிருந்து இருபத்தைந்து காலன் பிடிக்கும் ஓக் மர பீப்பாய்களை நடைப்பாதையை நோக்கி உருட்டிவிட்டனர்.

அதன் பிறகு கொள்ளைக்காரர்கள் யூதர்களது வீடுகளை ஆக்கிரமித்தார்கள்.

அந்த வீடுகளில் எத்தகைய எதிர்ப்புமில்லை. அறை அறையாகச் சென்று, முக்கு மூலைகளில் எல்லாம் தேடி, சூறையாடிய பொருள்களுடன் அவர்கள் திரும்பினார்கள். அவர்கள் சென்ற பின் வீடெங்கும் ஒரே துணிக் குவியல்களும், பறவை இறக்கைகளினாலான தலையணைகளிலிருந்தும், மெத்தைகளிலிருந்தும் பறந்துவந்த பூஞ்சிறகுகளும் பரவியிருந்தன. முதல் நாள் இருவரே உயிர் பலியானார்கள். ரீவாவும் அவளது தந்தையும். ஆனால் அடுத்துவந்த இரவில் தவிர்க்க முடியாத கொலைகள் பல நடைபெற்றன.

மாலையிலேயே இந்தக் கழிசடைக் கூட்டம் கண் மூக்குத் தெரியாமல் குடித்துவிட்டு மதி மயங்கி இருந்தது. வெறியர்கள் இரவின் வருகைக்காகக் காத்திருந்தார்கள்.

இருள் அவர்களை எல்லாவிதமான கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுவித்தது. மனிதனை அழிப்பதற்குக் கும்மிருட்டுப் பேருதவி செய்கிறது. குள்ளநரிகள்கூட அந்தகாரத்தைத்தான் அதிகம் விரும்புகின்றன—அவை இரவில்தானே திக்கும் திறனுமற்ற தங்கள் இரைகள்மீது பாய்கின்றன!

இந்த இரண்டு பயங்கர இரவுகளையும் மூன்று பகல்களையும் ஒருபொழுதும் மறக்க முடியாது. இந்த நாட்களில் எத்தனை ஜனங்களுடைய வாழ்வு நசுங்கியது! இந்த இரத்த வெறிபிடித்த காலத்தில் எத்தனை இளைஞர்களின் மயிர் நரைத்தது! இந்தப் பொல்லாத நேரத்தில் பெருக்கெடுத்தோடிய உவர்ப்புக் கண்ணீர்தான் எவ்வளவு! இறந்த

வர்கள்தான் துரதிர்ஷ்டசாலிகள் என்று எப்படிச் சொல்ல முடியும்? தப்பிப் பிழைத்தவர் நிலைதான் என்ன? உயிர் பிரிந்த உற்றார் உறவினரை எண்ணி எண்ணித் துயருற்று அந்த விவரிக்க முடியாத சோகம் உள்ளத்தை அரித்துச் சிதைக்க, ஏற்பட்ட அவமானத்தையும் இழிவையும் எண்ணி எண்ணி வேதனையடையும் நிலையல்லவா அவர்களுடையது? ஆத்மாவை இழந்துவிட்டு வாழ்வது, மரணத்தை விட மேம்பட்டது என்று எவன் சொல்ல முடியும்? இந்தத் துன்பத்திற்காளான இளம் பெண்களின் உடல்கள் சந்துகளில் கிடந்தன. அவற்றின்மீதுதான், இரத்தம் பெருகிக் கட்டி தட்டிய கீறல் காயங்கள் எத்தனை! அந்தப் பெண்கள் அனுபவித்த சித்திரவதைக்கு இந்தப் பிரேதங்களே சான்று பகன்றன! இசிவு நோய்க்கு ஆளானவரைப் போல, வேதனையால் கைகளைத் தலைக்கு மேல் நீட்டிக் கொண்டு கிடந்தன.

ஆற்றோரத்தில் முன்வரிசையில், நௌம் என்ற கொல்லன் வீட்டில்தான், 'பாக்ரோம்' வெறியர்களுக்குத் தக்க பாடம் போதிக்கப்பட்டது. அந்த நீசர்கள் நௌமின் இளம் மனைவி சாராவின் மீது பாய்ந்தபொழுது, நௌம் சும்மாயிருக்கவில்லை. கனமான சம்மட்டியால் அடித்து அடித்து உருக்குபோல் உறுதியான தசைகளைப் பெற்றவன் நௌம்; வலுவான உடற்கட்டு. அவனுக்கு வயது இருபத்து நான்கு. அவன் தன் இல்லாளை நிராதரவாக விடுவானா?

அந்தச் சிறு குடிசையில் ஒரு மூர்க்கத்தன மான சண்டை நடந்தது. சுருங்கிய நேரத்தில் இரண்டு கொலைகாரர்களின் தலைகள் நசுக்கப் பட்ட தர்பூஸ் பழத்தைப் போல துண்டாகப்பட் டன. கடும் கோபம் கொண்ட நௌம் வெகு துணிவுடன் பயங்கரமாக இரண்டு உயிர்களுக்காகப் போராடினன். ''தங்களுக்கு அபாயம்'' என்று உணர்ந்த கொலைகாரர்கள் ஆற்றங்கரைக்கு ஓடினர். அப்பொழுதும் கொல்லன் விடவில்லை. நீண்ட நேரத்துக்குத் துப்பாக்கி வேட்டின் ஒலி நதிக்கரையிலிருந்து வந்து கொண்டிருந்தது. இறு தியில், கொல்லனிடம் ஒரு குண்டுதான் மீந்தது. அதனல் அவன் இல்லாள் சாராவைச் சுட்டுக் கொன்றுவிட்டு, கையில் ஏந்திய பாய்னெட்டுடன் சாவை எதிர்த்துச் சென்றன். ஈயக்குண்டுகள் மழைத் துளிகள்போல அவன் உடலைத் தாக்க அவன் கீழே விழுந்தான், அவனுடைய வாட்ட சாட்டமான உடல் நிலத்தை அழுத்தியது.

வயிருர உண்டு கொழுத்த குதிரைகள் பூட்டிய வண்டிகளில் பணக்கார விவசாயிகள் அக்கம்பக்கத்துக் கிராமங்களிலிருந்து வந்தனர். தமக்குப் பிடித்தமான பொருட்களை எல்லாம் வண்டிகளில் ஏற்றி நிரப்பிக்கொண்டனர். கோலுப் படைப்பிரிவில் இருந்த தமது மக்களும் உற வினரும் காவல் காத்துவர, அவர்கள் வண்டிகளை விரைவாகத் தங்கள் ஊர்களுக்கு ஓட்டினர்கள். விரைந்து சென்றல்தானே, மேலும் ஓரிரண்டு நடை அடித்து அகப்பட்டதைச் சுருட்டலாம்!

அச்சகத் தொழிலாளர்களில் பாதிப் பேரைத் தன் தந்தையின் உதவியுடன் நிலவறையிலும் மேன்மாடத்திலும் மறைத்துவைத்திருந்த ஸெர் யோஷா வீட்டுக்குத் திரும்பும் போக்கில் காய்கறித் தோட்டத்தைத் தாண்டிக் கொண்டிருந்தான். அப்பொழுது, ஒட்டுப்போட்ட நீளக் கோட்டை அணிந்த ஒரு மனிதன், தன் கைகளைச் சுழற்றியபடி ஓடிக்கொண்டிருந்ததை அவன் பார்த்தான்.

தலையில் தொப்பியில்லாமல் ஓடிய அந்தக் கிழவனாகிய யூதரின் முகத்தில் பயத்தால் சவக் களைத் தட்டியிருந்தது. மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கிக்கொண்டு ஓடிய அவனுக்குப் பின்னால் பெத்லியூராக் கொலைகாரன் சாம்பல் குதிரை மீது விரைந்து கொண்டிருந்தான். இருவருக்கும் இடை யே இருந்த தூரம் வேகமாகச் சுருங்கிக் கொண் டேயிருந்தது. அந்தக் கிழவனை வெட்டுவதற்காக அந்த நீசன் முன்பக்கம் சாய்ந்தான். குளம்பு ஒலிகள் நெருங்கிவிட்டதை உணர்ந்த கிழவன், தாக்குதலைத் தவிர்க்க முயற்சிப்பதைப் போலத் தன் கரங்களை உயர்த்தினான். ஸெர்யோஷா சாலைக் குப் பாய்ந்து சென்றான். கிழவனைப் பாதுகாப் பதற்காகக் குதிரைக்கு முன் வந்துவிட்டான்.

''அந்த முதியவரை விட்டுவிடு. கொள்ளைக் கூட்ட நாயே!'' என்று அவன் கூவினான்.

குதிரைமீது அமர்ந்திருந்த நீசன், ஓங்கிய வாளைப் பின்னுக்கு இழுக்க மனமில்லாமல் அதைத் திருப்பி அதன் கூர்மையற்ற பகுதியால் சிறு வனின் தலையைத் தட்டினான்.

அத்தியாயம் ஐந்து

செம்படைகள் ''பெருஞ்சேனுதிபதி'' பெத்லியூராவின் படைகளை நெருக்கிக்கொண்டிருந்தன. முன்னணிக்கு விரைந்து வரும்படி கோலுபின் ரெஜிமென்டுக்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. சின்னஞ்சிறு காவல் படையும் கோலுபின் தலைமைக் காரியாலயமும் நகரத்தில் மிஞ்சியிருந்தன.

ஜனங்கள் கிளர்ந்தெழுந்தனர். யூதர்கள் தற்காலிகமான அமைதியைப் பயன்படுத்திக் கொண்டு இறந்தவர்களை அடக்கம் செய்தனர். யூதர் பேட்டையின் சிறு குடிசைகளில் மீண்டும் வாழ்வு தலைகாட்டியது.

அமைதிநிறைந்த மாலை நேரங்களில் எங்கிருந்தோ அதிரொலி கேட்டுக் கொண்டிருந்தது. அருகாமையில் சண்டை நடந்துகொண்டிருக்கிறது என்று இவ்வொலி அறிவித்தது.

ரயில்வே தொழிலாளர்களும் வேலையை விட்டு விட்டு, கிராமப்புறங்களில் வேலை தேடி அலைந்து கொண்டிருந்தனர்.

உயர்நிலைப் பள்ளி மூடப்பட்டது.

டவுனில் ராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.

அன்றைய இரவு இருள் சூழ்ந்து கோரமாகக் காட்சி அளித்தது. கண்களை எவ்வளவுதான் வேதனைக்குள்ளாக்கினுலும் அந்த மையிருட்டில்

எதையும் பார்க்க முடியாது. எந்த நேரத்திலும் குழிகுட்டையில் விழுந்து எலும்பை முறித்துக் கொள்வோமென்று எதிர்பார்த்துக்கொண்டே, குருட்டுத்தனமாகக் கால் போன போக்கில்தான் நடக்க வேண்டும்.

இந்தக் கும்மிருட்டு நேரத்தில் வெளியில் செல்லக் கூடாதென்பதும், வீட்டிலேயே உட்கார்ந்திருப்பது தான் மேலானது என்பதும், நகரவாசிக்கு நன்கு தெரியும். முடிந்தால், விளக்கைக் கூட ஏற்ருமல் இருப்பான். ஏனெனில், விளக்கின் வெளிச்சம் விரும்பத்தகாத விருந்தினர்களை வசீகரித்துவிடலாம். எல்லாவற்றையும்விட இருட்டில் எவ்வளவோ நல்லது. அமைதியாக இருக்கும். ஆனல் எப்பொழுதும் அமைதியற்று இருப்பவர்களும் உண்டு. அவர்கள் விரும்பினல் வீதியில் நடந்து செல்லத் துணியட்டும்! அதைப்பற்றி நகரவாசிக்குக் கவலையில்லை. ஆனல் அவன் வெளியே செல்லும் அபாயத்துக்கு உட்படமாட்டான்! ஆம்! தலைபோகிற காரியமாயிருந்தாலும் இருட்டில் வெளியே செல்லமாட்டான்!

இத்தகைய இரவு ஒன்றில் ஒருவன் வெளியே நடமாடிக் கொண்டிருந்தான்.

அவன் பாவெல் வீட்டுக்குச் சென்ருன். அந்த வீட்டு ஜன்னலை எச்சரிக்கையுடன் தட்டினன். ஒரு பதிலும் இல்லை. எனவே, மேலும் அழுத்தமாகத் தட்டினன்.

ஒரு விநோதமான உருவம்—மனிதப் பிறவியல்ல—தன் மீது குறிவைத்து யந்திரத்துப்பாக்கி

யைப் பிடித்திருப்பதாகப் பாவெல் கனவு கண்டான். அவன் ஓட விரும்பினுன். ஆனுல் ஓடுவதற்கு இடம் இல்லை. யந்திரத்துப்பாக்கி கடகடவென்று ஒலித்தது.

பாவெலின் துயில் கலைந்தது. யாரோ ஜன்னலைக் கடகடவென்று தட்டுவதை உணர்ந்தான்.

அவன் படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்தான். தட்டுவது யார் என்பதை அறிய ஜன்னலுக்குச் சென்முன். ஆனுல் தெளிவில்லாத ஒரு கரிய வடிவத்தையே அவன் பார்க்க முடிந்தது.

வீட்டில் அவன் தன்னந்தனியாக இருந்தான். அவனது தாய், அவளது மூத்த மகளின் வீட்டுக்குப் போயிருந்தாள் (அந்தச் சகோதரியின் கணவனுக்குச் சீனி உற்பத்திசாலையில் மெக்கானிக் வேலை). ஆர்த்தியோம், பக்கத்துக் கிராமமொன்றில் கொல்லுப் பட்டறையில் சம்மட்டியைச் சுழற்றும் வேலைசெய்து பிழைத்துக் கொண்டிருந்தான்.

ஜன்னலைத் தட்டுவது யார்? ஆர்த்தியோம் ஆகத்தான் இருக்கவேண்டும்.

ஜன்னலைத் திறப்பதென்று பாவெல் முடிவு செய்தான்.

''யார் அங்கே?'' என்று அவன் இருட்டை நோக்கிக் கேட்டான்.

ஜன்னலின் அப்பால் ஓர் உருவம் அசைந்தது. கனமான, மெதுவான குரல் ஒன்று கூறியது:

''நான்தான், ஷுஹ்ராய்!''

இரண்டு கரங்கள் ஜன்னல் கட்டையைப் பற்றிக்கொண்டன. ஷுஹ்ராயின் தலை எழும்பி, பாவெல் முகத்தை நேருக்கு நேர் நோக்கியது.

''இன்று இரவு உன் வீட்டில் தங்கலாமென்று வந்திருக்கிறேன், தம்பீ! உனக்கு ஏதாவது ஆட்சேபணை உண்டா?'' என்று ஷுஹ்ராய் மெல்லிய குரலில் பேசினான்.

''ஒரு ஆட்சேபணையுமில்லை. எந்த நேரத்திலும் உனக்கு நல்ல வரவேற்பு காத்திருக்கிறது. ஏறிக்குதி!'' என்று அன்புடன் கூறினான் பாவெல்.

ஷுஹ்ராய் தன் பருத்த சரீரத்தை ஜன்னல் வழியாகக் கஷ்டப்பட்டு உள்ளே நுழைத்தான்.

ஷுஹ்ராய் ஜன்னல் கதவுகளை மூடிவிட்டு அங்கேயே நின்றான். வெளியில் ஏதாவது அரவம் கேட்கிறதா என்று அறிய ஒரு நிலைப்பட்ட சித்தத்துடன் செவிகொடுத்தான். வெண்மதி மேகம் வழியே தவழ்ந்து வெளிப்பட்டவுடன் சாலை காட்சிப் புலனுக்குத், தெளிவுபடத் தெரிந்தது. அப்பொழுது அவன் சாலையைக் கவனமாக ஆராய்ந்தான். அதன்பின், அவன் பாவெலை நோக்கிக் கேட்டான்:

''உன் தாய் ஒருவேளை தூங்குகிறாளோ? அவளை நாம் எழுப்பிவிட மாட்டோமா?''

வீட்டில் தன்னைத் தவிர ஒருவருமில்லை என்று பாவெல் கூறினான். மாலுமியின் நாணம் மறைந்தது. அவன் சற்று உரக்கப் பேசத் தொடங்கினான்:

''தம்பீ! இந்த நீசர்கள் என்னை ஒழிக்கக் கங்கணங்கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். ஸ்டே

ஷனில் நடந்த சம்பவத்திற்கு என்னிடம் கணக்குத் தீர்க்க நினைக்கிறார்கள். நமது தொழிலாளர்கள் கொஞ்சம் கூடுதலான உறுதியுடன் நடந்து கொண்டிருந்தால், 'பாக்ரோம்' நடந்தபொழுது அந்தக் கொலைகாரருக்குத் தக்க பாடம் போதித்திருக்கலாம். ஆனால் நமது ஜனங்கள் தீயில் இறங்குவதற்கு அஞ்சுகிறார்கள். எனவே, பலன் ஒன்றுமில்லாமல் போய்விட்டது. இப்பொழுது இந்தக் கயவர்கள் என்னைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு தடவைகள் எனக்கு வலை விரித்துவிட்டார்கள். இன்றுகூட மயிரிழையில் தப்பினேன். வீடு வரை வந்து விட்டேன்; பின்கட்டு வழியாக நுழைந்து கொட்டகையருகில் நின்று சுற்றுமுற்றும் பார்த்தேன். அப்பொழுது, ஒரு மரத்தின் அடிப்பாகத்துக்குப் பின்னாலிருந்து ஒரு துப்பாக்கி பாய்னெட்டு நீட்டிக் கொண்டிருப்பதைக் கண்டேன். உடனே அந்த இடத்திலிருந்து விரைந்தேன். உன் வீட்டுக்கு வந்தேன். உனக்கு ஆட்சேபணையில்லையானால் இங்குச் சில நாட்கள் தங்குவேன். ஆட்சேபணை இல்லையே? சரி நல்லது.''

அப்பொழுதும் ஷுஹ்ராய் கஷ்டப்பட்டே மூச்சுவிட்டுக் கொண்டு சேறுகியிருந்த பூட்ஸைக் கழற்றினான்.

ஷுஹ்ராய் தன் வீடு தேடி வந்ததில் பாவெலுக்கு மகிழ்ச்சி. சமீப காலத்தில் மின்னிலயத்தில் வேலை நடக்கவில்லை. வீட்டில் தன்னந்தனியாகப் பொழுது போக்குவது பாவெலுக்குக் கஷ்டமாக இருந்தது.

அவர்கள் படுத்துக் கொண்டனர். பாவெல் உடனடியாக உறங்கிவிட்டான். ஷுஹ்ராய் நீண்ட நேரம் விழித்துக் கொண்டேயிருந்தான். புகை பிடித்துக்கொண்டேயிருந்தான். அவன் படுக்கையைவிட்டு எழுந்து, சப்தம் செய்யாமல் நடந்து ஜன்னலை அடைந்து நீண்ட நேரம் வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தான். இறுதியாகக் களைப்பு மிகுந்தவனாக அவன் படுத்துத் தூங்கினான். ஆனால் அவனது கரம் தலையணையின் கீழ் வைத்திருந்த பிஸ்டலைப் பிடித்துக்கொண்டேயிருந்தது.

அன்று இரவு எதிர்பாராமல் வந்த ஷுஹ்ராய் பாவெலுடன் எட்டு நாட்கள் தங்கியதால், பையனின் வாழ்விலேயே ஒரு திருப்பம் ஏற்பட்டது. பல புதிய விஷயங்களை, உள்ளத்தைக் கிளறும் விஷயங்களை, முக்கியமான விஷயங்களைப் பாவெல் மாலுமியிடமிருந்துஅறிந்துகொண்டான்.

எலிப் பொறியில் அடைபட்டது போல, அந்த மறைவிடத்தில் வாழ்ந்து வந்த மாலுமி, தவிர்க்க முடியாத நிலையில் தனக்கு ஏற்பட்ட அந்த ஓய்வு நேரத்தில், உற்சாகத்துடனும், ஆவலுடனும் கேட்டு வந்த பாவெலிடம், அந்த வட்டாரத்தையே ஆட்டிவந்த மஞ்சள்நீலக் கொடிக்காரர்களின் மீது தனக்குள்ள கோபத்தையும், ஆத்திரத்தையும் வெளியிட்டான்.

ஷுஹ்ராயின் பேச்சு எளிமையாகவும் தெளிவாகவும் வசீகரமாகவுமிருந்தது. அவனிடம் விடுவிக்கப்படாத புதிர் எதுவுமில்லை. தன்முன்னாலுள்ள

பாதையை ஷுஹ்ராய் தெட்டத் தெளிவாகத் தெரிந்திருந்தான். அது விஷயத்தில் அவனுக்கு ஐயப்பாடே கிடையாது. சோஷலிஸ்ட்-புரட்சி வாதிகள், சோஷல்-டெமாக்ராட்டுகள், போலிஷ் சோஷலிஸ்டுகள் என்றெல்லாம் படாடோபமாகப் பெயர் சூட்டிக்கொண்டிருந்த அரசியல் கட்சிகள் அனைத்தும் தொழிலாளருக்குத் தீரா விரோதிகளாக இருப்பதைப் பாவெல் உணர்ந்தான். பணக்காரர்களை எதிர்த்து உறுதியாகப் போராடும் ஒரே கட்சி—முன்னேற்ற போக்குக் கொண்ட ஒரு கட்சி—போல்ஷெவிக் கட்சி என்பதையும் அவன் தேர்ந்து தெளிந்தான்.

இதற்கு முன்பு இந்த விஷயங்களைப்பற்றியெல்லாம் பாவெல் முற்றிலும் குழம்பியிருந்தான்.

இந்த வலி பொருந்திய, உறுதிகொண்ட, வாழ்வில் நல்ல அனுபவம் கொண்ட பால்டிக் கடல் மாலுமி, 1915ம் ஆண்டிலிருந்து ருஷ்யாவின் சோஷல் 'டெமாக்ராட்டிக் தொழிலாளர் (போல்ஷெவிக்குகளின்) கட்சியின் உறுப்பினன், வாழ்வின் கடுமையான மெய்ப்பொருளைப் பாவெலுக்குப் போதித்தான். ஸ்டோக்கராக வேலை செய்யும் இளைஞனும் மந்திர சக்தியால் கட்டுண்டவனைப் போலச் செவிகொடுத்துக் கேட்டான்.

''தம்பீ! பையனாகவிருந்த பொழுது நானும் உன்னைப் போலத்தான் இருந்தேன். என் சக்தியைக் கொண்டு என்ன செய்வதென்றே தெரியாமல் இருந்தேன். எதற்கும் கட்டுப்படாத வண்ணம் எனது உருவம் மாறியது. என் மனம் சோம்

பலே வெறுத்தது; ஓய்வை விரும்பவில்லை. நான் வறுமையில் பிறந்து வளர்ந்தவன். அந்தக் காலத்தில் நகரப் பணக்காரர்களின் பிள்ளைகளை, செல்வமாகச் சீராட்டப் பெற்றுக் கொழுத்திருக்கும் பிள்ளைகளைக் கண்டாலேயே, என் முகம் சினத்தால் சிவக்கும். அடிக்கடி நான் அவர்களை அடித்துவிடுவேன். அதனுல் கிடைத்த பலன் என்ன? என் தந்தை என்னை அடித்தது ஒன்றுதான். தனித்து நின்று சண்டைபோட்டு நிலைமையை மாற்ற முடியாது. பாவெல், தொழிலாளர் லட்சியத்துக்காகச் சிறப்பாகப் போராடுவதற்குத் தேவையான லட்சணங்கள் உன்னிடம் உள்ளன. ஆனல் உனக்கு இன்னும் வயதாகவில்லை, வர்க்கப் போராட்டத்தைப்பற்றி உனக்கு அதிகம் தெரியாது. நான் உனக்குச் சரியான பாதை காட்டி உதவுகிறேன். நீ பயனுள்ள தொண்டு புரியும் வகையில் வளர்ச்சி அடைவாய். உலகம் தெரியாமல், சுயதிருப்தி மனப்பான்மையுடன் சோம்பிக் கிடக்கும் சாதுக்களை எனக்குப் பிடிக்காது. உலகம் முழுவதிலும் இப்பொழுது புரட்சித் தீ எரிந்துகொண்டிருக்கிறது. அடிமைகள் ஆர்த்தெழுந்துவிட்டனர். பழைய வாழ்வு முறை அழிந்தொழிந்து தானுக வேண்டும். ஆனல் இந்தப் புரட்சியைச் சாதிப்பதற்கு, நமக்கு நெஞ்சுரம் படைத்தவர்கள் தேவை. ஆம், பேடிப் பையன்கள் வேண்டாம்! போர் மூண்டவுடன் கரப்பான் பூச்சிகளைப் போல் வளைகளுக்கு ஊர்ந்து சென்று ஒளிந்துகொள்ளும் நெஞ்சுரமில்லாத பையன்கள் நமக்கு வேண்டாம்! ஈவிரக்கமில்லாமல் தாக்கும்

தெம்பும் திராணியும் உடையவர்களே நமக்குத் தேவை.''

இவ்வாறு கூறிவிட்டு, ஷுஹ்ராய் மேஜையின் மீது ஒரு குத்துக் குத்தினான்.

அவன் கடுகடுத்த முகத்துடன் எழுந்து நின்றான். கால்சட்டைப் பைகளில் கரங்களை விட்டுக் கொண்டே அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

செயலற்றிருப்பதால் அவனுக்குச் சோர்வு ஏற்பட்டது. செம்படையுடன் செல்லாமல் இந்த நகரத்தில் தங்கியதற்காக அவன் வருந்தினான். இனியும் இந்த ஊரில் தங்குவதில் பொருளில்லை என்று கருதினான். போர்முனையின் வழியாகச் செம்படை இருக்குமிடம் சென்று அதில் சேர்ந்து விடுவதென்று உறுதியாக முடிவு செய்தான்.

ஒன்பது கட்சி அங்கத்தினர்களைக் கொண்ட குழு நகரத்தில் தொடர்ந்து வேலை செய்யும்.

''நான் இல்லாவிட்டாலும் அவர்களால் செயல்பட முடியும். நான் இனி ஒன்றும் செய்யாமல் உட்கார்ந்திருக்க முடியாது. இத்துடன் பத்து மாதங்கள் வீணாகி விட்டன'' என்று ஷுஹ்ராய் எண்ணிய பொழுது, அவனது மனம் கலக்கமுற்றது.

''ஷுஹ்ராய்! நீ யார்?'' என்று பாவெல் ஒரு தடவை வினவினான்.

ஷுஹ்ராய் எழுந்து நின்றான். அவனது கரங்கள் காற்சட்டைப் பைகளுக்குள் சென்றன. முதலில் பாவெலின் கேள்வி அவனுக்கு விளங்கவில்லை.

''உனக்குத் தெரியாதா?''

''நீ ஒரு போல்ஷெவிக் அல்லது ஒரு கம்யூனிஸ்ட் என்பது என் ஊகம்.''

விரிந்த மார்பை இறுகப் போர்த்தியுள்ள வரிபோட்ட சட்டை மீது தன் கரத்தால் தட்டிக் கொண்டே ஷுஹ்ராய் கொல்லென்று சிரித்தான்.

''சபாஷ், தம்பீ! போல்ஷெவிக்கும் கம்யூனிஸ்டும் ஒரே பொருளைக் கொண்ட இரு சொற்களென்பது எப்படி உண்மையோ அப்படியே நான் கம்யூனிஸ்ட் என்பதும் உண்மை'' என்று அவன் கூறினான். திடீரென்று அவன் நகைப்பை நிறுத்திக்கொண்டு, ''நீ இந்த அளவுக்குப் புரிந்து கொண்டு விட்டாய். இதைப் பற்றி எங்கும் எவரிடமும் சொல்லக் கூடாது. சொன்னால் என் குடலை வெளியில் எடுத்து விடுவார்கள். புரிந்ததா?'' என்றான்.

''எனக்குப் புரிகிறது'' என்று அழுத்தமாகப் பாவெல் விடைதந்தான்.

முற்றத்தில் யாரோ பேசுவது காதில் விழுந்தது. வந்தவர்கள் கதவைத் தட்டாமல் திறந்தார்கள். ஷுஹ்ராயின் கரம் காற்சட்டைப் பையிலிருந்த பிஸ்டலை நோக்கி விரைந்தது. ஆனால் மெலிந்து வெளிறிப் போன ஸெர்யோஷா தலைக் கட்டுடன் உள்ளே வருவதையும், அவனைத் தொடர்ந்து வால்யாவும் கிலீமும் வருவதையும் கண்ட ஷுஹ்ராயின் கரம், பையிலிருந்து வெளிப்பட்டது.

ஸெர்யோஷா பாவெலின் கரத்தைக் குலுக்



கிக் கொண்டு, ''நலமா? கிழவா!'' என்று விசாரித்துவிட்டுப் புன்னகை செய்தான். ''நாங்கள் மூவரும் உன்னைப் பார்க்க வருவதென்று முடிவு செய்தோம். நான் தனியாக வருவதை வால்யா அனுமதிக்க மாட்டாள். வால்யா மாத்திரம் என்னுடன் வருவதென்றால் கிலீமுக்குப் பயம். அவன் செந்தலையானாக இருக்கலாம். ஆனால் கருமமே கண்ணாகவுள்ள காரியவாதி அல்லவா?''

வால்யா தமாஷாக ஸெர்யோஷாவின் வாயைப் பொத்தினாள்.

''வாயாடி! சிறிது நேரம்கூட கிலீமைவிட மாட்டாய்!'' என்று அவள் நகைத்துக் கொண்டே பேசினாள்.

கிலீம் தன் வெண்மையான பல் வரிசையைக் காட்டி நல்லியல்புடன் இளித்தான்.

''நோயாளிப் பையனிடம் என்ன செய்ய முடியும்? நீங்களே பாருங்கள், மூளைக்கு உறைவிடமான கபாலம் சேதமுற்று விட்டது'' என்றான் அவன்.

எல்லோரும் சிரித்தனர்.

வாளால் ஏற்பட்ட காயத்திலிருந்து ஸெர்யோஷா இன்னும் குணமாகவில்லை. அவன் பாவெலின் படுக்கையில் அமர்ந்தான். நண்பர்கள் ருசிகரமாக உரையாடினார்கள். ஸெர்யோஷா எப்பொழுதுமே உல்லாசமாகவும் உற்சாகமாகவும் இருப்பான். ஆனால் இப்பொழுது அவன் அமைதியாக விருந்தான், உற்சாகம் குன்றியிருந்த அவன்

பெத்லியூரா ஆள் தன்னை அடித்ததைப் பற்றி ஷுஹ்ராயிடம் கூறினான்.

ஷுஹ்ராயுக்கு இந்த மூன்று குழந்தைகளையும் நன்றாகத் தெரியும். அவன் புருஸ்ஷாக்கின் வீட்டுக்குப் பல தடவைகள் சென்றிருக்கிறான். அவன் அவர்களை நேசித்தான். இம்மூவரும் இன்னும் போராட்டச் சுழலில் தமக்குரித்தான பாத்திரத்தை வகிக்கவில்லை என்பது மெய். ஆனால், அவர்கள் தம் வர்க்கத்தின் தேவைக்கேற்ப இருந்தார்கள். 'பாக்ரோம்' நடந்த பொழுது, யூதர் குடும்பங்களை அவர்கள் தம் இல்லங்களில் பாதுகாத்துப் பேருதவி செய்ததைப் பற்றி அவர்கள் சொல்லக் கேட்டு அவன் மகிழ்ந்தான். அன்று மாலை அவன் அவர்களிடம் போல்ஷெவிக்குகளைப் பற்றியும் லெனினைப் பற்றியும் நிறைய விஷயங்களை எடுத்துரைத்தான். அவர்கள் நாட்டு நடப்பைப் புரிந்து கொள்வதற்கு அது பேருதவியாயிருந்தது.

பாவெல் தன் விருந்தாளிகளை வழியனுப்பிய பொழுது நேரம் அதிகமாகிவிட்டது.

ஒவ்வொரு நாளும், சூரியன் அடையும்பொழுது, ஷுஹ்ராய் வீட்டைவிட்டு வெளியே செல்வான். இரவு நெடுநேரம் கழித்துத்தான் திரும்புவான். அவன் தான் ஊரைவிட்டுச் செல்லுமுன் நகரில் தனக்குப் பின் தங்கவிருந்த தன் தோழர்களுடன் உடன்படிக்கைகள் சில செய்து கொண்டிருந்தான்.

அன்று இரவு ஷுஹ்ராய் திரும்பவில்லை. மறு

நாள் காலையில் பாவெல் விழித்தெழுந்தவுடன், மாலுமியின் படுக்கையைப் பார்த்தான். அதில் ஒருவரும் இரவில் படுக்கவில்லை என்பது விளங்கியது.

ஒரு இனம் தெரியாத முன்னெச்சரிக்கை அவனை ஆட்கொண்டது. விரைவில் ஆடை உடுத்திக் கொண்டு, வீட்டை விட்டுக் கிளம்பினான். கதவைப் பூட்டிவிட்டு, வாடிக்கையான இடத்தில் சாவியை வைத்தான். கிலீமுக்கு ஏதாவது தகவல் கிடைத்திருக்கலாமென்ற நம்பிக்கையில் பாவெல் அவனது வீட்டுக்குச் சென்றான். அம்மை வடுக்களால் குழிவிழுந்த அகன்ற முகத்தையும், கட்டுக்குட்டான சரீரத்தையும் உடைய கிலீமின் தாயார் துணிக்களைத் துவைத்துக் கொண்டிருந்தாள். ''ஷுஹ்ராய் எங்கிருக்கிறானென்று தெரியுமா?'' என்று பாவெல் கேட்டவுடன் அவள் வெடுக்கென்று பதில் அளித்தாள்:

''உங்கள் ஷுஹ்ராயைப் பார்த்துக் கொண்டிருப்பதை தவிர எனக்கு வேறு வேலை இல்லையா? எல்லாம் அவனால் வந்த வினை! அவனைப் பேய் பிசாசுதான் பிடித்துக்கொள்ள வேண்டும்! அவனால்தான் அந்த டிரைவரின் குடும்பம் தத்தளிக்கிறது. உங்களுக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்? இருந்தும் இருந்தும் நல்ல நண்பர்கள் கிடைத்தார்கள். நீ, கிலிம்....'' இவ்வாறு கூறிவிட்டு, வெறியுடன் துணியை அமுக்கினாள்.

கிலீமின் தாய் முன்கோபக்காரி; வாய்த் துடுக்கும் உடையவள்.

பாவெல் கிலீமின் வீட்டிலிருந்து ஸெர்யோஷாவின் வீட்டுக்குச் சென்ருன். அங்கும் அவன் தனது கவலையைத் தெரிவித்தான்.

''நீ ஏன் இப்படிக் கவலைப்படுகிருய்? ஒரு வேளை யாராவது ஒரு நண்பன் வீட்டில் தங்கியிருக்கலாம்'' என்று வால்யா கூறிஞள். ஆஞல் அவளது பேச்சில் நம்பிக்கை தொனிக்கவில்லை.

கலக்கமுற்றிருந்த பாவெல் புருஸ்ஷாக் வீட்டில் நீண்ட நேரம் தங்க விரும்பவில்லை. எனவே, சாப்பிட்டுவிட்டுச் செல்லும்படி அவர்கள் வருந்திக் கூறிய போதிலும், பாவெல் விடைபெற்றுக் கொண்டு கிளம்பிஞன்.

ஷுஹ்ராய் வீட்டுக்கு வந்திருக்கலாமென்ற நம்பிக்கையில் பாவெல் வீட்டுக்குத் திரும்பிஞன்.

கதவு பூட்டியபடியே இருந்தது. பாவெல் வெளியில் நின்ருன். ஒரு பெரிய சுமை அவனது இதயத்தை அழுத்தியது. அந்த காலியான வீட்டில் நுழைவதற்கு அவன் விரும்பவில்லை.

சில நிமிஷங்கள் அவன் முற்றத்தில் நின்று சிந்தித்தான். பிறகு, ஏதோ ஒரு உணர்ச்சியால் உந்தப்பட்டுக் கொட்டகைக்குச் சென்ருன். அதன் கூரைக்குக் கீழ் முட்டியிட்டு இரகசிய இடத்திலிருந்த சிலந்திக் கூட்டைத் தள்ளிஞன். அங்குக் கந்தல் துணியில் மூடி வைத்திருந்த ரிவால்வரை எடுத்துக்கொண்டான்.

அவன் கொட்டகையிலிருந்து ஸ்டேஷனுக்குச் சென்ருன். அவனுடைய பையில் அழுத்திக்

கொண்டிருந்த ரிவால்வர் அவனைப் பரவசம் கொள்ளச் செய்தது.

ஆனால் ஸ்டேஷனிலும் ஷுஹ்ராயைப்பற்றிச் சேதி ஒன்றுமில்லை. திரும்பி வரும் வழியில் காட்டிலாகா அதிகாரியின் வீட்டுத் தோட்டம் தென்பட்டது. அவனுக்குப் பழகிய அந்தத் தோட்டத்தை நெருங்கியதும், தனது நடையின் வேகத்தைக் குறைத்தான். பாவெல் வீட்டு ஜன்னல்களை உற்றுப்பார்த்தான். எதற்காக அப்படி செய்தானென அவனுக்கே தெரியாது. வீட்டுக்குள்ளே பேச்சு மூச்சு இல்லை. அதுவும் தோட்டத்தைப் போல வெறிச்சென்று இருந்தது. அவன் தோட்டத்தைத் தாண்டிய பிறகு திரும்பிப் பார்த்தான். தோட்டப் பாதைகளில் சென்ற வருட இலைகள் காய்ந்து உதிர்ந்து கிடந்தன. தோட்டம் கவனிப்பாரற்றுக் கிடந்தது. சுறுசுறுப்பான கை எதுவும் தோட்டத்தில் செயல்பட்டதாகத் தோன்றவில்லை. அந்தப் பெரிய வீட்டின் முழு அமைதி பாவெலின் துயரத்தை அதிகரித்தது.

கடைசியில் அவன் தோன்யாவுடன் போட்ட சண்டை சாமானியமானதல்ல. பழைய சண்டைகளைவிடத் தீவிரமானதுதான். ஒரு மாதத்துக்கு முன்னால் கொஞ்சமும் எதிர்பாராத வகையில் அது ஏற்பட்டது.

நகரத்தை நோக்கி மெதுவாக நடந்துகொண்டிருந்த பாவெல் கால்சட்டைப்பைகளில் கரங்களை விட்டவனாக அந்தச் சண்டை நடந்த விதத்தை நினைவூட்டிக் கொண்டான்.

இருவரும் அகஸ்மாத்தாகச் சாலையில் சந்தித்தனர். தன் வீட்டிற்கு வரும்படி தோன்யா அழைத்தாள்.

''அப்பாவும் அம்மாவும் போல்ஷான்ஸ்க்கிய் குடும்பத்தினர் நடத்தும் பிறந்தநாள் விருந்துக்குப் போகிருர்கள். நான் தனியாக இருப்பேன். நீ ஏன் வரக்கூடாது? என்னிடம் ஒரு ருசிகரமான புத்தகம் இருக்கிறது. லியொனீத் அந்திரேயேவ் எழுதியது. ''சாஷ்கா ஷெகுலியோவ்'' என்று பெயர். நான் படித்து முடித்து விட்டேன். ஆனால் உன்னுடன் திரும்பிப் படிக்க விரும்புகிறேன். மாலைப் பொழுது உல்லாசமாகக் கழியும். நீ வருவாயா?''

பழுப்புநிறக் கூந்தலை அணைத்திருந்த வெண் குல்லாவுக்கு நேர் கீழாக இருந்த இரண்டு பெரிய கண்கள் ஆவலுடன் அவனை நோக்கின.

''நான் வருகிறேன்'' என்ருன் பாவெல்.

அத்துடன் இருவரும் பிரிந்தனர்.

பாவெல் தன் இயந்திரங்களைக் கவனிக்க வேகமாகச் சென்ருன். மாலைநேரம் முழுமையும் தோன்யாவுடன் இருக்கப் போகிருேமென்ற எண்ணத்தால் உலை கூட அதிகமான ஒளி வீசுவதாக அவனுக்குத் தோன்றிற்று; விறகுக் கட்டைகள் விசேஷமான உல்லாசத்துடன் படபடவென்று வெடிப்பதாகவும் அவனுக்குப் புலப்பட்டன.

அன்றுமாலை, அவன் தோன்யா வீட்டின் அகன்ற கதவைத் தட்டியபொழுது, ஓரளவு பதற்றத்துடன் தோன்யா அதைத் திறந்தாள்.

''என்னைப் பார்க்க நண்பர்கள் வந்திருக்கின்றனர். அவர்களை நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நீ இங்கிருந்து சென்றுவிடக் கூடாது'' என்று அவள் கூறினாள்.

பாவெல் அந்த இடத்தை விட்டுக் கிளம்புவதற்காகத் திரும்பினான். ஆனால் அவள் அவனைத் தன் கையால் பிடித்துக் கொண்டாள்.

''உள்ளே வரத்தான் வேண்டும். உன்னைத் தெரிந்து கொள்வது அவர்களுக்கு நல்லது'' என்றாள். அவனுடைய இடுப்பைத் தன் கையால் அணைத்த படியே, அவனைச் சாப்பாட்டு அறை வழியே தன் அறைக்கு இட்டுச் சென்றாள்.

அவர்கள் அறையில் நுழைந்தவுடன் அங்கு அமர்ந்திருந்த இளைஞரைப் பார்த்து அவள் புன்முறுவலுடன் சொன்னாள்:

''நீங்கள் அறிமுகமானவர்களா? இது என் நண்பன் பாவெல்.''

அறையின் நடுவில் ஒரு மேஜை, அதைச் சுற்றி மூவர் அமர்ந்திருந்தனர். அவர்களில் ஒருத்தி லீஸா. அவள் உயர்ப்பள்ளி மாணவி. அவள் ஒரு அழகி; பழுப்பு நிறங்கொண்டவள்; வசீகரமாகத் திருத்தி வாரிய கூந்தலுடன், தனது சிறிய வாயின் உதடுகளைப் பிதுக்கிய வண்ணம் அவள் அமர்ந்திருந்தாள். இரண்டாவது நபர் ஒரு நெட்டையான, நோஞ்சலான இளைஞன். அவன் நன்றாகத் தைத்திருந்த கறுப்புக் கோட்டு அணிந்திருந்தான். அவனது மழமழப்பான

கேசம் நறுமணத் தைலத்துடன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவனது கண்கள் சாம்பல் நிற மானவை. அவன் சலித்துப்போன பார்வையுடனிருந்தான். அவனுக்கும் லீஸாவுக்கும் இடையே, ஒயிலான பள்ளிச்சொக்காய் தரித்துக்கொண்டு. லெஷ்சீன்ஸ்கிய் உட்கார்ந்திருந்தான். தோன்யா கதவைத் திறந்ததும் பாவெல் வீக்தரைத்தான் முதலில் பார்த்தான்.

வீக்தரும் பாவெலை உடனடியாக அடையாளம் கண்டுவிட்டான். அவனது நேர்த்தியான விற்புருவங்கள் வியப்பால் உயர்ந்தன.

சில விஞடிகள் பாவெல் ஒளிவு மறைவு இல்லாத பகையுடன் வீக்தரை நோக்கிக் கொண்டே கதவருகில் நின்ருன். அவன் ஒரு வார்த்தை பேசவில்லை. இந்த வெறுக்கத்தக்க அமைதிக்கு முடிவு காணத் தோன்யா விரைந்தாள். அறைக்குள் வரும்படி பாவெலிடம் கூறிவிட்டு, லீஸாவை அறிமுகம் செய்து வைப்பதற்காக அவள் பக்கம் திரும்பிஞள்.

புதிய இளேஞனேச் சிரத்தையுடன் ஆராய்ந்த லீஸா, தன் நாற்காலியிலிருந்து எழுந்தாள்.

ஆஞல், பாவெல் ஒரு சுற்றுச் சுழன்ருன், வெளிச்சம் மங்கலாக இருந்த சாப்பாட்டு அறையைத் தாண்டிஞன்; வீட்டு முன்கதவை அடைந்தான். தோன்யா அவனே அடைந்து, தோள்களேப் பற்றிப்பிடிப்பதற்குள்ளாக அவன் முகப்பு மண்டபத்தை அடைந்துவிட்டான்.

''நீ எங்கே ஓடுகிறாய்? அவர்கள் உன்னுடன் அறிமுகம் செய்துகொள்ள வேண்டுமென்று நான் மிகவும் விரும்பினேன்.''

பாவெல் தன் தோட்களிலிருந்து அவளுடைய கரங்களை நீக்கினான், வெட்டொன்று துண்டுதுண்டாக விடை தந்தான்:

''அந்தப் பொம்மைக்கு முன் என்னைக் காட்சிப் பொருளாக்குவதற்கு நான் இணங்க மாட்டேன். நான் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவன் அல்ல. அவர்களை நீ விரும்பலாம், ஆனால் நான் வெறுக்கிறேன். அவர்கள் உனக்கு நண்பர்களென்பதை நான் அறிந்திருந்தால், ஒருபொழுதும் உன்னிடம் வந்திருக்க மாட்டேன்.''

தோன்யாவுக்குக் கோபம் அதிகரித்துக் கொண்டிருந்தது. அதை அடக்கிக்கொண்டு அவள் அவனை இடைமறித்தாள்:

''இந்த மாதிரி என்னிடம் பேசுவதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது? உன் நண்பர்கள் யார் யார், உன்னைப் பார்க்க வருகிறவர்கள் யார் யார், என்றெல்லாம் நான் கேட்கிறேனா?''

''நீ யாரைப் பார்த்துப் பழகினால் எனக்கென்ன கவலை? இனி நான் இங்கு வரமாட்டேன்'' என்று சுடச் சுடப் பதிலளித்துவிட்டு, பாவெல் படிகளில் இறங்கி, தோட்ட வாசலுக்கு ஓடினான்.

அதன் பிறகு அவன் தோன்யாவைப் பார்க்கவில்லை. 'பாக்ரோம்' நடந்தபொழுது, பாவெல் எலெக்டிரிஷியனின் உதவியுடன் மின்னிலையத்

தில் யூதர் குடும்பங்களுக்குப் அடைக்கலம் அளித்தான். அப்பொழுதே தோன்யாவுடன் நடந்த சண்டையை அவன் மறந்து விட்டான். இன்று அவன் அவளை மீண்டும் பார்க்க விரும்பினுன்.

ஷுராய் மறைந்து விட்டதாலும், வீட்டில் ஒருவரும் இல்லை என்பதாலும் பாவெல் சோர்ந்திருந்தான். அவனுக்கு முன்ஞல், கொஞ்ச தூரத்தில் சாலை வலது பக்கம் திரும்பியது. வசந்த காலச் சேறு இன்னும் உலரவில்லை. சாலையில் பல குழிகள் பழுப்புச் சகதியால் நிறைந்திருந்தன. சாலையின் நடையோரப் பாதை விளிம்பு வரை நீட்டிக் கொண்டிருக்கும் விகாரமான முகப்பை உடைய வீட்டுக்கு அப்பால் சாலை இரண்டாகப் பிரிந்தது.

இரண்டு வீதிகள் ஒன்றையொன்று வெட்டும் தெருச் சந்தியில் ஒரு பெட்டிக் கடை. அதன் கதவு வளைந்திருந்தது. ''கனிய நீர்'' என்ற அறிவிப்புப் பலகை தலை கீழாகக் கிடந்தது. அந்தக் கடைக்கு எதிரில், தெருச் சந்தியில், லீஸா வீக்தரிடம் விடைபெற்றுக் கொண்டிருந்தாள்.

அவன் அவளுடைய கரத்தைத் தன் கரத்தில் எடுத்துக் கொண்டான்; அவளுடைய கண்களை உருக்கமாக மன்றுடும் தோரணையில் பார்த்தான்.

''வருவீர்களா? என்னை ஏமாற்ற மாட்டீர்களா?'' என்று உணர்ச்சி ததும்ப வினவினுன்.

''நிச்சயமாக வருவேன். நீங்கள் எனக்காகக் காத்திருங்கள்'' என்று அவள் கொஞ்சு மொழியில் கூறினாள்.

அவள் பிரியும் பொழுது, அவனை நோக்கி முறுவலித்தாள். அவளது பனி மூடிய பழுப்பு நிறக் கடைக் கண்கள் ''என்னை நம்பு, நிச்சயம் வருவேன்'' என்று கூறின.

லீஸா கொஞ்ச தூரம் தெருவில் நடந்திருப்பாள். அப்பொழுது இரண்டு மனிதர்கள் ஒரு மூலையிலிருந்து சாலைக்கு வருவதை அவள் கண்டாள். அவர்களில் ஒருவன், வாட்டசாட்டமாக இருந்தான். விரிந்த மார்பை உடைய அவன் தொழிலாளர் ஆடை தரித்திருந்தான். அவனது சொக்காய்க்குப் பித்தான் போடாமல் இருந்ததால், அதற்குள் இருந்த வரிபோட்ட மாலுமி பனியன் நன்கு தெரிந்தது. அவனது தலையில் அணிந்திருந்த குல்லாய் நெற்றியின் மீது இழுத்துவிடப்பட்டிருந்தது. அவன் மஞ்சள் நிற பூட்ஸ் அணிந்திருந்தான். அவனது கண்ணுக்குக் கீழ் ஒரு நீலம் பாய்ந்த கரிய நிறக் கீறல் இருந்தது.

அவன் உறுதி கொண்ட மெதுவான நடையுடன் சென்று கொண்டிருந்தான்.

அவனுக்கு ஆறு, ஏழு அடி பின்னால் பெத்லியூராவின் ஆள் ஒருவன் நடந்து கொண்டிருந்தான். அவனுடைய துப்பாக்கியின் பாய்னெட் முன்னால் சென்றவனின் முதுகைத் தொட்டுக் கொண்டிருந்தது என்றே சொல்லலாம். அந்தக் காவலாள் சாம்பல் நிறக் கோட் அணிந்திருந்

தான். அவனது பெல்ட்டிலிருந்து தோட்டாக்கள் நிறைந்த இரு சிறு பைகள் தொங்கிக்கொண்டிருந்தன.

ரோமம் அடர்ந்த ஆட்டுத் தோல் குல்லாயின் கீழ் இருந்த இரண்டு எச்சரிக்கையான சிறு கண்கள், கைதி தலையின் பின்புறத்தைக் கண்காணித்துக் கொண்டிருந்தன. அவனது மஞ்சள் நிற மீசையில் புகையிலைக் காவி படிந்திருந்தது.

லீஸா தன் நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டு, சாலையைத் தாண்டி அதன் எதிர்ப் புறத்துக்குச் சென்றாள். அந்தச் சமயத்தில், அவளுக்குப் பின்னால் சாலையில் தோன்றினான் பாவெல்.

அவன் தன் வீட்டுக்குச் செல்ல வலது பக்கம் திரும்பியபொழுது, அவனும் தன்னை நோக்கி வரும் இரண்டு மனிதர்களைப் பார்த்தான்.

பாவெலின் கால்கள் வேரோடி விட்டவை போல தோன்றின. கைதியாக இருந்தவன் ஷுஹ்ராய்.

''அதனால்தான் அவன் வீட்டுக்குத் திரும்பவில்லை!'' என்று பாவெல் உணர்ந்தான்.

ஷுஹ்ராய் மேலும் மேலும் நெருங்கிக் கொண்டிருந்தான். பாவெலின் இருதயம் மார்புக் கூட்டைத் தாக்கிய வேகத்தில், அது வெடித்து விடும் போலிருந்தது. பற்பல விதமான சிந்தனைகள் ஒன்றுமாறி ஒன்றாக தோன்றின. அவை செயற்படுத்த அவனால் முடியவில்லை, ஆலோசிப்பதற்கு நேரமும் இல்லை. ஒரே ஒரு விஷயம் தெளிவாக

விளங்கிற்று. ஷுஹ்ராயை ஒழித்து விடுவார்கள் என்பதே அது.

மனங்குழம்பிப் பிரமித்த பாவெல் இருவரும் தன்னை நெருங்குவதைக் கவனித்தான். இனி என்ன செய்வது?

கடைசி விஞடியில் அவன் தன் பையில் பிஸ்டல் இருப்பதை உணர்ந்தான். அவர்கள் அவனைக் கடந்தவுடன் பாவெல் அந்தக் காவலாளைச் சுட்டு விடுவது, ஷுஹ்ராயை விடுதலை செய்வது — அந்த விஞடியின் சூட்டில் அவன் இந்த முடிவை எடுத்தவுடன் அவனது மனம் தெளிவடைந்தது. பார்க்கப் போஞல், ''நமக்கு நெஞ்சுரம் படைத்தவர்கள் தேவை'' என்று நேற்றுத்தான் ஷுஹ்ராய் சொன்ஞன்.

பாவெல் அவசரமாகப் பின்பக்கம் திரும்பிப் பார்த்தான். நகரத்தை நோக்கிச் செல்லும் தெருவில் ஒருவர்கூட நடமாடவில்லை; வெறிச் சென்று இருந்தது. முன்ஞல், ஒரு லேசான மேல்கோட்டை அணிந்த பெண் சாலையின் குறுக்கே விரைந்து கொண்டிருந்தாள். அவள் குறுக்கிட மாட்டாள். தெருச் சந்தியிலிருந்து பிரிந்து சென்ற இரண்டாவது தெருவைப் பாவெலால் பார்க்க முடியவில்லை. ஸ்டேஷனுக்குப் போகும் சாலையில் தூரத்தில் சில ஜனங்கள் புலப்பட்டார்கள்.

பாவெல் சாலையின் ஓரத்துக்கு நகர்ந்தான். ஷுஹ்ராய் சில அடி தூரத்தில் இருந்த பொழுது பாவெலைப் பார்த்தான்.

ஷுஹ்ராய் அவனை ஓரக்கண்ணுல் பார்த் தான். அவனுடைய அடர்ந்த புருவங்கள் துடித் தன. இந்த எதிர்பாராத சந்திப்பு அவனுடைய நடை வேகத்தைக் குறைத்தது. எனவே, துப் பாக்கி பாய்னெட்டு அவனது முதுகைக் குத்தியது.

''வேகமாக நட! இல்லாவிட்டால் துப்பாக் கிப் பிடங்கால் உந்தித் தள்ளுவேன்!'' என்று கிரீச்சென்று ஒலிக்கும் பேய்க்குரலில் காவலன் கூறினுன்.

ஷுஹ்ராய் வேகமாக நடக்கத் தொடங்கி ஞன். அவன் பாவெலுடன் பேச விரும்பினுன், ஆனுல் அந்த விருப்பத்தை அடக்கிக் கொண் டான். நல்லாசி கூறுவதைப் போலக் கரத்தை அசைப்பதுடன் நிறுத்திக்கொண்டான்.

மஞ்சள் மீசையுடன் கூடிய காவலனின் கவனத்தில் சிக்கக் கூடாதென்று பாவெல் எண்ணி ஞன். எனவே ஷுஹ்ராய் தன்னைக் கடந்தபொழுது அவன் வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்; நடப்பதைப் பற்றிக் கொஞ்சமும் அக்கரையில் லாதவன் மாதிரி நடித்தான். ஆனுல் ''என் குண்டு குறி தவறி ஷுஹ்ராயைத் தாக்கிவிட்டால் என்ன செய்வது?'' என்ற கவலை அவனது மூளையைச் சிதைத்துக் கொண்டிருந்தது.

காவலாள் பாவெலுக்கு அண்மையில் வந்து விட்டதால் சிந்திப்பதற்கு நேரமில்லாமல் போய் விட்டது.

மஞ்சள் மீசைக் காவலன் பாவெலுக்கு நே ராக வந்தவுடன், பாவெல் அவன் மீது திடீரென்று

பாய்ந்தான், துப்பாக்கியைக் கைப்பற்றி அதன் குழலைச் சாலையில் ஓங்கி அடித்தான்.

துப்பாக்கி பாய்ணெட்டு ஒரு கருங்கல் மீது பட்டு கிலுங்கியது.

இந்தத் தாக்குதலைக் காவலன் எதிர்பார்க்க வில்லை. ஒரு விஞடி அவன் பிரமித்து நின்முன். அதன் பின் அவன் துப்பாக்கியைத் தன் பக்கம் இழுக்க முரட்டுத்தனமாக முயன்முன். ஆனல் பா வெல் தன் உடலின் முழு எடையையும் துப்பாக்கி மீது பிரயோகித்து, அதன் மீது அவனுக்கிருந்த பிடியைக் காப்பாற்றிஞன். ஒரு குண்டு பெரும் சப்தத்துடன் வெடித்தது. அது ஒரு கல்லைத் தாக்கி விட்டுச் சிணுங்கிக் கொண்டே பூமியில் ஊர்ந்து குட்டையில் விழுந்தது.

குண்டு வெடித்த சத்தம் கேட்டவுடன் ஷுஹ் ராய் ஒரு பக்கமாகப் பாய்ந்து திரும்பிஞன். பா வெலின் கரங்களிலிருந்து துப்பாக்கியைத் திருகிப் பறிப்பதற்காகக் காவலன் தீவிரமாக முயன்று கொண்டிருந்தான். கைகள் முறுக்கேறியதால் பாவெலுக்கு வேதனை அதிகம். எனினும் அவன் தன் பிடியைவிடவில்லை. அப்பொழுது ஆத்திர மடைந்த அந்த பெத்லியூரா ஆள் ஒரு சுற்றுச் சுற் றிப் பாவெலை பூமியில் தள்ளிஞன். ஆனல் அப் பொழுதும் அவனல் துப்பாக்கியைத் திருகிப் பிடியைத் தளர்த்த முடியவில்லை. பாவெல் கீழே விழுந்தான், ஆனல் காவலனையும் அவனுடன் கீழே இழுத்துக் கொண்டுவிட்டான். அந்த நெருக் கடியான நேரத்தில் உலகத்தில் எந்தச் சக்தியும்

அவனிடமிருந்து துப்பாக்கியைப் பறித்திருக்க முடியாது.

இரண்டு பாய்ச்சல்கள் பாய்ந்த ஷுஹ்ராய் சண்டை போடும் ஜதையுடன் சேர்ந்து கொண்டான். அவனது இரும்புக்கர முஷ்டி காற்றில் வில்லாக வளைந்து காவலனின் தலையைத் தாக்கியது. ஒரு விஞடிக்குப் பிறகு, அந்தக் காவலனின் பிடியிலிருந்து பாவெல் விடுபட்டான். ஈயக்குண்டால் அடிபட்டது மாதிரி, காவலனின் முகத்தில் இரண்டு அடிகள் விழுந்தன. அவன் வெகுவாகத் தள்ளாடினுன். இறுதியில் பக்கத்திலிருந்த குட்டையில் விழுந்தான்.

பெத்லியூராக்காரனை அடித்த வலிய கரங்களே, பாவெலைத் தூக்கி நிறுத்தின.

இதற்குள், வீக்தர் தெருச் சந்தியிலிருந்து சுமார் நூறு அடி போட்டிருப்பான். அவன் ஒரு பாட்டை ஊதிக் கொண்டே சென்ருன். லீஸாவைச் சந்தித்த பிறகு, கவனிப்பாரில்லாமல் கிடக்கும் தொழிற்சாலை ஒன்றில் மறுநாள் அவனைச் சந்திப்பதாக அவள் வாக்களித்த பிறகு, அவனுடைய மனது உற்சாக வெள்ளத்தில் மிதந்து துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது.

பள்ளியின் பெண் பிரியர்கள் மத்தியில் ஒரு வதந்தி உலாவியது. லீஸா தன் காதல் விவகாரங்களில் ரொம்பத் துணிச்சலுடையவள் என்பதே அது. வெட்கமற்ற, அசட்டு தைரியம் கொண்ட ஸெமியோன் ஸலிவானவ் அவளுடன் ஒரு நாள்

இன்பமாக இருந்ததாக அவனிடம் ஒரு தடவை கூறினான். வீக்தருக்கு ஸெமியோனிடம் முழு நம் பிக்கை கிடையாது என்றாலும், லீஸாவின் நடத் தை அவனுக்குப் புதிராகவிருந்தது. ஸெமியோன் பேசியது மெய்யா, பொய்யா என்பதை நாளைக்கு வீக்தர் அறிந்து கொள்வான்.

''நாளைக்கு அவள் வந்தால், நான் தயங்க மாட்டேன். அவளை முத்தமிடுவதற்குத்தான் முன் பே அனுமதித்திருக்கிறாள். ஸெமியோன் சொல்வது உண்மையானால்....'' இவ்வாறு அவன் சிந்தித்துக் கொண்டிருந்தபொழுது, இரண்டு பெத்லியூராக் காரர்கள் வருவதைக் கண்டான். அவர்கள் செல் வதற்கு வழிவிட்டு அவன் ஓரத்துக்குச் சென்றான். அவர்களில் ஒருவன், கூழைவால் குதிரை மீது உட் கார்ந்திருந்தான். அவன் ஒரு கித்தான் வாளியை ஆட்டிக்கொண்டிருந்தான். குதிரை குடிப்பதற்கு நீர் கொடுப்பதற்காகப் போகிறான் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. குட்டைச் சொக் காயும் தளர்ந்த நீலக் கால்சட்டையும் அணிந் திருந்த இன்னொருவன் குதிரைக்குப் பக்கத்தில் சென்று கொண்டிருந்தான். சவாரி செய்கிறவனு டைய முழங்காலில் கரத்தை வைத்துக்கொண்டு, விகடக்கதை சொல்லிக் கொண்டு நடந்து சென்றான்.

அவர்கள் செல்வதற்கு வழி தந்துவிட்டு, வீக்தர் தன் பாதையில் செல்லத் தொடங்கினான். அப்பொழுது சாலையிலிருந்து வந்த துப்பாக்கி வேட்டுச் சத்தம் அவனை நிற்கச் செய்தது. அவன்

திரும்பினுன். குதிரைமீதிருந்தவன் ஒலி வந்த இடத்தை நோக்கிக் குதிரையை ஓட்டிச் சென்றதைக் கண்டான். மற்றவன் வாளைக் கையால் பற்றிக் கொண்டே பின்னுல் ஓடுவதையும் அவன் கவனித்தான்.

வீக்தர் அவர்களைப் பின்தொடர்ந்து ஓடினுன். அவன் சாலையை அடையும் சமயம், இன்னெரு வேட்டின் ஒலி கேட்டது. மூலையிலிருந்து குதிரைவீரன் வெறித்தனமாகக் குதிரையை விரட்டிக் கொண்டு வந்தான். அவன் குதிரையைப் பாதங்களால் உதைத்தும் கித்தான் வாளியால் தாக்கியும் விரட்டினுன். விரைவில் அருகாமையிலுள்ள முற்றத்தை அடைந்தான்; அங்கிருந்த ஆட்களைப் பார்த்து, ''ஆயுதம் தரித்துக் கிளம்புங்கள்! நமது ஆட்களில் ஒருவனைக் கொன்றுவிட்டார்கள்!'' என்று கத்தினுன்.

ஒரு நிமிஷத்துக்குப் பின் பலர் முற்றத்திலிருந்து பாய்ந்தோடினுர்கள். ஓடிக்கொண்டிருந்த பொழுதே, தத்தம் துப்பாக்கிகளைத் தயார் செய்துகொண்டனர்.

வீக்தர் கைது செய்யப்பட்டான்.

சிலர் சாலையில் சேகரிக்கப்பட்டார்கள். அவர்களில் வீக்தரும் லீஸாவும் இருந்தனர். சாட்சி கூறுவதற்காக லீஸா தடுத்து நிறுத்தப்பட்டாள்.

பயந்து நடுங்கிய காரணத்தால் லீஸா இடம் பெயராமல் நின்று கொண்டிருந்தாள். ஷுஹ்ராயும் பாவெலும் அவளைக் கடந்து ஓடிய பொழுது தோன்யா எந்த இளைஞனைத் தனக்கு அறிமுகப்

படுத்த விரும்பினுளோ அதே இளைஞன்தான் பெத்லியூராவின் ஆளைத் தாக்கினுன் என் பதைப் புரிந்து கொண்டதால் அவள் ஆச்சரிய மடைந்தாள்.

பாவெலும் ஷுஹ்ராயும் ஒரு வேலியைத் தாண்டித் தோட்டத்துக்குள் குதித்தவுடன் குதிரைவீரன் தெருவில் விரைந்து வந்தான். துப் பாக்கியும் கையுமாக ஷுஹ்ராய் ஓடுவதையும், பிரமித்துப்போன காவலன் எழுந்து நிற்பதற்கு முயற்சிப்பதையும் அவன் பார்த்ததால், வேலியை நோக்கிக் குதிரையைக் குத்தி விரட்டினுன்.

ஆனுல் ஷுஹ்ராய் திரும்பினுன். துப்பாக்கி யைத் தூக்கி, தன்னைத் தொடர்ந்து வரும் குதிரைக்காரனைச் சுட்டான். இதற்குள், குதிரைக் காரன் விரைவாகப் பின்வாங்கி விட்டான்.

உதடுகள் காயமாகியிருந்ததால், காவலன் கஷ்டப்பட்டுப் பேசினுன். அவன் நடந்த விஷயங் களை விவரித்தான்.

''கழிசடைப் பிராணியே! உன் கண்ணுக்கு முன்னுல் ஒரு கைதி தப்பி ஓடுவதற்கு அனுமதித் தாயா? உன் முதுகில் சவுக்கால் இருபத்தைந்து அடிகள் கொடுப்போம்!''

''நீ பலே கெட்டிக்காரன்! என் கண்ணுக்கெ திரே அனுமதித்தேனும்! சபாஷ்! இன்னெரு வேசி மகன் வெறியன் மாதிரி என்மீது பாய்வான் என் பதை நான் எப்படி அறிந்திருக்க முடியும்?'' என்று அந்தக் காவலன் கோபாவேசத்துடன் பதில் கொடுத்தான்.

லீஸாவும் விசாரிக்கப்பட்டாள். காவலன் சொன்ன கதையைத்தான் அவளும் சொன்னுள். ஆனுல் தாக்கியவனைத் தனக்குத் தெரியுமென் பதை மட்டும் அவள் சொல்லாமல் இருந்தாள். எனினும் அவர்கள் அனைவரும் நகரத்தின் ராணு வத் தலைமைக் காரியாலயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பகற்பொழுது கழியும் வரை அவர்கள் விடு தலை பெறவில்லை.

லீஸாவை வீட்டுக்கு இட்டுச் செல்வதற்குத் தலைவனே முன்வந்தான். ஆனுல் லீஸா அவனது உதவியை நிராகரித்து விட்டாள். அவனது மூச்சில் சாராய நாற்றம் வீசியது. அவன்கூட வருவதால் தொல்லை விளையுமென்று அவள் அஞ்சினுள்.

லீஸாவை அவள் இல்லத்துக்கு வீக்தர் இட்டுச் சென்றுன்.

ஸ்டேஷன் கணிசமான தூரத்திலிருந்தது. இருவரும் கையோடு பின்னிக் கொண்டு நடந்த பொழுது, இந்தச் சம்பவம் நடந்தது நன்மைக் குத்தான் என்று நன்றி உணர்வுடன் எண்ணினுன் வீக்தர்.

''கைதியை விடுவித்தது யார் என்று உனக் குத் தெரியுமா?'' என்று லீஸா கேட்டாள். அப் பொழுது அவர்கள் லீஸாவின் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தனர்.

''எனக்குத் தெரியாது. எப்படித் தெரியும்?''

''ஒரு நாள் மாலை, தோன்யா ஒரு இளைஞனை நமக்கு அறிமுகப்படுத்த விரும்பினுனே, நினைவு இருக்கிறதா?''

வீக்தர் நின்ருன்.

''பாவெல் கர்ச்சாகிஞ?'' என்று அவன் ஆச்சரியத்துடன் வினவிஞன்.

''ஆம். அவன் பெயர் பாவெல் என்றுதான் நினைக்கிறேன். அவன் விசித்திரமான முறையில் வீட்டைவிட்டு வெளியேறிஞனே, ஞாபகமிருக்கிறதா? அதே இளைஞன்தான் கைதியை விடுவித்தான்.''

வீக்தர் திகைத்து நின்ருன்.

''நீங்கள் நிச்சயமாகச் சொல்கிறீர்களா?'' என்று அவன் லீஸாவைக் கேட்டான்.

''சர்வ நிச்சயமாக; அவன் முகம் எனக்குத் தெளிவாக ஞாபகம் இருக்கிறது.''

''இதை ஏன் ராணுவத் தலைவனிடம் கூறவில்லை?''

லீஸாவுக்குக் கோபம் வந்துவிட்டது.

''அந்த மாதிரி ஈனச் செயலை நான் செய்வேன் என்று நினைக்கிறீர்களா?''

''ஈனச் செயலா? காவலனைத் தாக்கியவன் யாரென்று சொல்வது ஈனச் செயலா?''

''அது கௌரவமான காரியம் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? அவர்கள் என்ன செய்தார்களென்பதை நீங்கள் மறந்துவிட்டீர்கள் போலிருக்கிறது. பள்ளிக்கூடத்தில் தாய் தந்தையரை இழந்த அஞதை யூதர்கள் எத்தனை பேர் இருக்கிருர்களென்பதை நீங்கள் அறிவீர்களா? அறிந்திருந்தும், இவர்களிடம் பாவெலைக் காட்டிக் கொடுக்கச் சொல்கிறீர்களா? உங்களிடமிருந்து

நான் இதை எதிர்பார்க்கவில்லை, நான் வருத்தப் படுகிறேன்.''

லீஸாவின் பதிலைக் கேட்டு வீக்தர் ஆச்சரிய மடைந்தான். அவளுடன் சண்டைபோட்டால் அவனுடைய திட்டத்துக்குக் குந்தகம் ஏற்படுமென்று அவன் பேச்சை மாற்ற முயற்சித்தான்.

''கோபித்துக் கொள்ளாதீர்கள், லீஸா. நான் விளையாட்டுக்குச் சொன்னேன். நீங்கள் இவ்வளவு தூரம் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பவர் என்பது எனக்குத் தெரியாது.''

''உங்களுடைய வேடிக்கை சரியானதாக அமையவில்லை'' என்று லீஸா வறட்சியுடன் பதில் உரைத்தாள்.

ஸுகர்க்கோ வீட்டின் வாசலில் வீக்தர் லீஸாவிடம் விடைபெற்ற பொழுது, ''நீங்கள் வருவீர்களா, லீஸா?'' என்று கேட்டான்.

''எனக்குத் தெரியாது'' என்று அவள் ஈரொட்டாகப் பதிலளித்தாள்.

நகரத்தை நோக்கி நடந்து சென்ற வீக்தர் தீவிரமான யோசனையில் ஆழ்ந்தான். ''நன்று, நன்று, மிஸ் லீஸா. பாவெலைக் காட்டிக் கொடுப்பது இழிவான செயல் என்று நீங்கள் கருதலாம். ஆனால் நான் வேறுவிதமாகக் கருத்துக் கொண்டிருக்கிறேன். யார் யாரை விடுதலை செய்தாலும் எனக்கு ஒன்றுதான்'' என்று எண்ணமிட்டான்.

புராதனமான போலிஷ் பிரபுக் குடும்பத்தில் உதித்த அவனுக்கு இரு கட்சிகளுமே வெறுக்கத் தக்கவைதான். போலிஷ் பிரபுக்களின் சர்க்காரை

மட்டுமே அவன் ஏற்றுக் கொள்வான். அது போலிஷ் படைகளுடன் சீக்கிரத்தில் வரப்போகிறது. ஆனுல் தற்பொழுது அந்தப் போக்கிரிப் பயலான பாவெலை ஒழித்துக் கட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அவர்கள் அவனது கழுத்தைத் திருகுவார்களென்பது உறுதி.

லெஷ்சீன்ஸ்கிய் குடும்பத்தில் வீக்தர் மட்டுமே டவுனில் இருந்தான். சர்க்கரை உற்பத்திச் சாலையின் உதவி டைரக்டரை மணந்துள்ள தன் அத்தையுடன் அவன் தங்கியிருந்தான். அவனது குடும்பம் நெடு நாளாக வார்ஸாவில் இருந்து வருகிறது. அங்கு அவனது தந்தை ஓரளவுக்கு முக்கியமான ஸ்தானத்தை வகித்துவருகிருன்.

வீக்தர், நகரத்தின் ராணுவத் தலைவனின் காரியாலயத்துக்குச் சென்று திறந்திருந்த கதவு வழியாக உள்ளே நுழைந்தான்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவன் நான்கு பெத்லியூராக்காரர்களுடன் பாவெல் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தான்.

''அதுதான்!'' என்று அவன் ஒரு வெளிச்சமுள்ள ஜன்னலைக் காட்டிக்கொண்டே மெதுவாகக் கூறினுன். ''நான் இப்பொழுது போகலாமா?'' என்று பக்கத்தில் நின்ற பெத்லியூராவின் ஆபீசரைக் கேட்டான்.

''தாராளமாகப் போய் வரலாம். இனி நாங்களே பார்த்துக்கொள்வோம். உதவிக்கு நன்றி.''

வீக்தர் சாலையோரப் பாதை வழியாக விரைந்தான்.

இருட்டறை அருகில் சென்றவுடன் பாவெல் முதுகில் விழுந்த கடைசி அடி அவன் அந்த அறைக்குள் சுருண்டு சுழலும்படி செய்தது. அவனது நீட்டிய கைகள் எதிரில் இருந்த சுவர்மீது மோதின. அவன் சுற்று முற்றும் தடவிப் பார்த்த பொழுது, ஒரு கட்டில் மாதிரி ஏதோ ஒன்று இருப்பதைக் கண்டான். அதில் உட்கார்ந்தான். அவனது உடலும் உள்ளமும் நொறுங்கியிருந்தன.

கைதானபொழுது பாவெல் ஆச்சரியமடைந்தான். பெத்லியூரா கோஷ்டியினர் அவனை எப்படிக் கண்டு பிடித்தார்கள்? அவனை ஒருவரும் பார்க்கவில்லை என்பது அவனுக்குத் திண்ணமாகத் தெரியும். அடுத்து என்ன நடக்கும்? ஷுஹ்ராய் எங்கிருக்கிறார்?

அவன் மாலுமியைக் கிலீம் வீட்டில் விட்டிருந்தான். சூரியன் மறைந்தபின், டவுனைவிட்டுச் செல்ல வேண்டுமென்று ஷுஹ்ராய் காத்திருந்த பொழுது பாவெல் ஸெர்யோஷா வீட்டுக்குப் போனான்.

''நல்ல வேளையாகக் கைத்துப்பாக்கியைக் காகத்தின் கூட்டில் ஒளித்து வைத்தேன். அவர்கள் கைக்கு அது கிடைத்திருந்தால் என் கதி அதோ கதிதான். ஆனால் அவர்கள் என்னை எப்படிக் கண்டுபிடித்தனர்?'' என்று பாவெல் தன்னையே கேட்டுக் கொண்டான். அவனை வதைத்த கேள்விக்கு விடை தெரியவில்லை.

பெத்லியூராக் கொள்ளைக்காரர்கள் பாவெல் வீட்டைத் துருவித் துருவிச் சோதனையிட்டார்கள்.

ஆர்த்தியோம் தன்னுடைய நல்ல உ[illegible] அக்கார்டியன் வாத்தியத்தையும் கிராமத்துக்குக் கொண்டுபோய்விட்டான். பாவெலின் தாய் தன்னுடன் ஒரு பெட்டியைக் கொண்டு போய்விட்டாள். எனவே, பெத்லியூராக்காரர்கள் கொள்ளையடிப்பதற்கு ஒன்றும் கிடைக்கவில்லை.

எனினும், வீட்டிலிருந்து அவன் தலைமைக் காரியாலயத்துக்கு வந்த வழியை என்றும் மறக்கப்போவதில்லை. இரவில் இருள் செறிந்திருந்தது. வானத்தில் கருமேகங்கள் குவிந்திருந்தன. காவலர்கள் அவனை நாலாபுறமும் மிருகத்தனமாக உதைத்துக் கொண்டே வந்தனர். கண்தெரியாத பாதையில் பிரமிப்புடன் பாவெல் தடுக்கித் தடுமாறிக்கொண்டே வந்து சேர்ந்தான். பெத்லியூராக்காரர்களின் அடியும் உதையுமே அவனை இயக்கின.

அடுத்த அறையில் காவலர்கள் இருந்தனர். அங்கே யாரோ பேசுவதைப் பாவெலால் கேட்க முடிந்தது. அவனுடைய அறைக் கதவின் கீழாக ஒரு பிரகாசமான ஒளி உள்ளே பாய்ந்தது. பாவெல் எழுந்திருந்தான்; சுவரைத் தொட்டுக் கொண்டே அறையை ஒரு சுற்றுச் சுற்றினான். கட்டிலுக்கு எதிராக ஒரு ஜன்னல் இருப்பதைத் தட்டித்தடவிக் க்ண்டுபிடித்தான். அதன் கம்பிகள் திடமாகவும் கூர்மையான நுனியை உடையனவாகவும் இருந்தன. அவற்றை அவன் அசைக்க முயன்றான். ஆனால் அவை உறுதியாகப் பொருத்

தப்பட்டிருந்தன. அந்த அறை ஒரு சாமான் சேமிப்பு அறையாக இருந்திருக்க வேண்டும்.

அவன் கஷ்டப்பட்டுக் கதவுக்கு அருகில் சென்றான். ஒரு விநாடி அங்கு நின்று அரவம் கேட்கிறதாவென்று கவனித்தான். பிறகு அவன் கைப் பிடியை இலேசாக அமுக்கினான். கதவு அருவருக்கத்தக்க ஒலியை, கிறீச் சென்ற ஒலியை உண்டாக்கியது. பாவெல் தனக்குள் ஆத்திரத்தோடு ஆணையிட்டான்.

அவனுக்கு முன்னால் ஒரு குறுகிய துவாரம் தென்பட்டது. அதன் வழியே அவன் நோக்கினான். தோல் தடித்த இரண்டு பாதங்கள், வளைந்த விரல்களை உடைய பாதங்கள், கட்டிலின் விளிம்பிலிருந்து நீட்டிக் கொண்டிருப்பதை அவன் பார்த்தான். இன்னொரு தடவை கதவுப் பிடியை இலேசாகத் தள்ளிய பொழுது, கதவு கூடுதலான ஒலியுடன் தன் கண்டனத்தைத் தெரிவித்தது. தலைவரி கோலமான உருவம் ஒன்று கட்டிலை விட்டு எழுந்தது. அதன் முகம் தூக்கத்தால் உப்பியிருந்தது. பேன் அடைந்திருந்த தலையை ஐந்து விரல்களாலும் தீவிரமாகச் சொறிந்துகொண்டே அது நீண்ட வசைப் புராணத்தைப் படித்தது. அந்த இழிவான வசைமாரி ஓய்ந்தபின், அந்த ஐந்து கட்டிலின் தலை மாட்டில் நின்று கொண்டிருந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, உணர்ச்சியில்லாமல் கூறியது:

''கதவைச் சாத்து. நீ மீண்டும் இந்தப் பக்கம் பார்த்தாயானால் உன்னை....''

பாவெல் கதவைச் சாத்தினுன். அடுத்த அறையில் பலர் வெடிபடச் சிரித்தனர்.

அன்று இரவு பாவெல் தீர்க்கமாக யோசனை செய்தான். போராட்டத்தில் கைகொடுக்க வேண்டுமென்று அவன் எடுத்த முதல் முயற்சியே அவனுக்கு ஆபத்தாகிவிட்டது. முதல் நடவடிக்கையே அவனைப் பிடிபடச் செய்துவிட்டது. இப்பொழுது அவன் பொறியில் சிக்கிய எலியாகத் தன்னைக் கருதினுன்.

அவன் உட்கார்ந்து கொண்டே இருந்த பொழுது, நிம்மதியில்லாத அரைத்தூக்கத்தில் ஆழ்ந்தான். அப்பொழுது, அவனது தாயாரின் உருவம் அவன் கண்முன் தோன்றியது. அவளது வாடி வதங்கிச் சுருக்கம் விழுந்த முகமும், அவன் அன்பாக நேசித்த கண்களும் அவன் எதிரில் தெளிவுறத் தோன்றின. ''அம்மா ஊரில் இல்லாததும் நல்லதுதான். அது இந்த நிகழ்ச்சியின் வேதனையை ஓரளவுக்குக் குறைத்திருக்கிறது'' என்று அவன் எண்ணினுன்.

ஜன்னல் வழியாகச் சாம்பல் நிற வெளிச்சத்தின் சதுரம் அறைத் தளத்தில் தோன்றியது.

இருள் படிப்படியாகப் பின்வாங்கியது. சூரியன் உதிக்கப் போகிறுன்.

அத்தியாயம் ஆறு

அந்தப் பழம்பெரும் வீட்டில் ஒரே ஒரு ஜன்னல் வழியாகத்தான் வெளிச்சம் வந்து கொண்

டிருந்தது. வெளியே கட்டிப்போடப்பட்டிருந்த திரிஸோர் திடீரென்று தடித்தக் குரலில் குரைத்தது.

''இல்லே, அவள் இன்னும் தூங்கவில்லே. லீஸா, உள்ளே வா'' என்று தன் தாயார் தாழ்ந்த குரலில் பேசுவது உறக்க மயக்கத்திலிருந்த தோன்யாவின் செவியில் விழுந்தது.

லீஸாவின் மென் நடையொலியும், அன்பும் பதற்றமும் கலந்த தழுவலும் அவளது தூக்கத்தை நன்கு கலேத்துவிட்டன.

வேண்டாவெறுப்பாக தோன்யா சிரித்தாள்.

''உன் வருகையால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன், லீஸா! அப்பா நேற்றைய தினம் அபாயக் கட்டத்தைத் தாண்டிவிட்டார். இன்று அவர் நன்ருகத் தூங்கிக் கொண்டிருக்கிருர். அம்மாவும் நானும் பல நாட்களாக இமைமூடவில்லே, இன்றுதான் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொண்டோம். சரி, எனக்கு எல்லாச் சேதிகளேயும் கூறு'' என்ருள் தோன்யா. அவள் தன் தோழியை இழுத்துத் தன்னருகில் சோபாவில் உட்காரச் செய்தாள்.

''ஓ! சேதி நிறைய இருக்கிறது. உனக்கு மட்டும் சொல்லவேண்டிய இரகசியங்களும் சில இருக்கின்றன'' என்று கூறிவிட்டு, லீஸா தோன்யாவின் தாயைக் குறிப்பாக நோக்கி புன்முறுவல் பூத்தாள்.

தோன்யாவின் தாயாரும் முறுவலித்தாள். அவள் தோற்றப் பொலிவு கொண்ட ஒரு பெண்

மணி. அவளுக்கு முப்பத்தாறு வயதாகிவிட்டது. என்றாலும், இளம் பெண்ணுக்குரிய சுறுசுறுப்பும் செய் நேர்த்தியும் உடையவள். அவளது சாம்பல் நிறக் கண்களில் அறிவுக் கூர்மை ஒளி வீசியது. அவளது முகம் அழகாயில்லாவிட்டாலும் பார்ப்பதற்கு இனிமையாகவும் தெம்பாகவும் இருந்தது.

''சில நிமிஷங்களில் நான் சென்று விடுகிறேன். ஆனால் அதற்குமுன், எல்லோருக்கும் பொதுவான செய்திகளைச் சொல்லிவிடு!'' என்று விகடமாகக் கூறிக்கொண்டே, அவள் ஒரு நாற்காலியை சோபா அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டாள்.

''நல்லது, முதலாவதாக எங்களுடைய பள்ளிப் படிப்பு முடிந்துவிட்டது. ஏழாவது வகுப்பில் படித்தவர்களுக்குத் தேர்ச்சி அடைந்ததற்கு அடையாளமாக அத்தாட்சிப் பத்திரங்களை வழங்குவதென்று போர்டு தீர்மானித்துவிட்டது. இந்த அல்ஜீப்ராவும் ஜியாமிட்ரியும் எனக்கு அலுத்துப்போய்விட்டன! அவற்றைப் படிப்பதால் நமக்கு என்ன நன்மை? பையன்களாவது மேல் படிப்புக்குச் செல்லலாம். அதுவும், இந்தச் சண்டையெல்லாம் நடக்கும்பொழுது, எங்கு போய் படிப்பதென்று அவர்களுக்கே தெரியவில்லை. பயங்கரமான நிலைமை.... நம்மைப் பொறுத்த மட்டில், நமக்குக் கல்யாணம் செய்து விடுவார்கள். மனைவிகளுக்கு அல்ஜீப்ரா தேவையில்லை'' என்று கூறிவிட்டு லீஸா சிரித்தாள்.

அந்தப் பெண்களுடன் கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்துவிட்டு, தோன்யாவின் தாய் தன் அறைக்குச் சென்றுவிட்டாள்.

இப்பொழுது லீஸா தோன்யாவுக்கு அருகே நகர்ந்து கொண்டு, தன் கைகளால் அவளே அணேத்துக் கொண்டாள். தெருச்சந்தி அருகே நடந்த சம்பவத்தைப் பற்றிக் காதும் காதும் வைத்தாற்போல விவரித்துக் கூறிஞள்.

''தோன்யா! ஓடிய இளேஞன் அவன்தான் என்பதை உணர்ந்தவுடன் நான் அடைந்த வியப்பை நீ சிறிது கற்பனே செய்து பார். அந்த இளேஞன் யாரென்று புரிகிறதா?''

ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்ததோன்யா தன் தோட்களேக் குலுக்கிஞள்.

''கர்ச்சாகின்!'' என்று மிகுந்த ஆவலுடன் திடீரென்று வெளியிட்டாள் லீஸா.

தோன்யா அதிர்ச்சியுற்ருள், பதை பதைத் தாள்.

''பாவெலா?''

தன் சேதி தோன்யாவிடம் ஏற்படுத்திய சலனத்தில் திருப்தியடைந்தவளாக, லீஸா வீக்தருடன் சண்டை போட்டதை விவரிக்கத் தொடங்கிஞள்.

தன் கதையிலேயே லீஸா மெய் மறந்திருந் தாள். எனவே, தோன்யாவின் வதனம் வெளிறிப் போவதையோ, அவள் தன் நீல பிளவுஸை உள்ளக் கிளர்ச்சியுடன் விரல்களால் இழுத்துக் கொண்டிருப்பதையோ, லீஸா கவனிக்கவில்லே.

தோன்யாவின் இருதயம் கவலையால் சுருங்கியதை லீஸா அறியவில்லை. அவளது அழகிய கண்களின் நீண்ட இமைகள் ஏன் அப்படி நடுக்கமுற்றன என்பதையும் அவள் உணரவில்லை.

குடிவெறி பிடித்த பெத்லியூரா அதிகாரியைப் பற்றி லீஸா சொன்ன கதையை தோன்யாவின் காதில் விழவில்லை. ஒரே ஒரு சிந்தனை அவளது மூளையைத் துளைத்தது: "அப்படியானல், காவலனைத் தாக்கியது யார் என்பது வீக்தருக்குத் தெரியும். லீஸா ஏன் அவனிடம் கூறினாள்?" அவளையும் மீறி, அந்தக் கடைசி வாக்கியம் அவளுடைய இதழ்கள் வழியே வெளிப்பட்டது.

உடனடியாக, லீஸாவுக்கு அந்த வினா விளங்கவில்லை.

"நீ ஏன் வீக்தரிடம் பாவெலைப் பற்றிக் கூறினாய்? அவன் நிச்சயம் காட்டிக் கொடுத்து விடுவான்...."

"இல்லை. அப்படிச் செய்வான் என நான் எண்ணவில்லை. வீக்தர் அவனை எதற்காகக் காட்டிக் கொடுக்க வேண்டும்?"

திடீரென்று தோன்யா நிமிர்ந்து உட்கார்ந்தாள். தனது முழங்கால்களைக் குத்திட்டு நிறுத்தி அணைத்துக் கொண்டாள். அந்த அணைப்பின் அழுத்தத்தால் அவை வலித்தன.

"லீஸா! உனக்கு விளங்கவில்லை! அவனும் பாவெலும் விரோதிகள். தவிர, வேறு ஒரு விஷயமும் இருக்கிறது.... நீ பாவெலைப் பற்றி வீக்தரிடம் கூறியது பெரிய தப்பு."

இப்பொழுதுதான் தோன்யாவின் கிளர்ச்சியை லீஸா கவனித்தாள். அவளுடைய விளக்கம் பெருத ஊகம், தோன்யா பாவெலைக் குறிப்பிடும் தோரணையிலிருந்து வலுப்பெற்றது.

தன்னை அறியாமலேயே தான் குற்றவாளி என உணர்ந்த லீஸா, குழப்பத்துடன் மௌனமாய் இருந்தாள்.

''அப்பொழுது, தோன்யா ஒரு சாமானிய தொழிலாளியிடம் காதல் கொண்டிருக்கிருள்! விஞேதமானது, ஆனுல் உண்மை!'' என்று அவள் சிந்தித்தாள். அதைப் பற்றி நிறையப் பேசவேண்டுமென்று லீஸா விரும்பினுள். ஆனுல் தன் தோழியின் மனம் புண்படக் கூடாதென்ற கருத்தால், அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். தன் குற்றத்துக்கு ஏதாவது ஒரு வகையில் வருத்தம் தெரிவிக்கவேண்டும் என்பதற்காக லீஸா தோன்யாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு, ''நீ ரொம்பக் கவலைப்படுகிருயா?'' என்று கேட்டாள்.

''இல்லை. ஒருவேளை, வீக்தர் நான் நினைப்பதைவிட நேர்மையானவஞக இருக்கலாம்'' என்று அவள் தன்னுணர்வில்லாமல் குறிப்பிட்டாள்.

அதன் பின், ஒரு அமைதி அந்த அறையில் குடிகொண்டது. நல்ல வேளையாகச் சிறிது நேரத்தில், அவர்களுடைய பள்ளித் தோழன், பாங்கற்ற, நாணங்கொண்ட தெம்யானவ் அங்கு வந்தான்.

தன்னுடைய நண்பர்களை வழியனுப்பிவிட்டு, தோன்யா நீண்ட நேரம் திட்டிவாசல் கதவில்

சாய்ந்து கொண்டு டவுனுக்குச் செல்லும் இருண்ட சாலையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந் தாள். அன்றும் இன்றும் என்றும் நாடோடியாகவே உள்ள காற்று, குளிர்ந்த ஈரத்துடனும், வசந்த காலத்து-மண்ணீரத்தின் காந்தல் மணத்துடனும், தோன்யாவின் முகத்தில் விசிறியது. அப்பால், டவுனில் உள்ள வீடுகளின் ஜன்னல்களில், மங்க லான சிவப்பு விளக்குகள் விட்டுவிட்டுத் துலங் கின. அங்குதான், அவளது வாழ்விலிருந்து முற்றி லும் வேறுபட்ட வாழ்வை நடத்தும் அந்த நகரத் தில்தான், எங்கோ ஒரு இடத்தில், ஏதோ ஒரு கூரையின் கீழ், அடங்கி வாழ மறுக்கும் கலகக் காரனை அவளுடைய நண்பன் பாவெல், தன்னை எதிர்நோக்கும் அபாயத்தைப்பற்றி ஒன்றுமே அறியாதவனாக இருந்து கொண்டிருக்கிறான். ஒரு வேளை அவன் அவளை மறந்திருப்பான்! அவர்கள் கடைசி முறை சந்தித்தபின் எத்தனை நாட்கள் உருண்டோடிவிட்டன! அப்பொழுது அவன் பிழை செய்தான் என்பது உண்மை. ஆனால் அதை அவள் பல நாட்களுக்கு முன்பே மறந்துவிட்டாள். நாளைக்கு அவள் அவனைச் சந்திப்பாள்; உள்ளன் பும் உணர்ச்சியும் மிகுந்த அவர்களது நட்பு புது மணம் கமழ்ந்து பொலிவு பெறும். அந்த நட்பு மீண்டும் மலருமென்பதில் தோன்யாவுக்குச் சிறிதளவும் ஐயமில்லை. இந்த இரவு—அபாயம் மிகுந்த இந்த இரவு—அவனுக்காகப் பதுங்கிக் காத்திருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. இந்த இரவு மட்டும் அவனைக் காட்டிக் கொடுக்

காமல் இருந்தால்.... குளிர் காற்றில் அவளது மெய் சிலிர்த்தது.

சாலையைக் கடைசியாக நோக்கி விட்டு தோன்யா உள்ளே சென்றாள். அவள் படுத்து கம்பளித் துப்பட்டியால் போர்த்திக் கொண்டு, இலேசாக உறங்கிய பொழுதும், ‘இந்த இரவு மட்டும் அவனைக் காட்டிக்கொடுக்காமல் இருந் தால்’ என்ற சிந்தனை அவளது தலையைத் துளைத்துக் கொண்டிருந்தது.

அதிகாலையில் எல்லோருக்கும் முன்னால் தோன்யா விழித்தெழுந்துவிட்டாள். அவள் துரித மாக உடை உடுத்திக் கொண்டாள்; குடும்பத் தினரின் தூக்கத்தைக் கலைக்கக் கூடாது என்பதற் காகச் சப்தம் செய்யாமல் வீட்டிலிருந்து நழுவி னாள்; அடர்த்தியான ரோமத்தை உடைய பெரிய நாயான திரிஸோரை அவிழ்த்து விட்டாள். அதை யும் அழைத்துக்கொண்டு டவுனுக்குச் சென்றாள். அவள் பாவெல் வீட்டுக்குமுன் ஒரு நொடிப் பொழுது தயங்கி நின்றாள். பிறகு திட்டிவாசல் கதவைத் திறந்துகொண்டு வெளி முற்றத்துக்குள் நடந்தாள். திரிஸோர் வாலைக் குழைத்துக் கொண்டு முன்னால் நடந்தது....

அன்றே அதிகாலையில் ஆர்த்தியோம் கிராமத் திலிருந்து திரும்பி வந்தான். அவன் எந்தக் கொல்லனிடம் வேலை செய்தானோ, அந்தக் கொல் லன் ஆர்த்தியோமைத் தன் வண்டியில் நகரத்துக்கு அழைத்து வந்தான். வீட்டை அடைந்தவுடன் ஆர்த்தியோம் தான் பாடுபட்டுச் சம்பாதித்த

மாவு மூட்டையைத் தோள்மீது தூக்கி வைத்துக் கொண்டு வெளி முற்றத்துக்குள் நடந்தான். அவனது இதர உடைமைகளைத் தூக்கிக்கொண்டு கொல்லனும் பின்தொடர்ந்தான். திறந்த கதவுக்கு வெளியே, ஆர்த்தியோம் மூட்டையை இறக்கி வைத்தான். ''பாவெல்!'' என்று விளித்தான்.

ஒரு பதிலும் இல்லை.

''இங்கு என்ன தகராறு? நேரில் உள்ளே போய்ப் பார்'' என்று கூறிக்கொண்டே கொல்லனும் அந்த இடத்துக்கு வந்தான்.

ஆர்த்தியோம் தன் உடைமைகளைச் சமையலறையில் வைத்து விட்டு, அடுத்த அறைக்குச் சென்றான். அவன் கண்ட காட்சி அவனைப் பிரமிக்கச் செய்தது. அவன் நாவெழாமல் நின்றான். அந்த அறையில் எல்லாச் சாமான்களும் தாறுமாறாகக் கிடந்தன; பழைய துணிகள் அங்கும் இங்கும் சிதறிக் கிடந்தன.

''இது என்ன பேய்க்கூத்து?'' என்று ஒன்றும் புரியாதவனாய் நின்ற ஆர்த்தியோம் முணுமுணுத்தான்.

''ஒரே அமளியாகத்தான் இருக்கிறது'' என்று கொல்லனும் ஒப்புதல் தெரிவித்தான்.

''இந்தப் பையன் எங்கு தொலைந்தான்?'' ஆர்த்தியோமுக்கு ஆத்திரம் வந்தது. ஆனால் அவன் கேள்விக்குப் பதில் கூறுவதற்குத்தான் வீட்டில் ஒருவரும் இல்லையே.

கொல்லன் விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

ஆர்த்தியோம் முற்றத்துக்குச் சென்று சுற்று முற்றும் பார்த்தான்.

''தலையும் தெரியவில்லை, காலும் விளங்கவில்லை! எல்லாக் கதவுகளும் திறந்திருக்கின்றன; ஆனால் பாவெலைக் காணோம்!''

அப்பொழுது, பின்னால் யாரோ நடந்துவந்த ஒலி அவனது செவியில் விழுந்தது. அவன் திரும்பிப் பார்த்தான். நிமிர்ந்த காதுகளுடன் ஒரு பெரிய நாய் தன் முன்னால் நிற்பதை அவன் கண்டான். ஒரு பெண், திட்டிவாசலிலிருந்து வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

''நான் பாவெலைப் பார்க்க வேண்டும்'' என்று தாழ்ந்த குரலில் அவள் ஆர்த்தியோமை ஆராய்ந்து கொண்டே கூறினாள்.

''நானும் அவனைப் பார்க்கவேண்டும். அவன் எங்கு போனானோ, பேய்பிசாசைத்தான் கேட்க வேண்டும்! நான் இங்கு வந்தபொழுது வீடு திறந்திருந்தது; ஆனால் பாவெலைக் காணோம். நீங்களும் அவனைத் தேடுகிறீர்களா?'' என்று அவன் அவளிடம் கேட்டான்.

பதிலுக்குப் பதிலாக அவள் மற்றொரு கேள்வியைத் தொடுத்தாள்:

''நீங்கள் பாவெலின் அண்ணன் ஆர்த்தியோம் அல்லவா?''

''ஆம். ஏன் கேட்கிறீர்கள்?''

அவள் பதில் கூறுவதற்குப் பதிலாகத்

திகிலடைந்தவளாய்த்திறந்த கததவை நோக்கினுள். "நான் ஏன் நேற்று இரவே வராமல் போனேன்?" என்று அவள் சிந்தித்தாள். "அப்படி இருக்காது, அப்படி இருக்காது...." அவளது இதயம் மேலும் கனத்தது.

"நீங்கள் வந்தபொழுது, கதவு திறந்திருந்தது, பாவெல் போய்விட்டான். அப்படியா?" என்று அவள் தன்னை வியப்புடன் வெறித்துப் பார்த்த ஆர்த்தியோமைக் கேட்டாள்.

"உங்களுக்குப் பாவெலிடம் என்ன வேண்டும் என்று நான் கேட்கலாமா?"

தோன்யா அவனை நெருங்கி வந்தாள். சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே தத்தித் தத்திப் பேசினுள்:

"எனக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனுல், பாவெல் வீட்டில் இல்லையென்ருல் கைதாகியிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்."

ஆர்த்தியோம் அதிர்ச்சியடைந்தான்.

"கைதா? எதற்காக?"

"நாம் உள்ளே செல்வோம்" என்ருள் தோன்யா.

தோன்யா தான் அறிந்தவற்றைக் கூறிய பொழுது, ஆர்த்தியோம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவள் கதையைக் கூறிமுடித்த பொழுது, அவன் நிராசையும் ஏக்கமும் நிறைந்தவனுனுன்.

"என்ன விபரீதம்! முன்பே உள்ள தொல்லை போதாதா? இந்த விபத்தும் ஏற்படவேண்டுமா?"

என்று அவன் மனம் நொந்து முணு முணுத்தான். ''இந்த இடம் ஏன் தலை கீழாய் இருக்கிறதென்பது இப்பொழுது புரிகிறது. இந்தப் பையன் ஏன் இந்தச் சிக்கலில் அகப்பட்டுக் கொண்டான்!... நான் அவனை எங்கு சென்று தேடுவேன்! சரி, நீங்கள் யாருடைய குமாரி?''

''என் தந்தை காட்டிலாகா தலைமை அதிகாரி துமானவ். நான் பாவெலின் சிநேகிதி.''

''அப்படியா?'' என்று ஆர்த்தியோம் உள்ளத் தெளிவு இல்லாமல் இழுத்துப் பேசினான். ''நான் பையனுக்கு ரொட்டி செய்ய மாவு கொண்டுவருகிறேன். ஆனால் இங்கு இந்த....''

ஆர்த்தியோமும் தோன்யாவும் ஒருவரை ஒருவர் மௌனமாகப் பார்த்தனர்.

''நான் இப்பொழுது போக வேண்டும்'' என்று அவள் மெதுவாகக் கூறிக்கொண்டே கிளம்புவதற்குத் தயாரானாள். ''ஒரு வேளை, நீங்கள் அவனைக் கண்டுபிடிக்கலாம். எதற்கும் நான் மாலையில் வந்து விபரம் அறிந்து செல்கிறேன்.''

ஆர்த்தியோம் மௌனமாகத் தலை அசைத்துத் தன் ஒப்புதலைத் தெரிவித்தான்.

குளிர் காலத் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்த ஒரு மெலிந்த ஈ ஜன்னலின் ஒரு மூலையில் 'ஙொய்' என்று ஒலித்துக் கொண்டிருந்தது. ஒரு பழைய, பழுதான சோபாவின் ஓரத்தில் இளம் விவசாயப் பெண் உட்கார்ந்திருந்தாள். அவளது முழங்கை மூட்டுகளை முழங்கால்களில் ஆதாரப்

படுத்திக் கொண்டு, அவள் அசுத்தமான தரையைத் திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

நகர ராணுவத் தலைவன் தன் வாயின் மூலையில் பிடித்திருந்த சிகரெட்டை மென்று கொண்டே, ஒரு காகிதத்தில் சிங்காரமாக எழுதி முடித்தான்; தன் சாதனையில் திருப்தி அடைந்தவனாக, அவன் ''ஷெப்பெத்தோவ்க்கா நகரத்தின் ராணுவத் தலைவர் கொரூன்ஷிய்'' என்ற பட்டத்தின் கீழ் அலங்காரமாகக் கையெழுத்திட்டுச் சுழித்தான். குதி முட்களின் ஒலி கதவின் அருகிலிருந்து வரவே, அவன் தலையை உயர்த்திப் பார்த்தான்.

அவனுக்கு முன் கைக்கட்டுடன் ஸலொமீகா நின்றான்.

''எந்தக் காற்று உன்னை இங்கு அடித்துக் கொண்டுவந்தது?'' என்ற கேள்வியுடன், தலைவன் அவனை வரவேற்றான்.

''நல்ல காற்று இல்லை என்பது உறுதி. போகூன்காரன்* ஒருவன் என் கையை எலும்புவரை நறுக்கி விட்டான்.''

அங்கு ஒரு பெண் இருப்பதையும் பொருட்படுத்தாமல், ஸலொமீகா தன்னைத் தாக்கியவனைத் தாறுமாறாகத் தூற்றினான்.

---

* **போகூன்காரர்கள்** — செஞ்சேனை வீரர்கள். 17ம் நூற்றாண்டில், உக்ரேனிய மக்கள் நடத்திய தேசவிடுதலைப் போராட்டத்தில் போகூன் மாவீரராய்த் திகழ்ந்தார். அவரது நினைவைக் கொண்டாடுவதற்குச் செஞ்சேனை வீரர்கள் தமக்கு போகூன்காரர்கள் என்று பெயரிட்டுக் கொண்டனர்.

''எனவே, நீ இங்கு என்ன செய்துகொண்டிருக்கிறாய்? உடலைத் தேற்றிக் கொண்டிருக்கிறாயா?''

''தேற்றுவதற்குத் தேவையான நேரம் அடுத்த உலகத்தில்தான் கிடைக்கும். போர்முனையில், அவர்கள் நம்மை பலமாக நெருக்கிக் கொண்டிருக்கிறார்கள்.''

தலைவன் அவனை இடைமறித்தான். சோபாவில் உட்கார்ந்திருந்த பெண்ணைக் காட்டும் வகையில் தலையை அசைத்தான்.

''அதைப்பற்றிப் பிறகு பேசுவோம்.''

ஸலொமீகா துக்கத்துடன் நாற்காலியில் உட்கார்ந்தான்; தான் அணிந்திருந்த குல்லாயை அகற்றினான். உக்ரேனிய தேசியக் குடியரசின் சின்னமான திரிசூலம் எனாமலில் செய்து அந்தக் குல்லாயில் பொருத்தப் பட்டிருந்தது.

அவன் மெலிந்த குரலில் பேசத் தொடங்கினான்:

''என்னை கோலுப் அனுப்பினார். நிரந்தர டிவிஷன் ஒன்று இங்கு சீக்கிரத்தில் வரவிருக்கிறது. பொதுவாக, இந்த டவுனில் சில காரியங்கள் நடைபெறப் போகின்றன. எல்லாவற்றையும் நேராக்குவதே என் வேலை. பெருஞ்சேனாதிபதி இங்கு வரலாம்; அவருடன் யாராவது அந்நிய தேசப் பிரமுகரும் வரலாம். எனவே, எந்த விதமான 'பொழுது போக்கைப்' பற்றியும் பேசக் கூடாது. நீ என்ன எழுதிக் கொண்டிருக்கிறாய்?''

நகர இராணுவத் தலைவன் வாயின் மறு மூலையில் சிகரெட்டை மாற்றி வைத்துக் கொண்டான்.

''இங்கு உபத்திரவம் செய்யும் அயோக்கியப் பையன் ஒருவன் இருக்கிறான். நமக்கு எதிராக ரயில்வே தொழிலாளிகளைத் தூண்டிவிட்ட ஷுஹ்ராய் என்பவனை உனக்கு நினைவு இருக்கிறதா? அவன் ஸ்டேஷனில் பிடிபட்டான்.''

''அவன் பிடிபட்டானா? அப்புறம்?'' என்று கூறிய ஸலொமீகா, சிரத்தை மிகுந்தவனாய், நாற்காலியை முன்னால் இழுத்துப் போட்டுக் கொண்டான்.

''அந்த மடையன், ஸ்டேஷனின் ராணுவ அதிகாரி, ஷுஹ்ராயை ஒரு கஸாக்குடன் அனுப்பினான். வழியில், பட்டப்பகலில், இங்கு என் கையில் சிக்கியிருக்கும் பையன் அந்தக் கைதியை விடுவித்துக்கொண்டு போய்விட்டான். காவலனின் ஆயுதங்களைப் பறித்துவிட்டார்கள்; அவனது பற்களைப் பிடுங்கி எறிந்துவிட்டார்கள். அந்தப் போக்கிரிகள் உடனே சிட்டாய் பறந்து விட்டார்கள். ஷுஹ்ராய் மறைந்து விட்டான். ஆனால் நாம் இந்தப் பயலைப் பிடித்துவிட்டோம். எல்லாவற்றையும் இந்தக் காகிதத்தில் எழுதி வைத்திருக்கிறேன்; படித்துப் பார்.''

இவ்வாறு கூறிவிட்டு அவன் எழுதப்பட்ட காகிதக் கட்டு ஒன்றை ஸலொமீகாவிடம் தள்ளினான்.

ஸலொமீகா நலமாக இருந்த தனது இடது கையால் தாள்களைப் புரட்டிக் கொண்டே அதைப் படித்தான். அவன் படித்து முடித்த பிறகு, ராணுவ நகரத் தலைவனைப் பார்த்தான்.

''அந்தப் பயலிடமிருந்து எந்த விஷயத்தையும் கறக்க முடியவில்லையா?''

தலைவன் தன்னுடைய தொப்பி முனையை இழுத்துவிட்டுக் கொண்டான்.

''நானும் அவனுடன் ஐந்து நாட்களாக மாரடிக்கிறேன். ஆனால், 'எனக்கொன்றும் தெரியாது; அவனை நான் விடுவிக்கவில்லை' என்று பிடிவாதமாகக் கூறிக் கொண்டிருக்கிறான். சல்லிப் பயல்! காவலன் அவனை அடையாளம் கண்டு விட்டான்; அவன் அந்தப் பையனைக் கண்டவுடன் அமுக்கிய அமுக்கில் பையன் மூச்சடைத்துச் சாகும் நிலைக்கு வந்துவிட்டான். அந்தக் காவலனைப் பிடித்திழுப்பதற்குள் நான் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல!- கைதியை இழந்த குற்றத்துக்காக அவனுக்கு ரயில்நிலைய ராணுவ அதிகாரி இருபத்தைந்து அடிகள் பிரம்பால் கொடுத்தான்! அதை அந்த கஸாக்கு திரும்ப இங்கு பையனுக்குக் கொடுத்தான். இனி இந்தப் பையனை வைத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. அவனைத் தீர்த்துக் கட்டுவதற்கு அனுமதி கோரி இந்தக் கடிதத்தைத் தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்புகிறேன்.''

ஸலொமீகா இகழ்ச்சியாகத் துப்பினான்.

''அவன் என் கையில் சிக்கினால், நிச்சயம் பேச வைப்பேன். விசாரணை நடத்தும் சாமர்த்தியம் உன்னிடம் போதாது. சமய சாத்திர மாணவன், நகர ராணுவத் தலைவனாக வேலை செய்கிறானென்றால், யார்தான் நம்புவார்கள்? பிரம்பை உபயோகித்துப் பார்த்தாயா?''

தலைவனுக்கு ஆத்திரம் தலைக்கேறிவிட்டது.

''நீ அளவுக்கு மிஞ்சி விட்டாய். உன் பரிகாசத்தை எல்லாம் உன்னோடு வைத்துக்கொள். இங்கு அதிகாரி நான். என் விஷயத்தில் நீ குறுக்கிடாதே.''

ரோமம் விறைத்து நின்ற தலைவனைப் பார்த்து ஸலொமீகா உரக்கச் சிரித்தான்.

''ஹா! ஹா!! ஹா!!! பாதிரி மகனே! அளவுக்கு மீறி உப்பினால், வெடித்து விடுவாய்! நீயும் உன் பிரச்சினைகளும் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? எனக்கு இரண்டு பாட்டில் சாராயம் வேண்டும். கிடைக்குமா?''

நகர ராணுவத் தலைவன் இளித்தான்.

''ஏற்பாடு செய்யலாம்.''

காகிதங்களை விரலால் குத்திக் கொண்டே, ஸலொமீகா கூறினான்:

''இதைப் பொறுத்தமட்டில், அந்தப் பையனுக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டுமானால் அவனுக்குப் பதினாறு வயது என்று குறித்திருப்பதைப் பதினெட்டு வயது என்று மாற்று. இந்த மாதிரி, அந்த 6 என்ற எண்ணின் மேல் பகுதியில் சுழித்து 8 என்று ஆக்கிவிடு. இல்லாவிட்டால், அவர்கள் அங்கீகாரம் அளிக்க மாட்டார்கள்.''

அந்தச் சாமான் சேமிப்பு அறையில் மூவர் இருந்தனர். நைந்து போன மேலாடையும், அகன்ற கால்சட்டையும் அணிந்திருந்த தாடிக் கிழவன் ஒருவன், தன் மெலிந்த கால்களை மடக்கிக்

கொண்டு மரக் கட்டில் ஒன்றில் படுத்துக் கொண் டிருந்தான். பெத்லியூரா ஆட்களின் குதிரை யொன்று அவன் கொட்டகையிலிருந்து காணுமற் போய்விட்டதால், அவன் கைது செய்யப்பட் டிருந்தான். சூது நிறைந்த சிறிய கண்களேயும் கூர்மையான மோவாயையும் உடைய வயதில் மூத்த மாது ஒருத்தி தரையில் உட்கார்ந்திருந் தாள். அவள் மது தயாரித்து விற்றுப் பிழைத்து வந்தாள். ஒரு கைக்கடிகாரத்தையும் வேறு சில விலே உயர்ந்த பொருட்களேயும் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, அவள் அங்கு அடைத்து வைக்கப் பட்டிருந்தாள். ஜன்னலுக்குக் கீழ், மூலேயில், ஓரளவுக்கு உணர்வு இழந்த நிலேயில் பாவெல் படுத்திருந்தான். தன்னுடைய கசங்கிய குல்லாயைத் தலேயணேயாக வைத்துக் கொண் டிருந்தான்.

ஒரு இளம் பெண் சாமான் சேமிப்பு அறைக்குக் கொண்டுவரப்பட்டாள். அவள் உழவர் களுக்கே உரித்தான முறையில் வண்ணக் குட்டை ஒன்றைத் தலேயில் கட்டியிருந்தாள். அவளது கண் கள் பீதியால் அகன்றிருந்தன.

அவள் ஓரிரண்டு விஞடிகள் நின்று கொண் டிருந்தாள். அதன்பின், சாராய மாதுக்கு அருகில் அமர்ந்தாள்.

சாராய மாது புதிதாக வந்த நங்கையை ஆவலுடன் ஆய்ந்த வண்ணம் படபடவென்று பேசத் தொடங்கிஞள்:

‘‘பிடிபட்டாயா? சிறுக்கி!’’

அந்த நங்கை பதில் பேசவில்லை; ஆனால் சா ராய மாது அவளை விடுகிற வழியாய் இல்லை.

''உன்னை எதற்காகப் பிடித்தார்கள்? ஒரு வேளை சாராயத் தகராறு?''

அந்த விவசாயப் பெண் எழுந்து நின்று, தன்னை நச்சரிக்கும் அந்தக் குரூபி மாதைப் பார்த்தாள்.

''இல்லை. என் சகோதரனால் நான் சிறைப்பட்டேன்'' என்று அவள் அமைதியாகப் பதிலளித்தாள்.

''அவன் யார்?'' என்று மாது அடுத்த கேள்விக் கணையைத் தொடுத்தாள்.

கிழவன் பேச்சில் குறுக்கிட்டான்:

''அவளை விடமாட்டாயா? ஏன் தொல்லை கொடுக்கிறாய்? அவளுக்கு வேண்டிய கவலைகள் இருக்காதா? நீ வேறு வம்பு பேசித் துன்பம் தர வேண்டுமா?''

மாது கட்டிலை நோக்கித் திரும்பினாள்.

''நான் என்ன செய்யவேண்டுமென்று சொல்வதற்கு, நீ யார்? நான் உன்னிடம் உரையாடவில்லை.''

கிழவன் எச்சில் துப்பினான்.

''அவளைத் தனியாக விடு'' என்று வற்புறுத்தினான்.

அந்த அறையில் மீண்டும் அமைதி நிலவியது. விவசாயப் பெண் ஒரு பெரிய சால்வையை விரித்துக்கொண்டு கையில் தலையை வைத்துப் படுத்தாள்.

சாராய மாது சாப்பிடத் தொடங்கினாள். கிழவன் கால்களைத் தரையில் ஊன்றிக்கொண்டு, ஒரு சிகரெட்டை மெதுவாகச் சுற்றிக்கொண்டான். அதைப் பற்ற வைத்தான். கார்ப்புள்ள புகையின் மேகங்கள் பரவிப்படர்ந்தன.

''இந்த நாற்றத்தில் எவரும் நிம்மதியாகச் சாப்பிட முடியாது. எங்கும் புகைப்படலமாக்கி விட்டாய்!'' என்று மாது முணுமுணுத்தாள். ஆனால் அவளது தாடைகள் மட்டும் தீவிரமாக வேலை செய்துகொண்டேயிருந்தன.

கிழவன் முகத்தை நெறித்துக் கொண்டே சொன்னான்:

''எடை இழந்து விடுவோம் என்று அஞ்சுகிறாயா? நீ சீக்கிரத்தில் அறைக் கதவைத் தாண்டப் போவதில்லை. நீயே வயிறு நிறைய அடைத்துக்கொள்வதற்குப் பதிலாக, அந்தப் பையனுக்குக் கொஞ்சம் கொடுக்கக் கூடாதா?''

மாது ஆத்திரத்துடன் கையை ஆட்டினாள்.

''நான் முயற்சித்தேன். ஆனால் அவன் ஒன்றும் வேண்டாம் என்று சொல்கிறான். நான் சாப்பிடுவதைப் பொறுத்தவரை, நீ வாயை மூடிக் கொண்டு சும்மா இரு. நான் உண்பது உன் உணவை அல்ல.''

புதிய பெண், சாராய மாதின் பக்கம் திரும்பிப் பாவெலைக் காட்டிக் கேட்டாள்.

''அவன் ஏன் இங்கு இருக்கிறான் என்று உங்களுக்குத் தெரியுமா?''

தன்னைக் கேட்டதால் மாதுக்கு மகிழ்ச்சி. உடனே பதில் அளித்தாள்.

''அவன் உள்ளூர்ப் பையன். கர்ச்சாகின் குடும்பத்தின் இளைய பையன். அவனது தாயார் ஒரு சமையற்காரி.''

மாது தன் உடலை வளைத்து, நங்கையின் காதில் குசுகுசுவென்று பேசினாள்:

''அவன் ஒரு போல்ஷெவிக்கை விடுதலை செய்தான். இந்தப் பக்கத்தில் ஒரு மாலுமி இருந்தான்; எனது வீட்டுக்கு அடுத்த வீட்டில்தான் அவன் தங்கியிருந்தான்.''

''அவனைத் தீர்த்துக்கட்டுவதற்கு அனுமதி கோரி இந்தக் கடிதத்தைத் தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்புகிறேன்'' என தான் கேட்ட வார்த்தைகளை நினைவுபடுத்திக் கொண்டாள் அந்த நங்கை.

ராணுவ ரயில்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஜங்ஷனுக்கு வந்து கொண்டிருந்தன. அவற்றிலிருந்து நிரந்தர சோல்ஜர்கள் கும்பல் கும்பலாகக் கட்டுப்பாடற்ற முறையில் ஒருவரை ஒருவர் நெருக்கிக் கொண்டு இறங்கினார்கள். ''ஸப்பரோஷேத்ஸ்'' என்ற எஃகால் ஆக்கப்பட்ட நான்கு பெட்டிகள் கொண்ட ஒரு கவச ரயில் இருப்புப் பாதையின் மேல் மெதுவாக வந்து கொண்டிருந்தது. திறந்த பெட்டிகளிலிருந்து பீரங்கிகள் இறக்கப்பட்டன. மூடிய பெட்டிகளிலிருந்து குதிரைகள் வெளியே கொண்டு வரப்பட்டன. உடனே, குதிரைகளுக்குச் சேணம் போட்டுச் சவாரிக்கு

ஆயத்தம் செய்யப்பட்டன. குதிரைகள் மீதேறிய சிப்பாய்கள் காலாட்படையினர்களின் நெருக்கத்துக்கிடையே வழி செய்து கொண்டு, குதிரைப் படை அணிவகுத்துக் கொண்டிருந்த ஸ்டேஷன் மைதானத்துக்கு விரைந்தார்கள்.

அதிகாரிகள் தத்தம் பிரிவுகளின் எண்களைக் கூவிக்கொண்டு மேலும் கீழும் நடந்தார்கள்.

குளவிக் கூட்டில் இருப்பது போல் ஸ்டேஷனில் சப்தம் நிறைந்திருந்தது. இரைந்து பேசிக்கொண்டும் சுற்றிச் சுழன்று கொண்டும் சென்ற கூட்டம் படிப்படியாக முறைபடுத்தப் பட்டது. கடைசியில், சதுரம் சதுரமாகப் பிளாட்டூன்கள் ஒழுங்காக அணிவகுத்தன. அதன்பின் அந்த ஆயுதமேந்திய துருப்புக்கள் நகரத்தை நோக்கிப் புறப்பட்டன. அன்று மாலையில்கூட, வண்டிகள் கட கடவென்று ஒலித்துக்கொண்டு தெருக்களில் சென்ற வண்ணமிருந்தன. பட்டாளத்தின் உதவியாளர்கள் அடங்கிய பிரிவுகள் துப்பாக்கி டிவிஷனுக்கும் பின்னால், சாலை வழியே சென்றன.

ஊர்வலத்தின் இறுதியில், தலைமைக் காரியாலயக் கம்பெனி சுறு சுறுப்பாக நடந்தது. அதன் நூற்றிருபது உறுப்பினர்களும் உரக்கப் பாடிக் கொண்டே நடை போட்டனர்:

''என்ன போரொலி! யார் வருகின்றார்?
ஏதுக்கிரைகின்றார்?—அங்குத்
தன் படைவீரர் சூழப் பெத்லியூரா
தானே வருகின்றான்!''

ஜன்னல் வழியே பார்ப்பதற்காகப் பாவெல் எழுந்து நின்றான். மங்கலாக இருந்த மாலைப் பொழுதில் தெருவில் சக்கரங்கள் உருளுவதையும் பல பாதங்கள் நடைபோடுவதையும் ஏராளமான குரல்கள் பாடுவதையும் அவனால் கேட்க முடிந்தது.

அவனுக்குப் பின்னாலிருந்து ஒரு மென்மையான குரல் வந்தது:

''துருப்புக்கள் டவுனுக்கு வந்துவிட்டன.''

பாவெல் திரும்பிப் பார்த்தான்.

பேசியவள், அன்றைக்கு முதல் நாளுக்கு முந்திய நாள் அறைக்குள் அடக்கப்பட்ட நங்கை தான்.

அவன் அவளுடைய கதையை முன்பே கேட்டறிந்திருந்தான். சாராய மாது அதை அவளிடமிருந்து கறந்து விட்டாள். அவள் அந்த டவுனுக்கு ஏழு கிலோமீட்டர் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவள். அவளுடைய அண்ணன் கிரித்ஸ்கோ, தற்சமயம் சிவப்புக் கொரில்லாவாக இருக்கிறான். அந்தக் கிராமத்தில் சோவியத்துக்கள் ஆட்சியில் இருந்தபொழுது, அவன் ஏழை விவசாயிகள் கமிட்டிக்குத் தலைமை தாங்கினான்.

செம்படையினர் அந்த ஊரை விட்டு வெளியேறிய பொழுது, அவன் ஒரு யந்திரத் துப்பாக்கிப் பெல்ட்டை இடுப்பில் சுற்றிக்கட்டிக்கொண்டு, அவர்களுடன் போய்விட்டான். இப்பொழுது, அவனது குடும்பம் இடைவிடா வேட்டைக்கு இலக்காகிவிட்டது. அவர்களிடம் ஒரே ஒரு குதிரை

இருந்தது; அதுவும் பறிபோய்விட்டது. பெண்ணின் தந்தை கொஞ்ச காலத்துக்குச் சிறையிலடைக்கப்பட்டான்; சிறையில் அவன் மிகவும் அவஸ்தைப் பட்டான். சோவியத் ஆட்சியில் கிரித்ஸ்கோவால் அடக்கப்பட்ட கிராமத்தலைவன் இப்பொழுது பழிவாங்க முற்பட்டான். அந்தப் பெண்ணின் வீட்டில் ஊருக்கு வரும் புதியவர்களுக்குத் தங்குமிடம் அளிக்க வேண்டுமென்று இடைவிடாமல் கட்டாயப்படுத்தினன். அந்தக் குடும்பம் பூர்த்தியாக அழிந்து விட்டது. முதல் நாள் கிராமத்தில் சோதனை நடத்துவதற்காக ராணுவ நகரத் தலைவன் சென்ற பொழுது, கிராமத் தலைவன் அவனை இந்தப் பெண்ணின் வீட்டுக்கு அழைத்துச் சென்றுன். ராணுவத் தலைவனுக்கு அவளிடம் ஆசை விழுந்துவிட்டது. எனவே, மறு நாள் காலை அவன் அவளை டவுனுக்கு அழைத்து வந்தான், ''விசாரணை நடத்துவதற்காக'' என்று.

பாவெலால் தூங்க முடியவில்லை. அவன் என்னதான் முயன்றுலும், அவனுல் ஓய்ந்திருக்க முடியவில்லை. ''அடுத்தது என்ன?'' என்ற ஒரே கேள்வி அவனது மூளையைப் பிடிவாதமாகத் துளைத்துக்கொண்டிருந்தது. அந்தச் சிந்தனையைத் தவிர்க்க அவனுல் முடியவில்லை.

அந்த பெத்லியூராக்காரன் அவனை மிருகத்தனமான வெறியுடன் அடித்துவிட்டான். அதனுல் அவனது நசுங்கிய தேகத்தின் ஒவ்வொரு பகுதியும் வலித்து வேதனையை உண்டாக்கியது.

தன் மூளையில் குவியும் வெறுப்பான சிந்தனைகளிலிருந்து பாவெல் தப்ப விரும்பினான். எனவே, இரண்டு பெண்களும் குசுகுசுவென்று பேசிக் கொண்டதைச் செவிகொடுத்துக் கேட்டான்.

அந்த மங்கை மெலிந்த குரலில் பேசிக் கொண்டிருந்தாள். நகர ராணுவத் தலைவன் அவளைப் படுத்தி வைத்த பாட்டை எல்லாம் விவரித்தாள்; அவளை நயந்து பேசித் தாஜா செய்தும் அச்சுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தும் அவன் எடுத்த முயற்சிகளை எடுத்துரைத்தாள்; அவள் அவனுக்கு உறுதியாக மறுப்புக்கொடுத்து எதிர்த்தவுடன், தலைவன் ஆத்திரமடைந்தான். ''உன்னை நிலவறையில் போட்டுப் பூட்டிவிடுகிறேன். நீ அதிலிருந்து தப்ப முடியாது'' என்று அவன் கோபாவேசத்தில் கொக்கரித்ததையும் அவள் விளக்கினாள்.

அறையின் மூலைகளில் அந்தகாரம் நிறைந்திருந்தது. இன்னொரு இரவை, ஓய்வு பெறமுடியாத இரவை, திணறித் தவிக்கச் செய்யும் இரவை இங்குக் கழிக்கவேண்டும். பாவெல் அடைபட்டபின், இது ஏழாவது இரவு. ஆனால் பல மாதங்களாக இங்கு இருப்பதாகப் பாவெலுக்குத் தோன்றியது. தரை உறுத்தியது; வலி அவனது உடலைச் சித்திரவதை செய்தது. இப்பொழுது இந்த அறையில் மூவர்தான் இருந்தனர். சொந்த வீட்டில், குளிர்காயும்அடுப்புக்குப் பக்கத்தில்படுத்திருப்பதைப் போல, கிழவன் குறட்டைவிட்டுக் கொண்டிருந்தான். வேண்டுதல் வேண்டாமை

இல்லாதவனாக, ஒரு நிலைப்பட்ட சித்தத்தின் தெளிவுடன் அவன் தனக்கேற்பட்டுள்ள விபத்தைத் தாங்கிக்கொண்டிருந்தான். எனவே அவன் இரவு முழுவதும் ஆழ்ந்து உறங்கினான். சாராயத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக கொரூன்ஷிய் மாதை விடுதலை செய்திருந்தான். கிரிஸ்தீனாவும் பாவெலும் தரையில் படுத்திருந்தனர், அடுத்தடுத்துப் படுத்திருந்தனர் என்றே சொல்லலாம். நேற்றைய தினம் பாவெல் ஜன்னல் வழியாக ஸெர்யோஷாவைப் பார்த்தான். ஸெர்யோஷா நீண்ட நேரம் தெருவில் நின்று, வீட்டின் ஜன்னல்களைத் துயரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''நான் இங்கே இருப்பதை அவன் அறிவான் போலும்'' என்று பாவெல் எண்ணினான்.

தொடர்ந்தாற்போல் மூன்று நாட்களாக யாரோ அவனுக்கு ரொட்டி கொண்டு வந்தார். யார் அது என்று சொல்வதற்குக் காவலர்கள் மறுத்து விட்டார்கள். இரண்டு நாட்கள் நகர ராணுவத் தலைவன் அவனைத் திரும்பத்திரும்ப விசாரித்தான்.

இவற்றுக்கெல்லாம் என்ன பொருள்?

விசாரணையின் பொழுது அவன் எதையும் காட்டிக் கொடுக்கவில்லை. அதற்கு மாறாக, அவன் எல்லாவற்றையும் மறுத்துவிட்டான். அவன் எப்படி வாயை அடக்கிக்கொண்டு மௌனமாயிருந்தான் என்பது அவனுக்குத் தெரியாது. அவன் புத்தகங்களில் பல வீரர்களைப் பற்றிப் படித்திருக்கிறான்.

அவர்களைப் போல தைரியமாகவும் உறுதியாக வும் இருக்க வேண்டுமென்று அவன் விரும்பி ஞன். எனினும், அன்று இரவு அவனை இந்தச் சிறைக்குக் கொண்டு வந்த பொழுது, ''கொரூன் ஷிய் அவர்களே! இவனை எதற்காக இழுத்துக் கொண்டு போகவேண்டும்? முதுகில் ஒரு குண்டு பட்டால், ஆள் தீர்ந்தான்'' என்று ஒருவன் சொன்னபொழுது, அவன் பயந்துவிட்டான். ஆம்! பதினுறு வயதில் இறப்பதென்பது பயங்கரமான விஷயம்தான்! இறந்து விட்டால் அதன் பின் வாழ்வு இல்லை.

கிரிஸ்தீஞவும் சிந்தித்துக் கொண்டிருந்தாள். இளைஞனைவிட அவளுக்கு அதிகமாகத் தெரியும். அவனுக்கு முன்ஞல் காத்திருப்பது என்ன என் பதை.... அவள் ஒட்டுக் கேட்ட விஷயத்தை அவன் அநேகமாக அறிந்திருக்க மாட்டான்....

அவன் தூங்க முடியாமல், இரவெல்லாம் தரையில் உருண்டான். கிரிஸ்தீஞ அவனிடம் இரக்கம் கொண்டாள். அவளுக்குத்தான் அவனிடம் எத்தகைய பரிவு! ஆஞல் அவளுக்குத் தன் துன்பமே பெரிது ''நாளைக்கு நீ உன்னை எனக்குக் கொடுக்க வேண்டும். நீ என்னை ஏற்றுக்கொள்ளா விட்டால், உன்னைக் காவலர்களிடம் அனுப்பி விடுவேன். கஸாக்குகள் உன்னை விடமாட்டார்கள். நாஞ, அவர்களா என்பதை முடிவு செய்துகொள்'' என்று ராணுவத் தலைவன் எச்சரிக்கையாகக் கூறிய வார்த்தைகளில் பொதிந்திருக்கும் பேரா பத்தை அவளால் மறக்க முடியவில்லை.

எவ்வளவு கடினமான நிலைமை! எங்கிருந்தும் இரக்கத்தை எதிர்பார்க்க முடியவில்லை. கிரித்ஸ்கோ செம்படையில் சேர்ந்தால், அது அவளுடைய குற்றமா? உலகத்தில் வாழ்க்கை எவ்வளவு கடுமையானது?

தொண்டையில் ஏதோ வலி கண்டது. நம்பிக்கையின்மையால் உண்டான ஏக்கமும் பயமும் அவளை வேதனைக்குள்ளாக்கின. அவள் சப்தம் செய்யாமல் விம்மி அழுதாள்.

இளம் உடல் பைத்தியக்காரத்தனமான ஏக்கத்தாலும், மனச் சோர்வாலும் ஏற்பட்ட விக்கல்களால் குலுங்கியது.

சுவரின் அருகில், மூலையில், ஒரு நிழல் நகர்ந்தது.

''நீ ஏன் புலம்புகிறாய்?''

அவள் ஆர்வம் மிகுந்தவளாய் தன் துயரங்களையெல்லாம் மெலிந்த குரலில் எடுத்துரைத்தாள். அவளது சிறைத் தோழனான பாவெல் பேசவில்லை. ஆனால் அவன் தன் கரத்தை அவள் கரத்தின் மீது இலேசாக வைத்தான்.

''நான் சாகும்வரை சித்திரவதை செய்வார்கள் இந்தப் பாவிகள்! என்னை எதுவும் காப்பாற்ற முடியாது'' என்று பயத்துடன் நங்கை கூறினாள். கண்களில் வழிந்தோடிய நீர் வாய்க்குள் புகவே, அதை அவள் விழுங்கினாள்.

இந்த நங்கையிடம் பாவெல் என்ன கூற முடியும்? சொல்வதற்கு ஒன்றுமில்லை. வாழ்க்கை இரு

வரையும் தன் இரும்புச் சக்கரத்தின்கீழ் அரைத்துக் கொண்டிருக்கிறது.

நாளைக்கு அவர்கள் அவளை இட்டுச் செல்ல வரும் பொழுது, அவன் சண்டை போடலாமா? சண்டை போட்டுச் சாதிப்பதற்கு என்ன இருக்கிறது? அவர்கள் அவனை அடித்துக் கொல்வார்கள், அல்லது வாளினால் அவன் தலையை ஒரு தாக்குத் தாக்கினால், அனைத்தும் முடிந்துவிடும். எப்படியாவது இந்த மனங்கலங்கிய பெண்ணைத் தேற்ற வேண்டுமென்று விரும்பிய பாவெல் அவளது கரத்தை அன்பாகத் தட்டிக் கொடுத்தான். அவளது புலம்பல் நின்றது. ''அங்கு போவது யார்?'' என்று வாசலில் உள்ள பாராக்காரன் வழிப் போக்கர்களுக்குச் சவால் விடுக்கும் ஒலி விட்டு விட்டுக் கேட்டது. அதற்கிடையே, அமைதி நிலவியது. கிழவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். முடிவு காண முடியாத நிமிஷங்கள் மெல்ல மெல்ல ஊர்ந்துகொண்டிருந்தன. அப்பொழுது, அந்த மங்கையின் கைகள் பாவெலை அணைத்தன; அவளிடம் இழுத்துக் கொண்டன. இதைக் கண்டு, பாவெல் ஆச்சரியமடைந்தான்.

அவளுடைய இதழ்கள் மெல்லிய குரலில் பேசின:

''சொல்வதைக் கேள். நான் இனித் தப்ப முடியாது. அதிகாரி இல்லாவிட்டால் மற்றவர்கள். என் அன்பே, நீ என்னை ஏற்றுக்கொள். அந்த நாய் என்னை முதலில் அடையக் கூடாது.''

''கிரிஸ்தீனா, என்ன சொல்கிறாய்?''

ஆனுல் வலிய கைகள் அவனை விடுவிக்க வில்லை. அவளது சூடேறிய இதழ்கள் முழுமையும் அவனுடைய இதழ்கள் மீது பதிந்தன. அவற்றை மீற அவனுல் முடியவில்லை. மங்கையின் சொற்கள் அவ்வளவு எளியனவாயும் அன்புகனிந்த இனிமை நிறைந்தனவாயும் இருந்தன. அவள் ஏன் இந்த வார்த்தைகளைப் பேசினுள் என்பதை அவன் அறிவான்.

அப்பொழுது அவன் தன் சூழ்நிலையை மறந்து விட்டான். கதவிலுள்ள பூட்டு, சிவப்புத் தலைக் கஸாக்கு, ராணுவத் தலைவன், மிருகத்தனமான அடிகள், உறக்கமில்லாமல் திணறித் திக்கு முக்காடிய ஏழு இரவுகள்—அனைத்தையும் அவன் மறந்துவிட்டான். ஒரு வினுடி நேரத்துக்கு, சூடேறிய இதழ்களும் கண்ணீரால் நனைந்த முகமும் தான் உள்ளனவாகத் தோன்றின.

திடீரென்று அவன் தோன்யாவை ஞாபகப் படுத்திக் கொண்டான்.

அவன் அவளை எப்படி மறக்கமுடியும்? அந்த அன்புக்குரிய அதிசயக் கண்களை எப்படி மறக்க முடியும்?

அவன் தன் பலத்தை ஒரு சேரத்திரட்டிப் பிரயோகித்து, கிரிஸ்தீனுவின் அணைப்பிலிருந்து விடுபட்டான். அவன் குடிகாரன் மாதிரி தடுமாறிக்கொண்டே எழுந்தான். கிராதிக் கம்பிகளைப் பிடித்துக் கொண்டான். கிரிஸ்தீனுவின் கரங்கள் அவனைக் கண்டு கொண்டன.

''ஏன், என்ன விஷயம்?''

அவளது இருதயம் முழுமையும் அந்தக் கேள்வியில் இருந்தது! அவன் அவளை நோக்கி வளைந்து, அவளது கரங்களை அமுக்கிகொண்டே கூறினான்:

''கிரிஸ்தீனா, என்னால் முடியாது. நீ எவ்வளவு நல்லவளாயிருக்கிறாய்....'' அவன் மேலும் என்ன சொன்னான் என்று அவனுக்கே தெரியாது.

அந்தச் சகிக்க முடியாத அமைதியைக் கலைப்பதற்காக, அவன் மீண்டும் நிமிர்ந்து நின்றான்; பலகைப் படுக்கையின் அருகே சென்றான். அதன் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு, கிழவனை எழுப்பினான்.

''தாத்தா! தயவு செய்து எனக்கு ஒரு சிகரெட் கொடுங்கள்'' என்று அவன் வேண்டிக் கொண்டான்.

அந்த மங்கை சால்வையில் உடல் முழுவதையும் ஒரு சேரக் கூட்டிக் கொண்டு அழுதாள்.

மறுநாள், நகர ராணுவத் தலைவன் சில கஸாக்குகளுடன் வந்து கிரிஸ்தீனாவைக் கொண்டு போனான். அந்த அறையிலிருந்து வெளியேறிய சமயத்தில், அவளது கண்கள் பாவெலுடைய கண்களைச் சந்தித்தன. அவள் பார்வையில் நிந்தை நிரம்பியிருந்தது. அறைக் கதவு சாத்தப்பட்டது. அப்பொழுது, பாவெலின் மனம் என்றும் இல்லாத அளவுக்குச் சோர்ந்தது; அது பாழடைந்து விட்டதாகத் தோன்றியது.

அன்று பகல் முழுவதும், பாவெல் ஒரு வார்த்தை பேசவில்லை. அவனைப் பேசவைப்பதற்குக் கிழவன் எடுத்த முயற்சியெல்லாம் வீணாயிற்று.

பாராக்காரர்களும் தலைவனின் காவலர்களும் மாறினார்கள். மாலையில் ஒரு புதிய கைதியைக் கொண்டு வந்தார்கள். பாவெல் அவனை அடையாளம் தெரிந்துகொண்டான்: அவன் தாலீன்னிக் என்பவன்; சீனி உற்பத்தி சாலையில் வேலைசெய்யும் தச்சன். உறுதியான உடலமைப்பைக் கொண்டவன்; கட்டை குட்டையானவன். இற்றுப்போன மஞ்சள் நிற சட்டைக்கு மேல் அழுக்குப்படிந்த கோட்டு ஒன்று அணிந்திருந்தான். அவன் அந்த அறையைக் கூர்ந்த பார்வையுடன் ஆராய்ந்தான்.

1917 பிப்ரவரியில், புரட்சி அவர்களுடைய நகரத்தை எட்டியபொழுது, பாவெல் அவனைப் பார்த்திருக்கிறான். சந்தடி நிறைந்த அந்த ஆர்ப்பாட்டங்களில் ஒரே ஒரு போல்ஷெவிக் பேச்சைத் தான் பாவெல் கேட்டான். தாலீன்னிக்கே அந்த போல்ஷெவிக். அவன் சாலையோர வேலி ஒன்றின் மீது ஏறி நின்று கொண்டு, படைவீரர்களிடம் பேசினான். அந்தக் கடைசி வார்த்தைகளைப் பாவெல் மறக்கவில்லை.

''சோல்ஜர்களே! போல்ஷெவிக்குகளைப் பின் பற்றுங்கள்! அவர்கள் ஒரு நாளும் உங்களுக்குத் துரோகம் செய்ய மாட்டார்கள்!''

அதன்பின் அவன் இந்தத் தச்சனைப் பார்க்க வில்லை.

ஒரு புதிய தோழன் கிடைத்ததில் தாத்தாவுக்கு சந்தோஷம்; ஏனெனில், நாள் முழுவதும் வாய் பேசாமல் உட்கார்ந்திருப்பது அவனுக்குக் கடினமாக இருந்தது. தாலீன்னிக் கட்டிலின்

ஓரத்தில் கிழவனுக்குப் பக்கத்தில் அமர்ந்தான், அவனுடன் ஒரு சிகரெட் குடித்தான், பல விஷயங்களைப்பற்றி கிழவனிடம் கேள்வி கேட்டான்.

அதன்பின் அந்தப் புதியவன் பாவெலிடம் வந்தான்.

''இளைஞனே! இங்கு எப்படி வந்து சேர்ந்தாய்?'' என்று அவன் பாவெலை வினவினான்.

பாவெல் ரத்தினச் சுருக்கமாக ஓரசைச் சொற்களில் பதிலளித்தான். அந்த இளைஞன் தன்னைப்பற்றிச் சந்தேகப்படுவதால்தான் இவ்வளவு சிக்கனமாகச் சொற்களை ஆள்கிறான் என்பதை தாலீன்னிக் புரிந்து கொண்டான். பாவெல் மீது வந்துள்ள குற்றச்சாட்டைப் பற்றி தச்சன் அறிந்து கொண்டதும், அவனது சாதுரியம் நிறைந்த கண்கள் வியப்பால் அகன்று விரிந்தன. அவன் இளைஞனுக்குப் பக்கத்தில் அமர்ந்துகொண்டான்.

''அப்படியானால், நீதான் ஷுஹ்ராயை விடுவித்தாயா? ம்...ம்... அதுவா செய்தி? அவர்கள் உன்னைப் பிடித்து விட்டார்கள் என்பதை நான் அறியவில்லை.''

பாவெல் ஆச்சரியமடைந்தான்; முழங்கையால் தன் உடலைச் சிறிது தூக்கிக்கொண்டான்.

''எனக்கு எந்த ஷுஹ்ராயையும் தெரியாது. இங்கு அவர்கள் யார் மீதும் எந்தக் குற்றமும் சாட்டுவார்கள்.''

தாலீன்னிக் நகைத்துக்கொண்டே பாவெலை நெருங்கினான்.

''தம்பீ! அதெல்லாம் சரிதான். நீ என்னிடம் எச்சரிக்கையாகவிருக்கத் தேவையில்லே. உன்னே விட எனக்கு அதிகமாகத் தெரியும்.''

கிழவன் காதில் விழக்கூடாதென்று அவன் அடக்கமாகத் தொடர்ந்து பேசினுன்:

''நானே ஷுஹ்ராயை வழியனுப்பினேன். இதற்குள் அவன் அநேகமாகச் சேரவேண்டிய இடத்தைச் சேர்ந்திருப்பான். நடந்ததையெல்லாம் ஷுஹ்ராய் என்னிடம் விவரித்தான்.''

ஒரு விஞடி மௌனமாகவிருந்து யோசித்துவிட்டு, தாலீன்னிக் மேலும் பேசினுன்:

''நீ சரியான வார்ப்பில் எடுக்கப்பட்டிருக்கிருய். ஆனுல் உன்னே அவர்கள் பிடித்திருப்பதும், ஷுஹ்ராய் தப்பிய விவரம் முழுவதையும் அவர்கள் அறிந்திருப்பதும் நமக்கு மிகவும் கெடுதலேக் கொடுக்கக் கூடியவை.''

அவன் தன்னுடைய சொக்காயைக் கழற்றித் தரையில் விரித்து, அதன் மீது அமர்ந்தான்; சுவரில் சாய்ந்தான்; இன்ஞெரு சிகரெட்டைச் சுருட்டத் தொடங்கினுன்.

தாலீன்னிக் இறுதியாகச் சொல்லியதிலிருந்து பாவெலுக்கு விஷயம் விளங்கிவிட்டது. தாலீன்னிக் பழுதடையாதவன் என்பதில் சந்தேகமில்லே. அவன் ஷுஹ்ராயை வழியனுப்பியிருக்கிருன். அப்படியாளுல்....

பெத்லியூரா கஸாக்குகள் மத்தியில் கிளர்ச்சி செய்ததற்காக அவன் கைது செய்யப்பட்டுள்ளான் என்பதைப் பாவெல் அன்று மாலே அறிந்து

கொண்டான். துருப்புக்கள் சரண் அடைந்து, செம்படை வீரர்களுடன் சேர்ந்துவிட வேண்டு மென்று கேட்டுக்கொண்டு மாகாணப் புரட்சிக் கமிட்டி விடுத்த வேண்டுகோள் பிரசுரத்தை வினியோகித்த பொழுது, அவன் பிடிபட்டான்.

தாலீன்னிக் பாவெலிடம் மிகக் குறைவாகத் தான் கூறினன்.

''யார் கண்டது? அவர்கள் பையனை இரும்புக் கோலால் நன்ருக அடித்தால் அவன் ரகசியத் தைக் காப்பாளு? அவன் சிறுவன்தானே!''

அன்று இரவு, ரொம்பநேரம் சென்ற பின், இருவரும் உறங்குவதற்கு ஆயத்தமாளுர்கள். அப்பொழுது, அவன் தன் கவலையைச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தான்:

''பாவெல்! நாம் இக்கட்டான நிலையில் சிக்கிக் கொண்டிருக்கிறோம். இதன் விளைவு என்ன வாகுமோ, பார்க்கலாம்!''

அடுத்த நாள், பெரிய காதுகளும் மெலிந்த கழுத்தும் கொண்ட ஒரு புதிய கைதி உள்ளே வந் தான். அவன் ஒரு நாவிதன்; பெயர் ஷிலியோமா ஸேல்த்ஸர்; நகரில் அவனை அறியாதார் எவரு மில்லை. மிகுந்த வேகத்துடனும், அபிநயத்துட னும் அவன் தாலீன்னிக்கிடம் பேசினன்:

''பூக்ஸ், பிலுாவ்ஷ்டைன், திரஹ்தென்பேர்க் ஆகியோர் அவனுக்கு உப்பும் ரொட்டியும் படைந்து வரவேற்பு அளிக்கப் போகிருர்களாம். அவர்கள் செய்ய விரும்பினல், செய்யட்டும்! ஆனல் இதர யூதர்கள் அவர்களை ஆதரிப்பார்களா என்று

கேட்டேன். ஒருக்காலும் ஆதரிக்கமாட்டார்கள். நான் உறுதியாகச் சொல்லுகிறேன். இந்த மூவருக்கும் காப்பாற்றிக் கொள்வதற்கு உடைமைகள் இருக்கின்றன. பூக்ஸுக்குக் கடை இருக்கிறது. திரஹ்தென்பேர்குக்கு மாவுமில் இருக்கிறது. எனக்கு என்ன இருக்கிறது? பட்டினி கிடக்கும் இதர யூதர்களுக்கு என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. நாங்கள் ஏழைகள். எனக்கு ஓட்டை வாய். சமீபத்தில் வந்த ஒரு புதிய அதிகாரிக்கு நான் இன்று முகக்ஷவரம் செய்து கொண்டிருந்தேன். 'இந்தப் பாக்ரோம்களைப் பற்றிப் பெத்லியூராவுக்குத் தெரியுமா? தெரியாதா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? யூதர் தூதுகோஷ்டியை அவர் சந்திப்பாரா?' என்று நான் அவனைக் கேட்டேன். இந்த ஓட்டை வாயால் நான் எத்தனை தடவைகள் தொல்லையை வருவித்துக் கொண்டிருக்கிறேன்! அவனது முகத்தை க்ஷவரம் செய்து பௌடர் போட்டு நேர்த்தியாக அனைத்தையும் செய்து முடித்தபின், அவன் என்ன செய்தான் தெரியுமா? அவன் இருக்கையிலிருந்து எழுந்து, கூலி கொடுப்பதற்குப் பதிலாக, என்னைக் கைது செய்தான். ஏனென்று கேட்டால், நான் ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தேனும்!'' ஷிலியோமா மார்பில் அடித்துக்கொண்டான். ''நான் என்ன கிளர்ச்சி செய்தேன்? நான் என்ன சொல்லிவிட்டேன்?.. நான் அவனிடம் ஒரே ஒரு கேள்வி கேட்டேன். இதற்காக என்னை அடைத்துவிடுவதா?...''

அவனுடைய ஆவேசத்தில் ஷிலியோமா தாலீன்னிக்கின் சட்டைப் பித்தானைத் திருகினன்; அவனுடைய கைகளைப் பலமாக இழுத்தான்.

வெஞ்சினங்கொண்ட ஷிலியோமாவின் கதையைக் கேட்கும்பொழுது தச்சன் தன்னையும் மீறி முறுவலித்தான். நாவிதன் தன் கதையை முடித்த பின் அவன் ஆழ்ந்த கவனத்துடன் பேசினன்:

''ஆம், ஷிலியோமா! உன்னைப்போன்ற புத்திசாலி இப்படி மடத்தனமாகக் காரியம் செய்யக் கூடாது. தவருன நேரத்தில் நாக்குக்குச் சுதந்திரத்தைக் கொடுத்துவிட்டாய். நீ இங்கு வரவேண்டுமென்று நான் யோசனை கூறியிருக்கமாட்டேன்.''

விஷயம் விளங்கியதைக் குறிக்கும் வகையில் ஷிலியோமா தலையை அசைத்தான்; தன் ஏக்கத்தையும் வருத்தத்தையும் கரத்தின் சேஷ்டையால் புலப்படுத்தினன். அந்தச் சமயத்தில் கதவு திறந்தது. சாராய மாதை உள்ளே தள்ளினர்கள். அவளை இழுத்துக்கொண்டு வந்த கஸாக்கை அவள் இழிவாக ஏசினள்.

''உன்னையும் உன் தலைவனையும் அடக்கமாக எரியும் தணலில் சுடவேண்டும். நான் கொடுத்த மதுவைக் குடித்து அவன் வற்றிச் சுருங்கிச் சாக வேண்டும்!''

காவற்காரன் கதவை மூடினன். அவன் வெளிப்பூட்டைப் பூட்டிய சத்தம் உள்ளேயிருந்தவர் காதில் விழுந்தது.

மாது கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்தாள்.

''ஆகா எங்களுடன் இருக்க மீண்டும் வந்துவிட்டாய்! வாயாடிக் கிழமே, சௌகரியமாய்

உட்கார்ந்து கொள்'' என்று கிழவன் உல்லாச மாகப் பேசினன்.

அவன்மீது குரோதப் பார்வையை வீசினுள். மூட்டையை எடுத்துக்கொண்டு வந்து, தாலீன் னிக்குக்குப் பக்கத்தில் தரையில் உட்கார்ந்தாள்.

அவளிடமிருந்து சில சாராய பாட்டில்களைப் பெறுவதற்காகவே, அதிகாரிகள் விடுதலை செய் தனர். அவை கிடைத்தவுடன் மாதை மீண்டும் உள்ளே தள்ளிவிட்டனர்.

திடீரென்று அடுத்துள்ள காவலர் அறை யிலிருந்து கூக்குரல்களும் ஓடும் பாதங்களின் ஒலியும் கேட்டன. யாரோ ஒருவன் உத்திரவு பிறப்பிக்கும் பாவனையில் குரைத்துக் கொண் டிருந்தான். கைதிகள் யாவரும் தலையைக் கதவின் பக்கமாகத் திருப்பினுர்கள்.

பழமையான மணிக் கூண்டு ஒன்றைக் கொண்ட அழகற்ற அந்த மாதாகோவிலுக்கு முன்னுலுள்ள சதுக்கத்தில் விந்தையான காரியங் கள் பல நிகழ்ந்துகொண்டிருந்தன. அந்தச் சதுக்கத் தின் மூன்று பக்கங்களில் காலாட்படை டிவிஷனின் பட்டாளங்கள் நீண்ட சதுர வடிவங்களில் அணி வகுத்து நின்றன. அவை தமது மூட்டை முடிச்சு களுடனும் போராயுதங்களுடனும் பூர்ண ஆயத் தத்துடன் நின்றன.

முகப்பில், மாதா கோயிலின் வாயிலிலிருந்து தொடங்கி பள்ளிக் கூட்டத்தின் வேலிச் சுவர் வரை மூன்று காலாட்படை ரெஜிமென்டுகள்

சதுரங்கப் பலகையில் கட்டங்கள் அமை-
பதைப் போலச் சதுரம் சதுரமாக அணிவகுத்து
நின்றன.

துப்பாக்கிகளைக் கால்களுடன் ஒட்டிப் பிடித்துக்கொண்டு, நிறைய தோட்டாப் பைகளுடனும் தோட்டா வார்களுடனும், பாதியாக வெட்டப்பட்ட பூசணிக் காயை ஒத்த நகைக்கத்தக்க ருஷ்ய ராணுவத் தலைக்காப்புகளுடனும் நின்று கொண்டிருந்தனர் பெத்லியூராவின் சிப்பாய்கள். இவர்கள் பெத்லியூரா படையின் போர்த்திறமை மிக்க டிவிஷன் ஒன்றைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அணிந்திருந்த மேற்கோட்டுகள், அழுக்குப் படிந்த பழுப்பு நிறக் கூட்டம் ஒன்று அங்கு குழுமியிருப்பதுபோன்ற தோற்றத்தை அளித்தன.

பழைய ஜாரிஸ்டு ராணுவத்தின் சேமிப்புக் கிடங்குகளிலிருந்து உடுப்பும் பூட்ஸும் பெற்றுப் பூர்த்தியாக அணிந்து நின்ற இந்தச் சிப்பாய்களின் பெரும் பகுதி சோவியத்துக்களை எதிர்த்து உள்ளப் பூர்வமாகப் போரிடும் குலாக்குகள். ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த ரயில்வே ஜங்ஷனைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக இந்தப் படை இங்குக் கொண்டு வரப்பட்டது.

ஒளி வீசும் உருக்கு நாடாக்களைப் போலக் காட்சியளித்த இருப்புப் பாதைகள் ஷெப்பெத்தோவ்க்காவிலிருந்து வெவ்வேறான ஐந்து திசைகளில் சென்றன. இந்த ஜங்ஷனைப் பெத்லியூரா இழந்தால் அவன் எல்லாவற்றையும் இழந்ததாகத்தான் கருதவேண்டும். தற்பொழுது "பெருந்

சேனதிபதி'' பெத்லியூராவின் நிர்வாகத்தில் மிகச் சிறிய நிலப்பரப்புத்தான் மிஞ்சி இருந்தது. வீன்னித்ஸா என்ற ஊர் அவர்களின் தலைநகராக மாறியிருந்தது.

''பெருஞ்சேனதிபதி'' பெத்லியூரா நேரில் வந்து படைகளைப் பார்வையிடுவதென்று முடிவு செய்திருந்தான். இப்பொழுது, அவனுடைய வருகைக்காக அனைத்தும் ஆயத்தமாக இருந்தது.

பின்வரிசைகளில், கண்பார்வைக்குச் சிறிது எட்டிய தூரத்தில், புதிய சிப்பாய்களின் ரெஜிமென்ட் ஒன்று நின்றது. அவர்கள் வாலிபர்கள்; அவர்களது பாதங்கள் வெறுமையாக இருந்தன. அவர்கள் ராணுவ உடுப்புக்குப் பதிலாக, விதவிதமான சிவில் உடைகளை அணிந்திருந்தனர். நடுநிசிப் பொழுதில் வீடுகளைச் சோதனையிடுவதற்காகப் படையெடுத்த சோல்ஜர்கள் படுத்துறங்கிக் கொண்டிருந்த விவசாய வாலிபர்களைப் பிடித்துக்கொண்டு வந்தனர். அவர்களும் வீதியில் பிடிபட்டவர்களுமே இந்த புதிய சிப்பாய்கள். அவர்களில் எவருக்கும் எந்தச் சண்டையிலும் பங்கெடுக்கும் உத்தேசம் சிறிதும் கிடையாது.

''நாம் பைத்தியக்காரர்கள் அல்ல'' என்று அவர்கள் தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்.

அதிகாரிகள், அவர்களைப் பாதுகாப்பாக டவுனுக்குக் கொண்டு வந்து, பகுதி பகுதியாகப் பிரித்து, ஆயுத வினியோகம் செய்வார்கள். அதற்குமேல் அவர்கள் என்ன செய்ய முடியும்?

ஆனால் மறுநாளே, இவ்வாறு கஷ்டப்பட்டுச் சேகரிக்கப்பட்ட புதுச் சிப்பாய்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஓடிப்போய் விடுவார்கள். ஒவ்வொரு நாளும் இந்தப் புதிய சிப்பாய்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டேயிருந்தது.

இப்படிப்பட்டவர்களுக்கு பூட்ஸ் விநியோகம் செய்வது முட்டாள்தனமான துணிச்சலாகும். அதுவும், பூட்ஸ்களின் சேமிப்புக் குறைவாயிருக்கும் பொழுது, செய்யக்கூடாத காரியம். ஆனால், புதிய சிப்பாய்கள் பூட்ஸுகள் அணிந்துகொண்டு வந்து பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. பல இடங்களில்அறுந்தும் கிழிந்தும் சிதிலமான காலணிகள் நூலாலும் கம்பியாலும் கட்டப்பட்டவையாகக் குவிந்ததே, உத்திரவினால் உண்டான பலன். அது ஒரு அற்புதமான குவியல்தான்!

வேறு வழியில்லாமல் அந்தப் புதிய சிப்பாய்களை வெறுங்காலினர்களாக அதிகாரிகள் அணிவகுப்புக் களத்துக்கு அழைத்துச் சென்றனர்.

காலாட்படைக்குப் பின்னால், கோலுபின் குதிரை ரெஜிமெண்டு நின்றது.

அணிவகுப்பைக் கண்டு களிப்பதற்காக ஆவலுடன் கூடி நின்ற ஜனக் கூட்டத்தைக் குதிரை வீரர்கள் எல்லைக்கு அப்பால் தடுத்து நிறுத்தினர்.

''பெருஞ்சேனாதிபதி'' பெத்லியூராவே வருகிறானென்றால், அது சாமான்யமான சம்பவமா? இந்த டவுனில் இத்தகைய நிகழ்ச்சிகள் என்றோ ஒரு நாள்தான் நடைபெறுகின்றன. எனவே,

இந்த இலவசமான வேடிக்கைக் காட்சியைக் கண்டு களிக்க அனைவரும் கூடிவிட்டனர்.

மாதா கோயில் படிக்கட்டில் கர்னல்களும் காப்டன்களும், பாதிரியின் இரு பெண் மக்களும் சில உக்ரேனிய ஆசிரியர்களும், ''சுயேச்சைக் கஸாக்குகளின்'' கோஷ்டியும், கொஞ்சம் கூன லான முதுகை உடைய நகரமன்றத் தலைவனும் கூடியிருந்தனர். சுருக்கமாகச் சொல்வதென்றால், ''பொது மக்களைப்'' பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரும் இங்கு கூடியிருந்தனர். அவர்களிடை யில் காகேஷிய உடையை அணிந்த காலாட் படையின் இன்ஸ்பெக்டர்-ஜெனரலும் இருந் தான். அவன்தான் அணிவகுப்புக்குப் பொறுப்பு வகித்தான்.

மாதா கோயிலுக்குள், வஸீலிய் பாதிரியார் தம்முடைய ஈஸ்டர் தொழுகை அங்கியை உடுத் துக் கொண்டிருந்தார்.

இப்பொழுது, பெத்லியூராவுக்கு மகோன்ன தமான வரவேற்பு அளிக்கவேண்டும். புதிதாகப் பதிவாகியுள்ள சிப்பாய்கள் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக மஞ்சளும் நீலமும் அடுத்தடுத்து அமைந்துள்ள இருநிறக் கொடி கொண்டுவரப்பட்டிருந்தது.

பெத்லியூராவைச் சந்திப்பதற்காக டிவிஷன் தளபதி, லொடலொட்டையான ஒரு பழைய 'போர்டு' காரில், ஸ்டேஷனுக்குச் சென்றான்.

அவன் சென்றபின், காலாட்படை இன்ஸ் பெக்டர் கர்னல் செர்னியாக் என்பவனைக்

கூப்பிட்டான். செர்னியாக் வாட்டசாட்டமான நபர்; நல்ல வளர்த்தி; அவனது மீசை ஒயிலாக வளைத்து விட்டப்பட்டு மெல்லியதாக இருந்தது.

''உங்களுடன் யாரையாவது அழைத்துக் கொண்டு, நகர இராணுவக் காரியாலயத்துக்குச் செல்லுங்கள். அங்கு எல்லாம் ஒழுங்காக இருக்கிறதா என்று நோக்கி, ஆவன செய்யுங்கள். கைதிகள் இருந்தால், அவர்களையும் கவனியுங்கள். உதவாக்கரைக் கைதிகளை விட்டுவிடுங்கள்'' என்று இன்ஸ்பெக்டர் கூறினான்.

தன்னுடைய பார்வையில் முதலில் சிக்கிய ஒரு கஸாக்கியக் காப்டனைச் செர்னியாக் துணைக்கு அழைத்துக்கொண்டான். இருவரும் குதிரை மேலேறி விரைந்தனர்.

இன்ஸ்பெக்டர், பாதிரியின் மூத்த பெண்ணை வினயத்துடன் நோக்கினான்:

''விருந்து ஏற்பாடு எப்படியிருக்கிறது? எல்லாம் முறையாக உள்ளதா?''

''நேர்த்தியாக ஏற்பாடு ஆகியிருக்கிறது. நகர ராணுவத் தலைவர் தம்மால் இயன்றதனைத்தும் செய்துகொண்டிருக்கிறார்'' என்று பதிலளித்துக்கொண்டே, அவள் அந்தச் சுந்தர புருஷனை இன்ஸ்பெக்டரை ஆவலுடன் உற்றுநோக்கினாள்.

திடீரென்று, கூட்டத்தில் ஒரு கலகலப்பு ஏற்பட்டது. குதிரையின் கழுத்துக்கு முகத்தைக் கொண்டு வரும் அளவுக்கு முதுகை வளைத்தவனாய்க் குதிரையை வெறித்தனமாக விரட்டிக்

கொண்டு ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவன் கரத்தை அசைத்துக்கொண்டு, கூவினுன்:

''அவர்கள் வந்து கொண்டிருக்கிருர்கள்!''

''முறைப்படி நில்!'' என்று இன்ஸ்பெக்டர் குரைத்தான்.

அதிகாரிகள் தத்தம் இடத்துக்கு ஓடினுர்கள்.

'போர்டு' கார் மாதா கோயிலே அடைந்த பொழுது, ''இன்னும் இறக்கவில்லை உக்ரேய்ஞ'' என்ற கீதத்தைப் பாண்டு வாத்திய கோஷ்டி இசைத்தது.

டிவிஷன் தளபதியைப் பின்தொடர்ந்து, ''பெருஞ்சேஞதிபதி'' கஷ்டப்பட்டுக் காரிலிருந்து இறங்கினுன். அவன் நடுத்தரமான உயரம் உடையவன். அவன் சிவப்புக் கழுத்தின் மீது அவனது சதுர வடிவமான தலை உறுதியாகப் பொருந்தியிருந்தது. அவன் நேர்த்தியான கம்பளித் துணியில் தைத்த நீலச் சொக்காய் அணிந்திருந்தான்; அதைச் சுற்றி இறுகக் கட்டிய மஞ்சள்நிற பெல்ட்டில் பொருந்தியிருந்த மென்மையான ஷேமாய் உறையில் ஒரு சிறு 'பிரௌனிங்' பிஸ்டல் இருந்தது. அவனுடைய தலையில் ஒரு காக்கிக் குல்லாய் இருந்தது. அந்தக் குல்லாயில் எஞமலில் செய்த திரிசூலம் அமைந்திருந்தது.

ஸீமோன் பெத்லியூராவின் தோற்றத்தில் பிரத்தியேகமான போர்க்குணம் எதுவும் தென்படவில்லை. உண்மையில், அவன் ஒரு பட்டாளத்து ஆள் மாதிரியே இல்லை.

இன்ஸ்பெக்டர் படித்த அறிக்கையைக் கேட்டபொழுது, அவனது முகம் அதிருப்தியை வெளியிட்டது. அதன்பின் நகரமன்றத் தலைவன் அவனுக்கு நல்வரவு கூறி உரை நிகழ்த்தினன்.

பெத்லியூரா உரை நிகழ்த்திக் கொண்டிருந்த நகரமன்றத் தலைவனின் தலைக்குமேல் கூடி அணி வகுத்து நின்ற ரெஜிமென்டுகளைப் பார்த்துக் கொண்டே சுவாரசியமில்லாமல் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''நாம் ஆரம்பிக்கலாம்'' என்று அவன் இன்ஸ்பெக்டரிடம் கூறினன்.

கொடிக்குப் பக்கத்திலிருந்த சிறிய மேடை மீது ஏறி நின்று, பெத்லியூரா படைவீரர்களுக்குப் பத்து நிமிஷம் பிரசங்கம் செய்தான்.

அந்தப் பேச்சு எவருடைய உள்ளத்தையும் பிணிக்கவில்லை. பிரயாணத்திஞல் களைப்படைந்திருந்த பெத்லியூராவின் பேச்சு சப்பென்று இருந்தது. அவன் பேச்சை முடித்தபொழுது, சோல்ஜர்கள் விதிப்படி, ''வாழ்க! வாழ்க!'' என்று கோஷித்தார்கள். பெத்லியூரா மேடையிலிருந்து இறங்கினன். வியர்த்திருந்த நெற்றியைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டான். அதன் பின் அவன் இன்ஸ்பெக்டர், டிவிஷன் தளபதி ஆகியோர் சகிதமாகப் பட்டாளங்களைப் பார்வையிட்டான்.

புதிதாகத் திரட்டப்பட்டவர்களின் அணிகளைப் பார்வையிட்டபொழுது, ஏளனத்துடன்

தனது கண்களைக் குறுக்கினான். அவன் ஆத்திரத்தில் உதடுகளைக் கடித்துக்கொண்டான்.

பார்வையிடும் சடங்கு முடிந்த சமயத்தில், புதிய சிப்பாய்களின் பிளாட்டூன்கள் ஒன்றன் பின் ஒன்றாக, குலைந்து, ஒழுங்கற்ற வரிசைகளில் கொடியை அடைந்தன. அங்கு வஸீலிய் பாதிரியார் பைபிளும் கையுமாய் நின்றுகொண்டிருந்தார். புதிதாகத் திரட்டப்பட்டவர்கள் முதலில் பைபிளையும் பிறகு கொடியின் விளிம்பையும் முத்தமிட்டனர். அந்தச் சமயத்தில்தான், ஒரு எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது.

எவருக்கும் தெரியாமல், சதுக்கத்தை அடைவதில் வெற்றியடைந்த ஒரு தூதுக்குழு, பெத்லியூராவை அணுகியது. அந்தக் குழுவுக்குத் தலைவனாக வந்தவன் பிலூரவ்ஷ்டைன் என்ற ஒரு மர வியாபாரி. அவன் உப்பும் ரொட்டியும் நிவேதனமாகக் கொண்டுவந்தான். அவனுடன் பூக்ஸ் என்ற ஜவுளி வியாபாரியும் மேலும் மூன்று பெரும் வியாபாரிகளும் வந்தனர்.

பிலூரவ்ஷ்டைன் அடக்க ஒடுக்கமாக வணங்கிவிட்டு, பெத்லியூராவிடம் தட்டை நீட்டினான். பக்கத்திலிருந்த ஒரு அதிகாரி அந்தத் தட்டைப் பெற்றுக்கொண்டான்.

''யூத மக்கள், அரசாங்கத் தலைவரான உங்களுக்குத் தங்களுடைய இதயங்கனிந்த நன்றியையும் நன்மதிப்பையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறார்கள். தயவு செய்து, இந்த வரவேற்புப் பத்திரத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்.''

''நன்று'' என்று பெத்லியூரா முணுமுணுத்தான். அவர்கள் கொடுத்த காகிதத்தை விரைவாகப் படித்தான்.

பூக்ஸ் முன்னுல் வந்து நின்ருன்.

''எங்களுடையவியாபாரத்தைத்தொடர்ந்து செய்வதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்றும், 'பாக்ரோம்களிலிருந்து' எங்களைப் பாதுகாக்க வேண்டுமென்றும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிருேம்.'' பாக்ரோம் என்ற சொல்லை உச்சரித்த பொழுது, பூக்ஸின் நா குழறியது.

பெத்லியூரா ஆத்திரப்பட்டான்; அவனுடைய முகம் கறுத்தது.

''என் ராணுவம் 'பாக்ரோம்களில்' ஈடுபடுவதில்லை, இந்த விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு பேசுங்கள்.''

ஆதரவற்றவனுக பூக்ஸ் தன் கைகளை அகல விரித்தான்.

பெத்லியூராவின் தோட்கள் ஆத்திரத்தால் துள்ளின. காலம் தவறி வந்த தூதுகோஷ்டியைக் கண்டு அவன் எரிச்சலடைந்தான். பின்புறத்தில், தன் கரிய மீசையை மென்றுகொண்டிருந்த கோலுபை நோக்கித் திரும்பினுன்.

''கர்னல்! உன்னுடைய கஸாக்குகளுக்கு எதிராகப் புகார் செய்கிருர்கள். இதைப்பற்றி விவரமாக விசாரித்துத் தக்க நடவடிக்கைகளை எடுங்கள்'' என்று பெத்லியூரா கூறினுன். அதன்பின், இன்ஸ்பெக்டரைப் பார்த்து, ''அணிவகுப்பைத் தொடங்கலாம்'' என்று வறட்சியாகச் சொன்னுன்.

அந்தத் துரதிருஷ்டமுள்ள தூதுக்குழு, கோலுவுடன் பேசவேண்டியிருக்குமென்று எதிர்பார்க்கவில்லே. எனவே, அவர்கள் பின்வாங்குவதற்குத் துடித்தார்கள்.

பார்வையாளரின் கவனமெல்லாம் அணிவகுப்புக்கான தயாரிப்புகளில் ஈடுபட்டிருந்தது. அதிகாரிகள், கடுமையான உத்திரவுகளே 'டக்டக்' கென்று பிறப்பித்தார்கள்.

பார்வைக்கு அமைதியான முகத்துடன் கோலுப் பிலூரவ்ஷ்டைனே அணுகித் தீர்க்கமாக ஆனல் மெதுவான குரலில், ''நீச ஆத்மாக்களே! இந்த இடத்தைவிட்டு ஒழிந்து போங்கள். இல்லாவிட்டால் உங்களேச் சூரணம் செய்து விடுவேன்'' என்ருன்.

பாண்டு முழங்கியது. முதலில் நின்ற பிரிவுகள் சதுக்கத்தில் நடைபோட்டன. அவை பெத்லியூரா நின்ற இடத்தைக் கடந்த பொழுது, ''வாழ்க!'' என்றுஉணர்ச்சியில்லாமல்உறுமிவிட்டு, சாலேயில் திரும்பிக்கிளேத் தெருக்களில் மறைந்தன. புத்தம் புதிய காக்கி உடுப்புகளே அணிந்த அந்தப் படைப் பகுதிகளின் முன்னணியில், அதிகாரிகள், தமது குறுந்தடிகளேச் சுழற்றிக்கொண்டு உலாவச் செல்வோரைப் போல உல்லாச நடைபோட்டார்கள். ஆபீசர்கள் தடியுடனும், சோல்ஜர்கள் துப்பாக்கிக் குழலேச் சுத்தம் செய்யும் கோலுடனும் அணிவகுப்புச் செய்யும் முறையைப் புதிதாகப் புகுத்தியிருந்தார்கள்.

கடைசியில் அணிவகுப்பு செய்தவர்கள் புதிய சிப்பாய்கள். அவர்கள் பிழைபட அடி எடுத்து வைத்தனர். அதுமட்டுமல்ல; அவர்கள் வரிசை தவறி, ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டு, கட்டுப்பாடில்லாத கும்பலைப் போல நடந்தனர்.

அவர்களிடையே பெயரளவுக்காவது ஒரு ஒழுங்கு முறையை ஏற்படுத்துவதற்கு அதிகாரிகள் தலைகீழாக நின்று பார்த்தனர். ஆனால் அவர்களது முயற்சிகளெல்லாம் பயனற்றுப் போயின. அந்தச் சிப்பாய்கள் தாறுமாறாக நடந்தபொழுது, வெறும் பாதங்கள் பூமியில் படுவதால் ஒரு மெல்லிய ஒலி உண்டாயிற்று. புதிதாகத் திரட்டப்பட்டவர்களின் இரண்டாவது கம்பெனி பெத்லியூராவுக்கு முன் நடந்தபொழுது, சணல் சட்டை தரித்த ஒரு விவசாய இளைஞன், காண்பதற்கரிய அதிசயத்தைக் கண்டவன் போல, கண்களை அகல விரித்துக்கொண்டும் வாயைப் பிளந்துகொண்டும் பெத்லியூராவை நோக்கிக்கொண்டே சென்றான். வழியில் இருந்த குழியில் கால் இறங்கியதால் தடுக்கி விழுந்தான். அவனுடைய துப்பாக்கி கூழாங்கற்கள் மீது உருண்டு, கடகடவென்ற பேரொலியை உண்டாக்கியது. அவன் எழுந்திருக்க முயற்சித்தான்; ஆனால் அவனுக்குப் பின்னால் வந்தவர்கள் அவனை மீண்டும் கீழே தள்ளித் துவைத்தார்கள்.

பார்வையாளருள் சிலர் வெடிபடச் சிரித்தனர். பிளாட்டூன் கலைந்து சிதறிச் சதுக்கத்தின் வழியே சென்றது. பாங்கற்ற இளைஞனோ

துப்பாக்கியை எடுத்துக்கொண்டு பிறருக்குப் பின்ஞல் ஓடிஞன்.

இந்த வருந்தத்தக்கக் காட்சியைக் காணச் சகியாதவனுய், பெத்லியூரா வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டான்; அணி வகுப்பின் முடிவுக்குக் காத்திராமல் கிடுகிடு வென்று காருக்குச் சென்ருன். அவனைப் பின்தொடர்ந்த இன்ஸ்பெக்டர் நம்பிக்கையிழந்தவனுய்க் கேட்டான்:

''விருந்துக்குத் தங்க மாட்டீர்களா?''

''முடியாது'' என்று பெத்லியூரா கண்டிப்பான பதிலை அளித்தான்.

மாதாகோயிலைச் சுற்றியுள்ள உயரமான கம்பி வேலி மீது நெருங்கிக் கொண்டிருந்த பார்வையாளர் கூட்டத்தில், ஸெர்யோஷா, வால்யா, கிலீம் ஆகியோரும் இருந்தனர். ஸெர்யோஷா கிராதிக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு, தனக்குக் கீழேயுள்ள ஜனங்களின் முகங்களை வெறுப்பு நிறைந்த கண்களால் பார்த்தான்.

''வால்யா, நாம் போகலாம். நாடகம் முடியப் போகிறது'' என்று எல்லோரும் கேட்கும் முறையில் உரக்கக் கூறிவிட்டு பிடித்துக் கொண்டிருந்த கம்பிகளிலிருந்து கைகளை விடுவித்துக் கொண்டான். ஜனங்கள் அவனை வியப்புடன் வெறித்துப் பார்த்தனர்.

அனைவரையும் உதாசீனம் செய்தவனுய், அவன் வாசலுக்குச் சென்ருன். வால்யாவும் கிலீமும் அவனைப் பின்தொடர்ந்தனர்.

கர்னல் செர்னியாக்கும் கஸாக்கியக் காப்டனும் நகர ராணுவ அலுவலகத்தை அடைந்தவுடன், குதிரை மீதிருந்து இறங்கினார்கள். சிப்பாயின் பொறுப்பில் குதிரைகளை ஒப்படைத்து விட்டு, அவர்கள் காவலர் இருப்பிடத்திற்குள் விரைவாக நடந்தார்கள்.

''நகர ராணுவத் தலைவர் எங்கே?'' என்று செர்னியாக் சிப்பாயைக் கடுமையான குரலில் கேட்டான்.

''தெரியாது; எங்கோ போயிருக்கிறார்'' என்று விடை பகன்ற பொழுது, அவனது நா குழறியது.

செர்னியாக், காவலர் இருப்பிடமான அந்த அறை ஆபாசமாக இருப்பதைக் கண்டான். சீர் குலைந்த படுக்கைகளில், நகர ராணுவக் காரியாலயகக் கஸாக்குகள் கைகால்களை நீட்டிக்கொண்டு கிடப்பதையும், அதிகாரிகள் உள்ளே பிரவேசித்த பொழுது, எழுந்திருக்காமல் இருப்பதையும் அவன் கண்ணுற்றான்.

''இது என்ன பன்றிக் கூண்டு? கருக்கொண்ட பன்றிகளைப் போலப் புரள்வதற்கு உங்களுக்கு யார் அனுமதி கொடுத்தார்கள்?'' என்று அவன் கர்ஜித்தான்; மல்லாந்து கிடந்த அந்தக் கஸாக்குகள் மீது பாய்ந்தான்.

அந்தக் கஸாக்குகளில் ஒருவன் உட்கார்ந்து கொண்டே பெரும் ஏப்பம் ஒன்று விட்டான். பிறகு அன்பற்ற முறையில் இரைந்து பேசினான்:

''நீ ஏன் தவளை மாதிரி கத்துகிறாய்? எங்

களுக்கென்று தவளைக் கூச்சல் போடுவதற்கு ஆள் இருக்கிறது.''

''என்ன!'' என்று சொல்லிக்கொண்டே, செர்னியாக் அவன் மீது பாய்ந்தான். ''வேசி மகனே! யாரிடம் பேசுவதாக எண்ணுகிருய்? நான் கர்னல் செர்னியாக். பன்றிப் பயலே, காதில் விழுந்ததா? எழுந்திருங்கள்! எல்லோரும் எழுந்திருந்து நில்லுங்கள்! இல்லாவிட்டால் உங்களைச் சவுக்கினுல் அடிக்கச் செய்வேன்!'' என்றுகர்ஜித்துக் கொண்டே, ஆத்திரமடைந்த கர்னல், அந்த அறையில் அங்கும் இங்கும் தாவினன். ''ஒரே ஒரு நிமிஷம் அவகாசம் கொடுக்கிறேன். அதற்குள் அறையைச் சுத்தம் செய்துவிடவேண்டும்; படுக்கைகளைச் சீராக்கிவிட வேண்டும். அழுக்கடைந்த மொந்தைகளான நீங்களும் பார்க்கத் தக்கவர்களாகக் காட்சியளிக்க வேண்டும். நீங்கள் கஸாக்குகள் மாதிரி இல்லை. வழிப்பறி க்காரர்கள் மாதிரி இருக்கிறீர்கள்'' என்று கர்னல் கடுமையாக எச்சரித்தான்.

ஆத்திரத்தில் தன்னையே மறந்தவனுயிருந்த கர்னல் தன் வழியில் தடையாகவிருந்த கழிநீர்த் தொட்டியை வெறித்தனமாக உதைத்தான்.

காப்டனுடைய வெறியும் குறைவாயில்லை. அவன் வாயால் சபித்ததுடன் நிற்காமல், மூன்று வார்ப் பின்னல்களை உடைய தன் சாட்டையையும் வீசி, கட்டில்களிலிருந்த ஆட்களை விரட்டினுன்.

''பெருஞ்சேனுதிபதி அவர்கள் அணிவகுப்பைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கிருர். எந்த

நிமிஷத்திலும் அவர் இங்கே வரக் கூடும். உடனடியாக வேலையை முடியுங்கள்!'' என்று காப்டன் அவர்களை முடுக்கிவிட்டான்.

நிலைமை பாதகமாவதைக் கண்ட கஸாக்குகள் சவுக்கடி கொடுப்பதில் புகழ்பெற்ற செர்னியாக்கிடமிருந்து தண்டனை கிடைக்கலாமென்று அஞ்சி, வேகமாகச் செயல்படத் தொடங்கினர். உடனடியாக அறையைச் சீர்படுத்தும் வேலையில் முழு மூச்சுடன் ஈடுபட்டனர்.

''நாம் கைதிகளையும் பார்த்துவிட வேண்டும். அவர்கள் இங்கு யார் யாரை அடைத்திருப்பார்களென்று உறுதியாகச் சொல்ல முடியாது. பெருஞ்சேனாதிபதி அவர்கள் வந்தால் தொல்லை உண்டாகலாம்'' என்று காப்டன் கூறினான்.

''சாவி யாரிடம் இருக்கிறது?'' என்று செர்னியாக் பாராக்காரனை வினவினான். ''உடனே, கதவைத் திற'' என்று உத்திரவிட்டான்.

ஒரு சார்ஜென்ட் துள்ளிக் குதித்தான். பூட்டைத் திறந்தான்.

''அதிகாரி எங்கே? அவருக்காக நான் எவ்வளவு நேரம் காத்திருப்பேன் என்று நினைக்கிறீர்கள்? அவரை உடனே கண்டுபிடித்து இங்கு அனுப்புங்கள்'' என்று செர்னியாக் உத்திரவிட்டான். ''காவற் சிப்பாய்களை முற்றத்தில் திரட்டுங்கள். துப்பாக்கிகளுக்கு பாய்னெட்டுகளைக் காணோமே, காரணம் என்ன?''

''நாங்கள் நேற்றுத்தான் பொறுப்பை எடுத்துக் கொண்டோம்'' என்று சார்ஜென்ட்

சமாதானம் கூற முயற்சித்தான். உடனே, நகர ராணுவத் தலைவனைத் தேடிக்கொண்டு அவன் விரைந்து சென்றான்.

சாமான் சேமிப்பு அறையின் கதவை காப்டன் உதைத்துத் திறந்தான். உள்ளே இருந்தவர்களில் சிலர் எழுந்து நின்றார்கள்; மற்றவர்கள் அசையாது அமர்ந்திருந்தனர்.

''கதவை நன்றாகத் திறவுங்கள். இங்குப் போதுமான வெளிச்சம் இல்லை'' என்று சௌனியாக் உத்திரவிட்டான்.

கர்னல் கைதிகளின் முகங்களை ஆராய்ந்தான்.

கட்டில் விளிம்பில் அமர்ந்திருந்த கிழவனைப் பார்த்து, ''நீ ஏன் இங்கே இருக்கிறாய்?'' என்று கர்னல் அதிகாரத்துடன் கேட்டான்.

கிழவன் ஓரளவுக்கு எழுந்து, கால் சட்டையைச் சுண்டித் தூக்கிக்கொண்டான்; கடுமையான உத்திரவைக் கேட்டுப் பயந்த கிழவன் முணுமுணுத்தான்:

''எனக்கே தெரியாது. அவர்கள் என்னை இங்கு கொண்டு வைத்துப் பூட்டினார்கள். அதனால் நான் இங்கிருக்கிறேன். முற்றத்தில் கட்டியிருந்த குதிரை காணாமற் போயிற்று. ஆனால் அதற்கு நான் எந்த வகையிலும் பொறுப்பு இல்லை.''

''யாருடைய குதிரை?'' என்று காப்டன் இடைமறித்துக் கேட்டான்.

''பட்டாளத்தின் குதிரைதான். என் வீட்டில் தங்கிய சிப்பாய்கள் அதை விற்று விட்டு,

அந்தப் பணத்தைக் கொண்டு குடித்தார்கள். இப்பொழுது, அவர்கள் என் மீது பழி சுமத்துகிறார்கள்.''

செர்னியாக், கிழவனைத் தலைமுதல் கால் வரை துரிதமாகப் பார்வையிட்டான். அதன்பின், பொறுமையை இழந்தவனாகத் தோளை அசைத்துக் கொண்டு, ''உன் சாமான்களை எடுத்துக் கொண்டு உடனே வெளியேறு'' என்று உரக்கக் கூவினான். அதன் பின் அவன் சாராய மாதை நோக்கித் திரும்பினான்.

கிழவனுக்குத் தன் செவிகளையே நம்ப முடியவில்லை. தன் கிட்டப்பார்வைக் கண்களை மூடித் திறந்தபடியே, காப்டனைக் கேட்டான்:

''நான் போகலாமென்று சொல்கிறீர்களா?'

''ஓடு! வேகமாக ஓடு'' என்று சொல்லிக் கொண்டே கஸாக்கியக் காப்டன் தலையை அசைத்தான்.

கட்டில் ஓரத்தில் தொங்கிக்கொண்டிருந்த தன் மூட்டையை அவசர அவசரமாக எடுத்துக் கொண்டு, கிழவன் கதவை நோக்கி விரைந்தான்.

''நீ ஏன் இங்கு இருக்கிறாய்?'' என்று கர்னல், சாராய மாதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

வாய்நிறையப் பணியாரத்தை அடைத்துமென்று கொண்டிருந்த மாது அதை விழுங்கி விட்டுத் தயாரான பதிலை மட மட வென்று உரைத்தாள்:

''தலைவரே! என்னை இங்கு அடைத்துப் போட்டிருப்பது அநீதி! ஒரு ஏழை விதவையின் சாராயத்

தைக் குடித்துவிட்டு, அவளைச் சிறையிலடைக்கிறார்களே, இது தகுமா?''

''நீ சாராயத் தொழில் செய்கிறாயா?'' என்று கர்னல் வினவினான்.

''தொழிலா? அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்று மனம் புண்பட்டவளைப் போல அவள் கூறினாள். ''நகரத் தலைவர் நான்கு பாட்டில்களை வாங்கிக் கொண்டார். ஆனால் ஒரு சல்லிகூடக் கொடுக்கவில்லை. இதுதான் நிலைமை. மதுவை வாங்கிக் குடிக்கிறார்கள்; ஆனால் யாரும் பணம் கொடுப்பதே இல்லை. இதைத் தொழில் என்று சொல்வீர்களா?''

''போதும். இந்த இடத்தைவிட்டு ஓடு. எக்கேடாவது கெட்டுத்தொலை.''

அந்த உத்திரவைத் திரும்பக் கூறவேண்டுமென்று அவள் காத்திருக்கவில்லை. அவள் தன்னுடைய கூடையை எடுத்துக்கொண்டு நன்றியுடன் தலை குனிந்து வணங்கி, ''ஆண்டவன் உங்களுக்கு நல்லாரோக்கியத்தை அளிப்பாராக!'' என்று வாழ்த்திவிட்டுக் கதவை நோக்கி விரைந்தாள்.

இந்த இன்சுவை நாடகத்தை தாலீன்னிக் அகல விரிந்த கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தான். இதன் பொருள் என்ன என்பது ஒரு கைதிக்கும் விளங்கவில்லை. வந்திருந்த அதிகாரிகள், கைதிகளைத் தம் இஷ்டப்படி நடத்துவதற்கு அதிகாரம் உடைய தலைவர்கள் என்பது மட்டுமே விளக்கமாகப் புலப்பட்டது.

''நீ ஏன் இங்கிருக்கிறாய்?'' என்று கர்னல் செர்னியாக் தாலீன்னிக்கைக் கேட்டான்.

''கர்னல் உன்னிடம் பேசும்பொழுது, எழுந்து நில்'' என்று காப்டன் குரைத்தான்.

தாலீன்னிக் மெதுவாகத் தரையிலிருந்து எழுந்து நின்றுன்.

''நீ ஏன் இங்கிருக்கிருய்?'' என்று செர்னி யாக் திரும்பக் கேட்டான்.

சில விஞடிகள், தச்சனின் கண்கள் கர்னலை வட்டமிட்டன. கர்னலின் நேர்த்தியாக முறுக்கி விட்ட மீசை, நன்கு க்ஷவரம் செய்த பளிங்கு போன்ற முகம், அவனுடைய புதிய குல்லாயின் நுனி, அதிலுள்ள எஞமல் சின்னம் ஆகியவற்றை தாலீன்னிக் நோக்கிஞன். திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. ''ஒருவேளை அது பயன் தரலாம்!''

''எட்டு மணிக்குப் பிறகு வீதியில் இருந்த தற்காக நான் கைதுசெய்யப்பட்டேன்'' என்று மூளையில் முதலில் தோன்றியதை எடுத்துரைத் தான்.

என்ன பதில் வருமோ என்ற ஐயத்தால் உண் டான வேதனையுடன் அவன் காத்திருந்தான்.

''இரவில் என்ன செய்து கொண்டிருந்தாய்?''

''அது நள்ளிரவு அல்ல. பதிஞெரு மணி தான் இருக்கும்'' என்று தாலீன்னிக் பதில் அளித் தான்.

இந்தக் கதை மூலம் காரியத்தைச் சாதிக்க முடியுமென்ற நம்பிக்கையை அவன் இப்பொ ழுது இழந்துவிட்டான்.

''வெளியேறு!'' என்ற சுருக்கமான உத்திரவைக் கேட்டபொழுது, தச்சனது முழங்கால்கள் நடுங்கின.

தாலீன்னிக் தன் கோட்டையும் மறந்து விட்டு, விரைவாகக் கதவைத் தாண்டினன். அப்பொழுதே, காப்டன் அடுத்த கைதியை விசாரித்துக் கொண்டிருந்தான்.

பாவெல்தான் கடைசியில் விசாரிக்கப்பட்டான். அவன் அங்கு நடப்பதைப் பார்த்துத் திகைத்தவனுய்த் தரையிலேயே உட்கார்ந்திருந்தான். தாலீன்னிக் விடுதலையாகி விட்டான் என்பதை அவனுல் முதலில் நம்ப முடியவில்லை. இவர்கள் ஏன் ஒவ்வொருவரையும் இம்மாதிரி விடுதலை செய்கிருர்கள்? ஆனுல் தாலீன்னிக்.... ஊரடங்கு உத்திரவை மீறியதற்காகக் கைதானதாக தாலீன்னிக் கூறினுன்.... அப்பொழுது, பாவெலின் மனதில் ஒரு கருத்து உதயமாயிற்று.

''நீ ஏன் இங்கிருக்கிருய்?'' என்ற வாடிக்கையான கேள்வியுடன் கர்னல் மெலிந்திருந்த ஷிலியோமாவை விசாரிக்கத் தொடங்கினுன்.

பயத்தால் வெளிறிப்போன நாவிதன் உண்மையை உடைத்துக் கூறினுன்:

''நான் கிளர்ச்சி செய்ததாகச் சொல்கிருர்கள். உண்மையில் நான் என்ன கிளர்ச்சி செய்தேன் என்று எனக்கே புரியவில்லை.''

செர்னியாக் தன் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டான்.

''அது என்ன? கிளர்ச்சியா? நீ எதற்காகக் கிளர்ச்சி செய்தாய்?''

ஷிலியோமா, குழப்பத்தால் தன் கைகளை அகல விரித்தான்.

''எனக்கே தெரியாது. பெருஞ்சேனாதிபதி அவர்களிடம் மனுக் கொடுப்பதற்காக, யூதர்களிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நான் சொன்னேன்.''

''எப்படிப்பட்ட மனு?'' கர்னலும் காப்டனும் அச்சுறுத்தும் தோரணையில் ஷிலியோமாவை நெருங்கினார்கள்.

'' 'பாக்ரோம்களைத்' தடை செய்ய வேண்டுமென்று கோரும் மனு. இங்கு ஒரு பயங்கரமான 'பாக்ரோம்' நடந்ததென்பதை நீங்கள் அறிவீர்கள். எல்லா ஜனங்களும் அஞ்சுகிறார்கள்.''

''போதும்!'' என்று செர்னியாக் அவனை இடைமறித்தான். ''நீ மறக்க முடியாத மனு ஒன்றை உனக்குக் கொடுப்போம்! இழிவான யூதனே!'' என்று கூறிவிட்டுக் காப்டனுக்குக் கட்டளையிட்டான்: ''இவனை ஜாக்கிரதையாக வைத்திரு. தலைமைக் காரியாலயத்துக்கு அவனை இட்டு வரச் செய். நான் அவனிடம் நேரில் பேசுகிறேன். இந்த மனு விவகாரத்துக்குப் பின்னால் இருப்பது யார் என்பதைக் கண்டுபிடிப்போம்.''

ஷிலியோமா தன் ஆட்சேபணையைத் தெரிவிக்க முயன்றான். ஆனால் காப்டன், அவனது முதுகின் மீது தன் சவாரிச் சவுக்கால் கடுமையாக அடித்தான்.

''வாயை மூடு, வேசி மகனே!''

ஷிலியோமாவின் முகம் வலியால் நெளிந்தது. அவன் தடுக்கித் தடுமாறியபடியே ஒரு மூலையை அடைந்தான். அவனது இதழ்கள் நடுங்கின. தனது மூச்சை அடக்கிய அழுகையைக்கட்டுப் படுத்துவதே அவனுக்குக் கடினமாயிருந்தது.

இந்தக் காட்சி நடந்துகொண்டிருந்த பொழுதே, பாவெல் எழுந்து நின்றான். அந்த அறையில் ஷிலியோமா நீங்கலாக பாவெல் மட்டுமே எஞ்சியிருந்தான்.

செர்னியாக் அந்தப் பையன் முன்னிலையில் நின்று ஊடுருவிப் பாயும் தன் கருங்கண்களால் அவனை ஆராய்ந்தான்.

''நீ இங்கு என்ன செய்கிறாய்?''

கர்னலின் கேள்விக்கு உடனடியாகப் பதில் கிடைத்தது.

''செருப்புக்கு அடித்தோல் இடுவதற்காகச் சேணத்தின் ஓரத்தை அறுத்துக்கொண்டேன்.''

''அது யாருடைய சேணம்?''

''எங்கள் வீட்டில் இரண்டு கஸாக்குகள் தங்கியிருக்கிறார்கள். நான் செருப்பு அடித்தோலுக்காக, ஒரு பழைய சேணத்தின் ஓரத்தை வெட்டிக்கொண்டேன். எனவே, கஸாக்குகள் என்னை இழுத்துக் கொண்டுவந்து இங்கு தள்ளிவிட்டார்கள்'' என்றான் பாவெல். சுதந்திரம் கிடைக்குமென்ற அசட்டு நம்பிக்கையால் உந்தப்பட்டவனாக, ''அம்மாதிரி வெட்டக்கூடாது என்பதை மட்டும் நான் அறிந்திருந்தால்....'' என்று மேலும் கூறினான்.

கர்னல் பாவெலை அருவருப்புடன் நோக்கி ஞன்.

''நகர ராணுவத் தலைவனது மூளையே மூளை. அவன் பாழாய்ப் போக! பிடித்து வைத்திருக்கிற கைதிகளைப் பார்!'' இவ்வாறு சொல்லிவிட்டு, கதவை நோக்கித் திரும்பியவனுய் கர்னல் இரைந்து கூறினுன்: ''நீ வீட்டுக்குப் போகலாம். உன் தகப்பனிடம் உனக்குக் கொடுக்க வேண்டிய தண்டனையைக் கொடுக்கச் சொல். ஒழிந்து போ.''

பாவெலுக்குத் தன் காதுகளையே நம்பமுடிய வில்லை. அவனது இதயம் வெடித்துவிடும் போலத் துடித்தது. தாலீன்னிக்கின் கோட்டைக் கையில் எடுத்துக் கொண்டு, அவன் கதவை நோக்கிப் பாய்ந்தான். காவலரின் அறை வழியாக ஓடி, கர்னல் வெளியேறியவுடன் பாவெலும் அவனுடன் திறந்த வெளியை அடைந்து அங்கிருந்து ஓட்டம் பிடித்தான். ஒரு விஞடியில் அவன் திட்டிவாசலைத் தாண்டித் தெருவை அடைந்துவிட்டான்.

துர்ப்பாக்கியவஞன ஷிலியோமா மட்டும் சாமான் சேமிப்பு அறையில் இருந்தான். அவன் தனது துன்பமுற்ற கண்களால் சுற்றுமுற்றும் பார்த்தான்; உள்ளுணர்வால் உந்தப்பட்டுக் கதவை நோக்கி நடந்தான். ஆனுல் அதற்குள் ஒரு பாராக்காரன் வந்து, கதவை மூடி பூட்டைப் பூட்டிவிட்டு, கதவுக்கருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

வெளியே, செர்னியாக் தன் சாதனையில் திருப்தி அடைந்தவஞகக் காப்டனிடம் கூறினுன்:

''நல்லவேளையாக நாம் உள்ளே சென்று பார்த்தோம். அங்கு நாம் கண்ட கேவலமான நிலைமையை எண்ணிப்பார். அந்தத் தலைவனை இரண்டு வாரத்துக்குக் காவலில் வைக்கவேண்டும். நல்லது. நேரமாகிவிட்டது; நாம்உடனேகிளம்பவேண்டும்.''

சார்ஜென்ட் தன் ஆட்களைத் திரட்டி, முற்றத்தில் நிறுத்திவிட்டான். அவன் கர்னலைப் பார்த்தவுடன் ஓடி வந்து, ''கர்னல் அவர்களே! எல்லாம் முறையாக உள்ளன!'' என்றான்.

செர்னியாக் ஒரு பாதத்தைச் சேணத்தின் மிதியடியில் வைத்துக்கொண்டு, இலேசாகத் தாவிச் சேணத்தில் அமர்ந்தான். காப்டனுடைய குதிரை பணிவானதல்ல; எனவே, காப்டன் தன் குதிரைமீது ஏறுவதற்குக் கொஞ்சம் சிரமப்பட்டான். கடிவாளத்தின்வாரை இழுத்துக்கொண்டு, கர்னல் சார்ஜென்டிடம் உரைத்தான்:

''அந்த அறையில் அவன் அடைத்து வைத்திருந்த உதவாக்கரைகளையெல்லாம் நான் விடுவித்து விட்டேன் என்று தலைவனிடம் கூறு. அவன் இங்கு செய்த காரியங்களுக்கு அவனை இரண்டு வாரம் காவலில் வைப்பேன் என்று சொல்லு. அந்த அறையில் இருக்கிற நபரை உடனே தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பு. காவலர்கள் தயாராக இருக்க வேண்டும்.''

''நல்லது, கர்னல் அவர்களே'' என்று கூறி, சார்ஜென்டு சால்யூட் செய்தான்.

கர்னலும் காப்டனும் தமது குதிரைகளைக் குத்தி விரட்டிக்கொண்டே, சதுக்கத்தை நோக்கிப்

பாய்ந்தனர். அவர்கள் சதுக்கத்தை அடைந்த பொழுது, அணிவகுப்பு முடிந்து கொண்டிருந்தது.

பாவெல் ஏழாவது வேலியைத் தாண்டிக் குதித்தான். அவன் சக்தியற்றவனாகச் சோர்ந்து நின்றான். சுவாசிப்பதற்கு நல்ல காற்று இல்லாத அறையில் உணவில்லாமல் அடைக்கப்பட்டிருந்த தால், அவனது பலமெல்லாம் வற்றிவிட்டது.

அவன் எங்கே போவது? சொந்த வீட்டுக்குப் போவதென்பது சிந்திக்கமுடியாத விஷயம். புருஸ்ஷாக் வீட்டுக்குப் போகலாம்; ஆனால் அங்கு அவனை யாராவது கண்டுபிடித்துவிட்டால், அந்தக் குடும்பம் முழுவதும் அழிந்துவிடும்.

என்ன செய்வதென்று அவனுக்குத் தெரிய வில்லை. அவன் மீண்டும் நகரத்தின் விளிம்பிலுள்ள புழக்கடைத் தோட்டங்கள் வழியாகவும் காய்கறிப் பாத்திகள் வழியாகவும் கண்மூடித்தனமாக ஓடினான். யாரோ ஒருவன் வீட்டு வேலிமீது நெஞ்சை மோதிக் கொண்டபொழுதுதான் சுயநிதானத்துக்கு வந்தான். சுற்று முற்றும் வியந்து நோக்கினான். அந்த உயரமான வேலிக்குப் பின்னால் இருப்பது, காட்டிலாகா அதிகாரியின் தோட்டமாகும். அவனது களைத்துப்போன கால்கள் அவனை இங்குதான் கொண்டு வந்திருக்கின்றன! இந்தப் பக்கம் வருவதென்ற எண்ணம் அவனுக்கு இருந்ததேயில்லை என்று அவன் ஆணையிட்டுக் கூறியிருப்பான். பின்னர் எப்படி இங்கு வந்து சேர்ந்தான்? இந்தக் கேள்விக்கு அவனால் பதிலுரைக்க முடியவில்லை.

எனினும், அவன் ஓய்வு எடுக்க வேண்டும், நிலைமையைக் கணித்து அடுத்த நடவடிக்கையைப் பற்றி முடிவு செய்ய வேண்டும். இந்தத் தோட்டத்தின் கோடியில் ஒரு கொடி வீடு இருப்பது அவன் ஞாபகத்துக்கு வந்தது. அங்கு அவனை யாரும் பார்க்க முடியாது.

வேலியின் உச்சியைப் பற்றிக்கொண்டு, அவன் கஷ்டப்பட்டுத் தவழ்ந்து ஏறினுன்; உச்சியை அடைந்தவுடன் தோட்டத்திற்குள் குதித்தான். மரங்களால் சூழப்பட்ட அந்த வீட்டை அவனுல் நன்ருகப் பார்க்க முடியவில்லை. அந்த இடத்தை நோக்கிஒருபார்வையைச்செலுத்தியபின், பாவெல் கொடி வீட்டைநோக்கிச் சென்ருன். அது நாற்புறங்களிலும் திறந்திருந்தது. கோடையில், இயல்பாக வளர்ந்த திராட்சைக் கொடிகள் நான்கு பக்கங்களிலும் சுவர்களாக அமைந்திருந்தன. இப்பொழுது அந்தக் கொடிகள் காய்ந்துவிட்டன. என்னவே, எல்லாம் வெறுமையாகவிருந்தது.

அவன் அந்த இடத்தைவிட்டுப் போவதற்குத் திரும்பினுன். ஆனுல் நேரமோ அதிகமாகிவிட்டது. அவனுக்குப் பின்னுல் வெறிபிடித்துக் குரைக்கும் சப்தம் கேட்டது. பாவெல் சுழன்று நின்று நோக்கினுன். வீட்டிலிருந்து வந்த இலைகள் தூவிய பாதை வழியே ஒரு பெரிய நாய் அவனைக் குறிவைத்து வந்து கொண்டிருந்தது. அதன் மூர்க்கத்தனம் மிகுந்த உறுமல்கள் தோட்டத்தின் அமைதியைக் குலைத்தன.

பாவெல் தற்காப்புக்குத் தயாராளுன். முதல் தாக்குதலைப் பலமான உதை மூலம் தடுத்து விட்டான். ஆனால் இரண்டாவது தடவை பாய்வதற்காக நாய் தாழக் குனிந்து தயாராயிற்று. அந்த நேரத்தில், ''இங்கே வா திரிஸோர்! இங்கே வா!'' என்று ஒரு பழகிய குரல் கூவிக் கொண்டு வந்திருக்காவிட்டால், நாயின் இரண்டாவது தாக்குதல் எப்படி முடிந்திருக்குமோ, யார் கண்டது?

தோன்யா, பாதை வழியே ஓடிவந்தாள். அவள் திரிஸோரின்கழுத்துச் சங்கிலியைப் பிடித்து, அதைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள். வேலிக்கு அருகில் நின்றுகொண்டிருந்த இளைஞனைப் பார்த்துப் பேசத் தொடங்கினாள்.

''நீங்கள் இங்கு என்ன செய்கிறீர்கள்? இந்த நாய் உங்களைக் கடித்திருக்குமே! நல்ல வேளை, நான்....''

அவள் திடீரென்று பேச்சை நிறுத்தினாள். அவளது கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. தோட்டத்துக்குள் வந்திருக்கும் இந்த இளைஞன் பாவெலைப் பூர்ணமாக ஒத்திருக்கிறானே!

வேலிக்கருகில் இருந்த வடிவம் அசைந்தது.

''தோன்யா! என்னை அடையாளம் தெரியவில்லையா?'' என்று அந்த இளைஞன் மிருதுவாகக் கேட்டான்.

''பாவெல், நீயா?'' என்று தோன்யா உரக்கக் கூவிக்கொண்டே, உணர்ச்சி வசப்பட்டவளாக அவனை நோக்கி விரைந்தாள்.

19

தோன்யா உரக்கக் கூவியதைத் தாக்குதலுக்குச் சைகையாகப் பொருள் கொண்டு, திரிஸோர் பாய்ந்து முன்னேறியது.

''நில், திரிஸோர், நில்!'' என்று தோன்யா கூவிக் கொண்டே அதை மொத்தினுள். திரிஸோர், தன் மனம் புண்பட்டு விட்டதாகக் காட்டிவிட்டு வாலைக் கால்களுக்கிடையே மடக்கிக் கொண்டு, அந்த இடத்தைவிட்டு நழுவி, வீட்டுக்குச் சென்றது.

''நீ விடுதலை பெற்றுவிட்டாயா?'' என்று பாவெலின் கரங்களைப் பிடித்துக் கொண்டே தோன்யா கேட்டாள்.

''உனக்கு விவரம் தெரியுமா?''

''எனக்கு எல்லாம் தெரியும். லீஸா கூறினுள். ஆனுல் நீ எப்படி இங்கு வந்தாய்? அவர்கள் உன்னை விட்டுவிட்டார்களா?'' என்று மூச்சு விடாமல் கேள்வி கேட்டாள் தோன்யா.

''விட்டு விட்டார்கள். விவரம் புரியாமல் விடுதலை செய்தனர். நான் ஓடிவந்து விட்டேன். இப்பொழுது என்னைத் தேடிக் கொண்டிருப்பார்களென்று நினைக்கிறேன். இங்கு எப்படி வந்தேன் என்று எனக்கே தெரியாது. உன் பந்தலில் கொஞ்சம் ஓய்வு எடுக்கலாமென்று எண்ணினேன். நான் மிகவும் களைத்திருக்கிறேன்'' என்று விளக்கமாகப் பேசினுன் பாவெல். அந்தப் பேச்சிலேயே அவனது களைப்பு தொனித்தது. மன்னிப்புக் கேட்கும் தோரணையில், அவன் தோட்டத்துக்குள் பிரவேசித்ததின் காரணத்தை விளக்கினுன்.

அவள் அவனை ஓரிரண்டு விநாடிகள் உற்றுப் பார்த்தாள். அவளிடம் அவன்பால் இரக்கமும் அன்பும் சுரந்தன. அதேபொழுதில் அவள் அவனைக் கண்டதால் இன்பம் அடைந்தாள்; அவனைப் பற்றிக் கவலையும் கொண்டாள்.

அவனது கரங்களைத் தன் கரங்களில் உறுதியாகப் பிடித்துக் கொண்டு, அவள் மெலிந்த குரலில் பேசினாள்:

''பாவெல்! என் காதலா! என் அன்பே! என் ஆருயிரே! நான் சொல்வதைக் கேட்கமாட்டாயா? பிடிவாதம் பிடிக்கும் பையா! அன்று ஏன் என்னை விட்டுப் போனாய்? இப்பொழுது நீ எங்களிடம், என்னிடம் வந்துவிட்டாய். இனி எதற்காகவும் உன்னைப் போகவிடமாட்டேன்! என் வீடு நேர்த்தியாகவும் நிம்மதியாகவும் இருக்கிறது. நீ எவ்வளவு காலம் தங்கவேண்டுமென்றுவிரும்பினாலும், தங்கலாம்.''

''முடியாது'' என்று பொருள்படப் பாவெல் தலையை ஆட்டினான்.

''அவர்கள் என்னை இங்கு கண்டுபிடித்து விட்டால்? முடியாது. உன் வீட்டில் நான் தங்கக் கூடாது.''

அவளது கரங்கள் அவனுடைய விரல்களை இறுகப் பிடித்து நசுக்கின; அவளது கண்ணிமைகள் துடித்தன; கண்கள் பளீரென்று பிரகாசித்தன. அவள் பேசினாள்:

''நீ மறுத்தால், நான் இனி உன்னோடு ஒருபொழுதும் பேசமாட்டேன். ஆர்த்தியோம் இங்கு

இல்லை. அவரைத் தக்கக் காவலுடன் எஞ்சினுக்குக் கொண்டுபோய்விட்டார்கள். சகல ரயில்வே தொழிலாளரும் திரட்டப்படுகிறார்கள். நீ எங்கு போவாய்?''

பாவெலுக்கும் அதே கவலைதான். தன் அன்புக்கு உரியவளாகி விட்ட இந்தப் பெண்ணுக்கு அபாயம் ஏற்படுமென்ற அச்சமே அவனைப் பின்வாங்கச் செய்தது. ஆனால் இறுதியில், வேதனை மிகுந்த அனுபவங்களால் களைத்துப் போய், பசிக்கும் சோர்வுக்கும் இலக்காகியிருந்த பாவெல், தோன்யாவின் கோரிக்கைக்கு இணங்கினான்.

அவன் தோன்யாவின் அறையில் சோபாவின் மீது உட்கார்ந்திருந்தபொழுது, சமையலறையில் தாய்க்கும் மகளுக்கும் கீழ்க்கண்ட சம்பாஷணை நடைபெற்றது:

''அம்மா, இதைக் கேள். பாவெல் என் அறையில் இருக்கிறான். அவன் என்னிடம் சில சமயங்கள் பாடம் படிக்க வருவதுண்டு. உனக்கு நினைவில் இருக்கிறதா? உன்னிடமிருந்து நான் எதையும் மறைப்பதற்கு விரும்பவில்லை. ஒரு போல்ஷெவிக்கு மாலுமி தப்பி ஓடுவதற்கு உதவிசெய்ததற்காகப் பாவெல் கைது செய்யப்பட்டான். இப்பொழுது அவன் சிறையிலிருந்து ஓடிவந்து விட்டான். அவனுக்கு வேறு இடம் இல்லை.'' அவளது குரல் நடுங்கியது. ''அன்புள்ள அம்மா! அவன் இங்கேயே கொஞ்சகாலம் இருப்பதற்கு அனுமதி கொடு. தயவுசெய், அம்மா.''

உருக்கமாகத் தாழ்வுடன் வேண்டிக்கொண்ட மகளின் கண்களில் எதையோ தேடும் தோரணையில், தாய் அவளை உற்றுநோக்கினாள்.

''நல்லது. எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் அவன் எந்த இடத்தில் தங்குவான்?''

தோன்யாவின் முகம் குங்குமமாகியது.

குழப்பத்துடனும், சிறிது பதற்றத்துடனும், ''அவன் என் அறையில் ஸோபாவில் தூங்கட்டும். தற்சமயம், நாம் அப்பாவிடம் ஒன்றும் சொல்ல வேண்டாம்'' என்று தோன்யா கூறினாள்.

தாயார் மகளின் கண்களை நேராக நோக்கினாள்.

''உன் கண்ணீருக்குக் காரணமாக இருந்தது இதுதானா?'' என்று அவள் வினவினாள்.

''ஆம்!''

''ஆனால் அவன் பருவம் அடையாத பையன்.''

''அது உண்மை. ஆனால் அவன் தப்பிவந்திருக்காவிட்டால், பையனாயிருந்தபோதிலும் சுட்டுக் கொன்றிருப்பார்கள்'' என்று தன் பிளவுஸின் கீழ்க் கையை விரல்களால் கூச்சத்துடன் வருடிக்கொண்டே, தோன்யா விடைதந்தாள்.

தன் வீட்டில் பாவெல் இருப்பதைப்பற்றித் தாயார் திகிலடைந்தாள். அவன் சிறையிலிருந்து தப்பிவந்த கைதி என்பது ஒன்று; அவளுக்கு முன்பின் தெரியாத அந்தப் பையனிடம் அவளது

மகள் மோகம் கொண்டிருக்கிறாள் என்பது இன்னொன்று; இரண்டு விஷயங்களுமே, அன்னையின் மனதைக் கலங்கச் செய்தன.

தோன்யாவோ பிரச்சினை பைசலாகிவிட்டதென்று முடிவுசெய்தவளாய், விருந்தாளிக்குச் செய்யவேண்டிய வசதிகளைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா! முதலில் அவன் குளிக்க வேண்டும். உடலெல்லாம் ஒரே அழுக்குடன் காட்சியளிக்கிறான். புகைப் போக்கியைத் துடைப்பவன் மாதிரி கறுத்துக் கிடக்கிறான். அவன் குளித்துப் பல யுகங்கள் ஆகியிருக்கவேண்டும்....''

பாவெல் குளிப்பதற்குத் தண்ணீரைக் கொதிக்க வைக்கவும் உடுத்திக்கொள்வதற்குத் தூய ஆடையைத் தேடி எடுக்கவும் அவள் பரபரப்புடன் ஓடினாள். சகலமும் ஆயத்தமானவுடன் அவள் தன் அறைக்கு ஓடினாள். அனாவசியமான விளக்கங்களைத் தவிர்ப்பதற்காக, அவள் பாவெலின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு, குளியலறைக்குச் சென்றாள்.

''நீ உன் ஆடைகள் அனைத்தையும் மாற்றிக் கொள்ள வேண்டும். இங்கு நீ அணிவதற்கு மாற்றுடை வைத்திருக்கிறேன். உன் துணிகளை வெளுக்கவேண்டும். அதுவரை இந்த உடுப்புகளை அணிந்துகொள்ளலாம்'' என்று கூறிக்கொண்டே அவள் நாற்காலிமீதிருந்த ஆடைகளைக் காட்டினாள். அங்குக் வரிபோட்ட வெள்ளைக் காலருடன் கூடிய நீலநிற மாலுமிச் சொக்காயும், கணுக்கால்

பகுதியில் அகன்றுள்ள கால்சட்டையும் நேர்த்தியாகப் பரப்பிவைக்கப்பட்டிருந்தன.

பாவெல் ஆச்சரியமடைந்தான். தோன்யா புன்முறுவல் பூத்தாள்.

''ஒரு சமயம் ஒரு வேஷக்கூத்தில் நடனமா டியபொழுது, இதைத் தரித்தேன்'' என்று அவள் விளக்கினாள். ''இவை உனக்கு அழகாக இருக்கும். சரி, நேரமாகிவிட்டது. துரிதமாகக் காரியத்தை முடி. நீ குளிப்பதற்குள், உன் உணவுக்கு ஏதாவது வழி செய்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, வெளியில் சென்று கதவை மூடினாள்.

பாவெலுக்கு ஆடைகளை நீக்கிவிட்டு, தொட்டிக்குள் இறங்குவதைத் தவிர வேறு வழியில்லாமல் போயிற்று.

ஒருமணி நேரத்துக்குப் பின் பாவெல், தாயார், மகள் ஆகிய மூவரும் சமையலறையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

பாவெலுக்கு அகோரப் பசி. அவனுக்கே தெரியாமல், மூன்று தடவை பரிமாறப்பட்டதையெல்லாம் உண்டு விட்டான். முதலில், அவன் அந்தத் தாயாருக்கு முன் உண்பதற்கு நாணமடைந்தான். ஆனால் அவளது நேச இயல்பை உணர்ந்த பாவெலின் கூச்சம் சீக்கிரத்தில் மறைந்தது.

சாப்பாடு முடிந்த பிறகு, அவர்கள் தோன்யாவின் அறைக்குச் சென்றனர். தாயாரின் வேண்டுகோளுக்கு இணங்க, பாவெல் தன் அனுபவங்களை எடுத்துரைத்தான்.

அவன் தன் கதையை முடித்த பிறகு, ''இப்பொழுது என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று தாயார் அவனைக் கேட்டாள்.

ஒரு விநாடி பாவெல் யோசித்தான்.

''நான் முதலில் ஆர்த்தியோமைப் பார்க்க வேண்டும். அதன்பின் இந்த ஊரைவிட்டு வெளியேற வேண்டும்.''

''ஆனால் நீங்கள் எங்கு போவீர்கள்?''

''ஊமான் அல்லது கீவ் நகரத்துக்குச் செல்லலாம் என்று நினைக்கிறேன். நானே ஒரு முடிவுக்கு வரவில்லை. ஆனால் இந்த ஊரை விட்டுச் சீக்கிரத்தில் போய்விட வேண்டும்.''

தன் நிலைமை இவ்வளவு துரிதமாக மாறிவிட்டது என்பதைப் பாவெலால் நம்பமுடியவில்லை. அன்று காலைதான் அவன் ஒரு அழுக்கடைந்த கூட்டில் அடைபட்டிருந்தான். இப்பொழுது, அவன் தூய ஆடைகளை உடுத்திக்கொண்டு, தோன்யாவின் பக்கத்தில் அமர்ந்திருக்கிறான். மிகவும் முக்கியமான விஷயம் என்னவெனில், அவன் சுதந்திரம் பெற்றுவிட்டான்.

வாழ்வில் எத்தகைய விநோதமான திருப்பங்கள் ஏற்படுகின்றன என்று அவன் எண்ணமிட்டான். ஒரு விநாடி, வானம் அமாவாசை நாள் இரவைப்போல் இருளடைந்து விடுகிறது. அடுத்த விநாடி, சூரியன் கருமேகங்களைக் கலைத்துக்கொண்டு வெளி வந்து பேரொளி வீசுகிறான். மீண்டும் கைது ஆகக்கூடிய ஆபத்து இல்லாவிட்டால், இந்த நேரத்தில் பாவெல் பேரானந்தம் அடைந்திருப்

பான். ஆம். எவரும் அடைந்திராத மகிழ்ச்சிை அனுபவித்திருப்பான்.

ஆனல் அமைதி நிறைந்த பெரிய வீட்டி உட்கார்ந்திருக்கும் பொழுதும், அவன் பிடிபட லாமென்பதைப் பாவெல் நன்கறிந்திருந்தான் இங்கிருந்து போய்விட வேண்டும். எங்கு போகு லும் சரி, இங்கு இருக்கக்கூடாது. ஆனலும் அவன் ஓடிப்போவதை ஏன் விரும்ப வேண்டும் துணிவு மிகுந்த தீரன் காரிபால்டியைப் பற்றி படிப்பதால் எத்தகைய மன எழுச்சி ஏற்பட்டது அவரிடம் பாவெலுக்கு எவ்வளவு பொருமை ஏ பட்டது! ஆனல் சிந்தித்துப் பார்த்தால், சத்து ருக்களால் வேட்டையாடப்பட்ட காரிபால்டி இடம் விட்டு இடம் பெயர்ந்து, எவ்வளவு கட னமான வாழ்க்கையை நடத்தியிருக்க வேண்டும் அவன், அதாவது பாவெல், ஏழு நாட்களே சித்திரவதைக்கு உட்பட்டுத் துன்புற்ருன். ஆனு அந்த ஏழு நாட்களே ஒரு முழு வருடமா வல்லவா தோன்றுகின்றன?

அவனல் முடியாது. அவன் வீரனுக்கு உரி வார்ப்பில் எடுக்கப்பட்டவன் அல்ல.

''நீ என்ன எண்ணிக் கொண்டிருக்கிருய்?' என்று அவன் பக்கம் சாய்ந்தபடியே தோன்யா வினவிஞள். அவளது கண்களின் நீலத்தை ஆழ காண முடியாது போல் இருந்தது!

''தோன்யா, உனக்கு கிரிஸ்தீனவைப் பற்றி சொல்லட்டுமா?''

''சரி, சொல்லு'' என்று தோன்யா அவனைத் தூண்டினுள்.

பாவெல் அவளிடம் தன் சிறைத் தோழியின் சோகக்கதையை எடுத்துரைக்கலானுன்.

''...அதன்பின் அவள் திரும்பி வரவில்லை'' என்று அவன் மிக வருத்தத்துடன் கூறினுன். அறையில் அமைதி நிலைத்தது. 'டிக்டிக்' என்று ஒலித்தது கடிகாரம். தோன்யா தலை குனிந்து கொண்டாள். அவள் தன்னை விக்கச் செய்த துக்கத்தை அடக்குவதற்காக உதடுகளைக் கடித்துக் கொண்டாள்.

பாவெல் அவளைப் பார்த்தான்.

''நான் இன்று இரவே போக வேண்டும்'' என்று அவன் உறுதியான குரலில் உரைத்தான்.

''முடியாது. ஒருக்காலும் முடியாது. இன்று இரவு நீ எங்கும் போக முடியாது. நான் உன்னை விடமாட்டேன்.''

அவள் தன்னுடைய மெலிந்த கதகதப்பான விரல்களால் அவனது விறைப்பான குட்டை மயிரைத் தட்டிக் கொடுத்தாள்....

''தோன்யா, நீ எனக்கு உதவ வேண்டும். யாராவது ஸ்டேஷனுக்குப் போய், ஆர்த்தியோமின் நிலைமையை அறிந்து வரவேண்டும். ஸெர்யோஷாவுக்கு ஒரு குறிப்பைக் கொண்டு செல்ல வேண்டும். காகத்தின் கூடு ஒன்றில் நான் ஒரு கைத் துப்பாக்கியை ஒளித்து வைத்திருக்கிறேன். அதைக் கொண்டு வருவதற்கு நான் போகக் கூடாது. எனக்காக, ஸெர்யோஷா அதை எடுத்து வருவான்.

நீ இந்தக் காரியங்களை எனக்காகச் செய்ய முடியுமா?''

தோன்யா எழுந்து நின்ருள்.

''நான் உடனே லீஸா வீட்டுக்குச் செல்வேன். அவளும் நானும் சேர்ந்து ஸ்டேஷனுக்குப் போவோம். நீ கடிதத்தை எழுது; அதை நான் ஸெர்யோஷாவிடம் சேர்ப்பிக்கிறேன். அவன் எங்கு இருக்கிருன்? அவன் உன்னைப் பார்க்க விரும்பினுல், நீ இங்கு இருக்கிருய் என்று சொல்லலாமா?''

பாவெல் ஒரு கணம் யோசித்து விட்டு விடையளித்தான்.

''இன்று மாலை கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, உன் தோட்டத்துக்கு வரச் சொல்.''

தோன்யா திரும்பி வந்த பொழுது, ரொம்ப நேரமாகிவிட்டது. பாவெல் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான். அவளுடைய கரம் பட்டவுடன் அவன் விழித்துக் கொண்டான். அவனுக்கு முன்னுல் தோன்யா ஆனந்தமாக முறுவலித்துக் கொண்டு நிற்பதை அவன் கண்டான்.

''ஆர்த்தியோம் இங்குச் சீக்கிரத்தில் வந்து விடுவார். அவர் இப்பொழுதுதான் திரும்பி வந்திருக்கிருர். லீஸாவின் தந்தை அவருக்காக உத்திரவாதம் கொடுத்தார்; எனவே, அவர்கள் அவரை ஒரு மணி நேரம் விடுவதற்கு ஒப்புக்கொண்டார்கள். எஞ்சின் ஸ்டேஷனில் நின்று கொண்டிருக்கிறது. நீ இங்கிருக்கிருயென்று அவரிடம் சொல்வதற்கு முடியவில்லை. அவரிடம் ஒரு மிக முக்கியமான விஷயத்தைப்பற்றி நான் பேச வேண்டியிருக்

கிறது என்றுதான் கூறினேன். இதோ, அவரே வந்து விட்டார்!''

கதவைத் திறப்பதற்கு தோன்யா ஓடினுள். ஆர்த்தியோம் கதவு வழியில் மலேத்து நின்ருன். அவனது கண்களேயே அவனுல் நம்ப முடிய வில்லே. பேசுவதற்கு நா எழவில்லே. ஆர்த்தி யோம் உள்ளே வந்ததும், தோன்யா கதவை மூடினுள். டைபஸ் ஜுரத்தால் பீடிக்கப்பட்டுள்ள தந்தை படிப்பறையில் படுத்துக்கொண்டிருந்தார். அவர் காதில் அண்ணன் தம்பி பேச்சு விழக் கூடாதென்றுதான், அவள் கதவைச் சாத்தினுள்.

ஒரு வினுடியில், ஆர்த்தியோம் பாவெலே அடைந்தான். ''பாவெல்! அருமைத் தம்பீ!'' என்று கூவிக்கொண்டு, கரடியைப் போல அவனே இறுகக் கட்டித் தழுவினுன். பாவெலின் எலும்பு கள் நறநறவென்று ஒலி செய்தன.

ஆகக்கூடி, மறுநாள் பாவெல் கிளம்பிவிட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. கஸாத் தீன் செல்லும் ரயில் வண்டியில் புருஸ்ஷாக் பாவெலே இட்டுச் செல்வதற்கு ஆர்த்தியோம் ஏற்பாடு செய்வான்.

சாதாரணமாகத் தன் உணர்ச்சிகளே வெளிக் குக் காட்டாதவன் ஆர்த்தியோம். ஆனுல் இப் பொழுது, அவன் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தான். தம்பி என்ன கதியடைந்தானே என்று பல நாட் கள் கவலேப்பட்டுத் துன்புற்ற பின், அவனே நேரில்

பார்த்தால், ஆனந்தம் பொங்குவதில் ஆச்சரியம் என்ன?

''அப்படியாளுல், இது தான் முடிவு. நீ நாளைக் காலை ஐந்து மணிக்கு டெப்போவுக்கு வந்துவிடு. அவர்கள் எஞ்சினில் விறகுகளை ஏற்றும் பொழுது, நீ சப்தம் செய்யாமல் உள்ளே போய் விடலாம். இங்கு இருந்து உன்னுடன் பேசிக்கொண் டிருக்க வேண்டுமென்பதே என் ஆவல். ஆளுல் நான் திரும்பிச் சென்ருக வேண்டும். நாளைக் காலை உன்னை வழியனுப்புகிறேன். அவர்கள் ரயில்வே தொழிலாளரை ராணுவமுறையில் திரட்டி அழைக்கிருர்கள். ஜெர்மானியர் இங்கு இருந்தபொழுது நடந்ததைப் போல, இப்பொழுதும் ராணுவப் பாதுகாவலில் எங்களை நிர்ப்பந்தித்து வேலை வாங்குகிருர்கள்.''

ஆர்த்தியோம் தம்பியிடம் விடைபெற்றுக் கொண்டு சென்ருன்.

சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். வெளிச்சம் விரைவாக மங்கிக் கொண்டிருந்தது. சீக்கிரத்தில் ஸெர்யோஷா பிஸ்டலுடன் வந்து விடுவான். ஸெர்யோஷாவுக்காகக் காத்திருந்த பொழுது, பாவெல் அந்த இருண்ட அறையில் நடுக்கும் நெடுக்குமாக உணர்ச்சி வசப்பட்டு உலவிக் கொண்டிருந்தான். தோன்யாவும் அவளுடைய தாயும், தோன்யாவின் தந்தையைப் பார்க்க அவரது அறைக்குச் சென்றிருந்தனர்.

பாவெல் ஸெர்யோஷாவை வேலிக்கு அருகில் சந்தித்தபொழுது, இருள் பரவிப்படர்ந்துவிட்டது.

இரு நண்பர்களும் ஆர்வத்துடன் கைகுலுக்கிக் கொண்டனர். ஸெர்யோஷா, வால்யாவையும் உடன் அழைத்து வந்திருந்தான். அவர்கள் தாழ்ந்த சுருதியில் பேசிக் கொண்டிருந்தனர்.

''நான் அந்தக் கைத்துப்பாக்கியைக் கொண்டுவரவில்லை. உன் வீட்டுப் புழக்கடையில் பெத்லியூரா ஆட்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அங்கு நிறைய வண்டிகள் நின்று கொண்டிருக்கின்றன. அவர்கள் தீ வளர்த்திருந்தார்கள். எனவே, துப்பாக்கியை எடுப்பதற்கு மரத்தில் ஏற முடியவில்லை. யோகமில்லை. என்ன செய்வது?'' என்று ஸெர்யோஷா கூறினான்.

''பரவாயில்லை. கவலைப்படாதே. ஒரு வேளை, அதுவும் நன்மைக்காகவே இருக்கலாம். வழியில் என்னைக் கைத்துப்பாக்கியுடன் பிடித்தார்களானால், ஆபத்து பேராபத்தாக முடியும்'' என்று பாவெல் ஸெர்யோஷாவுக்கு ஆறுதல் கூறினான். ''ஆனால் அந்தக் கைத்துப்பாக்கியை நீ நிச்சயமாக எடுத்துக்கொண்டு விடவேண்டும்'' என்றும் அவன் வற்புறுத்தினான்.

வால்யா பாவெலை நெருங்கினாள்.

''நீ எப்பொழுது புறப்படுகிறாய்?'' என்றாள்.

''அதிகாலையில் சிறிதளவு வெளிச்சம் தோன்றியவுடன்.''

''நீ எப்படிச் சிறையிலிருந்து தப்பி வந்தாய்? எங்களுக்குச் சொல்.''

பாவெல் அவர்களுக்குத் தன் கதையை மெல்லிய குரலில் வேகமாக விவரித்தான். அதன்

பின், அவன் தன் தோழர்களிடம் விடைபெற்றுக் கொண்டான். எப்பொழுதும் உல்லாசமாகவே இருக்கும் ஸெர்யோஷாவின் முகத்தில் கவலை படர்ந்தது. அதுவே அவனுடைய உள்ளக் கிளர்ச்சியைப் பளிங்குபோல் எடுத்துக் காட்டியது.

''பாவெல்! நீ நலத்துடன் போய்ச் சேர வேண்டும். எங்களை மறந்து விடாதே'' என்று வால்யா, தழுதழுத்த குரலில் குறிப்பிட்டாள்.

அத்துடன் அவர்கள் அவனை விட்டுப் பிரிந்தார்கள். ஒரு விநாடியில் அந்தகாரம் அவர்களை விழுங்கிவிட்டது.

வீட்டுக்குள் அமைதி நிலவியது. கடிகாரத்தின் ஓசை மட்டுமே அந்த அமைதிக்கு ஊறு செய்தது.

அந்த வீட்டிலிருந்தவர்களில் இருவருக்கு அன்று இரவு உறங்க வேண்டுமென்ற எண்ணமே தோன்றவில்லை. ஆறுமணி நேரத்தில் அவர்கள் பிரியப் போகிறார்கள். என்றாவது ஒரு நாள் அவர்கள் மீண்டும் கூடுவார்கள் என்பதற்கு உறுதியும் இல்லை. இந்நிலையில் அவர்கள் துஞ்ச முடியுமா? அந்த ஆறுமணி நேரத்தில் அவர்கள் தத்தம் உள்ளத்தில் புழுங்கிக் கொண்டிருக்கும் எண்ணற்ற சிந்தனைகளையும் கருத்துக்களையும் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்வதுதான் சாத்தியமா?

இளமை இனிமை வாய்ந்தது. மோகம் என்பது என்னவென்று இன்னும் புரியாத பருவம், ஆனால் இருதயத்தின் வேகமான துடிப்பு அதை தினம் புரியாத வண்ணம் உணர்த்தும் பருவம்;

உன் கரம், உன் காதலியின் மார்பைத் தற் செயலாகத் தொட்டுவிட்டால், அது திகிலுற்றதைப்போல நடுங்கித் தானாகவே வேறொரு பக்கம் செல்லும். இளமையின் புனிதமான நேசம் உன்னை இறுதிச் செயலிலிருந்து தடுத்து, நிறைகாக்கும் பருவம் அது! அவளுடைய கை உன் கழுத்தைக் கட்டிக்கொள்வதையும் அவளுடைய சூடேறிய முத்தம் உன் இதழ்களில் பதிவதையும் உணர்வதை விட இனிமையானது உலகத்தில் என்ன இருக்கிறது?

அவர்கள் நண்பரான பிறகு, இரண்டாவது தடவையாக ஒருவரையொருவர் முத்தமிட்டுக் கொண்டனர். பாவெல் எண்ணற்ற அடி வாங்கியிருக்கிறான்; ஆனால் அவனது அன்னையைத்தவிர, எவரும் அவனைத் தழுவிச் சீராட்டியதில்லை. தோன்யா அவனைத் தழுவி முத்தமிட்டபொழுது, அவனது உடலும் உள்ளமும் தீர்க்கமான எழுச்சி உற்றன. இதுவரை, அவன் வாழ்வின் கொடுமையைத்தான் அறிந்திருந்தான். வாழ்வில் இத்தகைய இன்பம் இருப்பதை அவன் அறிந்திருக்கவில்லை. இப்பொழுது, இந்தப் பெண் வாழ்க்கைப் பாதையில் அவனுக்குக் கிடைத்த ஒரு பெரும் இன்பம்.

அவளது கூந்தலின் நறுமணத்தை அவன் நுகர்ந்தான். அந்த இருளிலும் அவளுடைய கண்களைப் பார்ப்பதாக அவனுக்கு ஒரு பிரமை ஏற்பட்டது.

''தோன்யா! நான் உன்னைக் காதலிக்கிறேன். எந்த அளவுக்கு நேசிக்கிறேன் என்பதை என்னால் சொல்ல முடியாது; எனக்குச் சொல்லத் தெரியாது.''

அவனுடைய எண்ணங்கள் தடைபட்டன. அவளுடைய லாகவமான தேகம்.... ஆனால் இளமை நட்பு எதையும்விட மேலானது.

''தோன்யா! இந்தத் தொல்லையெல்லாம் முடிந்தபிறகு, எனக்கு எலெக்டிரிஷியன் வேலை கிடைக்குமென்பது உறுதி. நீ உண்மையில் என்னை விரும்பினால், என்னுடன் விளையாடும் எண்ணம் இல்லாமல் உண்மையாகவே என்னை நாடினால், நான் உனக்கு நல்ல கணவனாக அமைவேன். நான் உன்னை ஒருபொழுதும் அடிக்கமாட்டேன்; உன் உணர்ச்சிகளை ஒருபொழுதும் புண்படுத்த மாட்டேன். இது சத்தியம்.''

கட்டித்தழுவிய படியே தங்களையும் அறியாமல் உறங்கிவிட்டால், தோன்யாவின் தாய் அதைப் பார்த்து, தங்களைப் பற்றி தவறாக நினைக்கக் கூடும் என்ற அஞ்சத்தால் இருவரும் பிரிந்தனர்.

ஒருவரையொருவர் மறப்பதில்லை என்று புனிதமான ஒப்பந்தம் செய்து கொண்ட பின், அவர்கள் துயில் கொண்ட தருணத்தில், பொழுது புலர்ந்து கொண்டிருந்தது.

தோன்யாவின் தாய் முதலில் பாவெலை எழுப்பிவிட்டாள். அவன் உடனே படுக்கையிலிருந்து துள்ளிக்குதித்தான். குளிக்கும் அறையில் அவன் தன்னுடைய பூட்ஸையும் ஆடைகளையும்

அணிந்துகொண்டு, தாலீன்னிக்கின் கோட்டையும் தரித்துக்கொண்ட பொழுது, தோன்யாவை அவளுடைய அன்னை எழுப்பினுள்.

சாம்பல் நிறத்தை உடைய காலைப்பனியின் வழியே, அவர்கள் இருவரும் ஸ்டேஷனுக்கு விரைந்து சென்றனர். அவர்கள் புழக்கடை வழியே சென்று, விறகுகள் அடுக்கியிருந்த இடத்தை அடைந்தபொழுது, அங்கு விறகுகள் ஏற்றப் பட்ட புகைவண்டிக்கு அருகில், ஆர்த்தியோம் பொறுமை இழந்தவனுகக் காத்துக் கொண்டிருந்தான்.

ஒரு திறன் மிகுந்த எஞ்சின், சீறிப்பாய்ந்த நீராவிப் படலங்களால் மூடப்பட்டு, மெல்ல மெல்ல நகர்ந்தது. அதன் உள்ளிருந்து புருஸ்ஷாக் வெளியே நோக்கினுன்.

அவசர அவசரமாகப் பாவெல் தோன்யாவிடமும் ஆர்த்தியோமிடமும் விடை பெற்றுக் கொண்டான். இரும்புக் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு, எஞ்சினுக்குள் ஏறினுன். அவன் திரும்பிப் பார்த்தபொழுது, அவனுக்குப் பழக்கமான இரண்டு வடிவங்களைக் கண்டான்: ஒன்று, ஆர்த்தியோமின் நெட்டை வடிவம்; அவனுக்கு அருகில் தோன்யாவின் லலிதமான சிறிய வடிவம். காற்று அவளுடைய பிளாவுஸ் காலரைக் கோபமாகத் தாக்கியது. அவளது பழுப்பு நிறக் கேசத்தைத் தூக்கி எறிந்தது. அவள் அவனுக்குக் கரத்தை அசைத்து வாழ்த்துக் கூறினுள்.

ஆர்த்தியோம் தோன்யாவை ஓரக்கண்ணுல்

பார்த்தான். அவள் கண்களில் நீர் மல்குவதைக் கண்டு, நெடுமூச்செறிந்தான்.

''அவர்கள் இருவருக்கிடையே ஏதோ பிணைப்பு உண்டாகி விட்டதென்பது உண்மை. நானோ, பாவெல் இன்னும் சிறு பையனாக இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறேன்!'' என்று ஆர்த்தியோம் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

ரயில்வண்டித் தொடர் வளைவைக் கடந்து மறைந்தது. அப்பொழுது, ஆர்த்தியோம் தோன்யாவைப் பார்த்து, ''நல்லது, நாம் இனி நண்பர்களாய் இருப்போமா?'' என்று கூறினான். தோன்யாவின் சிறு கரம் அவனது பெருங்கரத்தில் மறைந்தது.

வேகம் அதிகரித்துக் கொண்டிருந்த ரயிலின் உருளொலி தூரத்திலிருந்து கேட்டது.

அத்தியாயம் ஏழு

ஒரு வார காலமாக, காப்பகழிகளாலும் முள் வேலிகளாலும் நாற்புறங்களில் சூழப்பட்டிருந்த நகரம், பீரங்கி வேட்டுகளின் 'கடகட' வென்ற ஒலிக்கும் துப்பாக்கிகளின் 'டுமீல் டுமீல்' என்ற சப்தத்துக்குமிடையே இரவில் படுக்கச் சென்று காலையில் விழித்தெழுந்தது. நடு இரவில் மட்டுமே நகரம் அமைதியில் ஆழ்ந்திருந்தது. சிலவேளைகளில் புறக்காவல் குழுக்கள் ஒன்றையொன்று நோட்டம் பார்ப்பதற்காகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் சப்தம் அமைதியைக் குலைத்துவிடும்.

பொழுது புலரும் சமயத்திலேயே, சிப்பாய்கள் ரயில்வே நிலையத்தில் இருந்த பீரங்கிகளைச் சுற்றிச் சுறுசுறுப்பாகச் செயல்படுவர். ஒரு பீரங்கியின் கரிய நீண்ட மூக்கு வெறித்தனமாகக் கக்கியவுடன், சிப்பாய்கள் அதில் வெடி குண்டுகளைத் மீண்டும் திணிப்பார்கள். பீரங்கியின் பொறிகக்கும் விசையைச் சிப்பாய் அமுக்கிய பொழுதெல்லாம், பூமி அதிரும். டவுனிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கிராமம் ஒன்று செம்படை வசம் இருந்தது. அந்தக் கிராமத்தின் மேலாக, ஊளையுடனும், சீழ்க்கையுடனும் பறந்து வந்த குண்டுகள் செய்த சப்தம் இதர ஒலிகளையெல்லாம் அமுக்கியது. இவ்வெடிகுண்டுகள் கீழே விழுந்து வெடித்ததும், தரையிலிருந்து மண் பாளங்கள் மேலே பறந்து சென்றன.

அந்தக் கிராமத்தின் மையத்தில் ஒரு குன்று; அதன் மீது ஒரு போலிஷ் மடம்; அந்த மடத்தின் திறந்த வெளியில்தான் செவ்வீரர்களின் பீரங்கிப் பிரிவு முகாமிட்டிருந்தது.

அந்தப் பீரங்கிப் படைப்பிரிவின் ராணுவக் கமிஸாரான* தோழர் ஸமோஸ்தின் பீரங்கியின்

---

* **இராணுவக் கமிஸார்**—*1918*ம் ஆண்டு தொட்டு **1942**ம் ஆண்டு வரை (சிறு இடைவேளையுடன்) கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத் அரசாங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளாக சோவியத் ராணுவத்தில் செயல்பட்டு வந்தவர்கள் ராணுவக் கமிஸார்கள். ராணுவ யூனிட்டுகளின் தலைவர்களுடன் சேர்ந்து ராணுவக் காரியங்கள் யாவுக்கும் பொறுப்பு வகித்துவந்தார்கள்.

ஏர்க்காலில் தலையை வைத்து உறங்கிக்கொண் டிருந்தான். அவன் துள்ளி எழுந்து நின்று, எடைமிகுந்த 'மௌஸர்' கைத்துப்பாக்கியுடன் கூடிய பெல்ட்டை இறுக்கிக் கொண்டான். வெடிகுண்டு பாய்ந்து செல்லும் ஒலியைக் கேட்ட ஸமோஸ்தின், அது வெடிக்கும் வரை காத்திருந் தான். அதன்பின், கணீரென்று ஒலித்த அவனது குரல் அந்தத் திறந்த வெளி முழுவதும் பர வியது.

''இனி நாளைக்குத் தூங்கலாம், தோழர்க ளே! எழுந்திருங்கள்!''

செஞ்சேனை வீரர்கள் தத்தம் பீரங்கிகளுக்கு அருகிலேயே தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர் களும் கமிஸாரைப் போலவே விரைவாக எழுந்து நின்றார்கள். ஸிதொர்ச்சூக் என்பவன் மட்டும், வேண்டா வெறுப்புடன் தன் தலையை உயர்த் தினன்; தூக்கக் கலக்கம் நிறைந்த கண்களுடன் சுற்று முற்றும் பார்த்தான்.

''பன்றிகள்! சிறிது வெளிச்சம் கிடைத்த தும் சுடுவதற்குக் கிளம்பிவிட்டார்கள்! எவ்வகை யான இழி மக்கள் இவர்கள்!''

ஸமோஸ்தின் சிரித்தான்.

''ஸிதொர்ச்சூக்! அவர்கள் சமூக விரோதி கள். அந்தப் புல்லுருவிகளிடம் நீ வேறு என்ன எதிர்பார்க்கிறாய்? நீ தூங்குகிறாயா, இல்லையா என்பதைப் பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை.''

பீரங்கிப் படையினன் முணு முணுத்துக்

கொண்டே, தன்னைத்தானே தட்டி எழுப்பிக் கொண்டான்.

சில நிமிஷங்கள் கழித்து, மடத்து முற்றத்திலிருந்த பீரங்கிகள் செயல்பட்டன; வெடி குண்டுகள் டவுனில் வெடித்தன.

சீனி உற்பத்திச் சாலையின் உயரமான புகைபோக்கி உச்சியில், மரப் பலகைகளைக் கொண்டு ஒரு மேடை தயார் செய்யப்பட்டிருந்தது. அதன் மீது ஒரு பெத்லியூரா ஆபீசரும் ஒரு டெலிபோனிஸ்டும் இருந்தனர். அவர்கள் புகைபோக்கிக்குள்ளிருந்த இரும்பு ஏணி வழியே ஏறி, மேடையை அடைந்திருந்தனர்.

நகரம் முழுவதையும் நன்ருகப் பார்ப்பதற்கு வசதியாகவிருந்த அந்த அனுகூல இடத்திலிருந்து கொண்டு, அவர்கள் தமது பீரங்கிப் பிரிவு எவ்வாறு செயல்பட வேண்டுமென்பதற்கு வழி காட்டினார்கள். நகரத்தை முற்றுகையிட்டுக் கொண்டிருந்த செஞ்சேனையின் அசைவுகள் அனைத்தையும் அவர்கள் தொலைநோக்கி மூலம் பார்த்தனர். இன்று போல்ஷெவிக்குகள் விசேஷமான சுறுசுறுப்புடன் செயல்பட்டனர். ஒரு கவசமணிந்த ரயில் இடைவிடாது தன் பீரங்கிகளால் வெடித்துக் கொண்டே, பையப் பைய முன்னேறி, பொதோல்ஸ்க் ஸ்டேஷனை அடைந்து கொண்டிருந்தது. அதற்கும் அப்பால், செஞ்சேனைக் காலாட்படை வரிசைகள் இருப்பதும் தென்பட்டது. புயல் வேகத் தாக்குதல் மூலம் டவுனைக் கைப்பற்றுவதற்குச் செஞ்சேனை வீரர்கள் பன்முறை

முயன்றனர்; ஆனால் நகரத்தின் புகுவாயில்களில் எல்லாம் பெத்லியூரா படைகள் அகழிகளை வெட்டிக் கொண்டு உறுதியாக நிலைகொண்டு நின்றன. அகழிகள் எரிமலைகளைப் போலத் தீ கக்கின; அப்பொழுது, புத்தி கலங்கச் செய்யும் வலிய ஓசை உண்டாயிற்று; அந்தப் பேரொலி இடைவிடாத பெரு முழக்கமாகப் பெருகியது. செஞ்சேனை வீரர்கள் தாக்கியபொழுது, இந்த முழக்கம் அதன் உச்ச நிலையை அடைந்தது. இந்த ஈயக் குண்டுமாரி, செஞ்சேனை வீரர்களைத் தாக்கிய பொழுது, அந்தக் கொடுமையான சிரமத்தை அவர்களால் தாங்க முடியவில்லை. அசையாத உடல்களைக் களத்தில் விட்டுவிட்டு, அவர்கள் பின்வாங்கினர்.

இன்று டவுன்மீது நடந்த தாக்குதல் என்றும் காணாத அளவுக்கு உக்கிரமானதாக இருந்தது. செஞ்சேனை வீரர்கள் விடாப்பிடியாகத் தாக்கினர்; பகைவர் அணியைத் திரும்பத் திரும்பப் புடைப்பதில் வெற்றி கண்டனர். பீரங்கிப் பிரயோகத்தின் முழக்கத்தினால் காற்று நடுங்கியது. புகைபோக்கியின்உச்சியிலிருந்துபார்த்தபொழுது, செஞ்சேனை வீரர்கள் நன்கு குனிந்து கொண்டும், தடுமாறிக் கொண்டும், தடுத்து நிறுத்த முடியாத முறையில் முன்னேறிச் செல்வது நன்கு தெரிந்தது. இப்பொழுது, அவர்கள் ஸ்டேஷனைக் கைப்பற்றும் நிலைக்கு வந்து விட்டனர். பெத்லியூராவின் டிவிஷனில் மிஞ்சியிருந்த துருப்புக்களெல்லாம் களத்துக்கு அனுப்பப்பட்டன.

ஆனால் ரயில்நிலையத்துக்கு அருகில், அணியில் ஏற்பட்டுக் கொண்டிருந்த உடைப்பை அவர்களால் அடைக்க முடியவில்லை. எப்படியாகிலும் டவுனைப் பிடித்துவிட வேண்டுமென்ற துணிவும் தீர்மானமும் உடைய செஞ்சேனை வீரர்கள் ஸ்டேஷனுக்குப் பக்கத்திலுள்ள தெருக்களில் பிரவேசித்தனர். அந்தத் தெருக்களைப் பாதுகாப்பதற்காக நின்று கொண்டிருந்த பெத்லியூராவின் மூன்றுவது ரெஜிமென்ட், நகர விளிம்பில் இருந்த தோட்டங்களைத் தனது கடைசி தளமாகக் கொண்டது. ஆனால் ஒரு சிறிய பயங்கரமான தாக்குதலால் முறியடிக்கப்பட்ட அவர்கள் நகரத்துக்குள் சிதறி ஓடத் தொடங்கினர். அவர்கள் மீண்டும் தங்களைத் திரட்டிக்கொண்டு, ஒரு புதிய நிலையை மேற்கொள்வதற்கு முன்னல், செஞ்சேனை வீரர்கள் தெருக்களில் குழுமி விட்டார்கள், அவர்கள் ஒவ்வொரு தெருவிலும் நின்று கொண்டிருந்த காவற்படையாளர்களைத் துப்பாக்கிகளின் பாய்னெட்டால் தாக்கிச் சிதறி ஓடச் செய்தனர்.

புருஸ்ஷாக் வீட்டின் நிலவறையில் அவனுடைய குடும்பமும் அண்டை வீட்டினரும் தஞ்சம் புகுந்திருந்தனர். ஆனால் அங்கு இருப்பது ஸெர்யோஷாவுக்கு வெறுப்பாயிருந்தது. எவர் என்ன சொன்ன போதிலும், அவன் செவிகொடுக்க மறுத்தான். அவனது அன்னை உருக்கமாக வேண்டிக்கொண்டதையும் பொருட்படுத்தாமல், அந்தக் குளிர்ச்சியான நிலவறையிலிருந்து ஏறி

வெளியே வந்தான். அந்தச் சமயத்தில் ''சகாய் தாச்சினீய்'' என்ற கவச மோட்டார் அந்த வீட்டுக்கு முன்னுல் கடகட வென்று ஒலித்துக்கொண்டும், நான்கு பக்கங்களிலும் சுட்டுக்கொண்டும் சென்றது. அதன் பின்னே, பீதிக்கு இரையான பட்டாளத்தினர் ஒழுங்குமுறை எதுவும் இல்லாமல் ஓடிக் கொண்டிருந்தனர். அந்தப் பெத்லியூரா படைவீரர்களில் ஒருவன் ஸெர்யோஷா வீட்டின் வெளிமுற்றத்தில் நுழைந்தான். அவன் தோட்டாக்களுடன் கூடிய பெல்ட்டையும் தலைக் கவசத்தையும் துப்பாக்கியையும் விரைவாக எடுத்து எறிந்தான். வேலியைத் தாண்டிக் காய்கறித் தோட்டத்தில் மறைந்தான். ஸெர்யோஷா வெளியே எட்டிப் பார்க்க எண்ணினுன். பெத்லியூரா சிப்பாய்கள், கவச மோட்டாரின் பாதுகாப்பில், தென்மேற்கு ரயில் நிலையத்தை நோக்கிச் செல்லும் சாலையில் ஓடிக் கொண்டிருந்தனர். டவுனை நோக்கிச் செல்லும் சாலை வெறிச் சென்று இருந்தது. அப்பொழுது, ஒரு செஞ்சேனை வீரன் ஸெர்யோஷாவின் பார்வையில் பட்டான். அவன் தரையின் மேல் படுத்துக்கொண்டு, சாலையில் நீட்டுப்போக்காகச் சுட்டான். அவனுக்குப் பின்னுல் இன்னொரு செஞ்சேனை வீரன் வந்தான்; மற்றும் ஒரு செம்படை வீரன் வந்தான்.... அவர்கள் அங்கு வந்து, தாழக் குனிந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டே, ஓடிவருவதை ஸெர்யோஷா பார்த்தான். வெயிலில் காய்ந்து கறுத்த சீனன் ஒருவன் ஓடிவந்தான். அவனது கண்கள்

வீங்கியிருந்தன. உள்சட்டையும் யந்திரத் துப்பாக்கியின் பெல்ட்டுகளும் அணிந்திருந்த அந்தச் சீனன், கரம் ஒன்றுக்கு ஒரு எறிகுண்டு விதம், தன்னைச் சிறிதளவும் மறைத்துக்கொள்ள முயலாமல் ஓடிக் கொண்டிருந்தான். அவர்களுக்கெல்லாம் முன்னால், ஒரு செம்படை வீரன் ஒரு இலேசான யந்திரத் துப்பாக்கியுடன் ஓடிக் கொண்டிருந்தான். இவனை ஒரு பையன் என்றே சொல்லலாம். நகரத்துக்குள் பிரவேசித்த முன்னணிச் செம்படைகளின் தோற்றம், ஸெர்யோஷாவை இன்ப வெறி கொள்ளச் செய்தது.

''தோழர்கள் நீடூழி வாழ்க!'' என்று உரக்கக் கோஷித்துக்கொண்டு, ஸெர்யோஷா சாலைக்குப் பாய்ந்து ஓடினான்.

எதிர்பாராத வகையில், ஓடிவந்த ஸெர்யோஷா மீது பாய்ந்து, அவனைத் தூக்கி எறிவதற்குத் துணிந்தான் அந்தச் சீனன். ஆனால் பையனது முகத்தில் துள்ளிய களிப்பைக் கண்ட பிறகு சீனன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

''பெத்லியூரா ஆட்கள் எங்கிருக்கிறார்கள்?'' என்று நெடுமூச்செறிந்து கொண்டு சீனன் பையனைப் பார்த்துக் கத்தினான்.

ஆனால் அவனது கேள்வி ஸெர்யோஷாவின் காதில் விழவில்லை. அவன் திரும்பவும் வெளி முற்றத்துக்கு ஓடி, பெத்லியூரா ஆள் எறிந்திருந்த துப்பாக்கியையும்தோட்டாக்களுடையபெல்ட்டையும் எடுத்துக்கொண்டு, செஞ்சேனை வீரர்களுக்குப் பின்னால் ஓடினான். தென்மேற்கு ஸ்டேஷனைத்

தாக்கிக் கைப்பற்றும் வரை, செஞ்சேனை வீரர்கள் ஸெர்யோஷாவைக் கவனிக்கவில்லை. ராணுவ தளவாடங்களும் உபயோகப் பண்டங்களும் ஏராளமாக ஏற்றப்பட்டிருந்த பல ராணுவ ரயில்களைப் பகைவர் கொண்டு செல்லமுடியாது செஞ்சேனை வீரர்கள் தடுத்தனர். பகைவர்கள் காட்டுக்குள் சென்று ஒளியும் வரை, அவர்களைச் செம்படையினர்கள்விரட்டினார்கள். அதன்பின் அவர்கள் ஓய்வு எடுத்துக்கொண்டு, தமது அணியைச் சீரமைத்துக் கொள்வதென்று முடிவு செய்தனர். அப்பொழுதே, அந்த இளம் யந்திரத் துப்பாக்கிக்காரன் ஸெர்யோஷாவை அணுகி, ஆச்சரியத்துடன் வினவினான்:

''தோழா, உன் ஊர் எது?''

''நான் இவ்விடத்தான்; நகரத்தில் வசிக்கிறேன்; உங்கள் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தேன்.''

செஞ்சேனை வீரர்கள் ஸெர்யோஷாவைச் சூழ்ந்தனர்.

அரைகுறையாகத் தெரிந்த ருஷ்ய மொழியில், சீனன் பேசலானான்:

''எனக்கு அவனைத் தெரியும். 'தோழர்கள் நீடு வாழ்க!' என்று கோஷம் கொடுத்தான். அவன் ஒரு போல்ஷெவிக், நல்ல பையன், நம்முடைய ஆள்.''

இவ்வாறு மகிழ்ச்சி ததும்பப் பேசிய சீனன், ஸெர்யோஷாவின் தோளைத் தட்டிக் கொடுத்தான்.

ஸெர்யோஷாவின் இருதயம் ஆனந்தத்தால் துள்ளியது. அவர்கள் அவனைத் தம்மில் ஒருவராக உடனடியாக ஏற்றுக்கொண்டுவிட்டனர். அவர்களுடன் சேர்ந்துநின்று, துப்பாக்கிப் பாய்னெட்டுத் தாக்குதல் மூலம் ஸ்டேஷனைக் கைப்பற்றுவதில் அவனும் பங்கெடுத்துவிட்டான்.

டவுனில் ஒரு கலகலப்பு உண்டாயிற்று. சோர்ந்திருந்த நகர மக்கள் நிலவறைகளிலிருந்தும் அடித்தளங்களிலிருந்தும் வெளியே வந்தார்கள்; முன் வாசல் கேட்டுகளின் அருகில் நின்று, டவுனுக்குள் பிரவேசித்த செஞ்சேனைப் படைகளின் பவனியைப் பார்த்தார்கள். அப்பொழுதுதான், ஸெர்யோஷாவின் தாயார் அன்தனீனா வஸீலியெவ்னாவும் அவனது சகோதரி வால்யாவும் அவன் செஞ்சேனையின் இதர வீரர்களுடன் செல்வதைக் கண்டனர். அவன் தலைக்குத் தொப்பி இல்லை; ஆனால் அவன் தோட்டாக்களை உடைய பெல்ட்டை தரித்திருந்தான்; அவனது தோளில் ஒரு துப்பாக்கி மாட்டப்பட்டிருந்தது.

அன்தனீனா வஸீலியெவ்னா ஆத்திரத்தில் தன் கரங்களை உயர்த்தினாள்.

அப்படியானால், அவளுடைய ஸெர்யோஷா இந்தப் போராட்டத்தில் சிக்கிவிட்டான். அவனுக்குத் தக்க தண்டனை கொடுக்க வேண்டும்! துப்பாக்கியும் கையுமாக நகரம் முழுவதும் பவனி செல்லும் துணிச்சலைப் பார்! இதன் விளைவாகப் பின்னால் தொல்லை உண்டாகும். அதற்கு மேல்,

அன்தனீஞ வஸீலியெவ்ஞவால் தன்னைக் கட்டுப் படுத்திக்கொள்ள முடியவில்லை.

''ஸெர்யோஷா! இந்தக்கணமே வீட்டுக்கு வா'' என்று அவள் இரைந்து கூவிஞள். ''போக்கிரிப் பையா! நீ எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று போதிக்கிறேன் வா. சண்டை போடுவதற்குக் கற்றுத் தருகிறேன் வா'' என்று கூறிக்கொண்டே, மகனைப் பிடித்து இழுத்துவர வேண்டுமென்ற உறுதியுடன் அவள் சாலைக்குச் சென்ருள்.

ஆஞல் ஸெர்யோஷா, அவளது அன்புக்குரிய மகன், அடிக்கடி அம்மாவிடம் அறை வாங்கிய மகன், இன்று அன்னையைக் கண்டிப்புடன் பார்த்தான். அவமானம் அடைந்தவஞய், மனது புண்பட்டவஞய், அவன் தாயாரைப் பார்த்து வெடுவெடுப்புடன் கூறிஞன்:

''சத்தம் போடாதே! இவர்களைவிட்டு நான் எங்கும் செல்லப் போவதில்லை.''

அவன் ஒருகணம்கூட நிற்காமல், தொடர்ந்து நடந்தான்.

அன்தனீஞ வஸீலியெவ்ஞவின் கோபம் அத்துமீறியது.

''உன் தாயாரை இப்படித்தான் நடத்துவாயா? இதற்குப்பின், வீட்டுக்கு வரத் துணியாதே!''

''நான் வரவில்லை!'' என்று ஸெர்யோஷா திரும்பிப் பார்க்காமல் கத்திஞன்.

அன்தனீஞ வஸீலியெவ்ஞ மனம் குழம்பியவளாய்ச் சாலையில் நின்று கொண்டிருந்தாள்.

மழையில் காற்றில் வெயிலில் அடிபட்ட வீரர்கள் புழுதிபடிந்தவர்களாக நடந்துசென்றனர்.

''அம்மா! பதறுதீர்கள்! உங்கள் மகனைக் கமிஸாராக்கிவிடுகிறோம்'' என்று ஒருவன் பலமான குரலில் வேடிக்கையாகப் பேசினான். அவனுடன் சென்ற பட்டாளத்தினர் அனைவரும் கொல்லென்று வெடிபடச் சிரித்தனர். அப்பொழுது, படையின் முன்வரிசை வீரர்களின் கூட்டு கானம் காற்றில் மிதந்துவந்தது:

''போர்முழக்கம் கேட்டீரோ? புறப்படுங்கள்
தோழர்களே
நேராகத் தோளுயர்த்தி நில்லுங்கள்
போராட!
வீரமிகு விடுதலையை வெற்றியொடு
பெற்றிடுவோம்!
தூரத்தில் முரசொலிக்கும்; தோழர்களே!
கேட்டீரோ!''

சகல வீரர்களும் அந்தக் கூட்டு இசையில் பங்குகொண்டனர். ஸெர்யோஷாவின் கணீரென்ற குரலும் அந்த இன்னிசைப் பெருக்கில் கலந்தது. ஆம், அவன் ஒரு புதிய குடும்பத்தைக் கண்டு விட்டான். அதில் ஒரு துப்பாக்கி அவனுடையது.

வக்கீல் லெஷ்சீன்ஸ்கிய் வீட்டு வாசலில் ஒரு வெண்மையான அட்டை தொங்கியது. அதில் ''புரட்சிக் கமிட்டி'' என்ற சொற்றொடர் பொறிக் கப்பட்டிருந்தது. அதன் அருகில் ஒரு கவர்ச்சி கரமான போஸ்டர். அதில், பார்ப்பவர் கண்



களை நேராக நோக்கிக்கொண்டு ஒரு செஞ்சேனை வீரன் நின்ருன். ''நீ செஞ்சேனையில் சேர்ந்துவிடா யா?'' என்ற வாசகத்தை அவனது விரல் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தது.

டிவிஷனின் அரசியல் இலாகா ஊழியர்கள் இரவு முழுவதும் வேலைசெய்து, இந்தப் போஸ் டர்களை நகரமெங்கும் ஒட்டியிருந்தார்கள். அவற் றுக்குப் பக்கத்தில் ஒரு அறிக்கை தொங்கிக் கொண்டிருந்தது. ஷெப்பெத்தோவ்க்காவின் உழைப்பாளி மக்களுக்குப் புரட்சிக் கமிட்டி விடுத்த அறிக்கை அது. அதன் வாசகம்:

''தோழர்களே! பாட்டாளி வர்க்கத் துருப் புக்கள் இந்த நகரத்தைப் பிடித்துவிட்டன. மீண்டும், சோவியத் அதிகாரம் நிலைகொண்டு விட்டது. ஒழுங்கைப் பராமரிக்க வேண்டு மென்று நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்கி ருேம். இரத்தவெறி பிடித்த கயவர்கள் தோற் ருேடி விட்டனர். அவர்கள் ஒருபொழுதும் திரும் பக் கூடாதென்பது உங்கள் விருப்பமாஞல், அவர் களை இறுதியாக அழித்துவிட வேண்டுமென்பது உங்கள் ஆசையாஞல், செஞ்சேனையில் சேருங்கள். உழைப்பாளி மக்களின் ஆட்சிக்கு உங்களது முழு ஆதரவையும் அளியுங்கள். இந்த நகரத்தின் ரா ணுவ நிர்வாக அதிகாரம் நகரிலுள்ள படையின் தலைவனிடம் உள்ளது. இதர ஆட்சிப் பொறுப் புக்களைப் புரட்சிக் கமிட்டி நிர்வகிக்கும்.

''கையொப்பம்: தாலீன்னிக்,
''புரட்சிக் கமிட்டியின் தலைவர்.''

லெஷ்சீன்ஸ்கியின் வீட்டில் புதுமாதிரியான மனிதர்கள் நடமாடினர்கள். நேற்றைய தினம் வரை, 'தோழர்' என்ற சொல்லை உச்சரித்தவ ரெல்லாம் தத்தம் உயிரையே விலையாகக் கொடுத் தனர். இன்று, எந்தப் பக்கம் திரும்பினலும், ''தோழர்'' என்ற சொல் இன்பத் தேனுகக் காதில் பாய்ந்தது. தோழர்! உள்ளத்தைப் பிணிக்கும் சொல்! இதயத்தின் அடிவாரத்தில் விவரிக்க முடியாத எழுச்சியை உண்டாக்கும் சொல்!

இந்த நாட்களில் தாலீன்னிக்குக்கு ஓய்வும் இல்லை, உறக்கமும் இல்லை. புரட்சி அதிகாரத் தை நிறுவனம் செய்யும் திருப்பணியில் அந்தத் தச்சன் கண்ணுங்கருத்துமாய் ஈடுபட்டிருந்தான்.

ஒரு சிறிய அறை; அதன் கதவில் தொங்கிக் கொண்டிருந்த துண்டுக் காகிதத்தில் ''கட்சிக் கமிட்டி'' என்ற வாசகம் பென்ஸிலால் எழுதி யிருந்தது. அந்த அறையில்தான், எந்தச் சந்தர்ப் பத்திலும் நிலைகுலையாத சித்தத்துக்கு உரியவளும் அமைதிக்கு நிலைக்களனுமான தோழர் இக்னுத்தி யேவா அமர்ந்திருந்தாள். சோவியத் அரசாங்க ஸ்தாபனங்களை அமைக்கும் பொறுப்பை டிவிஷ னின் அரசியல் இலாகா அவளிடமும் தாலீன்னிக் கிடமும் ஒப்படைத்திருந்தது.

ஒரு நாள் கழிந்தது. இப்பொழுது, அலுவலக ஊழியர்கள் தத்தம் மேஜைகள் முன் அமர்ந்து பணி புரிந்து கொண்டிருந்தார்கள். 'டைப்' அடிக் கும் மெஷீன் ஒன்று இடைவிடாது இயங்கிக் கொண் டிருந்தது. தேவைப் பொருட்கள் ஜனங்களுக்குக்

கிடைக்கச் செய்வதற்காக உணவுப் பொருள் கமிஸார் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டது. சுறு சுறுப்பாகச் செயல்படும் ஆற்றலை உடைய ரோஷக்காரன் திஷீத்ஸ்கி உணவுப் பொருள் அலுவலகத்தின் கமிஸாராக நியமிக்கப்பட்டான். உள்ளூரில் உள்ள சர்க்கரை உற்பத்திச் சாலையில் அவன் மெக்கானிக்கின் உதவியாளாக இதற்குமுன் வேலை பார்த்து வந்தான். அந்த ஆலையின் நிர்வாகிகள்மீது போர் தொடுப்பதென்ற உறுதியான முடிவுடன் அவன் செயல்பட்டான். அந்த நிர்வாகிகளுக்குப் போல்ஷெவிக்குகளிடம் அளவிட முடியாத வெறுப்பு உண்டு. எனினும் கையாலாகாதவர்களாய், காலம் மாறலாமென்ற கருத்தில் அவர்கள் அடங்கிக் கிடந்தனர்.

சீனி உற்பத்திசாலைத் தொழிலாளர் கூட்டத்தில் திஷீத்ஸ்கி பேசினன். கடுமை நிறைந்த குரலில், தயவு காட்டாத தோரணையில், அவன் நிலைமையை விளக்கினன்.

''கடந்த காலம் இறந்துவிட்டது; அது இனி மீளப் போவதில்லை'' என்று போலிஷ் மொழியில் பேசிய திஷீத்ஸ்கி பிரகடனம் செய்தான்; தன் கருத்தை வலியுறுத்துவதற்காக, மேடையில் ஒரு குத்துக் குத்தினன்.

''இந்தப் பத்தோத்ஸ்கி பிரபுவின் குலத்துக்காக நமது முன்னேர்களும் நாமும் வாழ்நாளெல்லாம் அடிமை வேலை செய்தது போதும், போதும்! நாம் அவர்களுக்கு மாளிகைகளைக் கட்டிக் கொடுத்தோம். மேன்மை தங்கிய பிரபுவோ, நாம் பட்

டினி கிடந்து சாகாமல் இருப்பதற்கு மட்டும், அரைப் பட்டினி ஊதியம் அளித்தான்.

''இந்தப் பத்தோத்ஸ்கி பிரபுக்களும் ஸங்கூஷ்கோ இளவரசர்களும் எத்தனை ஆண்டுகளாக நம்மீது குதிரை சவாரி செய்து வந்திருக்கின்றனர்! பத்தோத்ஸ்கி, உக்ரேனியர்களையும் ருஷ்யர்களையும் மிதித்துத்துவைத்ததைப் போலவே, போலிஷ் தொழிலாளரையும் ஒடுக்கிச் சுரண்டவில்லையா? எனினும், சோவியத் ஆட்சி போலிஷ் தொழிலாளரை நசுக்கி விடுமென்ற புரளியை இந்தப் பத்தோத்ஸ்கி பிரபுவின் கைக்கூலிகள் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்!

''தோழர்களே! இது பொய்! சுத்த அபத்தம்! வெவ்வேறு தேசீய இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், இன்று அனுபவிக்கும் சுதந்திரத்தை என்றுமே கண்டதில்லை. தொழிலாளர் அனைவரும் தோழர்கள், உடன் பிறந்த சோதரர்கள்! ஆனால் பிரபுக்களை நாம் சும்மாவிடமாட்டோம்! அவர்களது கொட்டத்தை ஒடுக்கப் போகிறோமென்பது திண்ணம்.''

மீண்டும் அவனது கரம் மேடையைக் குத்தியது.

''சகோதரர்களுக்கு இடையே சிண்டுமுடித்து விட்டுச் சண்டையைத் தூண்டி மண்டைகள் உடையச் செய்தது யார்? பன்னூறு ஆண்டுகளாக போலிஷ் விவசாயிகளைத் துருக்கியருக்கு எதிராகப் போர்க்களத்துக்குப் படை திரட்டி அனுப்பியவர்கள் அரசர்களும் பிரபுக்களும் அல்லவா? அவர்கள்

எப்பொழுதுமே, தேசங்களுக்கு இடையே பகையைத் தூண்டிவிட்டனர்; விரோதத்தை வளர்த்து வந்தனர். அவர்களால் ஏற்பட்ட துன்ப துயரத்தையெல்லாம் எண்ணிப்பாருங்கள்! அவர்களது தீவினைகளால் பெருக்கெடுத்தோடிய இரத்த ஆறுகளையெல்லாம் கற்பனை செய்து பாருங்கள்! இவற்றால் எல்லாம் ஆதாயமடைந்தவர் யார்? ஆனால் சடுதியில் இந்தத் தீமைகளுக்கு ஒரு முடிவு உண்டாகிவிடும். இனி இந்த விஷப்பூச்சிகள் பிழைக்க முடியாது. முதலாளிகள் திகிலடையும் வண்ணம், போல்ஷெவிக்குகள் ஒரு கோஷத்தை முழக்கியிருக்கிறார்கள். 'உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!' என்பதே அந்தக் கோஷம். அதில் தான் நமது விமோசனம் அடங்கியிருக்கிறது. நல்லதொரு எதிர்காலம் — எல்லாத் தொழிலாளரும் சோதரராக வாழும் பொற்காலம்—உதயமாகும் என்ற நம்பிக்கையைத் துளிர்க்கச் செய்யும் தாரக மந்திரம் இதுவே. தோழர்களே, கம்யூனிஸ்ட் கட்சியில் சேருங்கள்.

''ஒருநாள் போலந்தில் குடியாட்சி மலரும் என்பது திண்ணம். ஆனால் அது சோவியத் குடியரசாகத்தான் திகழும். அதில் பத்தோத்ஸ்கிக்கள் இருக்கமாட்டார்கள்; ஏனெனில் அவர்கள் வேரோடு கெல்லி எறியப்படுவார்கள். நாமே சோவியத் போலந்தின் எஜமானர்களாக இருப்போம். பிரோனிக் ப்தஷீன்ஸ்கியை நீங்கள் அறிவீர்கள். புரட்சிக் கமிட்டி அவரையே பாக்டரியின் கமிஸாராக நியமித்திருக்கிறது. 'நாம் ஒன்றுமில்லாத

வராயிருந்தோம்; பலவும் உடையவர் ஆவோம்' ஆனந்தப் பள்ளுப் பாடுவோம், தோழர்களே! ஆனால் ஒளிந்துகொண்டிருக்கும் பாம்புகளின் சீறலுக்குச் செவிகொடுத்து விடாதீர்கள். தொழிலாளி வர்க்கத்தின் லட்சியத்தில் நாம் நம்பிக்கை கொள்வோமாக! உலகம் முழுமையும் சர்வ தேச மக்களின் சகோதரத்துவத்தை ஸ்தாபிப்போம்!''

அவன் அந்தரங்க சுத்தியுடன் பேசினான்; ஆர்வப்பெருக்குடன் உரைநிகழ்த்தினான். அந்த எளிய தொழிலாளியுடைய இதயத்தின் அடிவாரத்திலிருந்து அந்தச் சொற்கள் பீறிட்டுக் கொண்டு வந்தன.

அவன் மேடையிலிருந்து இறங்கியபொழுது, கூட்டத்திலிருந்த இளைஞர்களும் வாலிபர்களும் உற்சாகத்துடன் கோஷித்தனர்; ஆரவாரம் செய்தனர். எனினும், வயதில் மூத்த தொழிலாளர்கள் தம் கருத்தைத் தெரிவிப்பதற்குத் தயங்கினர்: நாளைக்கே போல்ஷெவிக்குகள் இந்த நகரத்தைக் கைவிட நேர்ந்தால், டவுனில் தங்கவேண்டிய மக்கள் தாம் பேசிய ஒவ்வொரு துடுக்கான வார்த்தைக்கும் கொடுமையான தண்டனை அனுபவிக்கவேண்டும். அப்படி நடக்காதென்று யார் தான் சொல்லமுடியும்? தூக்குமேடையிலிருந்து தப்பினாலும், வேலையை இழந்து தவிக்கும் நிலைமை நிச்சயமாக ஏற்படும்.

கல்வி இலாகாக் கமிஸார் செர்னெப் பீஷ்ஸ்கி திறமான உடற்கட்டை உடைய ஒல்லியான

தோழர். இந்த ஊரில் இதுவரையில் போல்ஷெ விக்குகளுடன் சேர்ந்த ஒரே பள்ளி ஆசிரியர் அவரே.

புரட்சிக் கமிட்டியின் கட்டிடத்துக்கு எதிரில், விசேஷக் கம்பெனி தங்கியிருந்தது. அந்தக் கம்பெனியைச் சேர்ந்த சிப்பாய்கள், புரட்சிக் கமிட்டியை முறைப்படி காவல்புரிந்தனர். இரவு நேரத்தில், புரட்சிக் கமிட்டிக் காரியாலயத்தின் வாசல் அருகில், தோட்டத்தில், ஒரு ''மாக்ஸீம்'' யந்திரத் துப்பாக்கி தயாராய் நிறுத்தப் பட்டிருந்தது. அதன் வெடிக் குழாயிலிருந்து ஒரு வெடிமருந்து பெல்ட் தொங்கிக் கொண்டிருந்தது. அதற்கு அருகில், இரண்டு காவற்காரர்கள் துப்பாக்கி சகிதமாக நின்றனர்.

புரட்சிக் கமிட்டியின் அலுவலகத்துக்கு வந்து கொண்டிருந்த தோழர் இக்ஞத்தியேவா, காவல் காத்து நின்ற இரு சிப்பாய்களில் ஒருவனிடம் சென்று, ''தோழரே! உங்கள் வயது என்ன?'' என்று கேட்டாள்.

''பதினேழு நடக்கிறது.''

''நீங்கள் இவ்வூர்வாசியா?''

செஞ்சேனை வீரன் புன்னகை செய்தான்.

''ஆமாம். நேற்றைக்கு முன்தினம், போராட்டம் நடந்துகொண்டிருந்த பொழுதுதான், நான் செஞ்சேனையில் சேர்ந்தேன்.''

இக்ஞத்தியேவா அவனது முகத்தை ஆராய்ந்தாள்.

''உங்கள் தந்தை என்ன செய்கிறார்?''

''அவர் எஞ்சின் டிரைவருக்கு உதவியாக வேலை செய்கிறார்.''

அந்தச் சமயத்தில், ராணுவக் கோட்டு அணிந்த ஒருவனுடன், தாலீன்னிக் அங்கு வந்தான்.

இக்னாத்தியேவா அவனைப் பார்த்துக் கூறினாள்:

''இதோ பார்! கம்யூனிஸ்ட் இளைஞர் சங்கத்தின் வட்டாரக் கமிட்டிப் பொறுப்பை நிர்வகிப்பதற்குத் தகுதியான இளைஞனைக் கண்டு பிடித்துவிட்டேன். இவன் உள்ளூர்வாசி.''

தாலீன்னிக் ஸெர்யோஷாவை விரைவாக நோக்கினான். ஆம், அது ஸெர்யோஷாதான்.

''ஓ! ஆமாம்! இவன் புருஸ்ஷாக்கின் மகன் அல்லவா? நல்லது. பொறுப்பை ஏற்றுக்கொண்டு, இளைஞர்களைத் திரட்டு.''

ஸெர்யோஷா அவர்களை வியப்புடன் நோக்கினான்.

''நான் இந்தப் படையில் சேர்ந்திருக்கிறேனே?''

''பரவாயில்லை. நாங்கள் அதைப் பற்றிக் கவனித்துக் கொள்கிறோம்'' என்று படிக்கட்டில் ஏறிக் கொண்டிருந்த தாலீன்னிக் திரும்பிப் பார்த்துக் கூறினான்.

இரண்டாவது நாள் மாலையில், உக்ரேனிய கம்யூனிஸ்ட் இளைஞர் சங்கத்தின் ஸ்தலக் கிளை அமைக்கப்பட்டது.

நகரத்தில் திடீரென்று தோன்றி, வேகமாகப் பரவிய புதுவாழ்வின் சுழலில் ஸெர்யோஷா மூழ்கினன். அவனது நேரம், சக்தி, கருத்து முத லிய அனைத்தையும் அந்தப் புதிய வாழ்வு பூர்ண மாகத் தன் வசப்படுத்திக்கொண்டது. எனவே, அவனது குடும்பம் கூப்பிடு தூரத்தில் வசித்த பொழுதிலும், தனக்குக் குடும்பம் இருக்கிறது என்பதையே அவன் மறந்துவிட்டான்.

இப்பொழுது ஸெர்யோஷா, ஒரு போல்ஷெ விக். கம்ஸமோல் எனப்படும் கம்யூனிஸ்ட் இளை ஞர் சங்கத்தில் அங்கத்தினராகவும் அதன் ஸ்தலக் கமிட்டிக் காரியதரிசியாகவும் அவன் விளங்கு வதற்கு அத்தாட்சியாக, உக்ரேனிய கம்யூனிஸ்ட் கட்சியின் கமிட்டி அவனுக்கு ஒரு பத்திரத்தை வழங்கியிருந்தது. அவன் பத்தாவது தடவையாக அந்தப் பத்திரத்தைப் பையிலிருந்து எடுத்துப் பார்த்தான். இதைப்பற்றி எவருக்காவது சந் தேகம் இருந்தால், அவனுடைய பெல்ட்டிலிருந்து தொங்கும் கைத்துப்பாக்கி இருக்கவே இருக் கிறது. ஆம், அந்தக் கவர்ச்சியான கைத்துப்பாக்கி, அன்பு நிறைந்த பாவெல் அளித்த அரிய பரிசு தான். அதற்கு ஒரு உறை வேண்டுமல்லவா? ஏதோ ஒரு வகையாகக் கித்தானில் உறை செய்து அதில் அந்த ஆயுதத்தை வைத்திருந்தான்.

புரட்சிக் கமிட்டி அளித்த வேலைகளைச் செய் தே, ஸெர்யோஷாவின் நேரம் கழிந்தது. இன் றும், இக்னத்தியேவா அவனுக்காகக் காத்திருந் தாள். அவர்கள் ஸ்டேஷனில் உள்ள டிவிஷனின்

அரசியல் இலாகா அலுவலகத்துக்குச் சென்று, புரட்சிக் கமிட்டிக்காகப் பத்திரிகைகளும் புத்தகங்களும் கொண்டுவர வேண்டும். ஸெர்யோஷா கட்டிடத்திலிருந்து தெருவுக்கு விரைந்து சென்றான். அங்கு, அரசியல் இலாகாவின் ஆள் ஒருவன், மோட்டார் காரோடு காத்திருந்தான்.

முதலாவது சோவியத் உக்ரேனிய டிவிஷனின் தலைமைக் காரியாலயமும் அரசியல் இலாகாவும், ரயில் பெட்டிகளில் இருந்து செயல்பட்டன. எனவே, இருவரும் ஸ்டேஷனுக்குக் காரில் சென்றனர். அந்தப் பிரயாணத்தின் பொழுது, இக்னத்தியேவா ஸெர்யோஷாவைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தாள்.

''உன் வேலை எப்படி நடக்கிறது? இளம் கம்யூனிஸ்ட் ஸ்தாபனத்தை அமைத்து விட்டாயா? நீ உன் நண்பர்களாக உள்ள தொழிலாளர் குடும்பத்து இளைஞர்களைக் கம்ஸமோலில் சேரும்படி செய்யவேண்டும். நமக்குச் சீக்கிரத்தில் ஒரு கம்யூனிஸ்ட் இளைஞர் கோஷ்டி தேவைப்படும். நாளைக்கு நாம் கம்ஸமோல் அறிக்கை ஒன்றைத் தயாரித்து அச்சடிப்போம். அதன்பின், தியேட்டரில் ஒரு பெரிய இளைஞர் கூட்டத்தை நடத்துவோம். நாம் அரசியல் இலாகா ஆபீஸை அடைந்தவுடன், நான் உன்னை ரீத்தா உஸ்திஞேவிச்சுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். அவள் இளைஞருடன் வேலை செய்வதாக என் ஞாபகம்.''

ரீத்தாவுக்குப் பதினெட்டு வயது. அவளுடைய கருங்கூந்தல் திருத்தமாகக் கத்தரித்துச்

சீவிவிடப்பட்டிருந்தது. அவள் ஒரு புதிய ராணுவச் சொக்காயை அணிந்திருந்தாள். அதில் ஒரு குறுகலான தோல் பெல்ட் பொருந்தியிருந்தது. அவள் ஸெர்யோஷாவுக்குப் பல யோசனைகளைக் கூறினுள்; அவனுக்கு உதவி செய்வதாகவும் அவள் உறுதிகூறினுள். அவனிடம் ஏராளமான புத்தகங்களையும் செய்திப் பத்திரிகைகளையும் கொடுத்தாள். அவற்றில், ஒரு புத்தகம் மிகவும் முக்கியமானதாயிருந்தது. அதுவே கம்ஸமோலின் திட்டத்தையும் விதிகளையும் எடுத்துரைக்கும் பிரசுரம்.

இரவில், ஸெர்யோஷா புரட்சிக் கமிட்டிக் காரியாலயத்துக்குத் திரும்பிய பொழுது, நேரம் அதிகமாகிவிட்டது. அங்கு, வாசலில், அவனுக்காக வால்யா காத்து இருப்பதைக் கண்டான்.

''நீயே உன்னைப்பற்றி வெட்கப்பட வேண்டும்! இந்த மாதிரி, வீட்டுக்கு வராமல் இருப்பதின் பொருள் என்ன? அம்மா அழுது அழுது, அவளுடைய விழிகள் பிதுங்கிவிடும் போலிருக்கின்றன. அப்பாவுக்கு உன்னிடம் ரொம்பக் கோபம். ஒரு பயங்கரமான தகராறு நடப்பது நிச்சயம்.''

''அதெல்லாம் நடக்காது, வால்யா. எனக்கு வீட்டுக்கு வர நேரமில்லை; உண்மையாகச் சொல்கிறேன், அவகாசமே கிடைக்கவில்லை. இன்று இரவும் நான் வரமாட்டேன். ஆனுல் நீ வந்ததில் எனக்கு மகிழ்ச்சி; ஏனென்ருல் உன்னேடு பேச வேண்டும். வா, உள்ளே போவோம்.''

''அண்ணன் தான் பேசுகிருனு?'' என்று அவள் அதிசயித்தாள். அவன் முற்றிலும் மாறிவிட்டான்.

அவனிடம் ஊக்கமும் உத்வேகமும் குமிழிவிட்டுக் கொண்டிருந்தன.

அவள் இருக்கையில் அமர்ந்தவுடனேயே, ஸெர்யோஷா விஷயத்துக்கு வந்துவிட்டான்.

''வால்யா, நிலைமை இதுதான். நீ கம்ஸமோலில் சேர வேண்டும். அது என்னவென்று உனக்குத் தெரியாதா? அதுதான் கம்யூனிஸ்ட் இளைஞர் சங்கம். நான்தான் இங்கு அந்தச் சங்கத்தை நடத்துகிறேன். நீ என்னை நம்பவில்லையா? சரி! இதைப்பார்!''

வால்யா அந்தக் காகிதத்தைப் படித்துவிட்டு, குழப்பத்துடன் அண்ணனை நோக்கினாள்.

''கம்ஸமோலில் நான் என்ன செய்ய முடியும்?''

ஸெர்யோஷா தன் முன்கைகளை விரித்தான்.

''அன்புள்ள பெண்ணே! மலை மலையாய் வேலை இருக்கிறது! என்னைப் பார். வேலை மிகுதியாக இருப்பதால் இரவில் தூங்குவதேயில்லை. நாம் பிரசாரம் செய்ய வேண்டும். சீக்கிரத்தில் தியேட்டரில் கூட்டம் நடத்த வேண்டுமென்றும், அதில் சோவியத் ஆட்சியைப்பற்றிப் பேச வேண்டுமென்றும் இக்னத்தியேவா சொல்கிறாள். நான் அந்தக் கூட்டத்தில் பேச வேண்டுமென்றும் அவள் கூறுகிறாள். ஆனால் நான் பேசக் கூடாதென்பது என் கருத்து. எனக்கு ''மேடைப் பேச்சு'' வராது. நான் பேசினால், அது ஒரே அவியலாகத்தான் இருக்கும்; எந்தக் கருத்தும் எவருக்கும் விளங்காது.

அது கிடக்கட்டும். நீ கம்ஸமோலில் சேர்வதைப் பற்றி என்ன சொல்கிறுய்?''

''என்ன சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லே. நான் சேர்ந்தால், அம்மா என்னுடன் சண்டைக்கு வருவாள்.''

''இம்மாதிரிக் காரியங்களில் அம்மாவைப் போல நடந்து கொள்ளாதே, வால்யா!'' என்று ஸெர்யோஷா அவளை வற்புறுத்தினன். ''அம்மாவுக்கு விஷயம் புரியவில்லே. தன்னுடைய குழந்தைகள் தன் பக்கத்தில் இருக்க வேண்டுமென்பதில்தான் அவளுக்கு அக்கறை. ஆனல் அவள் சோவியத் ஆட்சியை எந்த வகையிலும் எதிர்க்கவில்லே. அதற்கு மாருக, அவள் அதை முழுமனதுடன் ஆதரிக்கிருள். ஆனல் ஏனையோர் வீட்டுப் பிள்ளைகள் சண்டையில் சேர்ந்தால் நல்லது என்று அவள் நினைக்கிருள். இது நியாயமா? ஷுஹ்ரய் நம்மிடம் என்ன சொன்னர் என்பதை மறந்துவிட்டாயா? பாவெலேப் பார். அவன் அம்மா என்ன சொல்வாள் என்று சிந்தித்துக் கொண்டிருந்தானு? நம் வாழ்வைச் செம்மையாக அமைத்துக் கொள்ளும் உரிமை இளேஞராகிய நமக்கு உண்டு. அந்த உரிமைக்காக நாம் போராட வேண்டிய நேரம் இது. வால்யா, என் கண்ணே! நீ மறுக்கக் கூடாது. நீ சேர்ந்தால் அது எவ்வளவு நேர்த்தியாயிருக்குமென்பதை எண்ணிப்பார். நீ பெண்கள் மத்தியில் வேலே செய்யலாம்; நான் ஆடவர் மத்தியில் வேலே செய்கிறேன். ஆமாம்! அந்தச் செந்தலேச் சாத்தானே, கிலீமை நான் இன்றே

இதில் இழுத்துப்போட வேண்டும். சரி, வால்யா, நீ என்ன சொல்கிருய்? நீ எங்களோடு சேர்வாயா, மாட்டாயா? என்னிடம் ஒரு சிறு பிரசுரம் இருக்கிறது. அதிலிருந்து கம்ஸமோல் பற்றிய சகல விஷயங்களையும் நீ விளக்கமாகப் புரிந்துகொள்ளலாம்.''

அவன் கம்ஸமோல் விதிகள் பற்றிய சிறு பிரசுரத்தைத் தன் சட்டைப்பையிலிருந்து எடுத்து அவளிடம் கொடுத்தான்.

ஆனல், ''பெத்லியூரா திரும்பிவந்தால், என்ன ஆவது?'' என்று தாழ்ந்த சுருதியில் வால்யா கேட்டாள். அப்பொழுது, அவளது கண்கள் அண்ணனின் முகத்தையே நோக்கிக் கொண்டிருந்தன.

ஸெர்யோஷாவுக்கு இந்த எண்ணம் இதுவரை தோன்றவில்லை. எனவே, அவன் ஒரு விஞடி யோசனை செய்தான்.

''பெத்லியூரா வந்தால், நான் பிறருடன் போய்விடுவேன். ஆனல் உன் கதி என்ன? ஆம். அம்மாவுக்கு மனக்கவலை ஏற்படும்'' என்று கூறிவிட்டு, அவன் மௌனமாயிருந்தான்.

''ஸெர்யோஷா, அம்மாவுக்கோ பிறருக்கோ தெரியாமல் என்னைச் சேர்த்துக்கொள்வாயா? ஆம். உனக்கும் எனக்கும்தான் தெரியவேண்டும். உனக்கு உதவிதானே தேவை. பிறருக்குத் தெரியாத வகையில் நான் செய்கிறேன். இதுதான் சிறந்த வழி.''

''உன் யோசனைதான் சிறந்ததென்று நானும் நினைக்கிறேன், வால்யா.''

அந்த நேரத்தில், இக்ஞத்தியேவா அறைக்குள் பிரவேசித்தாள்.

''இது என் தங்கை வால்யா. தோழர் இக்ஞத்தியேவா, கம்ஸமோலில் சேர்வதைப்பற்றி அவளுடன் பேசினேன். அவள் அங்கத்தினராவதற்குத் தகுதியானவள். ஆனல் எங்கள் தாயார், இடையூறு செய்வாள். நாம், ஒருவருக்கும் தெரியாமல், வால்யாவை அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளலாமா? நாம் ஒருவேளை இந்த டவுனைக் கைவிட நேரிடலாம். நான் செஞ்சேனை வீரர்களுடன் போய்விடுவேன். ஆனல் அம்மாவுக்குக் கஷ்டமாயிருக்குமென்று வால்யா அஞ்சுகிருள்.''

ஒரு நாற்காலியின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு, ஸெர்யோஷா கூறியதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த இக்ஞத்தியேவா, ''ஆம்; உங்களுடைய யோசனையே சிறந்தது'' என்று சொல்லித் தன் உடன்பாட்டைத் தெரிவித்தாள்.

தியேட்டர் நிறையக் கூட்டம்; எங்கும் இளைஞருக்கே உரிய ஆவேசப் பேச்சின் ஆரவாரம். நகரெங்கும் ஒட்டியிருந்த சுவரொட்டிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, இளம்பருவத்து ஆண்களும் பெண்களும் தியேட்டரில் குழுமியிருந்தனர். சீனி உற்பத்திச் சாலையின் துளைக் கருவி இசைக்குழு வாசித்துக்கொண்டிருந்தது. கூட்டத்தில், உள்ளூர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும், மாண

விகளும், ஆரம்பப் பள்ளியில் கற்றுவரும் சிறு வர்களுமே அதிகமாயிருந்தனர். அந்த மாணவர் களுக்குக் கூட்டத்தில் நிகழவிருக்கும் பேச்சுக்களை விட, அவற்றைத் தொடர்ந்து நடக்கவிருக்கும் நாடகத்தில்தான் அதிக சிரத்தை இருந்தது.

கடைசியில் திரை உயர்ந்தது. ஜில்லாக் கமிட்டியின் செயலாளனுகிய தோழர் ராஸின் மேடையில் தோன்றினன். அவன் அப்பொழுது தான் அந்த ஊருக்கு வந்தவன்.

ஒல்லியாகவும் குள்ளமாகவும் கூரிய மூக்கு டனும் இருந்த அந்த மனிதனை எல்லோரும் கவ னமாக நோக்கினர்கள். அவனது பேச்சையும் கூட்டத்தினர் உன்னிப்பாகக் கேட்டார்கள். தேசம் முழுவதும் வியாபித்துள்ள போராட்டத் தைப் பற்றி அவன் எடுத்துரைத்தான். கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவாகத் திரண்டெழும்படி அவன் இளைஞர்களை அறைகூவி அழைத்தான். அனுபவம் வாய்ந்த பேச்சாளனைப் போல அவன் உரை நிகழ்த் தினன். ''வைதீக மார்க்ஸீயவாதிகள்'', ''சோஷல்-ஷோவினிஸ்டுகள்'' போன்ற சொற்றெடர்களை அவன் அளவுக்கு மீறி உபயோகித்தான். அந்த வாசகங்களைக் கூட்டத்தினரால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனினும், அவன் பேச்சை முடித்த பொழுது, அவர்கள் ஆர்வத்துடன் ஆரவாரம் செய்தார்கள். முடிவில் ஸெர்யோஷாவுக்குத் தன்னை அடுத்துப் பேசும் உரிமையை அளித்து விட்டு அவன் அவ்விடத்திலிருந்து கிளம்பிப் போனன்.

ஸெர்யோஷா அஞ்சிய மாதிரியே நிகழ்ந்தது. கூட்டத்துக்கு முன்னால் மேடையில் நின்ற பொழுது, என்ன சொல்வதென்றே அவனுக்குத் தெரியவில்லை. அவன் கொஞ்ச நேரத்துக்கு மன வேதனையுடன் தடுமாறிக்கொண்டிருந்தான். அப்பொழுது, கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய குழுவினரில் ஒருத்தியான இக்னுத்தியேவா, ''கம்ஸமோல் ஸ்தாபனம் அமைப்பதைப்பற்றி விளக்கு'' என்று மெல்லிய குரலில் கூறி உதவினுள்.

உடனே, ஸெர்யோஷா அந்த விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினுன்.

''தோழர்களே! நீங்கள் எல்லாவற்றையும் கேட்டுவிட்டீர்கள். நாம் இப்பொழுது ஸ்தாபனம் ஒன்றை அமைக்க வேண்டும். இதை ஆதரிப்பவர் யார் யார்?''

கூட்டத்தில் அமைதி நிலவியது. இந்த இக்கட்டான நிலைமையை உணர்ந்த ரீத்தா உஸ்தினேவிச் உரை நிகழ்த்த முன்வந்தாள். மாஸ்கோவில் இளைஞர்கள் எப்படி ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்படுகிருர்களென்பதை அவள் விவரித்தாள். அந்தச் சமயத்தில், என்ன செய்வதென்று தெரியாமல், மனம் குழம்பிய ஸெர்யோஷா ஒரு பக்கமாக நின்றுகொண்டிருந்தான்.

ஸ்தாபன அமைப்புக் கூட்டம் ஆதரவு தரவில்லையே என்று அவன் ஆத்திரப்பட்டான், எரித்து விடுவான் போலக் கூட்டத்தை நோக்கினுன். இளைஞர்கள் ரீத்தாவின் பேச்சுக்குச் செவி கொடுக்கவில்லை. மேடைப் பேச்சாளரை இழி

வாக நோக்கிக்கொண்டே, ஸலிவானவ் லீஸா விடம் குசுகுசுவென்று பேசியதை ஸெர்யோஷா கண்டான். முன்வரிசையில், மேல்வகுப்பு மாண விகள், பவுடர் அப்பிய முகங்களுடன், சுற்றுமுற் றும் பசப்பு நிறைந்த பார்வைகளை வீசிக்கொண் டே, ஒருவருக்கொருவர் மெல்லிய குரலில் உரை யாடிக் கொண்டிருந்தனர். மூலையில், பின்மேடைக் குச் செல்லும் படிக்கட்டின் அருகில், செஞ்சேனை இளைஞர் சிலர் அமர்ந்திருந்தனர். அவர்களிடை யே, தனக்கு அறிமுகமான இளம் யந்திரத் துப் பாக்கிக்காரனை ஸெர்யோஷா கண்டான். மேடை யின் விளிம்பில் அமர்ந்திருந்த இளைஞனுக்கு இருப் புக்கொள்ளவில்லை; நிம்மதியில்லாதவனாக அசைந் தாடிக் கொண்டிருந்தான்; பள பள வென்று மின்னும் உடையில் காட்சியளித்த லீஸாவையும் ஆன்யா ஆத்மோவ்ஸ்க்காயாவையும் வெளிப் படையான வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந் தான். லீஸாவும் ஆன்யாவும் கொஞ்சமும் கூச்ச நாச்சமில்லாமல், தம்முடன் வந்தவர்களுடன் சுவையான சம்பாஷணை நடத்திக் கொண்டிருந் தனர்.

ரீத்தா, தன் பேச்சுக்கு எவரும் செவி கொ டுக்கவில்லை என்பதை உணர்ந்து, அதை விரைவில் முடித்துக்கொண்டு அமர்ந்துவிட்டாள். அடுத்து இக்னத்தியேவா பேசினாள். அவளது நிதானமான பேச்சு கூட்டத்தினர் இடையே அமைதியை ஏற்படுத்தியது.

''தோழர்களே! இங்கு இன்று இரவு [illegible] பேசுவதைப்பற்றி நீங்கள் ஒவ்வொருவரு[illegible] தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் யோசனை கூறுகிறேன். உங்களில் சிலர், புரட்சியின் பார்வையாளராக மட்டும் இல்லாமல், அதன் தீவிரப் பங்காளராக மாறுவீர்களென்று நான் உறுதியாக நம்புகிறேன். உங்களை வரவேற்றுச் சேர்த்துக் கொள்வதற்கு, நாங்கள் தயார்; கதவுகளைத் திறந்தே வைத்திருக்கிறோம். மற்றப்படி முடிவுசெய்ய வேண்டியது நீங்கள்தான். நாங்கள் உங்களது கருத்தை அறிய ஆவலாயிருக்கிறோம். ஏதாவது கூற விரும்பும் எவரும் மேடைக்கு வரலாமென்பதை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். மேடைக்கு வந்து, உங்கள் கருத்தை அறிவிக்கவும்.''

மீண்டும், ஹாலில் அமைதி நிலவியது. அதன் பிறகு பின்பக்கத்திலிருந்து ஒரு குரல் வந்தது:

''நான் பேச விரும்புகிறேன்!''

கொஞ்சம் மாறுகண் பார்வை கொண்ட இளைஞன், இளங்கரடியின் பருத்த வடிவத்தைக் கொண்ட மீஷா லெவ்ச்சுக்கோவ் மேடைக்கு வந்தான்.

''இன்றுள்ள நிலைமையில், நாம் போல்ஷெவிக்குகளுக்கு உதவித்தாக வேண்டும். நான் தயார். ஸெர்யோஷாவுக்கு என்னைத் தெரியும். நான் கம்ஸமோலில் சேர்கிறேன்.''

ஸெர்யோஷாவின் முகம் பிரகாசித்தது. அவன் மேடையின் மையத்துக்குப் பாய்ந்தான்.

''பாருங்கள், தோழர்களே! மீஷாவிடம் முழு நம்பிக்கை கொள்ளலாம் என்று நான் பல முறை கூறிவந்திருக்கிறேன். அவனுடைய தந்தை, ரயில்வேயில் ஒரு சுவிச்சுக்காரர். அவரை ஒரு ரயில் பெட்டி அரைத்துக் கொன்றது. அதனுல் தான், மீஷாவுக்குப் படிக்கமுடியவில்லை. அவன் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்காவிட்டா லும், நமது காரியத்தைப் பொறுத்தமட்டில் என்ன செய்ய வேண்டுமென்பதை உடனே புரிந்து கொண்டு விட்டான்.''

ஹாலில் ஒரே அமளி. கவனமாக வாரிவிடப் பெற்ற கூந்தலை உடைய ஒரு இளைஞன் பேச விரும் பினுன். அவன் தான் உள்ளூர் மருந்துக் கடைக் காரனின் மகன், உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவன், ஒக்குஷெவ். அவன் தன் சட்டையைப் பிடித்திழுத்துக்கொண்டே பேசினுன்:

''தோழர்களே! நான் பேசத்துணிந்து இங்கு வந்ததற்கு மன்னிக்கவேண்டும். நாம் என்ன செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறுர்கள் என் பது எனக்குப் புரியவில்லை. நாம் அரசியலில் நுழையவேண்டுமா? அப்படியானுல், நாம் படிப் பது எப்பொழுது? நாம் பள்ளிப் படிப்பை முடிக்கவேண்டாமா? விளையாட்டுக் கழகமாயிருந் தால், நாம் கூடிப் படிப்பதற்கு ஏற்ற சங்கமா யிருந்தால், அது வேறு விஷயம். ஆனுல் அரசிய லில் நுழைவதென்றுல், பிற்பாடு தூக்குமேடை ஏறவேண்டிய ஆபத்தை வருவித்துக்கொள்வ தாகும். நம்மில் எவரும் இதற்கு ஒத்துக்கொள்ள

மாட்டோமென்பதை வருத்தத்துடன் கூற விரும்புகிறேன்.''

அவன் மேடையிலிருந்து இறங்கித் தன் இருக்கையில் அமர்ந்தபொழுது, ஹாலில் பலர் சிரித்தனர். இளம் யந்திரத் துப்பாக்கி வீரன் அடுத்தாற்போலப் பேசிஞன். ஆத்திரத்தின் குறிகளுடன், குல்லாயை நெற்றிமீது இழுத்து விட்டுக் கொண்டு, கூட்டத்தின்மீது ஒரு பொல்லாத பார்வையை வீசிய அந்த இளைஞன், ''விஷப்பூச்சிகளே! எதைப் பார்த்துச் சிரிக்கிறீர்கள்?'' என்று கத்திஞன்.

அவனது இரு கண்களும் எரிதழல்களாகக் காட்சியளித்தன. கோபத்தால் அவனது மெய்யெல்லாம் பதறியது. ஒரு ஆழ்ந்த சுவாசத்தை உட்கொண்டு, அவன் தொடங்கிஞன்:

''என் பெயர் இவான் ஷார்க்கீய். நான் ஒரு அகதி. தாயையும் தந்தையையும் அறியாதவன். எனக்கு ஒருபொழுதும் சொந்த வீடு ஒன்று இருந்ததில்லை. வீதியில் வளர்ந்தவன் நான். பிச்சை [illegible]த்துப் பிழைத்தேன்; அடிக்கடி பட்டினி கிடந்[illegible] நான் உங்களுக்குச் சொல்கிறேன், அது [illegible]த்தும் வாழ்க்கை. அதைப் பற்றி செல்[illegible]களாகிய உங்களுக்கு ஒன்றும் தெரியாது. [illegible]ின் சோவியத் ஆட்சி நிலவியது. செஞ்[illegible] வீரர்கள் என்னைக் கண்டெடுத்துக் காப்[illegible]ர்கள். ஒரு படைப் பகுதி முழுமையும் [illegible]ச் சுவீகாரம் எடுத்துக்கொண்டது. அவர்[illegible] எனக்கு ஆடைகள் கொடுத்தனர்; எழுதப்

''பாருங்கள், தோழர்களே! மீஷாவிடம் முழு நம்பிக்கை கொள்ளலாம் என்று நான் பல முறை கூறிவந்திருக்கிறேன். அவனுடைய தந்தை, ரயில்வேயில் ஒரு சுவிச்சுக்காரர். அவரை ஒரு ரயில் பெட்டி அரைத்துக் கொன்றது. அதனால் தான், மீஷாவுக்குப் படிக்கமுடியவில்லை. அவன் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்காவிட்டாலும், நமது காரியத்தைப் பொறுத்தமட்டில் என்ன செய்ய வேண்டுமென்பதை உடனே புரிந்து கொண்டு விட்டான்.''

ஹாலில் ஒரே அமளி. கவனமாக வாரிவிடப் பெற்ற கூந்தலை உடைய ஒரு இளைஞன் பேச விரும்பினான். அவன் தான் உள்ளூர் மருந்துக் கடைக் காரனின் மகன், உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவன், ஒக்குஷெவ். அவன் தன் சட்டையைப் பிடித்திழுத்துக்கொண்டே பேசினான்:

''தோழர்களே! நான் பேசத்துணிந்து இங்கு வந்ததற்கு மன்னிக்கவேண்டும். நாம் என்ன செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. நாம் அரசியலில் நுழையவேண்டுமா? அப்படியானால், நாம் படிப்பது எப்பொழுது? நாம் பள்ளிப் படிப்பை முடிக்கவேண்டாமா? விளையாட்டுக் கழகமாயிருந்தால், நாம் கூடிப் படிப்பதற்கு ஏற்ற சங்கமாயிருந்தால், அது வேறு விஷயம். ஆனால் அரசியலில் நுழைவதென்றால், பிற்பாடு தூக்குமேடை ஏறவேண்டிய ஆபத்தை வருவித்துக்கொள்வதாகும். நம்மில் எவரும் இதற்கு ஒத்துக்கொள்ள

மாட்டோமென்பதை வருத்தத்துடன் கூற விரும்புகிறேன்.''

அவன் மேடையிலிருந்து இறங்கித் தன் இருக்கையில் அமர்ந்தபொழுது, ஹாலில் பலர் சிரித்தனர். இளம் யந்திரத் துப்பாக்கி வீரன் அடுத்தாற்போலப் பேசினான். ஆத்திரத்தின் குறிகளுடன், குல்லாயை நெற்றிமீது இழுத்து விட்டுக்கொண்டு, கூட்டத்தின்மீது ஒரு பொல்லாத பார்வையை வீசிய அந்த இளைஞன், ''விஷப்பூச்சிகளே! எதைப் பார்த்துச் சிரிக்கிறீர்கள்?'' என்று கத்தினான்.

அவனது இரு கண்களும் எரிதழல்களாகக் காட்சியளித்தன. கோபத்தால் அவனது மெய்யெல்லாம் பதறியது. ஒரு ஆழ்ந்த சுவாசத்தை உட்கொண்டு, அவன் தொடங்கினான்:

''என் பெயர் இவான் ஷார்க்கீய். நான் ஒரு அகதி. தாயையும் தந்தையையும் அறியாதவன். எனக்கு ஒருபொழுதும் சொந்த வீடு ஒன்று இருந்ததில்லை. வீதியில் வளர்ந்தவன் நான். பிச்சை எடுத்துப் பிழைத்தேன்; அடிக்கடி பட்டினி கிடந்தேன். நான் உங்களுக்குச் சொல்கிறேன், அது நாய் நடத்தும் வாழ்க்கை. அதைப் பற்றி செல்லப்பிள்ளைகளாகிய உங்களுக்கு ஒன்றும் தெரியாது. அதன்பின் சோவியத் ஆட்சி நிலவியது. செஞ்சேனை வீரர்கள் என்னைக் கண்டெடுத்துக் காப்பாற்றினார்கள். ஒரு படைப் பகுதி முழுமையும் என்னைச் சுவீகாரம் எடுத்துக்கொண்டது. அவர்கள் எனக்கு ஆடைகள் கொடுத்தனர்; எழுதப்

படிக்கக் கற்றுக் கொடுத்தனர். அவை எல்லாவற்றையும் விட முக்கியமானது என்னவென்ருல், ஒரு மனிதனுய் வாழ்வதென்ருல் என்னவென்று அவர்கள் எனக்குப் போதித்தார்கள். அவர்களால், நான் ஒரு போல்ஷெவிக்கானேன்; சாகும்வரையில் நான் போல்ஷெவிக்காகவே இருப்பேன். நாங்கள் எதற்காகப் போராடுகிருேம் என்பதை நான் நன்கறிவேன். எங்களைப் போன்ற ஏழைகளுக்காக, தொழிலாளர் ஆட்சிக்காக நாங்கள் போராடுகிருேம். நீங்கள் இங்கு உட்கார்ந்து கிளுகிளுத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனுல் இந்த டவுனுக்காக நடந்த போராட்டத்தில் இருநூறு தோழர்கள் கொல்லப்பட்டனர் என்பது உங்களுக்குத் தெரியாது. ஆம் அவர்கள் உயிரையே தியாகம் செய்தனர்....'' ஷார்க்கீயின் குரல் ஒரு பிகுவான கம்பியைப் போல அதிர்ந்தது. ''அவர்கள் நமது ஆனந்தத்துக்காக, நமது லட்சியத்துக்காகத் தமது உயிர்களைச் சிறிதும் தயங்காமல் தத்தம் செய்தார்கள்.... தேசம் முழுவதிலும் பல போர் முனைகளிலும் ஜனங்கள் இறந்து கொண்டிருக்கிருர்கள். நீங்கள் இங்கு ரங்க ராட்டினம் சுற்றுகிறீர்கள்.'' தலைமைக் குழு அமர்ந்திருந்த பக்கம் திரும்பி, அவன் தொடர்ந்து பேசினுன்: ''தோழர்களே! அங்கு உட்கார்ந்திருப்பவரிடம் பேசி உங்கள் நேரத்தை விரயம் செய்கிறீர்கள்.'' அவனது விரல் கூட்டத்தைச் சுட்டிக்காட்டியது; முகம் தலைமைக் குழுவை நோக்கியது. ''அவர்கள் உங்களைப் புரிந்துகொள்வார்களென்று எண்

ணுகிறீர்களா? வீண்கனவு. வாடிய வயிற்றுக்குத் தோழனுகப் புடைத்த வயிறு இருக்கமுடியாது. இந்தக் கூட்டத்திலிருந்து ஒருவன்தான் நமக்கு உதவ முன்வந்தான். அவன் ஏழை, பெற்றோரை இழந்து நிற்கும் அனுதை. எனவே அவன் முன்வந்தான்.'' மீண்டும் கூட்டத்தை நோக்கி, அவன் கோபத்துடன் கர்ஜித்தான்: ''கவலேயில்லே; நீங்கள் இல்லாமல் நாங்கள் முன்னேற முடியும். எங்களுடன் சேரும்படி உங்களைக் கெஞ்சப் போவதில்லே. எங்களுக்கென்று வந்து வாய்த்தீர்களே! உங்களைப் போன்றவர்களுக்குப் புரியக் கூடிய பாஷை ஒன்றுதான் உள்ளது. அதுவே யந்திரத் துப்பாக்கி.'' இந்த முத்தாய்ப்புக் குத்துடன் அவன் மேடையை விட்டு இறங்கினுன். வலது புறமோ இடது புறமோ நோக்காமல், அவன் தியேட்டரிலிருந்து வெளியேறினுன்.

கூட்டத்துக்குத் தலேமை வகித்த குழுவினரில் எவரும் நாடகத்துக்குத் தங்கவில்லே.

''ஒரே குழப்பம்! ஷார்க்கீய் கூறியது முற்றிலும் உண்மை. இந்த மாணவர்களிடம் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அவர்களேக் கண்டாலே ஆத்திரம் வருகிறது'' என்று புரட்சிக் கமிட்டி அலுவலகத்திற்குச் சென்றபொழுது, ஸெர்யோஷா மனம் நொந்து கூறினுன்.

இக்னுத்தியேவா அவனே இடைமறித்துப் பேசினுள்:

''இன்றைய நிகழ்ச்சியில் வியப்புக்கு எதுவுமில்லே. அங்குத் தொழிலாளி வர்க்க இளே

ஞர்கள் எவரும் இல்லையென்று சொல்லலாம். வந்திருந்தவர்களில் அநேகர் சிறு முதலாளிகள் அல்லது அறிவு ஜீவிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்; அரசியலில் பற்று அற்றவர்கள். பலகை அறுக்கும் மில்லிலும் சீனி உற்பத்திச் சாலையிலும் உள்ள தொழிலாளர் மத்தியில் நீ பாடுபட வேண்டும். ஆனால் என்ன இருந்தாலும் இந்தக் கூட்டத்தால் பயன் ஏற்படும். மாணவர்கள் மத்தியிலும் சில சிறந்த தோழர்கள் உருப்பெறுவதை நீயே காண்பாய்.''

இக்னத்தியேவாவை ஆமோதித்து, ரீத்தா குறிப்பிட்டாள்:

''நமது கருத்துக்களையும் நமது கோஷங்களையும் ஒவ்வொருவருக்கும் எடுத்துரைப்பது நமது கடமை. ஒவ்வொரு புதிய சம்பவத்திலும் சகல உழைப்பாளி மக்களின் கவனத்தையும் ஒருசேரக் குவிப்பதற்குக் கட்சி பாடுபடும். நாம் பல கூட்டங்களையும் மாநாடுகளையும் காங்கிரஸ்களையும் நடத்துவோம். அரசியல் இலாகா, ஸ்டேஷனில் ஒரு கோடைக்கால் நாடக அரங்கை ஆரம்பிக்கப் போகிறது. சில நாட்களில் ஒரு பிரசார ரயில் வரவிருக்கிறது. அதன் பின் நாம் முழுமூச்சுடன் வேலை செய்வோம். லெனின் சொன்னதை ஒருபொழுதும் மறவாதே: சாதாரண ஜனங்களை, லட்சோப லட்சம் உழைப்பாளி மக்களைப் போராட்டத்தில் ஆகர்ஷிக்காமல் நாம் வெற்றி அடைய முடியாது.''

அன்று மாலை, ஸெர்யோஷா ரீத்தாவுக்குத் துணையாக ஸ்டேஷனுக்குச் சென்றான். அவர்கள்

பிரிந்தபொழுது, அவன் அவளது கரத்தை உறுதியாகப் பிடித்துக் கொண்டான். சில விஞடிகள் கூடுதலாகவே, அவளது கரத்தைத் தன் கரத்தில் வைத்திருந்தான். ஒரு இலேசான இளநகை அவளது முகத்தில் சிறகடித்துப் பறந்து மறைந்தது.

திரும்பும் வழியில் ஸெர்யோஷா தன் வீட்டுக்குச் சென்ருன். தாயார் ஏசியதையெல்லாம் அவன் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனல் தகப்பனரும் சதிசுதியொத்து இசைத்த பொழுது, அவன் தாக்குதலைத் தொடுத்துத் தகப்பனருக்குப் பிரதிகூலமான நிலைமையை உண்டாக்கி விட்டான். ஸெர்யோஷா கூறினன்:

''அப்பா, இதைக் கேள். ஜெர்மானியர் ஆண்ட பொழுது, நீ வேலை நிறுத்தம் செய்தாய். எஞ்சினில் இருந்த காவற்காரனைக் கொன்ருய். அப்பொழுது, நீ உன் குடும்பத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லையா? சிந்தித்தாய். எனினும் நீ அந்தச் சோதனைக்கு ஈடு கொடுத்தாய் ஏன்? உனது தொழிலாளிவர்க்க மனச்சாட்சி அம்மாதிரி செய்யும்படி ஆணையிட்டது. நானும் குடும்பத்தைப் பற்றிச் சிந்தித்தேன். நாங்கள் இந்த டவுனிலிருந்து வெளியேறினல், நீங்களெல்லாம் என் பொருட்டு இம்சிக்கப்படுவீர்கள்' என்பதை நான் அறிவேன். எப்படியானலும், என்னல் வீட்டில் உட்கார்ந்திருக்க முடியவில்லை. அப்பா, உனக்கே அது நன்ருகத் தெரியும். பிறகு ஏன் இந்த அமளி?

நான் நல்லதொரு லட்சியத்துக்காக உழைக்கிறேன். இதற்காக என்னுடன் சண்டை போடவேண்டாம். எனக்கு ஆதரவு அளிப்பது உன் கடமை, அப்பா! நமக்குள் தகராறு இல்லையென்றால், அம்மாவும் என்னைக் கடிந்து கொள்வதை நிறுத்திக் கொள்வாள்.'' அவன் தன் ஸ்படிகம் போல் தெளிவான நீலநிறக் கண்களால் தகப்பனை நோக்கினான்; அவனைப் பார்த்து அன்பாகப் புன்னகை புரிந்தான்; தனது செயலில் பிழையில்லை என்பதில் அவனுக்கு அவ்வளவு நம்பிக்கை.

அடர்ந்து நிமிர்ந்த மீசையையும் விகாரமான சிறு தாடியையும் உடைய தந்தை நிம்மதியில்லாதவனாய் இருக்கையில் மாறி மாறி உட்கார்ந்தான். இறுதியில் தன் மஞ்சள் படர்ந்த பற்களைக் காட்டிக்கொண்டு புன்னகை செய்தான்.

''போக்கிரிப் பையா! வர்க்க உணர்வைத் தூண்டவா செய்கிறாய்? ஆடிக்கொண்டிருக்கும், உன் கைத்துப்பாக்கியைக் கண்டு, நான் உன்னை அடிக்க மாட்டேன் என்று எண்ணுகிறாயா?''

அவனது குரலில் ஆத்திரத்தின் சாயல்கூட இல்லை. மனக்குழப்பத்தால் சிறிது தடுமாற்றத்துடன் அவன் காய்ப்பேறிய உறுதியான தன் கரத்தை ஸெர்யோஷாவிடம் நீட்டினான்:

''ஸெர்யோஷா! முன்னேறு. ஏறத் தொடங்கியபிறகு, நடு வழியில் நான் 'பிரேக்' போடமாட்டேன். ஆனால் எங்களை ஒரே அடியாக மறந்துவிடாதே. அடிக்கடி வந்து கொண்டிரு.''

இரவு நேரம். சிறிது திறந்திருந்த கதவு வழியாக அம்பு போன்ற ஒரு ஒளிக்கற்றை படிக் கட்டுகளில் விழுந்தது. 'பிளஷ்' துணியால் சிங் காரமாக அலங்கரிக்கப்பட்டிருந்த சோபாக்களைக் கொண்ட ஒரு பெரிய அறையில், வக்கீலின் பெரிய மேஜைக்கு முன்னுல், ஐவர் அமர்ந்திருந் தனர். தாலீன்னிக், இக்ஞத்தியேவா, கஸாக்கியன் குல்லாய் அணிந்து, கிர்கீஷியன் மாதிரித் தோற் றம் அளித்த செக்கா* தலைவன் திமாஷேன்கோ, ஷூதிக் என்ற வாட்டசாட்டமான ரயில்வே தொழிலாளி, ரயில்வே டெப்போவில் வேலை செய்த லேசாக நிமிர்ந்த மூக்குடைய தோழனை ஒஸ்தப்ச்சூக். புரட்சிக் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

தாலீன்னிக் மேஜையின் மீது சாய்ந்து கொண்டு, இக்ஞத்தியேவாவைக் கடுமையாக நோக்கினன்; தனது கரகரத்த குரலில், தன் ஊகத்தை வெளியிட்டான்:

''போர்முனைக்குப் பொருட்கள் தேவை. தொழிலாளர்கள் சாப்பிடவேண்டும். நாம் இங்கு வந்தவுடன், கடைக்காரர்களும் கள்ளவியாபாரி களும் விலைவாசிகளை உயர்த்தினர்கள். அவர்கள் சோவியத் பணத்தை ஏற்க மறுக்கிருர்கள். பழைய ஜாராட்சிக் காலத்துப் பணமும், கே ரென்ஸ்கிய் காலத்து நோட்டுகளும்தான் இங்குப்

*செக்கா—புரட்சி எதிர்ப்பு, மறைமுக நாச வேலை, கள்ள வியாபாரம் ஆகியவற்றை ஒடுக்கு வதற்காக அமைக்கப்பட்ட விசேஷக் கமிஷன்.

புழக்கத்தில் உள்ளன. இன்று நாம் கூடிப் பேசி, நிலையான விலைகளைத் தீர்மானிக்கவேண்டும். கள்ளவியாபாரிகளில் எவனும், நிர்ணய விலைக்குத் தன் பொருட்களை விற்கமாட்டான் என்பதை நாம் நன்கறிவோம். அவர்கள், உள்ள சாமான்களை ஒளித்துவிடுவார்கள். அப்பொழுது, நாம் சோதனைகள் நடத்தி, தன் நலத்தையே போற்றுபவர்களின் சரக்குகளைப் பறிமுதல் செய்வோம். இது நயத்தால் பெறக் கூடிய காலம் அல்ல, தொழிலாளர் பட்டினி கிடப்பதை நாம் இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மிதமிஞ்சிப் போய்விடக் கூடாதென்று தோழர் இக்னுத்தியேவா எச்சரிக்கிறார். என்னைக் கேட்டால், இது முதுகெலும்பில்லாத அறிவு ஜீவிகளின் கருத்து என்பேன். ஸோயா! கோபித்துக் கொள்ளாதே. உள்ளத்தை உள்ளபடி கூறுகிறேன். எப்படியிருந்தாலும், சில்லரை வியாபாரிகளின் விஷயம் அவ்வளவு பெரிதல்ல. போதைக் கடை வைத்திருக்கும் பொரீஸ் ஸோன் வீட்டில் ஒரு இரகசியமான நிலவறை இருப்பதாக எனக்கு இன்று தகவல் கிடைத்தது. அங்கே பெத்லியூரா கூட்டத்தினர் வருவதற்கும் முன்னால் பெரிய கடைக்காரர்கள் ஏராளமான சரக்குகளை ஒளித்துவிட்டனர்.'' திமாஷேன்கோவைக் கபடமாகவும் கேலியாகவும் பார்ப்பதற்கு, தாலீன்னிக் தன் பேச்சைச் சற்று நிறுத்தினான்.

''நீ அதை எப்படிக் கண்டுபிடித்தாய்?'' என்று அதிர்ச்சியடைந்த செக்காத் தலைவன்

கேட்டான். பலவிதமான தகவல்களைச் சேகரிப்பது அவனுடைய வேலை. ஆனால் அவனுக்கும் முன்பாக தாலீன்னிக் தகவல் சேர்த்திருப்பதைக் கண்டு, திமாஷேன்கோவுக்குக் கொஞ்சம் வருத்தமும் ஆத்திரமும் ஏற்பட்டன.

தாலீன்னிக் கிளுகிளுத்தான்:

''தோழா! நான் அனைத்தையும் அறிவேன். நிலவறையைப்பற்றித் தெரிந்து கொண்டதுடன், நீயும் டிவிஷன் தளபதியின் கார் டிரைவரும் நேற்று அரைபாட்டில் சாராயத்தைக் காலி செய்தீர்களென்பதையும் அறிவேன்.''

திமாஷேன்கோ தன் நாற்காலியில் இருப்புக்கொள்ளாமல் தவித்தான்; அவனது சோகை முகம் சிவந்தது.

''நல்ல காரியம் செய்தாய்!'' என்று அவன் வியப்புடன் பேசத் தொடங்கினான். ஆனால் இக்னாத்தியேவாவுக்கு அவனது பேச்சு பிடிக்கவில்லை என்பதை அவளது முகச் சுருக்கத்திலிருந்து அறிந்துகொண்டு, உடனே அதை நிறுத்திக்கொண்டான். ''இந்தப் பாழாய்ப்போன தச்சன் தனக்கென்று ஒரு செக்கா வைத்திருக்கிறான்!'' என்று சிந்தித்தவனாக, அவன் புரட்சிக் கமிட்டித் தலைவனை நோக்கினான்.

தாலீன்னிக் தன் பேச்சை தொடர்ந்தான்:

''அந்தப் போதைக் கடையில் வேலை செய்யும் ஒருவனைத் தனக்குத் தெரியும் என்று ஸெர்யோஷா புருஸ்ஷாக் சொன்னான். தங்களுக்குத் தேவையான சாமான்கள் எவ்வளவு வேண்டுமா

ஞலும், ஸோன் கொடுப்பதாகச் சமையல்காரர்கள் அந்தப் பையனிடம் கூறியிருக்கிருர்கள். நேற்றைய தினம், ஸெர்யோஷா அந்த நிலவறையைப்பற்றி உறுதியாக விவரங்களை அறிந்துவிட்டான். இனி அதன் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பதுதான் பாக்கியுள்ள வேலை. திமாஷேன்கோ, உடனடியாகப் பையன்களை இந்த வேலையில் ஈடுபடுத்து. ஸெர்யோஷாவையும்கூட இட்டுச்செல். அதிர்ஷ்டவசமாக, நாம் அந்த இடத்தைக் கண்டுபிடித்து விட்டால், டிவிஷனுக்கும் தொழிலாளருக்கும் உணவுப் பொருட்களைக் கொடுக்கலாம்.''

அரைமணி நேரம் சென்றபின், எட்டு ஆயுதபாணிகள் போதைக் கடைக்காரனின் வீட்டில் பிரவேசித்தனர். வீட்டு வாசலைக் காப்பதற்காக, இருவர் வெளியில் நின்றனர்.

அந்தக் கடைக்காரன் கட்டை குட்டையானவன்; மரத்தால் செய்த காலை உடையவன்; பீப்பாய் மாதிரி வட்ட வடிவமாகத் தோற்றமளித்தான்; அவனது முகமெல்லாம் செம்மயிர், கட்டை கட்டையாக வளர்ந்திருந்தது. அவன் முடிதாழ அடிபணியும் கண்ணியத்துடன் ஆயுதபாணிகளை வரவேற்ருன். ''என்ன விஷயம், தோழர்களே? ஏன் இந்த அகால வேளையில் வந்திருக்கிறீர்கள்?'' என்று அவன் வறட்சியான கனத்த குரலில் விசாரித்தான்.

ஸோனுக்குப் பின்ஞல், அவசரமாக அணியப்பெற்ற கவுன்களுடன், அவனுடைய பெண்கள்

நின்றனர். விளக்கு ஒளியைத் தாங்கமுடியாமல், அவர்களுடைய கண்கள் கூசின. அடுத்த அறையில் ஸோஷினின் கொழுத்த மனைவி, பெருமூச்சு விட்டுப் புலம்பிக் கொண்டே ஆடை உடுத்திக் கொண்டிருந்தாள்.

''வீட்டைச் சோதனை செய்யவேண்டும்'' என்று திமாஷேன்கோ ரத்தினச் சுருக்கமாக விளக்கினான்.

அவர்கள் தளத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் துருவித்துருவி ஆராய்ந்தார்கள். வெட்டப்பட்ட விறகுகள் உயரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த விசாலமான கொட்டகை, பல உக்கிராண அறைகள், சமையலறை, ஒரு விசாலமான கீழறை ஆகியவை மிகுந்த கவனத்துடன் பரிசோதிக்கப்பட்டன. ஆனால் இரகசிய நிலவறையின் சாயல்கூட புலப்படவில்லை.

சமையலறைக்கு அருகே உள்ள ஒரு சிறு அறையில் பணிப்பெண் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தாள். அவள் அயர்ந்து தூங்கியதால், அவர்கள் உள்ளே வந்ததைக் கவனிக்கவில்லை. ஸெர்யோஷா அவளை ஜாக்கிரதையாக எழுப்பினான்.

''நீ இங்கு வேலை செய்கிறாயா?'' என்று அவன் வினவினான்.

அவள் போர்வையைத் தோள்களுக்குமேல் இழுத்துக் கொண்டாள். ஒளியில் கூசிய கண்களை மூடிக்கொண்டு எதுவும் புரியாதவளாகக் கூறினாள்:

''ஆம். நான் இங்கு வேலை செய்கிறேன். நீங்கள் யார்?''

ஸெர்யோஷா தங்களைப்பற்றி அவளிடம் கூறினான். ஆடை உடுத்திக்கொள்ளும்படி சொல்லி விட்டு, அறையிலிருந்து வெளியேறினான்.

விசாலமான சாப்பாட்டறையில் திமாஷேன்கோ போதைக் கடைக்காரனைக் கேள்வி கேட்டுக் கொண்டு இருந்தான். போதைக் கடைக்காரன் ஆத்திரப்பட்டுப் பொங்கினான்; ஆவேச மிகுதியில் தெத்தித் தெத்திப் பேசினான்:

''என்னிடம் உங்களுக்கு என்ன வேண்டும்? என் வீட்டில் வேறு நிலவறை எதுவும் இல்லை. உறுதியாகச் சொல்கிறேன்: நீங்கள் உங்களுடைய நேரத்தை விரயம் செய்கிறீர்கள். ஆம். ஒரு காலத்தில் நான் போதைக் கடையின் சொந்தக்காரனாக இருந்தேன். இப்பொழுது நான் ஒரு ஏழை. பெத்லியூராவின் ஆட்கள் என்னை நன்றாகச் சூறையாடி விட்டார்கள். என்னைக் கொல்வதற்கும் இருந்தார்கள். சோவியத் ஆட்சி அமைந்துவிட்டது கண்டு, நான் அகமகிழ்கிறேன். ஆனால் என் உடைமையெல்லாம் இவைதான்'' என்று சொல்லி அவன் தன்னுடைய கட்டைக் குட்டையான கரங்களை விரித்தான். அதே சமயம், அவனது சிவந்த கண்கள் செக்காத் தலைவன் முகத்திலிருந்து ஸெர்யோஷாவின் முகத்துக்கும் ஸெர்யோஷாவிடமிருந்து மூலைக்கும், மூலையிலிருந்து கூரைக்கும் தம் பார்வையை ஏவிக் கொண்டிருந்தன.

திமாஷேன்கோ தனது உதடுகளைக் கடித்தான்.

''நீங்கள் உண்மையைச் சொல்லப் போவதில்லையா? கடைசித் தடவையாக அந்த நிலவறை இருக்குமிடத்தைக் காட்டும்படி கேட்டுக் கொள்கிறேன்.''

''தோழர் அதிகாரி அவர்களே! நாங்கள் சாப்பிடுவதற்கே பொருள் இல்லை. எங்களிடம் இருந்ததையெல்லாம் அவர்கள் அரித்துக்கொண்டு போய் விட்டார்கள்'' என்று ஸோனின் மனைவி புலம்பினாள். அவள் கண்ணீரை வரவழைப்பதற்கு முயற்சித்தாள், ஆனால் முடியவில்லை.

''பட்டினி கிடப்பதாகச் சொல்கிறீர்கள். ஆனால் வேலைக்கு ஆள் வைத்திருக்கிறீர்களே!'' என்றான் ஸெர்யோஷா.

''அவள் வேலைக்காரியல்ல, அவள் ஒரு ஏழைப் பெண். அவளுக்குப் போக்கிடம் இல்லாததால், எங்களுடன் வசிக்கிறாள். கிரிஸ்தீனாவையே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.''

திமாஷேன்கோ பொறுமையை இழந்தான். ''சரி சரி! நாம் கவனமாகச் சோதனை போடுவோம்'' என்று அவன் இரைந்தான்.

பொழுது புலர்ந்தது. ஆனால் சோதனை இன்னும் நடந்து கொண்டிருந்தது. பதின்மூன்று மணிநேரம் நடத்திய சோதனை பயனில்லாமல் போனதால் எரிச்சல்கொண்ட திமாஷேன்கோ, தன் சோதனையைக் கைவிட முடிவு செய்துவிட்டான். அந்தச் சமயத்தில், ஸெர்யோஷா வேலைக்

காரியின் அறையைச் சோதித்துவிட்டுத் திரும்பிய தருவாயில், ''சமையலறையின் அடுப்புக்குள்ளே பார்'' என்று கிரிஸ்தீனு அவனிடம் மெல்லிய குரலில் கூறினுள்.

பத்து நிமிஷங்களில், அந்த ருஷ்ய அடுப்பு உடைத்து எரியப்பட்டது. அந்த இடத்தில் இரும்பால் செய்த கள்ளக்கதவு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது. ஒரு மணி நேரத்துக்குள், பீப்பாய்களும் மூட்டைகளும் நிறைந்த இரண்டு டன் வண்டி ஒன்று, வாயைப் பிளந்து கொண்டு பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தாரால் சூழப்பட்ட வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

ஒரு வெப்பமான நாளில், பாவெலின் தாயார் சிறிய மூட்டையுடன் தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். பாவெலுக்கு நேரிட்டதைப்பற்றி ஆர்த்தியோம் விவரித்துக் கூறக் கேட்டு, அவள் மனம் வெந்து கண்ணீர் விட்டுக் கதறினுள். தனது வாழ்க்கையே வறண்டுவிட்டதாகவும் இருண்டுவிட்டதாகவும் அவளுக்குத் தோன்றியது. அவள் வேலை தேட வேண்டியதாயிற்று. சில நாட்களுக்குப்பின், அவள் செஞ்சேனை வீரர்களின் ஆடைகளைச் சலவை செய்யத் தொடங்கினுள். அதற்குக் கூலியாக, அவளுக்கு ராணுவத்தினரின் ரேஷன் கூப்பன்கள் கொடுக்கப்பட்டன.

ஒருநாள், ஜன்னலுக்கு வெளியே, என்றுமில்லாத வேகத்தில் ஆர்த்தியோம் நடந்துவந்த ஒலி அவள் காதில் விழுந்தது. கதவு நிலையிலேயே

நின்றுகொண்டு, ''பாவெலிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது'' என்று அவன் அறிவித்தான்.

பாவெல் எழுதியது:

''அன்புள்ள அண்ணன் ஆர்த்தியோமுக்கு,

''உடல்நலம் குன்றியுள்ள போதிலும் நான் உயிரோடு இருக்கிறேன் என்பதைத் தெரிவிக்கவே இந்தக் கடிதம் எழுதுகிறேன். என் தொடையில் ஒரு குண்டு பாய்ந்தது. ஆனால் இப்பொழுது, சுகமடைந்து வருகிறேன். எலும்பு சேதமடைய வில்லை என்று டாக்டர் கூறுகிறார். என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நான் நலம் பெற்றுவிடுவேன். ஆஸ்பத்திரியிலிருந்து வெளி வந்த பின், எனக்கு விடுமுறை கிடைக்கலாம். அப் பொழுது நான் வீட்டுக்கு வருவேன். நான் அம்மா விடம் போகவில்லை. என்ன நடந்தது என்றால், நான் செஞ்சேனை வீரர் குதிரைப் பிரிகேடு ஒன் றில் சேர்ந்துவிட்டேன். என் பிரிகேடுத் தலைவர், தோழர் காத்தோவ்ஸ்க்கிய் ஆவார். அவரது வீரம் பற்றிய புகழ் எங்கும் பரவியிருப்பதால், நீ அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய். அவரைப் போல ஒரு நபரை நான் இதற்குமுன் கண்ட தில்லை. எங்கள் தலைவரிடம் நான் மிகுந்த நன் மதிப்பு உடையவனாய் இருக்கிறேன். அம்மா வீட் டுக்குத் திரும்பி வந்து விட்டாளா? வந்துவிட் டால், என் நிறை அன்பை அவளுக்குத் தெரிவிக்க

வேண்டுகிறேன். நான் உனக்கு உண்டாக்கிய தொல்லைக்கெல்லாம், என்னை மன்னித்துவிடு.

''உன் சகோதரன்

''பாவெல்.

.''ஆர்த்தியோம், காட்டு இலாகா அதிகாரி வீட்டுக்குப் போய், இந்தக் கடிதத்தைப்பற்றி அவர்களிடம் சொல்லு.''

பாவெல் கடிதத்தின் மீது அவனது தாயார் கண்ணீர்த் துளிகளை உகுத்தாள். விளையாட்டுப் பையன், தன் ஆஸ்பத்திரியின் முகவரியைக்கூடக் கொடுக்கவில்லை.

ஸெர்யோஷா ஸ்டேஷனுக்கு அடிக்கடி சென்றான். அங்கே, ''டிவிஷன் அரசியல் இலாகாவின் கிளர்ச்சி-பிரசாரப் பிரிவு'' என்ற குறிப்பலகை கொண்ட பச்சை ரயில் பெட்டியின் உட்பிரிவு ஒன்றில், ரீத்தாவும் இக்னத்தியேவாவும் தமது அலுவலகத்தை அமைத்துக் கொண்டிருந்தனர். எப்பொழுதும் சிகரெட் குடித்துக் கொண்டிருந்த இக்னத்தியேவா, ஸெர்யோஷா அடிக்கடி அங்கு வருவதின் காரணத்தை நன்கு அறிந்துகொண்டு, அவனைக் காணும் பொழுதெல்லாம் அர்த்த புஷ்டியுடன் கூடிய ஒரு புன்னகை புரிவாள்.

வட்டாரக் கம்ஸமோல் கமிட்டியின் காரிய தரிசியான அவன் தன்னையுமறியாமல் ரீத்தாவுக்கு நெருங்கிய நண்பனாகி விட்டான். அவளிடமிருந்து புத்தகங்களையும் செய்திப் பத்திரிகைக் கட்டுக்

களையும் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு முறையும் அந்தச் சிறு நேர சந்திப்பினுல் ஒரு இனம் தெரியாத மகிழ்ச்சியைப் பெற்ருன்.

ஒவ்வொரு நாளும், டிவிஷன் அரசியல் இலாகாவின் திறந்த வெளி அரங்குக்கு ஏராளமான தொழிலாளரும் செஞ்சேனை வீரரும் திரண்டனர். இருப்புப் பாதையில், பன்னிரண்டாவது இராணுவத்தின் பிரசார ரயில் நின்றது; பிரகாசமான பல வண்ண போஸ்டர்கள் அதைச் சுற்றித் தொங்கிக் கொண்டிருந்தன. தினம் இருபத்து நான்கு மணிநேரமும் அது தேன் அடை மாதிரி சுறுசுறுப்பாயிருந்தது. அந்த ரயிலில் ஒரு அச்சகம் அமைக்கப் பட்டிருந்தது. அது செய்திப் பத்திரிகைகளையும் அறிக்கைகளையும் பிரகடனங்களையும் தொடர்ந்தாற்போல் அச்சிட்டு வெளியிட்டுக் கொண்டிருந்தது. போர்முனை அருகில் இருந்தது.

ஒருநாள் மாலை, ஸெர்யோஷா தற்செயலாகத் தியேட்டருக்கு வந்தான். அங்கு செஞ்சேனை வீரர்களுக்கிடையே ரீத்தா இருப்பதைக் கண்டான்.

அந்த இரவு, வெகு நேரத்திற்குப் பின் ரீத்தாவை ரயில் நிலையம் வரை (அங்குதான் டிவிஷன் அரசியல் இலாகாவின் ஊழியர்கள் வசித்து வந்தார்கள்) வழி அனுப்புவதற்காக அவளுடன் சென்று கொண்டிருந்த ஸெர்யோஷா தானும் அறியா வண்ணம் அவளைக் கேட்டான்:

''நான் எப்பொழுதும் உன்னைப் பார்த்துக் கொண்டேயிருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

தோழர் ரீத்தா, இதற்குக் காரணம் என்ன? உன்னுடன் இருந்தால் எவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது! உன்னைப் பார்த்த பிறகு, இடைவிடாமல் வேலை செய்யலாமென்ற உணர்ச்சி எனக்கு ஒவ்வொரு தடவையும் ஏற்படுகிறது.''

ரீத்தா அவனை இடைமறித்தாள்.

''தோழர் புருஸ்ஷாக்! இதைக் கேள். இனிமேல், நீ ஒருபொழுதும் இம்மாதிரி இன்னிசைக் கவிதை பாடமாட்டாய் என்று நாம் இப்பொழுதே முடிவு செய்து விடுவோம். எனக்கு அது பிடிக்காது'' என்றாள் ரீத்தா.

ஸெர்யோஷா, கண்டிக்கப்பட்ட பள்ளிப் பையனைப் போல நாணமடைந்தான். அவனது முகம் சிவந்தது.

''நான் பேசியதில் உள்ளர்த்தம் ஒன்றும் இல்லை. நாம் நண்பர்கள் என்றுதான் நான் எண்ணினேன்.... நான் ஒன்றும் புரட்சிக்கு விரோதமாகப் பேசவில்லை. ஏதாவது எதிர்ப்புரட்சிப் பேச்சுப் பேசினேனா? சரி. இனி இதுமாதிரி ஒருபொழுதும் பேசப்போவதில்லை.''

அவளுடன் அவசரமாகக் கைகுலுக்கிவிட்டு அவன் டவுனுக்கு ஓடினான்.

பல நாட்களுக்கு ஸெர்யோஷா ஸ்டேஷன் பக்கம் தலை காட்ட வில்லை. இக்னாத்தியேவா அவனைக் கூப்பிட்ட பொழுது, தனக்கு வேலையிருப்பதாகக் கூறிக் கொண்டு அவன் செல்லாது இருந்தான். உண்மையாகவே, அவனுக்கு வேலை அதிகம்தான்.

ஓர் இரவு, சீனித் தொழிற்சாலையின் போலிஷ் நிர்வாகிகள் பெரும்பான்மையாக வசித்து வந்த தெருவழியே, ஷூதிக் தன் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த பொழுது, அவனை யாரோ ஒருவன் துப்பாக்கியால் சுட்டான். இதைத் தொடர்ந்து சோதனைகள் நடந்தபொழுது, ''ஸ்த்ரெலேத்ஸ்'' என்ற பில்ஸூத்ஸ்கியை* பின்பற்றியவர்களின் சங்கத்தின் தஸ்தாவேஜுகளும் ஆயுதங்களும் பிடிபட்டன.

புரட்சிக் கமிட்டியின் அலுவலகத்தில் ஒரு கூட்டம் கூடியது. ரீத்தாவும் வந்திருந்தாள். அவள் ஸெர்யோஷாவைத் தனியாகக் கூப்பிட்டு, அமைதியான குரலில் பேசினாள்:

''நீ என்ன குறுகிய மனப்பான்மையுடன் கூடிய சுயநலக்காரனாகி விட்டாயா? சொந்த விவகாரங்கள், பொதுவேலைக்கு ஊறு விளைவிக்கும்படி நீ செய்கிறாய். இது தவறு, தோழா.''

அதன்பின் ஸெர்யோஷா பச்சை ரயில் பெட்டிக்கு மீண்டும் செல்லத் தொடங்கினான்.

அவன் ஒரு ஜில்லாப் புரட்சிக் கமிட்டியின் மகாநாட்டில் பங்கெடுத்தான். அங்கு இரண்டு

---

* **பில்ஸூத்ஸ்கி, ஜூஸப்** *(1867—1935)*— *1918*ம் ஆண்டில், போலந்து பூர்ஷ்வா-நிலப்பிரபு அரசின் ''தலைவராகப்'' பிரகடனம் செய்யப்பட்டவன். புரட்சி இயக்கத்தை இரக்கமின்றி அடக்குதல் செய்தவன். *1920*ல் சோவியத் ருஷ்யாவிற்கு எதிராக நடத்தப்பட்ட போரில் தலைமை தாங்கினான். *1926*ல் நாட்டில் சர்க்கார் மாற்றத்தை நடத்திக் கொண்டு பாசிஸ சர்வாதிகாரத்தை நிறுவினான்.

நாட்களுக்கு நடைபெற்ற காரசாரமான விவாதங்களில் கலந்துகொண்டான். மூன்றுவது நாள், அவன் மகாநாட்டுக்கு வந்திருந்த ஏனையப் பிரதிநிதிகளுடன், பெத்லியூராவின் அதிகாரிகளில் பிடிபடாமலிருந்தவர்களில் ஒருவனுன ஸரூத்னிய் என்பவன் தலைமையில் செயல்பட்ட கொள்ளைக் கூட்டத்தைப் பிடிப்பதற்காக, ஆற்றுக்கு அப்பாலுள்ள காட்டுப் பிரதேசத்துக்குச் சென்முன். அவர்கள் நாள்முழுவதும் ஈடுபட்டனர்.

அங்கிருந்து திரும்பிய பின், ஸெர்யோஷா இக்னுத்தியேவாவைப் பார்க்கச் சென்முன். அங்கு ரீத்தாவையும் சந்தித்தான். அதன்பின் அவளை ஸ்டேஷனுக்கு வழியனுப்பச் சென்முன். அவளுக்கு விடைகொடுத்த சமயத்தில் அவளது கரத்தை இறுகப் பிடித்துக்கொண்டான். அவளோ ஆத்திரத்துடன் திமிறிக் கரத்தை இழுத்துக் கொண்டாள். மீண்டும் பல தினங்களுக்கு ஸெர்யோஷா பச்சை ரயில் பெட்டிக்குச் செல்லாமல் இருந்தான். வேலை விஷயமாகக்கூட, ரீத்தாவைச் சந்திக்காமல் தட்டிக்கழித்தான். அவனுடைய நடத்தைக்கு அவள் விளக்கம் கேட்டபொழுதெல்லாம் அவன் வெடுக்கென்று விடைதந்தான்:

''உன்னுடன் பேசிப் பயன் என்ன? நான் குறுகிய மனப்பான்மை உடையவன் என்றே, தொழிலாளி வர்க்கத்துக்குத் துரோகம் செய்கிறேன் என்றே குற்றம் சாட்டுவதைத் தவிர, நீ வேறு என்ன பேசுவாய்?''

காக்கேஷியன் செம்பதாகை டிவிஷனை [illegible]-புக்களை ஏற்றி வந்த வண்டிகள் ஸ்டேஷனை அடைந்தன. பழுப்பு நிறம் கொண்ட மூன்று படைத் தலைவர்கள் புரட்சிக் கமிட்டியின் அலுவலகத்துக்கு வந்தனர். அவர்களில் ஒருவன், நெட்டையாகவும் ஒல்லியாகவும் இருந்தவன், சித்திரம் செதுக்கிய வெள்ளி பெல்ட் அணிந்தவன்; நேரே தாலீன்னிக்கிடம் சென்று, மறுப்புக்கு இடம் தராத குரலில், ''இப்பொழுது வாதம் வேண்டாம். நூறு வண்டி உலர்ந்த புல் கொடு. என் குதிரைகள் பட்டினியால் இறக்கும் தருவாயில் இருக்கின்றன'' என்று கோரினான்.

எனவே, குதிரைக்குத் தீனி தேடிக்கொண்டு வருவதற்காக ஸெர்யோஷா இரண்டு செஞ்சேனை வீரர்களுடன் கிளம்பினான். ஒரு கிராமத்தில் குலாக்குக் கும்பல் ஒன்று அவர்களைத் தாக்கியது. செஞ்சேனை வீரர்களை நிராயுதபாணியாக்கியதுடன் நில்லாமல் அவர்களைக் குற்றுயிராகவும் ஆக்கியது. ஸெர்யோஷா இளைஞனாயிருந்ததால், அவனுக்கு ஏனையோரைவிட குறைவாகக் கொடுக்கப்பட்டது. ஏழை விவசாயிகள் கமிட்டியைச் சேர்ந்த ஜனங்கள் மூவரையும் வண்டியில் ஏற்றி டவுனுக்கு அனுப்பினர்.

ஆயுதமேந்திய படைக்குழு ஒன்று அந்தக் கிராமத்துக்கு அனுப்பப்பட்டது. அடுத்த தினத்திலேயே குதிரைகளுக்குத் தீனி கிடைத்தது.

ஸெர்யோஷா, தன் குடும்பத்தினரை அச்சுறுத்தக்கூடாதென்று எண்ணியவனாய், தனது

விபத்துக் காயங்கள் ஆறும்வரை இக்னுத்தியேவாவின் ஜாகையில் தங்கினுன். அங்கு அவனைப் பார்ப்பதற்கு ரீத்தா வந்தாள். முதன் முதலாக அவள் ஸெர்யோஷாவின் கரத்தை அன்பாகவும் கதகதப்புடனும் அழுத்தினுள்; ஸெர்யோஷாவோ, அவளது கரத்தை அம்மாதிரி அழுத்துவதற்கு ஒரு பொழுதும் துணிந்திருக்க மாட்டான்.

ஒருநாள் பிற்பகல்; வெப்பம் அதிகம். அந்தச் சமயத்தில் ஸெர்யோஷா பிரசார ரயில் பெட்டிக்குச் சென்று ரீத்தாவைச் சந்தித்தான். அவளுக்குப் பாவெலின் கடிதத்தைப் படித்துக் காட்டிவிட்டு, அந்த நண்பனைப்பற்றிக் கூறினுன். அவளது அலுவலகத்தை விட்டுக் கிளம்பும் பொழுது, ''நான் காட்டுக்குச் சென்று ஏரியில் குளிக்க எண்ணுகிறேன்'' என்ருன்.

வேலை செய்து கொண்டிருந்த ரீத்தா, நிமிர்ந்து பார்த்தாள்.

''கொஞ்சம் காத்திரு. நானும் வருகிறேன்'' என்று அவள் சொன்னுள்.

அமைதியான, கண்ணுடியைப் போன்றிருந்த ஏரியை அவர்கள் அடைந்தனர். கதகதப்பான, தெளிவான நீர் வருவோர் போவோரைக் கவர்ச்சித்தது.

''எனக்காகச் சாலை அருகில் காத்திரு. நான் ஏரிக்குச் செல்கிறேன்'' என்று ரீத்தா, உத்திரவிடும் தோரணையில் கூறினுள்.

ஸெர்யோஷா பாலத்துக்கு அருகில் இருந்த பெரிய கல்மீது உட்கார்ந்துகொண்டு, கதிரவனுக்கு முகத்தைக் காட்டிக் கொண்டிருந்தான். பின்புறத்தில், நீர் சலசலத்துக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில், பிரசார ரயில் ராணுவ கமிஸாரான சுஷானின் தோன்யாவுடன் கை கோர்த்து நடந்து வருவதை, மரங்களினூடே தன் கண்களைச் செலுத்திய ஸெர்யோஷா பார்த்தான். சுஷானின் திருத்தமாகத் தயாரிக்கப்பட்ட ஆபீஸர் கோட் அணிந்திருந்தான், நாகரிகப் பாங்கான தோல் பெல்ட்டையும் ஏராளமான தோல்பட்டைகளையும் தரித்திருந்தான். அவனது பாதங்களில் அணியப் பெற்றிருந்த க்ரோம் தோல் நெடுஞ் ஜோடு நடக்கும் பொழுது கிரீச்சென்று ஒலித்தது. ஆகக் கூடி, அவன் பகட்டாகவும் படாடோபமாகவும் காட்சியளித்தான். அவன் தோன்யாவுடன் ஆவலாக உரையாடிக் கொண்டே வந்தான்.

பாவெலிடமிருந்து கடிதம் கொண்டு வந்த பெண் என்ற முறையில், ஸெர்யோஷா தோன்யாவை அடையாளம் கண்டு கொண்டான். அவர்கள் ஸெர்யோஷாவை நெருங்கியவுடன், அவளும் அவனை உற்றுப் பார்த்தாள். அவன் யாரென்று தீர்மானிப்பதற்காக அவள் முயன்றதாகத் தோன்றியது. அவர்கள் அவனுக்குப் பக்கத்தில் வந்தவுடன், ஸெர்யோஷா தன் சட்டைப் பையில் இருந்த பாவெலின் கடிதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, அவளிடம் சென்ருன்.

''தோழரே, ஒரு நிமிஷம். என்னிடம் ஒரு கடிதம் இருக்கின்றது. அதில் ஒரு பகுதி உங்களுக்கு எழுதப் பட்டுள்ளது.''

தோன்யா தன் கையை சுஷானின் கையிலிருந்து விடுவித்துக் கொண்டு, கடிதத்தைப் பெற்றுக்கொண்டாள். அவள் அந்தத் தாளைப் படித்தபொழுது, அது அவள் கையில் சற்று நடுங்கியது.

கடிதத்தை ஸெர்யோஷாவிடம் திருப்பிக் கொடுத்துக் கொண்டே, ''பாவெலிடமிருந்து வேறு தகவல் உண்டா?'' என்று அவள் கேட்டாள்.

''இல்லை'' என்று அவன் விடை தந்தான்.

அந்தச் சமயத்தில், ரீத்தாவின் பாதங்களால் மிதிபட்ட கற்கள் பொடியாகும் ஒலி அவர்கள் செவியில் விழுந்தது. அதுவரை ரீத்தா அங்கு இருந்ததை அறியாத சுஷானின், தோன்யாவின் பக்கம் சாய்ந்து, ''நாம் போகலாம்'' என்று மெல்லிய குரலில் கூறினான்.

ஆனால் கேலியும் நிந்தையும் தொனித்த ரீத்தாவின் குரல் அவனை நிறுத்தியது.

''தோழர் சுஷானின்! ரயிலில், நாள்முழுவதும் உங்களைத் தேடிக் கொண்டிருந்தார்கள்.''

சுஷானின் அவளை வெறுப்போடு பார்த்தான்.

''பரவாயில்லை. நான் இல்லாமலேயே, அவர்களால் வேலை செய்ய முடியும்'' என்று அவன் துடுக்காகப் பதில் அளித்தான்.

தோன்யாவும் ராணுவ கமிஸாரும் தம் வழியே சென்றனர். அதைப் பார்த்துக்கொண்டிருந்த ரீத்தா, ''இந்த உதவாக்கரை நபரை உடனடி

யாகத் தொலைத்து முழுக வேண்டும்'' என்று வெறுப்புடன் கூறினாள்.

ஓக் மரங்களின் வலுப்பெற்ற முடிகளை அசைத்துக்கொண்டு, காடு சலசலத்தது. ஏரி தனது குளிர்ச்சியால் வழிப்போக்கர்களைக் கவர்ந்தது. ஏரியில் குளிக்கச் செல்வதென்று, ஸெர்யோஷா முடிவுசெய்தான்.

ஸெர்யோஷா நீச்சலடித்துவிட்டுத் திரும்பிய பொழுது, சாலைக்கு அருகில் ஒரு அடிமரத்தின் மீது ரீத்தா உட்கார்ந்திருந்ததை அவன் கண்டான். இருவரும் உரையாடிக் கொண்டே காட்டுக்குள் அலைந்துதிரிந்தனர். அடர்த்தியாகவும் உயரமாகவும் புல் வளர்ந்திருந்த ஒரு சிறிய திறந்த வெளியில் அவர்கள் ஓய்வு எடுப்பதற்காக நின்றனர். காட்டில் அமைதி நிலவியது. ஓக் மரங்கள் ஒன்றோடொன்று இரகசியம் பேசிக்கொண்டிருந்தன. ரீத்தா மென்மையான புல் படுக்கையின் மீது படுத்தாள். அவள் தன் இரு கரங்களையும் கோர்த்துக் கொண்டு, தலைக்குக் கீழ் வைத்துக் கொண்டாள். ஒட்டுப்போட்டுத் தைத்துப் பழசான பூட்ஸை அணிந்திருந்த ரீத்தாவின் கடைந்தெடுத்த கால்கள், வளர்த்தியான புல்லுக்கிடையே மறைந்திருந்தன.

அகஸ்மாத்தாக, ஸெர்யோஷாவின் பார்வை ரீத்தாவின் பாதங்கள் மீது பதிந்தது. அவளது பூட்ஸ் நேர்த்தியாகப் பழுது பார்க்கப்பட்டிருப்பதைக் கவனித்தான். அதன் பின், ஓட்டை வழியே விரல் வெளியே நீட்டிக்கொண்டிருக்கும்

நிலையில் இருந்த தன் பூட்ஸையும் பார்த்தான்; பார்த்துவிட்டுச் சிரித்தான்.

''எதனைப் பார்த்து நகைக்கிறாய்?'' என்று அவள் கேட்டாள்.

ஸெர்யோஷா தன் பூட்ஸைக் காட்டினான்.

''இத்தகைய பூட்ஸுடன் நாம் எப்படி சண்டை போடப்போகிறோம்?'' என்று அவன் கேட்டான்.

ரீத்தா பதில் சொல்லவில்லை. அவள் ஒரு புல்லை மென்றுகொண்டிருந்தாள். அவளுடைய சிந்தனைகள் வேறு எங்கோ ஓடிக்கொண்டிருந்தன என்பது வெளிப்படையாகப் புலப்பட்டது.

கடைசியில் அவள் பேசினாள்:

''சுஷானின், ஒரு கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினன். ஆனால் கெட்டுப் போய்விட்டான். நமது அரசியல் இலாகா ஊழியர்களெல்லாம் கந்தல்களை அணிந்து கஷ்டப்படுகிறார்கள். ஆனால் அவன் தன்னைத் தவிர எவரையும்பற்றி எண்ணுவதில்லை. அவனுக்குக் கட்சியின் இயல்பே கிடையாது.... போர்முனையிலோ நிலைமை கவலைக்கு இடம் தருவதாக உள்ளது. நீண்டகாலத்துக்குக் கடுமையான போராட்டம் நடத்த வேண்டிய கடமை நம் தேசத்துக்கு முன்னால் உள்ளது.'' அவள் சற்று நிறுத்திவிட்டு மீண்டும் பேசினாள். ''ஸெர்யோஷா, நாம் வார்த்தைகளாலும் துப்பாக்கிகளாலும் சண்டை போட்டுத் தீரவேண்டும். கம்ஸமோல் உறுப்பினரில் நான்கில் ஒரு பகுதியினரைப் படைக்காகத் திரட்டுவதென்று மத்தியக் கமிட்டி

முடிவு செய்து விட்டது. உனக்குத் தெரியுமா? என்னைக் கேட்டால், நாம் நீண்ட நாட்கள் இங்கு இருக்கமாட்டோம்.''

அவளது பேச்சின் புதிய தொனியைஉணர்ந்து, ஸெர்யோஷா வியந்தான். அவளது நிர்மலமான கரிய விழிகள் அவனையே நோக்கிக்கொண்டிருந்த அந்தச் சமயத்தில், விவேகத்தைத் துறந்துவிட்டு, அவளது கண்கள் முகக் கண்ணாடிகளைப் போலிருப்பதாகக் கூறுவதற்கு அவன் சித்தமானான். ஆனால் உடனேயே அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

ரீத்தா தன் முழங்கையை ஊன்றிக்கொண்டு, தன் தலையை உயர்த்திக் கொண்டாள்.

''உனது ரிவால்வர் எங்கே?'' என்று வினவினாள்.

ஸெர்யோஷா மன வருத்தத்துடன் தன் பெல்ட்டைத் தடவிக் கொண்டான்.

''அந்தக் குலாக்குகளின் கோஷ்டி என்னிடமிருந்து அதைப் பிடுங்கிக்கொண்டு விட்டது'' என்றான்.

ரீத்தா தன் சட்டைப் பையில் கையை விட்டுப் பளபளவென்று மின்னும் ஒரு தற்சலன பிஸ்டலை எடுத்தாள்.

அவர்கள் இருந்த இடத்திலிருந்து சுமார் இருபத்தைந்து மீட்டர் தூரத்தில், சுருக்கம் விழுந்த அடிமரத்தை உடைய ஒரு ஓக் மரம் இருந்தது. கைத்துப்பாக்கியின் முனையால் அதைச் சுட்டிக்காட்டிக்கொண்டே, ''ஸெர்யோஷா, அந்த

மரத்தைப்பார்த்தாயா?'' என்றுரீத்தாகேட்டாள். அவன் அதைப் பார்த்தான். ரீத்தா தன் கண்களின் மட்டத்துக்குக் கைத்துப்பாக்கியை உயர்த்திக் கொண்டு சுட்டாள். அவள் குறிபார்த்துச் சுட்ட தாகத் தோன்றவில்லை. ஆனால் மரப்பட்டை பெயர்ந்து துண்டு துண்டாகச் சிதறி விழுந்தது.

''பார்த்தாயா?'' என்று தன் திறமையில் திருப்தி அடைந்தவளாகக் கேட்டுக்கொண்டே, ரீத்தா மீண்டும் சுட்டாள். மீண்டும் மரப்பட்டை பெயர்ந்து சிதறிப் புல்லின் மீது விழுந்தது.

''இந்தா! சுடு. பார்க்கலாம்'' என்று கேலிச் சிரிப்புடன் சொல்லிக்கொண்டே, கைத்துப்பாக் கியை ஸெர்யோஷாவிடம் கொடுத்தாள்.

அவன் மூன்று தடவை சுட்டான். ஒரு தட வை குறி தவறியது. ரீத்தா, புன்னகை ஒன்றுடன், ''இன்னும் மோசமாகச் சுடுவாய் என்று எண்ணி னேன்'' என்றாள்.

அவள் பிஸ்டலைக் கீழே வைத்துவிட்டு, புல் மீது உடலை நீட்டிப் படுத்தாள். அவளது சட்டை அவளுடைய உறுதியான மார்பின் மீது இறுக்கிக் கொண்டிருந்தது.

''ஸெர்யோஷா, இங்கே வா'' என்று அவள் கனிவான குரலில் கூப்பிட்டாள்.

அவன் அவள் அருகில் சென்றான். ''வானத் தைப் பார். அது எவ்வளவு நீலமாயிருக்கிறது, உன் கண்களும் அதே நிறம்தான். ஆனால் அது நல்லதல்ல. உன் கண்கள் சாம்பல் நிறமாயிருக்க

வேண்டும், உருக்கு மாதிரி. நீலம் என்பது மிகவும் மிருதுவான நிறம்!''

திடீரென்று, அவள் அவனது பொன்னிறத் தலையைப் பற்றிக்கொண்டு, உதடுகளில் முத்தமிட்டாள்.

இரண்டு மாதங்கள் கழிந்தன. இலையுதிர் காலம் வந்தது.

இரவு கள்ளத்தனமாகத் தவழ்ந்து முன்னேறி, எங்கும் பரவிப் படர்ந்தது. அதன் கரிய முக்காடு மரங்களை மூடி மறைத்தது. டிவிஷன் காரியாலயத் தந்தி ஊழியன் மார்ஸ் குறிகளைப் பதிவுசெய்துகொண்டிருந்த தன் கருவியின் மீது சாய்ந்தபடியே, தன் விரல்களுக்கு அடியில் பாம்பு சுருள்வதுபோலச் சுருண்டுகிடந்த நீண்ட குறுகிய நாடாவைக் கையில் எடுத்து, புள்ளிகளையும் கோடுகளையும் வார்த்தைகளாகவும் வாசகங்களாகவும் வேகமாகச் செய்து கொண்டிருந்தான். அவ்வாறு செய்த அவனுக்குக் கிடைத்த செய்தி:

''முதல் டிவிஷன் படைக்காரியாலயத் தலைவனுக்கு,

''பிரதி:ஷெப்பெத்தோவ்க்கா நகரப் புரட்சிக் கமிட்டித் தலைவனுக்கு,

''நகரத்தின் சகல அதிகார ஸ்தாபனங்களையும், இந்தத் தந்தி கிடைத்த பத்து மணி நேரத்துக்குள் காலி செய்துவிடுக. ஒரே ஒரு பட்டாலியனை, போர்முனைப் பகுதி ஒன்றின் தளபதியான ''N'' ரெஜிமென்டின் தலைவனின் கீழ் செயல்படும்

வண்ணம் நகரத்தில் விட்டுச் செல்லவும். டிவிஷனின் தலைமை அலுவலகமும், அரசியல் இலாகாவும், சகல ராணுவ ஸ்தாபனங்களும் பரன்ச்செவ் ஸ்டேஷனுக்குப் போய்விட வேண்டும். உத்திரவு நிறைவேறிய தகவலை டிவிஷன் தலைவனுக்குத் தெரிவிக்கவும்.

''(கையொப்பம்)''

பத்து நிமிஷங்கள் சென்றபின், உறக்கத்தில் ஆழ்ந்திருந்த நகர வீதிகள் வழியே, முகப்பு விளக்கின் பேரொளியால் இருளைக் கிழித்துக்கொண்டு, ஒரு மோட்டார் சைக்கிள் விரைந்து சென்றது. அது புரட்சிக் கமிட்டியின் வாசலுக்கு வெளியே, இரைச்சலிட்டுக் கொண்டு நின்றது. அதில் வந்தவன் அவசரமாக உள்ளே சென்று, தலைவர் தாலீன்னிக்கிடம் தந்தியைக் கொடுத்தான். உடனடியாக அங்கு முழுவேகத்துடன் செயல்கள் நடைபெறத் தொடங்கின. விசேஷக் கம்பெனி அணிவகுத்தது. ஒரு மணி நேரம் சென்றபின், புரட்சிக் கமிட்டியின் உடைமைகள் ஏற்றப்பட்ட வண்டிகள் நகரத்தின் வழியே பாதோல்ஸ்க் ஸ்டேஷனை நோக்கிக் ''கடகட''வென்ற ஒலியுடன் சென்றுகொண்டிருந்தன. அங்கு அந்த வண்டிகளிலிருந்த சாமான்கள் ரயில் பெட்டிகளில் ஏற்றப்பட்டன.

தந்தியின் உட்பொருளை அறிந்துகொண்ட ஸெர்யோஷா மோட்டார் சைக்கிள் தூதனைப் பின்தொடர்ந்து ஓடினன்.

''தோழரே, மோட்டார் சைக்கிளில் என்னை ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்வீர்களா?'' என்று அவன் அத்தூதனைக் கேட்டான்.

''பின்னால் ஏறிக்கொள். கெட்டியாகப் பிடித்துக்கொள். உஷார்'' என்று தூதன் கூறினான்.

ரயிலுடன் சேர்க்கப்பட்டிருந்த பிரசாரப் பெட்டிக்குப் பத்து மீட்டர் தூரத்தில், ஸெர்யோஷா ரீத்தாவைக் கண்டான். அவனது அன்புக்கு உரியவள் ரீத்தா. அவள் அவனுக்கு மதிப்பிடற்கரிய பொக்கிஷம். அத்தகைய ரீத்தாவை இழக்கப் போகிறேனே என்ற திகிலுடன் ஸெர்யோஷா அவளை அணுகினான்; அவளது தோட்களைப் பற்றிக் கொண்டான்; ''ரீத்தா, அன்புள்ள தோழி, போய்வா. நாம் மீண்டும் எப்பொழுதாவது சந்திப்போம். என்னை மறந்துவிடாதே'' என்று அவள் காதில் இரகசியமாகக் கூறினான்.

துக்கத்தால் கண்களில் நீர் மல்குவதையும் குரல் விக்குவதையும் கண்டு ஸெர்யோஷா அஞ்சினான். அவன் உடனே போக வேண்டும். பேசுவதற்குத் தேவையான தன்னம்பிக்கை அவனிடம் இல்லை; எனவே, அவளது கரம் நோகும் வகையில், அதைப்பற்றி முறுக்கினான்.

பொழுது விடிந்தது. டவுனும் ஸ்டேஷனும் வெறிச்சென்று கிடந்தன. கடைசி ரயிலும், பிரியா விடை பெறுவதைப் போல, 'விஸில்' ஊதிச் சென்று விட்டது. நகரத்தில் விட்டுச் செல்லப்பட்டிருந்த பட்டாளத்தினர் ரயில் நிலையத்திற்குப் பின்

புறத்தில் இருப்புப் பாதையின் இருபுறங்களில் மறைந்து கொண்டனர்.

மரங்களிலிருந்து பழுத்துக் காய்ந்த இலைகள் உதிர்ந்தன; கிளைகள் வெறுமையாகக் காட்சி அளித்தன. காற்று விழுந்த இலைகளைப் பற்றிக் கொண்டு, பாதையில் மெதுவாக அவற்றை சுழற்றிக் கொண்டிருந்தது.

செஞ்சேனை வீரர்களுக்கான மேல்கோட்டை அணிந்து கொண்டு, தோள்களிலிருந்து கித்தான் தோட்டாப் பைகளைத் தொங்க விட்டுக் கொண்டு, ஸெர்யோஷா ஒரு டஜன் செஞ்சேனை வீரர்களுடன், சீனி உற்பத்திச் சாலைக்கு எதிரில் இருந்த சாலைச் சந்திப்பில் நின்று கொண்டிருந்தான். போலிஷ் படைக்காக அவர்கள் காத்திருந்தனர்.

அவ்தொனேம் பெத்ரோவிச், அண்டைவீட்டுக் கதவைத் தட்டினன். அந்த வீட்டில் வசித்த கெராஸிம் லெயோன்தியெவிச், அப்பொழுதுதான் படுக்கையிலிருந்து எழுந்திருந்ததால், தகுந்த வண்ணம் உடை அணிந்திருக்கவில்லை. எனவே கதவுக்கு வெளியே தன் தலையை மட்டும் நீட்டிக் கொண்டு வினவினன்:

''என்ன நடக்கிறது?''

தெருவில் சென்று கொண்டிருந்த செம்படை வீரர்களைச் சுட்டிக்காட்டிவிட்டு, அவ்தொனேம் பெத்ரோவிச் கண்களைச் சிமிட்டிக் கொண்டே, கூறினன்:

''அவர்கள் வெளியேறுகிருர்கள்.''

கெராஸிம் லெயோன்தியெவிச், மற்றவனைக் கவலையுடன் பார்த்து விட்டுக் கேட்டான்:

''போலிஷ் சின்னம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?''

''ஒற்றைத் தலைக் கழுகு என்று நினைக்கிறேன்.''

''அந்தச் சின்னம் எங்கே கிடைக்கும்?'' என்று கேட்டுக்கொண்டே, அவ்தொனோம் பெத்ரோவிச் ஆத்திரத்துடன் தன் தலையைச் சொறிந்து கொண்டான். ஓரிரண்டு விநாடி யோசனை செய்தான்.

''அவர்களுக்கு ஒரு தகராறும் இல்லை. நகரத்தைப் பிடிக்கிறார்கள். பிறகு விட்டுப் போய் விடுகிறார்கள். ஆனால் புதிய அதிகாரிகளிடம் நல்ல பெயர் வாங்கவேண்டுமென்று நாம் கவலைப்பட்டாக வேண்டியிருக்கிறது'' என்று கூறினான்.

ஒரு யந்திரத் துப்பாக்கியின் கடகடச் சத்தம் அமைதியைக் குலைத்தது. எதிர்பாராத வகையில் ஸ்டேஷனிலிருந்து ஒரு எஞ்சின் விசில் ஊதிய சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து ஸ்டேஷனிலிருந்தே ஒரு பீரங்கி வெடிக்கும் சத்தம் காதில் விழுந்தது. ஒரு கனமான வெடிக்குண்டு காற்றைத் துளைத்துக்கொண்டு, சிணுங்கிய படியே உயரச் சென்றது. அது சீனி உற்பத்திச்சாலைக்கு அப்பால் இருந்த சாலை மீது விழுந்தது; சாலையோரத்துப் புல்பூண்டுகளை நீலப்புகையின் மேகம் மூடியது. பின்வாங்கிய செஞ்சேனை வீரர்கள் அமைதியாக, வரிசை வரிசையாக, அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டே வீதிகளின் வழியே சென்றனர்.

ஸெர்யோஷாவின் கன்னத்தில் ஒரு கண்ணீர்த் துளிச் சொட்டு குளிர்ச்சியான வழியை வகுத்துக் கொண்டது. தன் தோழர்கள் தன்னைக் கவனிக்கிறார்களா என்று கள்ளத்தனமாக நோக்கிவிட்டு, ஸெர்யோஷா கன்னத்தைத் துடைத்துக் கொண்டான்.

ஸெர்யோஷாவுக்குப் பக்கத்தில் ஆன்தெக் கிலொப்பொதோவ்ஸ்கிய் நடந்தான். மெலிந்து போன உடலமைப்பை உடைய அவன், மரப்பலகை அறுக்கும் மில்லில் வேலை செய்தான். அவனது விரல் துப்பாக்கிக் குதிரைமீது அமர்ந்திருந்தது. ஆன்தெக் கவலையும் வருத்தமும் நிறைந்தவனாய் இருந்தான். அவனது கண்கள் ஸெர்யோஷாவின் கண்களைச் சந்தித்தபொழுது தன்னை வதைத்துக் கொண்டிருந்த விஷயங்களை ஸெர்யோஷாவிடம் கூறினான்.

''நமது உற்றார் உறவினர்களை அவர்கள் இம்சித்து வதைப்பார்கள். குறிப்பாக என் குடும்பத்தினரைப் படாதபாடுபடுத்துவார்கள். ஏனென்றால் நாங்கள் போலிஷ்காரர்கள். 'போலிஷ்காரனாயிருந்தும் போலிஷ் படையை எதிர்த்தாயா?' என்று அவர்கள் கேட்பார்கள். மரப்பலகை அறுக்கும் மில்லிலிருந்து அவர்கள் என் தகப்பனை உறுதியாக வெளியேற்றுவார்கள். சவுக்கால் அடிப்பார்கள். நம்முடன் வரும்படி அவரைக் கேட்டுக்கொண்டேன். ஆனால் அவருக்குக் குடும்பத்தைவிட்டுப் பிரிய மனமில்லை. அந்தப் பாபிகளை இப்பொழுதே ஒழிக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!''

முன்னுக்கு வந்து கண்களை மறைத்த நெட்டைக்கட ஆன்டெக் ஆத்திரத்துடன் பின்னுக்குத் தள்ளி ஞன்.

....அன்புக்குரிய பழைய டவுனே! விசால மாகவும் அழுக்கு அடைந்ததாயும் இருந்த போதிலும், அவலட்சணமான குடிசைகளையும் கோணல் மாணலான சாலைகளையும் உடையதாக இருந்தபோதிலும், அன்புக்குப் பாத்திரமாகியுள்ள உனக்கு, வணக்கம்! விடைகொடு அன்புக்குரிய வர்களே, போய் வருகிறேன். வால்யா! தலைமறை வாயிருந்து பணியாற்ற இருக்கும் பிற தோழர் களே! பிரியா விடை கொடுங்கள். போலிஷ் வெள்ளைப் படைகள், ஈவிரக்கமில்லாதவர்கள், கொடுமையை அறமாகக் கொண்டவர்கள், அந் நியர்கள், வந்து கொண்டிருக்கிறார்கள்!

செஞ்சேனை வீரர்கள் நடைபோட்டுச் செல் வதை, எண்ணெய்க் கறைச் சட்டைகளை அணிந்த ரயில்வே தொழிலாளர்கள் துக்கத்துடன் நோக் கினார்கள்.

''தோழர்களே! நாங்கள் திரும்பி வரு வோம்!'' என்று வேதனை வருத்தும் இதயத்துடன் செர்யோஷா கூவினான்.

அத்தியாயம் எட்டு

காலைநேர மூடுபனியில் ஆற்று நீர் மங்கலா கப் பிரகாசித்தது. கரைகளின் மிருதுவான கூழாங் கற்கள்மீது உராய்ந்து செல்லும் நீரோட்டம்

சலசலவென்று சப்திக்கிறது. கரையிலிருந்து நடு ஆறு வரை நீர் அமைதியாக இருக்கிறது; அதன் பரப்பு தெளிவாகவும் வெண்மையாகவும் காட்சி யளிக்கிறது. ஆனால் நட்டாற்றில், நீர் கருத்து, ஓய்வை வெறுத்து, துரிதமாக ஓடிக்கொண்டிருக் கிறது. கோகலின்* எழுத்தால், இலக்கியத்தில் அமர வாழ்வைப் பெற்றுள்ள இந்த நதி, மாட்சி மை மிகுந்த வனப்புடன் மாந்தர் உள்ளத்தைக் கவர்கிறது. அதன் வலது கரை ஓங்கி வளர்ந்திருக் கிறது. அது செங்குத்தாக இறங்கி, நீர் விளிம் புடன் சேர்கிறது. அகன்ற ஆற்றினால் இடை மறிக்கப்பட்ட மலையொன்றைப் போன்று அது த்நேப்பரை நோக்கி நின்று கொண்டிருந்தது. இடதுகரை தாழ்வானது. இளவேனிற்காலத்து வெள்ளம் அந்தக் கரையை மூழ்கடித்துப் பாய் வது சகஜம். அந்தக் கரைமீதுள்ள ஆற்று மணல் திட்டுகள், வெள்ளம் வடியுங்கால் விட்டுச் சென் றனவாகும்.

ஆற்றுக்கருகே, ஒரு சிறு அகழியில் ஒரு சப் பை மூக்கு 'மாக்ஸீம்' யந்திரத் துப்பாக்கிக்கு அருகில் ஐவர் படுத்திருந்தனர். இது ஏழாவது துப்பாக்கி டிவிஷனின் முன்னணியில் இருந்த புறக் காவலாகும். அந்த யந்திரத் துப்பாக்கியை ஒட்டி னாற்போல, நதியை நோக்கிப் படுத்திருந்தவனே, ஸெர்யோஷா புருஸ்ஷாக்.

***கோகல் நி. வ.** *(1809—1852)*—பெயர் பெற்ற ருஷ்யா எழுத்தாளர்.

முடிவு காண முடியாத சண்டைக்க்
சோர்ந்து, போலிஷ் பீரங்கிகளுக்குமுன் தாக்குப் பிடிக்கமுடியாத அவர்கள், முதல் நாள்தான் கீவ் நகரைப் பகைவர்களிடம் விட்டு விட்டு, நதியின் இடது கரைக்குப் பின்வாங்கினர்; அங்கு தங்களை நிலைப்படுத்திக் கொண்டனர்.

பின்வாங்கியதாலும் ஏராளமான நஷ்டத்தை அடைந்திருந்ததாலும் கீவ் நகரத்தையே பறிகொடுத்து விட்டதாலும், செம்படை வீரர்கள் மனம் வருந்தினர். ஏழாவது டிவிஷன், வீரஞ் செறிந்த போரை நடத்திப் பகைவனது முற்றுகையைத் தகர்த்துவிட்டுக் காடுகள்வழியே, மாலின் ஸ்டேஷனுக்கு அருகில் இருப்புப்பாதைவரை முன்னேறியது. முழுவேகத்துடன் ஒரு தாக்குதலைத் தொடுத்து, போலிஷ் படைகளை விரட்டியது; இவ்வாறாக, கீவுக்குச் செல்லும் பாதையைத் தன் வசப்படுத்தியது.

ஆனால் அந்த அழகிய நகரத்தைக் கைவிட நேர்ந்தது. செம்படை வீரர்கள் இந்த நஷ்டத்தை எண்ணி மிகவும் துயருற்றார்கள்.

போலிஷ் படையினர்கள் தார்னித்ஸா என்னும் இடத்திலிருந்து செஞ்சேனை யூனிட்டுகளைத் துரத்திவிட்டு, ஆற்றின் இடது கரையில், ரயில்வே பாலத்துக்கு அருகில் ஒரு சிறிய தளத்தைப் பிடித்துக்கொண்டு விட்டனர். ஆனால் செம்படைகளின் மூர்த்தண்யமான எதிர்த்தாக்குதல்கள் அதற்கு மேலும் முன்னேற முடியாமல் போலிஷ் படைகளைத் தடுத்தன.

ஆற்று நீரோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஸெர்யோஷா, முதல் நாள் நிகழ்ச்சிகளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான்.

நேற்று நண்பகல், அவனது யூனிட் போலிஷ் சிப்பாய்களை வெஞ்சினத்துடன் எதிர்த்துத் தாக்கியது. நேற்றுத்தான், முதன் முதலாக அவன் விரோதியுடன் நேருக்குநேர் சண்டை போட்டான். மீசை அரும்பாத போலிஷ் சிப்பாய் ஒருவன், அவன் மீது பாய்ந்து வந்தான். ஒரு பெரிய, வாள் போன்ற பாய்னெட்டால் குத்த முயன்றான். அவன் புரியாத வாசகத்தைக் கத்திக்கொண்டு முயல் போல் பாய்ந்தான். நொடிப்பொழுது, ஸெர்யோஷா எதிரியின் வெறி பிடித்துப் பருத்த கண்களைப் பார்த்தான். அடுத்த விநாடி, ஸெர்யோஷாவின் பாய்னெட்டும் போலிஷ் சிப்பாயின் பாய்னெட்டும் ஒன்றையொன்று தாக்கிக்கொண்டன. போலிஷ்காரனின் பிரெஞ்சு பாய்னெட் ஒருபக்கமாக விலகியது. அந்தச் சிப்பாயும் விழுந்தான்....

ஸெர்யோஷாவின் கரம் தடுமாறவில்லை. பலரைக் கொன்றாக வேண்டுமென்பதை ஸெர்யோஷா அறிவான். அவன் மென்மையான அன்பைச் செலுத்திப் பிறரை நேசிக்கும் பண்பை மிகுதியாகப் பெற்றவன்தான். இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியா நண்பனாகச் சிறக்கும் சினேகித தர்மத்தை உடையவன்தான். அவன் இயல்பாகக் கொடியவன் அல்ல; வர்மம் கொண்டவன் அல்ல. எனினும், சர்வதேசப் புல்லுருவிக் கூட்டம் மிருகத்தனமான வெறுப்பின் வெறியை இந்தச்

சிப்பாய்களுக்கு ஏற்றி, அவனுடைய தாயகத்தின் மீது ஏவிவிட்டிருக்கிறது. எனவே, வெறியில் பார்வை இழந்து நின்ற இந்தச் சிப்பாய்களை எதிர்த்துப் போராடவேண்டியதாய் உள்ளது. மனிதர் ஒருவரை யொருவர் ஒருபொழுதும் கொல்லாது வாழும் நாளின் வருகையைத் துரிதப்பத்துவதற்காகவே ஸெர்யோஷா சண்டை போட்டுச் சத்துருக்களை வதம் செய்தான்.

பரமோனவ் அவனது தோளைத் தட்டினான்.

''ஸெர்யோஷா, நாம் நகரலாம். இல்லாவிட்டால் அவர்கள் நம்மைக் கண்டுபிடித்துவிடுவார்கள்'' என்றான்.

ஓராண்டு காலமாகப் பாவெல் கர்ச்சாகின் இயந்திரத்துப்பாக்கி வண்டியிலும், பீரங்கி வண்டியிலும், வெட்டுபட்ட காதைக் கொண்ட சிறிய குதிரை மீதும் தன் தாய்நாடு முழுவதும் சுற்றி வந்தான். பக்குவம் கொண்டான்; உறுதிபெற்றான்; இன்னல்களுக்கும், இடையூறுகளுக்கும் இடையே வளர்ந்து மனிதனாக மாறினான். ஆரம்பத்தில், கனத்த தோட்டாக்களின் பைகள் வருத்தியதால் அவனது தோல் அழற்சி கண்டது. ஆனால் அதெல்லாம் மறைந்து இப்பொழுது பல நாட்களாகிவிட்டன. துப்பாக்கியின் வார்ப்பட்டை உராய்ந்தஅவனதுதோள்பட்டையில், இப்பொழுது தோல் கெட்டிதட்டி, காய்ப்பேறி விட்டது.

அந்த ஓராண்டில் பாவெல் பல பயங்கரமான அனுபவங்களைப் பெற்றான். அவனைப் போலவே,

அரைகுறையாகக் கந்தல் உடுப்புகளை அணிந்த ஆயிரக் கணக்கான செஞ்சேனை வீரர்களுடன் சேர்ந்துநின்று, தொழிலாளிவர்க்க ஆட்சிக்காக விடாப்பிடியாக வெஞ்சமர்செய்யும் வைராக்கியத்துடன், நாடெங்கும் சென்று, புரட்சிப்போரில் பங்குகொண்டான். இரண்டு சந்தர்ப்பங்களில் தான் அவன் புரட்சிப் புயலிலிருந்து ஒதுங்கி நிற்க வேண்டியதாயிற்று: அவன் தொடையில் காயம் பட்ட சந்தர்ப்பம் ஒன்று; 1920ம் வருஷத்தின் கடுங்குளிரில், டைபஸ் ஜுரத்தின் தொட்டால் ஒட்டிக் கொள்ளும் வெப்பத்தால் அவன் வியர்த்துப் புழுங்கிக் கஷ்டப்பட்ட சமயம் இன்னொன்று.

பன்னிரண்டாவது ராணுவத்தில் போலிஷ் யந்திரத் துப்பாக்கிகளைவிட அதிகமான வீரர்களை டைபஸ் பழிவாங்கியது. அப்பொழுது அவர்களது ராணுவம், பரந்துகிடக்கும் வடக்கு உக்ரேய்ன முழுவதிலும் வியாபித்து நின்று, போலிஷ் படைகளின் முன்னேற்றத்தைத் தடுத்து இருந்தது. பாவெல், ஜுரம் நீங்கியவுடனேயே, பட்டாளத்துக்குத் திரும்பிவிட்டான்.

இப்பொழுது அவனது ரெஜிமென்டு, கஸாத்தீன்-ஊமான் இருப்புப்பாதையில், காட்டின் நடுவில் இருந்த பிரன்தோவ்காவிலிருந்தது. அங்கே, ஆள் இல்லாத சில குடிசைகள் பிரிந்துகிடக்க, அவற்றுக்கு இடையே சிறிய ஸ்டேஷன் கட்டிடம் காட்சியளித்தது. மூன்று வருடங்களாகப் போர் விட்டுவிட்டு நடந்துகொண்டிருந்த காரணத்தால், இந்தப் பகுதியில் ஜனங்கள் வாழ்க்கை

நடத்துவது என்பது அசாத்தியமாகி விட்டது. பிரன்தோவ்கா கைமாறிய தடவைகளைக் [illegible]கிட முடியாது.

மீண்டும், பெருஞ் சம்பவங்கள் உருவாகிக் கொண்டிருந்தன. பன்னிரண்டாவது ராணுவம் பயங்கரமான அளவுக்குச் சுருங்கிவிட்டதென்பது உண்மை; அதன் ஸ்தாபனம் ஓரளவுக்குச் சீர் குலைந்திருந்ததும் மெய்; போலிஷ் படைகளின் நிர்ப்பந்தத்தைச் சமாளிக்க முடியாமல், அது கீவுக்குப் பின்வாங்கியதும் மெய்; ஆனால் அதே சமயத்தில், வெற்றி போதை தலைக்கேறியனவாக நின்ற போலிஷ் வெள்ளைப் படைகளை அழிக்கும் வகையில் தாக்குவதற்குத் தொழிலாளி வர்க்கக் குடியரசு அதன் சக்திகளைத் திரட்டிக்கொண்டிருந் தது.

சண்டைகளில் உறுதிபெற்ற முதலாவது குதிரைப் படையின் டிவிஷன்கள் வட காக்கஸஸி லிருந்து உக்ரேய்னுவுக்குக் கொண்டுவரப்பட்டன. இந்த நெடுந்தூர யாத்திரை, அதற்கு முந்தைய ராணுவ வரலாற்றில் இணை காணமுடியாத சம் பவமாகும். நான்காவது, ஆறுவது, பதினென்ரு வது, பதினன்காவது குதிரைப்படை டிவி ஷன்கள், ஒன்றன்பின் ஒன்ருக ஊமான் பிரதே சத்தை அடைந்தன. அவை, போர்முனைக்குப் பின் னுலுள்ள பிரதேசத்தில் குழுமின; தீர்மானமான சண்டைகள் நிகழவிருந்த களத்துக்குப் போன பொழுதே, வழியில் இருந்த மாஹ்னே தலைமை யில் இயங்கிய கொள்ளைக்கூட்டங்களை அழித்தன.

பதினாறாயிரத்து ஐநூறு வாட்கள்; பரந்து விரிந்த ஸ்டெப்பி வெளியில், தகிக்கும் வெயிலில் அடிபட்டுக் கன்றி உறுதிபெற்ற பதினாறாயிரத்து ஐநூறு போர் வீரர்கள்.

தாக்குதலுக்குத் தயாரிப்பு நடப்பதைப் பற்றித் தகவல் அறிந்து, முன்கூட்டியே அதைக் குலைக்கும் நடவடிக்கையில் பகைவன் இறங்கக் கூடாது என்பதே, இந்தச் சமயத்தில், செஞ் சேனைத் தலைமைக்கும் தென்மேற்கு போர்முனைத் தலைமைக்கும் பெருங்கவலையாகவிருந்தது. இந்தப் பெரிய குதிரைப்படைகளை ஒருசேர இணைப்பதில் வெற்றி காண்பதற்காகச் சகல முன்னேற்பாடு களும் செய்யப்பட்டன.

ஊமான் பிரதேசத்தில் தீவிர ராணுவ நட வடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டன. மாஸ்கோ விலிருந்து, கார்க்கவிலிருந்த போர் முனைத் தலைமைக் காரியாலயத்துக்கும் அங்கிருந்து பன் னிரண்டாவது, பதினான்காவது ராணுவங்களின் தலைமைக்காரியாலயங்களுக்கும், நேரடித் தொடர் பாகவிருந்த தந்திக் கருவிகள், இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்தன. ''குதிரைப் படைத் திரட்டுதல் பற்றி போலிஷ் தலைமைக் காரியாலயம் அறியாமலிருக்க வேண்டும்'' என்ற உத்திரவு, தந்திக்கம்பிகள் வழியே வந்துகொண்டேயிருந்தது. போலிஷ் படைகள், புத்யோன்னியின் குதிரைப் படைகளை நெருங்கிவிடக் கூடிய நிலைமை ஏற் பட்ட பொழுதே, செம்படைகள் போலிஷ் படைகளைத் தீவிரமாக எதிர்த்தன.

படை முகாமில் தீ வளர்க்கப்பட்டிருந்தது. சுவாலைகள் செந்நாக்குகளைப்போலக் காட்சியளித்தன. நெருப்பிலிருந்து கிளம்பி, மேல்நோக்கி வளைந்து சென்ற கரும்புகைச் சுருள்கள். சிற்றுயிர்களுக்குப் புகையிடம் வெறுப்பு; அமைதியற்ற அவை கூட்டம் கூட்டமாக, சுறுசுறுப்பாக தீயைச் சுற்றி வட்டமிட்டன. விசிறி வடிவத்தில் வீரர்கள் தீயைச்சுற்றி அமர்ந்திருந்தனர். அந்த நெருப்பு பிரதிபலித்த காரணத்தால், அந்தச் சிப்பாய்களின் முகங்கள் தாமிரத்தின் நிறத்துடன் ஒளிர்ந்தன.

தீக்கணப்பு அருகில் நீலநிறத் தணலில், வீரர்களின் கிண்ணங்கள் சூடாகிக் கொண்டிருந்தன. அவற்றில் நீர் கொதித்துக் கொண்டிருந்தது.

திடீரென்று, ஒரு கொள்ளிக்கட்டையின் அடியிலிருந்து கிளம்பிய சுவாலை தவறிப்போய் ஒரு சிப்பாயின் பரட்டைத் தலையை நக்கியது. அவன் தன் தலையைச் சுண்டிப் பின்வாங்கினான். "சீ! பாழாய்ப்போன தீ!" என்று முணுமுணுத்தான். நெருப்பைச் சுற்றிக் கூடியிருந்தவர் அனைவரும் சிரித்தனர்.

ராணுவக் கம்பளிச் சட்டை அணிந்த, கத்தரித்துவிட்ட மீசை உடைய நடுத்தர வயதுள்ள செஞ்சேனை வீரன் ஒருவன் நெருப்பை நோக்கி துப்பாக்கியை நீட்டிக்கொண்டு அதன் குழாயைச் சோதித்துவிட்டு மந்தமான குரலில் கூறினான்:

"அந்த இளைஞன், புத்தகப் படிப்பில் மெய் மறந்து விட்டான்! நெருப்பின் சூட்டைக்கூட உணரவில்லை!"

''கர்ச்சாகின், என்ன படிக்கிறுய்? எங்களுக்கும் சொல்லக் கூடாதா?'' என்று ஒருவன் வினவினுன்.

செஞ்சேனே இளேஞன், தீயில் பொசுங்கிய தன் கேசத்தை விரல்களால் தடவிக்கொண்டே, புன்னகை செய்தான்.

''உண்மையிலேயே நல்ல புத்தகம், தோழர் அன்திரொஷ்சூக்! எடுத்த நூலேக் கீழே வைக்க முடியவில்லே.''

பாவெலுக்கு அருகில் அமர்ந்திருந்தான் துருத்திய மூக்குடன் கூடிய ஒரு இளேஞன். அவன் தனது தோட்டாப் பையின் தோல்வாரைக் கஷ்டப்பட்டுப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு முரட்டு நூலேக் கடித்துத் துண்டித்துக் கொண்டே ஆவலுடன் கேட்டான்:

''அதில் எதைப் பற்றி எழுதுகிறுர்கள்?''

ஊசியைத் தொப்பியில் குத்திவிட்டு அதன் மேல் மீதி நூலேச் சுற்றிக் கொண்டே மேலும் கூறினுன்:

''இது காதற் கதையானுல் நானும் உன்னுடன் சேர்ந்து படிக்க விரும்புகிறேன்.''

இதைக் கேட்டவுடன் அனேவரும் உரக்கக் கலகலவென்று சிரித்தனர். மாத்வெய்ச்சூக் குட்டையாக வெட்டப்பட்ட மயிர்கள் கொண்ட தன்தலேயைத் தூக்கிக் கொண்டு, குறும்புப் பார்வையுடன், விஷமமாகக் கண்களேச் சிமிட்டிக் கொண்டே அந்த இளேஞனே நோக்கி சொன்னுன்:

''ஸெரெதா, அன்பு என்பது நேர்த்தியானது. நீயோ கவர்ச்சியான இளைஞன்; நிறை அழகுக் குரிய ஓவியம்! நாம் எங்கு சென்றாலும், பெண் கள் உன்னைத் துரத்திக்கொண்டு வருகிறார்கள்! ஓடுகிற ஓட்டத்தில் அவர்களது பாதரட்சைகள் பிய்ந்துவிடுகின்றன! உன்னைப் போன்ற சுந்தர இளைஞனின் வசீகரமான வதனத்தில் ஒரு களங் கம் இருப்பது விசனிக்கத்தக்கது. உனக்கு மூக்கு இருக்கவேண்டிய இடத்தில் வட்டமான ஒரு காசு இருக்கிறது. ஆனாலும் என்ன? அதை எளிதில் சரிசெய்து விடலாம். இரவில் படுக்கச்செல்லும் பொழுது, ஒரு நான்கு கிலோகிராம் எடையுள்ள எரிகுண்டை மூக்கில் கட்டிக்கொள்! காலையில் மூக்கு சரியாகிவிடும்!''

இந்த நையாண்டிப் பேச்சைத் தொடர்ந்து எழுந்த சிரிப்பின் பேரொலியைக் கேட்டு, யந்திரத் துப்பாக்கி வண்டிகளில் கட்டப் பட்டிருந்த குதிரைகள் நடுங்கிக் கனைத்தன.

ஸெரெதா தன் முகத்தை அலட்சியமாகத் திருப்பினான்.

''முக்கியமான விஷயம், முக அழகு அல்ல; மூளையின் தன்மை'' என்று சொல்லிவிட்டுத் தன் கருத்தைப் புலப்படுத்தும் வகையில் நெற்றி யைத் தட்டினான். ''உன்னையே நோக்குவோம். குத்தி வருத்தும் காஞ்சொறி மாதிரி நாக்கு உனக்கு இருக்கிறது. ஆனால் உனக்கும் கழுதைக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. சொரணையில்லாத மிருகம் நீ.''

வாய்ச்சண்டை முற்றிக் கைச்சண்டையாக ஆகிவிடும் போலிருந்தது. அப்பொழுது, ஸெக்ஷன் தலைவன் இருவரையும் நோக்கி, ''என்ன மதியீனம் இது! ஏன் கோபம் கொள்கிறீர்கள்?'' என்று கடிந்துகொண்டான். ''கேட்பதற்குத் தகுதியான புத்தகமானால், தர்ச்சாகின் அதைப் படிக்கட்டும்'' என்று அவன் யோசனை கூறினான்.

''அதுதான் சரி, பாவெல், படி'' என்று அனைவரும் அவனை வலியுறுத்தினர்.

பாவெல் ஒரு சேணத்தைக் கொண்டுவந்து, நெருப்புக்கு அருகில் போட்டுக்கொண்டு, அதில் அமர்ந்தான். மடியின் மீது ஒரு பருமனான சிறிய புத்தகத்தை வைத்துக்கொண்டு பிரித்தான்.

''தோழர்களே, இது ஆர்தர் பர்ட்டன்* கதை, பட்டாலியன் கமிஸார் எனக்குக் கொடுத்தார். இப்புத்தகம் என்னை ஆட்கொண்டுவிட்டது. அமைதியாக இருந்தீர்களானால் நான் படிக்கிறேன்'' என்றான்.

''உடனே தொடங்கு. எவரும் தலையிட்டுத் தொல்லை செய்யாமல் பார்த்துக் கொள்வோம், கவலைப்படாதே.''

சிறிதுநேரம் சென்றபின், ரெஜிமென்டு தலைவனாகிய தோழர் புஸிரேவ்ஸ்க்கிய், தன் கமிஸாருடன் அந்த இடத்தை நோக்கிக் குதிரை மீது வந்தபொழுது, பதினொரு ஜதைக் கண்கள் புத்தகம்

---

*இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது ஆங்கிலப் பெண் எழுத்தாளராகிய ஏ. லி. வோய்னிசின் ''குருட்டு ஈ'' (Voynich, *Gadfly*) என்ற புத்தகம்.

படிக்கும் ஒருவனை உற்றுநோக்கிக் கொண்டிருப் பதைக் கண்டான். அவன் கமிஸாரின் பக்கம் திரும்பினன்.

''ரெஜிமென்டின் வேவுகாரர்களில் பாதிப் பேர் இங்கு இருக்கிறார்கள்'' என்று கூறிக் கொண்டே, உட்கார்ந்திருந்தவர்களைக் காட்டி ஞன். ''இவர்களில் நால்வர், இளங் கம்ஸமோல் காரர்கள். ஆனால் எல்லோருமே நல்ல சிப்பாய்கள். படித்துக் கொண்டிருப்பவன்தான் கர்ச்சாகின். அதோ, ஓநாய்க்குட்டியின் கண்களைப்போன்ற விழிகளை உடையவன்தான் ஷார்க்கீய். அவர்கள் இருவரும் உற்ற நண்பர்கள். ஆனாலும் வாய் பேசா மலேயே எப்பொழுதும் போட்டியிட்ட வண்ண மாய் இருக்கிறார்கள். என்வேவுகாரர்களில், கர்ச்சா கின் தலைசிறந்தவனு யிருந்தான். இப்பொழுது, அவனுடன் தீவிரமாகப் போட்டியிடுவதற்கு ஒரு வன் இருக்கிறான். இவர்கள் இப்பொழுது தங்களை யும் அறியாமல் அரசியல் வேலையில் ஈடுபட்டிருக் கிறார்கள். அதுவும் மிகவும் பயனுள்ளதாக நடை பெறுகிறது. இந்த இளைஞர்கள், 'இளங் காவற் படையினர்கள்' என்று அழைக்கப்படுகின்றன ரென்று அறிகிறேன். என் கருத்தில், அது தகுதி யான பெயர்தான்.''

''படிப்பவன்தான் அரசியல் தலைவனு?'' என்று கமிஸார் வினவினார்.

''அல்ல, அல்ல. கிராமர்தான் அரசியல் தலைவன்'' என்று கூறிவிட்டுத் தலைவன் தன் குதிரையை விரட்டினன்.

''தோழர்களே, வணக்கம்'' என்று அவன் கூவினான்.

அவன் இலேசாகச் சேணத்திலிருந்து இறங்கி, அவர்களிடம் சென்ற பொழுது, சகலரும் அவன் பக்கம் திரும்பினார்கள்.

''நண்பர்களே, குளிர் காய்கிறீர்களா?'' என்று புன்னகையால் மலர்ந்த வதனத்துடன் கேட்டான். அப்பொழுது, மங்கோலிய விழிகளைச் சிறிதளவுக்கு ஒத்துள்ள குறுகலான கண்களை உடைய அவனது முகத்தின் கடுமை மறைந்தது.

சிப்பாய்கள் ஒரு நல்ல தோழனையும் நண்பனையும் எப்படி வரவேற்பார்களோ, அதேபோல, தலைவனையும் வரவேற்றனர். கமிஸார் குதிரையிலிருந்து இறங்கவில்லை.

உறையில் இருந்த பிஸ்டலை ஒரு பக்கம் தள்ளிவிட்டு தலைவன் பாவெலுக்கு அருகில் அமர்ந்தான்.

''புகை பிடிப்போமா? உயர்தரமான புகையிலை கொண்டு வந்திருக்கிறேன்'' அவன் கூறினான்.

தலைவன் ஒரு சிகரெட்டைச் சுற்றிப் பற்ற வைத்துக் கொண்டு, கமிஸாரை நோக்கினான்:

''தாரோனின்! நீ முன்னால் செல். நான் கொஞ்சநேரம் இங்குத் தங்குகிறேன். தலைமைக் காரியாலயத்தில், என் உதவி தேவைப்பட்டால், எனக்குத் தகவல் அனுப்பு.''

தாரோனின் சென்றபின், தலைவன் பாவெலிடம் கூறினான்:

''தொடர்ந்து படி. நானும் கேட்கிறேன்.''

பாவெல் முடிவுவரை படித்தான்; புத்தகத்தை மடியின் மீது வைத்து விட்டு, சிந்தனை நிறைந்தவனாய்ச் செந்தீயை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு சில விநாடிகள் எவரும் பேச வில்லை. ஆர்தரின் சோக முடிவைப் பற்றி எண்ணியவராய் அனைவரும் மனமிடிந்து உட்கார்ந்திருந்தனர். விவாதத் துவக்கத்துக்காகக் காத்திருந்த தலைவன் சிகரெட் புகையைப் பிடித்துக் கொண்டிருந்தான்.

ஸெரெதா முதலில் பேசி அமைதியைக் கலைத்தான்.

''வருத்தமான கதை! இந்த மாதிரி ஜனங்களும் உலகத்தில் இருக்கிறார்கள். இந்த ஆர்தரை வருத்திய இடுக்கண்களையும் இடையூறுகளையும் எதிர்த்து நிற்க, பொதுவாக மனிதர்களால் முடியாது. ஆனால் போராடுவதற்கு ஒரு லட்சியத்தை ஒரு மனிதன் பெற்றுவிட்டால், அவன் எதையும் சமாளிக்கும் ஆற்றலைப் பெற்றுவிடுகிறான்.''

ஸெரெதா உணர்ச்சி வசப்பட்டிருந்ததை அவனது முகமே எடுத்துக் காட்டியது. அந்தப் புத்தகம் அவனது உள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்டது.

''சிலுவையைக் காட்டி ஆர்தரின் வாயைத் திறந்த அந்தப் பாதிரி மட்டும் என் கையில் சிக்கினால், அந்தப் பன்றியைப் பிடிபட்ட இடத்திலேயே தீர்த்துக் கட்டிவிடுவேன்'' என்று செஞ்சேனையில் சேர்வதற்கு முன்னால் ஒரு பூட்ஸ்

தைப்பவனிடம் பயிற்சித் தொழிலாளியாக இருந்த அந்த்ரேய் பொமீச்சேவ் ஆத்திரத்துடன் கூறினன்.

பாத்திரங்களில் ஒன்றைக் கம்பால் நெருப்புக்கு அருகில் நகர்த்திக்கொண்டே, அன்திரொஷ்சூக் கரூராகப் பேசத் தொடங்கினன்:

''லட்சியத்துடன் கூடிய உயிர்த் தியாகம் ஒரு உன்னதமான செயல். லட்சியம்தான் மனிதனுக்கு வலுவைத் தருகிறது. நியாயத்துக்காகப் போராடுகிறோமென்ற தெளிவு இருந்தால், வருத்தமில்லாமல் சாக முடியும். அவ்வாறுதான், வீரர்கள் உண்டாகிறார்கள். எனக்கு ஒரு இளைஞனைப் பற்றித் தெரியும். போராய்க்கா என்பது அவன் பெயர். ஒதேஸ்ஸாவில் வெள்ளைத் துருப்புக்கள் அவனைச் சூழ்ந்துவிட்டன. அப்பொழுது அவன் தன்னந் தனியாக நின்று, ஒரு பிளாட்டூனையே சமாளித்தான். அவர்கள் தம் பாய்னெட்டுகளால் அவனைக் குத்திக் கொல்லுவதற்கு முன்னால், அவன் ஒரு எறிகுண்டை வெடிக்கச் செய்து, தன்னோடு அவர்களையும் சாகச்செய்தான். அவனது தோற்றத்தில் ஒரு பொலிவும் இல்லை. புத்தகங்களில் நாம் மகா புருஷர்களைப் பற்றிப் படிக்கிறோமே, அந்த மாதிரியான நபராக அவன் புலப்படவில்லை. ஆனால் அவனைப் பற்றிப் புத்தகம் எழுதுவது பயன்தரும் செய்கையாகும். அவனைப் போன்ற நேர்த்தியான வாலிபர் பலர் நம்மிடையே இருக்கின்றனர்.''

அவன் பாத்திரத்திலிருந்த தேநீரைக்கரண்டியால் கலக்கிவிட்டு, அதை எடுத்துச் சுவைத்துப் பார்த்துக் கொண்டே, மேலும் பேசினான்:

''சிலர் இழிவான, ஈனமான சாவை அடைகிறார்கள். நாய்ச் சாவு என்று சொல்லலாம். இஸியாஸ்லாவல் என்ற ஊருக்கருகில் நடந்த சண்டையைப் பற்றி உங்களுக்கு ஒரு விஷயம் உதாரணமாகக் கூறுகிறேன். அது கோரின் நதிக்கரையில் கட்டப்பட்ட ஊர்; பழங்கால அரசர்கள் காலத்தில் உண்டான நகரம். அங்கு ஒரு போலிஷ் மாதா கோயில் இருந்தது. அந்த ஆலயம் ஒரு கோட்டையைப் போல அமைந்திருந்தது. நாங்கள் அந்த டவுனுக்குள் பிரவேசித்தோம். நாங்கள், வளைந்து செல்லும் சந்துகள் வழியாக, ஒருவர் பின் ஒருவராகச் சென்றோம். எங்களுக்கு வலது புறத்தில், லாத்வியர்களின் கம்பெனி ஒன்று முன்னேறியது. நாங்கள் சாலையை அடைந்தோம். அங்கு ஒரு வீட்டுக்கு முன்னால் சேணமிட்ட மூன்று குதிரைகள் வேலியில் கட்டப்பட்டிருந்ததைக் கண்டோம். சில போலிஷ் சிப்பாய்களை இங்கு பிடிக்கப் போகிறோமென்று எண்ணினோம். சுமார் பத்து பேர் வெளிமுற்றத்துக்குள் ஓடினோம். எங்களுக்கு முன்னால், லாத்வியர் கம்பெனியின் தலைவன் கைத்துப்பாக்கியைக் காட்டிக்கொண்டே ஓடினான்.

''முன் கதவு திறந்திருந்தது. நாங்கள் உள்ளே விரைந்து சென்றோம். ஆனால் அங்கு போலிஷ் ஆட்கள் இல்லை; நமது ஆட்களே இருந்தனர்.

அவர்கள் காவலர் படைப்பிரிவைச் சேர்ந்த குதிரை வீரர்கள். எங்களையும் முந்தி அங்கு போய் விட்டனர். அங்கு நாங்கள் கண்ட காட்சி வெறுப் பானதாய் இருந்தது. அந்த வீட்டில் வசித்த போலிஷ் அதிகாரியின் மனைவியைப் பலாத்காரம் செய்வதற்கு அவர்கள் முயன்றுகொண்டிருந்தனர். லாத்வியர் கம்பெனியின் தலைவன் இதைக் கண்ட வுடன், தன் சொந்த மொழியில் ஏதோ இரைந்து கூறினான். அவருடைய ஆட்கள் அந்த மூன்று சிப்பாய்களையும் கைப்பற்றி வெளியே இழுத்துக் கொண்டுவந்தனர். எங்களில் இருவரே ருஷ்யர் கள்; மீதிப்பேர் லாத்வியர்கள். அவர்களுடைய தலைவனது பெயர் பிரேதிஸ். அவர்களுடைய பாஷை எனக்குத் தெரியாது. ஆனால் அந்த மூவ ரையும் தீர்த்துக்கட்டும்படி அவன் உத்திரவிட் டிருக்கிறானென்பதை நான் புரிந்துகொண்டேன். லாத்வியர்கள் உறுதியானவர்கள்; ஊசலாடமாட் டார்கள். அவர்கள் அந்த மூவரையும் குதிரை லாயத்துக்குக் கொண்டு சென்றனர். அவர்களது கணக்கு வழக்குத் தீரப்போவதை நான் தெளி வாக உணர்ந்தேன். அந்த மூவரில் ஒருவன் பலங் கொண்ட ஒரு ஆரோக்கியமான மனிதன்; அவன் கைகால்களை உதைத்துக் கொண்டு, தன்னால் முடிந்த அளவுக்குப் போராடினான்; ஆனால் அவனால் திமிற முடியவில்லை. ஒரு பெண்ணுக்காக அவனைச் சுட்டுக் கொல்வதா? அவன் ஒரு நாயைப் போலக் குரைத்தான். மற்ற இருவரும்கூட, இரங்க வேண்டுமென்று கோரிக் கெஞ்சினார்கள்.



''என் உடலெல்லாம் வேர்த்தது; சில்லிட்டுப் போயிற்று. நான் பிரேதிஸிடம் சென்றேன். 'கம்பெனித் தலைவனே! அவர்களை ராணுவ நீதி மன்றம் விசாரணை செய்யட்டும். உனது கரத்தை அவர்களது உதிரத்தால் மாசுபடுத்த வேண்டாம். நகரத்தில் போராட்டம் முடியவில்லை. நாம் இங்கு இந்தக் கழிசடைகளிடம் காலத்தை விரயம் செய்துகொண்டிருக்கிறோம்' என்று கூறினேன். அவன் புலியின் செந்தழல் விழிகளுடன் என்னை நோக்கினான். நாம் ஏன் இதில் தலையிட்டோம் என்று நான் வருந்தினேன். அவன் தனது கைத்துப்பாக்கியை எனக்கு நேராக நீட்டினான். நான் ஏழு வருடங்களாகப் போர்செய்து வருகிறேன். ஆனால் அச்சமயம், எனக்குப் பீதி உண்டாயிற்று என்பதை ஒப்புக்கொள்கிறேன். முதலில் சுடுவதும் பிறகு விசாரிப்பதுமே அவனது திட்டம் என்பதை நான் உணர்ந்தேன். அவன் அரைகுறை ருஷ்ய மொழியில் என்னைப் பார்த்து ஊளையிட்டான்: 'நமது பதாகை, நமது இரத்தத்தில் தோய்ந்து சிவப்பேறியிருக்கிறது. இந்த நபர்கள், நமது ராணுவத்துக்கே அவமானம் தேடித் தருகிறார்கள். கொள்ளையடிப்பவருக்குத் தண்டனை சாவுதான்' என்று அவன் கூறியதை நான் கஷ்டப்பட்டுப் புரிந்து கொண்டேன்.

''அதற்குமேல், அங்கு நிற்பதற்கு என்னால் முடியவில்லை. அந்த இடத்திலிருந்து வீதிக்கு வேகமாக ஓடினேன். பின் பக்கத்தில் அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த ஒலி என் செவியில்

விழுந்தது. அந்த மூவரையும் அவர்கள் கொன்று விட்டனர். நாங்கள் பிற படைவீரர்களைச் சேர்வதற்குள் நகரம் நம் வசமாகிவிட்டது.

''இந்த மூன்று ஆட்களுக்குக் கிடைத்த சாவு தான் நாயின் சாவு என்று நான் சொல்கிறேன். அவர்கள் மெலித்தோப்போல் என்ற நகரில் நம்முடன் சேர்ந்தனர். அதற்குமுன் அவர்கள் மாஹ்னேவின் கொள்ளைக் கூட்டத்தில் இருந்தனர். அவர்கள் குப்பை கூளங்கள்! இழி மக்கள்!''

அன்திரொஷ்கூக் பாத்திரத்தை எடுத்துத் தன்னருகில் வைத்துக்கொண்டு, தனது ரொட்டிப் பையை அவிழ்க்கத் தொடங்கினான்.

''சில சமயங்களில், நம் சேனையில் கூட இத்தகைய கழிசடைகள் தட்டுப்படுகின்றனர். ஒவ்வொருவனும் தூயவனாக இருப்பதாக நாம் சத்தியம் செய்ய முடியாது. வெளிப்பார்வைக்குப் புரட்சி ஆதரவாளராகத் தோன்றுகிறார்கள். அவர்களால் அனைவருக்கும் கெட்ட பெயர். ஆனால் அன்று நான் பார்த்த காட்சி ஆபாசமானது. அதை நான் சடுதியில் மறக்க முடியாது'' என்று கூறி விட்டு தேநீரைக் குடிக்கத் தொடங்கினான்.

அவர்கள் தூங்குவதற்கு முன், இராத்திரிப் பொழுதில் நெடுநேரம் கழிந்துவிட்டது. விசில் அடிப்பது மாதிரி, ஸெரெதா குறட்டைவிட்ட சத்தத்தை, அந்த அமைதியில் நன்றாகக் கேட்க முடிந்தது. புஸிரேவ்ஸ்க்கிய், சேணத்தில் தலையை வைத்துக்கொண்டு உறங்கினான். அரசியல் தலைவன் கிராமர் உட்கார்ந்து குறிப்பெடுத்துக் கொண்டிருந்தான்.

மறுநாள், பாவெல் வேவு வேலை முடித்து விட்டுத் திரும்பினுன்; தனது குதிரையை ஒரு மரத் தில் கட்டினுன்; அப்பொழுதே தேநீர் குடித்து முடித்த கிராமரிடம் சென்று கூறினுன்:

''இதோ பார், கிராமர். நான் முதலாவது குதிரைப்படைக்குச் சென்ருல் என்ன? பார்த்தால், பெரிய சம்பவங்கள் நடக்கும்போல் தோன்று கிறது. அவர்கள் அத்தனை பேர் இங்கு வேடிக் கைக்காகத் திரட்டப்படவில்லை. அவர்களுக்கு உடனடியான வேலை இருக்கிறது. நம்மால் அவை எல்லாவற்றிலும் பங்கு கொள்ள முடியாது.''

கிராமர் பாவெலை ஆச்சரியத்துடன் நோக்கி ஞன்.

''அது எப்படி மாறமுடியும்?'' சினிமாக் கொட்டகையில் இடம் மாறுவதைப்போல, செஞ் சேனையில் ஒரு யூனிட்டிலிருந்து இன்னென்றுக்குத் தாவலாம் என்று நினைக்கிருயா?''

இதைக் கேட்ட பாவெல் இடைமறித்தான்:

''ஒருவன் எந்த இடத்திலிருந்து போராடி ஞல் என்ன? நான் ராணுவத்தைவிட்டு ஓடிப்போ கிறேனு, குற்றம் சொல்வதற்கு?''

ஆனுல் கிராமர் அந்த யோசனையை வன்மை யாக எதிர்த்தான்.

''கட்டுப்பாடு என்ன ஆவது? பாவெல், முழு மையாகப் பார்த்தால், நீ கெட்டுப்போன இளை ஞன் அல்ல; ஆனுல் சில விஷயங்களில் கொஞ்சம் அராஜகவாதியாக இருக்கிருய். நீ உன் இஷ்டப் படி செய்யலாமென்று நினைக்கிருயா? கட்சியும்

கம்ஸமோலும் இரும்புக் கட்டுப்பாட்டை உடைய வை என்பதை மறந்து விடுகிறாய். கட்சிதான் முதன்மையானது. நாம் ஒவ்வொருவரும் தேவைப் பட்ட இடத்தில்தான் இருக்கவேண்டும்; நாம் விரும்பும் இடத்தில் இருக்கமுடியாது. நீ வேறு யூனிட்டுக்குப் போக வேண்டுமென்று கோரியதை, புஸிரேவ்ஸ்க்கிய் நிராகரித்துவிட்டார் அல்லவா? அதுதான் இப்பொழுதும் உனக்குக் கிடைக்கும் பதில்.''

நெடிசலாகவும், உயரமாகவுமிருந்த கிராமர் ஆவேசத்துடன் பேசியதால் இருமத் தொடங்கினான். அச்சு எழுத்துக்களைக் கோக்கும் தொழில் செய்தவன்; ஈயத் தூசி அவனது நுரையீரல்களில் நிலையான இடம் பெற்றுவிட்டது. அடிக்கடி, அவனது உப்பிய கன்னங்களில், க்ஷயத்தின் செந்தளிப்பு தோன்றியது.

கிராமர் நிதானமடைந்தவுடன், பாவெல் தாழ்ந்த குரலில் பேசினான்.

''நீ சொல்வதெல்லாம் உண்மைதான். எனினும் நான் புத்யோன்னிய் குதிரைப்படைக்குச் செல்கிறேன்.''

அவனது குரலில் ஒரு அழுத்தம் இருந்தது.

அடுத்த நாள் மாலை, குளிர்காயும் தீயைச் சுற்றி அந்தப் படைவீரர்கள் கூடியபொழுது, அங்கு பாவெலைக் காணவில்லை.

பக்கத்துக் கிராமத்தில், குன்றின் மீதுள்ளது ஒரு பள்ளிக்கூடம். அதன் அருகே சில குதிரைப்

படைவீரர்கள் கூடினர். அவர்கள் புத்தேன்னி யின் ராணுவத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் ஒருவன் ஆஜானுபாகுவாக வளர்ந்தவன், யந்திரத் துப்பாக்கி வண்டியின் முதுகு மீது உட்கார்ந்திருந் தான். அவனது குல்லாய் பின்னுக்குத் தள்ளியிருந் தது. அவன் அக்கார்டியனை வாசித்துக் கொண் டிருந்தான். அது அவனிடம் தாளம் தவறி உரக்கக் கத்திக் கொண்டிருந்தது. சிவந்ததாகவும் அகன்று விரிந்ததாகவும் சவாரிக்கு ஏற்றதாகவும் உள்ள கால்சட்டையை அணிந்தவன் ஒருவன் நடனமாடி ஞன்; வெறி பிடித்தவன்போல 'கொப்பாக்' நடன மாடிய அந்தத் துடுக்கான குதிரைவீரன், இசைக் குழப்பத்தால் திகைப் படைந்தான்.

ஆவல் மிகுந்த கிராமத்து இளைஞர்களும் இளம் பெண்களும், வேலிமீதும் யந்திரத்துப்பாக்கி வண்டியின் மீதும் ஏறி நின்று, கிராமத்துக்குப் புதிதாக வந்திருந்த வீரர்களின் விநோதக் கூத்தைக் கண்டு ரசித்தார்கள்.

''வேகமாக ஆடு தொப்தாலோ! பூமியை உதைத்துக் கிளறு! அப்படித்தான், தம்பீ! ஏ! அக்கார்டியன்! இசையில் சூடுபிடிக்கட்டும்!''

அக்கார்டியன் வாசித்தவனுடைய பெரிய விரல்கள் இரும்பால் செய்த குதிரை லாடத்தை எளிதில் வளைத்து விடும். ஆனுல் அவை வாத்தி யத்தின் விசைகளை லாகவமில்லாமலும் விரு விருப்பு இல்லாமலும் தாறுமாருகவும் அமுக்கின.

வெயிலில் கன்றிப்போன ஒரு குதிரை வீரன் வருத்தத்துடன் கூறிஞன்:

''குல்யாப்காவை மாஹ்னே கூட்டம் கொன்றதால் வந்த வினை இது. அவன் அருமையாக அக்கார்டியன் வாசித்தான். நமது ஸ்க்வாட்ரனின் வலது கோடியில் வந்துகொண்டிருந்தான். பாவம்! கொல்லப்பட்டான். நல்ல வீரன்; அவனைப்போன்ற வாத்தியக் கலைஞன் நம்மிடையே ஒருபொழுதும் இருந்ததில்லை.''

வட்டத்தில் நின்று கொண்டிருந்த பாவெல் இந்தப் பேச்சை ஒட்டுக்கேட்டான். வழியில் இருப்பவரைத் தள்ளிக்கொண்டு, யந்திரத் துப்பாக்கி வண்டியை நோக்கிச் சென்றான். அங்குப் போனவுடன் அவன் வாத்தியத்தின் துருத்தியைக் கையால் பிடித்துக்கொண்டான். இசை அடங்கியது.

''உனக்கு என்ன வேண்டும்?'' என்று அக்கார்டியன் வாசிப்பவனது கண்கள் கேட்டன.

தொப்தாலோவும் திடீரென்று நின்றான். கூட்டத்தினர், ''அங்கு என்ன தகராறு?'' என்று ஆத்திரத்துடன் முணுமுணுத்தனர்.

பாவெல் கருவியைக் கைகளால் பற்றிக் கொண்டான். ''நான் வாசிக்கிறேன்'' என்று கூறினான்.

வாத்தியக்காரன் பாவெலை ஒரளவுக்கு அவநம்பிக்கையுடன் நோக்கினான். வேண்டாவெறுப்புடன், பெட்டியின் தோல்வாரைத் தோளிலிருந்து கழற்றிக் கொடுத்தான்.

பாவெல் தனக்கு வாடிக்கையானதாகிவிட்ட முகபாவத்துடன் அக்கார்டியனை மடிமீது வைத்துக்கொண்டான். மடிப்புகளைக் கொண்ட துருத்தி

யை விசிறிபோன்று விரித்தான். அக்கார்டியனின் திறன் முழுவதையும் பயன்படுத்தி, ஆனந்தமய மான இன்னிசையைப் பொழிந்தான்:

இக்கி, சின்ன ஆப்பிள்!
எங்கே போவாயே?
செக்காவிலே சிக்கிவிட்டாய்!
சிக்கிநிற்பாய் இங்கேயே!

தொப்தாலோ இந்தப் பிரசித்திபெற்ற இசையைக் கேட்டு இன்புற்று, ஒரு பெரிய பற வையைப் போலக் கைகளைச் சுழற்றிக்கொண்டு, வட்டத்தைச் சுற்றி ஆடினான். இசையின் தாளத் துக்குத் தக்கபடி, தொடைகளிலும் முழங்கால் களிலும் தலையிலும் நெற்றியிலும் பூட்ஸ் அடி களிலும் வாயிலும் சுறுசுறுப்பாக அடித்துக் கொண்டே, அவன் அதிசயிக்கத் தக்க வகையில் உடலை வளைத்தான், நெளித்தான், திருப்பினான்.

மென்மேலும் அதிகமாகக் கிறுகிறுக்கச் செய்யும் லயத்துடன் வாத்தியம் சங்கீதத்தைப் பொழிந்தது. தொப்தாலோ, தன் கால்களை தட்டி விட்டுக்கொண்டு, பம்பரம்போல் வட்டத் தைச் சுற்றிச் சுழன்றான். மேல்மூச்சு வாங்கிக் களைத்துப் போகும்வரை, அவன் சுழன்றான்.

1920ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் தேதி, சில சிறிய உக்கிரமான போராட்டங்களுக்குப் பின் புத்யோன்னியின் முதலாவது குதிரைப்படை மூன்றாவது, நான்காவது போலிஷ் ராணுவங் களுக்கு இடையே உடைப்பை உண்டாக்கியது;

பாதையில் ஸவீத்ஸ்கிய் என்ற ஜெனரலின் தலை மையில் இருந்த குதிரை பிரிகேடை அழித்து விட்டு, ருஷின் என்ற இடத்தை நோக்கி விரைந்து முன்னேறியது.

போலிஷ் ராணுவத் தலைமை, அவசர அவசர மாக ஒரு தாக்குப் படையைத் திரட்டி, உடைப்புக்கு அணைபோட முயன்றது. கவசமிட்ட, பட்டைச் சக்கரங்கள் கொண்ட, அப்பொழுதுதான் பக்ரிபீஷ்சே என்ற ரயில் நிலையத்தில் வந்திறங்கிய ஐந்து டாங்கிகள் வெகு அவசரமாகப் போர்க் களத்தை நோக்கி விரைந்தன.

ஸருத்னித்ஸி என்ற இடத்திலிருந்து தாக்கு வதற்கும் போலிஷ் தலைமை திட்டமிட்டது. ஆனால் புத்யோன்னியின் ராணுவம், அந்த இடத்தைப் பக்கவாட்டமாகக் கடந்து முன்னேறி, போலிஷ் இராணுவத்தின் பின்புறத்துக்குச் சென்றது.

போலிஷ் ஜெனரல் கொர்னீத்ஸ்கியின் குதிரை டிவிஷன் புத்யோன்னியின் முதலாவது குதிரைப்படையைப் பின்தொடர்ந்து துரத்தியது. புத்யோன்னிய் ராணுவத்தைப் பின்புறமிருந்து தாக்கவேண்டுமென்ற உத்திரவுடன், கொர்னீத்ஸ்கியின் டிவிஷன் முன்னேறியது. போலிஷ் ராணுவத்துக்குப் பின்னால் இருந்த கஸாத்தீன் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது. அதை புத்யோன்னிய் படை அடையாமல் தடுக்கவேண்டுமென்று போலிஷ் தலைமை விரும்பியது. ஆனால் அந்த நடவடிக்

கைகள் போலிஷ் துருப்புக்களின் நிலைமையைச் சீர்திருத்தவில்லை. போர்முனையிலிருந்த உடைப்பு அடைபட்டதென்பது மெய். துருப்புக்களின் பின் புறத்தில் புத்யோன்னியின் பலம் வாய்ந்த குதிரைப்படை இருந்தது. அது போலிஷ் படைத் தளங்களை அழித்துவிட்டு, கீவ் நகரத்திலிருந்த படைமீது பாயக் கூடிய பேரபாயம் உண்டாகி விட்டது. தவிர செஞ்சேனைக் குதிரைப் படைகள் முன்னேறுங்கால், சிறிய ரயில்வே பாலங்களை உடைத்துக்கொண்டே சென்றன; இருப்புப் பாதை யையும் பல இடங்களில் பெயர்த்து விட்டன. இவ்வாறாக, போலிஷ் படைகள் பின்வாங்க முடியாமல் செய்தன.

ஷித்தோமிர் என்ற நகரில் போலிஷ் ராணுவத்துக்கு ஒரு தலைமைக் காரியாலயம் இருப்பதாகச் செம்படை பிடிப்பட்ட கைதிகளிடமிருந்து தெரிந்து கொண்டது. (உண்மையில், போர்முனையின் முழுத் தலைமையும், ஷித்தோமிரில்தான் இருந்தது.) எனவே, முதலாவது குதிரைப்படைத் தளபதி ஷித்தோமிரையும் பெர்திச்செவ் என்ற நகரத்தையும் கைப்பற்ற வேண்டுமென்று முடிவு செய்தான். இரண்டுமே முக்கியமான ரயில்வே ஜங்ஷன்களாகவும் நிர்வாக கேந்திரங்களாகவும் இருந்தன. ஜூன் மாதம் ஏழாம் தேதி, நான்காவது குதிரை டிவிஷன், ஷித்தோமிரை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

இப்பொழுது, குதிரைப்படை ஸ்க்வாட்ரன் ஒன்றின் வலது புறத்தில், காலம் சென்ற வாத்தி

யக்காரனை குல்யாப்கோவின் இடத்தில், கர்ச் சாகின் சென்றுகொண்டிருந்தான். அவன் அருமை யாக அக்கார்டியனை வாசித்த காரணத்தால், அவனைப் பிரிய மனமில்லாத வீரர்கள் கூட்டாக முயற்சி எடுத்து, அவனைக் குதிரைப் படையில் சேர்த்துக் கொள்ளும்படி செய்தனர்.

அவர்கள் வாய்நுரைக்க விரையும் குதிரை களின் வேகத்தைக் கட்டுப்படுத்தாமல், ஷித்தோ மிர் அருகில் விசிறிபோல் விரிந்த வியூகம் அமைத்து முன்னேறிச் சூரிய வெளிச்சத்தில் பளபள வென்று மின்னும் போர்வாட்களுடன் நகரத்தைத் தாக்கினார்கள்.

பூமி புலம்பியது; குதிரைகள் இணக்க மின்றிச் சுவாசித்தன; வீரர்கள் சேணத்தின் மிதியடிகளில் நின்று கொண்டனர்.

குதிரைகள் சிட்டாய்ப் பறந்தன. தோட்டங் களை உடைய பெரிய நகரம், அவற்றைச் சந்திக்க விரைந்தது. புயல் வேகத்தில் நகரத்துக்குள் நுழைந்த குதிரைப் படைகள், தோட்டங்களில் மின்னல் போலத் தோன்றி மறைந்தன; நகரத் தின் மையத்தை அடைந்தன, அச்சுறுத்தும் போர் முழக்கம் காற்றைப் பிளந்து கொண்டு பரவியது. அது, சாவே முழங்குவது போல் இருந்தது.

போலிஷ் சிப்பாய்கள் மலைத்து நின்றார்கள். அவர்கள் அதிகமாக எதிர்க்கவில்லை. நகரத்திலி ருந்த படைகளெல்லாம் நாசம் செய்யப்பட்டன.

குதிரையின் கழுத்தைத் தன் முகம் தொடும் அளவுக்கு முதுகை வளைத்துக் கொண்டு விரைந்தான் பாவெல். அவனுடன் ஒட்டினாற்போல மெலிந்த கால்களை உடைய மற்றொரு கருங்குதிரையின்மீது தொப்தாலோ சென்றுகொண்டிருந்தான். வழியில், ஒரு போலிஷ் சிப்பாய் தன் துப்பாக்கியைத் தோள்மீது தூக்கிவைத்துக்கொள்ள முயன்றான். அதற்குள், இமைக்கும் நேரத்தில், பிழைபடாத ஒரே வெட்டின் மூலம் அந்தச் சிப்பாயைத் துடுக்கான தொப்தாலோ கொன்று வீழ்த்தியதைப் பாவெல் பார்த்தான்.

குதிரைகள் வீதிவழியே சென்றபொழுது, இரும்பு லாடங்கள் கருங்கல் தளத்தின்மீது உராய்ந்து 'டொக் டொக்' என்று ஒலி எழுப்பின. திடீரென, ஒரு நாற்சந்தியில், சாலையின் நடுவில் ஒரு யந்திரத் துப்பாக்கி தம்மை நேருக்குநேர் நோக்குவதை அவர்கள் கண்டனர். நீல உடுப்பும் சதுரக் குல்லாயும் அணிந்த மூன்று போலிஷ் சிப்பாய்கள் அதன்மீது சாய்ந்து கொண்டிருந்தனர். அவர்களுடன், பொன் கம்பிகளால் பின்னப்பட்ட சுருள்களைக் காலர்மீது அணிந்திருந்த நான்காவது போலிஷ்காரனும் நின்றான்; அந்தப் போலிஷ் ஆபீசர் பிஸ்டலை நீட்டிக் குதிரை வீரர்களைக் குறிபார்த்தான்.

பாவெலும் தொப்தாலோவும் தமது குதிரைகளைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாய், யந்திரத் துப்பாக்கியை நோக்கி மரணத்தின் நுழைவாயிலுக்குள்ளேயே சென்றனர். ஆபீசர் பாவெலை

நோக்கிச் சுட்டான்; ஆனால் குண்டு குறி தவறி யது. அது பாவெலின் கன்னத்தை ஒட்டினாற் போல ஒலித்துக் கொண்டு சென்றது. அடுத்த விநாடியில், வேகமாகப் பாய்ந்த குதிரைக்கு முன் னால் போலிஷ் ஆபீசர் இடறிவிழுந்தான்; அவனது மண்டை, தளத்தின் கற்களால் தாக்குண்டது; எதற்கும் சக்தியற்றவனாகத் தரையில் கிடந்தான்.

அதே நொடிநேரத்தில், யந்திரத் துப்பாக்கி வெறி மிகுந்த வேகத்தில் குண்டுகளைக் கக்கத் தொடங்கியது. ஒரு டஜன் ஈயக் குளவிகள் தொப் தாலோவையும் அவனது குதிரையையும் கொட் டிக் கொன்றன. தொப்தாலோவின் பிணமும் கருங்குதிரையின் பிரேதமும் தரையில் கிடந்தன.

பாவெலின் குதிரை தனது பின் கால்களை மட்டும் ஊன்றிக்கொண்டு எழும்பியது, பயத்தால் கனைத்தது; பாவெலும் தானுமாக, யந்திரத் துப்பாக்கிமீது குனிந்திருந்த போலிஷ் சிப்பாய் கள்மீது பாய்ந்தது. பாவெலின் வாள், வில்வடி வத்தில் மின்னிச் சுழன்று, ஒருவனது நீலமான சதுரக் குல்லாய்க்குள் நுழைந்தது.

இன்னொரு தலைக்குள் நுழைந்து செல்வதற் காக வாள் மீண்டும் மின்னிக்கொண்டே உயர்ந் தது. ஆனால் வெறிபிடித்த குதிரை ஒரு பக்கமாகப் பாய்ந்து விட்டது.

கொந்தளித்துச் செல்லும் மலை அருவியைப் போல, குதிரைப்படை ஸ்க்வாட்ரன் நாற்சந்திக் குள் திரண்டது. பல வாட்கள் பளபளவென்ற பிரகாசத்துடன் காற்றில் சுழன்றன.

சிறைச்சாலையின் குறுகலான, நீண்ட இடை வழிகள் பல்வகை இரைச்சல்களை எதிரொலித்தன.

சிறையின் சிற்றறைகளில் ஏராளமான ஆண்களும் பெண்களும் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். அந்தக் கைதிகள் நலிந்த முகங்களுடன் சோர்ந்துபோய் இருந்தனர். அவர்கள் கவலையுடனிருந்தனர். நகரத்தில் சண்டை நடப்பதைப் பற்றி அவர்கள் அறிந்துகொண்டிருந்தனர். ஆனால் அதன்மூலம் தங்களுக்குச் சுதந்திரம் கிடைக்கவிருக்கிறதென்று அவர்கள் நம்பவில்லை. நகரத்தைத் திடீரென்று தாக்கியுள்ள வீரர்கள் செஞ்சேனையைச் சேர்ந்தவர்களென்று அவர்கள் எண்ணவேயில்லை.

சிறைவாயில் முற்றத்தில் துப்பாக்கிப் பிரயோகம். இடைவழிகளில் ஆட்களின் ஓட்டம். திடீரென, ''உங்களுக்கு விடுதலை, தோழர்களே!'' என்ற புத்துயிர் அளிக்கும் சொற்கள்!

ஒரு அறையை நோக்கிப் பாவெல் ஓடினான். அதன் கதவு பூட்டப்பட்டிருந்தது. கதவின் சிறிய ஜன்னலில் பல ஜதை கண்கள் காட்சியளித்தன. பாவெல் துப்பாக்கிப் பிடங்கினால் பூட்டை மீண்டும் மீண்டும் தாக்கினான்; விசையுடன் தாக்கினான்; ஆனால் அது உடையவில்லை.

''அதை ஒரு வெடிகுண்டால் உடைப்போம்'' என்று சொல்லிக்கொண்டு, மிரோனவ் பாவெலைத் தள்ளி விட்டு, சட்டைப் பையிலிருந்து ஒரு எறிகுண்டை எடுத்தான்.

அதற்குள் பிளாட்டூன் தலைவன் த்ஸிகார்ச்

சென்கோ அந்தக் குண்டை அவனிடமிருந்து பிடுங்கிக்கொண்டான்.

''நிறுத்து, முட்டாள்! உனக்குப் பைத்தியமா? அவர்கள் நொடிப் பொழுதில் சாவிகளைக் கொண்டுவருவார்கள். உடைக்க முடியாத பூட்டுகளைச் சாவிகளால் திறப்போம்.''

அதே சமயத்தில், சிறைக் காவலர்களை ரிவால்வர் குழாய்களினுல் தள்ளிக்கொண்டு வந்தனர். சிறை இடைவெளியில் வெகுநாட்களாகக் குளிக்காத, வர்ணிக்கமுடியாத இன்ப வெள்ளப் பெருக்கில் இப்பொழுது குளித்துத் திளைத்த பெருங்கூட்டமொன்று திரண்டது.

சிற்றறையின் கதவை அகலத் திறந்து கொண்டு பாவெல் உள்ளே ஓடினுன்.

''தோழர்களே, நீங்கள் சுதந்திர புருஷர்கள்! நாங்கள் புத்யோன்னியின் வீரர்கள்! எங்களது டிவிஷன் டவுனைப் பிடித்துவிட்டது!''

நீர் நிறைந்த கண்களுடன், ஒரு மாது பாவெலிடம் ஓடினுள்; தன் குடும்பத்தைச் சேர்ந்தவனைக் கண்டது மாதிரி, அவள் பாவெலைக் கட்டித்தழுவி, கண்ணீர் பெருக்கிக் கதறி அழுதாள்.

அந்தக் கருங்கல் சிறைக்குள் ஐயாயிரத்து எழுபத்து ஒன்று போல்ஷெவிக்குகள் அடைபட்டிருந்தனர். அவர்களைச் சுட்டுக்கொல்வதற்கு அல்லது தூக்குமேடையில் ஏற்றுவதற்கு நேரம் நிச்சயிப்பதற்கு முன்னுல், இடைக் காலத்தில் அங்குஅடைத்துவைத்திருந்தனர். அவர்களுடன், செஞ்சேனையைச் சேர்ந்தஇரண்டாயிரம் அரசியல்

ஊழியர்களையும் போலிஷ் வெள்ளைப் படையினர் அங்குப் பூட்டி வைத்திருந்தனர். புத்யோன்னி யின் குதிரைப் படையினர் தமக்குக் கிடைத்த வெற்றிப் பொருட்கள் அனைத்தையும் விட உயர்ந் ததாக, இந்த வீரர்களின் விடுதலையைக் கருதிப் போற்றினர். நகரத்தைக் கைப்பற்றிய சாதனை யையும்விட, இந்த வீரர்களின் விடுதலையே, தங் களுக்குக் கிடைத்த சிறப்பான பரிசு என்று அவர் கள் கருதி உவகை கொண்டனர். ஏழாயிரத்துச் சொச்சம் புரட்சிக்காரர்களுக்கு, ஊடுருவ முடி யாத காரிருள் நீங்கியது; வெப்பம் மிகுந்த ஜூன் மாதத்துப் பகலவனின் பேரொளி அவர்களது வாழ்வை ஆட்கொண்டது.

கனிந்த எலுமிச்சையைப் போல் மஞ்சள் நிற முகமுடைய ஒரு கைதி பாவெலிடம் ஆனந்த மிகுதியால் ஓடினான். அவன் தான் சாமுயில் லேஹெர், ஷெப்பெத்தோவ்க்காவில் அச்சகத்தில் வேலை செய்த தொழிலாளி.

அவர்களுடைய சொந்த நகரத்தில் நிகழ்ந்த சோகமிக்க சம்பவங்களைச் சாமுயில் கூறக் கேட்டு, பாவெல் மனம் வெதும்பினான், அவன் காதில் ஈயத் தைக் காய்ச்சி ஊற்றியது போலிருந்தது.

''ஓரிரவு ஏககாலத்தில் எங்கள் எல்லோரை யும் அவர்கள் பிடித்துவிட்டனர். யாரோ கொடி யவன் எங்களை ராணுவ அரசியல் போலீஸுக்குக் காட்டிக்கொடுத்துவிட்டான். அவர்களது பிடியில் நாங்கள் சிக்கியபின், அவர்கள் ஈவிரக்கமில்

லாமல் நடந்துகொண்டனர். பாவெல்! அவர்கள் எங்களை அடித்து உதைத்த பயங்கரத்தைச் சொல்லி முடியாது. நான் சில அடிகளால் தாக்குண்டவுடன் உணர்விழந்து விட்டதால், இதரரை விடக் குறைவான வதைக்கு உட்பட்டேன். ஆனால் மற்றவர்கள் என்னைவிட உரம் மிகுந்தவர்களாயிருந்தனர்; சுலபத்தில் உணர்விழக்கவில்லை.

''நாங்கள் ஒளித்து மறைப்பதற்குறிய விஷயம் எதுவும் இல்லை. ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் எங்களைவிடப் போலீஸார் அதிகமாகத் தெரிந்திருந்தனர். நாங்கள் எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையும் அவர்கள் அறிந்திருந்தனர். அதில் அதிசயம் எதுவும் இல்லை. ஏனென்றால், எங்கள் மத்தியிலேயே ஒரு துரோகி இருந்தான்! பாவெல், அந்த நாட்களைப் பற்றி என்னால் பேச முடியாது. அப்பொழுது பிடிபட்டவர்களில் பலரை நீ அறிவாய். வால்யா புருஸ்ஷாக்கை நீ அறிவாய். ரோஸா கிரித்ஸ்மான் நேர்த்தியான பெண்! கபடம் அறியாத கண்கள்! அப்பொழுதே பதினேழு நிரம்பியிருந்தது. சாஷா புன்ஷாப்த் பிடிபட்டான். உனக்கு அவனைத் தெரியும்; என்னுடன் அச்சகத்தில் வேலை செய்தான்; எப்பொழுது பார்த்தாலும், முதலாளியைக் கேலி செய்து, கேலிச் சித்திரங்கள் வரைந்துகொண்டிருப்பான். உல்லாசமான இதயத்தை உடையவன். அவனுடன், இரண்டு உயர்நிலைப் பள்ளி மாணவர்களையும் பிடித்தார்கள். நொவசேல்ஸ்க்கியும் தூஷித்ஸூம்.

உனக்குத் தான் அவர்களைத் [illegible] மற்றவர்கள் நம் ஊரைச் சேர்ந்தவர்கள் [illegible] பேட்டையில் வாழ்பவர்கள். ஆகக் கூடி, [illegible] தொன்பது பேர் கைதானோம். அவர்களில் பெண் கள் அறுவர். எல்லோரும் மிருகத்தனமான சித்திரவதைக்கு உள்ளானார்கள். முதல் நாளன்றே, வால்யாவையும் ரோஸாவையும் பலாத்காரம் செய்து கற்பழித்துவிட்டார்கள். அந்த நாய்கள், இந்த இரு பெண்களையும் தோன்றியபடியெல் லாம் கேலி செய்தார்கள். அதன் பின், அவர்கள் குற்றுயிரும் குலை உயிருமாகச் சிறை அறைக்குக் கொண்டு வரப்பட்டனர். சீக்கிரத்தில் ரோஸா பிதற்றத் தொடங்கினாள். சில நாட்களில் அவள் பூர்ணமாகப் புத்தி சுவாதீனத்தை இழந்து விட்டாள்.

''அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்பதை அவர்கள் நம்பவில்லை. அவள் பாசாங்கு செய்வதாகக் கூறி, அவளைக் கேள்வி கேட்ட பொழுதெல்லாம் ஈவிரக்கமில்லாமல் அடித்தனர். அவளை அவர்கள் இறுதியில் சுட்டுக்கொன்ற பொழுது, அவளைப் பார்க்கச் சகிக்கவில்லை. முக மெல்லாம் புண்ணாகிக் கருத்திருந்தது; கண்கள் வெறியுடன் விழித்தன; அவள் கிழவி மாதிரி தோற்ற மளித்தாள்.

''வால்யா இறுதிவரை உறுதியாக இருந் தாள். அவர்கள் அனைவருமே உண்மையான வீரர் களாக இறந்தார்கள். அந்தச் சித்திரவதைகள் எல்லாவற்றையும் சகித்துக் கொள்ளும் பலம்

அவர்களுக்கு எப்படி ஏற்பட்டதென்பது எனக்குப் புரியவில்லை. பாவெல்! அவர்களது சாவை நான் எப்படிச் சித்தரிப்பேன்! அது பயங்கரமான காட்சி....

''வால்யா தான் மிகவும் அபாயகரமான வேலை செய்து வந்தவள். போலிஷ் ராணுவக் காரியாலயத்தின் கம்பியில்லாச் செய்திப் போக்குவரத்து சிப்பந்திகளுடனும், ஜில்லாத் தலைமைக் குழுவினருடனும் தொடர்பு கொண்டிருந்தாள். தவிர, அவளது வீட்டை அவர்கள் சோதனையிட்டபொழுது, ஒரு பிஸ்டலும் இரண்டு எறி குண்டுகளும் அகப்பட்டன. நமது ஆள்மாதிரி நடித்த துரோகிதான், அந்த எறி குண்டுகளை அவளிடம் கொடுத்திருந்தான். போலிஷ் ராணுவக் காரியாலயத்துக்கு வெடி வைக்கத் திட்டமிட்டுக் காரியம் செய்தாள் என்று குற்றம் சாட்டுவதற்கு, விரோதிகள் முறையாக ஜோடித்திருந்தனர்.

''ஆ, பாவெல், அந்தக் கடைசி நாட்களைப் பற்றிப்பேசுவதே எனக்குவேதனையாகவிருக்கிறது. எனினும் நீ வற்புறுத்துவதால் சொல்கிறேன். வால்யாவும் மேலும் இருவரும் தூக்கிலிடப்பட வேண்டுமென்றும் மற்றவர்கள் சுட்டுக்கொல்லப் பட வேண்டுமென்றும் ராணுவக் கோர்ட் தீர்ப்பு அளித்தது. எங்களுடன் ஒத்துழைத்த போலிஷ் சோல்ஜர்கள், அதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக விசாரிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவன், கார்ப்பொரல் ஸ்னெகுர்க்கோ. அவன் இளைஞன்; கம்பியில்லாச் செய்திப் போக்குவரத்து

வேலையைச் செய்தவன்; யுத்தத்துக்கு முன்னல் லோத்ஸ் என்ற நகரில் எலெக்டிரிஷயனுக வேலை செய்தவன். சோல்ஜர்களிடையே கம்யூனிஸ்ட் பிரசாரம் செய்தான் என்றும் தாய்நாட்டுக்குத் துரோகம் செய்தான் என்றும் அவன்மீது குற்றம் சாட்டினுர்கள். அவனைச் சுட்டுக்கொல்ல வேண்டுமென்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. அவன் மன்னிப்புக் கோரி மனு செய்யவில்லை. தீர்ப்பு வந்த இருபத்து நான்கு மணி நேரத்துக்குள், அவனைச் சுட்டுக் கொன்றனர்.

''அவனது விசாரணையின் பொழுது, வால்யா ஒரு சாட்சியாக அழைக்கப்பட்டிருந்தாள். அதன் பின் வால்யா விசாரணையைப் பற்றி எங்களிடம் கூறினுள். கம்யூனிஸ்ட் பிரசாரம் செய்ததாக ஸ்னெகுர்க்கோஒப்புக்கொண்டான் என்றும்தேசத் துரோகக் குற்றச்சாட்டை அவன் ஆவேசத்துடன் மறுத்தான் என்றும் அவள் கூறினுள். அவன் கோர்ட்டில் சொன்னதாவது:'போலிஷ் சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுதான் என் தாயகம். ஆம், நான் போலந்து கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினன். என் கருத்துக்கு விரோதமாக, ராணுவத்தில் பலவந்தமாகச் சேர்க்கப்பட்டேன். அங்கு வந்தவுடன், என்னைப் போலப் போர்முனைக்குப் பலாத்காரமாகத் தள்ளப்பட்டிருந்த இதர ஆட்களின் கண்களைத் திறக்க என்னுல் இயன்றதைச் செய்தேன். அதற்காக நீங்கள் என்னைத் தூக்கிலேற்றலாம். ஆனுல் தாய்நாட்டுக்குத் துரோகம் செய்ததாகக் கூறி, என்னைத் தண்டிக்க முடியாது.

ஏனெனில் நான் ஒரு நாளும் தேசத் துரோகியாக இருந்ததில்லை; இனியும் எந்நாளும் தேசத் துரோகியாக மாட்டேன். உங்கள் தாயகம் வேறு; என் தாயகம் வேறு. பிரபுக்களின் நாடு உங்களுக்குத் தாய்நாடு. தொழிலாளர் விவசாயிகளின் நாடு என் தாய்நாடு. என் தாய்நாடு சீக்கிரத்தில் வெற்றியடையும்; அதில் ஒருவரும் என்னைத் துரோகி என்று தூற்றமாட்டார்கள். இதை நான் உறுதியாக அறிவேன்!'

''விசாரணைக்குப் பின், நாங்கள் எல்லோரும் சேர்த்து வைக்கப்பட்டிருந்தோம். தண்டனையை நிறைவேற்றுவதற்குமுன், எங்களைச் சிறைக்கு அனுப்பினார்கள். இரவில், சிறைக்கு எதிராக, ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில், தூக்குமேடை அமைத்தார்கள். காட்டுக்கருகிலே, சாலையிலிருந்து கொஞ்ச தூரத்தில் இருந்த பெரிய குட்டைக்குப் பக்கத்தில் சுடுவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். எங்கள் எல்லோருக்கும் பொதுவாக, ஒரு சவக்குழியையும் வெட்டினார்கள்.

''எங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையைச் சகலரும் அறிய வேண்டுமென்பதற்காக நகரமெங்கும் ஒட்டப்பட்ட போஸ்டர்கள் மூலம் தீர்ப்பு விவரத்தைத் தெரிவித்தார்கள். ஜனங்களை அச்சுறுத்த வேண்டுமென்பதற்காக மக்கள் முன்னிலையில் தண்டனையை நிறைவேற்றுவதென்றுபோலிஷ் அதிகாரிகள் முடிவு செய்தனர். அதிகாலையிலிருந்தே அவர்கள் நகர மக்களைப் பலாத்காரமாக தூக்குமேடை ஸ்தலத்துக்குத் தள்ளிக்கொண்டு

வந்தனர். பயங்கரமான நிகழ்ச்சியென்றாலும் பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் சிலர் வந்தனர். தூக்கு மரத்தின் அருகில் வெகுபெரிய கூட்டம். எங்கு நோக்கினாலும் ஒரே மனிதத் தலைகள். சிறையின் வேலிகள் மரக்கட்டைகளால் ஆக்கப்பட்டவை. சிறையின் அருகிலேயே தூக்குமேடை அமைந்திருந்ததால் கூட்டத்தினரின் பேச்சும் சந்தடியும் உண்டாக்கிய ஒலி சிறையிலிருந்த எங்கள் அறைக்கும் எட்டியது. கூட்டத்துக்குப் பின்னால், அவர்கள் யந்திரத் துப்பாக்கிகளை நிறுத்தியிருந்தார்கள். அந்தப் பிரதேசத்திலிருந்த அரசியல் இரகசிய போலீஸைச் சேர்ந்த காலாட்படையினரும் குதிரைப்படையினரும் அங்குக் குவிக்கப்பட்டிருந்தனர். போலிஷ் பட்டாலியன் ஒன்று வீதிகளையும் அவற்றுக்கும் அப்பால் உள்ள காய்கறித் தோட்டங்களையும் சூழ்ந்து கொண்டது. தூக்கு மேடைக்குப் பக்கத்தில், தூக்கிலேற்றப்பட வேண்டியவர்களுக்காக ஒரு குழி வெட்டப்பட்டிருந்தது.

''நாங்கள் முடிவுக்காக மௌனமாகக் காத்திருந்தோம்; அப்போதைக்கப்போது, ஒருசில வார்த்தைகள் பேசினோம். இரவிலேயே, சம்பாஷிக்க வேண்டியதை எல்லாம் பேசி, விடை பெற்றுக் கொண்டுவிட்டோம்.' ரோஸா மட்டும் அறையின் ஒரு மூலையில் மெல்லிய குரலில் ஏதோ பிதற்றிக் கொண்டிருந்தாள். வால்யா மிகுந்த சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதால், அவள் நடக்கக்கூட முடியாமல் படுத்துக்கிடந்தாள். பேட்டையைச் சேர்ந்த இரண்டு இளம் பெண்

கள், சகோதரிகள், கம்யூனிஸ்டுகள், ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு இறுதி விடை பெற்ற பொழுது, அவர்களது கண்களிலிருந்து நீர்பெருக் கெடுத்தது. கிராமப்புறத்தைச் சேர்ந்த விரு விருப்பான இளைஞனும், தன்னைக் கைது செய்ய வந்த இரண்டு போலிஷ் அரசியல் போலீஸாரைத் தாக்கி வீழ்த்தியவனுமான ஸ்தெப்பானவ், அந் தப் பெண்களைப் பார்த்து அழாதிருக்கும்படிக் கூறினான். 'தோழர்களே! ஒரு சொட்டுக் கண் ணீர் சிந்தக் கூடாது. இங்கு நீங்கள் அழலாம்; ஆனால் அறைக்கு வெளியே போனவுடன், முகத்தில் துக்கத்தின் சாயல்கூட இருக்கக் கூடாது. அந்த இரத்த வெறிபிடித்த ஓநாய்கள் நம்மைப் பார்த்துவிட்டு தற்பெருமை அடிப்பதற்கு இடம் கொடுக்கக் கூடாது. எப்படியிருந்தாலும், நம் மிடம் அவர்கள் இரக்கம் காட்டப் போவதில்லை. நாம் இறப்பதைத் தவிர்க்கமுடியாதபொழுது, கண்ணியமான முறையில் சாவதே சிறப்பு. நாம் ஊர்ந்துசெல்லப் போவதில்லை; தோழர்களே! முகமலர்ச்சியுடன் மரணத்தைத் தழுவச் செல்கி றோம்.'

''அப்புறம் எங்களை அழைத்துச் செல்வதற்கு அவர்கள் வந்தார்கள். எதிர் உளவு இலாகாத் தலைவன் ஷ்வார்க்கோவ்ஸ்கிய் முன்னால் வந்தான். அவனைவிடக் கொடுமையான காமாந்தகாரப் பிண்டத்தைக் காண முடியாது. அந்த வெறிநாய், தானே பெண்களைக் கற்பழிக்காத காலத்திலும், தன் ஆட்கள் பலவந்தமாகப் பெண்களை மான

பங்கம் செய்வதைக் கண்டு இன்புற்றான். இரு பக்கத்திலும் உருவிய பட்டாக் கத்திகளுடன் போலீஸார் நிற்க, அவர்களுக்கு இடையே எங்களை அழைத்து சென்றனர்.

''சிறை முற்றத்தில், துப்பாக்கிப் பிடங்குகளால் குத்தி எங்களைத் துரிதப்படுத்தினார்கள். வரிசைக்கு நால்வர் வீதம் நிற்கும்படி எங்களை நிர்ப்பந்தித்தார்கள். அதன்பின் சிறையின் கேட்டுகளைத் திறந்து, எங்களைத் தெருவுக்கு இட்டுச்சென்று, தூக்குமேடைக்கு முன்னால் நிறுத்தினார்கள். எங்களைச் சுடுவதற்குமுன்னால், நாங்கள் தூக்குமேடையில் தோழர்கள் சாவதைப் பார்க்கவேண்டுமென்பதற்காக எங்களை அங்கு நிறுத்தினார்கள். தூக்கு மரங்கள் உயரமாயிருந்தன; பருமனாகவிருந்தன. அவற்றை இணைத்த குறுக்குச் சட்டத்திலிருந்து மூன்று சுருக்குக் கயிறுகள் தொங்கின. ஒவ்வொரு இழுவடத்துக்கும் கீழே, படிகளுடன் கூடிய மேடை ஒன்று இருந்தது. ஒவ்வொரு மேடைக்கும் ஒரு மரக்கட்டை ஆதாரம். அந்தக் கட்டையை எளிதில் உதைத்துத்தள்ளிவிடலாம். அசைந்தாடிக் கொண்டிருந்த ஜனக்கூட்டத்திலிருந்து ஒரு இலேசான முணுமுணுப்புக் கேட்டது. அனைவரும் வைத்த விழி வாங்காமல் எங்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்தில் எங்களது உற்றார் உறவினரில் சிலரை நாங்கள் அடையாளம் தெரிந்துகொண்டோம்.

''கொஞ்ச தூரத்தில், ஒரு முகப்பு மண்டபத்தின்மீது, சில போலிஷ் பிரபுக்களும் அதிகாரி

களும் தொலைநோக்கிகளுடன் நின்று கொண்டிருந்தனர். போல்ஷெவிக்குகள் தூக்கிலேற்றப்படுவதைக் கண்டுகளிக்க அவர்கள் அங்கு கூடியிருந்தனர்.

''மிருதுவான வெண்பனி பூமியை மூடியிருந்தது. காடெல்லாம் பனி பெய்து வெண்மையாகக் காட்சியளித்தது. மரங்களின் மீது பஞ்சு தூவியிருந்தது போல தோன்றியது. வெண்பனிக் கட்டிகள் சுழன்றுச் சுழன்று சூடேறிய எங்களது முகங்கள்மீது மெதுவாக விழுந்து வேகமாக உருகின. தூக்குமேடைப் படிகள் வெண்பனியால் போர்த்தப்பட்டிருந்தன. நாங்கள் மிகவும் குறைவான ஆடைகளையே உடுத்தியிருந்தோம்; என்றாலும் நாங்கள் குளிரை உணரவில்லை. காலணியைக்கூட அணியாமல், காலுறையுடனேயே தான் நடப்பதைக்கூட, ஸ்தெப்பானவ் உணரவில்லை.

''தூக்குமேடைக்கு அருகில் ராணுவ பிராஸிக்யூட்டரும் உயர்தர அதிகாரிகளும் நின்றனர். கடைசியில், வால்யாவும் தூக்கிலேற வேண்டிய வேறு இருவரும் சிறையிலிருந்து அழைத்து வரப்பட்டனர். அவர்கள் மூவரும் கைகோர்த்துக் கொண்டு நடந்தனர். இடையில் வால்யா நடந்தாள். அவளால் தனியாக நடக்க முடியாத காரணத்தால், ஏனைய இருவரும் அவளைத் தாங்கிக் கொண்டு வந்தனர். ஆனால், முகமலர்ச்சியுடன் மரணத்தைத் தழுவ வேண்டுமென்று ஸ்தெப்பானவ் சொன்னதை மறக்காத வால்யா, நிமிர்ந்து நடப்பதற்கே அருமுயற்சி செய்தாள். அவள் வெ...

கோட்டு அணியவில்லை; கம்பளி ஜாக்கெட்டு மட்டும் தரித்திருந்தாள்.

''அவர்கள் கைகோத்து நடந்ததைக் காண, ஷ்வார்க்கோவ்ஸ்கியக்குச் சகிக்கவில்லை. எனவே, அவர்களைத் தள்ளினான். வால்யா ஏதோ சொன்னாள். உடனே, குதிரைமீதிருந்த போலீஸ்காரன், தன் சாட்டையால் அவளது முகத்தில் முழு வேகத்துடன் அடித்தான். கூட்டத்திலிருந்த ஒரு மாது பயங்கரமாக அலறினாள். போலீஸ் வளையத்தை உடைத்துக் கொண்டு, கைதிகளை அடைவதற்கு, அவள் வெறிகொண்டவள்போல் போராடினாள். ஆனால் அவர்கள் அவளைக் கைப்பற்றி இழுத்துக்கொண்டு போய்விட்டனர். அவள் வால்யாவின் தாயாகத்தான் இருந்திருக்கவேண்டும். மூவரும் தூக்குமேடையை நெருங்கியவுடன், வால்யா புரட்சிப் பாட்டொன்றைப் பாடத் தொடங்கினாள். அந்த மாதிரியான குரலை நான் ஒரு பொழுதும் கேட்டதில்லை; சாவைத் தழுவச்செல்லும் ஒருவர்தான் அவ்வளவு உணர்ச்சிப் பெருக்குடன் பாடமுடியும். அவளுடன் மற்ற இருவரும் சேர்ந்து பாடினர். குதிரைகள் மீது இருந்த காவலர் சவுக்கால் விசையுடன் அடித்தனர். ஆனால் அந்த மூவரும் அந்தச் சவுக்கடிகளை உணர்ந்ததாகவே தெரியவில்லை. அவர்களைக் கீழே தள்ளினார்கள்; சாக்கு மூட்டைகளை இழுத்துக்கொண்டு போவது மாதிரி, தூக்கு மேடைக்கு இழுத்துச் சென்றார்கள். தண்டனை விவரம் துரிதமாகப் படிக்கப்பட்டது. அவர்களது கழுத்துக்களில் சுருக்குக்

கயிறுகள் மாட்டப்பட்டன. அந்த விஞடியில் தான், நாங்கள் பாடத் தொடங்கிஞேம்:

''பட்டினிக் கொடுஞ்சிறைக்குள் பதறுகின்ற மனிதர்காள்!
பாரில் கடையரே, எழுங்கள்....''

''காவற்படையினர் பாய்ந்துவந்து எங்களேச் சூழ்ந்து கொண்டனர். மேடைகளின் அடிக்கட்டைகளேக் காவலர்கள் துப்பாக்கிப் பிடங்குகளால் தள்ள, மூன்று உடல்களும் சுருக்குக் கயிறுகளால் இழுக்கப்படுவதை மட்டும் காண்பதற்கே எனக்கு அவகாசம் இருந்தது....

''எங்களில் ஒரு பகுதியினரைச் சுவருக்கு முன்ஞல் நிறுத்திவிட்டார்கள். அப்பொழுதுதான் எனக்கும் வேறு ஒன்பது பேருக்கும் மரணதண்டனேயை இருபது ஆண்டு சிறைத்தண்டனேயாகக் குறைக்கப்பட்டிருக்கிறதென்று அறிவித்தார்கள். மீது பதிஞறு தோழர்களும் சுட்டுக் கொல்லப் பட்டனர்.''

சாமுயில், நடுநடுங்கும் கரங்களால் சட்டைக் காலர் தன்னேத் திக்குமுக்காட செய்வது போல அதைக் கிழித்தான்.

''மூன்று நாட்களுக்குப் பிணங்கள் கயிறுகளில் தொங்கின. தூக்குமேடை இரவும் பகலும் பாதுகாக்கப்பட்டது. அதன்பின், கைதான ஒரு புதிய கோஷ்டி சிறைக்கு வந்தது. நான்காவது நாளில், மூவரில் பலசாலியான தோழர் தொபோல்தின் என்பவரின் பிரேதத்தை இழுத்துநின்ற

கயிறு அறுந்துவிட்டதென்றும் அதன்பின் மற்ற இரு பிணங்களையும் நீக்கி, மூன்றையும் அடக்கம் செய்தனர் என்றும் புதிதாக வந்த கைதிகள்மூலம் அறிந்துகொண்டோம்.

''ஆனால் அவர்கள் தூக்குமரத்தை அகற்ற வில்லை. நாங்கள் இங்கு வந்தபொழுதுகூட அவை அங்கு இருந்தன. புதிய பலிகளை எதிர்பார்த்துக் கொண்டு, சுருக்குக் கயிறுகளுடன் காட்சியளிக் கின்றன.''

சாமுயில் மௌனமாகிவிட்டான். அவனது கண்கள் வெறித்து வெகுதூரத்தில் எதையோ நோக்கிக் கொண்டிருந்தன; ஆனால் பார்வைப் புலன் எந்தக் காட்சியையும் பதிவுசெய்யவில்லை. பாவெலும் கதை முடிந்துவிட்டதை உணரவில்லை. ஒரு பக்கமாக வளைந்த தலைகளுடன் கூடிய பிரேதங்கள் ஆடி அசையும் கோரக்காட்சி அவனது மனக்கண்ணைவிட்டு நீங்கவில்லை.

எல்லோரும் கூட வேண்டுமென்பதை அறிவிக்கும் வகையில் சங்கு ஊதியது. பாவெல் அதிர்ச்சி அடைந்தவனாகத் தன் உணர்வைத் திரும்பப்பெற்றான்.

''சாமுயில், போகலாம்'' என்ற வார்த்தைகளை அவன் பெரும்பாடுபட்டு உச்சரித்தான்.

போலிஷ் கைதிகள் வரிசையாக நிறுத்தப்பட்டுக் குதிரைப் படையின் பாதுகாப்பில் வீதிவழியே அழைத்துச் செல்லப்பட்டனர். சிறைச்சாலைகேட்டுகளின் அருகில் நின்ற ரெஜிமென்டுக் கமிஸார்,

தன் குறிப்புப் புத்தகத்தில் ஒரு உத்திரவை எழுதிக்கொண்டிருந்தான்.

அந்தத் தாளை ஸ்க்வாட்ரன் தலைவனை ஒரு கட்டுக்குட்டானவரிடம் கொடுத்துவிட்டு, கூறினான்:

''தோழர் அன்தீப்பவ், இதை எடுத்துக் கொண்டு செல்லுங்கள். இந்தக் கைதிகள் அனை வரையும் குதிரைப்படையின் பாதுகாப்பில் நோவ் கரத்-வாலீன்ஸ்க்கிய் டவுனுக்கு அழைத்துச் செல் லுங்கள். காயமடைந்துள்ள கைதிகளுக்கு வைத் திய உதவி அளியுங்கள். அதன்பின், அவர்களை வண்டிகளில் ஏற்றி, டவுனிலிருந்து இருபது கிலோமீட்டர் தூரம் தாண்டியபின், அவர்களை விட்டு விடுங்கள். அவர்களோடு சிரமப்படுவதற்கு நமக்கு நேரம் இல்லை. கைதிகளை எவரும் தகாத முறையில் நடத்தக் கூடாது; இது விஷயத்தில் உஷாராயிருங்கள்.''

பாவெல் தன் குதிரையின் மீது ஏறிக் கொண்டே சாமுயிலிடம் சொன்னான்:

''அதைக் கேட்டாயா? அவர்கள் நமது தோழர்களைத் தூக்கிலிடுகிறார்கள். நாமோ அவர் களைப் பத்திரமாக அழைத்துக்கொண்டு போய், அவர்களது ஆட்கள் உள்ள பக்கத்துக்குக் கொண் டுவிட வேண்டும். தவிர, அவர்களை நேர்த்தியாக நடத்தவும் வேண்டும். இது எப்படிச் சாத்தியம்?''

இந்த வார்த்தைகள் ரெஜிமென்டு தலைவன் காதில் விழுந்தது. அவன் திரும்பி, பாவெலைக் கண்டிப்பான தோரணையில் நோக்கினான்.

''நிராயுதபாணிகளாகவுள்ள ... கொடுமை செய்வோருக்கு மரணதண்டனை ... கப்படும். நாம் வெள்ளைப்படையினர் ... என்று அவன் தனிமொழியாகப் பேசுவது ... குறிப்பிட்டான். அந்த வார்த்தைகள் பாவெலின் கேள்விப் புலனில் பதிந்தன.

பாவெல் சிறையின் வாசலைக் கடக்கும் பொழுது, புரட்சிகர ராணுவக் கவுன்சிலின் கட்டளையை நினைவூட்டிக் கொண்டான். அதன் இறுதி வாசகம் அவன் மனதில் ஆழப் பதிந்திருந்தது:

''தொழிலாளர் விவசாயிகளின் நாடாகிய இந்நாட்டில் செஞ்சேனை மக்களின் நேசத்துக்கும் பாசத்துக்கும் உரியதாகத் திகழ்கிறது. அதன் பதாகைகளில் ஒரு கறைகூடப் படியக் கூடாது.''

''ஆம், ஒரு கறைகூட ஏற்படக் கூடாது'' என்று பாவெலின் உதடுகள் உச்சரித்தன.

நான்காவது குதிரைப்படை டிவிஷன் ஷித்தோமிர் என்ற நகரத்தைக் கைப்பற்றிய அந்நேரத்தில், கோலிக்கவின் தாக்குப்படையைச் சார்ந்த ஏழாவது துப்பாக்கி டிவிஷனின் 20வது பிரிகேடு ஒக்குனீனவோ என்ற கிராமத்துக்கு அருகே த்நேப்பர் நதியைக் கடந்துகொண்டிருந்தது.

25வது காலாட்படை டிவிஷனும், பஷ்கீரிய குதிரை பிரிகேடும் கொண்ட குழுவுக்கு, த்நேப்பர் நதியைத் தாண்டிச் சென்று, இர்ஷா ரயில் நிலையத்துக்கு அருகே கீவ்-கோராஸ்தேன் இருப்புப் பாதையில் உடைப்பை ஏற்படுத்த வேண்டு

மெனக் கட்டளையிடப்பட்டிருந்தது. இம்முயற்சி வெற்றியடைந்தால், கீவிலிருந்த போலிஷ் படைகள் பின்வாங்குவதற்கு இருந்த ஒரே வழியுட் அடைபட்டுவிடும்.

த்நேப்பர் நதியைத் தாண்டிய பொழுதே. ஷெப்பெத்தோவ்க்கா கம்ஸமோல் கிளையைச் சேர்ந்த மீஷா லெவ்ச்சுக்கோவ் இறந்தான். சட்டிப் படகுகளால் அமைந்து, நிலைகொள்ளாது ஆடிக்கொண்டிருந்த பாலத்தின்மீது அவர்கள் ஓடிக்கொண்டிருந்தனர். அப்பொழுது, எதிரில் இருந்த செங்குத்தான கரைக்கு அப்பால் எங்கோ உள்ள ஓரிடத்திலிருந்து ஏவப்பட்ட குண்டு ஒன்று சிணுங்கிக்கொண்டே வந்தது; பாலத்துக்கு மேலாகச் சென்று, பக்கத்தில் ஆற்றில் விழுந்து, தண்ணீரைச் சிதறடித்தது. அதே விநாடியில், படகுகளில் ஒன்றின்மீது ஓடிவந்த மீஷாவும் மறைந்தான், ஆறு அவனை விழுங்கிக் கொண்டுவிட்டது; அவனைத் திருப்பிக் கொடுக்கவில்லை. கிழிந்த குல்லாயை அணிந்திருந்த யக்கிமேன்கோ என்ற செஞ்சேனைவீரன், ''மீஷா! அட கஷ்டமே! அது மீஷாதான்! நல்ல பையன்! ஆற்றின் ஆழத்துக்குள் மூழ்கிவிட்டானே'' என்று கதறினான். ஒரு விநாடி நேரம், அவன் பயத்துக்கு இரையானவனாய் இருண்ட நீரோட்டத்தை வெறித்து நோக்கினான். ஆனால் அவனுக்குப் பின்னால் ஓடிவந்தவர்கள், ''முட்டாள்! வாயைப் பிளந்துகொண்டு நிற்காதே. எதைப் பார்க்கிறாய்? ஓடு! ஓடு!'' என்று கூறிக்கொண்டே அவனைத் தள்ளினார்கள். யாரைப் பற்றிக் கவலைப்

படுவதற்கும் அது நேரம் அல்ல. இதர படைகள் ஆற்றின் வலது கரையை முன்பே வசப்படுத்திக் கொண்டு விட்டன. இந்தப் படைப் பகுதியே சற்றுப் பின்தங்கி விட்டது.

நான்கு நாட்கள் கழிந்த பிறகே, மீஷா இறந்துவிட்டான் என்பதை ஸெர்யோஷா அறிந்து கொண்டான். அதற்குள் அவர்களுடைய பிரிகேடு போர்முனையை கீவை நோக்கி அமைத்துக் கொண்டது. செம்படையின் அணியைப் பிளந்துகொண்டு சென்று கோராஸ்தேனே அடைவதற்காக, போலிஷ் சிப்பாய்கள் தொடுத்த மூர்க்கமான தாக்குதல்களை முறியடித்துக் கொண்டிருந்தது.

யக்கிமேன்கோ ஸெர்யோஷாவுக்குப் பக்கத்தில் குப்புறப் படுத்துக் கொண்டிருந்தான். இருவரும் சிறிது நேரமாகத் தொடர்ந்தாற்போலச் சுட்டுக் கொண்டிருந்தனர். உக்கிரமான துப்பாக்கிப் பிரயோகத்தை நிறுத்திவிட்டு, யக்கிமேன்கோ கடினத்துடன் செக்கச் சிவந்திருந்த துப்பாக்கியின் பூட்டைத் திறந்தான். தலையை உயர்த்தி விடாமல், ஜாக்கிரதையாக அவன் ஸெர்யோஷாவின் பக்கம் திரும்பினான். ''துப்பாக்கிக்கு ஓய்வு கொடுக்கவேண்டும். பழுக்கக் காய்ச்சியதைப் போலச் சூடேறியிருக்கிறது'' என்று கூறினான்.

துப்பாக்கிப் பிரயோக முழக்கங்களுக்கிடையே, அவன் கூறியது ஸெர்யோஷாவின் காதில் சரியாக விழவில்லை.

அந்த இரைச்சல் ஓரளவு அடங்கிய பிறகு,

யக்கிமேன்கோ தற்செயலாகக் கூறுவதைப் போலச் சொன்னான்:

''உன் தோழன் த்நேப்பர் நதியில் மூழ்கி விட்டான். என்னால் உதவ முடியவில்லை. கண நேரத்தில் காரியம் முடிந்து விட்டது.''

அதன்பின் அவன் துப்பாக்கியைச் சரிப்படுத்தி விட்டுக் குண்டுகளை அடைப்பதில் முனைந்தான்.

பெர்தீச்சேவ் என்ற நகரத்தைப் பிடிப்பதற்குச் சென்ற பதினொன்றாவது டிவிஷன் போலிஷ் சிப்பாய்களது தீவிர எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது. நகரத்தின் வீதிகளில் இரத்தம் பெருக்கெடுத்து ஓடும்வகையில் போராட்டம் நடந்தது. யந்திரத் துப்பாக்கிகளது தீக்காற்றுக்கு இடையே குதிரைப்படை வீரர்கள் முன்னேறினர். நகரம் பிடிபட்டது. முறியடிக்கப்பட்ட போலிஷ் படையினரில் மீதமிச்சமிருந்தவர்கள் ஓடினார்கள். ரயில்வே ஸ்டேஷனில் ரயில்கள் அனைத்தும் பிடிபட்டன. ஆனால் போலிஷ் சிப்பாய்களுக்கு ஒரு பயங்கரமான அதிர்ச்சி ஏற்பட்டது; வெடிமருந்துக் கிடங்கு வெடியால் அழிந்த விபத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி அது. போர்முனை முழுமைக்கும் இங்குதான் வெடிமருந்து சேமித்து வைக்கப்பட்டிருந்தது. அதுவே வெடிக்கு இரையாகி விட்டது. பத்து லட்சம் குண்டுகள் வெடித்தன. அந்த வெடி விபத்தில், ஜன்னல் கண்ணாடிகள் தூள்தூளாகச் சிதறின. வீடுகளோ, அட்டை வீடுகள் போல நடுங்கின.

ஷித்தோமிர், பெர்தீச்சேவ் நகரங்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் போலிஷ் படைகளுக்குப் பின்பக்கத் தாக்குதல்களாக அமைந்தன. அவை கீவ் நகரிலிருந்து இரண்டு கிளைகளாகப் பிரிந்து, வெறித்தனமாகப் போராடிப் பின்வாங்கத் தொடங்கின. எப்படியாவது தம்மைச் சுற்றி அமைந்துகொண்டிருந்த எஃகு வளையத்தைத் தகர்க்க அவை முயன்றன.

இந்த நாட்களில், இந்தப் போராட்டச் சூறாவளியில் அலைக்கழிக்கப்பட்ட பாவெல், தன்னையே மறந்தான். அவனது தனித்தன்மை, படையின் பொதுத் தன்மையில் சங்கமமாகிவிட்டது, அவனும் சரி, இதர போர் வீரர்களும் சரி, ''நான்'' என்ற சொல்லையே மறந்துவிட்டனர்; ''நாம்'' என்ற சொல் மட்டுமே அவர்களது உணர்வில் தைத்திருந்தது. ''நமது ரெஜிமென்ட்'', ''நமது ஸ்க்வாட்ரன்'', ''நமது பிரிகேடு'' என்றே அவர்கள் பேசினார்கள்.

சம்பவங்கள் சூறாவளியின் வேகத்தில் நடந்தேறின. ஒவ்வொரு தினமும் ஏதாவது புதுமை நிகழ்ந்தது.

பாறைகள் மலைச்சரிவில் உருண்டோடி வருவதைப்போல, புத்யோன்னியின் குதிரைப் படை முன்னேறியது. அடிமேல் அடிகொடுத்து, போலிஷ் பின்னணியை உருக்குலையச் செய்தது. பெற்ற வெற்றிகளால் ஆவேசம் அடைந்த குதிரைப் படையினர், கோபக் கிளர்ச்சி மிகுந்தவராய், போலிஷ் ராணுவத்தின் பின்புறத்தில் எதிரிகளுக்கு

உயிர்நிலையாக இருந்த நோவ்கரத்-வாலீன்ஸ்கி யைத் தாக்கினார்கள். மலைப்பாங்கான கடற்கரை மீது சமுத்திரத்தின் அலைகள் மோதிப் பின் வாங்கி மீண்டும் மோதுவதைப்போல, புத்யோன்னியின் படைகள் அந்த நகரைத் தாக்கிவிட்டுப் பின்வாங் கியபொழுதும், ''முன்னேறு! முன்னேறு'' என்ற கோஷத்தைப் பயங்கரமாக உச்சரித்துக்கொண்டு மீண்டும் தாக்கின.

போலிஷ் படைகளை எந்தச் சக்தியாலும் எந்தச் சாதனத்தாலும் காப்பாற்ற முடியவில்லை. முள்கம்பிகளால் அமைந்த வலைகளோ, நகரத்தி லுள்ள படை எல்லாம் பிடிவாதமாகவும் வெறி யோடும் போட்ட சண்டையோ, எதுவும் அவர் களை ரட்சிக்க முடியவில்லை. ஜூன் மாதம் 27ம் தேதி காலையில், புத்யோன்னியின் குதிரைப் படை, கீழே இறங்காமலேயே, ஸ்லூச் நதியைக் கடந்து நோவ்கரத்-வாலீன்ஸ்கியில் பிரவேசித்தது. நகரத் திலிருந்த போலிஷ் சிப்பாய்களை கொரேத்ஸ் இருந்த திசையை நோக்கி விரட்டியது. அதே சமயத்தில், 45வது டிவிஷன், நோவிய் மிரொப் போல் என்ற இடத்தில் ஸ்லூச் நதியைக் கடந் தது. காத்தோவ்ஸ்க்கியின் குதிரைப் பிரிகேடு லியூபார் என்ற இடத்தை நோக்கி விரைந்தது.

ரோவ்னோ என்ற நகரத்தைப் பிடிப்பதற் குக் குதிரைப்படை முழுவதையும் பயன்படுத்த வேண்டுமென்று, முதலாவது குதிரைப் படைக் குப் போர்முனை சேனாதிபதியிடமிருந்து உத்திரவு கிடைத்தது. செஞ் சேனை நடத்திய தீவிரத்

தாக்குதலால் போலிஷ் அணி குலைந்தது; சோர்வுற்றுப் பீதியடைந்த கோஷ்டிகளாகச் சிதறுண்டு ஓடியது.

இந்த மகத்தான நாட்களில் ஒருநாள், கவசமணிந்த ரயில் ஒன்று நின்றுகொண்டிருந்த ஸ்டேஷனுக்குச் சென்று வரும்படி, பிரிகேட் தலைவன் பாவெலை அனுப்பினான். செங்குத்தான ரயில்வே மேட்டின்மீது துரிதமாகக் குதிரையைச் செலுத்திய பாவெல் ரயிலின் முன் வண்டிக்கு அருகில் கடிவாளத்தை இழுத்துப் பிடித்தான். கருத்துத் துருத்திக் கொண்டிருந்த பீரங்கி வாய்களுடன் கவசரயில் பார்ப்பதற்குப் பயங்கரமாயிருந்தது. எண்ணெய்க் கறைபடிந்த சிலர் டிரெயினின் சக்கரங்களுக்கு அருகில் கனமான இரும்புத் தகடுகளை நகர்த்திக் கொண்டிருந்தனர்.

தோல் சட்டை அணிந்த செஞ்சேனை வீரன் ஒருவன் வாளியில் தண்ணீர் எடுத்துக்கொண்டு சென்றான்.

''தலைவரை எங்கே பார்க்கலாம்?'' என்று அவனைப் பாவெல் கேட்டான்.

''அங்கே!'' என்று அவன் எஞ்சினைக் காட்டி விடையளித்தான்.

பாவெல் எஞ்சின் இருந்த இடத்தை நொடிப் பொழுதில் அடைந்தான்.

''நான் தலைவரைப் பார்க்க வேண்டும்'' என்றான் பாவெல்.

தலைமுதல் பாதம்வரை தோல் ஆடைகளை

உடுத்தியிருந்த ஒருவன், அம்மை வடு முகத்தை உடையவன், திரும்பினுன்.

''நான்தான் தலைவன்'' என்ருன்.

பாவெல் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கவரை எடுத்து அவனிடம் கொடுத்தான்.

''பிரிகேட் தலைவரின் உத்திரவு இது. கவரில் கையெழுத்திடுங்கள்.''

கவச ரயிலின் தலைவன் தன் முழங்கால் மூட்டு மீது கவரை வைத்துக்கொண்டு, அதன்மீது கையெழுத்திட்டான். எஞ்சினின் நடுச் சக்கரத்தில், எண்ணெய்க் குவளேயும் கையுமாக ஒருவன் ஏதோ வேலே செய்துகொண்டிருந்தான். அவனது அகன்ற முதுகையும் அவனுடைய தோல் கால் சட்டைப் பையிலிருந்து நீட்டிக்கொண்டிருந்த ரிவால்வர் கைப்பிடியையும் பாவெலால் பார்க்க முடிந்தது.

தலைவன் பாவெலிடம் கவரைத் திருப்பிக் கொடுத்தான். பாவெல் கடிவாளத்தின் வடத்தைக் கையில் எடுத்துக் கொண்டு கிளம்பிக் கொண்டிருந்த தருணத்தில், எண்ணெய்க் குவளே வைத்திருந்த மனிதன் திரும்பினுன். அடுத்த விஞடி ஏதோ பலமான காற்று அடித்துக் கீழே தள்ளியதைப்போல பாவெல் குதிரையிலிருந்து குதித்தான்.

''ஆர்த்தியோம்!''

ஆர்த்தியோம் தன் எண்ணெய்க் குவளேயைக் கீழே எறிந்தான்; செஞ்சேனே இளேஞனேக் கரடியைப்போலத் தழுவினுன்.

''பாவெல்! போக்கிரிப் [illegible]
என்று கூறினன். அவனது கண்களை [illegible]
நம்பமுடியவில்லை.

கவச ரயிலின் தலைவன் காட்சி முழுவ[illegible]
ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.
செஞ்சேனை வீரர்கள் அகமகிழ்ந்தனர்.

''அண்ணனும் தம்பியும் எப்படிச் சந்தித்தார்கள், பாருங்கள்!'' என்று அவர்கள் கூறினர்.

ஆகஸ்ட் மாதம் 19ம் தேதி, லிவோவ் பிரதேசத்தில் போர் நடந்தபொழுது, அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. போராட்டத்தில் பாவெல் தன் குல்லாயை இழந்துவிட்டான். அவன் தன் குதிரையை இழுத்துப் பிடித்துக்கொண்டான். முன்னல் இருந்த படைக் குழுக்கள் போலிஷ் அணியைக் குலைத்துவிட்டன. அந்த நேரத்தில், தெமீதாவ் புதர்களின் வழியே குதிரைமீது பறந்து வந்தான். ஆற்றுக்கு விரைந்து வந்த அவன், பாவெலைத் தாண்டியபொழுது, ''டிவிஷன் தலைவர் கொலை செய்யப்பட்டுவிட்டார்'' என்று கத்தினன்.

பாவெல் அதிர்ச்சியடைந்தான். அவனது வீரஞ்செறிந்த தலைவன், மாசில்லாத தைரியத்துக்கு உரிய தீரன், லெத்துனேவ் இறந்துவிட்டான்! பாவெல் கோபவெறிக்கு இரையானன்.

சோர்வுற்று, இரத்தநுரை தள்ளிக்கொண்டிருந்த குதிரையை அவன் தனது வாளால் மழுங்கல் முனையால் தூண்டி விரட்டி, போராட்டம் உச்சநிலையில் நடைபெற்ற இடத்துக்கு விரைந்தோடினன்.

''நச்சுப் பூச்சிகளை நாசம் செய்யுங்கள்! கொல்லுங்கள்! கொல்லுங்கள்! அவர்கள் லெத்துனேவைக் கொலை செய்துவிட்டார்கள்!'' என்று இரைந்து கூவிக்கொண்டே, பாவெல் போராடினான். பச்சை உடுப்பு அணிந்தவன் எவனாயிருந்தாலும், அவனைப் பாவெல் அங்கேயே வெட்டிப் போட்டான்! டிவிஷன் தலைவனின் கொலையால் வெஞ்சினம் கொண்ட செஞ்சேனை வீரர்கள் ஒரு போலிஷ் பிளாட்டூனையே அழித்துவிட்டனர்.

செம்படை வீரர்கள் பகைவரைத் துரத்திக் கொண்டே சுற்றுமுற்றும் பாராமல் களத்துக்குள் ஓடினார்கள். திடீரென்று, ஒரு போலிஷ் பீரங்கிப் பிரிவு செயல்படத் தொடங்கியது. வெடி குண்டுகள் நாலாபுறங்களிலும் வெடித்துப் பலரைப் பலி வாங்கின.

திடீரென்று பாவெலது கண்களுக்கு முன்னால், பார்வையை அழிக்கும் திறனுள்ள பசுமையான காந்தி தோன்றியது; அவனது காதுகள் இடியால் தாக்குண்டன; பழுக்கக் காய்ச்சிய இரும்பு அவனது கபாலத்தைச் சுட்டது. பூமி விசித்திரமாகவும் பயங்கரமாகவும் சுழலத் தொடங்குவதைப் போல ஒரு உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது.

பாவெல் சேணத்திலிருந்து தூக்கி எறியப் பட்டான். அவன் குதிரையின் தலைக்கு மேலாகப் பறந்து வேகமாகத் தரையில் விழுந்தான்.

உடனே, தொட்டுணரும் அளவுக்குக் கெட்டி தட்டிப் போன காரிருள் சூழ்ந்தது.

அத்தியாயம் ஒன்பது

அந்தப் பேய்க் கணவாயின் கண்கள் பூனைத் தலையின் அளவுக்கு வீங்கியிருந்தன; செக்கச் சிவந்திருந்தன; பசுமை படர்ந்திருந்த அக்கண் களின் மையம் பலவித வண்ணங்களுடன் ஒளிர்ந் தது; அது எண்ணிலடங்கா கால்களினுல் ஊர்ந்து கொண்டிருந்தது; அந்த வெறுக்கத்தக்க ஜந்து வின் கொம்புகள், பின்னிப் பிணைந்த பாம்புகளின் முடிச்சைப்போல, வளைந்து நெளிகின்றன. அவை அசையும்பொழுது, அவற்றின் கரடுமுரடான வளர்ந்த தோல் சரசரவென்று ஒலித்து, அச்சத் தையும் அருவருப்பையும் உண்டாக்குகிறது. இப் பொழுது, அந்த ஜந்து நகர்கிறது. தன் கண்களை ஒட்டினுற்போல அந்தப் பேய்க் கணவாய் இருப் பதை அவன் காண்கிருன். இப்பொழுது, அதன் கொம்புகள் அவனது உடலில் ஊர்கின்றன; அவை குளிர்ச்சியாக இருக்கின்றன; காஞ்சொறி மாதிரி அவை குத்தித் துன்புறுத்தின. அந்த ஜந்து தன் கொடுக்கை நீட்டுகிறது; அந்தக் கொடுக்கு ஒரு அட்டையைப்போல அவனது முகத்தில் ஆழக் கடிக்கிறது. வலிப்பு கண்டதைப்போல அசைந் தாடிக் கொண்டு, அது அவனுடைய உதிரத்தைக் குடிக்கிறது. அவனது உடலின் உதிரம், உப்பிக் கொண்டிருந்த ஜந்துவின் உடலுக்குள் பாய்கிற தென்ற உணர்ச்சி அவனுக்கு உண்டாகிறது. கொ டுக்கு உறிஞ்சிக்கொண்டே இருக்கிறது; அதனுல்

ஏற்படும் வேதனையை அவனால் சகிக்க முடி-
வில்லை.

ரொம்ப ரொம்பத் தூரத்தில், எங்கோ ஒ
இடத்தில், மனிதக் குரல்கள் கேட்கின்றன.

''அவனுடைய நாடி எப்படி இருக்கிறது?''

இன்னொரு குரல், ஒரு பெண்ணின் குரல்
மென்மையாகப் பதில் தருகிறது:

''அவனுடைய நாடித் துடிப்பு—138; உஷ்ண
நிலை—103.1. உணர்வில்லாமல் எப்பொழுது-
பிதற்றிக் கொண்டிருக்கிறான்.''

பேய்க் கனவாய் மறைந்துவிட்டது. ஆனால்
வேதனை நீங்கியபாடில்லை. யாரோ தன்னுடைய
மணிக்கட்டைத் தொடுவது மாதிரி, பாவெலுக்கு
உணர்ச்சி ஏற்பட்டது. அவன் கண்களைத் திறப்-
பதற்கு முயன்றான். ஆனால் இமைகள் பாரமாக
அழுத்தியதால், அவற்றைத் திறக்கும் சக்தி
பாவெலுக்கு இல்லை. ஏன் இவ்வளவு வெப்பமா-
யிருக்கிறது! அம்மா, அடுப்பைப் பற்றவைத்து
விட்டாளா? மீண்டும், அவனது காதில் அந்தக்
குரல் விழுந்தது.

''இப்பொழுது, அவனது நாடித் துடிப்பு 12_
ஆகக் குறைந்துவிட்டது.''

அவன் தன் இமைகளைத் திறக்க முயல்கிறான்.
அதன் உள்ளே ஒரு தீ எரிந்து கொண்டிருக்கிறது.
மூச்சுவிட முடியாமல் திணறுகிறான்.

தாகம்! ஒரே தாகம்! அவன் எழுகிறான்.
தாகந்தீருமட்டும் நன்றாகக் குடிக்கிறான். ஆனால்
அவன் ஏன் எழவில்லை? அவன் உடலை அசைக்க

எண்ணினான், ஆனால் உடல் அவனதல்ல, அவன் சொற்படி நடக்க மறுக்கின்றது. அம்மா உடனே தண்ணீர் கொண்டு வருவாள். ''எனக்குக் குடிதண்ணீர் வேண்டும்'' என்று அவன் அவளிடம் கூறுவான். அவனுக்குப் பக்கத்தில் ஏதோ ஒன்று அசைகிறது. பேய்க் கனவாயே மீண்டும் அவனது உடல் மீது தவழப் போகிறதா? அதோ வருகிறது, சிவந்த கண்களுடன்....

தூரத்திலிருந்து அந்த மென்மையான குரல்:

''பிரோஸ்யா, கொஞ்சம் தண்ணீர் கொண்டுவாருங்கள்.''

''அது யாருடைய பெயர்?'' ஆனால் நினைவு படுத்திக் கொள்ளும் முயற்சியை அவனால் தாங்க முடியவில்லை. மீண்டும் அவனைக் காரிருள் சூழ்ந்து கொள்கிறது. சடுதியில், அந்த இருள் நீங்குகிறது; ''தாகமாயிருக்கிறது'' என்பதை அவன் ஞாபகப்படுத்திக் கொள்கிறான்.

''அவன் உணர்வு பெற்றுக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது'' என்று பல குரல்கள் சொல்வதை அவன் கேட்கிறான்.

அந்த மென்மையான குரல் இப்பொழுது அண்மையில் ஒலிக்கிறது. தெளிவாகப் பேசுகிறது.

''தண்ணீர் அருந்த விரும்புகிறீரா?''

''அவர்கள் என்னைத்தான் கேட்கிறார்களா? நான் காய்ச்சலுடன் படுத்திருக்கிறேனா? ஆம், ஆம். எனக்கு டைபஸ் ஜுரம். விஷயம் அதுதான்.'' அவன் மூன்றாவது தடவையாகக் கண்களைத் திறக்க முயற்சிக்கிறான். இறுதியில் வெற்றியும் அடை

கிருன். ஓரளவுக்கு விலகிய இமைகள் மூலம் அவ னது பார்வைப் புலன் முதலில் பதிவு செய்யுட் விஷயம் என்ன? அவனது தலைக்கு மேல் ஒரு சிவட் புப் பந்து தொங்கிக் கொண்டிருக்கிறது என்பது தான். ஆனால் அவன்மீது ஏதோ ஒரு கரிய வடிவட் சாய்வதால், அந்தச் சிவப்புப் பந்து மறைகிறது. அவனது இதழ்கள், ஒரு கண்ணாடியின் முனை யையும் ஈரத்தையும் உணர்கின்றன. ஆம், அது உயிரூட்டும் ஈரம். அவனது உடலை எரித்துக் கொண்டிருந்த தீ அடங்குகிறது. அவன் திருப்தி அடைந்தவனாக, ''இனி நன்று'' என்று தாழ்ந்த சுருதியில் சொன்னான்.

''என்னைப் பார்க்க முடிகிறதா?''

அவனுக்குமேல் குனிந்து கொண்டிருந்த கரியவடிவம் கேட்ட கேள்வி இது.

''பார்க்க முடியவில்லை, கேட்க முடிகிறது'' என்று கூறிய பாவெல் மறுபடியும் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டான்.

''இவன் பிழைப்பான் என்று எவரும் கனவு காணவில்லை. எத்தனை கஷ்டங்களைத் தாங்கிக் கொண்டான்! இறுதியில், வாழும் உரிமையை ஸ்தாபித்துக் கொண்டு விட்டான்! வலுவான உடலமைப்பு! நீநா விளாதீமிரவ்னா, நீங்கள்தான் அவனுக்கு உயிர் கொடுத்து உதவியவர். எனவே, நியாயமாகப் பெருமை கொள்ளலாம்.''

''என் ஆனந்தத்தைச் சொல்ல முடியாது'' என்று நீநா விளாதீமிரவ்னா உணர்ச்சி வசப் பட்டுக் கூறினாள்.

பதின்மூன்று நாட்கள் உணர்விழந்துகிடந்த பாவெல் மீண்டும் உணர்வுபெற்முன். அவனது இளமையான உடல் சாவதற்கு விரும்பவில்லை. அவன் பையப் பையத் தன் பலத்தை மீண்டும் பெறத் தொடங்கிஞன். அது மறுபிறப்பு எடுப்பது மாதிரியே அவனுக்கு இருந்தது. ஒவ்வொன்றும் புதுமையாகவும் அற்புதமாகவும் காட்சி தந்தது. அவனது தலை மட்டும் நகரவேயில்லை. மண்டையில் போட்டிருந்த கட்டு பாரமாக இருந்ததால் அவனுல் தலையை நகர்த்த முடியவில்லை. ஆனுல் மிச்சமுள்ள உடலில் உணர்ச்சி உண்டாகி விட்டது. சீக்கிரத்தில், விரல்களை வளைப்பதும் சாத்தியமாயிற்று.

ராணுவ ஆஸ்பத்திரியில், ஜூனியர் டாக்டராக வேலை செய்த நீநா விளாதீமிரவ்ஞ தன் அறையில் ஒரு சிறிய மேஜைக்கு முன்னுல் அமர்ந்து கொண்டு, செந்நீல நிறமான அட்டையை உடைய நோட்புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தாள். அவற்றில் சுருக்கமான குறிப்புகள் நேர்த்தியான கையெழுத்தில் எழுதப் பட்டிருந்தன.

1920, ஆகஸ்ட் 26

இன்று, நோயாளிகளை ஏற்றி வந்த ஆம்புலன்ஸ் வண்டியில், அபாயகரமான நிலையிலிருந்த சில போரில் காயமுற்றவர்கள் வந்தனர். ஒருவ

னுக்கு மிகவும் மோசமான காயம் மண்டையி
ஏற்பட்டிருக்கிறது. அவனுக்குப் பதினேழு வயது
தான். அவனை ஜன்னலுக்கு அருகில் உள்
மூலையில் படுக்கவைத்தோம். அவனது சட்டை
பைகளில் இருந்த காகிதங்களையும் அவனுக்கு
வைத்தியம் செய்த விவரங்களைக் கொண்ட
குறிப்பையும் ஒரு கவரில் வைத்து என்னிடம்
கொடுத்தார்கள். அவனுடைய பெயர், பாவெல்
அந்திரேயெவிச் கர்ச்சாகின். அவனுடைய காகி
தங்களில் ஒன்று, நைந்துபோன உக்ரேனிய
கம்யூனிஸ்ட் இளைஞர் சங்கத்தின் அங்கத்தினர்
சீட்டு (நெ.967). மற்றொன்று துண்டுதுண்டாகக்
கிழந்துபோன செஞ்சேனை வீரன் என்பதற்கான
அத்தாட்சிப் பத்திரம். கர்ச்சாகின் வேலை பார்த்து
வரும் வேலை ஒன்றைத் திறம்பட நிறைவேற்றி
யதற்காக அவனைப்பாராட்டி, அவனது பட்டாளத்
தலைமை விடுத்திருந்த ஆர்டரின் பிரதியும், அந்தக்
காகிதங்களிடையே இருந்தது. தவிர, ஒரு குறிப்
பும் இருந்தது. ''நான் இறந்துவிட்டால், என்
உறவினருக்கு எழுதுங்கள். விலாசம்: ஆர்த்தி
யோம் கர்ச்சாகின், மெக்கானிக், ரயில்வே டெப்
போ, ஷெப்பெத்தோவ்க்கா.'' இந்தக் குறிப்பை
அவனே எழுதி வைத்திருக்கிறான் என்பது வெளிப்
படை.

ஆகஸ்ட் 19ல் அவனை ஒரு வெடிகுண்டின்
சிம்பு தாக்கியது. அதிலிருந்து அவன் உணர்வில்
லாமல் கிடக்கிறான். நாளைக்கு அவனை அனத்தோ
லிய் ஸ்தெப்பானவிச் பரிசோதனை செய்வார்.

ஆகஸ்ட் 27

இன்று நாங்கள் கர்ச்சாகினின் காயத்தைப் பரிசோதித்தோம். அது மிகவும் ஆழமாக இருக்கிறது. அவனது கபாலத்தில் முறிவு ஏற்பட்டிருக்கிறது. தலையின் வலது பக்கம் முழுவதும் சுரணையற்றுக் கிடக்கிறது. வலது கண்ணில் இரத்தப் பெருக்கு. அந்தக் கண் வீங்கியிருக்கிறது.

கண் அழற்சியைத் தவிர்ப்பதற்காக, அந்த விழியை அகற்றிவிடலாமென்று அனத்தோலிய் ஸ்தெப்பானவிச் கூறினார். ஆனால் வீக்கம் வடியலாமென்ற நம்பிக்கை இருப்பதாகக் கூறி, அவரது மனதை மாற்றினேன். உண்மையில், விழியைப் பிடுங்குவது விரஸமான செய்கை என்பதால் தான், அவரது அபிப்ராயத்தை மாற்றினேன். ஒருவேளை, இளைஞன் பிழைத்துவிடலாம். அப்பொழுது, அவனது முகம் ஊனமாயிருந்தால், அது பரிதாபகரமானதாக இருக்கும்.

கர்ச்சாகின் எப்பொழுதுமே வலிப்பு கண்டவன் போல் இருக்கிறான். நிம்மதியே கிடையாது. எங்களில் ஒருவர் எப்பொழுதும் அவனுடைய படுக்கையண்டை அமர்ந்து கவனித்துவருகிறோம். நான் என்னுடைய நேரத்தில் பெரும் பகுதியை அவனுடன் கழிக்கிறேன். அந்த இளைஞன் சாகக் கூடாது. அவனது இளம் ஜீவனை மரணத்தின் பிடிப்பிலிருந்து மீட்டுவிடுவதென்று நான் உறுதி கொண்டிருக்கிறேன். நான் வெற்றி அடையவேண்டும்.

நேற்று, என் வேலை முடிந்த பிறகு, அவனது வார்டுக்குச் சென்று பல மணிநேரம் அங்கு இருந்தேன். அங்குள்ள காயமுற்ற நோயாளிகளில் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பவன் கர்ச்சாகின் தான். அவன் அருகில் உட்கார்ந்து, அவனது பிதற்றல்களைக் கேட்டுக் கொண்டிருந்தேன். சில சமயங்களில் அந்தப் பிதற்றல்கள் ஒரு கதையாக அமைகின்றன. நான் அவனது வாழ்க்கையைப் பற்றி நிறையத் தெரிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் அவன் அடிக்கடி விகாரமான ஏச்சுப் பேச்சுகளில் இறங்கிவிடுகிறான். அவனது பாஷை பயங்கரமாயிருக்கிறது. அவன் இம்மாதிரி ஏசுவதைக் கேட்கும்பொழுது, ஏனோ என் மனம் புண்படுகிறது. அவன் பிழைத்து விடுவானென்று அனத்தோலிய் ஸ்தெப்பானவிச் நம்பவில்லை. ''இத்தகைய குழந்தைகளை எப்படி சேனையில் எடுத்துக் கொள்கிறார்களென்று எனக்குப் புரியவில்லை. இது ஒரு மானக்கேடான விஷயம்'' என்று அந்தக் கிழவர் உறுமுகிறார்.

ஆகஸ்ட் 30

கர்ச்சாகினுக்கு இன்னும் உணர்வு உண்டாகவில்லை. பிழைக்கமாட்டார்களென்று கைவிடப்பட்ட நோயாளிகளின் வார்டுக்கு அவனை அகற்றிவிட்டோம். நர்ஸ் பிரோஸ்யா எப்பொழுதும் அவனுடன் இருக்கிறாள். அவனை அவளுக்கு முன்பே தெரியுமாம். அவர்கள் இருவரும் ஒருகாலத்

தில் ஓரிடத்தில் சேர்ந்து வேலை செய்தார்களாம். அவள் அவனிடம் எவ்வளவு மென்மையாக நடந்து கொள்கிருள்! அவன் இனிப் பிழைக்கமாட்டா னென்ற எண்ணம் இப்பொழுது எனக்கும் ஏற் பட்டு விட்டது.

செப்டம்பர் 2

இரவு மணி 11. இந்த நாள் எனக்கு ஒரு அற் புதமான திருநாளாகும். என்னிடம் வைத்தியம் செய்துகொண்டு வரும் கர்ச்சாகின் உணர்வு அடைந்துவிட்டான். நெருக்கடியைக் கடந்துவிட் டான். கடந்த இரண்டு நாட்களும் நான் வீட்டுக் குப் போகவில்லை; அவனுடனேயே இருந்தேன்.

இன்னெரு உயிர் காப்பாற்றப்பட்டுவிட்ட தில் எனக்கு ஏற்பட்டிருக்கும் ஆனந்தத்தை வர் ணிக்க முடியாது. நமது வார்டில் ஒரு சாவுகுறைவு. என் சக்தி முழுவதையும் சப்பிவிடும் இந்த வேலைக்கு இடையில் எனக்கு அற்புதமான வகை யில் உயிர்த் தளிர்ப்பு அளிப்பது எது? ஒரு நோ யாளியின் மீட்சிதான். இந்த நோயாளிகள் குழந் தைகளாக ஆகிவிடுகிருர்கள். அவர்களது அன்பு எளிமையானது; அந்தரங்க சுத்தியானது. நானும் அவர்களை மென்மேலும் அதிகமாக நேசிக்கிறேன். எனவே, அவர்கள் ஆஸ்பத்திரியிலிருந்து செல் லும்பொழுது, நான் அந்தப் பிரிவைப் பொறுக்க முடியாமல் புலம்புகிறேன். அது மதியீனமான செய்கை என்பதை அறிவேன்; எனினும் அழாமல் இருக்க முடியவில்லை.

செப்டம்பர் 10

இன்று, கர்ச்சாகின் அவனது குடும்பத்தினருக்கு எழுத விரும்பிய முதலாவது கடிதத்தை நானே எழுதிக்கொடுத்தேன். அவனது காயம் ஆபத்தானது இல்லையென்றும், சீக்கிரத்தில் உடல் நலத்தைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்கு வருவதாகவும் அவன் எழுதுகிறான். அவன் நிறைய இரத்தம் இழந்துவிட்டான்; எனவே சவம்போல வெளிறிப்போயிருக்கிறான். இன்னமும் மிகவும் பலவீனமாக உள்ளான்.

செப்டம்பர் 14

இன்றுதான், கர்ச்சாகின் முதன் முதலில் புன்னகை புரிந்தான். அந்தப் புன்னகை மிகவும் நேர்த்தியாகவிருந்தது. அவனிடம் தன் வயதுக்கு ஒத்த விளையாட்டு தன்மை இல்லை. அவன் மிகவும் வேகமாக நலம்பெற்று வருகிறான். அவனும் பிரோஸ்யாவும் உயிர்த் தோழர்களாயிருக்கிறார்கள். நான் அடிக்கடி அவளை அவனது படுக்கை அருகில் காண்கிறேன். அவள் அவனிடம் என்னைப் பற்றி விரிவாகப் பேசிப் புகழ்பாடியிருக்க வேண்டும். ஏனென்றால், இப்பொழுது அவன் என்னை இளநகையுடன் வரவேற்கிறான். நேற்று அவன் என்னை வினவினான்:

''டாக்டர், உங்களது கைகளில் கரும்புள்ளிகள் இருப்பதற்கு என்ன காரணம்?''

வலிப்பு கண்டிருந்தபொழுது, அவன் என் கைகளை இறுகப் பிடித்து அழுத்தியதால் ஏற்பட்ட அவன் விரல்களின் தடங்கள் அவை என்று நான் அவனிடம் சொல்லவில்லை.



செப்டம்பர் 17

கர்ச்சாகினின் நெற்றிக் காயம் நல்லமுறையில் ஆறிக்கொண்டிருக்கிறது. அவனது காயத்துக்குக் கட்டுக் கட்டும்பொழுது, அவனுக்கு மிகவும் வேதனையாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அந்த இளைஞன் அந்த வேதனையைப் பொறுத்துக் கொண்டுவிடுகிறான். அவனது மனத்திண்மை, டாக்டர்களாகிய எங்களையே வியக்கச் செய்து விட்டது.

பொதுவாக, இத்தகைய புண்களை உடைய நோயாளிகள் வீறிட்டுக் கதறுவார்கள், நிறையத் தொல்லை கொடுப்பார்கள். ஆனால் இவன் அமைதியாக இருக்கிறான். அந்தக் காயத்தின் திறப்பில் அயடின் போடும்பொழுது, அவன் பிடிலின் தந்திக் கம்பி மாதிரி தன் உடலை விரைப்பாக நீட்டிக் கொண்டு கிடக்கிறான். அவன் அடிக்கடி உணர்வு இழக்கிறான். ஆனால் அவன் ஒரு தடவைகூடப் புலம்பியதில்லை, சிணுங்கியதில்லை.

எனவே, கர்ச்சாகின் புலம்பினான் என்றால் அவன் உணர்வு இழந்து விட்டான் என்றே முடிவு செய்து விடலாம்! இந்த மகத்தான சகிப்புத் திறனை அவன் எங்கிருந்து பெற்றான்? அதிசயமான விஷயம்.

செப்டம்பர் 21

இன்று முதன் முதலாக, கர்ச்சாகினை ஒரு தள்ளு வண்டியில் வைத்து, முன் பக்கத்திலுள்ள பெரிய தாழ்வாரத்துக்கு அழைத்துச் சென்றோம்.

அந்தத் தோட்டத்தைப் பார்த்தவுடன், அவனது முகம் எப்படி மலர்ந்து ஒளிர்ந்தது! அவன் எவ்வளவு ஆவலுடன் அந்தப் புதிய காற்றை உட்கொண்டான்? அவனது தலையில் எங்கும் ஒரே கட்டுகள். ஒரே ஒரு கண்மட்டும் திறந்திருக்கிறது. ஜீவகளையுடன் பிரகாசித்த அந்தக் கண், முதன் முதலாக உலகத்தை நோக்குவதைப் போலச் சுற்றுமுற்றும் பார்த்தது.

செப்டம்பர் 26

இன்று இரண்டு இளம் பெண்கள் கர்ச்சாகினைப் பார்க்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்தனர். நான் மாடியிலிருந்து இறங்கிச் சென்று, அவர்களைப் பார்வையாளர் அறையில் சந்தித்தேன். அந்த இரு மங்கைகளில் ஒருத்தி மிகவும் அழகாயிருந்தாள். அவர்கள் தோன்யா துமானவா என்றும் தத்யாஞ புரஞேவ்ஸ்க்காயா என்றும் தமது பெயர்களைச் சொல்லி அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். நான் தோன்யாவைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். கர்ச்சாகின் ஜுர வேகத்தில் பிதற்றிக் கொண்டிருந்த பொழுது, தோன்யா என்ற பெயரைக் குறிப்பிட்டிருந்தான். அவர்கள் அவனைப் பார்ப்பதற்கு நான் அனுமதி அளித்தேன்.

அக்டோபர் 8

கர்ச்சாகின் இப்பொழுது பிறர் உதவியில்லாமல் தோட்டத்தில் உலாவுகிறுன். ஆஸ்பத்திரியிலிருந்து எப்பொழுது வெளியேறலாம் என்று

கேட்ட வண்ணம் இருக்கிறான். சீக்கிரத்தில் உட-கலாமென்று நான் பதில் கூறினேன். பார்வை யாளரை அனுமதிக்கும் ஒவ்வொரு நாளிலும், இரண்டு பெண்களும் அவனைச் சந்திக்கிறார்கள். அவன் ஒருபொழுதும் புலம்பாமல் இருப்பது எப்படி என்பதை நான் அறிந்துகொண்டு விட்டேன். நானே அவனைக் கேட்டேன்.

''ஆர்தர் பர்ட்டன் கதையைப் படியுங்கள்; நீங்களே புரிந்துகொள்வீர்கள்'' என்று அவன் பதிலளித்தான்.

அக்டோபர் 14

கர்ச்சாகினை ஆஸ்பத்திரியிலிருந்து அனுப்பி விட்டோம். அவன் மிகுந்த அன்புடன் என்னிடம் விடைபெற்றுக் கொண்டான். அவனது கண்ணி லிருந்து பாண்டேஜை எடுத்துவிட்டோம். மண் டையில் மட்டும் கட்டு இருக்கிறது. ஒரு கண் தன் பார்வையை இழந்துவிட்டது. ஆனால் வெளிப் பார்வைக்கு ஊனம் தெரியவில்லை. இந்த அருமை யான இளந்தோழனை விட்டுப் பிரிய மனம் வரவில்லை; மிகவும் துயரமடைந்தேன். ஆனால் நிலவரம் அப்படித்தானே உள்ளது: நோயாளிகள் குணமானவுடன் நம்மை விட்டுப் பிரிகிறார்கள். அதற்குப் பின் அவர்களைத் திரும்பப் பார்ப்பது அருமையாகவே உள்ளது.

கர்ச்சாகின் என்னை விட்டுப் பிரிந்தபொழுது கூறினான்: ''இடது கண் அவிந்திருக்கக் கூடாதா? வலது கண் இல்லாமல் நான் எப்படிச் சுடுவேன்?''

அவன் இப்பொழுதும் போர்முனையைப் பற்றியே எண்ணுகிறான்!

ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறிய பாவெல், ஆரம்பத்தில் தோன்யா தங்கியிருந்த தந்யாளு வீட்டில் தங்கினான்.

உடனடியாகவே, தோன்யாவைக் கம்ஸமோல் இயக்கத்தில் ஈடுபடுத்துவதற்குப் பாவெல் முயன்றான். முதலில், நகரத்தின் கம்ஸமோல் கூட்டத்துக்கு வரும்படி அவளை அழைத்தான். அவளும் வருவதற்கு இணங்கினாள். ஆனால் அவள் கூட்டத்துக்காக ஆடை அணிந்து கொண்டு அறையிலிருந்து வெளிவந்தவுடன், பாவெல் தன் உதடுகளைக் கடித்துக்கொண்டான். அவள் வெகு இனிமையாகவும் ஒயிலாகவும் நாகரிகமாகவும் உடுத்திக்கொண்டிருந்தாள். அந்த செய் நேர்த்தி, கம்ஸமோல் கூட்டத்துக்குக் கொஞ்சமும் ஒவ்வாது என்பதைப் பாவெல் அறிந்திருந்தான்.

இதுதான் அவர்களுடைய முதல் சண்டைக்குக் காரணம். அவள் ஏன் அவ்வாறு ஆடை அணிந்தாளென்று அவன் கேட்டான். தோன்யாவின் மனம் புண்பட்டது.

''நான் ஏன் பிறரைப்போலிருக்க வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை. என் உடை உனக்குப் பிடிக்காவிட்டால், நான் வீட்டிலேயே தங்கிவிடுகிறேன்'' என்றாள்.

இளைஞர் சங்கக் கூட்டத்தில் வெளுத்துப் போன ஆண் சட்டைகளுக்கும் பெண் சொக்காய்

களுக்கும் இடையே, தோன்யாவின் [illegible] யான உடை எடுப்பாயிருந்தது. பாவெல் [illegible] சங்கடப்பட்டான். இளைஞர்கள் தோன்யாவை ஒரு அந்நிய நபராகவே நடத்தினார்கள். அவர்களுக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்பதை உணர்ந்த தோன்யாவும், அவர்களைப் பொருட்படுத்தாமல் ஏளனம் செய்யும் தோரணையில் நடந்துகொண்டாள்.

கப்பல் துறையின் கம்ஸமோல் காரியதரிசியும் பரந்த தோட்களை உடைய தொழிலாளியுமான பன்கிராத்தவ் பாவெலைத் தனியாகக் கூப்பிட்டான். முரட்டு நூல் சட்டையை அணிந்திருந்த அவன், கண்களால் தோன்யாவைக் காட்டி, முகத்தைச் சுளித்துக்கொண்டு கேட்டான்:

''நீதான் அந்தப் பொம்மையை அழைத்து வந்தாயா?''

''ஆம்'' என்று பாவெல் வெடுக்கென்று பதில் அளித்தான்.

''ஊம்! அவளைப் பார்த்தால், இந்த இடத்துக்கு உரியவளாகத் தோன்றவில்லை. முதலாளி வீட்டுச் சீமாட்டி மாதிரி ஜொலிக்கிறாள். இங்கு எப்படி வந்தாள்?''

பாவெலின் புருவங்கள் முழு வேகத்தில் இடித்துக் கொண்டன.

''அவள் என் தோழி. நான்தான் இங்கு அழைத்து வந்தேன். விளங்கிற்றா? அவள் ஆடை விஷயங்களில் பைத்தியமாயிருப்பது உண்மை. ஆனால் அவள் எவ்வகையிலும் நமக்கு விரோதி

அல்ல. இங்கு யார் யாரை அழைத்து வரலாட் என்பது பற்றி எனக்கும் தெரியும். எனவே. தோழா, என்னைக் கண்டிக்கத் தேவையில்லை.''

மேலும் தீவிரமாகப் பேசி, பன்கிராத்தை அவமானப்படுத்த வேண்டுமென்று பாவெல் விரும்பினான். ஆனால் பொதுவாக நிலவும் கருத்தையே அவன் எடுத்துரைத்தான் என்பதை உணர்ந்து பாவெல் தன்னைக் கட்டுப்படுத்தி கொண்டான். அவனது கோபமெல்லாம் தோன்யாவின் மீது பாய்ந்தது.

''என்ன நடக்குமென்பதை நான் அவளிடம் சொன்னேன். சொன்னபடி நடக்கிறது. அவள் ஏன் இப்படி வெளிச்சம் போட வேண்டும்?'' என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அன்று மாலையே, பாவெலுக்கும் தோன்யாவுக்குமிடையே உள்ள நட்பு முறியத் தொடங்கியது. அது நிரந்தரமானதாக இருக்குமென்று அவன் முன்னர் எண்ணினான்; இப்பொழுது அந்த உறவு உருக்குலைந்து வருவதைக் கண்டு அவன் மனம் வருந்தினான், சோர்வுற்றான்.

மேலும் சில நாட்கள் கடந்தன. ஒவ்வொரு சந்திப்புக்கும் சம்பாஷணைக்கும் பிறகு, அவர்களைப் பிரித்த அகழி அகன்று கொண்டே இருந்தது. தோன்யாவின் அற்பத்தனமான தன்னிச்சைப் போக்கைப் பாவெலால் சகித்துக் கொள்ளமுடியவில்லை.

முறிவைத் தவிர்க்க முடியாது என்பதை இருவரும் உணர்ந்தனர்.

இன்று அவர்கள் ஒருவரிடம் ஒருவர் விடை பெறுவதற்காக, 'குப்பேச்சிஸ்க்கிய்' பூங்காவில் சந்தித்தனர். நடைபாதைகளில் அழுகிய இலைகள் சிதறிக் கிடந்தன. அவர்கள் நின்று கொண்டிருந்த உயரமான, செங்குத்தான கரைக்குக் கீழ்த்நேப்பர் நதி சாம்பல் நிறமாக, மங்கலாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. பெரிய பாலத்துக்குப் பின்னலிருந்து, இரண்டு எடை மிகுந்த தோணிகளைக் கஷ்டத்துடன் இழுத்துக் கொண்டு தன் சக்கரங்களால் நீரில் அடித்துக் கொண்டே, ஒரு இழுவைப் படகு ஊர்ந்து வந்தது. ஆற்றின் நடுவில் இருந்த துருகானவ் தீவுக்கு மாலைக் கதிரவன் பொன் வர்ணம் பூசியிருந்தான். அந்தக் கதிரவனது லீலைகளால் வீடுகளின் பலகணிகள் எரிந்து கொண்டிருப்பதாகத் தோன்றின.

தோன்யா பொன்னல் செய்த அம்பு போன்ற கதிர்களை நோக்கிக்கொண்டே, ஆழ்ந்த துயரத்துடன் கூறினுள்:

''அஸ்தமிக்கும் சூரியனைப் போல நமது நட்பும் மறைய வேண்டுமா?''

பாவெலின் கண்கள் தோன்யாவின் எழில் முகத்தை விடாமல் நோக்கிக் கொண்டிருந்தன. தோன்யா இம்மாதிரி கேட்டவுடன், பாவெல் தன் புருவங்களைக் கடுமையாக நெறித்துக் கொண்டு, மெல்லிய குரலில் விடைதந்தான்:

''தோன்யா, நாம் இதைப்பற்றி முன்பே விவாதித்து விட்டோம். நான் உன்னைக் காதலித்தேன் என்பதை நீ அறிவாய். இப்பொழுதும் என்

னுடைய காதல் புத்துயிர் பெற்றுத் துளிர்க்க முடியும். ஆனால் நீ எங்களுடன் சேர வேண்டும். நான் பழைய பாவெல் அல்ல. கட்சியைவிட நீயே மேல் என்று நான் கருத வேண்டும் என்று நீ எதிர்பார்த்தால், நான் உனக்குத் தகுதியான கணவனாக இருக்க முடியாது. ஏனென்றால், நான் எப்பொழுதும் கட்சியைத்தான் முதன்மைப்படுத்துவேன். உன்னையும் என் பாசத்துக்குட் பாத்திரமாக விளங்கும் பிறரையும் இரண்டாட் பட்சமாகத்தான் கருதுவேன்.''

தோன்யா துன்பம் நிறைந்தவளாய் ஆற்றின் கருநீலத் தண்ணீரைப் பார்த்தாள். அவளது நேத்திரங்களில் கண்ணீர் நிறைந்தது.

பாவெல் தனக்குப் பழக்கமான அவளது முகத்தைப் பார்த்தான்; அவளது பழுப்புநிறக் கூந்தலை நோக்கினான்; என்றோ ஒருபொழுது தனக்கு உயிருக்கு உயிராக இருந்த அவள்மீது அவனிடம் இரக்கம் ஊற்றுப்பெருக்காய்ச் சுரந்தது. அவன் தோன்யாவின் தோளில் தன் கரத்தை மென்மையாக வைத்தான்.

''தோன்யா! பழைய பந்தங்களை வெட்டிவிட்டு எங்களுடன் வந்துவிடு. நாம் எல்லோரும் சேர்ந்து பணியாற்றி, எஜமானர் ஏற்பாட்டுக்கு முடிவுகட்டலாம். இந்தக் கடுமையான போராட்டத்தின் சுமையைப் பகிர்ந்துகொண்டு, அதனால் ஏற்படும் இன்மையையும் இடுக்கண்களையும் சகித்துக்கொண்டு, எங்களோடு பல அருமையான பெண்கள் வேலைசெய்கிறார்கள். அவர்கள் உன்னைப்

போல் படிப்பாளிகளாய் இல்லா விட்டால் என்ன? நீ ஏன் எங்களுடன் சேர மறுக்கிறாய்? அதைச் சொல். சுஷானின் உன்னைக் கெடுக்க முயன்றானென்று சொல்கிறாய். ஆனால் அவன் செஞ்சேனை வீரன் அல்ல, சீரழிந்தவன், கழிசடை. தோழர்கள் உன்னிடம் நேசப்பாங்குடன் நடக்க வில்லை என்று சொல்கிறாய். ஆனால், நீ எதற்காக முதலாளிகளது நடனத்துக்குப் போவது மாதிரி ஆடை அணிந்துகொண்டாய்? எல்லாம் உனது மதியீனமான செருக்கால் வந்த வினை. அழுக்கேறி நைந்த பழைய கோட்டைப் பிறர் அணிந்தால், நானும் ஏன் அதை அணியவேண்டுமென்று நீ கேட்கிறாய். ஒரு தொழிலாளியைக் காதலிக்கும் தைரியம் உனக்கு இருந்தது. ஆனால், ஒரு கருத்தை உன்னால் நேசிக்க முடியவில்லை. உன்னை விட்டுப் பிரிவது எனக்குத் துயரத்தை அளிக்கிறது. நான் உன் நினைவை அன்பாகப் பராமரிக்கவே விரும்புகிறேன்.''

அதற்குமேல் அவன் ஒன்றும் சொல்லவில்லை.

அடுத்த நாள், அவன் வீதியில் ஒரு போஸ்டரைப் பார்த்தான். அதில் ''மாகாணச் செக்காவின் தலைவர், ஷுஹ்ராய்'' என்று கையெழுத்திட்டிருந்ததைக் கண்டான். அவனது இதயம் துள்ளியது. அவன் மிகவும் கஷ்டப்பட்டு, ஷுஹ்ராயின் அலுவலகத்துக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி பெற்றான். காவற்காரர்கள் அவனை உள்ளே விடுவதற்கு மறுத்தனர். அவன் சந்தடி செய்ததால், அவர்கள் அவனைக் கைது செய்வதற்குத்

தயாரானார்கள். ஆனால் இறுதியில் அவன் வென்றான். உள்ளே செல்வதை அவர்கள் அனுமதித்தனர்.

ஷுஹ்ராய் அவனை மிகுந்த அன்புடன் உபசரித்தான். மாலுமி ஒரு கையை இழந்து விட்டான். ஒரு வெடி குண்டு அதைப் பிய்த்து எறிந்து விட்டது.

உடனடியாக, அவர்கள் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர்.

''போர்முனைக்குப் போவதற்குத் தேவையான தகுதியைப் பெறும்வரை, நீ எனக்கு உதவி செய். இங்கு எதிர்ப்புரட்சியை நசுக்குவதில் ஒத்தாசை கொடு. நாளைக்கே வேலை தொடங்கு'' என்றான் ஷுஹ்ராய்.

போலிஷ் வெள்ளைப் படைகளுடன் நடந்த வெஞ்சமர் முடிவடைந்தது. செம்படைகள், வார்ஸாவின் எல்லை வரை விரோதியைத் துரத்திச் சென்றன. ஆனால் செம்படைகள் தம் கைவசமிருந்த பொருள்கள் யாவையும் உபயோகப் படுத்தி விட்டதாலும், உடல் வலுவை வெகுவாக இழந்திருந்ததாலும், படைகளுக்கும் சப்ளை தளங்களுக்குமிடையே நெடுந்தூரம் இருந்ததாலும், வார்ஸாவரை சென்ற அவை அதைப் பிடிக்காமல் பின்வாங்கின. இவ்வாறு செஞ்சேனை பின்வாங்கியதைத்தான், 'விஸ்லா நதிக் கரையின் அதிசயம்' என்று போலந்து குறிப்பிட்டது. இப்படியாக, போலந்தில் பிரபுக்கள் ஆட்சி நிலைத்தது.

போலந்தில் சோவியத் சோஷலிஸ்ட் [illegible] மலர வேண்டுமென்ற கனவு அப்பொழுது [illegible]வில்லை.

இரத்தத்தில் நனைந்த நாடு அமைதியை நாடியது.

பாவெலுக்குத் தன் உறவினர்களைக் காணச் செல்ல முடியவில்லை. ஏனெனில் ஷெப்பெத் தோவ்க்கா போலிஷ் படை வசம் இருந்தது. அது ஒரு தற்காலிகமான எல்லைத் தளமாகச் செயல்பட்டது. சோவியத் அரசுக்கும் போலந்துக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்தன.

பாவெல் செக்காவின் பல்வேறு வேலைகளைச் செய்வதில் பகலும் இரவும் ஈடுபட்டான். அவன் ஷுஹ்ராயின் அறையில் தங்கியிருந்தான். அவனுடைய டவுன் போலிஷ் படை வசத்தில் இருந்த சேதியைக் கேட்டு, அவன் மிகவும் வருந்தினான்.

''இப்பொழுது போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்ததானால், என் தாயார் நம் நாட்டு எல்லைக்கு அப்பால் இருப்பாளா?'' என்று அவன் ஷுஹ்ராயை வினவினான்.

ஷுஹ்ராய் அவனுக்கு ஆறுதல் கூறினான்:

''அநேகமாக, எல்லைக்கோடு கோரீன் வழியே, நதியை ஒட்டிச் செல்லும் என்று நினைக்கிறேன். அப்படியானால், உனது டவுன் நம் நாட்டு எல்லைக்குள் வந்துவிடும். எதற்கும், கொஞ்சம் பொறு. சீக்கிரத்தில் விஷயம் விளங்கும்.''

செம்படைகள் போலிஷ் போர்முனையிலிருந்து தெற்குப் போர்முனைக்குச் சென்றன. சோவியத் குடியரசு போலிஷ் போர்முனையில் சகல சக்திகளையும் ஈடுபடுத்திப் பாடுபட்ட பொழுது, அதையே தனக்குத் தகுந்த சந்தர்ப்பமாகக் கருதிய வ்ரான்கெல்,* கிரீமியாவிலிருந்து கிளம்பி, த்நேப்பர் நதியை யொட்டி, எக்கத்தெரீனஸ்லாவ் மாகாணத்தை அடைய வடக்கு நோக்கி முன்னேறினான்.

இப்பொழுது சோவியத்-போலிஷ் போர் முடிந்து விட்டதால், சோவியத் குடியரசு தன் படைகளைக் கிரீமியாவுக்கு அனுப்பியது. எதிர்ப்புரட்சியின் கடைசி நம்பிக்கையாக இருந்த வ்ரான்கெல் படைகளை ஒழிப்பதென்று முடிவு செய்தது.

துருப்புக்கள், வண்டிகள், போர்க்களச் சமையலறைகள், பீரங்கிகள் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு, பல டிரெயின்கள் கீவ் வழியாகத் தெற்கு நோக்கி விரைந்தன. ரயில்வேப் பிரிவின் செக்கா அசுர வேகத்தில் செயல்பட்டது. இந்தப் போக்குவரத்துப் பெருக்கத்தால் தடைகள் ஏற்பட்டன. ஸ்டேஷன்களில் இரயில் வண்டிகள் குவிந்தன. இருப்புப் பாதைகளில் வண்டிகள் ஓடிக்கொண்டிருந்ததால், உபரி டிரெயின்கள் போக முடியாமல் முடங்கிக் கிடந்தன. ''இந்த டிவிஷனை ஏற்றிவரும் டிரெயினுக்குப் பாதை தரவேண்டும்'',

---

* **வ்ரான்கெல் பி. நி.**—ஜாரிஸ்டு ஜெனரல். உள்நாட்டுப் போரின் போது, தெற்கு ருஷ்யாவிலிருந்த எதிர்ப்புரட்சித் தலைவர்களில் ஒருவன்.

''அந்த டிவிஷன் துரிதமாகச் செல்வதற்கு வழி செய்யவேண்டும்'' என்றெல்லாம் தந்திச் சேதிகள் வந்துகொண்டேயிருந்தன. ''எல்லாவற்றுக்கும் முன்னால் இதற்கு முதலிடம் கொடுங்கள்'', ''இது இராணுவ உத்திரவு'', ''தடையில்லாத போக்குக்கு உடனே வழிசெய்'' என்றெல்லாம் ஆணைகள் தந்திக்கம்பி வழியே வந்தன. உத்திரவை நிறைவேற்றத் தவறினால், புரட்சிகரமான ராணுவ நீதிமன்றம் மூலம் தண்டனை கிடைக்குமென்ற எச்சரிக்கையும் ஒவ்வொரு சேதியிலும் இடம் பெற்றிருந்தது.

ரயில்வேப் பிரிவு செக்காவிடம்தான், போக்குவரத்து தங்குதடையில்லாமல் நடப்பதற்கான பொறுப்பு கொடுக்கப்பட்டது.

செக்காவின் அலுவலகத்திற்குள் படைத் தலைவர்கள் வந்து குவிந்தார்கள். சேனைத் தலைவன் கையெழுத்திட்டு அனுப்பிய இன்ன நம்பர் தந்தியின் பிரகாரம், டிரெயின்களை உடனே அனுப்ப வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள்: கைத் துப்பாக்கிகளைக் காட்டியும் மிரட்டினார்கள். அவர்களது கோரிக்கையை நிறைவேற்ற முடியாது, சாத்தியக் கூறுகள் இல்லை என்று விளக்கினால், அவர்கள் அனைவரும் அதைக் கேட்க மறுத்தனர். ''நீங்கள் செத்தாலும் சரி, டிரெயினை அனுப்ப வேண்டும்!'' என்றுதான் ஒவ்வொருவரும் உத்திரவிட்டார்கள். அத்துடன் அவர்கள் வசை மாரியும் பொழிந்தனர். நிலைமை ரொம்ப மோசமானபொழுது, ஷுஹ்ராயை அழைத்தார்கள்.

அங்கேயே ஒருவரை யொருவர் சுட்டுக் கொல்வதற்குச் சித்தமாயிருந்த அந்தஆவேசம் கொண்ட ஆட்களெல்லாம் ஷுஹ்ராயைக் கண்டவுடன் பெட்டிப் பாம்பாக அடங்கினுர்கள். இரும்பு மனிதனை ஷுஹ்ராய் அமைதியாகவும் கருராகவும் எதிர்வாதத்துக்கு இடம் தராத தோரணையிலும் பேசினுன். எனவே, உருவப்பட்ட கைத்துப்பாக்கிகள் உறைகளில் தஞ்சம் புகுந்தன.

பல முறைகள் பாவெல் தள்ளாடித் தள்ளாடி நடந்து ஸ்டேஷன் பிளாட்பாரத்தை அடைந்தான். அவனது தலையில் கத்தியால் குத்துவது போன்ற வேதனை அவனை வருத்திக் கொண்டே இருந்தது. செக்காவில் செய்த வேலை, அவனது நரம்புகளை மிகவும் பாதித்தது.

ஒரு நாள், வெடிகுண்டு வண்டிகள் நிரம்பியிருந்த திறந்த வண்டியில் பாவெல் ஸெர்யோஷாவைப் பார்த்தான். ஸெர்யோஷா ரயில் மேடையிலிருந்து அவன் மீது பாய்ந்து குதித்தான்; அப்பொழுது, பாவெலைத் தள்ளிவிடுவான் போல இருந்தது. தன் நண்பனைக் கட்டித் தழுவிக் கொண்டு, ''பாவெல்! உன் மீது கண்பட்டவுடன் நீதான் என்று தெரிந்து கொண்டேன்!'' என்ருன் ஸெர்யோஷா.

இருவரும் எங்கிருந்து பேச்சைத் தொடங்குவது என்று மயங்கினர். ஒருவருக்கொருவர் சொல்வதற்குச் சேதிகள் அதிகமாக இருந்தன. இதற்கு முன் அவர்கள் சந்தித்த பின், இரு இளைஞர்களுக்குமே பல அனுபவங்கள் ஏற்பட்டன. அவர்கள்

ஒருவரையொருவர் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டார்கள்; விடைகளுக்காகக் காத்திராமல் கேள்வி கேட்டபிறகு பேசிக்கொண்டே போனார்கள். அவர்கள் தமது பேச்சிலேயே மெய்மறந்து இருந்ததால், எஞ்சின் 'விசில்' செய்ததுகூட அவர்கள் காதில் விழவில்லை. டிரெயின் நகரத் தொடங்கிய பிறகே அவர்கள் பிரிந்தனர்.

அவர்கள் மேலும் பேசிக் கொள்வதற்குப் பல விஷயங்கள் இருந்தன. ஆனால் டிரெயின் வேகமாகச் செல்லத் தொடங்கியது. எனவே, ஸெர்யோஷா தன் நண்பனிடம் ஏதோ உரக்கக் கூறிக்கொண்டே, பிளாட்பாரத்தில் ஓடினான்; சாமான்களை ஏற்றியிருந்த ஒரு பெட்டியின் கதவு திறந்திருந்தது; அதைப் பிடித்துக்கொண்டு ஏற முயன்றான். பெட்டிக்குள்ளிருந்தவர்கள் அவனைப் பிடித்து, உள்ளே இழுத்துக் கொண்டார்கள். ஸெர்யோஷா வண்டிக்குள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த பாவெல், வால்யாவின் மரணத்தைக் குறித்து ஸெர்யோஷாவுக்கு ஒன்றும் தெரியாதென்பதைத் திடீரென்று ஞாபகப்படுத்திக் கொண்டான். எப்படியென்றால், ஸெர்யோஷா ஷெப்பெத்தோவ்க்காவுக்குத் திரும்பவேயில்லை; இப்பொழுதும் வால்யாவைப் பற்றிச் சொல்வதற்கு, பாவெல் மறந்து விட்டான்.

''அவனுக்குத் தெரியாமல் இருப்பதும் நல்லதுதான். அவனது மனம் அமைதியாக இருக்கட்டும்'' என்று பாவெல் எண்ணினான். அவன் அதற்குப் பின் தன் நண்பனைப் பார்க்கப் போவ

தில்லை என்பதை அப்பொழுது உணரவில்லை. பெட்டியின் கூரைமீது நின்று கொண்டு இலையுதிர் காலத்துக் காற்றை வாங்கிக் கொண்டு சென்ற ஸெர்யோஷாவும் தான் சாவை நோக்கிச் செல்வதை அறிந்திருக்கவில்லை.

''உட்கார்ந்து கொள், ஸெர்யோஷா'' என்று தீப்பட்டு எரிந்து ஓட்டை கொண்ட மேற்கோட்டு அணிந்த செஞ்சேனை வீரன் தொராஷேன்கோ கூறினான்.

''பரவாயில்லை. நானும் காற்றும் நல்ல நண்பர்கள்'' என்று ஸெர்யோஷா நகைத்துக் கொண்டே விடை தந்தான்.

ஒரு வாரம் கழித்து, ஸெர்யோஷா உக்ரேய்னின் ஸ்தெப்பியில் நடந்த முதற்போரில் உயிரை இழந்தான்.

முதல் கட்டத்திலேயே, தவறி வந்த ஒரு குண்டு அவனைத் தாக்கியது.

அவன் நடுங்கினான், கூரிய வேதனையால் மார்பு பிளப்பதாகத் தோன்றியது; காற்றைப் பற்றிக்கொண்டு நிலைகொள்ள முயன்றான்; பிறகு, கைகளால் மார்பை இறுக அமுக்கிக்கொண்டே, குதிப்பதற்குத் தன்னை தயார் செய்துகொள்வது போல் குனிந்தான். அவனுடைய உயிரற்ற உடல் நிலத்தின் மீது 'தொப்' பென்று விழுந்தது. பார்வையை இழந்த அவனது நீலக்கண்கள், எல்லை காணமுடியாத உக்ரேனிய ஸ்தெப்பியை வெறித்து நோக்கின.

பாவெல் முன்பே பலவீனமாக இருந்தான். நரம்புத் தளர்ச்சியை உண்டாக்கிய செக்காவேலை, அவனது நிலைமையை மேலும் மோசமாக்கியது. மண்டையிடி அதிகமாயிற்று. ஆனால், இரண்டு இரவுகள் தூங்காமல் உழைத்துவிட்டு, மூன்றாவது நாள் மூர்ச்சையாகி விழுந்த பிறகே, அவன் தன் உடல் நிலையைப் பற்றிப் ஷுஹ்ராயிடம் பேசுவதென்று முடிவு செய்தான்.

''ஷுஹ்ராய், நான் வேறு வேலை செய்வது நல்லதல்லவா? என்னைப் பொறுத்த மட்டில், மெஷின் ஷாப்பில் என் தொழிலைச் செய்வதே சிறந்ததென்று நினைக்கிறேன். என் மண்டையில் ஏதோ கோளாறு இருப்பதாகத் தோன்றுகிறது. நான் ராணுவ சேவைக்கு லாயக்கு இல்லை என்று வைத்தியக் குழுவினர் கூறினார்கள். ஆனால் இந்த வேலை இராணுவ வேலையைவிட மோசமாயிருக்கிறது. அந்தக் கொள்ளைக்காரனாகிய சூத்தீரினது கூட்டத்தை வேட்டையாடிப் பிடிப்பதில் இரண்டு நாட்கள் ஈடுபட்டோமல்லவா? அந்த வேலை என்னை முழுமையாகக் கீழே தள்ளிவிட்டது. இந்தச் சண்டை சச்சரவுகளிலிருந்து விடுபட்டு ஓய்வு பெற வேண்டும். என்னால் நிற்கக்கூட முடியவில்லை. இந்நிலையில் உங்களுக்கு என்ன உதவி செய்யப் போகிறேன்?''

ஷுஹ்ராய் பாவெலின் முகத்தைக் கவலையுடன் ஆராய்ந்தான்.

''ஆம். உன் முகம் நன்றாயில்லை. இதற்கெல்லாம் நான்தான் பொறுப்பு. ரொம்ப நாட்களுக்கு

முன்பே உனக்கு விடுதலை அளித்திருக்க வேண்டும். வேலை மிகுதியால் உன்னைக் கவனிக்கவில்லை.''

இந்தச் சம்பாஷணை நடந்த சிறிது நேரத்தில், பாவெல் கம்ஸமோலின் மாகாணக் கமிட்டி அலுவலகத்தை அடைந்து விட்டான். அவனை அந்தக்கமிட்டி பயன்படுத்திக் கொள்ளலாமென்ற அத்தாட்சிப் பத்திரத்துடன் அவன் சென்றான். அங்கு ஒயிலாகக் குல்லாய் அணிந்த ஒரு இளைஞன் உட்கார்ந்திருந்தான். அந்த சுறுசுறுப்பான பையன், அத்தாட்சிப் பத்திரத்தை வேகமாகப் படித்துவிட்டு, பாவெலை நோக்கிக் கண்களைச் சிமிட்டினான்.

''செக்காவிலிருந்து வருகிறாயா? சபாஷ்! அது ஒரு மனதுக்கு உகந்த அலுவலகம். உனக்கு ஒரு விநாடியில் வேலை தருகிறோம். எங்களுக்கு எத்தனை பேர் கிடைத்தாலும், வேலை கொடுப்போம்! நீ எங்கு வேலை செய்ய விரும்புகிறாய்? மாகாண உணவுப்பொருள் கமிட்டிக்குப் போகிறாயா? வேண்டாமா? சரி. துறைமுகத்தில் கிளர்ச்சி நடத்தும் வேலைக்குப் பொறுப்புஎடுத்துக்கொள்கிறாயா? வேண்டாமா? விநோதமான ஆளப்பா நீ! அது நல்ல வேலை; பிரத்தியேகமான ரேஷன்களும் கிடைக்கும். வேண்டாம் என்கிறாயே!''

பாவெல் அவனை இடைமறித்தான்.

''நான் இரயில்வே தலைமைப் பட்டறையில் வேலை செய்ய விரும்புகிறேன்.''

இதைக் கேட்டு, அந்த இளைஞன் வாயைப் பிளந்தான்.

''இரயில்வே பட்டறையா? ம்ம்... அங்கு எவரும் தேவையில்லையென்று நினைக்கிறேன். எதற்கும் ரீத்தா உஸ்தினேவிச்சைப் பார். அவள் ஏதாவது ஒரு வேலை உனக்கு நிச்சயிப்பாள்.''

பழுப்பு நிறங்கொண்ட ரீத்தாவைப் பாவெல் சிறிது நேரம் பேட்டி கண்டான். பாவெல் ரயில்வே டெப்போவில் வேலை செய்வதென்றும் அங்குக் கம்ஸமோல் ஸ்தாபனத்தின் செயலாளனுகப் பொறுப்பு வகிப்பதென்றும் முடிவாயிற்று.

இதற்குள், கிரீமியாவின் நுழைவாசலுக்கு அருகில், கிரீமியா தீபகற்பத்தைக் கண்டத்துடன் இணைக்கும் குறுகிய பெரெக்கோப் பூசந்தியில், முன்னொரு காலத்தில் கஸாக்குகளின் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக கிரீமியா தார்த்தாரியர்களால் அமைக்கப்பட்ட பழங்கால அரண்களுக்கு அருகில் வெண்படையின் அரண் இருந்தது. இப்போது அது பன்மடங்கு பலமாகவும் பயங்கரமாகவும் திகழ்ந்தது.

ருஷ்யா நாட்டின் எல்லா பாகங்களிலிருந்து ஓடிவந்த பழைய உலகத்தினர் பெரெக்கோப் பூசந்திக்குப் பின்னுலிருந்த கிரீமியாவில் தஞ்சம் புகுந்தனர். அவர்கள் குடித்துக் கூத்தாடிப் பொழுதைக் கழித்தனர். தாங்கள் பத்திரமாயிருப்பதாக அவர்கள் தப்புக்கணக்கு போட்டிருந்தனர். எனவே, அழிவு நாள் அணுகிக்கொண்டிருப்பதை அவர்கள் உணரவில்லை.

இலையுதிர்காலத்து இரவு குளிர்ச்சியானது. நடுநடுங்கச் செய்த அந்த இரவில், பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த பத்தாயிரக்கணக்கான வீரர்கள் சிவாஷ் வளைகுடாவின் கடுங்குளிர் நீருக்குள் இறங்கினர். இருளின் பாதுகாப்பில் அந்த வளைகுடாவைக் கடந்து, அரணுக்குள் பாதுகாப்பாக இருந்த பகைவனைப் பின்புறமிருந்து தாக்குவதே செஞ்சேனையின் திட்டம். அவ்வாறு வளைகுடாவைக் கடந்த ஆயிரக்கணக்கான செஞ்சேனை வீரர்களில் இவான் ஷார்க்கீய் ஒருவன். அவன், யந்திரத் துப்பாக்கி நனைந்துவிடக் கூடாதென்பதற்காக, அதைத் தலைமீது வைத்துக்கொண்டு நடந்தான்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும், பெரெக்கோப்பில் உக்கிரமான சண்டை நடந்து கொண்டிருந்தது. ஆயிரக்கணக்கான செஞ்சேனை வீரர்கள் வெண்படையினர்களின் அரணை முன்புறத்தில் நேரடியாகத் தாக்கினார்கள். அதே சமயத்தில் அரணைப் பின்புறமிருந்து தாக்குவதற்காக, சிவாஷைக் கடந்தவர்கள், லிதுவேனிய தீபகற்பத்தில் கரையேறினார்கள். மலைப்பாங்கான கடற்கரைமீது முதலில் ஏறியவர்களில் ஒருவன், இவான் ஷார்க்கீயாவான்.

அதற்குமுன் கண்டிராத அளவுக்கு மூர்க்கம் நிறைந்த போராட்டம் தொடங்கியது. கடற்கரையில் ஏறியபொழுதே, அந்தச் செம்படை வீரர்களை நீரில் தள்ளுவதற்கு வெள்ளை குதிரைப் படைகள் பயன்படுத்தப்பட்டன. ஷார்க்கீயின்

யந்திரத் துப்பாக்கி சாவைக் கக்கிக்கொண்டே யிருந்தது. உயிருக்கு ஆபத்து விளைவித்த அதன் பிரயோக ஒலி நிற்கவேயில்லை. அதிலிருந்து கிளம் பிய ஈயக்குண்டுகளால் தாக்குண்டு, மனிதரும் குதிரைகளும் மடிந்து, பிணங்கள் குவிந்தன. ஷார்க்கீய், வெகு வேகமாகத் தன் யந்திரத் துப் பாக்கியில் புதிய குண்டுகளையும் வெடிமருந்தை யும் திணித்தான்.

நூற்றுக்கணக்கான பீரங்கிகளின் மூலம் பெரெக்கோப், இடிமுழக்கம் போன்ற தன் பதிலை அளித்தது. பூமியே ஆழம் காணமுடியாத அதலபாதாளத்தில் விழுந்து விட்டதாகத் தோன் றியது. ஆயிரக்கணக்கான குண்டுகள் செய்த மரண முழக்கம் வானத்தையே துளைப்பதாகத் தோன் றியது. அந்தக் குண்டுகள் வெடித்து, லட்சக் கணக்கான சிம்புகள், அண்மையிலும் தொலை தூரத்திலும் சிந்திச் சிதறின. பூமியில் ஏற்பட்ட கீறல்களிலிருந்தும் பிளவுகளிலிருந்தும் கிளம்பிய மண் பாளங்கள் சூரியனை இல்லாதொழித்து விட்டதாகத் தோன்றியது.

அரக்கனது தலை அழிந்தது. முதலாவது குதிரைப்படை கிரீமியாவுக்குள் வெள்ளம் போல் பாய்ந்தது. அழிவு உறுதி என்பதை உணர்ந்த வெள்ளைப் படையினர் பீதியடைந்து அலறிப் புடைத்துக்கொண்டு, துறைமுகங்களில் புறப் படுவதற்கு இருந்த கப்பல்களில் ஏறினர்.

கந்தல் சொக்காய்களில் வைரம் பாய்ந்த இதயம் துடிக்கும் இடத்துக்கு மேலே, ''செங்

கொடி'' விருதின் பொற் பதக்கம் குத்தப்பட்டது. யந்திரத் துப்பாக்கி வீரனும் கம்ஸமோல் அங்கத்தினருமான இவான் ஷார்க்கீய்க்கும், சோவியத் குடியரசு இந்தப் பதக்கத்தை அளித்தது.

சோவியத்-போலிஷ் சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. ஷுஹ்ராய் அனுமானித்த மாதிரி, ஷெப்பெத்தோவ்க்கா சோவியத் உக்ரேய்னுவுக்குள் இருந்தது. அந்த நகரத்துக்கு அப்பால், மூப்பத்தைந்து கிலோமீட்டர் தூரத்திலிருந்த ஆறு இப்பொழுது எல்லைக்கோடாக அமைந்தது.

1920 டிசம்பர். ஞாபகம் வைத்துக் கொள்ளத்தக்க ஒரு நாள் காலையில் பாவெல் தன் ஊருக்கு வந்தான். அவன் வெண்பனி மூடிய பிளாட்பாரத்தில் இறங்கினன்; ''ஷெப்பெத்தோவ்க்கா'' என்று பலகையில் எழுதியிருப்பதை நோக்கிவிட்டு, இடது பக்கம் திரும்பி டெப்போவுக்குச் சென்முன். அங்கு அவன் ஆர்த்தியோமைப்பற்றி விசாரித்தான். ஆனல் ஆர்த்தியோம் அங்கு இல்லை. தனது ராணுவ மேல்கோட்டை மேலும் இறுக்கிக் கொண்டு, பாவெல் காடு வழியே டவுனுக்கு விரைந்தான்.

கதவைத் தட்டும் சப்தம் கேட்டவுடன், மரீயா யாக்கொவ்லெவ்ன திரும்பினள்; ''உள்ளே வா'' என்று கூறினள். ஒரு வெண்பனி மூடிய வடிவம் வீட்டுக்குள் நுழைந்தது. அவள் அவளுடைய அன்புக்குரிய மகனின் முகத்தைக் கண்டாள்.

கரத்தால் நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண் டாள். ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிய அன்னை யால் ஒரு வார்த்தை பேச முடியவில்லை.

அவள் தன் மகனின் மார்பு மீது விழுந்தாள்; மகனது முகத்தில்முத்தங்களைச்சொரிந்து, அவனைத் திக்குமுக்காடவைத்தாள். ஆனந்தக் கண்ணீர் அவளது கன்னங்களில் அருவிபோல் ஓடியது.

பாவெல் தாயின் சிறிய மெலிந்த உடலை இறுகத் தழுவிக்கொண்டான். கவலையால் வற்ற லாகிவிட்ட தாயின் முகத்தைக் குனிந்து நோக்கி னான். வேதனையாலும் கவலையாலும் மாதாவின் முகத்தில் விழுந்திருந்த சுருக்கங்களை உற்றுப் பார்த்தான். அவள் மனது அமைதி அடையும் வரை காத்திருந்தான்.

கணக்கிடமுடியாத துன்பதுயரங்களை அனுப வித்த அன்னையின் கண்களில் மீண்டும் ஆனந்தம் ஒளி வீசியது. பாவெலை இனிக் காணமுடியாதென்று எண்ணியிருந்த தாய்க்கு, அவனைக் கண்டவுடன், அவனைப் பார்த்துக் கொண்டே இருக்கவேண்டு மென்று தோன்றியது. மூன்று நாட்கள் கழிந்த பின், இரவில் நெடுநேரம் கழித்து, ஆர்த்தியோ மும் தன் மூட்டைமுடிச்சுடன் வந்தபொழுது, அவளது ஆனந்தம் எல்லைக் கடந்ததாயிற்று.

இப்பொழுது, அந்தக் குடும்பம் மீண்டும் ஒன்றுபட்டு விட்டது. அண்ணனும் தம்பியும் மரணத்தின் நுழை வாயிலிலிருந்து மீண்டும் வந்து விட்டனர். எத்தனையோ சோதனைகளுக்குப் பிறகு அவர்கள் மீண்டும் சந்தித்தனர்.

''நீங்கள் இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று அன்னை மக்களைக் கேட்டாள்.

''நான் ரயில்வே வார்க்ஷாப்புக்குப் போய் வேலை செய்யப் போகிறேன்'' என்று ஆர்த்தியோம் உல்லாசமாகப் பதில் அளித்தான்.

பாவெல், இரண்டு வாரம் கழித்துக் கீவுக்குப் போக வேண்டும். அங்கு அவனுக்கு வேலை காத்திருந்தது.

முதற்பாகம் முற்றிற்று

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் ''புரோகிரஸ்'' பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து

"Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR"

என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.